ஸ்ரீ

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ப்ரபந்ந கூடஸ்தரான நம்மாழ்வார் அருளிச்செய்த

திருவாய்மொழிக்கு வ்யாக்யானங்களான

ஒன்பதினாயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி, ஈடுமுப்பத்தாறாயிரப்படிகளைக் கொண்ட

ஒன்பது, பத்து பத்துக்கள்

ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் ஸ்வாமி பதிப்பு

அச்சுத்தாள் திருத்தினவர்கள் :

திருமலை அனந்தான்பிள்ளை, நன்றுபாக்கம், வேத வேதாந்த வித்யசிரோமணி

கிருஷ்ணமாசாரியர், திருப்பதி.

M. A. வேங்கடகிருஷ்ணன், திருவல்லிக்கேணி.

கிடைக்குமிடங்கள் :

பி. அ. அக்காரக்கனி அனந்தாழ்வான், காஞ்சிபுரம்-3.

M. A. வெங்கடகிருஷ்ணன், 20, தெற்குமாட வீதி, திருவல்லிக்கேணி.

V. N. தேவநாதன், 213, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.

திருவல்லிக்கேணி குரு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

நள ௵ வைகாசி விசாக வெளியீடு

1976

ஸ்ரீ:
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி

ஒன்பதாம் பத்து

முதல் திருவாய்மொழி—கொண்டபெண்டிர்: ப்ரவேசம்

நஞ்சீயர் அருளிச்செய்த ஒன்பதினாயிரப்படி வ்யாக்யானம்.

ஒன்பதாம்பத்தில் முதற்றிருவாய்மொழியில், எம்பெருமான் பாகவதசேஷத்வபர்யந்தமான நிரதிசயபுருஷார்த்தமானதைக் காட்டிக்கொடுத்த மஹோபகாரத்தை அநுஸந்தித்து, மிகவும்ப்ரீதரான ஆழ்வார், "இப்படி உபகாரகனானவனே ஆத்மாவுக்கு நிருபாதிகபந்துவும், ப்ராப்யப்ராபகங்களெல்லாம், மற்றொருவருமில்லை" என்று தமக்குப் பிறந்த ப்ரீத்யதிசயத்தாலே "ஸமஸ்தசேதநரையும் குறித்து ஸோபாதிகபந்துக்களான புத்ரமித்ராதிகளை விட்டு, நிருபாதிகபந்துவான எம்பெருமானையே பற்றுங்கோள்" என்கிறார்.

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த இருபத்துநாலாயிரப்படி.

ஒன்பதாம்பத்தில், முதற்றிருவாய்மொழியில், எம்பெருமான், பாகவத சேஷத்வபர்யந்தமான நிரதிசய புருஷார்த்தத்தைக் காட்டிக்கொடுத்த மஹோபகாரத்தை அநுஸந்தித்து மிகவும் ப்ரீதரானவர், இப்படி உபகாரகனான இவனே ஆத்மாவுக்கு நிருபாதிகபந்துவென்றும், அல்லாதாரடங்க ஸோபாதிக பந்துக்களென்றும், அவனே ப்ராப்யமும் ப்ராபகமு மென்றும் அநுஸந்தித்து, அத்தால் வந்த ப்ரீத்யதிசயத்தாலே ஸமஸ்தசேதநரையுங் குறித்து "ஸோபாதிகபந்துக்களைவிட்டு நிருபாதிகபந்துவான ஸர்வேச்வரனைப் பற்றுங்கோள்" என்று உபதேசிக்கிறார். "ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதாச மாதவ:", "பூதாநாம் யோऽவ்யய: பிதா" என்று இத்யாதிகளாலே நிருபாதிகபந்து அவனேயிறே; மாதாபிதாக்கள் கைவிட்ட ஜயந்தனுக்கு ப்ரஹ்மாஸ்த்ரம் தொடுத்துக்கொடுநிற்கிற தாமேயிறே புகலானார். "ஸ பித்ரா ச பரித்யக்த:". பிதா எதிரியாக அவனிலும் அண்ணியவுறவாய் உதவினானிறே ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு. "த்யாஜ்யமிதி குலபாம்ஸநம்" என்று ஹிதஞ்சொன்ன ஸ்ரீவிபீஷணாழ்வானைத் தள்ளிவிட்டான் ராவணன்; "தத்பஜேயம்" என்று அவனையொழியச்செல்லாமையாயிற்றுப் பெருமாளுக்கு. மஹாராஜர் ஜ்யேஷ்டனாலே நோவுபட, நிருபாதிக பந்துவாய்ச் சென்றுதவினார். த்ரௌபதியை பரர் பரிபவிக்க, பர்த்தாக்கள் தர்மபரதந்த்ரராய்க் கவிழ்ந்திருந்து தரையைக்கீற, அவ்வளவிலே உதவினபின்பும் "கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம்" என்று புண்பட்டது அவன்திருவுள்ளமிறே. உபாயாந்தரங்களைக் குறித்து சோகித்த அர்ஜுநனைக்குறித்து, "அவற்றையடங்க விட்டு என்னையே பற்று; உன்னை நான் ரக்ஷிக்கிறேன்; சோகியாதே கொள்" என்றானிறே. இப்படி "நிருபாதிகபந்து அவனே; புத்ரமித்ராதிகளடங்க ஸோபாதிக பந்துக்கள்" என்று அநுஸந்தித்து, அத்தால்வந்த ப்ரீதியாலே "எல்லாரும் ஸோபாதிக பந்துக்களைவிட்டு அவனையே பற்றுங்கோள்" என்று பரோபதேச ப்ரவ்ருத்தராகிறார்.

நம்பிள்ளை திருவாய்மலர்ந்தருளி
வடக்குத்திருவீதிப்பிள்ளை பட்டோலை கொண்டருளின
ஈடு முப்பத்தாறாயிரப்படி.

ஒன்பதாம்பத்தில் முதல்திருவாய்மொழி. கீழ்த்திருவாய்மொழியிலே, பாகவத சேஷத்வபர்யந்தமாக சீரிய புருஷார்த்தத்தை நிர்ஹேதுகமாக அவன் காட்டிக்கொடுக்க, அதிப்ரீதியோடே அந்த புருஷார்த்தத்தை அநுஸந்தித்து "சயமேயடிமை தலைநின்றார்" என்றும், "நீக்கமில்லாவடியார்" என்றும், "கோதிலடியார்" என்றும் பாகவதரை விரும்பினாராய் நின்றார். ஆப்பான் திருவழுந்தூரரையர் ஆச்ரயித்ததும், திருவாய்மொழி கேட்டதும், ஆழ்வார் திருவடிகளிலே. "சயமேயடிமை தலைநின்றார்" என்றது, ஸ்ரீபராங்குசதாசர் போல்வாரை; 'நீக்கமில்லாவடியார்' என்றது, இளையபெருமாள்போல்வாரை, 'கோதிலடியார்' என்றது, ஸ்ரீசத்ருக்நாழ்வான் போல்வாரைக்காணும்" என்று ஆழ்வான் பணித்தானாகப் பணிப்பர். "இப்படிப்பட்ட பாகவதசேஷத்வமாகிற புருஷார்த்தத்திலெல்லையை நமக்குத்தந்த ஸர்வேச்வரனை நிருபாதிகபந்து, அல்லாதாரடங்க ஔபாதிகபந்துக்கள். அவனை நிருபாதிக ஸம்பந்தத்து, அல்லாதார்பக்கல் தோற்றுகிற லௌகிகார்த்தம் ஔபாதிகம்" என்று ப்ராப்யப்ராபகங்களைத் தவிர்த்து அவனை ப்ராப்யமென்றும் ப்ராபகமாயுமறிந்து அவனே ப்ராபகனென்றும் அறுதியிட்டுப் பிறந்த ஸம்பந்தஜ்ஞானமான ஸம்ஸாரத்திலே சேதநரைக் குறித்து, "நீங்கள் ஔபாதிகபந்துக்களான அல்லாதாரைவிட்டு நிருபாதிகபந்துவான அவனையேபற்றி உஜ்ஜீவிக்கப்பாருங்கோள்" என்று பரோபதேச ப்ரவ்ருத்தராகிறார். *ஸர்வேஷாமேவ லோகாநாம்* இத்யாதி; *அவ்யய: பிதா* அல்லாதார் தாய் தமப்பனென்று பேராய் நாதாவிருந்து மணத்தொட்டகம்போலே கழிந்துபோவர்கள்; அங்ஙனன்றிக்கே, அழியாதே என்றும் போக்க ரக்ஷகனும் பிதா அவனேயாயிற்று. தனக்கு ஹிதஞ்சொன்ன விபீஷணனை *த்வாந்து திக்* என்று புறப்படவிட்டானிறே ராவணன்; அவன் தம்பியைப்பொழியச் செல்லாதென்றிறே பெருமாள். மஹாராஜர் ஜ்யேஷ்டனோடே சேரப்பட, தனிமையிலேவந்து உதவினாரிறே பெருமாள். பெற்ற தமப்பன் பகையாக, அவனிலும் அன்னியதோழமையாக்கத்து உதவினாரிறே ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு. மாதாபிதாக்கள் கைவிட்டஜயந்தனுக்கு, ப்ரஹ்மாஸ்த்ரம் தொடுத்துக்கொடுநிற்கிறவர் தாமேயிறே புகலானார், *ஸ பித்ரா ச* இத்யாதி. *ஸ:* தீயிலேயுடைக்கழுத்துவாரைப்போலே தாரகரானவரே பாதகராய்அம்புதொடுக்கும்படி குழ்த்துக் கொடுநின்ற அவன், *சேஷம் பூர்வவத்*. த்ரௌபதி, தர்மபுத்ராதிகளான பர்த்தாக்களிருவரும் வெறுந்தரையாயிற்றிருக்க அவர்களையொழிய த்வாரகாநிலயனை க்ருஷ்ணனையே நினைக்க, "அவன் ஆபத்ஸகனாய் நம்மை நினைக்க, நாம் உதவப்பெற்றிலோம்" என்று *க்ருஷ்ணேதி மாம் த்வாரகாவாஸிநம்* என்று புண்பட்டானவனிறே. அர்ஜுநன் "பன்னாள்போதுக் கன்றுக்குத் தலைக்கட்டிக்கொள்ளவரிது" என்று சோகிக்க, "உன்னைத்தொழுதேற்றுவதே, உடன்பேற்றுக்கு உடலாமன்றிறே, உனக்கு சோகிக்கவேண்டியது? உன்னுடைய ஸர்வபாரங்களையும் என்தலையிலே போகட்டு, நாமே கடவோமென்றிரு; உன்னுடைய விரோதிவர்க்கத்தை யுடைய நாமே போக்கித் தருகிறோம்" என்றானிறே. இப்படிகளாலே "அவனை நிருபாதிகபந்து. அவனையே பற்றப்பாருங்கோள்" என்று தாம் அறுதியிட்ட அர்த்தத்தைத் தம்மைப்பற்றினார்க்குத் தஞ்சமாக உபதேசித்தருளுவதாகப் பரோபதேசப்ரவ்ருத்தராகிறார்.

கொண்டபெண்டிர்மக்களுற்றார் சுற்றத்தவர்பிறரும்*
கண்டதோடுபட்டதல்லால் காதல்மற்றுயாதுமில்லை*
எண்டிசையுங்கீழும்மேலும் முற்றவுமுண்டபிரான்*
தொண்டரோமாயுய்யலல்லால் இல்லைகண்டீர்துணையே. (1)

ஈ.—முதற்பாட்டில், எல்லாருடைய பந்துத்வமும் ஔபாதிகமாகையால், நிருபாதிகபந்துவான ஸர்வேச்வரனையே பற்றி உஜ்ஜீவிக்கவேணுமென்கிறார். [கொண்டபெண்டிரென்று தொடங்கி] -

தான் தன்ஸ்ம்ருதயத்திலே மிகவும் பந்துக்களாக நினைத்திருக்கும் பார்யாதிகள் கையில் அர்த்தங்கண்ட போது ஸ்நேஹித்தாராயிருக்கு மித்தனைபோக்கி மெய்யான ஸ்நேஹம் ஒன்றுமில்லை. 'கொண்ட பெண்டிர்' என்கிறது அர்த்தாத்யுபாதியாலே ஸம்பாதித்த பார்யை என்றுஞ்சொல்லுவர். [எண்டிசையு முண்ட பிரான்]-ப்ரளயாபத்தில் தன்னையொருவரும் அர்த்தியாதிருக்கச்செய்தே, எல்லாரையும் தன் திருவயிற்றிலே வைத்துப் பரிஹரித்தருளின மஹோபகாரகனானவனுக்கு அடிமையாய் உய்கையொழிய வேறு ஆத்மாவுக்கு ரக்ஷகமில்லை.

இ.—முதற்பாட்டில், நிருபாதிகபந்துவானவன், ஆபத்ஸகன்; அவனையேபற்றி உஜ்ஜீவியுங்கோள் என்கிறார். [கொண்டபெண்டிர்இத்யாதி] - தான் தன்ஸ்ம்ருதயத்திலே பந்துக்களாக நினைத்திருக்கும் பார்யாதிகளென்னுதல், பார்யைக்கே விசேஷணமாய் அர்தாத்யுபாதிவிசேஷத்தாலே கொண்ட ஸ்த்ரீ என்னுதல், மாதாபித்ரு ப்ரப்ருதிகளைக் காற்கடைக் கொண்டு எல்லாருமாக நினைத்திருக்கும் ஸ்த்ரீ என்னுதல். [மக்கள்] அப்படிப்பட்ட அவளுடைய யௌவநத்தை யழியமாறிப்பெறும் ப்ரஜைகள். [உற்றார்] தனக்கு ஸத்ருச விஷயமென்று ஆதரித்த ஸம்பந்திகள். [சுற்றத்தவர்] - அவர்கள் மதிக்கும்படியான இத் தலையில் ஜ்ஞாதிகள். [பிறரும்]-அயலாரும்; முன்பு சொன்னவர்களும், இவர்களிருக்கும் நாட்டில் வாசிபெரிதன்றென்கை. [கண்டதோடு பட்டதல்லால்]- ஸந்நிதியிலே ஸ்நேஹிக்குமதொழிய வென்னுதல், கையிலே த்ரவ்யங்கண்டபோது அத்தைப்பற்ற ஸ்நேஹிக்குமதொழிய வென்னுதல். [காதல்மற்று யாதுமில்லை] - காணாத போது மெய்யான ஸ்நேஹமொன்றுமில்லை யென்னுதல், ஸ்நேஹமும் அதற்கெதிர்த்தலையான த்வேஷமுமில்லை யென்னுதல், ஸ்நேஹமும் அதுக்கடியான பந்தமும் இல்லையென்னுதல். [எண்திசையும் இத்யாதி]-பத்துத் திக்கிலுமுண்டான ஸகலசேதநரையும் பிரிகதிர்ப்படாமல் திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்தவன்; இவற்றின் பக்கலொன்றுமில்லாதஅன்று ரக்ஷிக்குமவன். ப்ரளயாபத்தில் ரக்ஷிக்கைக்குக் கைமுதலுமில்லை; அர்த்தித்வமும் இல்லையிறே; ரக்ஷிக்கைக்குத் தான்அறிந்த ஆபத்தும் ஸம்பந்தமுமிறே வேண்டுவது? அப்போது விலக்குகைக்குப் பரிகரமில்லையே. [பிரான்] - உபகாரசீலனானவன். [தொண்டரோமா யுய்யலல்லால்] -அடிமையாய் உஜ்ஜீவிக்கையொழிய நம்மதாய் அவனுக்கு கொடுக்கக் வேண்டுவதொன் றில்லை. சேஷத்வத்தை நிரூபித்தனை. சேஷத்வம் ஸ்வரூபமாகையாலே அத்தைபற்றுகை உஜ்ஜீவநம்; சேஷத்வத்தை இழக்கை நாசமும். [இல்லைகண்டீர் துணையே]-''வேறே துணையுண்டாயிருக்க இவனைப்பற்றச் சொல்லுகிறேனல்லேன்; இவனைப்பற்றி ஸ்வரூபம்பெறுதல் இல்லையாகில் இல்லையாயித்தனை.'' அந்வயத்தாலே ஸாதித்து வ்யதிரேகத்தாலே த்ருடீகரிக்கிறார்.

ஈடு.—முதற்பாட்டில், ''ஔபாதிகபந்துக்களான தாரபுத்ராதிகளால் ஒரு ப்ரயோஜந மில்லை; நிருபாதிகபந்துவானவனே ஆபத்ஸகன்; அவனையே பற்றியுஜ்ஜீவியுங்கோள்; வேறு துணையில்லை'' என்கிறார்.

[கொண்டபெண்டிர் இத்யாதி] - தான் தன் ஸ்ம்ருதயத்திலே பந்துக்களாக நினைத்திருக்கும் பார்யாதிகளென்னுதல், [கொண்ட பெண்டிர்] - நிருபாதிகமாகவன்றிக்கே த்ரவ்யாத்யுபாதிகளாலே பரிக்ரஹித்த ஸ்த்ரீகள். அன்றிக்கே, மாதாபிதாக்களைச் செங்கற்சீரை கட்ட விட்டு, தான் ஆர்ஜித்த தனத்தையெல்லாம் கொடுத்துப்படி தந்த்ரமாக [illegible] கொண்ட பெண்டிரென்றுமாம். ஆசாரமும் பாதிவ்ரத்யமும் ஐச்வர்யாதிகளும் எல்லாம் இவளே யாகக் கொண்ட பெண்டிரென்றுமாம். [illegible] மென்றிருக்கை. அன்றியே, இது ஸர்வவிசேஷணமாய், பந்துக்களாகத் தான் நினைத்திருக்கும் பார்யாதிக ளென்னுதல். [மக்கள்] - அப்படிப்பட்ட அவளுடைய யௌவநத்தையழிய மாறிப்பெறும் ப்ரஜைகள். [உற்றார்] - தனக்கும் ஸத்ருசவிஷயமென்று ஆதரித்த ஸம்பந்திகள். [சுற்றத்தவர்] - அவர்கள் மதிக்கும்படியான ஜ்ஞாதிகள். [பிறரும்] - அயலாரும்; முன்புசொன்னவர்களும், இவர்களிருக்கும் நாட்டில் வாசி பெரிதன்றென்கை. [பிறரும்] மித்ரபுத்ராதிகளென்றுமாம். [கண்டதோடுபட்டதல்லால்] - ஸந்நிதியிலே ஸ்நேஹிக்குமதொழியவென்னுதல், கையிலே த்ரவ்யங்கண்டபோது அத்தைப்பற்ற ஸ்நேஹிக்குமதொழியவென்னுதல். [காதல்மற்றுயாது மில்லை] - ப்ரயோஜநங்கண்டபோது உடன்படுமதொழிய, ப்ரகாராந்தரத்தில் ஏகதேசமும் ஸ்நேஹமுடையரல்லரென்னுதல், காணாதபோது மெய்யான ஸ்நேஹமொன்றுமில்லை

யென்னுதல், கண்டதுக்குமற்று - காணுதபோதிறே. [காதல்மற்று] - ஸ்நேஹமும், அதுக்கெதிர்த்தலையான த்வேஷமுமில்லையென்னுதல், ஸ்நேஹமும் அதுக்கடியான பந்தமுமில்லையென்னுதல். [என்னிளையப்பெய்யாதி] - பத்துத்திக்கிலுமுண்டான ஸகல சேதநரையும் பிரகிருதிப்பாட்டே திருவாழித்தீயிலை வைத்து ரக்ஷித்தவன்; இவற்றின்பக்கல் வொன்றுமில்லாத வன்று ரக்ஷிக்குமவன். ப்ராப்யவஸ்துவையில் ரக்ஷிக்கைக்கு காதகமுமில்லை, அர்த்திக்கவு மில்லையிறே; ரக்ஷிக்கைக்குத் தான் அறிந்த ஆபத்தும் வேண்டுமிறே வேண்டுவது. அப்போது விலக்குகைக்கும் பரிகரமில்லையே. [பிரான்] - உபகாரசீலனானவன் [தொண்ட ரேமாவிப்பலகாரியர்] - அவனுக்கு ஸர்வதாயிருப்பதொன்று கொடுக்கவேண்டுவதில்லை, அடியோமாய் உஜ்ஜீவிக்குமத்தனையே. சேஷத்வம் ஸ்வரூபமானபின்பு அத்தாலயிருக்கையாவது - விநாசமிறே. அவ்வயத்தாலே அன்றிக்கே ஸ்வநிர்ஹேதுகத்தாலும் இவ்வர்த்தத்தை த்ருடீகரிக்கிறார். [இல்லைகண்டீர் துணையே] - ஆபத்துக்கு வேறொருபாசயமுண்டாயிருக்க, இவனைப்பற்றச் சொல்லுகிறதல்ல இது; அவனைப்பற்றி ஸ்வரூபம்பெறுதல், இல்லையாகில் இல்லையாயிக்கவே.

துணையுஞ்சார்வுமாகுவார்போல் சுற்றத்தவர்பிறரும்*
அணையவந்தவாக்கமுண்டேல் அட்டைகள்போல்சுவைப்பர்*
கணையொன்றாலேயேழ்மரமுமெய்த எங்கார்முகிலை*
புணையென்றுய்யப்போகலல்லால் இல்லைகண்டீர்பொருளே. (2)

ஓ.—இரண்டாம்பாட்டில், பரோபகாரரைப்போலேயிருந்து தந்தாமுடைய ப்ரயோஜநங்களையே தலைக்கட்டப் பார்க்கும் தேஹபரையொழிய, நிர்ஹேதுகமாக பரஸ்ம்ருத்தியேகப்ரயோஜநனான தசரதாத்மஜனைப் பற்றுங்கோள் என்கிறார். [துணையென்று தொடங்கி] - ஸுகதுக்கங்களையொக்க அநுபவிப்பாரைப் போலேயும், தாங்களே புகலாவாரைப்போலேயும் அநுவர்த்தி பந்துக்களோடு வாசியின்றிக்கே தங்களுக்குக் கைக்கெட்டின ஸம்பத்துண்டாகில், அவன்பக்கல் உபகாரம் கொண்டாராய்க் கொள்ளாதே அவனுக்கு ஹிதம்பண்ணினாராய் உபஜீவிப்பர். [கணையொன்றாலே என்று மேலுக்கு] - தம்மால் கொடுக்கலாவதொன்றில்லாதபடி வெறும் பதமாயிருக்கிற ஸ்ரீஸுக்ரீவ மஹாராஜர், "தான் மிடுக்குடையர்" என்றுதேறி வாலியைக்கொல்ல விசையாடாத உதவிற்றேறுக சாத்தாலே மராமரங்களேழையும் எய்த என்னுடைய பரமோதாரனை, 'எம்' என்று ஆத்மநிபந்தனையும், ஸ்தைர்யத்தைம் பேறுகச் சொல்லுகிறார். தந்தாமுடையஸர்வபர நிர்வாஹகனைக்கொண்டு உஜ்ஜீவிக்க நினைக்கில்லாதே வேறொருவரைப்பற்றி ஒரு ப்ரயோஜநமில்லை.

இ.—இரண்டாம்பாட்டில், உபகாரகரைப்போலேயிருந்து, ஸ்வப்ரயோஜநங்களையே தலைக்கட்ட நினைக்குமவர்களையொழிய, நிர்ஹேதுகமாக ஆபத்ஸகனைப் பற்றுங்கோள் என்கிறார். [துணையும் இத்யாதி] - துணையாகையாவது - "ஏகம் து:க்கம் ஸுகஞ்ச நௌ" என்று ஸுகதுக்கங்களை யொக்க அநுபவிக்கை. சார்வாகையாவது - போக்கடியற்ற தசையில் தாங்களே புகலாகை. பாண்டவர்களுடைய வனவாஸத்தில் தனிமையிலே முகங்காட்டியும், த்ரௌபதியை மீட்டுக்கொண்டு போகிறபோது தங்கள பணிக்கொட்டிலிலே சென்று முகங்காட்டிக் கூடக் கதறியும் துணையாருப்போலேயும், பகதத்தன்விட்ட சக்தியை அர்ஜுனனைத்தள்ளித் தன்மார்பிலே யேற்ற க்ருஷ்ணனைப்போலேயும் இருக்கை. [ஆகுவார்போல்] - தாங்கள் அபந்துக்களானபடியே கடக்கநிற்பதுஞ் செய்யாதே "ரக்ஷகர்" என்று ப்ரமிக்கும்படி வர்த்திப்பர்கள். [சுற்றத்தவர் பிறரும்] பந்துக்களோடு வாசியின்றிக்கே. [அணையவந்த ஆக்கமுண்டேல்] - கைக்கெட்டின ஸம்பத்துண்டாகில்: இவன்பக்கலிலே ஒருப்ரயோஜநம் தங்களுக்குண்டாமென்று தோற்றியிருக்கிலென்னுதல், தங்கள்பக்கலிலே இவனுக்கொரு ப்ரயோஜநமுண்டென்று தோற்றியிருக்கிலென்னுதல். [அட்டைகள்போல் சுவைப்பர்] - ரக்தஸ்பர்சமற வாங்காநிற்க ஹிதஞ்செய்ததாயிறே யிருப்பது; அதுபோலே உபகாரங்கொண்டாராய்க் கொள்ளாதே, ஹிதஞ்செய்கிறார்களாக உபஜீவிப்பர். "உன்கையிலே கனக்கக்கிடந்தால் அபஹரிப்பர்கள், என்கையிலே புகட்டுவை" என்று ஹிதஞ்செய்கிறார்களாகவிறே உபஜீவிப்பது. [கணையொன்றாலே] - "ஏகேந மஹேஷுணா" என்று

கைக்கொட்டிற்று ஓரம்பாலே. [எழ்மரமுமெய்த] - ஒன்றிரண்டாலே மஹாராஜர் அதிசங்கை போவதாயிருக்க, ஏழுமராமரத்தையு மெய்த. [எம்கார்முகிலே] - வாலியாலே தூரப்புண்டு வெறுவியராய தசையிலே யுதவப்புக, ரக்ஷணத்திலே அதிசங்கை பண்ணினவனுக்கு மழுவேந்திக் கொடுத்து, அவன்விரோதியைப் போக்கி; "ஏகம் து:கம் ஸுகஞ்ச நௌ" என்று ஆச்ரிதரைச் சொல்லுதல்; ஆத்மீயபஹுமானவசனமாய் அவருக்குச் செய்ததும் தமக்குச்செய்ததாக நினைத்திருக்கும்படியாலேயாதல். [புணையென்றுய்யப் போகலல்லால்] - அவன்பக்கல் ந்யஸ்தபரனாய் உஜ்ஜீவித்துப் போமதொழிய; "என்கார்யம் உனக்கேபரமாகவேணும்" என்று ஒருவார்த்தையே அவனுக்குச் செய்ய வேண்டுவது. [இல்லைகண்டீர் பொருளே] - புறம்பொருவரைப்பற்றினால் ஒருப்ரயோஜநமில்லை. புறம் பாச்ரயிக்கையிலே க்லேசிக்கச் சிலருண்டு இத்தனை; ப்ரயோஜநரூப மாவதொன்றில்லை.

ஈடு.—இரண்டாம்பாட்டு. உபகாரகரைப்போலேயிருந்து, ஸ்வப்ரயோஜநங்களைத் தலைக்கட்டிக் கொள்ளும் அவிச்வஸநீயரானவர்களையொழிய, நிர்ஹேதுகமாக விச்வாஸஜநகனாய், ஆபத்ஸகனானவனைப்பற்றுமதன்றி ப்ரயோஜநமில்லையென்கிறார்.

[துணையித்யாதி] - துணையாகையாவது, "ஏகம் து:கம் ஸுகஞ்சநௌ" என்று ஸுகதுக்கங்களையொக்க அநுபவிக்கை, சார்வாகையாவது - போக்கடியற்ற தசையில், தாங்களே புகலாகை, பாண்டவர்களுடைய வநவாஸத்தில் தனிமையிலே முகங்காட்டியும், த்ரௌபதியை மீட்டுக்கொண்டுபோகிறபோது "ஜகாம தாம் பார்க்கவகர்மசாலாம்" என்று அவர்கள் தங்கின பணிக்கொட்டிலிலே சென்று முகங்காட்டிக் கூடக்கிடந்து கதறியும் துணையாயும், பகதத்தன்விட்ட சக்தியை அர்ஜுநனைத்தள்ளித் தன்மார்பிலேயேற்றுப் புகலாயும் போந்த க்ருஷ்ணனைப்போலேயிருக்கை. [ஆதுவார்போல்] - தாங்கள் அபேக்ஷித்தபடியே நடக்கப் பண்ணாதே "ரக்ஷகர்" என்று ப்ரமிக்கும்படி வர்த்திப்பர்கள். [சுற்றத்தவர்பிறரும்] - ஜ்ஞாதிகளும், மற்றுமுள்ளாரும். [அணையவித்யாதி] - கைக்கெட்டின ஸம்பத்துண்டாகில். "இவன்பக்கல் ப்ரயோஜநம் தங்களுக்கு உண்டாம்" என்று தோற்றியிருக்கிலென்னுதல். "தங்கள்பக்கல் இவனுக்கு ஒருப்ரயோஜநமுண்டு" என்று தோற்றியிருக்குமாகில் என்னுதல் [அட்டைகள்போல்சுவைப்பர்] - ரக்தஸ்பர்சமற வாங்காநிற்கச் செய்தே, இவனுக்கு ஹிதஞ் செய்தனவாயிற்று இவையிருப்பது; அப்படியே, உபகாரங்கொண்டாராய்க் கொள்ளாதே, ஹிதஞ்செய்கிறோமாய்த் தோன்றி உபஜீவிப்பர்கள். 'உன்பக்கலிலே தரங்கெடக்கில் வாங்கிக் கொள்வோம், அதற்காக என்மேலே ஏறிட்டுவை' என்று அவனுக்கு ஹிதஞ்செய்திருந்தார்களாயிற்று, உபஜீவிப்பது. [கணையித்யாதி] - "ஏகேந மஹேஷுணா" என்று கைக்கொட்டிற்றோர் அம்பாலே, மஹாராஜர் தலைவருமாய், வெறுவியருமாய், தமையன் பகையுமாய், மநுஷ்ய ஸஞ்சாரமில்லாத தனிக்காட்டிலேயிருக்க, பெருமாளையும் இளையபெருமாளையும் தூரத்திலே கண்டு "வாலியாலேவிடப்பட்டார்கள்" என்று அஞ்சியோடித் திருவடியை வரவிட்டு அறிவித்தபின்பு, "நாம் உம்முடைய கார்யஞ்செய்யவல்லோம்" என்று மழுவேந்திக்கொடுத்தும் அவர்கார்யஞ் செய்தாரிறே. [ஏழ்மரமுமெய்த] - ஒன்றிரண்டாலே மஹாராஜர் அதிசங்கை தீர்க்கவாயிருக்க, ஏழுமராமரத்தையுமெய்த. [எம்கார்முகிலே] - 'எம்' என்று ஆச்ரிதரைச் சொல்லுதல்; ஆத்மீயபஹுமானவசனமாய், மஹாராஜர்க்குச் செய்தது தமக்குச் செய்ததாக நினைத்திருந்தபடியாலேயாதல். [கார்முகிலே] - பரமோதாரனானவனே. அவன்படி இதுவாகில் நாம் அவனுக்குச் செய்ய வேண்டுவதென்னென்னில்?— [புணையித்யாதி] - இங்கு வேண்டுவதொரு பச்சையில்லை, ஒருக்தி மாத்ரம் அமையும். "என்கார்யம் உனக்கே பரம்" என்றொரு வார்த்தையே அவனுக்கு சொல்ல வேண்டுவது. [இல்லைகண்டீர்பொருளே] - புறம்பொருவரைப் பற்றினால் ஒரு ப்ரயோஜநமுமில்லை. புறம்பாச்ரயிக்கையிலே க்லேசிக்கச் சிலருண்டாத்தனை; ப்ரயோஜநரூபமாவதொன்றில்லை.

பொருள்கையுண்டாய்ச்செல்லக்காணில் போற்றியென்றேற்றெழுவர்*
இருள்கொள் துன்பத்தின்மைகாணில் என்னே என்பாருமில்லை*
மருள்கொள்செய்கை அசுரர்மங்க வடமதுரைப்பிறந்தாற்கு*
அருள்கொளாளாய் உய்யலல்லால் இல்லைகண்டீர் அரணே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், எம்பெருமானையொழிய மற்றுள்ளாரெல்லாம் ப்ரயோஜநமுள்ளபோது பந்துக்களாய்க் கொண்டாடி, இவனுக்கு ஆர்த்துவந்தால் பார்ப்பாருமில்லை; ஆனபின்பு நிருபாதிகமாக எல்லார்க்கும் ஆபத்ஸகனாயிருக்கிற க்ருஷ்ணனையே பற்றுங்கோளென்கிறார். [பொருளென்று தொடங்கி] - ஒருவன் கையிலே அர்த்தம் உண்டாய்ப் பரிமாறக்காணில் பரஸம்ருத்தியே ப்ரயோஜநர் சொல்லும் வார்த்தைச் சொல்லி அவன்தன்னை அபிமுகீகரித்து, "கன்னறுமாட்டான்" என்று சொல்லும் [illegible] தோற்றியவாறே இடவாரே போகவென்று கையேற்று நிற்பர்கள்; இப்படி அர்த்திகளுக்கு இட்டே தரித்தாலும் இவனுடைய ஸர்வஸ்வத்தையுங்கொண்டு ஸம்ருத்தரானவர்கள், என்னே என்ற மாத்ரத்திலே இவனுக்கு உஜ்ஜீவிக்கலாகுமல் அபேக்ஷ செய்வாருமில்லை. இருள்கொள் துன்பத்தின்மை [illegible] அஜ்ஞானத்தையும் துக்கத்தையும் விளைக்கக்கடவ தாரித்ர்யம். [மருள்கொளென்று தொடங்கி] [illegible] ப்ரவ்ருத்திகளையுடைய அஸுரர் மங்கும்படி வடமதுரைப் பிறந்தவனுடைய க்ருபைக்குப் பாத்ரமான அடியாராய் உஜ்ஜீவிக்கிலல்லது வேறு இவ்வாத்மாவுக்கு ரக்ஷை இல்லை.

இ.—மூன்றாம்பாட்டில், அவனையொழிந்தார், ப்ரயோஜநமுள்ளபோது பந்துக்களாய்க் கொண்டாடி ஆபத்துவந்தால் பார்ப்பாருமில்லை. ஆனபின்பு நிருபாதிகமாக ஆபத்ஸகனான க்ருஷ்ணனையொழிய ரக்ஷகரில்லையென்கிறார். [பொருள்கையுண்டாய்ச் செல்லக்காணில்]-ஒருவன் கையிலே அர்த்தமுண்டாய்ப் பரிமாறக்காணில் [போற்றியென்று]-பரஸம்ருத்தியேக ப்ரயோஜநர் சொல்லும் வார்த்தையைச்சொல்லுவர். "நம்ஸம்ருத்தியே தனக்கு ப்ரயோஜநமா இன்னம் அர்த்தம் அநேகமுண்டாகவேணும் உனக்கென்பர்கள். "ஸம்ருத்தியே தனக்கு ப்ரயோஜநமா [illegible] உண்டாவதே!" என்று குளிரப்பார்த்து, "கன்னறுமாட்டான்" என்றறிந்தவாறே [ஏற்றெழுவர்] - இடவாராதோ போக என்றெழுந்திருப்பர்கள். [இருள்கொள் துன்பத் தின்மைகாணில்] - அஜ்ஞானத்தையும் துக்கத்தையும் விளைக்கக்கடவதான தாரித்ர்யத்தைக் காணில் [என்னே என்பாருமில்லை] - "ஐயோ என்னக்கடவாருமில்லை" என்று சீயர் அருளிச் செய்வர்; பின்னை திருநறையூரரையர், அர்த்திகளாய் இவனுக்கு இட்டே தரித்தாலும் இவனுடைய ஸர்வஸ்வத்தையுங்கொண்டு ஸம்ருத்தரானவர்கள் 'என்' என்ற மாத்ரத்திலே 'இவனுடைய பந்து' என்று ஜீவிக்கலாயிருக்குமாகில், அதிலும் லோபிகளாய் [illegible] என்பர். [மருள்கொள் இத்யாதி] - வெறுமையே பற்றாசாக ரக்ஷிப்பானொருவனுண்டு; அவனைப்பற்றுங்கோள்! என்கிறார். [மருள்கொள் செய்கை யசுரர்மங்க] - [illegible] அறிவுகேட்டுக்கு கொள்ளும்படியான ப்ரவ்ருத்திகளையுடைய அஸுரர்கள் மங்கும்படி. பண்ணும் ப்ரவ்ருத்திகளிலே சேதநர் கலங்கும்படியிறே ஆஸுரப்ரக்ருதிகளுடைய க்ரௌர்யமிருப்பது. [வடமதுரைப் பிறந்தாற்கு] - ஆச்ரிதருடைய ஆபத்தைப் போக்குகைக்கு, ஆர்மபச்சனை தான் கம்ஸவத்யானகநோகு வந்து தன்னைத்தானே அவதரித்து உதவுமவனுக்கு. [அருள்கொளாளா யுய்யலல்லால்] - அவனுடைய க்ருபைக்குப் பாத்ரமான அடியாராய் உஜ்ஜீவிக்குமதொழிய, அவனுக்குமுபய விலக்காமொழியுமதுவே இவனுக்கிடவேண்டும் பக்ஷை. தன்னருள் கொள்பவனாக, "உதாரா:" என்றிறே அவன் சொல்லுவது. [இல்லை கண்டீரரணே] - வேறு ரக்ஷகமாகவல்லது ஒன்றுமில்லை. "ஆத்ரேண யதாஸ்தெளதி தலவந்தம் தநேச்சயா, ததாசேத் விச்வகர்த்தாரம் கோ ந முச்யேத பந்தநாத்".

ஈடு.—மூன்றாம்பாட்டு. அவனையொழிந்தார், ப்ரயோஜநமுள்ளபோது பந்துக்களாய்க் கொண்டாடி, ஆபத்துவந்தால் பார்ப்பாருமில்லை; ஆனபின்பு, நிருபாதிகமாக ஆபத்ஸகனான க்ருஷ்ணனுடைய க்ருபாபாத்ரமாகையொழிய வேறு ரக்ஷகரில்லையென்கிறார்.

[பொருள்கையுண்டாய்ச் செல்லக்காணில்] - இவன்பக்கல் [illegible] அழிப்பது முடிவது செய்யப்புகவாய்ப் போராநிற்குமிறே. பொருளானது கையிலேயுண்டாய்ப் போரக் காணில். [போற்றியென்று] - பரஸம்ருத்யேகப்ரயோஜநரைப்போலே வார்த்தைசொல்லுவர்.

உனக்கு இன்னமும் இரிச்சிறை பெறுகவேணு மென்பர்கள். "கம் வைத்துத்திய தனக்கு ப்ரயோஜநமாயிருப்பார்சிறுதுவ துண்டாவதே!" என்று நெஞ்சோடே நோம்! இவன் இனி நமக்குக் கண்ணற மாட்டானென்றறிந்தவாறே, [ஏற்பிறபு வர்] - இடவாம் பெரு பெரிக வென்று சுற்றுக்கொண்டெழுந்திருப்பர்கள். [இருள் இத்யாதி] - அஜ்ஞாநாவரணமாய், துக்கரோகதுவா யிருக்கிற வேறுபாடமையைக் காணில். [என்னேயென்பாருமில்லை] - ஐயோ என்பாருமில்லை. பின்னை திருக்கண்ணபுரமுடையர், "தருவதுக்கிட்டொருவன் வெறுவியவனுக்கு அவனுடைய வைத்தத் துனைவன் ஐயோ என்ன என்னுதல், இவனுக்குறத்திலே வந்தேநாநான்கான ஸுப்ரோதகம் செய்ய, அவ்வளவிலே 'இன்னான் இன்னானுக்கு பந்துவாயாதே!' என்று இவ்வளவுகொண்டு ஜீவிக்கலாயிருந்தால், அவ்வளவுஞ் செய்வாரில்லை" என்று பணிப்பர். [மருள் இத்யாதி] - பெருள் கைபுண்டாய்ச் சொல்லக்கானுதவன் எம் ஆச்ரிதருடைய ஆபத்தைப் போக்குகைக்கா அசர்மஸ்யனுல தான் வந்து அவதரித்து உதவுவனொருவனுமவ்வின்றிறதுவேவில. சேநாதர் - நெஞ்சிலே இருள் குடிபுகுரும்படியான ப்ரவ்ருத்திகளையுடைய ஆமொ வைக்கம் முடிபும்படி, ஒருவர் அபேக்ஷியாதிருக்கத் தானே வந்து அவதரித்து ரக்ஷிக்குமவனுக்கு, அவனுக்கு எம் செய்யவேண்டுவதென் என்னில்? [அருள்கொள் இத்யாதி] - க்ருபாபாத்ரமான சேஷபூதராய்க் கொண்டு சந்நிஹிதிலிருக்கவேண்டும். அவன் பண்ணும் அருளை விலக்காதொழிமைத்தனையே வேண்டுவது; தன்னருள்கொள்வாரை "உதாரா:" என்னுமவனிறே அவன். இவன் பக்கல் இருக்கு மேற்படக் கொள்ளலாவதில்லை; அவனுக்கும் இதுக்குமேல் செய்யவேண்டுவதில்லை; பூர்ணனு மாகையாலே. ஸம்பந்தமோ ஸ்வாபாவிகமாயிருந்தது; இவன் புகுதுகின்ற வம்சபூர்ணதாயில், தன் பேறாக நினைத்திருக்குமவனு மிருந்தான்; இனி விலக்காமையிறே வேண்டுவது. [இல்லை கண்டீர் அரணே] - ரக்ஷகமாவது இதொன்றுமே; அல்லாதவெல்லாம் அரணல்லாதவை. நடுக் கட்டு மித்தனை. அப்ரமாதை "குன்றிக்குடு" என்று நெருப்பிலே கைவைத்தவர்போலே பற்ப பதொன்றிறே, புறம்புள்ளவர் ரக்ஷகமாக நினைத்திருக்குமவை. *ஆதுரோணா யதாஸ்நேநாதி தந வந்தும் தநேச்சயா - ததாசேத்விச்வகர்த்தாரம் கோ கமுச்யேதபந்தநாத்* - என்றதாத்ரம் பண்ணைப்போக்கு வானொருவனுடைய உகத்தைக்கைக ஸ்துதிபாகிற்கும். இப்படி ஸ்துதிக்கிறது உதாரனையோ வென்னில்? *தநவந்தம்* - தர்பமுடையனை யென்னபடி; அவன்பக்கல் வெகுர்ச்சியில்லை. ஆதில் அவனை ப்ரேரித்தார் ஆரென்னில்?— *தநேச்சயா*. ஸர்வத்ததும் மூலவுடையன், இவனைக்காவல் நிக்கேயிருக்கிற அவன்பக்கலிலே இவ்வாநுகூல்யத்தைப் பண்ணப்பெறில், பிறர்க்கிறுதியிருக்கு ஸ்துதிக்கவேண்டும்படி இவனை வையான்.

அரணமாவர் அற்றகாலைக்கு என்றமைக்கப்பட்டார்*
இரணங்கொண்ட தெப்பராவர் இன்றியிட்டாலுமஃதே*
வருணித்தென்னே வடமதுரைப்பிறந்தவன் வண்புகழே*
சரணென்றுய்யப்போகலல்லால் இல்லைகண்டீர் சதிரே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், சிலரை "இவர்கள் நமக்கு ஆபத்துக்கு ரக்ஷகர்" என்று அர்த்ததா னங்கொடுத்து நெடுநாள் ஆச்ரயித்துவைத்தால் ஆபத்து வந்தவாறே கைவிடுவர்களுக்கெல்லாம்; நம் ஆச்ரயியாதிருக்கச்செய்தே தானேவந்து பிறந்தருளி ஆபத்ஸகனான எம்பெருமானை ஆச்ரயியுமென் கிறார். [இரணங்கொண்ட தெப்பராவர்] - கடனிருந்தத்திலே பெற்றுக்கொண்டு கொண்டுபோ னாற்போலே இவர்களுடைய த்ரவ்யத்தை க்ருதக்நராய்ப் போவர். [இன்றியிட்டாலுமஃதே] - பண்டுகொடு த்தவர்களுண்டேலும் இத் தப்புகைக் கிடைக்கும், அவர்கள் நாம் தமக்கு முன்பு ஒன்று கொடுத்தது வர்த்தபோதிலும் போவேனுமாம். [வருணித்தென்னே] - கிருஷ்ணதை வருணிக்கு ப்ரயோஜ நமென்? வண்புகழ் - கல்யாண குணங்கள். சரண் - ரக்ஷகம்.

இ.—நாலாம்பாட்டில், சிலரை ஆபத்ஸகரென்று அர்த்ததானங்களாலே நெடுநாளாச்ரயித்துவைத்தால், ஆபத்துவந்தவாறே கண்ணற்று உபேக்ஷிப்பர். நிர்ஹேதுகமாக வந்து அவதரித்து ஆபத்ஸகனான

வனை ஆச்ரயணீயனென்கிறார். [அற்றகாலைக்கு - அரணமாவர் - என்றென்றமைக்கப்பட்டார்] - கைம்முதலற்றவன்றைக்கு ரக்ஷகனுமாயொருவன் வேணுமென்று இயற்றியுள்ள காலத்திலே பச்சையிட்டு ஆச்ரயித்து தனக்குஅபாச்ரயமாகச் சமைத்துவைத்தவர்கள். அவர்கள் ஆபத்துக்கு உதவும்படி என்னென்னில் ? [இரணங்கொண்ட தெப்பராவர்] - முன்பு பச்சைகொண்டதுவும் கடவிய தாங்கொண்டாராய், ஆபத்து வந்தவாறே உபேக்ஷித்து க்ருதக்நராய்ப்போவர்கள். [தெப்பராவர்] - "நம்மத்தை நசம் கொண்டாம்" என்றிருக்கும் புல்லியராவர். [இன்றியிட்டாலுமஃதே] - பச்சையிட்டு ஆச்ரயியா விட்டாலும் ஆபத்துவந்தால் கைவிடுவாரைக் கிடைக்கும்; ஆபத்துவந்தால் போகட்டுப்போகைக்குப் பச்சையிடவேண்டாவே ? அவர்கள் தாங்கள் நடுவே முடிந்து இவர்களுக்கு உதவாதேபோனாலும் ப்பலமதுவேயென்றுமாம். [வருணித்தென்னே] - வ்யர்த்தகதையைப் பரக்கச்சொல்லுகிறதுக்கென்னத் ப்ரயோஜநமுண்டு ? க்ருதக்நரான ஸம்ஸாரிகள்படியை அநுஸந்தித்துஎன்ன ப்பலமுண்டு ? [வடமதுரைப் பிறந்தவன்] - நாம்ஆச்ரயியாதிருக்க நமக்குஉதவுகையே தன்பேருக வந்துபிறந்தவன். [வண்புகழே] - கல்யாணகுணங்களே. சரண் - சரணம், ரக்ஷகம். அவன்குணங்களையே ரக்ஷகமென்று உஜ்ஜீவிக்குமதொழிய. [இல்லைகண்மீர் சதிரே] - அல்பயத்நத்தாலே பஹுபலம் பெறுமது - சதிர்; பஹுயத்நத்தைப் பண்ணி ப்பலவேளையில் ஒன்றுமின்றிக்கேயொழிகை:-இளிம்பு.

ஈடு.—கரலாம்பாட்டு. சிலரை ஆபத்ஸகரென்று அர்த்தாதிகளாலே நெடுநாள் ஆச்ரயித்தால்; ஆபத்துவந்தவாறே கண்ணற்று உபேக்ஷிப்பர்கள், நிர்ஹேதுகமாக வந்தவதரித்து ஆபத்ஸகனானவனே யாச்ரயணீயனென்கிறார்.

[அற்றகாலைக்கு - அரணமாவர் - என்றென்றமைக்கப்பட்டார்] கைம்முதலற்ற காலைக்கு ரக்ஷகராவாரொருவன் வேணுமென்று பலகாலும் அநுஸந்தித்து தனக்கு இயற்றியுள்ள காலத்திலே பச்சையிட்டு ஆச்ரயித்து, தனக்கு அபாச்ரயமாகச் சமைத்து வைத்தவர்கள். இப்படி அர்த்தாதிகளாலே வசீகரிக்கப்பட்டவர்கள் ஆபத்துக்கு உதவும்படியென்னென்னில் ? [இரணங் கொண்ட தெப்பராவர்] - இவனிட்டபச்சையை இவனொன்று செய்தானாக நினைத்திருக்கை யன்றிக்கே, தங்களுக்கு ப்ராப்தமானத்தை வாங்கினாராய், இவனுக்கு இயற்றின்றிக்கே பச்சையிடாதவனைக்கும் "நமக்கு இட்டிலன்" என்று வெறுத்து, இப்படி கொடுத்தது வாங் கினாராபாதி புல்லியராம்படியையுடையராவார். தெப்பர் - தப்பர்; சப்ரென்றபடி. [இன்றி யிட்டாலுமஃதே] - பச்சையிட்டாச்ரயியாவிடிலும் ஆபத்து வந்தால் கைவிடுவாரைக் கிடைக் கும். ஆபத்து வந்தால் கைவிடுவார்க்குப் பச்சையிட்டு ஆச்ரயிக்க வேண்டாவே. அன்றிக்கே இப்படியே இப்பச்சையிட்டவன் "நமக்கு ரக்ஷகன்" என்றாச்ரயியாதிருக்கச்செய்தே நடுவே தாங்கள் முடிவது, அப்போதும் கீழ்ச்சொன்னதுவே ப்பலமாயிருக்கை. [வருணித்தென்னே]-உபகரித் தார்திறத்திலே அபகாரம் பண்ணுவார்படியை யநுஸந்தித்து வெறுத்து, 'வருணித்தென்னே' என்கிறார். இவைபெருமாள் கைகேயியுடையபடிகளை யநுஸந்தித்து, *ஆத்மகாமா ஸதாசண்டீ க்ரோதநா ப்ராஜ்ஞமாநிநீ* என்றாப்போலே சிலவற்றைச் சொல்லாவாராய் பின்னையும் நீதான் இவையெல்லாஞ்சொல்லுகிறது நடுவிலாய்ச்சியைப்ப 'ஈதேம்பா மத்யமா தாத கர்ஹிதவ்யா கதஞ்சந' - ஒருபடியாலும் நீ அவளை இவ்வார்த்தை சொல்லக்கடவையல்லை, *தாமேவ* - வேணுமாகில் கைகண்ட மருந்தைச் செய்யப்பாராய்*; இக்ஷ்வாகுநாதஸ்ய பரதஸ்ய* ... போகட்டு முடிந்துபோனார்; நாம் போகட்டுப்போந்த ராஜ்யத்தை இக்குடியில் ... குலையாதபடி யாக நோக்கிக் கொண்டு கிடந்தபின்னை பரதனன்றோ இக்குடிக்கு நாதன். *பரதஸ்ய கதாம் குரு* ... நீர்வருமளவும் அவன் வார்த்தைசொல்லப்பாராய், ஆக, உபகரித்தார்திறத்திலே அபகாரமாக நினைத்திருப்பார்படி யநுஸந்தித்து, இவ்வ்யர்த்த கதையைச் சொல்லுகிறதால் ப்ர யோஜநமென்? பச்சையிட்டமையாதவன்றும் அப்போதைக்காலத்திலே வந்து உதவுவானொருவ னுண்டு; அவனையாச்ரயித்துப் பிழைத்துப் போகப் பாருங்கோள்! [வடமதுரைப்பிறந்தான்] - ஒருவர் அபேக்ஷியாதேயிருக்கச் செய்தே, இவற்றினுடைய ரக்ஷணத்துக்காகத் தானேவந்து ஸ்ரீமதுரையிலேயவதரித்தவனுடைய நிர்ஹேதுக ... கல்யாணகுணங்களை நமக்கு ரக்ஷகமென்று உஜ்ஜீவிக்கும்போதையொழிய. [இல்லைகண்மீர் சதிரே] - கொடுத்துபெருத்து ப்பலமொன்றுமின்றிக்கேயிருக்குமென்னுமது இளிம்பு; கொற்றி யல்பமாய்ப் ப்பலம் கனக்கப் பெறுமதிறே சதிராவது. 'நமோ' என்னவிடு - வெற்றி; 'சமன் கொள்வீடு' இது - ப்பலம்.

சதிரமென்று தம்மைத்தாமே சம்மதித்து இன்மொழியார்*
மதுரபோகம் துற்றவரே வைகி மற்றொன்றுறுவர்*
அதிர்கொள் செய்கை அசுரர் மங்க வடமதுரைப் பிறந்தாற்கு*
எதிர்கொள் ஆளாய் உய்யலல்லால் இல்லைகண்டீர் இன்பமே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், தங்களைப் பெருமிடில் தரிக்கமாட்டாதபடி ஸ்நிக்தைகளான ஸ்த்ரீகளாலே, ஆபத்துக்கள் வந்தால் இகழப்படுவர்; ஆனபின்பு, என்றும் ஏகப்ரகாரமாக ஸ்நிக்தனான எம்பெருமானை ஆச்ரயியுங்கோள் என்கிறார். [சதிரமென்று தொடங்கி] - ''சதிராக வாழாநின்றோம்'' என்று தங்களைத் தாங்களே இசைந்து இனிய பேச்சுக்களையுடையவர்களுடைய மதுரமான போகங்களை புஜித்தவர்களே, புஜிக்கைக்கீடான யோக்யதை குன்றினவாறே அவர்களாலே த்யஜிக்கப்படுவர். [அதிர்கொள் செய்கையென்று தொடங்கி] - லோகமெல்லாம் அதிரும்படியான ப்ரவ்ருத்திகளையுடைய அஸுரர் மங்கும்படியாக வடமதுரைப் பிறந்தார்க்கு ஸ்வாகதாதிகளைப் பண்ணி எதிர்கொள்ளும் அடியாராய் உஜ்ஜீவிக்கிலல்லது ஆத்மாவுக்கு வேறு ஸுகம் இல்லை.

இ.—அஞ்சாம்பாட்டில், தங்களைப்பெருமிடில் தரிக்கமாட்டாதபடி ஸ்நிக்தைகளான ஸ்த்ரீகளாலே ஆபத்துவந்தால் இகழப்படுவர். ஆனபின்பு, ஏகப்ரகாரமாக ஸ்நிக்தனானவனை ஆச்ரயியுங்கோளென்கிறார். [சதிரமென்று] - சதிராகவாழாநின்றோமென்று. இருந்ததேகுடியாக எல்லாரும் தம்மை இப்படியிறே நினைத்திருப்பது. [தம்மைத்தாமே சம்மதித்து] - தங்களைத் தாங்களே இசைந்து. இயற்றி யுடையனானவன், ''நம்மை 'சதிரன்' என்றங்கே நினைப்பிடு'' என்னும். இவ்வஸ்தஸ்ய ப்ரவ்ருத்திக்கு வேறுஸஹகாரிப்பாரில்லாமையாலே தாமே மேல் எழுத்திட்டுக் கொடுவரவேணும். [இன்மொழியார்] - இனிய பேச்சையுடையவர்களுடைய. அகவாய் மயிர்க்கத்தியாயிருக்கப் பேச்சில் இனிமையாலே வசீகரிப்பர்கள். [மதுரபோகந் துற்றவரே] - மதுரமான போகங்களை அவர்களைக் கொண்டு நெருங்க புஜித்தவர்களே. [வைகி மற்றொன்றுறுவர்] - போகயோக்யதை போனவாறே அவர்களாலே த்யஜிக்கப்படுவார்கள். போகயோக்யதையான யௌவநமும், கைதொடுமானமான அர்த்தமும் மாண்டாலும் இவனுக்கு ச்ரத்தை மாறாதிறே; இவன்மேல்விழ அவர்கள் நிஷேதிக்க இவன்படும் எளிமைகளை வாயாலே யருளிச்செய்யமாட்டாமையாலே, 'மற்றொன்று' என்கிறார். [அதிர்கொள் இத்யாதி] - சேதநர் அதிரும்படியான ப்ரவ்ருத்திகளையுடைய அஸுரர்கள் மங்கும்படியாக. [வடமதுரைப் பிறந்தாற்கு எதிர்கொள்ளாளா யுய்யலல்லால்] - அவனுக்குச் செய்யவேண்டுவதென்னென்னில்? ஸ்வாகதாதிகளைப்பண்ணி எதிர்கொள்ளுமித்தனை. அவன் மேல்விழாநின்றால் விமுகராகாதொழியுமத்தனையே வேண்டுவது. ஆபிமுக்யம் பண்ணும் அடியாராய் உஜ்ஜீவிக்குமதொழிய. [இல்லைகண்டீர் இன்பமே] - ஆத்மாவுக்கு வேறு ஸுகமில்லை. உள்ளிக் கழுவிலேயிருந்து பிபாஸை வர்த்தித்தவனுக்கு தாஹோபசமத்துப் பிறக்கும் ஸுகம்போலேயிறே ஸம்ஸாரத்தில் பிறக்கும் ஸுகம்; பகவத்விஷயத்தைவிட்டு அநர்த்தப்படுகைக்கு வேண்டுவதுண்டு அத்தனை.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. தங்களைப்பெருமிடில் தரிக்கமாட்டாதபடி ஸ்நிக்தைகளான ஸ்த்ரீகளாலே ஆபத்து வந்தால இகழப்படுவர்; ஆனபின்பு, ஏகப்ரகாரமாக ஸ்நிக்தனானவனை ஆச்ரயிக்குமதொழிய வேறு ஸுகமில்லை என்கிறார்.

[சதிரமென்று] - சதிராகவாழாநின்றோமென்று. ''நாஞ் சதிரர், நாஞ் சதிரர்'' என்று பீற்றி, இருந்ததேகுடியாகத் தந்தமை நினைத்திருப்பது. [தம்மைத்தாமே சம்மதித்து] - தங்களைத் தாங்களே ஸம்மதித்து தாங்களே இசைந்து. அல்பம் இயற்றியையுடையனாயிருக்குமவன், ''அங்கே நம்மை 'சதிரன்' என்று நினைப்பிட்டுக்கொடுவா; நாம் அதிலே மேலெழுத்திட்டுத்தர'' என்னும்; இவ்வஸ்தஸ்ய ப்ரவ்ருத்திக்கு வேறு ஸஹகாரிப்பாரைக் கிடையாதே; தானே யிறேயுள்ளது. [இன்மொழியார்] - இனிய பேச்சையுடையராயிருந்துள்ளவர்களுடைய அகவாய் மயிர்க்கத்தியாயிருக்கச் செய்தேயும், ப்ராணயவாசமான பேச்சாலே வசீகரிக்கவல்ல

வர்கள். [மதுரப்பாசக ஆர்ந்தவர்] - மதுரமான போகத்தை, அவர்களுடனே நெருங்க புஜித்தவர்களே. [வைத்தெற்றொன்றுறுவர்] - போகத்துக்குப் பாங்கான பொருளும், அதுக்குக்கைம்முதலான த்ரவ்யமும்போய்; பின்னையும் ஆசை மாறாதே அங்கேயாயிட வாசலிலே போயிருக்கும், வருவார்க்கும் ஸ்தோத்ரியம் முற்பட, மனிச்சிலே காண்ரண்டுபின்னை "போகலாகாதே" என்பர்களே; "போமிறேம், போமிறேம்" என்றிருக்குமே. போகாதே; பின்னை வெள்ளாட்டியையிட்டுப் பரிபவிப்பர்கள்; அதுக்கும் போகாதே; பின்னை மாணிக்கு ஏறப்பிடிப்பர்கள்; அதுக்குமெழுந்திரான்; பின்னைக் காலைப்பற்றி யீர்ப்பார்கள்; இவன் ஆணைக் கட்டிக் கொள்ளும்; இப்படியாக அவர்களாலே பரிபூதராவர்கள்; விபாகத்தில பிறக்கும் பரிபவத்தை யநுஸந்தித்து வெறுத்து, அது தம்வாயாலருளிச்செய்ய மாட்டாமையாலே 'மற்றொன்று' என்கிறார். அங்ஙனன்றிக்கே, விபாகத்தில் நன்மையோடே தலைக்கட்டும் விஷயத்தைப்பற்றி உஜ்ஜீவித்துப்போகப் பாருங்கோளென்கிறார். [அதிர்ப்பாதி] - பேதநுடைய நெஞ்சுகள் அதிரும்படியான ப்ரவ்ருத்திகளையுடைய அசுரவர்க்கம் முடியும்படி வடமதுரையிலே வந்து திருவவதரித்தவருக்கு. [எதிர்கொள்ளாக்காயல்லால்] - ஆபிமுக்யமாண்ணுமாக அடியாராய் உஜ்ஜீவிக்குமதொழிய; அவனுக்கு நாம் செய்யவேண்டுவதிது,—அவன்தானே மேல் விழாநின்றால், விமுகராகாதொழிய மத்தவ்யே வேண்டுவது. *அங்யத் பூர்ணாதபாம்கும்பாத்* —பாண்டவபக்ஷபாதியாயிருக்கிற க்ருஷ்ணன் வாராநின்றான்; அவனுக்கு நாட்டையும் கொடுத்து, பொன்னையும்கொடுத்து, நமக்காக்கிக்கொள்ளுகிறேனென்றாப்போலே த்ருதராஷ்ட்ரன் சிலசொல்ல; அதுக்குக்கருத்து - இவற்றாலே அவனைப் படையறுத்துக் கொள்ளுகிறேனென்றாயிற்று. அவன்தான் நெஞ்சாலே நினைப்பதொன்றும், வாயாலே சொல்லுவதொன்றுமாயிறே யிருப்பது; இத்தையறிந்த விதுரன், வருகிறவன் அர்த்தலோலுபனல்லன் காண்; அவனுக்குவேண்டுவது இவ்வளவென்கிறான்; தான் குடிக்குந்தண்ணீரைக்குளிர வைக்கக்கடவனே; அத்தை அவன் வருகிறவழியிலே வாசலிலே வைக்கவமையும். தன் க்ருஹத்திலே அதிதி வந்து புகுந்தால் கால்கழுவுவதாக ஸாமான்யசாஸ்த்ரம் விதித்தது, அதுக்கு மேற்பட அவனை வாசிக்கு விசேஷித்துச் செய்யவேண்டுவதில்லை— *அங்யத் பாதாவநேஜநாத்* - அந்தக் குடத்தில் நீரையிட்டு அவன் திருவடிகளை விளக்க அமையும், மற்று வேண்டா. *அங்யத் குசலஸம்ப்ரச்நாத்* நெடுந்தூரம் வந்தவனை "நடந்தகால்கள் நொந்தவோ?" என்ன ப்ராப்தமிறே. *நசேச்சதி* உண்டவனுக்கு உண்ணப்போகாதிறே; அப்படியே இவனுடைய உத்யோகத்திலே அவனுக்கு வயிறுநிறையும்; பின்பு அவன் செய்யுமவையடைய மிகையாயிருக்கும். [இல்லைகண்டீர் இன்பம்] - ஆக்கங்களிலே சிலவற்றை ஸுகமென்று ப்ரமிக்கிறவர்களைப்போக்கி இதொழிய ஸுகரூபமாயிருப்பதொன்றில்லை. உயிர்க்கழுவிலே யிருக்கிறவனுக்கு ப்ராணனையும் வர்த்தித்து, தண்ணீர்குடித்து, தாஹமும்சமித்தால் பிறக்கும் ஸுகம்போலே யிருப்பதொன்றிறே ஸம்ஸாரிகளுக்கு போகத்தால் பிறக்கும் ஸுகமாகிறது. ஆநிறப்பாம்பின் மேலிலே போதுக்கி, "அது அள்ளிக்கொள்ளும்" என்றறியாதே "பகவதும் தப்பப்பெற்றோம்" என்று திருஷ்டராயிருப்பாரைப் போலேயிறே, விஷயாநுபவங்களாலே களித்திருக்கிற இருப்பு இவனுக்கு.

இல்லைகண்டீர் இன்பம் அந்தோ உள்ளது நினையாதே*
தொல்லையார்கள் எத்தனைவர் தோன்றிக்கழிந்தொழிந்தார்*
மல்லைமூதூர் வடமதுரைப் பிறந்தவன் வண்புகழே*
சொல்லிஉய்யப்போகலல்லால் மற்றொன்றில்லை சுருக்கே. (8)

௮.—ஆறும்பாட்டில், "எம்பெருமானை நிரதிசயபுருஷார்த்தம்" என்னும் இவ்வர்த்தத்தை உணராதே பலரும் அநேகம்பேர் இங்ஙனே முடிந்துபோனார்; நீங்களும் இங்ஙனே நசியாதே ஆச்ரிதர்க்காக ஸ்ரீமதுரையிலே வந்து பிறந்தருளின ஸர்வேச்வரனை பாச்ரயிக்கையல்லாது ஆத்மாவுக்கு ஹிதமில்லை, இது ஸங்க்ஷேபமாக சொன்னேனென்கிறார். [இல்லைகண்டீர் இன்பம் அந்தோ உள்ளது நினையாதே]-வேறுபுருஷார்த்தம் இல்லைகிடீகோள். உண்டான புருஷார்த்தத்தை நினையாதே: [மல்லைமூதூர்] அதிஸம்ருத்தமாய் அவனுக்குப் பழையதாய் வருகிற ஊர்.

இ.—ஆறாம்பாட்டில், நிரதிசயபுருஷார்த்தத்தை புணராதே முன்புள்ளார் அநேகர் முடிந்து போனார்; அங்ஙனே நசியாதே ஆச்ரிதர்க்காக அவதரித்து ரக்ஷிக்குமவனையே ஆச்ரயிக்குமதல்லது ஆத்மாவுக்கு ஹிதமில்லை யென்கிறார். [இல்லைகண்டீர் இன்பம்] - ஸம்ஸாரத்தில் ஸுகமில்லை கிடிகோள்; அந்தோ! போக்தாக்களுக்கு நான் உபதேசிக்கவேண்டுவதே! ப்ரத்யக்ஷம் அகிஞ்சித்கரமாயிருக்க உபதேசிக்கிறாரிறே. [உள்ளது நினையாதே] - உண்டான புருஷார்த்தத்தை நினையாதே, உண்டான இல்லாமையை நினையாதே யென்றுமாம். [தொல்லையார்கள் எத்தனைவர்] - பழையராயிருப்பாரெத்தனைவர் உத்பத்தி விநாசமேயாய் நடுவிருந்தநாள் புருஷார்த்தத்துக்கு உடல் அன்றிக்கே முடிந்துபோனார். எத்தனைவ ரென்கிறது - அநேகரென்கிறது. [மல்லை மூதூர்] - அதிஸம்ருத்தமாய் அவனுக்குப்பழையதாய் வருகிறவூர். விஸ்தாரமமாய் வாமநன் நெடுமால் தபஸ்ஸு பண்ணியும், ஸ்ரீசத்ருக்நாழ்வான் படை வீடுசெய்தும், கிருஷ்ணன் அவதரித்தும். இப்படி பகவத்ஸம்பந்தம் மாறாததேசம். [வண்புகழே] - அவனுடைய கல்யாண குணங்களையே. [சொல்லி உய்யப்போகலல்லால்] - உக்திமாத்ரத்தாலே உஜ்ஜீவித்துப்போமதொழிய. [மற்றொன்றில்லை சுருக்கே] - சுருங்கச் சொல்லலாம் ஹிதம் வேறொன்று மில்லை. கடுகைக்கலாவதுண்டு, திரளச் சொல்லலாவது இதுவே.

ஈடு.—நிரதிசயபுருஷார்த்தத்தை புணராதே முன்புள்ளாரநேகர் முடிந்துபோனார்கள்; அப்படியே நீங்களும் நசியாதே ஆச்ரிதர்க்காக அவதரித்து ரக்ஷிக்குமவனையே ஆச்ரயிக்குமத்தனையல்லது, ஆத்மாவுக்கு ஹிதமில்லையென்கிறார்.

[இல்லைகண்டீரின்பம்] - "ஸர்வம் து:க்கமயம் ஜகத்" என்கிற ஸம்ஸாரத்தில், கெடுவிகாள்! ஸுகலேசமுமில்லைகிடிகோள். [அந்தோ] - போக்தாக்களான உங்களுக்கு நான் உபதேசிக்க வேண்டுவதே! ப்ரத்யக்ஷம் அகிஞ்சித்கரமாயிருக்க உபதேசிக்கிறாரிறே. [உள்ளது நினையாதே] உண்டான புருஷார்த்தத்தை நினையாதே. "ஸுகரூபமாய் நித்யமாயிருப்பது பகவத் விஷயம்" என்று அறுதியிடாதே. உண்டான இல்லாமையை நினையாதேயென்று மிறு கூட்டுமாம். [தொல்லையார்கள்] - பழையராயிருப்பார் எத்தனைபேர். உத்பத்தியானது விநாசத்தோடே கூட்ட, நடுவுள்ளநாள் புருஷார்த்தத்துக்கு உடலன்றிக்கே கழிந்துபோனார். சிலபூண்டு ஏறுண்டாய், நேரான்றின இடக்கன்னிலே நின்று தீய்ந்துபோமவை; அப்படியே. [மல்லைமூதூர்] ஸம்ருத்தியை யுடைத்தாய், அவனுக்கு என்றுமொக்கக் கலவிருக்கையாய்ப் போருகிற விஸ்தாரமமாய், ஸ்ரீவாமனனெழுந்தருளியிருந்தும், ஸ்ரீசத்ருக்நாழ்வான் படைவீடு செய்தும், கிருஷ்ணன் அவதரித்தும், இப்படி பகவத்ஸம்பந்தம் மாறாதேபோருகிற தேசமாயிற்று. [மூதூர்] - பழையதாய் வருகிறவூர்; அங்கே வந்து அவதரித்தவனுடைய உதாரமான புகழையே வாயாலே சொல்லி உஜ்ஜீவித்துப் போமதொழிய. [மற்றொன்றில்லைசுருக்கே] - புறம்பேயின்று பரக்கக் கொண்டுகையாதுன்றைதானேபோக்கி, சுருங்கச்சொல்லு ப்ரகாரத்தாலே சொல்லலாவதில்லை.

மற்றொன்றில்லை சுருங்கச்சொன்னோம் மாநிலத்தெவ்வுயிர்க்கும்*
சிற்றவேண்டா சிந்திப்பேயமையும் கண்டீர்களந்தோ*
குற்றமன்றெங்கள் பெற்றத்தாயன் வடமதுரைப்பிறந்தான்*
குற்றமில்சீர்கற்று வைகல்வாழ்தல் கண்டீர்குணமே. (7)

இ.—ஏழாம்பாட்டில், பகவத் ஸமாச்ரயணத்தினுடைய எளிமையையும் இனிமையையும் அருளிச் செய்கிறார். [மற்றொன்றில்லை சுருங்கச்சொன்னோம்] - இதுதோடொக்க வேறு சொல்லலாவதும் இல்லை. இதுதன்னையும் பரப்பச்சொல்லுகிறிலோம் சுருங்கச்சொன்னோம். [மாநிலத்து] - இதுக்கு அதிகாரிகள் எங்ஙனே யென்னில்? பூமியிலே எவ்வுயிர்க்கும் ஜ்ஞாநசக்த்யாதிகள் குறைந்தாரோடு நிறைந்தாரோடு வாசியின்றிக்கே எல்லா ஆத்மாக்களுக்கும். [சிற்றவேண்டா] - ஆயாஸிக்க வேண்டா. [சிந்திப்பே அமையும் கண்டீர்கள்] - உக்தி ஸாபேக்ஷமாகச் சிந்தாமாத்ரமே அமையும் கிடிகோள். [அந்தோ] - இதிலே புகா

தொழிவதே என்று இன்னுதாகிறுர். [குற்றமன்று] - இவ்வுபாயம் அநர்த்தத்தை விளையாதிறே. [எங்கள் பெற்றத்தாயன் என்றுமேலுக்கு] - ஆச்ரிதர்க்காக வடமதுரைப் பிறந்தானுன பசுமேய்க்கும் ஆயனுடைய ஹேயப்ரத்யநீகமான கல்யாண குணங்களை அப்யஸித்து என்றும் வாழ்கை, ஆத்மாவுக்கு யுக்தம்.

இ.—எழாம்பாட்டில், பகவத் ஸமாச்ரயணத்திலுடைய எளிமையையும் இனிமையையும் அருளிச்செய்கிறுர். [மற்றென்றில்லை] - இத்தோடொக்க வேறு எண்ணலாவதில்லையென்னுதல்; இப்போதித்தைச் சொல்லி வேறொருபோது வேறேயொன்றைச் சொல்லுகிறுன் என்றிருக்க வேண்டாவென்னுதல். [சுருங்கச்சொன்னேம்] - இதுதன்னையும் பரப்பறச்சொன்னேம். ப்ரதிபத்திக்கு அவிஷயமாம்படியன்றியே ஸங்க்ரஹமாகச் சொன்னேம். [மாநிலத்து] - இதுக்கு அதிகாரிகள் ஸம்ஸாரத்திலே. இவ்வர்த்தத்துக்கு அனன்யர் பரமபதத்திலுள்ளாராகிலும் உபதேசத்துக்கதிகாரிகள் ஸம்ஸாரிகளென்கை. [எவ்வுயிர்க்கும்] - இது அதிக்ருதாதிகாரமன்று, ஸர்வாதிகாரம். [சிற்றவேண்டா] - ஆயாஸிக்கவேண்டா. சிற்றுதல் - சிதறுதலாய், பரக்கவேண்டாவென்கை. [சிந்திப்பேயமையுங்கண்டீர்கள்] - உக்திநிரபேக்ஷமாகச் சிந்தாமாத்ரமேயமையுங் கிடிகோள். [அந்தோ]- இவ்விலக்ஷணவிஷயத்தை இழப்பதே என்னுதல். "இது ஸுலபம்"என்றால் காற்கடைக்கொள்ளுகைக்கு உறுப்பாவதே யென்னுதல். [குற்றமன்று]-ஒருநன்மையில்லையாகிலும், ஓர் அநர்த்தத்தை விளையாதே. 'ப்ராதர்த்தேவேதி க்ருஷ்ணேதி'. இவ்வுபாயத்துக்கு பலமில்லையாகிலும் தானே ப்ரயோஜனம் போருமென்கை. [எங்கள் பெற்றத்தாயன் வடமதுரைப் பிறந்தான்]-ஆச்ரிதர்க்காக வடமதுரைப் பிறந்தானுன பசுமேய்க்கும் ஆயனென்னுதல். ஆச்ரிதர்க்காகப் பசுமேய்க்கும் ஆயனுமாவாக வடமதுரைப் பிறந்தானென்னுதல். [குற்றமில்சீர் - கற்று]- ஹேயப்ரத்யநீகமான கல்யாணகுணங்களை அப்யஸித்தென்னுதல்; பிறப்பிலும் சேஷ்டிதங்களிலும் புரையற்றிருக்கையென்னுதல். "அஹம் வோ பாந்தவோ ஜாத:"- [வைகல் வாழ்தல் கண்டீர் குணமே] - கற்பதொருகால்; வாழ்ச்சி நித்யமாயிருக்கும் [வாழ்தல் கண்டீர் குணமே]. வாழ்தல்கீழ் இவ்வாத்மாவுக்கு யுக்தம்; அல்லாததெல்லாம் அப்ராப்தமென்கை.

சரு.—எழாம்பாட்டு. பகவத்ஸமாச்ரயணத்திலுடைய எளிமையையும் இனிமையையும் அருளிச்செய்கிறுர்.

[மற்றென்றில்லை] - இத்தோடொக்க வேறு எண்ணலாவதில்லையென்னுதல், இப்போது இத்தைச் சொல்லி வேறொருபோது வேறொன்றைச் சொல்லுகிறுனென்றிருக்கவேண்டாவென்னுதல். [சுருங்கச்சொன்னேம்] - இதுதன்னைப் பரப்பறச்சொன்னேம். ப்ரதிபத்திக்கு அவிஷயமாம்படி சொல்லுகையன்றிக்கே, ஸங்க்ரஹமாகச் சொன்னேம். [மாநிலத்து]-இதுக்கு அதிகாரிகள் ஸம்ஸாரத்திலே. இவ்வர்த்தத்துக்கு அனன்யர் பரமபதத்திலுள்ளாராகிலும் உபதேசத்துக்கதிகாரிகள் ஸம்ஸாரத்திலுள்ளாரென்கை. [எவ்வுயிர்க்கும்]-இது அதிக்ருதாதிகாரமன்று; ஸர்வாதிகாரம். [சிற்றவேண்டா] - ஆயாஸிக்கவேண்டா. சிற்றுதல்-சிதறுதலாய், பரக்கவேண்டாவென்கை. அந்த வ்யாபாரம் வேண்டாவென்றபடி. [சிந்திப்பேயமையும் கண்டீர்கள்]-உக்திநிரபேக்ஷமான சிந்தாமாத்ரமே யமையுங்கிடிகோள். [அந்தோ] "நற்சரக்குக் கிட்டினதையும் கைவிடுவதேசத்து உடலாவதே!" என்று அந்தோ! என்கிறுர். [குற்றமன்று] இச்சொன்ன நன்மைதானொன்றுமில்லையாகிலும், இதுசொன்னுலும் உங்கள் தலையில் ஒரு அநர்த்தம் இடிவிழாது. "யோசவஸாதஸ் ஸ உச்யதாம்"-"ப்ராதர்த்தேவேதி க்ருஷ்ணேதி". இவ்வுபாயத்துக்குப் பலமில்லையாகிலும், இதுதானே ப்ரயோஜநம் போருமென்கை. [எங்கள் பெற்றத்தாயன் வடமதுரைப் பிறந்தான்] - வந்து பிறப்பதற்குமுன்னே பெற்றத்தாயன் போலேயாகிலும், வந்தவதரிப்பதாக ஸங்கல்பித்ததில் புரையற்றிருந்தபடி. ஆச்ரிதர்க்காக வடமதுரைப் பிறந்தானுன பசுமேய்க்கும் ஆயனென்னுதல். பெற்றத்தாயன் - பசுமேய்க்கும் இடையன். [குற்றமில் சீர்கற்று] - ஹேயப்ரத்யநீகமான கல்யாணகுணங்களை அப்யஸித்தென்னுதல்; பிறப்பிலும் சேஷ்டிதங்களிலும் புரையற்றிருக்குமென்னுதல். "அஹம் வோ பாந்தவோ ஜாத:". [வைகல்வாழ்தல்கண்டீர்குணமே] - கற்பதொருகாலாய், பின்பு வாழ்ச்சி நித்யமாயிருக்குமாயிற்று; இதொன்றுமே குணம்; இதொழிந்ததடைய அப்ராப்தம்.

வாழ்தல்கண்டீர்குணமிது அந்தோ மாயவனடிபரவி*
போழ்துபோகவுள்ளகிற்கும் புன்மையிலாதவர்க்கு*
வாழ்துணையா வடமதுரைப்பிறந்தவன்வண்புகழே*
வீழ்துணையாப்போமிதனில் யாதுமில்லைமிக்கதே. (8)

ஆ.—எட்டாம்பாட்டில், எம்பெருமான் இங்கேவந்து திருவவதாரம்பண்ணி யருளுகைக்கு நிதானத்தைச்சொல்லி அவனையே ரக்ஷகனாகப் பற்றுமித்தனைபோக்கி ஒருவர்க்கும் வேறொரு ப்ரயோஜநமில்லை என்கிறார். [மாயவனடி பரவியென்று தொடங்கி] - ஆச்சர்யமான குணசேஷ்டிதாதிகளையுடையவன் தன்னுடைய திருவடிகளை இனிதாய்க் கொண்டு பேசியே போதுபோக்கவேணுமென்று அத்யவஸிக்கவல்லராய், அநந்யப்ரயோஜநரானவர்க்கு உஜ்ஜீவநஹேதுவாக வடமதுரையில் பிறந்த ஸர்வேச்வரனுடைய கல்யாணகுணங்களையே மேவும் துணையாகப் பற்றும் இதுபோக்கிச் சீரியது ஒன்றுமில்லை. [வீழ்துணையென்றது] - ஆசைப்படும் துணையென்றவாறு.

இ.—எட்டாம்பாட்டில், அவதாரத்துக்கு நிதானத்தைச் சொல்லி அவனையே ரக்ஷகனாகப் பற்றுமதொழிய வேறு விலக்ஷணமாயிருப்பதோர் அபாச்ரயமில்லை என்கிறார். [வாழ்தல்கண்டீர் குணமிது] - அவன் குணங்களை அநுஸந்தித்து வாழுமதே கிடீர்கோள் யுக்தம். [அந்தோ] - கரும்புதின்னக் கூலி கொடுப்பாரைப்போலே இவர்களை அபேக்ஷிக்கவேண்டுவதே எனக்கு. [மாயவனித்யாதி] ஆச்சர்யமான ஸௌந்தர்யசீலாதிகளையுடையவனுடைய திருவடிகளை ப்ரீதியாலே அக்ரமமாக ஏத்தி அத்தாலே காலக்ஷேபம் பண்ணவேணுமென்று அத்யவஸிக்கவல்லரான அநந்யப்ரயோஜநர்க்கு. புன்மையில்லாதவர்கள் - சீரியவர்கள். உள்ளகிற்கை - உள்ள வல்லராகை, அத்யவஸிக்க வல்லராகை. [வாழ்துணையா வடமதுரைப் பிறந்தவன்] கண்ணாலே கண்டனுபவிக்கைக்காக, “அஜாயமாந: பஹுதா விஜாயதே” என்கிறபடியே துணையாய்வந்து பிறந்தவன். “பரித்ராணாய ஸாதூநாம்” என்றிறே அவதாரத்துக்கு ப்ரயோஜநமிருப்பது. [வண்புகழே வீழ்துணையாப் போமிதனில்] - கல்யாணகுணங்களையே ஆசைப்படுந் துணையாகப் பற்றுமிதுபோக்கி. [வீழ்துணை] - ஆசைப்படுந்துணை. “தாம் வீழ்வார்” என்னக்கடவதிறே ஆசாயுக்தரை. [யாதுமில்லை மிக்கதே]- இதிற்காட்டில் மேற்பட்டதொன்றுமில்லை.

ஈடு—எட்டாம்பாட்டு. அவதாரத்துக்கு நிதானத்தைச் சொல்லி, அவனையே ரக்ஷகனாகப் பற்றுமதொழிய, வேறு விலக்ஷணமாயிருப்பதோர் அபாச்ரயமில்லையென்கிறார்.

[வாழ்தல்கண்டீர்குணமிது] - அவன்குணங்களை யநுஸந்தித்து வாழுமிதுவே கிடீர்கோள் யுக்தம். [அந்தோ] - கரும்பு தின்னக் கூலி கொடுப்பாரைப்போலே இவர்களை யபேக்ஷிக்க வேண்டுவதே எனக்கு. வஸ்து உங்களதாயிருக்க, இரந்து திரிவேன் நானுவதே! [மாயவனித்யாதி] - ஸௌந்தர்யசீலாதிகளால் ஆச்சர்யபூதனாயிருக்கிறவன் வஸ்துவினுடைய குணஜ்ஞராய் ப்ரீதியாலே அவன் திருவடிகளை யக்ரமமாகவேத்தி, அத்தாலே காலக்ஷேபம் பண்ணுவதாக அத்யவஸிக்கவல்லரான நன்மையையுடையவர்கள், சீரியவர்கள். அநந்யப்ரயோஜநரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு. “தேத்தெழுதிவாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் போதுபோக்கு”மவர்கள். “இந்த மாயவனடிபரவுகை குதூஹலத்தோபாதியுடையவர்களும் அகப்படக் குறித்து அதுவே போதுபோக்காக நின்றபின்பு, முதலிலே அது குணங்களை யநுபவித்து வாழ்கைக்குத் துணையாக வடமதுரையிலே வந்து அவதரித்தவனுடைய. அவதார ப்ரயோஜநம் *பரித்ராணாய ஸாதூநாம்* என்றிறேயிருப்பது. [வண்புகழித்யாதி]- அவனுடைய கல்யாணகுணங்களையே யாசைப்படுந்துணையாகப் பற்றுமிது போக்கி. [வீழ்துணை] - ஆசைப்படுந்துணை. “தாம்வீழ்வார் தம்வீழப்பெற்றவர்” என்னக்

கடவதிறே ஆசார்யர்க்கு. [இதனில்] - இதிற்காட்டில். [யாதுமில்லை மிக்கதே] - இதனில் மேலாயிருப்பதொன்றுண்டாம், "இதனின்று" என்னவேணுமே; இதுக்கு மேலாயிருப்பதொன்றுமில்லை.

யாதுமில்லைமிக்கதனில் என்றென்றதுகருதி*
காதுசெய்வான்கூதைசெய்து கடைமுறைவாழ்க்கையும்போம்*
மாதுகிலின்கொடிக்கொள்மாட வடமதுரைப்பிறந்த*
தாதுசேர்தோட்கண்ணனல்லால் இல்லைகண்டீர்சரணே. (9)

ஒ.— ஒன்பதாம் பாட்டில், எம்பெருமானையொழிய வேறொன்று ரக்ஷக முண்டென்று பற்றினவர்கள், பண்டுநின்ற நிலையுங்கெட்டு அநர்த்தப்பட்டுப்போவர்கள்; ஆனபின்பு, இவனைப்போக்கி சரணமில்லையென்கிறார். [யாதுமில்லையென்று தொடங்கி] - இதொழிய மற்றொன்று ரக்ஷகம் இல்லை என்றேதேனும் சொன்னால் சொல்லி அத்தை ரக்ஷகமாகக்கொண்டு, காதுபெருக்கவேண்டியதுக்கு பண்டுள்ளதையும் கெடுத்துக் கூதையாக்கிறாப்போலே பண்டுதாங்கள் வாழ்ந்து வருகிற வாழ்வையும் இழப்பர்கள். [தாது சேர்தோள் கண்ணனை] - வைஜயந்தி ப்ரப்ருதி மாலைகளாலே அலங்க்ருதனான க்ருஷ்ணன். "இவற்றைத் தவிர்ந்து வேறு புருஷார்த்தமாகப் பற்றுகிறவர்களில்? பகவத்ஸமாச்ரயணத்துக்கு யோக்யமாய், சப்தாதி விஷயங்களை அநுபவித்து ஸம்ஸாரத்திலே இருக்குமித்தனையும் இழக்குமித்தனை பதில் ப்ரயோஜநம்; ஆனபின்பு, தாதுசேர்தோள் கண்ணனல்லதில்லை கண்டீர் சரண் என்கிறார்" என்றுஞ் சொல்லுவர்.

இ.—ஒன்பதாம் பாட்டில், இவனையொழிய வேறொன்றை ரக்ஷகமென்று பற்றினவர்கள், பண்டு நின்ற நிலையுங் கெட்டு அனர்த்தப்பட்டுப் போவர்கள்; ஆனபின்பு இவனைப்போக்கி வேறு சரணமில்லையென்கிறார். [யாதுமில்லை இத்யாதி] - பகவத்வ்யதிரிக்தமாயிருப்பதொன்றைப் பற்றி "இதொழிய வேறு ரக்ஷகமாயிருப்பதொன்றுமில்லை" என்று சொல்லி அத்தை ரக்ஷகமாக நினைத்து, "ஸமர்த்தோ த்ருச்யதே ரக்ஷிதும்" என்கிற ப்ரதிபத்தியை அதிலே வேறுமொன்று பண்ணியிருக்கை. [காது செய்வான் கூதை செய்து] - காது பெருக்கப்புக்கு பண்டுள்ள போக்யதையையுங் கெடுத்துக் கூதை யாக்கிறாப்போலே. [கடைமுறை வாழ்க்கையும்போம்] - தன்னுடைய முறையான வாழ்க்கையும் அழியும். ஆபத்தில் அது ரக்ஷகமாகாது; அதின் பக்கலிலே ந்யஸ்தபாரனாகையாலே தான் செய்து கொள்ளுமத்தையுமிழக்கும். [மாதுகிலித்யாதி]. கம்ஸன் வாழ்கிறதுப் படைவீட்டைக் கொடிகட்ட இவர் அத்தை க்ருஷ்ணனுடைய அவதாரத்துக்கு உடலாக்குகிறார். சிசுபாலன் விவாஹார்த்தமாகச் செய்த சடங்குகளைத் தனக்கு உடலாக்கிக் கொண்டாப்போலே. [தாதுசேர்தோள் கண்ணனல்லால்] - வைஜயந்தி உள்ளிட்ட தோள் மாலைகளாலே அலங்க்ருதனான க்ருஷ்ணனையொழிய வேறு ப்ரயோஜநம் வேண்டாவென்கை. [இல்லை கண்டீர் சரணே] - புறம்பு ரக்ஷகமில்லை கிடீகோள். அநவா, இப்பாட்டு கைவல்யநிஷ்டையென்றுமாம். ஆத்மாநுபவ ஸுகத்திற் காட்டில் மிக்கதொரு புருஷார்த்தமில்லையென்றே புத்தி பண்ணி. [கடைமுறை வாழ்க்கையும்போம்] - பகவத்ஸமாச்ரயணத்துக்கு யோக்யமான ஸம்ஸாரத்திலே சப்தாதி விஷயங்களை யநுபவித்திருக்கு மத்தையும் இழக்கும். ஆனபின்பு ஸர்வாதிகனாய் ஸுலபனான க்ருஷ்ணனே பரம ப்ராப்யன் என்கை.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. இவனையொழிய வேறேயொன்றை ரக்ஷகமென்று பற்றினவர்கள், பண்டு நின்ற நிலையுங்கெட்டு அனர்த்தப்பட்டுப்போவர்கள்; ஆனபின்பு, இவனல்லது சரணமில்லையென்கிறார். அன்றிக்கே, கைவல்யபுருஷார்த்தத்தைச் சொல்லுகிறதாகவுமாம்.

[யாதுமித்யாதி] - பகவத்வ்யதிரிக்தமாயிருப்பதொன்றைப்பற்றி, "இதொழிய வேறு ரக்ஷகமாயிருப்பதொன்றுமில்லை" என்று சொல்லி, அத்தை ரக்ஷகமாக நினைத்து. "ஸமர்த்தோ த்ருச்யதே ரக்ஷிதும்" என்கிற ப்ரதிபத்தியை அதிலேபண்ணி. [காதுசெய்வான் கூதை செய்து]- காதுபெருக்கப்புக்கு, பண்டுள்ள போக்யதையையுங் கெடுத்துக் கூதையாக்கிறாப்போலே. [கடைமுறைவாழ்க்கையும்போம்]- தன்னிதான முறைமையாலே வாழக்கடவ வாழ்வு உண்டு

ஸம்ஸாரத்திலே பசுவும் குட்டியுமாய் அனாய்க்குளியமாய்ப் போருமது; அதுவுங்கூடக் கெடுமித்தனை. ஆபத்தில் அது ரக்ஷகமாகமாட்டாது; அதின் பக்கலிலே ஸம்பந்தமாறு பிருக்கைபாலே, தான்செய்துகொள்ளுமத்தனையு மிழக்கும். [மாடுநிற்ப்யாதி] - கம்ஸன் வாழ்கிறானும், அலங்காரமாகக் கட்டின கொடியை க்ருஷ்ணனுடைய அவதாரத்துக்கென்றே நினைத்திருக்கிறாயிற்றுஇவர். சிசுபாலன் பாணிக்ரஹணத்துக்கு உடலாகச் செய்த சடங்கு களையடைய தனக்கு உடலாகநினைத்துக் கைப்பிடித்தாளிறே. [தாதிந்யாதி] - ஸைதுடைய திருவடிக்காலோ மசிலையாலே மலைக்குதுபர்ஸ திருத்தீர்த்தங்களையுடையவன். வேறொரு ப்ரயோஜனத்தால் வேண்டா. [அல்லாவில்லைகண்டீர்சரணே] - அவனை யொழிய வேறு ரக்ஷகமாகவல்ல தொரு வஸ்து இல்லை கிடீகோள். ஸைவல்யபரமானபோது - [மாதுமீத்யாதி] - 'இவ்வாத்மாநுபவஸுகத்துக்கு மேற்பட்டிருப்பதொன்றில்லை' என்று, அவ்வருகே பகவ தநுபவஸுகமுண்டேயாகிலும் அத்தையே புத்தி பண்ணி, காதுபெருக்கப்புக்கவன் அத்தைப் பலகாலும் அறுத்து வைத்து முன்புத்ததையோக்யதையுங்கூடக் கெடுக்குமாபோலே, பகவத் ப்ராப்த்யனுபவத்துக்கு யோக்யமான ஸம்ஸாரத்திலே சப்தாதி விஷயங்களை யநுபவித்திருக்கும் அத்தையும் இழக்கும்: ஆனபின்பு, ஸர்வாதிகனான க்ருஷ்ணனே பரமப்ராப்யமென்னகை.

கண்ணனல்லால் இல்லைகண்டீர் சரணதுநிற்கவந்து*
மண்ணின்பாரம்நீக்குதற்கே வடமதுரைப்பிறந்தான்*
திண்ணமாநும்முடைமையுண்டேல் அவனடிசேர்ந்துய்ம்மினோ*
எண்ணவேண்டாநுமக்கதும் அவனன்றிமற்றில்லையே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், தானேயெல்லார்க்கும் சரணமென்னும் இவ்வர்த்தத்தை ப்ரதிஷ்டிக் கைக்காகவந்து திருவவதாரம் பண்ணியருளின க்ருஷ்ணன்திருவடிகளை ஆச்ரயியுங்கோள் என்கிறார். [கண்ணனென்று தொடங்கி] - க்ருஷ்ணனல்லது சரண் இல்லை என்னும் இவ்வர்த்தத்தை ஸ்தாபிக்கைக் காகவும் அதுக்குஉறுப்பாக பூபாரத்தைப்போக்கியருளுகைக்காகவும் வடமதுரையிலே வந்து திருவவ தாரம் பண்ணினான். உங்களுடைய ஆத்மாத்மீயங்களெல்லாம் அவன்திருவடிகளிலே சேஷத்வே கத்ருடமாக ஸமர்ப்பியுங்கோள். [எண்ணவேண்டா நுமக்கது மவனன்றி மற்றில்லையே] - "இப்படியே போ, அன்றோ" என்று விசாரிக்கவேண்டா. அத்தனையுமன்று. உங்களுக்கு ஸாத்யமானவையெல் லாம் ஸாதித்துத்தருவான் அவனே. உங்களினவாக நீங்கள் அபிமானித்திருக்கிறவை யெல்லாம் அவனினவே; அதிலொருவஸ்துவுமில்லை யென்றுமாம்.

இ.—பத்தாம்பாட்டில், தானே சரணமென்னும் இவ்வர்த்தத்தை ப்ரதிஷ்டிக்கைக்காக வந்தவதரித்த க்ருஷ்ணன்திருவடிகளை ஆச்ரயியுங்கோள் என்கிறார். [கண்ணனல்லாலித்யாதி] - க்ருஷ்ணனையொழிய வேறு சரணமாவாரில்லையென்னுமிவ்வர்த்தத்தை ஸ்தாபிக்கைக்காகவும் அதுக்குஉறுப்பாக பூபாரத்தைப் போக்குகைக்காகவும் திருவவதாரம்பண்ணினான்; உங்களுடைய ஆத்மாத்மீயங்களை, சேஷியான ஸர்வேச்வரனான அவன்திருவடிகளிலே சேஷத்வேந த்ருடமாக ஸமர்ப்பியுங்கோள். உண்டேலென்கிறது ஸ்வ பக்ஷத்தாலின்றிலே: அவர்களுடைய அந்யதாப்ரதிபத்தியாலே வந்தது உண்டாகிலென்கை. எண்ண வேண்டா - "அவனதோ நம்மதோ" என்று விசாரிக்கவேண்டா: உங்களோடு உங்களுடைமையோடு வாசியற அவனுக்கே சேஷம். அதவா, உங்களுக்கு ஸாத்யமானவையெல்லாம் ஸாதித்துத்தருவான் அவனொழிய வேறில்லை. ஸமிதை பாதி ஸாவித்ரி பாதியாய உங்கள் நினைவிலும் சிறிது கிடக்கிறதன்று அவனே நிரபேக்ஷோபாயமென்றுமாம்.

ஈடு.—பத்தாம்பாட்டு. தான் சரணமென்னும் அர்த்தத்தை ப்ரதிஷ்டிக்கைக்காக அவதரித்த க்ருஷ்ணன்திருவடிகளை யாச்ரயியுங்கோளென்கிறார்.

[கண்ணனல்லாலித்யாதி] - க்ருஷ்ணனையொழிய வேறு சரணமாவாரில்லை என்னும் இவ் வர்த்தம் நிலைநிற்கைக்காக, இவ்வர்த்தத்தை ஸ்தாபிக்கைக்காகவும், அதுக்கு உறுப்பாக

பூபாரத்தைப் போக்குகைக்காகவும் திருவவதாரம் பண்ணினான்; ஆனபின்பு, நீங்களும், உங்களுடைமையென்று நினைத்திருந்தனவுண்டாகில் கடுக அவன் திருவடிகளிலே சேஷத்வேந நடப்பாக ஸமர்ப்பியுங்கோள்! உண்டேயென்றது - ஸம்பாஷித்தானில்லை; அவர்களுடைய அப்பாரம்பர்யத்தாலுண்டான ப்ரதிபத்தியாலே சங்கை உண்டாகிலென்கை. [என்னை வேண்டா] "இதுதான் அவனதோ, நம்மதோ" என்று விசாரிக்க வேண்டா; உங்களோடு உங்களுடைமையோடு வாசியற அவனுக்கே சேஷம். [மற்றில்லையே]- வேறில்லை. அன்றிக்கே, உங்களுடைய பரத்தில் கர்த்தவ்யாம்சமுடைய உங்கள் தலையிலே கிடக்கிறதல்ல; எல்லாம் அவன் பக்கலிலே கிடக்கிறதென்னுதல். [மற்றில்லை] - ப்ராப்திக்கிட்டான ஸாதனமும் அவனை யொழியவில்லை. ஸமிதைபாதி, ஸாவித்ரிபாதியாக நீங்களும் ஒருதலை கூட்டுப்பட வேண்டுவதில்லை.

ஆதுமில்லைமற்றவனில் என்றதுவேதுணிந்து*
தாதுசேர்தோள்கண்ணனைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன*
தீதிலாதவொண்தமிழ்கள் இவையாயிரத்துளிப்பத்தும்*
ஓதவல்லபிராக்கள் நம்மையாளுடையார்கள்பண்டே. (11)

ஒ.—நிகமத்தில் "அத்யேஷ்யதே ச ய இமம்" என்று தொடங்கி எம்பெருமான் அருளிச் செய்தாப்போலே, இத்திருவாய்மொழி அப்யஸிக்கவல்லார் எனக்கு ப்ரியகரரென்கிறார். [ஆதுமில்லை மற்றவனிலென்றதுவே துணிந்து] அவனையொழிய வேறு ப்ராப்யப்ராபகங்கள் இல்லையென்று அத்யவஸித்து. [தாது சேரென்று தொடங்கி] - ஆழ்வார் அருளிச்செய்த நிர்தோஷமாய் பஹுகுணமான ஆயிரம் திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி அப்யஸிக்க வல்லவர்கள் பண்டே நமக்கு ஸ்வாமிகள்.

இ.—நிகமத்தில் "அத்யேஷ்யதே ச ய இமம்" என்று தொடங்கி அவன் அருளிச்செய்தாப்போலே இத்திருவாய்மொழியை யப்யஸிப்பார் எனக்கு ப்ரியகரரென்கிறார். [ஆதுமில்லை மற்றவனிலென்றதுவே துணிந்து] அவனையொழிய வேறு ப்ராப்யப்ராபகங்களில்லை என்று அத்யவஸித்து. [தாதுசேர்தோள் கண்ணனை]-இவர்க்கு இவ்வத்யவஸாயத்தைப் பிறப்பித்தாரார் என்னில்?—தோளும் தோள்மாலையுமான அழகைக் காட்டியாயிற்று இவர்க்கு இவ்வத்யவஸாயத்தைப் பிறப்பித்தது. [தீதிலாதவொண்தமிழ்கள்]- கதாந்தரப்ரஸ்தாவமின்றி யிருக்கையும் ஸ்வார்த்தங்களைத் தானே வெளியிடவற்றாகையும். நிர்த்தோஷமாய் பஹுகுணமானவை யென்றுமாம். ஓதவல்லபிராக்கள் - இப்பத்தை அப்யஸிக்கவல்ல உபகாரகர். ஸம்ஸாரத்தின் தன்மையும், ஈச்வரனே ப்ராப்யப்ராபகங்களென்றுமிறே யிதிற் சொல்லிற்று. இத்தை அப்யஸித்து நல்வழிபோமிதுவிறே இவர்க்கு உபகாரகராகையாவது. [நம்மையாளுடையார்கள் பண்டே] அத்தை அப்யஸிக்கைக்கு ஹேதுவான சரீரபரிக்ரஹம் பண்ணினகாலமே பிடித்து நாதரென்கிறார்.

ஈடு.—பதினொன்றாம் பாட்டு. நிகமத்தில், ["அத்யேஷ்யதே ச ய இமம்"] என்று தொடங்கி அவனருளிச்செய்தாப்போலே, இத்திருவாய்மொழி யப்யஸிப்பார் எனக்கு ப்ரியகரரென்கிறார்.

[ஆதுமில்லைமற்றவனிலென்றதுவே துணிந்து] -அவனையொழிய வேறு ப்ராப்யப்ராபகங்களில்லையென்று அத்யவஸித்து. இவர்க்கு இப்படி இந்த வ்யவஸாயத்தைக் கொடுத்தார் ஆர்? என்றால்,—வேறு ஆரிட்டே? அவனுடைய தோளும் தோள்மாலையுமன்றோ! [தாது இத்யாதி]- அவனுடைய ஸௌந்தர்யமாயிற்று, இவரை இப்படி துணியப்பண்ணிற்று. [தீதிலாத]-கதாந்தரப்ரஸ்தாவமின்றிக்கேயிருக்கை. [ஒண்தமிழ்கள்] உள்ளுண்டான அர்த்தத்தையடைய வெளியிட்டுக்கொடுக்கவற்றாயிருக்கை. நிர்த்தோஷமாய், பஹுகுணமானவையென்னுமாம். [ஓதவல்லபிராக்கள்] - இப்பத்தை யதிகரிக்கவல்லவுபகாரகர். ஸம்ஸாரத்தின் தன்மையும், ஈச்வரனுடைய ப்ராப்யப்ராபகத்வமுமிறே இத்திருவாய்மொழியிற் சொல்லிற்று; இத்தை யப்யஸிக்கவே, தீயவழியைத்தவிர்ந்து நல்வழி போகத் தொடங்குவர்கள். இதுக்குமேற்பட

இவர்க்கு உபகாரமில்லையேயாகிலும் இவர்கள் பண்ணுவது. [நம்மையாளுடையார்கள்பண்டே] ஒரு நுகர்த்திலே யித்தைப் பெறுகைக்கீடான அதிகாரத்தையுடையராயிருப்பாராகில், அவர்கள் பண்டே நமக்கு நாதபூதர். "அத்யேஷ்யதே" என்கிறபடியே, இத்தைப்பெறுகைக்கீடான யோக்யதையுள்ள ஜன்மந்தொடங்கி நமக்கு நாதர்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

இரண்டாம் திருவாய்மொழி பண்டைநாள் : ப்ரவேசம்

ஒ.—இரண்டாம் திருவாய்மொழியில், கீழ்த்திருவாய்மொழியிலே அவனுடைய நிருபாதிகபாந்தவத்தையறிவித்த ஆழ்வார் இப்படி பரமபந்துவானவன் கண்வளர்ந்தருளுகிற திருப்புளிங்குடியிலே, அவனோடே யெல்லாப்பரிமாற்றமும் பரிமாறவேணுமென்று ஆசைப்பட்டுச் சென்றபடி பெருமையாலே விஷண்ணராய்த் தம்பக்கலிலே விசேஷகடாக்ஷம்பண்ணாதிருந்ததுக்குமேலே ஒரு சேஷ்டைகள்பண்ணாதே ஏகரூபமாகக் கண்வளர்ந்தருளுகையாலே "திருமேனியலசுகிறது" என்று அதிபீதராய் "என்னை உன்னழகிய திருக்கண்களாலே நோக்கியருளவேணும்; திருவடிகளைத் தலையிலே வைத்தருளவேணும்; திருப்பள்ளியுணர்ந்து பிராட்டியோடேகூட விருந்தருளவேணும்; எழுந்திருந்து என்னெதிரேவந்தருளவேணும்" என்று தொடங்கித் தம்முடைய மனோரதங்களையடைய அபேக்ஷிக்கிறார்.

இ.—இரண்டாம் திருவாய்மொழியில், கீழ்த்திருவாய்மொழியிலே "அல்லாதாரடங்க ஸோபாதிக பந்துக்கள்; அவனே நிருபாதிகபந்து" என்கிற அர்த்தத்தை அநுஸந்தித்து அதுக்கநுகுணமான பரிமாற்றத்துக்காக, பரமபந்துவானவன் கண்வளர்ந்தருளுகிற திருப்புளிங்குடியிலே அவனோடேயெல்லாப் பரிமாற்றத்தையும் ஆசைப்பட்டுச் சென்றபடி பெருமையாலே விஷண்ணராய், அதுக்குமேலே ஒரு சேஷ்டைகள் பண்ணாதே ஏகரூபமாகக்கண்வளர்ந்தருளுகையாலே திருமேனியலசுகிறதென்று அத்தலையிலே நோவைக்குறித்து அதிபீருக்களுமாய், "என்னார்த்தியுந் தீர்க்கிறிலன், தன் ஆர்த்தியுந் தீர்க்கிறிலன்" என்று வெறுக்கிறார். ஆராவமுதில் "என்னார்த்தி தீர்க்கிறிலன்" என்று வெறுத்தார். இரண்டையுங்குறித்து வெறுக்கிறாரிதில். "கொடியார் மாடக்கோளூர்" என்றதுவே தலையெடுத்து தம்மாற்றாமையெல்லாம் தோற்றும்படி, "என்னார்த்திதீரக் குளிர நோக்கவேணும்; அநுகூலத்தசநத்தாலே அகவாயிற்பந்தம் தோற்ற விக்ருதனாய்ப் பண்ணும் ஸ்மிதத்தை நான் காணப்பெறவேணும்; பிராட்டியும் தேவருமாயிருக்கிற இச்சேர்த்தியைக்காட்டியருளவேணும்; திருவடிகளை என்தலையிலேவைத்தருளவேணும்: நான்வந்து கிட்டினஇந்நாள் வந்த ப்ரீதிதோற்ற எழுந்திருந்து என்னெதிரே வரவேணும்" என்றுகொண்டு தம்முடைய மனோரதங்களையடைய அபேக்ஷிக்கிறார். ப்ராப்தியை அநுபவித்தார் கீழ்; ப்ராப்திபலத்தை அபேக்ஷிக்கிறார் இதில்.

ஈடு.—கீழ்த்திருவாய்மொழியிலே - "அவனொழிந்தாரடங்கலும் ஸோபாதிகபந்துக்கள்; அவனொருவனுமே நிருபாதிகபந்து" என்றார்; நிருபாதிகபந்துவானால் பின்னை பந்துக்ருத்யம் பண்ணுமிருக்க வேண்டுமிறே. இப்படி பரமபந்துவானவன் கண்வளர்ந்தருளுகிற திருப்புளிங்குடியிலே எல்லாப்பரிமாற்றத்தையும் ஆசைப்பட்டு இவர்சென்று கிட்டினவிடத்தில், இவரை பென்னென்னுதல், திருக்கண்களாலே குளிரநோக்குதல், ஒருவார்த்தைசொல்லுதல் செய்யக்கண்டிலர்; காருணையாலே மிகவும் அவஸந்நரானார்; அது அவனுடைய ஸௌகுமார்யத்திருமிறே.

அதுக்கு மேலேயும் ஒன்றுண்டாயிற்று - "திருமேனி பலசம்பாடி ஏகரூபமாகக் கண்வளர்ந்தருளா நின்றான்; என்வருகிறதோ?" என்று ஒருபயமோடிற்று. கீழே, ஆராவமுதிலே, "என் ஆர்த்தியைத் தீர்க்கிறிலன்" என்றின்னுதாரர்; இங்கே "என் ஆர்த்தியும் தன் ஆர்த்தியும் தீர்க்கிறிலன்" என்கின்றுதாகிறார். ஆக "கொடியார்மாடக்கோளூரகத்தும் புளிங்குடியும், மடியாதின்னே" என்ற அதுவே தலையெடுத்து, பெரியவாற்றாமையோடே. "என்னுடைய ஆர்த்தியெல்லாந்தீரும்படி திருக்கண்களாலே குளிர நோக்கியருளவேணும்; என்தலைமேலே திருவடிகளை வைத்தருளவேணும்; தேவரும் பிராட்டிமாருங்கூட எழுந்தருளியிருக்கு மிருப்பை யெனக்குக்காட்டியருளவேணும்; லஞ்சயன் பெற்றபேற்றில் எனக்குக்குறையவொண்ணாது". *யத்ர க்ருஷ்ணௌச க்ருஷ்ணாச ஸத்யபாமாசபாமினீ* என்று சொல்லுகிறபடியே, அவ்விருப்பிலே யிறே பலவையழைத்துக் காட்சிகொடுத்தது. இப்படி "லஞ்சயன்வந்தான்" என்றறிவிக்க, "நமக்குநல்லரென்றுரவன்; உகவாதார்க்கும் இவ்விருப்பைப் போய்ச்சொல்லுவானென்றுரவன்; அநுகூலனான இவனுக்கு விலைநீரடைத்தோமாகிறோம்; உகவாதார் மன்னுமென்னும்படி காரியம் பார்த்தோமாகிறோம்; புகுரவிடுங்கோள்" என்றுளிறே. *நசாபிமந்யுர்ந மயினா தம்தேச மபிஜக்மது.* தாயுத்தமப்பதும் சேரவிருந்தவிடத்தில் ப்ரஜைகளுக்குச்சென்று கிட்டவொண்ணாமலையாவிறே; அவர்களுக்குஞ்சென்று கிட்டவொண்ணாதபடியாயிற் றெழுந்தருளியிருக்கிறவிருப்பு; அவ்விருப்பிலேயிறே அவனையழைத்துக் காட்சி கொடுத்தது. அப்படியே "தேவரும் பிராட்டிமாரும் எழுந்தருளியிருக்குமிருப்பை யெனக்குக்காட்டவேணும்; என்னைக் கண்ட காட்சியிலே விக்குதறும் என்முன்னே நாலடி புலாவியருளவேணும்; அநுகூலதர்சநத்தால் பிறக்கும்ஸ்மிதம் காணவேணும்; ஒருவார்த்தை யருளிச்செய்யவேணும்" என்று இங்ஙனே தாமும் அவனும் அதிர்ந்ததாகத் திருவாசலைத் திருக்காப்புக்கொண்டு ஏகாந்தத்திலே தம்முடைய மநோரதங்களையெல்லாம் விண்ணப்பஞ்செய்து. "இவற்றை இப்போதேபெறவேணும்" என்று த்வரிக்கிறார். ப்ராப்தியை யநுபவித்தார் கீழ்த்திருவாய்மொழியிலே; ப்ராப்திபலத்தை ஆசைப்பட்டு அபேக்ஷிக்கிறார் இதில்.

பண்டைநாளாலேநின்திருவருளும் பங்கயத்தாள்திருவருளுங்
கொண்டு*நின்கோயில்சீய்த்துப்பல்படிகால் குடிகுடிவழிவந்தாட்செய்யும்*
தொண்டரோர்க்கருளிச்சோதிவாய்திறந்துஉன்தாமரைக்கண்களாலேநோக்காய்*
தெண்டிரைப்பொருநற்றண்பணைசூழ்ந்த திருப்புளிங்குடிக்கிடந்தானே. (1)

ஒ.—முதற்பாட்டில், அநந்யகதிகளான அடியோங்களைக் குறித்து ஒரு வார்த்தையருளிச்செய்து; விடாய்கெடும்படி திருக்கண்களாலே நோக்கியருளவேணுமென்கிறார். [பண்டைநாளென்று தொடங்கி]- பழையதாகவே உன்னுடைய கடாக்ஷத்தையும் அதுக்கு அடியான பெரிய பிராட்டியாருடைய கடாக்ஷத்தையும்பெற்றுக் குடிமுறையேசாஸ்த்ரசோதிதமானவழி தப்பாதே கோயில்களிலே அஸாதாரணமாயிசர்பரூபமான அடிமைசெய்கிற அடியோங்களுக்கு க்ருபைபண்ணி, [தெண்திரையென்று மேலுக்கு] தெளிந்த திரையையுடைய திருப்பொருநலோடு கூடின அழகிய நீர்நிலம் சூழ்ந்த திருப்புளிங்குடியிலே வந்து ஸந்நிதிபெறக் கண்வளர்ந்தருளினவனே!

ஈ.—முதற்பாட்டில், அநந்யகதிகளான அடியோங்களைக் குறித்து ஒரு வார்த்தையருளிச்செய்து, விடாய் கெடும்படி குளிர நோக்கியருளவேணு மென்கிறார், [பண்டைநாளாலே நின்திருவருளும்] - நெடுநாள் கூடவே பண்ணிப் போந்த கடாக்ஷத்தையும்; எதிர்சூழல்புக்கு கெடுமாய்பட்ட க்லேசத்தின் பலமன்றோவிது? நெடுநாள் க்ருஷிபண்ணிப் பலவேளையிலே கைவிடவோ? [பங்கயத்தாள் திருவருளும்] - அதுக்கடியாகப் பெரியபிராட்டியார்கடாக்ஷத்தையுங் கொண்டு; அவனுடைய அருளின் ஸ்வாதந்த்ர்யகந்தத்தைத் தவிர்க்குமருள். ப்ரணயித்வத்தால் வந்தபாரதந்த்ர்யமிறே ஸ்வாதந்த்ர்யத்தைத் தவிர்ப்பது? "என்னடியார் அது செய்யார்" என்னும் உன்கடாக்ஷமும், "ந கச்சிந்நாபராத்யதி" என்னுமவள் கடாக்ஷத்தையும் பெற்று. "க்ருபயா பர்யபாலயத்" என்று க்ருபாபரதந்த்ரனான உன்கடாக்ஷமும் அந்த

பாரதந்த்ர்யத்துக்கடியான அவள் கடாக்ஷமுமென்றுமாம். [நின்கோயில் சீய்த்து] - உகந்தருளின நிலங்களிலே அஸாதாரணபரிசர்யைபண்ணி, தேஹாத்மாபிமானிகள் தந்தாமுடைய க்ருஹங்களைப் பேணுவர்கள், பிராட்டிபடியாக பகவத்ப்ரஸாதம் பெற்றவர்கள் உகந்தருளின தேசங்களைப் பேணுவர்கள். [பல்படிகால்] – இன்று புதிதாய் வந்ததோ, நீ விசேஷகடாக்ஷம் பண்ணத்தொடங்கினவன்று தொடங்கி வந்த தன்றோ ? என்கை. [குடிகுடி] - ஸபரிகரமாக. [வழிவந்து] - சாஸ்த்ரங்களிற் சொல்லுகிற முறை தப்பாதபடி வந்து ஆட்செய்யும் [தொண்டரோர்க்கருளி] - அடிமைசெய்கிற அடியோங்கள் பக்கலிலே கிருபைபண்ணி, [சோதிவாய் திறந்து] - பூவலருமாபோலேயாயிற்று. வாய் திறந்து வார்த்தையருளிச் செய்யும்போது திருமுகத்திற்பிறக்கும் செவ்வி. "மாமக்ரூரேதி வக்ஷ்யதி" என்று வார்த்தையளவிலே யாயிற்று அக்ரூரன் அநுபவித்தது. தத்காலத்தில் திருமுகத்தில் செவ்வியும் உத்தேச்யமாயிருக்கிறதாயிற்று இவர்க்கு. [தாமரைக்கண்களால் நோக்காய்] - வார்த்தையில் தோற்றாத பந்தமும் நோக்கிலே யதுபவிக்கும்படி குளிரநோக்கியருளவேணும். "அவலோகநதாநேந பூயோ மாம் பாலயாவ்யய". [தெண்டிரைப் பொருநல்] - தெளிந்த திரையையுடைய திருப்பொருநலோடே சேர்ந்த அழகிய நீர்நிலஞ்சூழப்பட்ட திருப்புளிங்குடியிலேவந்து கண்வளர்ந்தருளுகிறவனே! தேவர்ஸௌகுமார்யத்துக்குச் சேரும் ஜலஸம்ருத்தியையுடைத்தான தேசத்திலே கண்வளர்ந்தருளின அம்சமுண்டு. இதின்கார்யம் பெறவேணுமென்கிறார். செய்த அம்சத்தில் க்ருதஜ்ஞராக வொண்ணாதே.

ஈடு.—முதற்பாட்டு. அநந்யகதிகளான அடியோங்களைக்குறித்து ஒரு வார்த்தை யருளிச்செய்து, விடாய்கெடும்படி குளிர நோக்கியருளவேணுமென்கிறார்.

[பண்டைநாளாலே நின் திருவருளும்] - நெடுநாள்கூடப்பண்ணிப்போந்த உன் கடாக்ஷத்தையும். நீ நேற்று இன்று பண்ணிப்போந்த க்ருஷியின் பலமோ இது? எதிர்சூழல்புக்கு நெடுநாள்பட்ட க்லேசத்தின் பலமன்றோ இது? நெடுநாள் க்ருஷிபண்ணி பலவேளையில் கைவிடவோ? [பங்கயத்தாள் திருவருளும்] - அதுக்கடியான பெரிய பிராட்டியார் கடாக்ஷத்தையுங்கொண்டு, அவனுடைய அருளின் ஸ்வாதந்த்ர்யத்தைத் தவிர்க்கும் அருள், ப்ரணயித்வத்தால் வந்த பாரதந்த்ர்யமிறே ஸ்வாதந்த்ர்யத்தைத் தவிர்ப்பது. "என்னடியார் அது செய்யார்" என்னும் உன்கடாக்ஷமும் "ந கச்சிந் நாபராத்யதி" என்னுமவள் கடாக்ஷத்தையும் பெற்று. "க்ருபயா பர்யபாலயத்" என்று, க்ருபாபரதந்த்ரனான உன்னுடைய கடாக்ஷமும், அப்பாரதந்த்ர்யத்துக்கடியான அவள்கடாக்ஷமும் என்றுமாம். [பங்கயத்தாள் திருவருளும்] - உன்னருளின் ஸ்வாதந்த்ர்யகந்தத்தைத் தவிர்க்குமவள் அருளும்படியாக வன்றோ வந்தது. அவளருள் அவன் ஸ்வாதந்த்ர்யத்தைப் பின்செல்லாதபடி பண்ணுமாயிற்று. 'அவனுடைய பாரதந்த்ர்யம் ப்ரணயித்வமன்றோ? கீழ் நிற்குமோ? ஸ்வாதந்த்ர்யமேயன்றோ ப்ரக்ருதி?' என்று அஞ்சவேண்டா; அவளருகே யிருக்க ஸ்வாதந்த்ர்யம் ஜீவியாது. ஆகையிறே முற்கூற்றில் அவள் புருஷகாரமாகப் பற்றிற்று. [நின்கோயில் சீய்த்து] - உகந்தருளின நிலங்களிலே, அஸாதாரணபரிசர்யை பண்ணி, தந்தாமுடைய ஸௌக்ருத்யத்தாலே பகவதநுக்ரஹமுடையரானவர்கள், தந்தாம் க்ருஹங்களைப் பேணுவர்கள்; பிராட்டி புருஷகாரமாக பகவத்ப்ரஸாதம்பெற்றவர்கள், உகந்தருளின நிலங்களைப் பேணாநிற்பர்கள். "நகிஞ்சித்குர்வதோ விஷ்ணோராயதநே வஸேத்" - ஒருதுரும்பு நறுக்கேன் என்னுமவர்களுக்கும், உகந்தருளின நிலத்தைப் பற்றிக்கிடக்கவேணும். சரீரஸம்பந்தமற்றால் பெறவேணுமென்று ஆசைப்படுகிற அடிமையை, இச்சரீரத்தோடே கிடைக்குமாகில், விடாரிறே, "வயலணியணிந்தபுரம் கடைத்தலைசீய்க்கப்பெற்றால் கடுவினை களையலாமே." பரமபதத்தை ஸ்மிக்கவே ப்ராப்ய விரோதிகளைப் போக்கவுமாயிற்று. திருக்கண்ணமங்கையாண்டான், அங்கே ஒரு திருமதிள்முடியிலே யிருந்து சருகைத்திருவலிடாநிற்க, கடவாசித்து நாஸ்திகனாயிருப்பானொருவன், "பகவானுபாயம், நாம் அநந்யப்ரயோஜநர், இப்போது இந்த க்லேசத்துக்கு ப்பலமென் ?" என்ன, திருவலகிட்டஇடத்தையும் இடாதவிடத்தையும் காட்டி, "இவ்விடமும் அவ்விடமுமிருந்தபடி கண்டாய்க்கு; 'ஒருபலமில்லை' என்று தோற்றியிருந்ததோ ?" என்றார். [பல்படிகால்] - இதுதான் இன்றுதொடங்கி வந்ததொன்றோ ? நீகடாக்ஷிக்கப் புக்க அன்று தொடங்கி வந்த தன்றோ ! [குடிகுடி] - ஸபரிகரமாக. [வழிவந்து] - சாஸ்த்ரங்களிற் சொல்லுகிற முறை

தப்பாதபடி வந்து. [ஆட்செய்யும்தொண்டரோர்க்கருளி] - அடிமைசெய்கிற அடியோங்கள் பக்கலிலே க்ருபைபண்ணி. [சோதிவாய்திறந்து] - பூ அலருமாபோலேயாயிற்று, வாய்திறந்து வார்த்தையருளிச் செய்யும்போது திருமுகத்தில் பிறக்கும் செவ்வி. *மாமக்ரூரேதி வக்ஷ்யதி* என்று வார்த்தையளவிலேயாயிற்று, அக்ரூரன் அநுபவித்தது. தத்காலத்தில் திருமுகத்தில் செவ்வியும் உத்தேச்யமாயிருக்கிறதாயிற்று, இவர்க்கு. [உன் தாமரைக் கண்களால் நோக்காய்] - வார்த்தையில் தோற்றுத பக்ஷமும் நோக்கிலே யநுபவிக்கும்படி அருளிநோக்கியருளவேணும்; *அஸ்மிந்நதாநேந பூயோ மாம் பாலயஸ்வ* என்னுமாபோலே வார்த்தையருளிச்செய்யப்புக்கு விக்கினால் குறையும் திருக்கண்களாலே தலைக்கட்டியருளவேணும். பின்னை தேவப்பெருமானையர், "உன் தாமரைக்கண்களால்நோக்காய், நோக்காய்" என்று பலகாலுஞ் சொல்ல, ஆழ்வாரெழுந்திருந்து "பிள்ளாய்! நீ இங்ஙனே திருவுள்ளம் புண்படும்படி பலகாலும்நீர் பந்திக்கிறதென்? அழகிய பீடத்தைத் தந்தாரானால், கல்லபாட்டைத்தந்தாரானால், பின்னைகளையும் ஐச்வர்யத்தையும் தந்தாரானால் என் செய்யாதாராக நீர் இங்ஙனேயிடுக்குப் படுகிறது?" என்றருளிச் செய்தாராம், [தெண்திரைப்பாதி] - திருமேனியில் ஸௌகுமார்யத்துக்கு அநுரூபமான ஸஹலம்ருத்தியையுடைத்தான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளப் பெற்றது. தெளிந்த திரைகளையுடைய திருப்பொருநலோடேசேர்ந்து அழகிய நீர்வளஞ் சூழ்ந்த திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளினவையுமன்றி; இது - சேஷ்டிதங்கள். [உன் தாமரைக்கண்களால் நோக்காய்] - செய்தவற்றுக்கு க்ருதஜ்ஞராகவும், செய்யவேண்டும் அம்சத்துக்கு ப்ரார்த்திக்கவும் வேணுமிறே அதிகாரிக்கு.

குடிக்கிடந்தாக்கஞ்செய்துநின் தீர்த்தவடிமைக்குற்றேவல்செய்து*உன்பொன்
னடிக்கடவாதேவழிவருகின்ற அடியரோர்க்கருளி* நீயொருநாள்
படிக்களவாகநிமிர்ந்த நின்பாதபங்கயமேதலைக்கணியாய்*
கொடிக்கொள்பொன்மதிள்சூழ்குளிர்வயற்சோலைத் திருப்புளிங்குடிக்
கிடந்தானே. (2)

ஈ—இரண்டாம்பாட்டில், ஸர்வஸுலபமான உன்திருவடிகளை என்தலைமேலே வைத்தருளவேணுமென்கிறார் [குடிக்கிடந்தாக்கஞ்செய்து]-குடிக்கிடாகவர்த்தித்துப் பண்டில்லாத நன்மைகளையுமுண்டாக்கித் தன்னுடைய ஸ்வபாதயாலே இதரபுருஷார்த்தங்களில் நசையறுக்கவல்ல அடிமைகளில் அந்தரங்கமான அடிமைகளையன்றி உன்திருவடிகளல்லதறியாதே பரம்பரையாய் வருகிற அடியோமுக்கு க்ருபைபண்ணி. படிக்களவாக - பூமிக்கு அளவாக.

இ—இரண்டாம்பாட்டில், ஸர்வஸுலபமான திருவடிகளை என்தலையிலே வைத்தருளவேணுமென்கிறார். [குடிக்கிடந்து] குடிக்கிடாகவர்த்தித்து; குலமர்யாதை தப்பாதேவர்த்திக்கை. "இக்ஷ்வாகுவம்சயரில், கனிஷ்டர் மூத்தகுடியறிவாரில்லை" என்றருளிறே ஸ்ரீ பரதாழ்வான். [ஆக்கஞ்செய்து] குடியிற் பண்டில்லாத நன்மைகளையுண்டாக்கி: "பங்க்திக்தஸ்து ஜடிலூ." என்கிறபடியே, ஜடாவல்கலமும் கண்ணும்கண்ணீருமாயிருக்கை. [நின்தீர்த்தவடிமைக் குற்றேவல்செய்து]-தன்னுடைய ஸ்வபாதயாலே இதர புருஷார்த்தங்களில் நசையறுக்கவல்ல அடிமைகளில் அந்தரங்கமான வடிமைகளைச்செய்து [உன் பொன்னடிக் கடவாதே]-உன்னுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளையல்லதறியாதே யென்னுதல், உன் திருவடிகளைத் தப்பாதேயென்னுதல். அல்லதறியாமையாவது - அநந்யப்ரயோஜநனாகை: தப்பாதொழிகையாவது - ஆஜ்ஞையை அதிலங்கியாதொழிகை; "ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய" என்றிருக்கையும், பெருமாளை மீட்கைக்குச்சென்று திருவடிகளிலே விழ "பித்ருவசநத்தை யநுஷ்டித்தேனமான பிரம் நமக்குண்டாவது, நீ ராஜ்யத்திலேயிருக்கிறகாண்" என்ன "ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்ட:" என்று மீளுகையும். [வழிவருகின்ற] - பரம்பரையாய் வருகிற என்னுதல்; அடிமைசெய்யும் முறைமையிலொன்றும் தப்பாதபடி போருகிற என்னுதல். [அடியரோர்க்கருளி]-அநந்யகதியாயிருக்கிற எங்கள்பக்கலிலே க்ருபைபண்ணி. [நீயொருநாள்] - சேஷியான நீ முன்னொருகாலத்திலே நாளிலே. [படிக்களவாக நிமிர்ந்த] பூமிக்களவாக நிமிர்ந்த

ஸௌந்தர்யகருபமான திருவடிகளை நிமிர்த்து ஆச்சர்யத்தோபாதி போருமாயிற்று, பூமியளவிலே குசைதாங்கின படி. [சின்னதப்பங்களுமே தலைக்கணியாய்] ஸர்வஸௌலப்யமுள உன்னுடைய நிரதிசயபோக்யமான திருவடிகளை என்தலைக்கு ஆபரணமாம்படி பண்ணியருளவேணும். குணாகுணநிரூபணம்பண்ணாதே எல்லார் தலைகளிலும் வைத்த திருவடிகளை, அநன்யப்ரயோஜநனான நான் இழக்கவோ? ருசியில்லாதார்தலையிலே வைத்த திருவடிகளை ருசியுடைய என் தலையில் வைக்கலாகாதோ? பூமிக்களவாக்கின திருவடிகளை என் தலைக்களவாக்கலாகாதோ? "கோலமாமென்சென்னிக்கு" என்றிருக்கிற என்தலையில் வைக்கலாகாதோ? இந்த சீலம் காதாசித்கமாயிருக்கிறதோ? [கொடிக்கொள் இத்யாதி] - ஸம்ருத்தமாய் ச்ரமஹரமான தேசத்திலே கண்வளர்ந்தருளப்பெற்றது, "என்வருகிறதோ" என்கிற பயந்தீர என்னை விஷயீகரிக்குமிதுவே குறை என்கை. "ஸோ ராமமஸ்ந்த்ருஷ்டீதசோகா" என்று ராமஸந்தாபத்திற்பிறந்த அதிசங்கைபோய், "ராமஸ்ய சோகேந ஸமாநசோகா" என்று விரஹத்தாலேவந்த சோகமே பிராட்டிக்குஉண்டானப்போலே.

ஈடு.—இரண்டாம்பாட்டு. ஸர்வஸௌலப்யமான உன் திருவடிகளை என்தலையில் வைத்தருள வேணுமென்கிறார்.

[குடிக்கிடந்து] - குடிக்கிடாக வர்த்தித்து. குலமர்யாதை தப்பாதபடி வர்த்திக்கை. "இஷ்வாகுவம்சயரில், தலைமகனிருக்கத் தம்பிமாரில் முடிசூடியபதிவாரில்லை" என்றாரிறே ஸ்ரீபரதாழ்வான். [ஆக்கம் செய்து] - குடியில் பண்டில்லாத ஏற்றம் பண்ணிற்று; "பங்க்தித்தஸ்து ஜடிலோ பரதஸ்த்வாம் ப்ரதீக்ஷதே - பாதுகே தே புரஸ்க்ருத்ய ஸர்வஞ்சகுசலம் க்ருதே" என்றும் "ஜடிலம் சீரவஸநம்" என்றும், "நஹி தே ராஜபுத்ரம்தம் சுஷாயமப்ரதாரிணம் - பரிபோக்தும் வ்யவஸ்யந்தி பௌராவை தர்மவத்ஸலம்" - அந்தரங்கர்நக்கச்சேர்ந்தாரும் இவனைச் சூழவிருக்கிற பௌரரானவர்கள் இவனை யநுபவிக்கையில் நசையற்றார்கள். அதுக்கடியென் என்னில்? - "ராஜபுத்ரம்" பெருமாள் பேரசின்றவளவிற்றாம் முடிசூடியவனன்றோ? இவனோதான் நமக்குத் தொங்கப் புகுகிறான்? என்றிருந்தார்கள். "தர்மவத்ஸலம்" இதுக்கும் அவனோடொக்கும்; தர்மத்துக்காகத் தன்னை யழியமாறினானிறே யவன். "ஏபிச்ச ஸகிலவஸ்ஸார்த்தம்" - தானொருவனுமே போக வமைந்திருக்க, ஆர்த்தர்பலரையுங் கொண்டுபோனான்; அதுக்கடி - நாம் ஒருவருபோயாற்றிக்கேக, புலர்கள்ளனேர்கண்டால் மீளாரோ?" என்னுமாத்தைப்பற்ற, இன்னசெய்யப் போவாராய்ப் போலே, ஆனைகுதிரைகளை யகப்படத் திரட்டிக்கொடு போனானாயிற்று. பிரிவாற்றாமைக்குத் தன்னிற்குறைந்தா ரொருவருமில்லையாயிற்றுப் பரிகரத்தில். "சிரஸா யாசிதோ மயா" - நான் தலையாலே இரந்த கார்யத்தையும் மறுப்பரோ? "சிரஸா யாசதஸ்தஸ்ய வசநம் நக்ருதம் மயா" என்றாரிறே யவரும்; "அவனும் தனக்கடுக்கும்படி செய்தான். நாமும் நமக்கடுக்கும்படி செய்தோம்" என்றாரிறே. "அவன் தலையாலேயிரந்த கார்யத்தை மறுத்துப்போந்தோம்" என்றிறே அவர்திருவுள்ளம் புண்பட்டது. "ப்ராது:" - ப்ராதா ஸ்வாமீத்ரி ராத்மந:" என்கிற படியே, அவர் தந்திருமேனியாகவன்றோ என்னைநினைத்திருப்பது! சேஷம் பூர்வவத். இப்படி இக்குடியிலில்லாத ஏற்றங்களையுஞ்செய்து. "மூத்தாரிருக்க இளையார் முடிசூடக்கடவதன்று" என்றுபோந்தவித்தனை முன்பு; ஆற்றாமையும் கண்ணும் கண்ணநீருமாய், ஜடையும் புனைந்து வல்கலையுமுடுத்திருந்தாரில்லையிறே முன்பு இவனைப்போலே. [கிலர்த்த வடிமைக்குற்றேவல் செய்து] - தன்னுடைய ரஸிகதையாலே இதரபுருஷார்த்தத்தில் நசையறுக்கவல்ல அடிமைகளில் அந்தரங்கமான அடிமைகளைச்செய்து. [உன்பொன்னடிக்கடவாதே] - தன்சாபலத்தாலே நிர்ப்பந்திக்குமதுவும் அன்றிக்கே, முன்பு பெரியவாற்றாமையோடே ஸ்ரீவஸிஷ்ட பகவான் தொடக்கமானாரைப் புருஷகாரமாகக்கொண்டு மீட்பதாகச் சென்றவன், "நாம் ஆபச்சொன்னகார்யம் செய்தாயானமீதம் போலாவது, நீ பதினாலாண்டு ராஜ்யத்திலே யிருக்கில் காணும்" என்ன; "ஆஜ்ஞராஜாநதம் த்ருஷ்ட்வா" என்று த்ருஷ்டனாய் மீண்டுபோந்தானிறே: அப்படியே உன்னுடைய ஆஜ்ஞாதிலங்கநம் பண்ணாதே. உன் திருவடிகளுக்குத் தப்பாதே: அன்றியே உன்னுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளையல்லதறியாதே என்னுதல். அதாவது அநந்யப்ரயோஜநனாகை. [வழிவருகின்ற வடியரோர்க்கருளி] - அடிமை முறை தப்பாதே போருகிற அநந்யகதிகளான எங்களுக்கு க்ருபைபண்ணப்பண்ணி. [நீயொருநாளித்யாதி] - அந்தஸ்வபாவம் ஒருநாளிலேயாய்ப் பின்பு வற்றுமதோ? அப்ரதிஷேதத்துக்கு மேற்பட ருசி

பீகையோ? குறுந்துணை திருப்பணம்பண்ணுறுதே எல்லார்தலையிலும்வைத்த திருவடிகளை ஆசையுடைய என் தலையிலும் வைக்கலாகாதோ? [படிக்கலமாக] - பூமியை விளாக்குலைகொள்ள விருந்தவாறுமதிலும் அரிதுபோலேவகாறும், அதுக்களவாகத் திருவடிகளைக் குறைதாங்கின அருமையும். உனக்கு அரியதொன்றாய் நான் க்லேசப்படுகிறேனோ? இத்தலையன்றோ செய்ய வேண்டுவது? [கின்பாதபங்கயமே] - ஒருசெவ்விப்பூவைக்கொண்டு காணும் காடுமோடையும் அளந்துகொண்டது. [தலைக்கு அணியாய்] - ஏதேனுமாகக்கொள்ள நினைத்தகார்யத்துக்கு அளவுடைத்து மிக்கவையாயிருக்குமிறே; பூமிக்களவாகவன்றோ திருவடிகளை என் தலைக்களவாக்கலாகாதோ? [தலைக்கணியாய்] - "கோலமாமென் சென்னிக்கு" என்கிறபடியே தலையில் வைக்கலாகாதோ? "கதா" என்கிறார். [கொடியேற்பாதி] - "ஸா ராமஸங்கீர்த்தநவீதசோகா ராமஸ்ய சோகேந ஸமாந சோகா" - பெருமாளுடைய ஸத்பாவத்தில் அதிசங்கையாலேயும் ஒரு சோகமுண்டு. பிரிவாற்றாமையாலே படுகிறதும் ஒரு சோகமுண்டு; அதில் திருவடியைக்கண்டபின்பு ஒன்று தீர்த்ததிறே; அப்படியே, ஸாக்ஷிதமாய் சர்மநாயமான தேசத்திலே கண்வளர்ந்தருளப் பெற்றது, "என்வருகிறதோ?" என்கிற பயத்தீர்; இனியென்னை விஷயீகரிக்குமதுவே குறை, அக்குறையுந் தீர்ந்தருளவேணும்.

கிடந்தநாள்கிடந்தாயெத்தனைகாலங்கிடத்தி யுன்திருவுடம்பசைய*
தொடர்ந்துகுற்றேவல்செய்து தொல்லடிமைவழிவருந்தொண்டரோர்க்கருளி*
தடங்கொள்தாமரைக்கண்விழித்து நீயெழுந்துன்தாமரைமங்கையும்நீயும்*
இடங்கொள்மூவுலகுந்தொழவிருந்தருளாய்திருப்புளிங்குடிக்கிடந்தானே (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், திருவுடம்பசைய ஒருபடியே கண்வளர்ந்தருளாதே, உன்னடியோமுக்காகத் திருக்கண்களை விழித்து, நீயெழுந்திருந்து, உன்தாமரை மங்கையும் நீயும் இந்தலோகமெல்லாம் வாழும்படியிருந்தருளாய் என்கிறார். [தொடர்ந்தென்று தொடங்கி] - இது இப்போதைக்கடுப்ப தென்றுணர்த்தி அடிமைசெய்து ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமாய் வருகிற அடிமைநெறிதப்பாதே வருகிற அடியோங்களுக்கு க்ருபைபண்ணி. இம்மூன்று பாட்டிலும் தம்மைக் கொண்டாடுறாரல்லர். ஒரிடத்துக்கே கடவாரை வேறு நோக்குவாருண்டோ என்று தம்முடைய அநந்யகதித்வஞ் சொல்லுகிறார். [தடங்கொள் தாமரை] - தடத்திலே விழுங்கின தாமரை. இடங்கொள் - இடமுடைத்தாகை,

இ.—மூன்றாம்பாட்டில், திருவுடம்பசைய ஒருபடியே கண்வளர்த்தருளாதே அடியோமுக்காகப் பிராட்டியும் தேவரும் எழுந்திருந்தருளவேணும் என்கிறார். [கிடந்தநாள் கிடந்தாய்] ஓர் ஆச்ரிதன் "சாய்ந்தபோதை அழகுகாணவேணும்" என்றாசைப்பட்ட நாள் தொடங்கிக் கண்வளர்ந்தருளுகிறிலையோ? [எத்தனைகாலங்கிடத்தி]-இனியோருவன் வந்து "கிடந்தவாறெழுந்திருந்து பேசு" என்னுமளவும் கிடக்குமித்தனையிறே. எல்லாச் சேஷ்டிதங்களும், "பக்தாநாம்" என்றிருக்கை தவிராதிறே. [உன் திருவுடம்பசைய] - ஸுகுமாரமான திருமேனி அலசும்படி. அர்த்திக்குமவர்களையே பார்க்குமித்தனையோ? உன்னையும் பார்க்க வேண்டாவோ? [தொடர்ந்து குற்றேவல்செய்து]-"இத்தசையில் செய்யவடுப்பது இது" என்று உணர்த்தி அந்தரங்கவ்ருத்தியைப்பண்ணி. பெருமாள் தமக்குஅபிமதங்களில் அவஹிதரான்றிக்கே இருந்தபோதும், "இவ்வடிமையைக் கொண்டருளவேணும்" என்று வடிம்பிட்டு இளையபெருமாள் அடிமை செய்தாப்போலே. [தொல்லடிமை]-ஆத்மாவுக்குஸ்வாபாவிகமான அடிமை; "மம ஸஹஜகைங்கர்யவிதய:" என்கிறபடியே. [வழிவருந்தொண்டரோர்க்கருளி] - நெறிதப்பாதேவருகிற அடியோங்களுக்கு க்ருபை பண்ணி. இம்மூன்று பாட்டிலும், தம்முடைய யோக்யதையைச் சொன்னுப்போலேயிருக்கும்; அதன்று சொல்கிறது; "ஒருவர்க்கே சேஷமாயிருப்பாரை வேறு முகம்பார்ப்பாருண்டோ?" என்று தம்முடைய அநந்யகதித்வஞ் சொல்லுகிறார். [தடங்கொள்தாமரைக்கண் விழித்து] - பொய்கையை விழுங்கின தாமரைபோலே இடமுடைத்தான திருக்கண்களாலே குளிரநோக்கி. [நீ யெழுந்து] - நீ எழுந்திருந்து; உணர்ந்தருளும் போதைச் செவ்வியை அநுபவிக்கவேணும்; "மாரிமலை முழைஞ்சில்" என்கிறபடியே. [உன் தாமரை மங்கையும் நீயும்]-பிராட்டியும் தேவருஞ் சேரவிருந்து எனக்குக் காட்டித்தரவேணும். "பங்கயத்தாள்

திருவருளும்'' என்று ஆச்ரயணதசையாகையாலே புருஷகாரபாவத்தைப் பற்றச் சொல்லிற்று கீழ்; ''அடிமைசெய்யுமிடத்திலும் இருவருஞ் சேர்ந்த சேர்த்தியிலே அடிமை செய்யக்கடவது'' என்னுமத்தைப் பற்றச் சொல்லுகிறது இங்கு. [இடங்கொள் மூவுலகும்] - இடமுடைத்தான லோகங்களிலுள்ளாரும். [தொழவிருந்தருளாய்] - அநந்யபரரைப்போலே முறையிலே தொழவிருக்கும் இருப்பை நான் கண்டநுபவிக்கவேணும் [திருப்புளிங்குடிக்கிடந்தானே]-ஸௌலப்யமனைபின்பு எல்லாஞ் செய்தருளத்தட்டேன்? [திருப்புளிங்குடிக் கிடந்தானே-இருந்தருளாய்] - சாய்ந்தருளின அழகை அநுபவிப்பித்தருளிற்று; இருந்தருளின அழகை அநுபவிப்பித்தருளவேணுமென்கை.

ஈடு.—மூன்றாம்பாட்டில். திருவுடம்பசையா ஒருபடியே கண்வளர்ந்தருளாதே, அடியோமுக்காகப் பிராட்டியும் தேவரும் எழுந்தருளவேணும் என்கிறார்.

[கிடந்தநாள்கிடந்தாய்] - ''கிடந்ததோர்கிடக்கை'' என்று இடையழகுகாணவேணுமென்று ஆசைப்பட்டிருப்பாரொருவனுக்காக, ஆசைப்பட்டஅன்றுதொடங்கிக் கண்வளர்ந்தருளினாய். [எத்தனைகாலங்கிடத்தி] - இனி ஒருவன்வந்து 'கிடந்தவாறெழுந்திருந்துபேசு'' என்னுமளவும் கிடக்குமித்தனையிறே. எல்லாச்சேஷ்டிதங்களும், ''பக்தாநாம்'' என்றிருக்கை தவிராதிறே. [உன் திருவுடம்பசையா] - ஸௌகுமார்யமான திருமேனியசைம்படி. அர்த்திக்கெனவே பார்க்குமித்தனையோ? உன்னையும் பார்க்கவேண்டாவோ? [தொடர்ந்துகுற்றேவல்செய்து] - ''இத்தசையில் செய்யவடுப்பதுஇது, இத்தசையில் செய்யவடுப்பதுஇது'' என்றுணர்ந்தி அந்தரங்கவ்ருத்தியைப்பண்ணி. பெருமாள், தமக்கு அபிமதங்களில் அவதரிக்கைக்கீழ்ந்த போதும், 'இவ்வடிமையைக் கொண்டருளவேணும், இவ்வடிமையைக் கொண்டருளவேணும்' என்று அவ்வவகாலங்தோறும் ''மாம் வத, மாம் வத'' என்று வடிம்பிட்டு அடிமைசெய்தாப்போலே, அந்தரங்கவ்ருத்திகளைப்பண்ணி. [தொல்லடிமை] ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமான அடிமையாகையாலே பழையதாய்ப்போருகிறஅடிமை. ''ஆவி:ஸ்யுர் மம ஸஹஜகைங்கர்யவிதய:'' என்னக்கடவதிறே. [வழிவருந்தொண்டரோர்க்கருளி] - அடிமைமுறை தப்பாமேபோருகிற அநந்யகதிகளான எங்களுக்கு க்ருபைபண்ணி. இம்மூன்றுபாட்டிலும், தம்முடைய போக்யதையைச் சொன்னப்போலேயிருக்கிறது; அதுஅன்று சொல்லுகிறது;'ஒருவர்க்கேயாயிருப்பாரை வேறுமுகம்பார்ப்பாரில்லை' என்று தம்முடைய அநந்யகதித்வஞ் சொல்லுகிறார். [தடங்கொள் தாமரைக்கண்விழித்து] - பொய்கையைக் கண்செறிவிட்ட தாமரை போலே, இடமுடைத்தான திருக்கண்களாலே குளிரநோக்கி. [நீயெழுந்து] - நீயெழுந்திருந்து. ''சீரியசிங்கமறிவுற்று'' என்கிறபடியே, உணர்ந்தருளும்போதை அழகு காணவேணும். [உன் தாமரைமங்கையும்நீயும்] - ''பகவத்விஷயத்தில் முதலடியிடுவார் பிராட்டிபுருஷகாரமாகப் பற்றக்கடவது'' என்னுமத்தாலே, ''பங்கயத்தாள் திருவருள்'' என்றார் கீழ்; அடிமைசெய்யுமிடத்திலும் இருவருமான சேர்த்தியிலே அடிமைசெய்வதாகச் சொல்லப் போருமத்தைப் பற்றச்சொல்லுகிறது இங்கு. [இடங்கொள்மூவுலகும்] - இடமுடைத்தான லோகங்களிலுள்ளாரும். [தொழவிருந்தருளாய்] - அநந்யப்ரயோஜனரைப்போலே முறையிலேதொழவிருக்குமிருப்பை நான் கண்டநுபவிக்கவேணும். [திருப்புளிங்குடிக்கிடந்தானே] - ஸௌலப்யனை பின்பு, எல்லாஞ் செய்தருளவேணும். அபேக்ஷிதங்களெல்லாஞ் செய்தருளக்கடவதானால் அதில் ஏகதேசஞ்செய்தால், குறையுஞ்செய்து தலைக்கட்டவேண்டாவோ? [திருப்புளிங்குடிக் கிடந்தானே - இருந்தருளாய்] - சாய்ந்தருளின அழகுகாட்டினாப்போலே இருந்தருளினபோதை அழகையுங் காட்டியருளாய்!

புளிங்குடிக்கிடந்து வரகுணமங்கையிருந்து வைகுந்தத்துள் நின்று*
தெளிந்தஎன்சிந்தையகங்கழியாதே என்னையாள்வாய்எனக்கருளி*
நளிர்ந்தசீருலகம்மூன்றுடன்வியப்ப நாங்கள்கூத்தாடிநின்றார்ப்ப*
பளிங்குநீர்முகிலின்பவளம்போல் கனிவாய்சிவப்பநீகாணவாராயே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், திருப்புளிங்குடி தொடக்கமான திவ்யதேசங்களிலே ஸந்நிஹிதனும் என்னை இவ்வளவாக்கினாப்போலே மேலும் என் அபேக்ஷிதங்கள் செய்தருளவேணுமென்கிறார். [தெளிந்த என் சிந்தை அகங்கழியாதே என்னையாள்வாய்] - அயோக்யனென்று அகலாதபடி கண்கள் சிவந்திலே என்னுடைய ஹ்ருதயம் தெளிந்தவாறே அங்கேவந்து புகுந்து நிரந்தரமாக இருந்தருளி என்னை ஆளுமவனே! [நளிர்ந்த சீலங்கள் மூன்றுடன் வியப்ப] - "ஆழ்வார் அபேக்ஷிதத்தைச் செய்தருளினான்" என்று இந்தக் கல்யாணகுணத்தைக் கண்டு லோகமெல்லாம் விஸ்மயப்பட. [பனிநீர்முகில் என்று தொடங்கி] - குளிர்ந்த நீரை முகக்கையாலே நிறமழகினை மேகத்திலேயுண்டான பவளம் போலே அழகிய திருப்பவளத்தில் சிவப்போடே காணலாம்படி நீ வரவேணும்.

இ.—நாலாம்பாட்டில், திருப்பதிகளிலே ஸந்நிஹிதனாய் என்னை இவ்வளவாக்கினாப்போலே மேலும் என் அபேக்ஷிதங்கள் செய்தருளவேணுமென்கிறார். [புளிங்குடி இத்யாதி] - திருப்புளிங்குடியிலே 'கிடந்ததோர் கிடக்கை" என்னும் அழகைக்காட்டியும் திருவரகுணமங்கையிலே "பிரானிருந்தமை காட்டினீர்" என்னும் இருப்பில் அழகைக்காட்டியும் ஸ்ரீவைகுண்டத்திலே "நின்றான்" என்னும் நிலையழகைக்காட்டியுமன்றோ என்னைப்புகுர நிறுத்திற்று? இவையெல்லாம் நான் இரக்கவோ செய்தது? [தெளிந்த என் சிந்தை அகங்கழியாதே] - அயோக்யனென்று அகலாதபடி கண்கள் சிவந்திலே என்னுடைய ஹ்ருதயம் தெளிந்தவாறே அத்தைக் கைவிடாதே நிரந்தர வாஸம்பண்ணி, [என்னை ஆள்வாய்] - உன்னையல்லது செல்லாத என்னை குணஜ்ஞாநத்தாலே, முடியாதபடி தரிப்பித்துப் போந்தாய். [எனக்கருளி] - வ்யதிரேகத்தில், நசையாலே, முடியவும்மாட்டாதஎனக்கு க்ருபைபண்ணி [நளிர்ந்தசீர்] — அநுஸந்தித்தார் ஹ்ருதயம் குளிரும்படியான சீலத்தை; ஆழ்வார "அபேக்ஷிதத்தைச் செய்தருளினான்" என்கிற இக்கல்யாணகுணத்தை. [உலகமூன்றுடன் வியப்ப] - விலக்ஷணரோடு அவிலக்ஷணரோடு வாசியற எல்லாரும் ஒக்க அநுபவித்து விஸ்மயப்படும்படியாக. [நாங்கள் கூத்தாடிநின்றார்ப்ப] - நாங்கள் விஸ்மயப்படுமளவன்றிக்கே விக்ருதராம்படி. [பனிநீர்முகிலின் பவளம்போல் கனிவாய்சிவப்ப] - தெளிந்தநீரை முகக்கையாலே தர்சநீயமான மேகமானது பவளத்தைப் பூத்தாற்போலேயாயிற்று திருவதரத்திற் பழுப்பிருப்பது. இவர்ஸம்ப்ரமத்தைக் கண்டு அவன்பண்ணும் ஸ்மிதமிருக்கிறபடி. [நீகாண வாராயே] - நான்காண நீ வரவேணும். என்னெதிரே உன் நடையழகு காணவேணும். அவன் கூத்திருக்கிறபடி. வல்லவரிடுங்கூப் போலேயிறே நடையழகிருப்பது.

ரு.—நாலாம்பாட்டு. திருப்பதிகளிலே ஸந்நிஹிதனாய் என்னை இவ்வளவாக்கினாப் போலே, மேலும் என் அபேக்ஷிதம் செய்தருளவேணுமென்கிறார்.

[புளிங்குடி இத்யாதி] - நான் இரக்கவோ இவையெல்லாம் நீ செய்தது? பட்டர், திருநாராயணபுரத்தில் வெறுப்பிலே, "தேவர் ஸ்வாதந்த்ர்யமெல்லாங் காட்டினாலும் பின்னையும் பண்ணின விச்வாஸத்தில் குலைந்தவின்றிக்கேயிருக்கும்படி எழுப்புமவருடைய எம்பெருமானார் போல்வார்பக்கல் செய்யுமத்தை எளிதெனைப்பர்க்கு அயோக்யன் பக்கலிலும் செய்வதோ? "மஹாவிச்வாஸபூர்வகம்" என்கிறபடியே ஏதேனும் ஒன்று வந்தாலும் 'இக்குற்றத்துக்கு ஒன்று வருவதாய் வந்ததன்று; இது நம்முடையபாபம்' என்று பண்ணின விச்வாஸம் குலையாதார் விஷயத்திலே செய்யுமத்தை — இதுஒருபேர் நேரிழந்து போம்படி இவனெஞ்சர் பக்கலிலும் — அத்தைச் செய்யக்கடவதோ?" என்றாராம். திருப்புளிங்குடியிலே "கிடந்ததோர் கிடக்கை" என்னுமழகைக்காட்டியும், வரகுணமங்கையிலே "பிரானிருந்தமை காட்டினீர்" என்னும் இருப்பழகைக்காட்டியும், ஸ்ரீவைகுண்டத்திலே "நின்றான்" என்னும் நிலையழகைக் காட்டியுமன்றோ என்னைப் புகுரநிறுத்திற்று? [தெளிந்த என் சிந்தை அகங்கழியாதே] - "அயோக்யன்" என்று அகலாதபடி கண்கள்சிவந்திலே என் ஹ்ருதயத்தைத் தெளிவித்தும் அத்தைக்கைவிடாதே நிரந்தரவாஸம் பண்ணி. [என்னையாள்வாய்] - என்னை "அயோக்யன்" என்று அகலவுமொட்டாதே, பிரிவாற்றாமையால் முடியவுமொட்டாதே, குணஜ்ஞானத்தாலே தரிப்பித்துக்கொண்டு போந்தாய். [எனக்கருளி] - முடியப்போகாதபடி வளர்த்து நீயும் ஜீவனம் விட்டால் எங்ஙனே தரிக்கும்படி? [நளிர்ந்தசீர் இத்யாதி] - அநுஸந்தித்தார் ஹ்ருதயம் குளிரும்படியான சீலகுணத்தை. "ஆழ்வார் அபேக்ஷிதஞ் செய்தருளினான்" என்கிற கல்யாண

குணத்தை. [உலகமூன்றுடன்வியப்ப] - விலக்ஷணரோடு அவிலக்ஷணரோடு வாசியற எல்லாரு மொக்கஅநுபவித்து விஸ்மயப்படும்படியாக. [நாங்கள் இத்யாதி] - நாங்கள் விஸ்மயப்படுமள வன்றிக்கே, விக்ருதராம்படி. இவர்க்கு விஸ்மயப்பட அவஸரமில்லையாயிற்று. [பளிங்கு நீர் முகிலின் பவளம்போல்கனிவாய்சிவப்ப] - தெளிந்தநீரை முகக்கைகயாலே தர்சநீயமான மேக மானது பவளத்தைப்பூத்தாற்போலேயாயிற்று, திருவதரத்தில் பழுப்பிருப்பது. இவர் ஸம்ப்ர மத்தைக் கண்டு அவன்பண்ணும் ஸ்மிதமிருக்கிறபடி. [நீ காணவாராயே] - என்னெதிரே உன் னழகுகாண வரவேணும். அவன் கூத்திருக்கிறபடி. அவன் மாறிமாறிடும் அடி, வல்லா ரடிஞுப்போலேகாணும் இருப்பது. பின்னை மணவாளவரையரைப் பெருமாள் ஒருநாள் அருளப்பாடிட்டு, நாம் இங்ஙனே நடக்கிறோம்; நீ அதுக்கீடாக ஆடிக்காண்!" என்ன, "தம்பி ரானே! என்னால் அந்நடைக்கீடாக ஆடப்போமோ? "காணகம்படியுலாவியுலாவி" இத்யாதி: தேவருடைய குழலோசையைக் கேட்டவாறே, பாடல்தவிர்ந்தார்கள்! தேவருடைய ஸ்வாபா விகமான நடைக்குத் தங்களுடைய சிக்ஷாபலத்தாலுண்டான ஆடல் தவிர்ந்தார்கள்; குரக்குக் கைகொடு கூழ்ஆமாவி அடியேன் தேவர்திருமுன்னே ஆடவல்லேனோ?" என்றாராம்.

பவளம்போல்கனிவாய்சிவப்பநீகாணவந்து நின்பல்நிலாமுத்தம்*
தவழ்கதிர்முறுவல்செய்து நின்திருக்கண்தாமரைதயங்கநின்றருளாய்*
பவளநன்படர்கீழ்ச் சங்குறைபொருநல் தண்திருப்புளிங்குடிக்கிடந்தாய்*
கவளமாகளிற்றினிடர்கெடத்தடத்துக் காய்சினப்பறவையூர்ந்தானே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்து தோற்றினாப்போலே வந்து தோற்றி யருளவேணுமென்கிறார். [பல்நிலாமுத்தமென்று தொடங்கி] பல்லாகிற ஒளியையுடைய முத்து கதிர் புறப்பட முறுவல் செய்து திருக்கண்களாகிற தாமரை விளங்க நின்றருளாய். [பவள நன்படரென்று தொடங்கி] - நல்லபவளப்படரின் கீழே சங்குகள் நிர்ப்பாதமாய்வர்த்திக்கிற திருப்பொருநலையுடைத்தாய் ரமணீயமான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! [கவளமென்று தொடங்கி] - மத்த மான பெரிய ஆனையினுடைய விடாய் கெடுகைக்காக, அகப்பட்டு நின்ற பொய்கையிலே ப்ரதிபக்ஷத்தைக் காயும்சினத்தையுடைய பெரிய திருவடியை நடத்திக்கொண்டு தோற்றினவனே!

இ.—அஞ்சாம் பாட்டில், ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்துதோற்றினாப்போலே வந்து தோற்றியருள வேணுமென்கிறார். [பவளம்போல் இத்யாதி] - "அவாக்யநாதர:" என்கிறபடியே ஒன்றுக்கும் விக்ருதனாகாத நீ, அநுகூலதர்சநத்தாலே அகவாயில் பந்தம்தோற்ற விக்ருதனாய் ஸ்மிதம்பண்ணி நிற்கும்படியைக் காணவேணும். [பல்நிலாமுத்தம்] - பல்லாகிற நிலாவையுடைய திருமுத்துநிரையானது, [தவழ்கதிர் முறுவல்செய்து] கதிர்தவழும்படி - கதிர் புறப்படும்படி, முறுவல்செய்து. [நின்திருக்கண் தாமரை தயங்க நின்றருளாய்] - திருக்கண்களாகிற தாமரை விளங்க நாலடிவந்து, முடியவரமாட்டாதே ஸ்தப்தனாய்நிற்கும் நிலையைக் காணவேணும், கண்ணினுடைய ஸ்மிதமிருக்கிறபடி. தயங்குகை - தத்கலத்தில் ஒளியாதல், கடல்சலித்தாற்போலே பளைத்து வருகிறபடியாதல். [பவளநன்படரித்யாதி] - நல்லபவளப்படரின் கீழே சங்குகள் நிர்ப்பாதமாய் வர்த்திக்கிற திருப்பொருநலையுடைத்தாய் ரமணீயமான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! படர்-தூறு, நிர்ப்பாதமாகப் பவளத்தூற்றிலே சங்குகள் வர்த்திக்கையாலே அவ்வூரில் பதார்த்தங்களுக்கு பாதகங்களால் அச்சமில்லையென்கை. [கவளமாகளிறு] - கவளங்கொண்டிருப்பதான பெரிய ஆனை, கவளக்கொண்டவென்றை இத்தால் - மதமுதித மென்கை; இதுக்குமுன்பு இடர் பட்டறியாதஆனை. [இடர்கெடத்தடத்து] - தன்னிலமல்லாத பொய்கையிலே ஒரு க்ஷுத்ரபதார்த்தத்தின் கையிலே யகப்பட்டு ப்ரதிக்ரியையின்றிக்கே யிருக்கும்படியான ஆபத்துப் போக. [காய்சினப் பறவையூர்ந்தானே] - ப்ரதிபக்ஷத்தைக் காயுஞ்சினத்தையுடைய பெரிய திருவடியை அவன் வேகம் போராமே அவனைப் ரேரித்துக்கொடுவந்து தோற்றிற்றிலையோ? ஆனையின் தசையிடாய் என்தசை, அதுக்கு வந்து தோற்றினாப்போலே என்முன்னேவந்து தோற்றவேணும்.

௫.—அஞ்சாம்பாட்டு. ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுக்கு வந்துதோற்றினாற்போலே வந்து தோற்றியருளவேணுமென்கிறார்.

[பவளமித்யாதி] - *அவாக்யநாதர:* என்கிறபடியே ஒன்றுக்கும் விக்ருதனாகாத நீ, அநுகூல தர்சநத்தாலே பகவாயில் பக்தந்தோற்ற விக்ருதனாய் ஸ்மிதம் பண்ணியிருக்கும் படியைக் காணவேணும். [நின்பல்நிலாமுத்தம்] - பல்லாகிற நிலாவையுடைய முத்துநிரையானது. [தவழ்கதிர்முறுவல்செய்து] - 'கதிர் தவழ் முறுவல்செய்து' - கதிருள்ளடங்காதே புறம்பே தவழும்படி, முத்தத்திலே பல்நிலாக்கதிர் தவழும்படி. முத்தம் - அதரம். கதிர் புறப்படும்படி முறுவல்செய்து. [நின்திருக்கண்தாமரை தயங்க நின்றருளாய்] - கண்ணினுடைய ஸ்மிதமிருக்கிறபடி. தயங்குகையாவது - அப்போது பிறந்தவொளியாதல், கடல் சலித்தாற்போலே அசைந்துவருகிறபடியைச் சொல்லிற்றுதல். [நின்றருளாய்] - மூன்றுநாலடிவந்து, பின்னை அதுவும் மாட்டாதே ஸ்தப்தனாய் நிற்கும்நிலை காணவேணும். [பவளமித்யாதி] - நல்ல பவளப் படரின்கீழே சங்குகள் நிர்ப்பாதமாய்வர்த்திக்கிற திருப்பொருநலையுடைத்தாய், ச்ரமஹரமான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! படர் - தூறு. அவ்வூரில் பதார்த்தங்களுக்கு, பாதகத்துக்கு பயப்பட்டுவர்த்திக்குமது இல்லையிறே. அத்தேசஸ்வபாவம் இதுவாயிருக்க "எனக்கு உன்னைக்கிடைக்குமோ? கிடையாதோ?" என்று நான் பயப்படும்படியிருக்கிறதென்? [கவளமித்யாதி] - கவளங்கொண்டிருப்பதான பெரிய ஆனை. கவளங்கொண்ட என்ற இத்தால் - மதமுதிதமென்கை. இதுக்குமுன்பு இடர்பட்டறியாத ஆனை. [இடர்கெட] - "வாராயென்னுரிடரை நீக்காய்" என்று, தன்வாயாலே "ஆரிடர்" என்னும்படியிறே பட்ட இடரின் கனம். "ஆனையின் துயரம்" என்று நெஞ்சுளுக்கும்படியிறேபட்டது. [தடத்து] தன்னிலமல்லாத பொய்கையிலே க்ஷுத்ரபதார்த்தத்தின் கையிலேயகப்பட்டு ப்ரதிக்ரியையின்றிக்கே யிருக்கும்படியான ஆபத்துப் போம்படியாக. தடமென்று-கரைக்கும், பொய்கைக்கும் பேர். [காய்சினப்பறவையூர்ந்தானே] ப்ரதிபக்ஷத்தைக் காயுஞ்சினத்தையுடைய பெரிய திருவடியை, அவன்வேகம்போராமை அவனைப்ரேரித்துக்கொண்டுவந்து தோற்றிற்றிலையோ? அவ்வானையின் தசைகிடாய்என் தசை! அதுக்குத் தோற்றினாற்போலே என்முன்னேவந்து தோற்றியருளவேணும்.

காய்சினப்பறவையூர்ந்து பொன்மலையின் மீமிசைக்கார்முகில்போல்*
மாசின மாலிமாலிமானென்று அங்கவர்படக்கனன்றுமுன்னின்ற *
காய்சினவேந்தேகதிர்முடியானே கலிவயல்திருப்புளிங்குடியாய்*
காய்சினவாழிசங்குவாள்வில்தண்டேந்தி யெம்மிடர்கடிவானே. (௬)

௬.—ஆறும்பாட்டில், உன்னுடைய அபிலஷிதங்கள்செய்யவொண்ணாதபடி ப்ரதிபந்தகங்களுண்டேன்னில்; ஆச்ரிதருடைய ஆபத்துப் போக்குகைக்காக திவ்யாயுதங்களேந்தியிருக்கிற நீ, மாலிப்ரப்ருதிகளான ராக்ஷஸரை முடித்தாப்போலே என்னுடைய ப்ரதிபந்தகங்களை நீயே போக்கியருளவேணுமென்கிறார். [காய்சினப்பறவையென்று தொடங்கி] - மேருசிகரத்திலேயேறி மேகம் படிந்தாப்போலே ப்ரதிபக்ஷத்தைக் காயும்சினத்தையுடைய பெரியதிருவடியை நடத்திக்கொண்டு வந்து, பெரிய சினத்தையுடையரான மாலி மால்யவான் தொடக்கமான அஸுரர்கள் அங்கே முடியும்படி சீறி, அவர்கள்முன்பே நின்ற காயும் சினத்தையுடைய வேந்தே! [கலிவயல் திருப்புளிங்குடியாய்] - "அதுபண்டிறே" என்னவொண்ணாதபடி ஸம்ருத்தமான திருப்புளிங்குடியிலேவந்து ஸந்நிஹிதனானவனே! இப்பாட்டில் நிலை மேலிற்பாட்டிலே.

இ.—ஆறும்பாட்டில், உம்முடைய அபேக்ஷிதங்கள் செய்யவொண்ணாதபடி ஆனையிற்காட்டில் வலிய ப்ரதிபந்தகங்களுண்டேயென்ன: மாலிப்ரப்ருதி ராக்ஷஸரிலும் வலிதோ என்னுடைய ப்ரதிபந்தகம்? என்கிறார். [காய்சினப் பறவையூர்ந்து] - ப்ரதிபக்ஷத்தில் உனக்குத் தண்ணளியுண்டாகிலும் கண்ணற்

நழியச் செய்யும் பெரிய திருவடியை நடத்தி. [பொன்மலையின் மீமிசைக்கார்முகில்போல்] - அப்போதிருக்கும்படி மேருவுக்கினிய ஒரு காளமேகம் படிந்தாப்போலே. இப்போது இது சொல்லுகிறது - பெரியதிருவடி முதுகில் இருப்பைக் காண்கைக்காக. [மாசினமாலி] - பெரியசினத்தை யுடையனுமாய்க் கொண்டு வந்தமாலி [மாலிமான்] - மஹானுபா மாலி, ஸுமாலி யென்றபடி. [என்று அங்கவர்பட] - என்கிறவர் அங்கே முடியும்படியாக. [கனன்று முன்னின்ற] - சீறி அவர்கள்முன்னே நின்று; வடிவைக் கண்டபோதே எதிரிகள் முடியும்படியிறே வீரமிருப்பது. [காய்சினவேந்தே] - திருநாமம். காயுஞ் சினத்தையுடைய வீரனானவனே! [கதிர் முடியானே] - விளங்காநின்ற திருஅபிஷேகத்தை யுடையவனே! நீ ரக்ஷகத்வத்துக்கு முடிசூடியிருக்க, நான் இழக்கவோ? [கலிவயல் திருப்புளிங்குடியாய்] - நீ தூரஸ்த்தனொருதான் இழக்கின்றேனோ? ஸம்ருத்தமான வயலையுடைய திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளின வனே! [காய்சினவாழி இத்யாதி] - காயுஞ் சினத்தையுடைய திருவாழி முதலான திவ்யாயுதங்களை தரித்தது ஆச்ரிதருடைய ஆபத்துக்களைப் போக்குகைக்கன்றோ? மேலிற்பாட்டிலே இப்பாட்டுக்குக் க்ரியை.

௬.—ஆறாம்பாட்டில், [illegible] செய்யக்கொண்டுதபு [illegible] பத்துங்கள் ப்ரபலரன்றோ என்னில் — [illegible], ஸுமாலி, மால்யவான் இவர்களிலும் [illegible] என் ப்ரதிபந்தகம்? என்கிறார்.

[காய்சினப்பறவையூர்ந்து] ப்ரதிபக்ஷத்தில் [illegible] கண்டோறுடிலும் [illegible] செய்யும் பெரிய திருவடியை நடத்தி. [பொன்மலையின் மீமிசைக்கார்முகில்போல்] அப்போதிருக்கும்படி. மேருவுக்கினிய காளமேகம் படிந்தாப்போலேயாயிற்று இருப்பது. இப்போது இது சொல்லுகிறது-பெரியதிருவடி முதுகிலிருப்பைக் காண்கைக்காக. [மாசினமாலி] பெரிய சினத்தை யுடையனுமாய்க்கொண்டு வந்த மாலி. [மாலிமான்] மஹானுபா மாலி, ஸுமாலி என்றபடி. [என்று அங்கவர்பட] என்கிறவர்கள் அங்கே முடியும்படியாக. [கனன்று முன்னின்ற] சீறி அவர்கள்முன்னே நின்று. வடிவைக் கண்டபோதே எதிரிகள் முடியும்படியாயிறே வீரமிருப்பது. [காய்சினவேந்தே] திருநாமம். காயுஞ்சினத்தையுடைய வீரனானவனே! [கதிர்முடியானே] விளங்காநின்ற திருஅபிஷேகத்தை யுடையவனே! நீ ரக்ஷணத்துக்கு முடிசூடியிருக்க, நான் இழக்கவோ? [கலிவயல் திருப்புளிங்குடியாய்] நீ தூரஸ்த்தனொருத்தான் இழக்கின்றேனோ? ஸம்ருத்தமானவயலையுடைய திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளினவனே! [காய்சினவாழி இத்யாதி] காயுஞ்சினத்தையுடைய திருவாழி முதலான திவ்யாயுதங்களை தரித்தது ஆச்ரிதருடைய ஆபத்தைப் போக்குகைக்கன்றோ? "எம்மிடர்கடிவானே திருக்கண் தாமரை தயங்க நின்றருளாய்" என்று கீழ்ப்பாட்டிலே இப்பாட்டுக்கு க்ரியை.

எம்மிடர்கடிந்திங்கென்னையாள்வானே இமையவர்தமக்குமாங்கனையாய்*
செம்மடல்மலருந்தாமரைப்பழனத் தண்திருப்புளிங்குடிக்கிடந்தாய்*
நம்முடையடியர்கவ்வைகண்டுகந்து நாம்களித்துளநலங்கூர*
இம்மடவுலகர்காணநீயொருநாள் இருந்திடாயெங்கள்கண்முகப்பே. (7)

ஏ.—ஏழாம்பாட்டில், துர்ப்பலரோடு ப்ரபலரோடு வாசியின்றிக்கே ரக்ஷகனான நீ நாங்கள் வாழும்படி எங்கள்கண்ணெதிரே ஒருநாளிருந்திடாய் என்கிறார். [எம்மிடரென்று தொடங்கி] - எங்களுடைய ஸகல துக்கங்களையும் போக்கி இங்கே என்னை ஆளுமவனே! சத்தாதிகளான அபிமானிகளான ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் அங்கு அப்படி நிர்வாஹகனானவனே! ஸம்ருத்தமான பழனங்களையுடைத்தாய் சரமணீயமான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுமவனே! [நம்முடையடியர் என்று தொடங்கி] - திருவடிகளை ஆச்ரயித்தவர்களுடைய ஸம்ப்ரமத்தைக்கண்டு நாங்கள் களித்து மிகவும் ப்ரீதராக, இந்த லோகத்திலுள்ள ஸாதுக்கள் காணும்படி.

இ.—ஏழாம்பாட்டில், துர்ப்பலரோடு ப்ரபலரோடு வாசியற ரக்ஷகனான நீ நாங்கள் வாழும்படி கண்ணெதிரே ஒருநாளிருக்கவேணுமென்கிறார். [எம்மிடர் கடிந்து] - எங்களுடைய ஸாம்ஸாரிக ஸகல

துக்கங்களையும்போக்கி. [இங்கு என்னையாள்வானே] - பகவத்ஜ்ஞாநத்துக்கு அடைவில்லாத இஹலோகத்திலே அடிமைகொள்ளுகிறவனே! [இமையவர் தமக்குமாங்களையாய்] - அகிஞ்சநரான எங்களுக்கேயன்றிக்கே, "ஈச்வரோஹம்" என்றிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் அங்கு அப்படி நிர்வாஹகனானவனே! [செம்மடலித்யாதி] - சிவந்தமடல் மலராநின்றுள்ள தாமரையையுடைய நீர்நிலங்களை யுடைத்தாய்ச் ச்ரமஹரமான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! [நம்முடையித்யாதி] - உன்னடியார் உன்னையநுபவிக்கிற ஆரவாரத்தைக் கண்டு நாங்களுகந்து, அந்தவுகப்புத் தலைமண்டையிட்டு ஹ்ருதயத்திலே ஸ்நேஹமானது மேன்மேலென மிக்குவர. [இம்மடவுலகர்காண] - அஜ்ஞரான ஸம்ஸாரிகளநுபவிக்கும்படி எங்கள் கண்வட்டத்திலே ஒருநாளிருந்தருளவேணும். நித்யஸூரிகளுக்கு ஸதாதர்சந விஷயமான நீ, ஒரு நாள் எங்கள் கண்ணுக்கு விஷயமாயிருந்தாலாகாதோ? உன்னுடைய தர்சநம் அதிக்ருதாதிகாரமாகவேணுமோ?

ஈடு.—ஏழாம்பாட்டு. துர்ப்பலரோடு ப்ரபலரோடுவாசியற ரக்ஷகனான நீ, நாங்கள் வாழும்படி கண்ணெதிரே ஒருநாளிருக்கவேணுமென்கிறார்.

[எம்மிடர்கடிந்து] எங்களுடைய ஸாம்ஸாரிக ஸகலதுக்கங்களையும் போக்கி. [இங்கென்னையாள்வானே] பகவத்ஜ்ஞாநத்துக்கு அடைவில்லாத இஹலோகத்திலே என்னை அடிமை கொள்ளுகிறவனே! [இமையவர் தமக்கு மாங்களையாய்] அகிஞ்சநரான எங்களுக்கே யன்றிக்கே "ஈச்வரோஹம்" என்றிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் அங்கு அப்படி நிர்வாஹகனானவனே! [செம்மடலித்யாதி] சிவந்த மடல் மலராநின்றுள்ள தாமரைகளையுடைய நீர்நிலங்களையுடைத்தாய், ச்ரமஹரமான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! உள்ளும் புறம்புமெல்லாம் தாமரையாயிற்று. [நம்முடையித்யாதி] உன்னடியார் உன்னை யநுபவிக்கிற ஆரவாரத்தைக் கண்டு நாங்கள் உகந்து, அந்தவுகப்புத் தலைமண்டையிட்டு, ஹ்ருதயத்திலே ஸ்நேஹமானது மேன்மேலென மிக்குவர. [இம்மடவுலகர்காண] இந்த ஸம்ஸாரத்தில் அறிவுகேடராய், இடக்கைவலக்கையறியாதவர்களும் கண்ணாலே காணும்படியாக. [நீ ஒருநாளிருந்திடாய் எங்கள் கண்முகப்பே] எங்கள் கண்வட்டத்திலே ஒருநாள் இருந்தருளவேணும். நித்யஸூரிகளுக்கு ஸதாதர்சநவிஷயமான நீ ஒருநாள் எங்கள் கண்ணுக்கு விஷயமாயிருந்தாலாகாதோ? உன்னுடைய தர்சநம் அதிக்ருதாதிகாரமாக வேணுமோ?

எங்கள் கண்முகப்பேயுலகர்களெல்லாம் இணையடி தொழுதெழுதிறைஞ்சி*
தங்களன்பாரத்தமதுசொல்வலத்தால் தலைத்தலைச்சிறந்துபூசிப்ப*
திங்கள்சேர்மாடத்திருப்புளிங்குடியாய் திருவைகுந்தத்துள்ளாய்தேவா*
இங்கண்மாஞாலத்திதனுளுமொருநாள் இருந்திடாய்வீற்றிடங்கொண்டே. (௮)

ஒ.—எட்டாம்பாட்டில், திருநாட்டிலேயன்றோ நீர் அபேக்ஷிக்கிறபடி செய்யலாவதென்னில்; ஸகலலோகங்களும் கொண்டாடும்படி எங்கள் கண்ணெதிரே இஸ்ஸம்ஸாரத்திலே திருப்புளிங்குடியிலே உன்னுடைய வேண்டற்பாடுதோற்ற ஒருநாள் இருந்தருளவேணுமென்கிறார். [எங்கள் கண்முகப்பேயென்று தொடங்கி] - எங்கள் கண்ணெதிரே லௌகிகர் எல்லாம் உன்திருவடிகள் இரண்டையும் நிரந்தரமாகத் தொழுது க்ருதார்த்தராய்த் தங்களுடைய ஸ்நேஹாநுகுணமாகத் தங்களுடைய சக்த்யநுரூபமான சொற்களாலே மிகவும் மேல்விழுந்து கொண்டாட, [திங்களென்று தொடங்கி] - சந்த்ரபதத்தளவும் உயர்ந்த மாடங்களையுடைய திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதனானவனே! அவ்வளவன்றிக்கே ஸ்ரீவைகுண்டத்திலேவந்து நின்றருளி மிகவும் விளங்காநின்றுள்ளவனே!

இ.—எட்டாம்பாட்டில், பரமபதத்திலேயன்றோ இருப்பழகு காட்டலாவதென்ன, அவ்விருப்பைத் திருப்புளிங்குடியிலே ஒருநாள் இருந்தருளவேணுமென்கிறார். [எங்கள் கண்முகப்பே இத்யாதி] - எங்கள் கண்முகப்பே இருக்கவேணும். அது செய்தருளுமிடத்தில் லௌகிகரெல்லாம் திருவடிகளிற் சேர்த்தியழகு கண்டு திருவடிகளிலே விழுவதெழுவதாய் ஆச்ரயித்து. [தங்களன்பார] - தங்கள்ப்ரேமம்

மிக்குவர, [தமது சொல்வலத்தால்] - சக்த்யநுகுணமான சொற்களாலே வெல்லுதல், தாந்தாம் சொல்வல்லவளவிலே என்னுதல். "பொன்னுலே பூணுநா விடுவீர்; நாறுபிராயம் புகுவீர்; "விஜயஸ்வ" என்னுதல். [தலைத்தலைச் சிறந்து பூசிப்ப] - மிகவும் மேல்விழுந்து கொண்டாட. [திங்கள் இத்யாதி] - ஸஞ்சாரசீலனான சந்த்ரனுக்கும் இளைப்பாறலாம்படியான மாடங்களையுடைய திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதனானவனே! [திருவைகுந்தத்துள்ளாய்] - அவ்வளவன்றிக்கே, ஸ்ரீவைகுண்டத்திலே நின்றருளினவனே! [தேவா] - பரமபதத்திற்காட்டில் ஸம்ஸாரத்தில் விஞ்சியால்வந்த புகர். [இங்கண் இத்யாதி] - இம்மஹாப்ருதிவியிலே திருப்புளிங்குடியிலே பரமபதத்திலிருக்கும் வேண்டற்பாட்டோடே ஒருநாள் இருந்தருளவேணும்.

ஈடு.—எட்டாம்பாட்டு. பரமபதத்திலேயன்றோ இருப்பழகு காட்டலாவதென்ன? அவ்விருப்பைத் திருப்புளிங்குடியிலே ஒருநாளிருந்தருளவேணுமென்கிறார்.

[எங்களித்யாதி] எங்கள் கண்முகப்பே இருக்கவேணும். அது செய்யுமிடத்தில், லோகத்திலுள்ளாரடங்க, திருவடிகளிலுண்டான சேர்த்தியழகுகண்டு திருவடிகளிலே விழுவதொழுவதாய்க்கொண்டு ஆச்ரயித்து. [தங்களன்பார] தங்கள் ப்ரேமம் மிக்குவர. [தமது சொல்வலத்தால்] சக்த்யநுரூபமான சொற்களாலேயென்னுதல்; தாந்தாம் சொல்வல்லவளவாலேயென்னுதல்; *யதாஶக்த்யா வக்ஷ்யாமி புருஷம் தம் ஸநாதநம்* என்னக்கடவதிறே. அதாவது "நாறுபிராயம்புகுவீர், பொன்னுலே பூணுநாவிடுவீர்" என்றாப்போலே சொல்லுகை. வங்கிப்புரத்துநம்பி *விஜயஸ்வ* என்ன, ஆண்டான் சொன்ன வார்த்தையை நினைப்பது [தலைத் தலைச்சிறந்துபூசிப்ப] ஒருவர்க்கொருவர் மேல்விழுந்து மிகவும் ஆச்ரயித்துக்கொண்டாட, [திங்களித்யாதி]சந்த்ரனுக்கு இதஸ்தத: ஸஞ்சரிக்கையாலுண்டான இளைப்பெல்லாம் ஆறும்படியிருக்குமாயிற்று மாடங்களினுடையவோக்கம்; அதிலே ஸந்நிஹிதனானவனே. [திருவைகுந்தத்துள்ளாய்] அவ்வளவேயன்றிக்கே, திருவைகுந்தத்திலே நின்றருளினவனே. [தேவா] பரமபதத்திற்காட்டில் ஸம்ஸாரத்தில் விஞ்சியால் வந்த புகர். [இங்கண்மாஞாலத்திதனுளுமொருநாளிருந்திடாய்] இந்த மஹாப்ருதிவியிலே, திருப்புளிங்குடியிலேயும் ஒருநாளிருந்தருளவேணும். இருக்குமிடத்தில், [வீற்றிடங்கொண்டு] பரமபதத்திலிருக்குமாபோலே, உன்னுடைய வ்யாவ்ருத்திதோற்ற இருக்கவேணும். "இதனுளும்" என்கிறதுக்குக் கருத்தென்னென்னில்?—சாய்ந்தருளினவழகு கண்டோமுக்கு, "இவனிருந்தால் எங்ஙனேயிருக்கிறதோ?" என்றும், இப்படியிருக்கிறவன்றான் நின்றால் எங்ஙனேயிருக்கிறதோ?" என்றும், இங்ஙனே சில அபேக்ஷைகள் பிறக்குமிறே இவர்களுக்கு; அது வேறொருபடியிறே நாக்கு. இவையெல்லாம் ரஸகாந்தரமான விஷயங்களிலேயுண்டு; இவ்விஷயத்தில் தெரியாது. செய்ததெல்லாம் பரிதாபமையும், அவ்வருகே சில பரிமாறல்களை யாசைப்படுகையு மெல்லாம் நமக்கு ப்ராக்ருதவிஷயங்களிலே யுண்டாயிருக்கும். இப்படியிருக்குமோ வென்று அறியுமித்தனை.

வீற்றிடங்கொண்டு வியன்கொள்மாஞாலத் திதனுளுமிருந்திடாய்* அடியோம்
போற்றியோவாதே கண்ணிணைகுளிரப் புதுமலராகத்தைப்பருக*
சேற்றிளவாளை செந்நெலூடுகளும் செழும்பணைத் திருப்புளிங்குடியாய்*
கூற்றமாய் அசுரர்குலமுதலரிந்த கொடுவினைப்படைகள்வல்லானே. (9)

௯.—ஒன்பதாம்பாட்டில், இவ்விருப்பில் வீற்றிருந்ததனைஸம்ஸாரத்திலே யிருக்கிறதென் என்னவில், ஆசையுடைய நாங்கள் நிரந்தரமாகக் கண்டுவாழுகைக்கு என்கிறார். [வீற்றிடங்கொண்டென்று தொடங்கி] - உன்னைக்கொண்டு கார்யமின்றிக்கே செல்லுகிற விஸ்மயநீயமான ஸம்ஸாரத்திலே உன்னுடைய வேண்டற்பாடு தோற்றும்படி ஒருநாளிருந்தருளவேணும். இதில் 'உமக்கு ப்ரயோஜநம் என்'னென்னில் ? அநந்யப்ரயோஜநரான நாங்கள் கண்களின் விடாய் கெடும்படி செவ்விப்பூப்போலே யிருக்கிற

திருமேனியை வாழ்த்தி நிரந்தரமாக அநுபவிக்கும்படி. [சேறுஎன்றுதொடக்கி] - செந்நெலின் நடுவே சேற்றிலே இளவாளைகள் களித்துத் துள்ளாநின்றுள்ள அழகியநீர்நிலத்தையுடைய திருப்புளிங் குடியிலே ஸந்நிஹிதனானவனே ! ம்ருத்யுபோலே அஸுரருடைய குலங்களைப்போக்குகைக்கீடான அதுக்கு உபாயமாய்க் கொடிய ப்ரவ்ருத்திகளையுடைய திவ்யாயுதங்கள் கைவந்திருக்குமவனே ! இது பக்தி தங்களுடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கினபடிக்கு த்ருஷ்டாந்தம்.

இ.—ஒன்பதாம்பாட்டில், இவ்விருப்பில் வீற்றிராத ஸம்ஸாரத்தில் இருக்கிறதென்னென்னில்,—ருசியுடைய நாங்கள் கண்டு அநுபவிக்கைக்கென்கிறார். [வீற்றிடங்கொண்டு] - சேஷித்வத்தால்வந்த வேறுபாடு தோற்றும்படி. [வியன்ஞாலஇத்யாதி] - விஸ்மயநீயமான மஹாப்ருதிவியான இதிலேயுமிருக் திடாய். உன்னைக்கொண்டுகார்யமின்றிக்கே அந்யபரமான ஸம்ஸாரத்திலே உன்னையொழியச் செல்லாமையுடையார்முன்பே யிருக்குமது உனக்கேற்றமோ ? இதில் உமக்குப்ரயோஜநமென்னென்னில்,— [அடியோம்] - அநந்யப்ரயோஜநரான நாங்கள். [போற்றி] - அவ்விருப்பு நித்யமாய்ச்செல்லவேணுமென்று மங்களாசாஸநம் பண்ணி. [ஓவாதே] - உச்சிவீடு விடாதே. [கண்ணிணைகுளிர] - கமர்பிளர்ந்த கண்கள் விடாய்கெட்டுக் குளிரும்படி. [புதுமலராகத்தைப்பருக] - செவ்விப்பூப்போலேயிருக்கிற திருமேனியையநுபவிக்கும்படியாக புஷ்பஹாஸஸுகுமாரமானவடிவை "ஸோகாஸப்யாம் பிபந்தியை" என்கிறபடியே நிரந்தரமாக அநுபவிக்கப்பெறுகை. [சேற்றிளவாளை இத்யாதி] - செந்நெலின் நடுவே சேற்றிலே பஞ்சவிம்சதிவார்ஷிகரான முக்தரைப்போலேயிருக்கிற வாளைகள் களித்துத்துள்ளாநிற்பதான அழகிய நீர்நிலத்தையுடைய தேசம். [செழும்பணை] - அழகிய மருதநிலமென்றுமாம். [கூற்றமா யித்யாதி] - ம்ருத்யுபோலே ப்ரதிபக்ஷத்தை நிச்சேஷமாகப் போக்கவல்லவாய், அதுக்குடலாகக் கொடிய தொழிலையுடைய திவ்யாயுதங்கள் கைவந்திருக்குமவனே ! ப்ரதிபக்ஷத்துக்கு ம்ருத்யுவான திவ்யாயுதமென்னவுமாம் இதுக்குமுன்பு தம்முடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கினபடிக்கு த்ருஷ்டாந்தமென்னுதல்; உனக் கென்ன அசக்தி உண்டாய் நானிழக்கிறே னென்னுதல்.

ஈடு—ஒன்பதாம்பாட்டு. 'இவ்விருப்பில் வாசியறியாத ஸம்ஸாரத்திலேயிருக்கிறதென் ? என்னில்,—ருசியுடைய நாங்கள் கண்டநுபவிக்க என்கிறார்.

[வீற்றிடங்கொண்டு] சேஷித்வத்தால் வந்த வேறுபாடு தோற்றும்படி. [வியன்ஞால இத்யாதி] விஸ்மயநீயமான மஹாப்ருதிவியான இதிலேயுமிருந்திடாய், உன்னைக்கொண்டு ஒரு கார்யமில்லாத ஸம்ஸாரத்திலே. [இதனுளும் இருந்திடாய்] இந்தத் திருப்புளிங்குடியாகிற திருப்பதியிலேயும் இருந்திடாய். உன்னையொழியச் செல்லாமையுடையார்முன்னே யிருக்குமதென்னுமிது போருமோ? [இதனுளும் இருந்திடாய்] சாய்ந்தருளினபோதிருக்கும் இருப்பை யநுபவிப்பித்தருளிற்று. இனி, இருந்தால் இருக்குமழகையும் அநுபவிப்பித்தருளவேணும் "நமக்கு இவையெல்லாம் இங்கே காணலாயிற்று: சாய்ந்தருளின அழகு பெரிய பெருமாள் பக்கலிலேகாணலாம்; நின்றருளினவழகு, நம்பெருமாள்பக்கலிலே காணலாம்; இருப்பிலுண்டானவழகு, பெரியபிராட்டியார்பக்கலிலே காணலாம்" என்று பட்டர் அருளிச்செய்வர். நாம் இங்கிருந்து நீர் பெறப்புகுகிற பேறு ஏதென்ன? [அடியோமித்யாதி] அடியோம் அவ்விருப்பைப் படிவிட, அதுவே ஜீவனமாகவிருக்கிற நாங்கள். [போற்றி] இவ்விருப்பு இங்ஙனே நித்யமாகச் செல்லவேணுமென்று மங்களாசாஸநம் பண்ணி. [ஓவாதே] உச்சிவீடு விடாதே. [கண்ணிணை குளிர] காணப்பெறுமையாலே கமர்பிளர்ந்து கிடக்கிறகண்கள். விடாயெல்லாந்தீர்ந்து குளிரும்படியாக. [புதுமலர் இத்யாதி] செவ்விப்பூப்போலேயிருக்கிற திருமேனியை யநுபவிக்கும்படியாக. புஷ்பஹாஸஸுகுமாரமானவடிவை, "ஸோகாஸப்யாம் பிபந்தியை" என்கிறபடியே நிரந்தரமாக அநுபவிக்கப்பெறுகை. [சேற்றிளம் இத்யாதி] அவ்வூரில் பதார்த்தங்களுடைய அபிமத லாபத்தாலே களித்துவர்த்திக்குமாயிற்று. செந்நெலின் நடுவே சேற்றிலே, பஞ்சவிம்சதிவார்ஷிகரான முக்தரைப்போலேயிருக்கிற வாளைகள் களித்துத்துள்ளாநிற்பதான அழகிய நீர் நிலத்தையுடைய. [செழும்பணை] அழகிய மருதநிலமென்றுமாம். [கூற்றமாய் இத்யாதி] ப்ரதிபக்ஷத்துக்கு ம்ருத்யுவான திவ்யாயுதங்களை தரித்துக்கொண்டிருக்கிறவென்னுதல்; அன்றிக்கே, ப்ரதிபக்ஷத்துக்குக் கூற்றமாய்க்கொண்டு அவர்களுடைய குலத்தை மூதலிலேயரிந்து போகடுமவனும், அதுக்கு உடலாகக் கொடிய தொழில்களையுடைய திவ்யாயுதங்களையுடையனு

யிருக்கிறவன் என்னுதல். இப்போது இது சொல்லுகிறது - இதுக்கு முன்பு, தம்முடைய ப்ரதிபந்தங்களைப் போக்கினபடிக்கு த்ருஷ்டாந்த மென்னுதல்; உனக்கு என்ன குறையுண்டாய் இழக்கிறேன் என்னுதல்.

கொடுவினைப்படைகள்வல்லையாய் அமரர்க்கிடர்கெட அசுரர்கட்கிடர்செய்,
கடுவினைநஞ்சேஎன்னுடையமுதே கலிவயல்திருப்புளிங்குடியாய்,*
வடிவிணையில்லாமலர்மகள் மற்றைநிலமகள்பிடிக்கும்மெல்லடியை,*
கொடுவினையேனும்பிடிக்கநீயொருநாள் கூவுதல்வருதல்செய்யாயே. (10)

ஈ.—பத்தாம்பாட்டில், மிகவும் போக்யமான உன்திருவடிகளிலே நானும் வந்து அடிமை செய்யும்படி என்னை அங்கே அழைத்துக்கொள்ளுதல், இங்கேவருதல் செய்தருளவேணுமென்கிறார். [கொடுவினைப்படைகள் வல்லையாய்] - உனக்கு சேஷமாய்வைத்தே உன்னோடே ப்ரதிகூலித்த சேதநர் பக்கல், நீரிலே நெருப்பெழுந்தாற்போலே சீறி ஆயுதமெடுக்கவல்லையாய். [அமரர்க்கென்று தொடங்கி] தேவர்களுடைய ஸர்வ து:க்கங்களும் போம்படி அஸுரர்க்கு துஸ்ஸஹமான து:க்கத்தை விளைக்கும்படியான ப்ரத்யௌஷதமில்லாத நஞ்சாய் எனக்கு நிரதிசயபோக்யனாய்த் திருப்புளிங்குடியிலேவந்து ஸந்நிஹிதனானவனே! [வடிவிணையென்று மேலுக்கு] - வடிவழகுக்கு ஒப்பில்லாத பெரிய பிராட்டியாரும் அப்படியிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டியாரும் கூசி ஸ்பர்சிக்க வேண்டும்படி ஸுகுமாரமான திருவடிகளை அதில் போக்யதையை யறிந்துவைத்து இழக்கைக்கீடான பாபத்தைப்பண்ணின நானும் பிடிக்கும்படி.

இ.—பத்தாம்பாட்டில், நிரதிசயபோக்யமான உன்திருவடிகளிலே நானும் வந்து அடிமை செய்யும்படி என்னை யங்கேயழைத்தல் இங்கேவருதல் செய்தருளவேணுமென்கிறார். [கொடுவினைப் படைகள் வல்லையாய்], உனக்கு சேஷமாய்வைத்து ப்ரதிகூலித்தவர்கள்பக்கல் நீரிலே நெருப்பெழுந்தாற் போலே சீறி, ஆயுதமெடுக்கவல்லையாய். "சிலரை அழியச்செய்ய" என்றால் - சக்தனன்றிக்கேயிருக்கை. "யதிவா ராவணஸ் ஸ்வயம்" என்றிறே இருப்பது. "ந நமேயம்" என்று ப்ராதிகூல்யம் மிகைத்தாலும், "கச்சாநுஜாநாமி" என்று பின்பு கண்ணுங் கண்ணநீருமாய் நின்றிறே கொல்லுவது? [அமரர்க்கிடர் கெட] - அஸுரர்களாலே தேவர்களுக்குஉண்டான து:க்கந் தீரும்படி. [அசுரர்க்கிடர் செய்] - அஸுரர்க்கு து:க்கத்தை விளைக்கும். [கடுவினை நஞ்சே] - சடக்கென முடிக்கவற்றாய் ப்ரத்யௌஷத மில்லாத நஞ்சானவனே! [என்னுடை அமுதே] - எனக்கு நிரதிசயபோக்யனானவனே! ஸாத்யமான தேவர்கள் அமுதன்று. [கலிவயல் திருப்புளிங்குடியாய்] - ஸ்வர்க்கத்திற் போகவேண்டா; கடலைக் கடைய வேண்டா: திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதமாயிற்று இவருடைய அம்ருதம். [கலிவயல்] - ஸம்ருத்தமான வயல். [வடிவிணை இல்லாத] - இவ்வடிவில்வந்தால் ஒப்பில்லை. பகவத்தத்த்வமும் ஒப்பன்று; "தஞ்சேமாபிதேவதை" என்று ஏற்றமாய் நின்றதிறே. [மற்றை நிலமகள்] - அப்படிப்பட்ட நிலமகள். "ஏவம்பூதா"வென்னுமித்தனை. [பிடிக்கும் மெல்லடியை] - அவர்களும் கூசித் தொடவேண்டும்படி ஸுகுமாரமான திருவடிகளை. [கொடுவினையேனும் பிடிக்க] - "அவர்கள் ஸந்நிதியுண்டாயிருக்க இழப்பதே!" என்றும்இன்னாப்பாலே சொல்லுகிறார். கண்கள் சிவந்துக்குப் பின்பு நிகர்ஷாநுஸந்தானமில்லை. நிரதிசயபோக்யனாய் ஸந்நிஹிதனான நீ ஸத்தையை நோக்குகைக்கு ஒருநாள் அங்கே அழைத்தல், இங்கேவருதல் செய்தருளவேணும். வருதல் என்கிற இத்தை முந்துறச் சொல்லாதொழிந்தது, அந்த ஸமுதாயத்தைக் காணவேணுமென்னும் நசையாலே.

ஈடு.—பத்தாம்பாட்டு. நிரதிசயபோக்யமான உன்னுடைய திருவடிகளிலே நானும் வந்து அடிமை செய்யும்படி, என்னை யங்கேயழைத்தல், நீ இங்கேவருதல் செய்யவேணுமென்கிறார்.

[கொடுவினைப்படைகள்வல்லையாய்] நீரிலேநெருப்பெழுந்தாற்போலே, உனக்கு சேஷமாய் வைத்து ப்ரதிகூலித்தவர்கள்பக்கல்சீறி, ஆயுதமெடுக்கவல்லையாய். அவன் மாட்டாதது சிலரையழியச் செய்கையாயிற்று; "யதிவா ராவணஸ் ஸ்வயம்" என்னுமவனிறே. கடலையன்ன

செய்து, ஊரைச்சூழப்போந்து, பின்னை அங்கதப்பெருமாளைப் புகவிட்டு, கையிலேயகப்பட்டவனை *சரணாகதம் என்று தப்பவிட்டது, "இன்னமொருகால் அநுகூலிக்குமோ?" என்று; "நான் முடிந்தே போயித்தனை" என்று அவன் அதிவேஷமிரங்கின்றபின்பு, கண்ணாலே கண்ணீருமாயே நின்றுகொன்றது. இவர்கள் பண்ணும்ப்ராதிகூல்யத்தாலே யுத்தம் செய்யமிக்கதனைப்போல், தானாக அறியச்செய்யமாட்டாதாயிற்று. [அமரர் இத்யாதி] அஸுரர்களாலே தேவர்களுக்கு உண்டான துக்கத்திருப்படி, அஸுரர்களுக்கு துக்கத்தைவிளைத்தும். [கடுவினை நஞ்சே] அடிப்பாதே சடக்கென முடிக்கவற்றாய், ப்ரத்யவாயமில்லாத நஞ்சானவனே! [என்னுடையமுதே] அந்நஞ்சுதானே இவர்க்கு அம்ருதமாயிருக்கிறபடி. தேவர்களுடைய உப்புச்சாறன்று. [கலியாண் இத்யாதி] இவ்வம்ருதத்துக்குக் கடல்கடைதல், ஸ்வர்க்கத்திலே போதல் செய்யவேண்டா; திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதமாயிற்றிவ்வம்ருதம். [கலியாண்] ஸம்ருத்தமான வயல். [வடிவிணையித்யாதி] வடிவில் வந்தால் ஒப்பின்றிக்கேயிருக்கும். பகவத்தத்த்வமும் ஒப்பன்று; *தஞ்சேயம்ஸிதேக்ஷணு* என்று ஏற்றமேயே நின்றதிறே. [மலர்மகள்] *ஏவம்பூதை* யென்னுமத்தனையவளையும். [பிடிக்குமெல்லடியை] அவர்களுடைய திருவடிகளைப் பிடிக்கப்புக்கால், பூத்தொடுவாரைப்போலே "கன்றுமோ?" என்று கூசித் தொடவேண்டும்படியாயிற்று ஸௌகுமார்யமிருப்பது; அப்படிப்பட்ட திருவடிகளை. [கொடுவினையேனும்பிடிக்க] கண்கள் சிவந்துக்குப்பின்பு இவர்க்கு கொண்டாடலைத்தாகமின்றிலையிறே. "அவர்களும் ஸந்நிஹிதராய், ப்ராப்தியுமுண்டாயிருக்க, நான் இழந்திருப்பதே!" என்று, "பாவியேன்" என்பாரைப்போலே, 'கொடுவினையேன்' என்கிறார். [நீயொருநாள் கூவுதல்வருதல்செய்யாயே] பிறிசயப்போகமும் ஸந்நிஹிதனான நீ, ஸத்தைதரக் கூறுகைக்கு ஒருநாள் அங்கீகரித்தல், இங்கே வருதல் செய்தருளவேணும். மூலத்தில் 'வருதல்' என்றிலதாயிற்று, அல்லாமுடையார்க்குக் குதுகலமென்னுமுதலாமே. அபேக்ஷையுடையார்பக்கல் அவனேதானே வருமவர்களிறே, கூடக்கொடுவருவர்களென்னுமத்தைப் பற்றச்சொல்லுகிறார்.

கூவுதல்வருதல்செய்திடாயென்று குரைகடல்கடைந்தவன்தன்னை*
மேவிநன்கமர்ந்தவியன்புனல்பொருநல் வழுதிநாடன்சடகோபன்*
நாவியல்பாடலாயிரத்துள்ளும் இவையுமோர்பத்தும்வல்லார்கள்*
ஓவுதலின்றியுலகமூன்றளந்தான் அடியிணையுள்ளத்தோர்வாரே. (11)

ஓ.—முடிவில் இத்திருவாய்மொழி கற்றார் எம்பெருமானை நிரந்தரமாக புஜிக்கப்பெறுவரென்கிறார். "கூவுதல் வருதல்" என்று தொடங்கி - இப்பாட்டுக்கெல்லாம் ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுடைய அபேக்ஷிதம் பூர்க்கைக்காக கடலைக் கடைந்தருளின எம்பெருமானை இத்தன்மையையுடையவரான நீ என்னை அங்கேயழைத்தல் இங்கே வருதல்செய்து என் அபேக்ஷிதத்தைப் பூர்த்தருளவேணும் என்றுந்திரித்து, அப்படியே பூர்ணமாகப் பெறுகையாலே ஸத்துமான திருவழுதிநாடுடைய ஆழ்வாருடைய அநாயாஸமான வாக்ப்ரவ்ருத்தியையுடைய ஆயிரம் திருவாய்மொழியிலும் விலக்ஷணமான இத்திருவாய்மொழிவல்லார்கள் ஆச்ரிதவத்ஸலனான எம்பெருமானுடைய திருவடிகளை நிரந்தரமாக திருஹ்ருதயத்தில் அநுபவிக்கப்பெறுவர் — ஆழ்வாருடைய ஆர்த்தியும் தீர்க்கும் ஸ்வபாவமிருந்து வைத்துவர்களுடைய ஆர்த்தி தீர்த்திலனென்று இன்றுதானும்: இந்த ரமபந்துவாய்வைத்து என்னை அங்கீகரித்திலனென்றும், ஏகரூபமாகக் கண்வளர்ந்தருளிறும் திருவடம்பலசாதேயவென்றும் இன்றுதாகிறார்.

ஈ.—நிகமத்தில். இத்திருவாய்மொழிகற்றார் அவனை நிரந்தரமாக அநுபவிக்கப்பெறுவர் என்கிறார். [குரைகடல் கடைந்தவன் தன்னை] - கூவுதல்வருதல் செய்திடாய் என்று ப்ரயோஜநாந்தரபரருடைய அபேக்ஷிதம் பூரிக்கைக்குக் கடல்கடைந்தவனையாயிற்று அர்த்தித்தது. இச்சீலத்தையறிந்து, முறைகெடவாகிலும் முறையாலேயாகிலும் கண்டுகொண்டு நிற்கவேணுமென்றாயிற்றுச் சொல்லிற்று. [மேவி நன்கமர்ந்து] - இஸ்ஸ்வபாவத்தை பதுலந்தித்து அத்தாலே தரித்த [வியன்புனல் இத்யாதி] - அத்தாலே

விஸ்மயநீயமான ஜலத்தையுடைய திருப்பேரருநகரையுடைத்தான திருவழுதிவளநாட்டையுடைய ஆழ்வார். [காவியல் பாடல்] - மனஸ்ஸஹகாரமின்றிக்கே சொன்னவல்ல. [ஆயிரத்துளிவையும் பத்தும் வல்லார்கள்] - விலக்ஷணமான இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார், ஆச்ரிதஸுலபனுடைய திருவடிகளை நிரந்தரமாக ஹ்ருதயத்திலே அநுபவிக்கப்பெறுவர். "யதிநாசம் ந விந்தேத தாவதாऽஸ்மி க்ருதீ ஸதா" என்று இதுதன்னைப் பேறாகச் சொல்லிற்றிறே. ஆரவமுதில் ஆர்த்தரக்ஷணம் பண்ணுமவன் என்னுடைய ஆர்த்தி தீர்க்கிறிலன் என்றார். இங்கு - பரமபந்துவாய்வைத்து என்னை அங்கீகரித்திலனென்றும், ஏகரூபமாகக் கண்வளர்ந்தருளினால் திருவுடம்பலசாதோ என்றும் இன்னாதாகிறார்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார், அவனை நிரந்தரமாக அநுபவிக்கப் பெறுவரென்கிறார்.

[கூவுதலித்யாதி] 'நுரைகடல்கடைந்தவன் தன்னைக் கூவுதல்வருதல்செய்திடாய்' என்று சொற்று இவர்சொல்லிற்று. முறைகெட அழைப்பாம், முறையிலேயாகவுமாம் காணும் இத்தனையே வேண்டுவது. [நுரைகடலித்யாதி] இவ்வபேக்ஷையில்லாதார்க்கும் உடம்புநோவக் கடல் கடைந்து அம்ருதங்கொடுக்குமவனையாயிற்று இவர் அபேக்ஷித்தது. [மேவிநின்றமர்ந்த] இந்த ஸ்வபாவாநுஸந்தாநத்தாலே பொருந்திக் கால் தரையிலே பாவினாராயிற்று. [வியனித்யாதி] விஸ்மயநீயமான நீரையுடைய திருப்பேரருநகரையுடைய திருவழுதிவளநாட்டுக்கு நிர்வாஹகரான ஆழ்வார். [காவியல்பாடல்] மனஸ்ஸஹகாரமுள்ளமொழியவாயிற்றுச் சொல்லிற்று. [ஓவுதலித்யாதி] ஆச்ரிதஸுலபனானவனுடைய திருவடிகளை நிரந்தரமாக ஹ்ருதயத்திலே அநுபவிக்கப்பெறுவர். இத்தனைபோதும், இவர்தாம் "இவற்றைப்பெறவேணும்" என்னும் அபேக்ஷையோடே, "திருக்கண்களாலே குளிரநோக்கியருளவேணும், திருவடிகளை தலைமேலே வைத்தருளவேணும்; தேவரீர் எழுந்தருளியிருக்குமிருப்பைக் காணவேணும்; நாய்ச்சிமாரும் தேவரீருமாயிருக்குமிருப்பு காணவேணும்; உலாவும்படி காணவேணும்! ஸ்மிதம் இருக்கும்படி காணவேணும்" என்று ஆசைப்பட்ட இவர்க்கு அப்போதே கிடையாமையாலே, "இவற்றைப் பெறவேணும்" என்னும் மநோரதந்தானே பேறாய்த் தோற்றிற்று; இத்தையப்யஸித்தவர்களுக்கும் இம்மநோரதம் மாறாதே முடியச்செல்லும் என்கிறார். *யதி நாசம் நவிந்தேத தாவதாऽஸ்மி க்ருதீ ஸதா* என்றபடியே.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றாந்திருவாய்மொழி—ஒராயிரம் : ப்ரவேசம்

ஒ—மூன்றாம் திருவாய்மொழியில், கீழ்த்திருவாய்மொழியிலே "கூவுதல் வருதல் செய்யவேணும்" என்று எம்பெருமானை ப்ரார்த்தித்த ஆழ்வார்க்கு, அவனும் "நான் நாராயணனல்லேனோ? நீர் அபேக்ஷித்தபடியே செய்கிறோம்" என்று தன்னுடைய நாராயணத்வத்தைக் காட்டியருள; அந்த நாராயணத்வப்ரகாரத்தை அநுஸந்தித்து "அவனைக் காணவேணும்" என்று ஆசைப்பட்டுக் காணப் பெறாமையாலே பலஹீநராய், "ஒருநாளொருபடி அவனிருந்தவிடத்திலே சென்றாகிலும் அவனுடைய சீலவத்தையின் மிகுதியை [illegible] அடிமைசெய்ய விரகில்லை" என்று அவனுடைய ஸௌசீல்யாதிசயத்தைப் பேசிமுடிக்கிறார்.

இ.—முன்னும் திருவாய்மொழியில், "கூவுதல்வருதல் செய்யாய்" என்றார் கீழே: அவன், உம்மைப் பெறுகைக்கு நாமன்றோ ப்ரார்த்திக்கக்கடவோம் என்று நாராயணத்வத்தால்வந்த தன்னோட்டை ப்ராப்தியைக் காட்டிக்கொடுக்க; அந்தநாராயணத்வப்ரகாரத்தை யநுஸந்தித்து, "அவனைக் காண வேணும்" என்றுஆசைப்பட்டுக் காணப்பெறுமையாலே பலஹீநராய் நாராயணத்வத்தில் எல்லையான சீலகுணத்தை அநுஸந்தித்து ஏதேனுமொருபடி அவனிருந்தவிடத்தே சென்றாகிலும் அவனுடைய சீலப்ராகர்யத்தாலே அடிமைசெய்ய க்ஷமரன்றிக்கே யிருக்கையாலே, அந்தசீலாதிசயத்தையே பேசி முடிக்கிறார். அவன் சீலவத்தையைப் பார்த்தவிடத்து, தாம் ஒன்றுசெய்யக்க மிகையாம்படியாயிருந்தது. தம்மைப் பார்த்தால் அந்தசீலத்திலே கால் தாழ்ந்து ஒன்றுஞ்செய்ய க்ஷமரமன்றிக்கே யிருக்கையாலே, அந்த சீலாதிசயத்தைப் பேசிமுடிக்கிறார். "கிட்டி யடிமைசெய்யவேணும்" என்று அபேக்ஷித்தாலும் ஒரு குணத்தை அவன் ஆவிஷ்கரித்தால் அவ்வழியே போகவேண்டும்படியிறே யிருப்பது.

ஈடு.—"நீர் இங்ஙனே ப்ரார்த்திக்கவேணுமோ? நம்மோட்டைக் கூடல்துடக்கை நீரோ? என்ன; அத்தையநுஸந்தித்து இனியராகிறார். "கூவுதல்வருதல்செய்யாய்" என்று ப்ரார்த்தித்தார் கீழ்; "ஆர் ப்ரார்த்திக்கக்கடவவற்றை யார் ப்ரார்த்திக்கிறீர்? உம்முடைய ஸ்வரூபத்துக்கு நாம் ப்ரார்த்திக்கவேண்டும்படியன்றோ உம்மோடு நமக்கு உண்டான ஸம்பந்தஸ்பர்சம்? ஆனபின்பு, உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களுந் செய்யக் கடவோம்; நீர் வெறுக்கவேண்டா" என்று ஸமாதாநம்பண்ணிறான். "மைய லேற்றி மயக்க வுன்முகம் மாயமந்திரந்தான்கொலோ" என்னக்கடவதிறே; ஸ்ரீகௌஸல்யையார் ஏகபுத்ரையான நான் உம்மைப்பிரிந்து தனியிருக்கமாட்டேன்; கூடப்போருமித்தனை என்று பின்தொடர, திரிந்துபார்த்து, "ஆய்ச்சீ! நீர் என்னைப்பின்தொடருமிடம் தர்மமாகி கிறதோ" என்று முகத்தைப்பார்த்து ஒருவார்த்தை அருளிச்செய்ய, மீட்கைக்காகப்போன இவள் மங்களாசாஸநம்பண்ணி மீண்டாளிறே; இங்ஙனே அவனுடைய பார்வைக்கும் உக்திகளுமிருக்கும்படி. அவன் ஒருவார்த்தை சொன்னால் பின்னை அவன்வழியே போகவேண்டும்படியாயிறே யிருப்பது. ஆக, அவன் நாராயணனாயிருக்கும் இருப்பை யநுஸந்தித்தார்: அந்நாராயணசப் தத்தினுடைய அர்த்தத்தை ஆராயவொன்றிறே நிற்பது, ஒரு வஸ்துவுக்கும் தன்னுடைய பேறு வுக்குத் தனக்கு ப்ரார்த்திக்கைக்கு ப்ராப்தியற்றிருக்கது: இப்படியிருக்கிறவன் தன்பக்க லிலே விசேஷகடாக்ஷம் பண்ணினபடியையும், இந்நாராயணசப்தார்த்தத்துக்கு எல்லையான அவனுடைய சீலகுணத்தையும் அநுஸந்தித்து, "இப்போதே இப்படிசீலவானானவனைக்காண வேணும்" என்னும் அபேக்ஷைபிறக்கது; அதில் தமக்கு அவனிருந்தவிடத்தளவும் சென்று காணலாகாதபடிகிடாகவாயிற்று, அவனுடைய சீலாதிகளிலே ஈடுபட்டுத் துவக்குண்டபடி. இனித் தான், இவர்போனாலும் ஒன்றுசெய்கை மிகையாம்படி சிறுப்பா [illegible] இருந்தான் அவன்; இவர்தாம், ஒன்றுசெய்தநுபவிக்கவல்லவரன்றிக்கேயிருந்தார்: அவனுடைய சீலகுணங் களிலே கால்தாழ்ந்திருக்குமவராகையாலே. இப்படிப்பட்டவனுடைய சீலகுணப்ரகர்ஷத் தையே சொல்லித் தலைக்கட்டுகிறது, இத்திருவாய்மொழி. அன்றிக்கே, சுவர்கள் சிலவற்றிலே ப்ரணவார்த்தத்தை யநுஸந்தித்தார்; அதில் முதலிரண்டுபாட்டாலே அகாரார்த்தத்தை யருளிச்செய்து, மேல் ஒன்றரைப்பாட்டாலே சதுர்த்யர்த்தத்தையும் மத்யமாக்ஷரத்தில் அர்த் தத்தையும் த்ருதீயாக்ஷரத்தில் அர்த்தத்தையும் அருளிச்செய்து, அவைபிரித்தருளிச்செய்யாத தொழிந்தது; சதுர்த்யர்த்தமும் மத்யமாக்ஷரத்திலர்த்தமும் வாச்யமாயல்லது நமையாலே கூடவருளிச்செய்தார்; — மேல்நாலு பாட்டாலே திருநாராயண [illegible] வைத்தருளிச்செய்து, மேலிரண்டுபாட்டாலே இவ்வளவிலே ப்ரணவார்த்தமுமைதாகம்பண் ணுத பாஷ்யகுத்துக்களை கிரஹித்து ஆக, ப்ரணவார்த்தத்தையருளிச்செய்து, மேல், நமச்சப்தார்த்தத்தை "கருமாணிக்கமலை," "நெடுமாற்கடிமை" இரண்டாலும் அருளிச் செய்து,—நமச்சப்தத்துக்கு சாப்தமாகவும் ஆர்த்தமாகவும் இரண்டிறே அர்த்தம். அதில் சாப்த மானவர்த்தத்தைக் கருமாணிக்கமலையிலே யருளிச்செய்து, ஆர்த்தமானவர்த்தத்தை நெடுமாற் கடிமையிலே யருளிச்செய்தது. நமச்சப்தத்துக்குசாப்தமானவர்த்தம் "நான் எனக்குரியேனல் லேன்" என்கையிறே. ஒருகர்மவைகையாலும் ஒருவனுக்கேயாயிருக்கையும், தான் தனக்கு

உரியனன்றிக்கேயிருக்கையுமிறே ஸ்வரூபம்; அத்தையருளிச் செய்தார் கருமாணிக்கமலையிலே; மேல். நாராயணசப்தார்த்தத்தை யருளிச்செய்தார்—கொண்ட பெண்டிராலே; நாராயணசப்தத்துக்கு அர்த்தம் ஸ்வாமித்வ வாத்ஸல்ய உபாயத்வோபேயத்வ வ்யாபகத்வம் இத்யாதியிறே; மேலில், சதுர்த்யர்த்தத்தை யருளிச்செய்தார் பண்டைநாளாலே; சதுர்த்திக்கு அர்த்தம் கைங்கர்யப்ரார்த்தனையிறே. ப்ரணவார்த்தமும், நமச்சப்தார்த்தமும், வ்யாபகத்வமும், அவ்யாபகத்வமும். அல்லாத வ்யாபகமந்த்ரங்களிலுமுண்டு; அதில், தாம் ஆதரித்தருளித்தனத் திருவஷ்டாக்ஷரமென்னுமிடத்தை ஓராயிரத்தாலே யருளிச் செய்கிறார். இது நடுவில் திருவீதிப் பிள்ளை யருளிச்செய்யும்படி.

ஓராயிராமாய் உலகேழளிக்கும்*
பேராயிரங்கொண்டதோர் பீடுடையன்*
காராயின காளநன்மேனியினன்*
நாராயணன் நங்கள்பிரானவனே. (1)

ஒ.—முதற்பாட்டில், "அவன் நாராயணனன்றோ ? நம் அபேக்ஷிதஞ்செய்கை நிச்சிதம்" என்று தந்திருவுள்ளத்தைக் குறித் தருளிச்செய்கிறார். [ஓராயிரமென்று தொடங்கி] - "ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய" இத்யாதி ப்ரகாரத்தாலே ஒரோ திருநாமங்களே நிர்வசநபேதத்தாலே அநேகம்படியாலே எல்லா லோகங்களையும் ரக்ஷிக்கும் திருநாமங்கள் அநேகங்களை உடையனாகையாலே வந்த ஒப்பில்லாத பெருமையை உடையவன். [காராயினவென்று தொடங்கி] - மேகம்போலே கறுத்த திருமேனியை யுடையான். காரைப்போலே கறுத்தழகிய திருமேனியையுடையானென்று ரூபகம். [நாராயணனென்று தொடங்கி] - ப்ரதாநநாமத்தையுடையவனே நமக்கு ரக்ஷகன்.

இ.—முதற்பாட்டில், "அவன் நாராயணனன்றோ ? நம்மபேக்ஷிதஞ்செய்கை நிச்சயம்" என்று திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார். [ஓராயிரமாய்] - ஒரோ திருநாமங்களே ஆயிரம் முகத்தாலே ரக்ஷிக்கவற்றாயிருக்கும், "ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யசஸச்ச்ரிய:" என்று நிர்வசநபேதத்தாலே அநேகம்படி ரக்ஷிக்கவற்றாயிறேயிருப்பது. [உலகு] - ரக்ஷிக்குமிடத்தில் ஒரொருத்தரையன்றிக்கே லோகமாக ரக்ஷிக்கும். [ஏழு] - அதுதன்னிலும் ஒரு லோகமாத்ரமன்றிக்கே ஸர்வலோகங்களையும் ரக்ஷிக்கும். [அளிக்கும்] - அவன் பாபப்ரசுரத்தாலே "க்ஷிபாமி" என்னக்கடவன்; இவை ரக்ஷிக்கையே ஸ்வபாவமாயிருக்கும், [ஆயிரங்கொண்டதோர் பீடுடையன்] - இப்படிப்பட்ட திருநாமங்களை ஆயிரமுடையனாகையாலுண்டான பெருமையையுடையவன்; "தேவோ நாமஸஹஸ்ரவாந்" [காராயின காள நன்மேனியன்] கார்போன்றதென்னுதே, காராயின என்று - ரூபகம். மேகம்போலே கறுத்த திருமேனியையுடையான். [நன்மேனியினன்] - சொன்னது உபமானமன்றென்கை. பெருக்காற்றில் இழிவார் தெப்பங்கொண்டு இழியுமாபோலே ஓர் உபமானம் முன்னாக இழியவேண்டுகையாலே சொன்னவித்தனை; உபமானரஹிதமென்கை. [நாராயணன்] - ஆயிரம் திருநாமங்களையுடையவனென்று சொல்லி வைத்து, 'நாராயணன்' - என்று விசேஷிக்கையாலே, இதுவே ஸ்வரூபநிரூபகமென்கை; ஜ்ஞாநசக்த்யாதிகளுக்கு ஆச்ரயமான ஸ்வரூபத்துக்கு ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகள் நிரூபகமாமாப்போலே. [நங்கள் பிரானவனே] - அவனே நமக்கு ரக்ஷகன். அவதாரணத்தால் தன்பேறாக ரக்ஷிக்குமென்கை. "கூடுதல் வருதல் செய்திடாய்" என்றவிடம் மிகை.

ஈடு.—முதற்பாட்டு. "அவன் நாராயணனன்றோ? நம் அபேக்ஷிதஞ்செய்கை நிச்சிதம்" என்று திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறார்.

[ஓராயிரமாய்] ஒரொரு திருநாமங்களே யாயிரம்முகத்தாலே ரக்ஷிக்கவற்றாயிருக்கும். "ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யசஸச்ச்ரிய:" என்று நிர்வசநபேதத்தாலே அநேகம்படி ரக்ஷிக்கவற்றாயிறேயிருப்பது. [உலகு] ரக்ஷிக்குமிடத்தில், ஒரொருத்தராகவன்றிக்கேலோக

ஆக ரக்ஷிக்கும். [ஏழு] அதுகளெல்லாம் ஒருபோகமாத்ரமன்றிக்கே, ஸர்வலோகங்களையும் ரக்ஷிக்கும். ஆச்ரிதரொருத்தரை ரக்ஷிக்குமதுவன்றிக்கே உலகுக்கு! அங்ஙனன்றென்கை த்தராகிகள். [அளிக்கும்] இவையன்னை பாபங்களைப்பார்த்து *க்ஷிபாமி* என்பதும் ஒரு போதுண்டு அவனுக்கு; அளிக்குமது ஒன்றுமேயாயிற்று, இவற்றுக்கு ஸ்வபாவம். [பேர்] ரக்ஷிக்கைக்கு ஒருபேர்காணும் வேண்டுவது. அப்படிப்பட்ட திருநாமங்களைத்தான் எத்தனை உடையனென்னில்? —[ஆயிரங்கொண்டதோர்பீடுடையன்] *தேவோ நாமஸஹஸ்ரவாந்* என்னு மாபோலே. பல பசுக்களையுடையவனென்னுமாபோலே, ஸர்வாதிசயங்களை விரோதிகள் சேருமதன்னாருங் குறையவுக்குக் கொண்டிருக்குமாபோலே, ஆச்ரிதரக்ஷண சிந்தை உண்ணினை ஸம்பந்நுக்கு, அதுக்கு உபாயமாக ஆயிரந்திருநாமங்களுண்டாயிருக்குமாயிற்று. கோயிலாழ்வார் ஸ்வபுத்ரவியோகத்தாலே பட்டர்ஸ்ரீபாதத்திலே வந்து அன்போடு மெல்லாக் கொற்ற விழுந்து கிடக்க, அவர் அருளிச்செய்தவார்த்தையை நினைப்பது. ஆயிரந்திருநாமத்தை உடையனாகையால் வந்த பெருமையையுடையவன், அவையாம் கரைகட்டாக் காவேரிபோலே பரந்திருக்கால், அவற்றையெல்லாம் ஒருமுகஞ்செய்து அநுபவிக்கைக்கு ஈடான வாசகமுடையனு மிருக்கும். [காரியன காளமேகவடிவினன்] காரென்றேயிருக்கிறதாயிற்று, ரூபகம் மூன்றுகை உடலை, கறுத்திருக்கும் காளமேகம்போலே இருப்பதாய், அதுதானும் பெருக்காற்றிலிழியுமவர் த்ருஷ்டிக்குத் தேடி இழியுமாபோலே ஒன்றைச்சொல்லும்போது ஈரமாய்ச் சொல்லுகையல்லது சொல்லவொண்ணாமைபோலே சொன்னவத்தனைபோக்கு திருமேனியைப்பார்த்தால் உபமான ரஹிதமாயாயிற்று இருப்பது. இப்படியிருக்கிறவனுக்கு ஸ்வரூபம் ஆர் என்னில்? [நாராயணன்] ஸ்வாதந்த்ர்யாதிகளும் குணங்களாயிருக்கச்செய்தே, குணசேகரமான ஆதிகள் ஸ்வரூபநிரூபகமாயிருக்குமிறே: அப்படியே, "பேராயிரங்கொண்டதோர்பீடுடையன்" என்றவ னுக்கு ஆர் என்ன? "நாராயணன்" என்று விசேஷிக்கிறவிடத்தில், 'நாராயணன்', என்கை யாலே நிருபகமாய்ப்புக்கதிறே இது. ஆயிரந்திருநாமங்களைச் சொல்லி, அவற்றிலே மூன்றை ப்ரதானமாக எடுத்தது வ்யாபகமந்த்ரங்களாகையாலே; அவற்றிலே இரண்டை மற்றையவற் றோடொக்கச் சொல்லாப்படியாயிற்று இதுக்கு உண்டான ப்ராதான்யம். "அந்தணர்மாட் டந்திவைத்த மந்திரத்தை" என்றும், "மின் திருவெட்டெழுத்தும் கற்று நான் உற்றதும்" என் றும் "நாராயணாவென்னும் நாமம்" என்றும், "நமோநாராயணம்" என்றும், இவையிறே திரு மங்கையாழ்வார்படி; நம்மாழ்வாரும், "வண்புகழ்நாரணன்" என்று தொடங்கி, திருவாய் மொழி முடியவநுஸந்தித்தது இதுவாயிருக்குமிறே, வேதங்களும், ஆழ்வார்களும், ஆசார் யர்களுமெல்லாம் போனவழி இதுவாயிற்று: நமக்குமெல்லாம் இப்போதும் அவற்றை ஆதரித் தால் ஒருகுற்றமில்லையிறே; இதுதன்னை ருத்ராதிகள் மற்றையார் பரிக்ரஹிக்கை கட்டியிறே நாம் அதுதன்னைத் தவிர்க்கும். நம் ஆசார்யர்கள் போனது போருமிறே [illegible] வேண் டுவது. [கேசவன்தமரானவர்] நமக்கு [illegible] உபகாரகன் அவனே. "கேசவன்தமர் [illegible] டாம்" என்று நம்பெருக்கக்கவேண்டு ப்ராப்திக்கு ப்ராப்யமிலையென்றது அவதாரணத் தால்.

அவனே அகல்ஞாலம் படைத்திடந்தான்*
அவனே அஃதுண்டுமிழ்ந்தான் அளந்தான்*
அவனே அவனும் அவனும் அவனும்*
அவனே மற்றெல்லாமும் அறிந்தனமே. (2)

ஈ.—இரண்டாம்பாட்டு, நாராயணசப்தத்துக்கு அர்த்தத்தை அருளிச்செய்கிறார். முதலடிப இரண்டேவகாரம்-ஸாமாநாதிகரண்யத்தைச் சொல்லுகிறது. [அவனே அவனும் அவனும் அவனும்] ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களும் அவனிட்டவழக்கு. [அவனே மற்றெல்லாமும்]-மற்றுமுண்டான சேதநாசேதநங்களெல்லாம் தத்ரூபமே.

இ—இரண்டாம்பாட்டில், கீழ்ச்சொன்ன நாராயணசப்தத்துக்கு அர்த்த மருளிச்செய்கிறார். அவனே அகல்ஞாலம் படைத்திடந்தான்] - விஸ்த்ருதமான பூமியை ஸ்ருஷ்டித்து, ப்ரளயங்கொண்ட பூமியை மஹாவராஹமாய் எடுத்தானும் அவனே. அவதாரணத்தாலே, ஸ்ருஷ்ட்யாதிகளில் ஸஹகாரி நைரபேக்ஷ்யம் சொல்லுகிறது. ப்ரளயங்கொள்ளாத பூமியை வயிற்றிலே வைத்து வெளிநாடுகாண வுமிழ்ந்து, அபஹ்ருதமான பூமியை எல்லைநடந்து மீட்டுக்கொண்டான் அவனே. இந்த அவதாரணத்தாலே ஆபத்ஸகத்வாதி ரக்ஷகத்வத்திலும் ஸஹகாரிநைரபேக்ஷ்யஞ் சொல்லுகிறது. [அவனேயவனும் அவனும்அவனும்] - ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களுடைய ஸ்வரூப ஸ்த்திதி ப்ரவ்ருத்திகள் அவனிட்டவழக்கு. "ஸப்ரஹ்ம ஸஶிவஸ் ஸேந்த்ர:" "ஸ்ருஷ்டிஸ்த்தித்யந்த" இத்யாதி என்கிற ப்ரமாணப்ரஸித்தியாலே சொல்லுகிறார். [அவனே மற்றெல்லாமும்] - ப்ரதாநரோடு அப்ரதாநரோடு வாசியற ஸகலசேதநாசேதநங்களும் ததீநமே. [அறிந்தனமே] - ப்ரஹ்மாதிகள், "ஈச்வரோஹம்" என்றிருக்கையும் அவர்களை ஆச்ரயிப்பாருமாய்ச் செல்லாநிற்க நீர் 'அவனே' என்கிறது என்கொண்டென்னில் ?—மயர்வறமதிநலமருளப் பெற்றதாலே அறிந்தேனென்கை.

ஈடு—இரண்டாம்பாட்டு, கீழ் ப்ரஸ்துதமான நாராயணசப்தத்துக்கு அர்த்தத்தை யருளிச் செய்கிறார்.

[அவனே அகல்ஞாலம் படைத்திடந்தான்] விஸ்த்ருதமான பூமியையுண்டாக்கி, ப்ரளயங் கொண்ட பூமியை மஹாவராஹமாயெடுத்தானும் அவனே. அவதாரணத்தால் ஸ்ருஷ்ட்யாதிகளில் ஸஹகாரிநைரபேக்ஷ்யஞ் சொல்லுகிறது. [அவனே இத்யாதி] ப்ரளயங்கொள்ளாதபடி பூமியையெடுத்து வயிற்றிலே வைத்து, வெளிநாடுகாணவுமிழ்ந்து, மஹாபலியாலே யபஹ்ருதமாக எல்லைநடந்து மீட்டுக்கொண்டான் அவனே. இந்த அவதாரணத்தால் ஆபத்ஸகத்வாதி ரக்ஷகத்வத்திலும் ஸஹகாரிநைரபேக்ஷ்யஞ் சொல்லுகிறது. [அவனேயித்யாதி] ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளுடைய ஸ்வரூபஸ்த்திதிப்ரவ்ருத்திகள் அவனிட்டவழக்கு. *ஸ ப்ரஹ்ம ஸ சிவஸ் ஸேந்த்ர:* என்கிற ப்ரஸித்தியைப்பற்றச் சொல்லுகிறார். "ஸ:, ஸ:, ஸ:," என்றே போரு கிறார். [அவனே மற்றெல்லாமும்] *ஸோக்ஷர: பரம:ஸ்வராட்* என்கிறபடியே, ப்ரதாநரோடு அப்ரதாநரோடுவாசியற ஸகல சேதநாசேதநங்களும் ததீநமே. [அறிந்தனமே] ப்ரஹ்மாதிகள் *ஈச்வரோஹம்* என்றிருக்கையும், அவர்களை யாச்ரயிப்பாருமாய்ச் செல்லாநிற்க, நீ 'அவனே' என்கிறது என்கொண்டு என்னில்? மயர்வறமதிநலமருளப் பெற்றதாலே யறிந்தகையாலே. ஆக இரண்டுபாட்டாலும் திருமந்த்ரத்தையும், அதில் அர்த்தத்தையும் அநுஸந்தித்தாராயின்றார்.

அறிந்தனவேத அரும்பொருள் நூல்கள்*
அறிந்தனகொள்க அரும்பொருளாதல்*
அறிந்தனரெல்லாம் அரியைவணங்கி*
அறிந்தனர் நோய்களறுக்கும்மருந்தே. (3)

ஓ—மூன்றாம்பாட்டில், வேதங்களுக்கும் ருஷிகளுக்கும் அறிய நிலமல்லாத எம்பெருமான் தன்னை எனக்குப் பூர்ணமாக அறிவித்தானென்று ப்ரீதராகிறார். [அறிந்தன வேதமென்று தொடங்கி] - அறிந்தனவாயிருக்கிற துர்ஜ்ஞேயார்த்தப்ரகாசகமான வேதங்கள் ஸர்வேச்வரனை துர்ஜ்ஞேயனென்று அறிந்தன. [அறிந்தனரென்று தொடங்கி] - மற்றறிந்தாராயிருக்கிற ருஷிகளும் ஸர்வாத்மாநுபவஸம்பந்தநென்று அறிந்தார்கள்.

இ—மூன்றாம்பாட்டில், வேதங்களும் ருஷிகளும் அறிந்த அளவன்றிக்கே, தன்னை எனக்கே பூர்ணமாக அறிவித்தானென்று ப்ரீதராகிறார். [அறிந்தனவேத அரும்பொருள் நூல்கள்] - துர்ஜ்ஞேயார்த்தத்தை யறிந்தனவாயிருக்கிற வேதங்களாகிற சாஸ்த்ரங்கள் என்னுதல்; அறிந்தனவாயிருக்கிற வேதங்

களில் ஜ்ஞேயார்த்தங்களை விஷ்கர்ஷித்துத்தரும் ப்ரஹ்மஸூத்ரேதிஹாஸ புராணாதிகள் என்றுதல். [அறிந்தனகொள்க வரும் பொருளாதல்] - ''ஜ்ஞேயன்'' என்னும் இவ்வளவு அறிந்தனவாகக்கொள்ள அமையும், 'யதோ வாசோ நிவர்த்தந்தே', ''யஸ்யாமதம் தஸ்யமதம்'', ''அவிஜ்ஞாதம் விஜாநதாம்'' என்னும் இவ்வளவே அறிந்தது. [அறிந்தனரெல்லாம்] - அறிந்தாராயிருக்கிற பராசர வ்யாஸ வால்மீகி ப்ரப்ருதி ருஷிகளும். [அரியைவணங்கி] - ஸர்வது:க்க நிவர்த்தகனை வணங்கி - ஆச்ரயித்து. [அறிந்தனர் நோய்களறுக்கும் மருந்தே] - ''ஸம்ஸார துரிதபேஷஜம்'' என்னும் இவ்வளவு அறிந்தார்கள்; ''ஸம்ஸாரஸர்ப்பஸந்தஷ்டநஷ்டசேஷ்டைகபேஷஜம்'', அவனுடைய போக்யதையில் இழிந்திலர்கள். அவனுடைய நிரபேக்ஷோபாயபாவத்தில் இழிந்திலர்கள்

௩௫.—மூன்றாம்பாட்டு. வேதங்களும், வேதார்த்தவித்துக்களான ருஷிகளும் அறிந்தவளவன்றிக்கே, தன்னை எனக்குப் பூர்ணமாக அறிவித்தானென்று ப்ரீதராகிறார்.

[அறிந்தனவேத] ஜ்ஞேயார்த்தத்தை பரிச்சேதாவாயிருக்கிற வேதங்களாகிற சாஸ்த்ரங்களென்றுதல்; அறிந்தனவாயிருக்கிற வேதங்களில் ஜ்ஞேயார்த்தத்தை விஷ்கர்ஷித்துத்தரும்ப்ரஹ்மஸூத்ரம், இதிஹாஸபுராணாதிகளென்றுதல். [அறிந்தன கொள்க அரும்பொருளாதல்] ''ஜ்ஞேயன்'' என்னும் இவ்வளவு அறிந்தனவாகக்கொள்ளவமையும், *யதோ வாசோ நிவர்த்தந்தே* *யஸ்யாமதம் தஸ்யமதம்,* *அவிஜ்ஞாதம் விஜாநதாம்* என்னும் இவ்வளவு அறிந்தது. [அறிந்தனரெல்லாம்] அறிந்தாராயிருக்கிற பராசர வ்யாஸ வால்மீகி ப்ரப்ருதி ருஷிகளும். [அரியை வணங்கி] ஸர்வது:க்கநிவர்த்தகனை, வணங்கி-ஆச்ரயித்து. [அறிந்தனர் நோய்களறுக்கும் மருந்தே] *ஸம்ஸாரதுரிதபேஷஜம்* என்னுமிவ்வளவு அறிந்தார்கள்; *ஸம்ஸாரஸர்ப்பஸந்தஷ்டநஷ்டசேஷ்டைகபேஷஜம்*. அவனுடைய போக்யதையில் இழிந்திலர்கள்; அவனுடைய நிரபேக்ஷோபாயபாவத்தி லிழிந்திலர்கள்.

மருந்தே நங்கள்போகமகிழ்ச்சிக்கென்று*
பெருந்தேவர்குழாங்கள் பிதற்றும்பிரான்*
கருந்தேவனெம்மான் கண்ணன்விண்ணுலகம்*
தருந்தேவனைச் சோரேல்கண்டாய்மனமே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், அமரருமமரர்களுக்குங்கூட ப்ரார்த்தனீயனாயிருந்துவைத்து க்ருஷ்ணனாய்வந்து திருவவதாரம் பண்ணியருளி என்னைப்புகுரவிட்டு விண்ணுலகம் தருவானாயிருக்கிற ஸர்வேச்வரனை விடாதேகொள்! என்று திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார். [மருந்தேயென்று இப்பாட்டுக்கு] - உன்னுடைய அநுபவத்தாலே எங்களுக்கு வரும் ஆநந்தத்துக்கு வர்த்தகனானவனேயென்று அமரருமமரர்களுடைய ஸமூஹங்கள் அக்ரமமாகக் கூப்பிடும்படி அவர்களுக்குத் தன்னை புஜிக்கக் கொடுத்தவனை கருந்தேவன் - கறுத்த திருநிறத்தையுடையனாய்க் கொண்டு திப்யமானவன்.

இ.—ஐஞ்சாம்பாட்டில், நித்யஸூரிகளுக்கு போக்யனாய்வைத்து க்ருஷ்ணனாய்வந்து அவதரித்து நம்மையும் அவர்கள்நடுவே வைப்பானாயிருக்கிறவனை விடாதேகொள் என்று திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்கிறார். [மருந்தே நங்கள் போகமகிழ்ச்சிக்கு] - உன்னுடைய அநுபவத்தால் எங்களுக்கு வரும் ஆநந்தத்துக்கு வர்த்தகனானவனே! இப்படிச் சொல்லுகிறவர்கள் ஆரென்னில்?—[பெருந்தேவர்] - அஸங்குசித ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகள். [குழாங்கள்] - அவர்கள், கிண்ணகத்தில் இழிவாரைப்போலே திரள்திரளாகஆயிற்று இழிவது. [பிதற்றும்] - ஜ்ஞானஸங்கோசமின்றியேயிருக்கச்செய்தே ப்ரேமபரவசராய் அக்ரமமாகக் கூப்பிடாநிற்பர்கள். [பிரான்] - அவர்களுக்குத் தன்னை யநுபவிக்கக் கொடுத்த உபகாரகன். [கருந்தேவன்] - காளமேகநிபச்யாமமாய் திவ்யமான வடிவையுடையவன். [எம்மான்] - அவ்வடிவைக் காட்டி யென்னை அநந்யார்ஹனாக்கினவன். நித்யஸூரிகளுக்குப் படிவிடும் வடிவைக்கிடீர் எனக்கு உபகரித்தது! [கண்ணன்] - தன்னிலிருந்துகொண்டு உபகரிக்கையன்றியே அவதரித்துவந்து உபகரித்

தவனை. [விண்ணுலகம் தருந்தேவனை] - பரமபதத்தைத் தருவானுமிருக்கிற ஸர்வேச்வரனை. [சோரேல் கண்டாய்மனமே] . நெஞ்சே! விடாதேகிடாய்; அவனுடைய உபகாரகத்வத்துக்கு நீ வெறுக்கப்பண்ணாதே கிடாய்! அவனுடைய வைலக்ஷண்யத்தை புத்திபண்ணாதே "ஸுலபன்" என்னுக் காற்கடைக்கொள்ளாதே கிடாய்!

நாலு.—நாலாம்பாட்டு. நித்யஸூரிகளுக்கு போக்யனுமாயிருந்து, திருவவதாரங்களைச் செய்து அவதரித்து நம்மையும் அவர்களோடொக்க அடிமைகொள்ளுகிறவனை விடாதே கிடாய்! என்று திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்கிறார்.

[பெருந்தேவர்கள் போரமிறைஞ்சிச் செப்புமு] உன்னுடைய ஆச்ரயணத்தால் வரக்கடவதான ஆனந்தத்துக்கு வர்த்தகனானவனை! இப்படி சொல்லுகிறவர்கள் தான் ஆரென்னில்? [பெருந்தேவர்] அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகள். [குழாங்கள்] அவர்கள், திரள்திரளாக நின்று இறைஞ்சுவது. [செப்புமு] அவர்களைப் பரிஜனமாக்கிக் கொண்டிருக்கும். [பிரான்] அவர்களுக்குத் தன்னை உபகரித்துக் கொடுக்கும் உபகாரகன். [திருந்தேவன்] தானும் ப்ரபத்யாதனாய், நித்யமான வடிவையுடையவன். [எம்மான்] அவ்வடிவைக்காட்டி என்னை அடிமைகொண்டவன். நித்ய ஸூரிகளுக்குப் பாவிக்கும் வடிவைக்கிடக்கச் செய்து உபகரித்தது! [தன்னைக் கொடுத்து] தன்னைக்கு ஆளாய் நின்று உபகரிக்கையன்றிக்கே, அவதரித்துவந்து உபகரிக்குமவர். [விண்ணுலகம் தரும்தேவனை] பரமபதத்தைத் தருவானுமிருக்கிற ஸர்வேச்வரனை. [சோரேல்கண்டாய்மனமே] அவனை உபேக்ஷிக்கப்பண்ணாதேகிடாய், நெஞ்சே! இவன் விடுமதுபோலத்து அவனைக் குறித்துப் போவதே காணும். அவன் பண்ணின உபகாரங்களை நினைத்தாயாகில், அவனுடைய வைலக்ஷண்யத்தைப் புத்திபண்ணாதே, "ஸுலபன்" என்னுக் காற்கடைக்கொள்ளாதேகிடாய்.

மனமே உன்னை வல்வினையேன் இரந்து
கனமே சொல்லினேன் இது சோரேல்கண்டாய்*
புனமேவிய பூந்தண் துழாயலங்கல்*
இனமேதுமிலானை யடைவதுமே. (5)

ஆறு.—அஞ்சாம்பாட்டில், நிரதிசயபோக்யமான எம்பெருமானை விடாதே கிடா! என்று திருவுள்ளத்தை ஆதரதிசயத்தாலே மிகவும் ப்ரார்த்திக்கிறார். [மனமேயென்று தொடங்கி] - நெஞ்சே! உன்னை என் ஆற்றாமையாலே ப்ரார்த்தித்து த்ருடமாகச் சொன்னேன். இத்தை அல்ப்பம் சோரவிடா தொழிய வேணும். [புனமேவியவென்று தொடங்கி] - செப்பமுதுள்ள நிரதிசயபோக்யமுமுத் தன்னோடொப்பார் இன்றிக்கேயிருக்கிறவனை ஆச்ரயி. அர்த்தித்ததுதான் என்னென்னில்? எம்பெருமானை ஆச்ரயிக்கையென்றுமாம்.

இ.—அஞ்சாம்பாட்டில், "நிரதிசயபோக்யனானவனை விடாதேகிடாய்" என்று திரியட்டும் திருவுள்ளத்தை அர்த்திக்கிறார். [மனமே உன்னை] - "இயற்றுவாய் எம்மொடுநீகூடி" என்கிறபடியே முற்பட்டுநிற்கிற உன்னையிறே நான் இரக்கிறது. [வல்வினையேன்] - பகவத்விஷயத்தில் க்ரமப்ராப்திபற்றாத படியான பாபத்தைப் பண்ணினேன். உன்னையிரக்கவேண்டி இரக்கிறேனல்லேன். என்சாபலாதிசயத் தாலே இரக்கிறேனித்தனை. [இரந்து கனமேசொல்லினேன்] - உன்னைக் காற்பிடித்து த்ருடமாகச் சொன்னேன். [இது சோரேல்கண்டாய்] - நான் "தவிர்" என்றாலும் நீ விடப்பாராதேகிடாய். எத்தை விடாதொழியச் சொல்லுகிறதென்னில்? [புனமேவிய இத்யாதி] - நிரதிசய போக்யனானவனை ஆச்ரயிக்கையை. [புனமேவிய] - புனத்திலே மேவியிருப்பதான அழகிய திருத்துழாய்மாலையை உடையவனாகை யாலே ஒப்பின்றிக்கேயிருக்கிறவனை. அந்தோள்மாலையைப்பற்ற அவனைக்கிறே ஸர்வாதிகனாவது. நான் நிஷேதிக்கிலும் மேல் விழவேண்டியன்றோ விஷயமிருக்கிறது. 'அடைவது' என்று க்ரியையாதல்; சோரேல் கண்டாயென்று - க்ரியையாதல்.

ஈடு—அஞ்சாம்பாட்டு. நெஞ்சே! உனக்குச் செல்லாமையாகத் தடாய் என்கிறார் - கீழ்; அவ்வார்த்தை தன்னை ஓலக்கவார்த்தையாக நினைத்திராதே கிடாய் என்கிறார் - இதில்.

[முனியோடுமின்னே] போகத்தோடு தாவாம் மூற்பட்டுநிற்கிற உன்னையன்றோ, பித்பாடனையச் சொல்லுமாபோலே இருக்க நான் சொல்லுகிறது? பகவத் ப்ராவண்யம் உனக்கு ஸ்வாபாவிகமாயிருக்க, என் செல்லாமையாலே சொல்லுகிறேனத்தனையிறே. "முற்றும் நெஞ்சே இயற்றுவாய் எம்மொடு நீ கூடி" என்று எனக்கும் காற்கட்டவேண்டும்படி பரபக்தியிலே மூற்பட்டு நிற்கிற உன்னை. [வல்வினையேன்] பகவத்விஷயத்தில் க்ரமப்ராப்தி பற்றாதபடியான பாபத்தைப் பண்ணினேன். உன்னை இரக்கவேண்டி இரக்கிறேனல்லேன்; என் சாபலாதிசயத்தாலே இரக்கிறேனித்தனை. [இரந்து கனமே சொல்லினேன்] உன்னைக் கால்பிடித்துத் திடமாகச்சொன்னேன். இரந்துசொல்லுகைக்கு மணக்கால்நம்பியோ டொப்பர்களும். [இதுசோரேல் கண்டாய்] இன்னும் நானே "பகவத்ப்ராவண்யமாகாது; இத்தைத் தவிரவேணும்" என்று சொன்னாலும், நீ இத்தைநெகிழவிடாதேகிடாய்! கனம்-பொன். உனக்குப்பரமார்த்தத்தைச் சொன்னேன் என்கை, "சாபாக்கியானை" இத்யாதி. [இதுசோரேல்] 'எத்தைத்தான் நீர் இப்படி சொல்லுகிறது?' என்ன, [புனமித்யாதி]. நிரதிசயபோக்யனானவனை ஆச்ரயிக்கையை. புனத்திலே மேவியிருப்பதான அழகியதிருத்துழாய்மாலையை யுடையவனுகையாலே ஒப்பின்றிக்கேயிருக்கிறவனை. அத்தோள்மாலையையுடையவனாகையிறே ஸர்வாதிகனுகையாவது. ஒருநிருமனத்திருநாளின்றாக இப்பாட்டை அருளிச்செய்து, மூன்றாம் மையார் சக்கரத்துக்குப் புறப்பட்டருளினபடி திருவுள்ளத்திலே பட்டு, "புனமேவிய பூந்தண்துழாயலங்கல் இனமே தாமிலாருமாகையாலே தாம் சேர்ந்துபுறப்பட்டருளினபடியிறே" என்று அருளிச்செய்தார். அடைவது சொல்லினேன்; இதுசோரேல்கண்டாய் என்று க்ரியையாகவுமாம்; எத்தைநீர்சொல்லுகிற தென்ன?—இனமேதுமிலானை யடைவது என்று க்ரியையாகவுமாம்.

அடைவதும் அணியார்மலர்மங்கைதோள்*
மிடைவதும் அசுரர்க்குவெம்போர்களே*
கடைவதுங் கடலுளமுதம்*என்மனம்
உடைவதும் அவற்கேஒருங்காகவே. (6)

ஒ—ஆறும்பாட்டில், தாம் இப்படி அர்த்திக்குமாட்டில் தம்முடைய திருவுள்ளம் எம்பெருமானுடைய சேஷ்டிதங்களை அநுஸந்தித்து மிகவும் சிதிலமாகாநின்றதென்று ப்ரீதராகிறார். [அடைவதுமென்று தொடங்கி] - பெரிய பிராட்டியாருடைய மிகவும் அழகிதான திருத்தோளை ஸம்ச்லேஷிப்பதும் ஆச்ரிதவிரோதிகளான அஸுரரை முடிக்கும் வீரருகளை நிந்தியாநிற்பதும் ஆச்ரிதார்த்தமான மஹாப்ரவ்ருத்தி பண்ணியருளாநிற்பதும். [என்மனமென்று தொடங்கி]-என்னுடைய ஹ்ருதயம் ஒருமைப்பட உடைகுலைப்படாநிற்பதும் ஏவம்வித சேஷ்டிதங்களை யுடையவனுக்கே.

இ—ஆறும்பாட்டில், தம்முடைய உபதேசம் பலித்து இவ்விஷயத்திலே திருவுள்ளம் சிதிலமாகாநின்றதென்று ப்ரீதராகிறார். [அடைவதும் அணியார் மலர்மங்கைதோள்] - மிகவும் அழகிதான பிராட்டி திருத்தோளோடே ஸம்ச்லேஷிப்பதும்; அவன் தான்வைச்வரூப்யங் கொண்டிருந்தாலும் தோளழகுக்கு அகப்படாதே போகமாட்டான். [மிடைவதும் அசுரர்க்கு வெம்போர்களே] - அவள்தோளை யணைக்கைக்கிடும் பச்சை. "பர்த்தாரம் பரிஷஸ்வஜே" என்றிறே அவள் அணைப்பது. ஆச்ரிதவிரோதிகளுக்கு வெம்போர்களை நெருங்கப்பண்ணுவதும் என்னுதல்; அவர்களை முடிக்கும் வீரருகளை நிந்தியாநிற்பதென்னுதல். [கடைவதுங்கடலுளமுதம்]-ப்ரயோஜநாந்தரபரருடைய ப்ரயோஜநத்துக்காகக் கடைவதுமென்னுதல், பிராட்டியைப் பெறுகைக்கு வ்யாபரிக்கும்படி சொல்லுகிறதென்னுதல். அவளை ஸம்ச்லேஷிக்கும்படி சொல்லிற்று; அதுக்கு இடும்பச்சை சொல்லிற்று; அவளைப் பெறுகைக்கு யத்நம்பண்ணும்படி சொல்லிற்று. இவை இவர் திருவுள்ளம் உடைகுலைப்படுகைக்கு ஹேதுக்கள். என்னுடைய மநஸ்ஸு ஒருமைப்பட உடைகுலைப்படாநிற்பதும் ஏவம்வித சேஷ்டிதங்களை யுடையவனுக்கே.

ஈடு.—ஆறாம்பாட்டு. தம்முடைய உபதேசம் கேட்டு, இவ்விஷயத்திலே திருவுள்ளம் ஒழிவற்றாகாநின்றதென்று ப்ரீதராகிறார்.

[அடையவும் அணியார் மலர்மங்கைதோளன்] மிகவும் அழகிதான பெரியபிராட்டியார் திருத்தோளோடே அணைக்கவேற்பதும். அவன்தான் சைதந்யஸ்வரூபங்கொண்டிருக்கிறதும் தோற்றுக்கு அவ்வருகு போகமாட்டான். [அணியார் மலர்மங்கை] "மார்வத்துமாலை" என்கிறபடியே நிரூபகத்தெல்லாம் தமக்கு ஆபரணமாம்படி பெரும்படியாக இருப்பாளாய், போக்யதையால் குறைவற்றிருக்கிறவள் தோளோடேயாயிற்றணைவது. [இடையவும் அசுரர்க்கு வெம் போர்களே] அவன் தோள்களுக்கு இடும் பச்சை. "பர்த்தாரம் பரிஷஸ்வஜே" என்கிறபடியே அவள் அணைப்பது. ஆச்ரிதவிரோதிகளுக்கு வெம்போர்களை தொடுக்கப்பண்ணுவது மென்னுதல்; அவர்களை முடிக்கும் விரகு சிந்தையாயிருக்குமென்னுதல். [கடையவும் கடையவுமருங்கும்] ப்ரயோஜநாந்தரபருடைய ப்ரயோஜநத்துக்காகக் கடைவதுமென்னுதல், பாட்டுவைப்பெறு கைக்கு வ்யாபரிக்கும்படி சொல்லுகிறதென்னுதல். அவனை அணைக்கவேற்கும்படி சொல்லுகிறது. அதுக்கிடும் பச்சைசொல்லிற்று. அவனைப்பெறுகைக்கு பக்கம்பண்ணும்படி சொல்லுகிறது. இவர்திருவுள்ளம் உடைகுலைப்பட்டுக்கைக்கு நெருக்குண்ணும்படி. [என்மனமிக்கானது] - என்னுடைய மநஸ்ஸு ஒருமைப்படட உடைகுலைப்படாநிற்பதும் ஆச்ரிதரான செஞ்சுதல்சேர்பவரா வனுக்கு. அவன் பரிக்கடுக்கடைய இவர் மனம்பட்ட துடைப்பத்தது. விருக்கப்பிறப் பார், கோளைகளாயிருப்பாரை த்ரவ்யப்பமாக நினைத்தால், முட்டுபமிக்கராயிருப்பாரை நெருக்கி வாங்கவே இவர்கள் தாங்களே கொடுசென்று கொடுப்பார்களிறே; அதுபோல், மஹாத் தத்துவமான கடலை புலக்கையிட்டுக் கடைந்து நெருக்கி அதின் ஸாரமானவை வாங்க, இவருடைய திருவுள்ள முடைபட்டுக்கொண்டிற்று.

ஆகம்சேர் நரசிங்கமதாகி* ஓர்
ஆகம் வள்ளுகிரால் பிளந்தானுறை*
மாகவைகுந்தங் காண்பதற்கு* என்மனம்
ஏகமெண்ணும் இராப்பகலின்றியே. (7)

ஏ.—ஏழாம்பாட்டில், ஏவம்விதசீலகுணகனானவன் நிரந்தரவாஸம்பண்ணுகிற, ஒருவர்க்கும் எட்டவொண்ணாத திருநாட்டிலே சென்று காணவேணும் என்று ஆசைப்படாநின்றது என்னெஞ்சு. இதினுடைய சாபலத்துக்கு நான் என்செய்ய? என்கிறார். [ஆகம்சேர் நரசிங்கமென்று தொடங்கி] - நரத்வஸிம்ஹத்வங்கள் பரஸ்பரம் ஸங்கதமாம்படி அத்யந்த விலக்ஷணமான நரஸிம்ஹமாய் மிகவும் க்ரூரமான ஹிரண்யனுடைய உடம்பைக் கூரிய உகிராலே பிளந்தவன் நிரந்தரவாஸம் பண்ணுகிற பரமாகாசமான ஸ்ரீவைகுண்டத்தைக் காணவேணுமென்று, [என்மனம் ஏகம் எண்ணும் இராப்பகலின்றியே] - என்னுடைய ஹ்ருதயமானது நிரந்தரமாக எண்ணாநின்றது.

ஈ.—ஏழாம்பாட்டில், அவன் நித்யவாஸம்பண்ணுகிற பரமபதத்தைச் சென்று காணவேணு மென்னாநின்றது என்னெஞ்சு என்கிறார். [ஆகம்சேர் இத்யாதி] - நரத்வஸிம்ஹத்வங்கள் சேர்ப்பாலுங் கண்ட சர்க்கரையும்போலே சேர்த்தியான நரஸிம்ஹமாய என்னுதல், நரஸிம்ஹத்தினுடையவடிவு இவர் நெஞ்சிலே சேர்ந்தபடியென்னுதல். [ஓராகம்] - ஹிரண்யனுடைய அத்விதீயமான முரட்டுடம்பு. [வள்ளுகிர்] - கூரியவுகிர், வளைந்தவுகிர் என்னவுமாம். அப்படி நின்ற சீலகுணவான் நித்யவாஸம் பண்ணுகிற பரமபதத்தைக் காணவேணுமென்று. [என் மனம் ஏகம் எண்ணும்] - என்மனஸ்ஸு ஒருபடிப்பட நினையாநின்றது. சேதநர்க்கு இரா ஒருகார்யமும் பகல் ஒருகார்யமுமாயிருக்குமிறே; இவர்க்கு அஹோராத்ர விபாகமற நிதுவேயாய்ச் செல்லாநின்றது. "ஸமாத்வாதச தத்ராஹம் ராகவஸ்யநிவேசநே, புஞ்ஜாநமாநுஷான் போகான் ஸர்வகாமஸம்ருத்திநீ" என்று பிராட்டி திருவயோத்யையை நினைத்தாப்போலேயாயிற்று இவர்திருவுள்ளத்துக்குப் பரமபதம் ஸ்வதேசமாயிருக்கிறபடி.

ஈடு.—ஏழாம்பாட்டு. அவன் நித்யவாஸம் பண்ணும் பரமபதத்தைச்சென்று காணவேணும் என்னாநின்றது என்னெஞ்சு என்கிறார்.

[ஆகம்சேர் இத்யாதி] நரத்வஸிம்ஹத்வங்கள் சேர்ப்பாலுங்கண்டசர்க்கரையும்போலே ஸங்கடிதமான நரஸிம்ஹமாய் என்னுதல்; நரஸிம்ஹத்தினுடைய வடிவு இவர்நெஞ்சிலே சேர்ந்தபடியென்னுதல்; *ஸ்மரந் நாராயணம் என்கிறபடியே மறக்கவொண்ணாதபடி திருவுள்ளத்திலே சேர்க்கபடியைச் சொல்லுகிறதல்; இரண்டு வடிவையுஞ் சேர்த்துக் கொடுத்து தோன்றினபோது இவர்நெஞ்சுக்கு இரையதாய்ச் சேர்ந்திருந்தபடியைச் சொல்லுதல். [ஆகம்] அத்விதீயமான முருட்டுடம்பு. [வள்ளுகிரால்] கூரிய நகம்; வளைந்ததுமென்னுமாம். [பிளந்தானுறை] அநாயாஸேன கிழித்துப்போகட்டவன் நித்யவாஸம்பண்ணுகிற. [மாகவைகுந்தம்] - அக்ஷரஸம்ஹம் வர்த்திக்கிற முழுஞ்சு காணவாயிற்று ஆசைப்படுகிறது. *பரமாகாசம்*, என்னக்கடவதிறே. என்னுடைய ஹ்ருதயமானது, எப்போதுமொக்க உச்சி வீடுவிடாதே இத்தையே மநோரதியாநின்றது. [இராப்பகலின்றியே] இரா ஒரு கார்யமும் பகல் ஒரு கார்யமுமாயிறே நாட்டார்க்கு இருப்பது; இவர்க்கு எல்லாக்காலத்திலும் இதுவேயாயிற்று; *ஸமஸ்தாவஸ்தாஸ்வபி ராகவஸ்ய நிவேசநே* என்று பிராட்டி திருவயோத்தியையைச் சிந்தித்தாப்போலேயாயிற்று, இவர் திருவுள்ளத்துக்குப் பரமபதம் ஸவிஷயமாயிருக்கிறபடி.

இன்றிப்போக இருவினையுங்கெடுத்து*
ஒன்றியாக்கைபுகாமை உய்யக்கொள்வான்*
நின்றவேங்கடம் நீணிலத்துள்ளது*
சென்றுதேவர்கள் கைதொழுவார்களே. (8)

அ.—எட்டாம்பாட்டில், தன்னைக்காணவேண்டியிருப்பார்க்குத் திருநாடு முட்டப் போகவேண்டாதபடி யணித்தாகத் திருமலையிலேவந்து நின்றருளினபடியை அநுஸந்தித்து, கால்நடைதந்து அவ்வளவும் போகவல்லவர்களுடைய பாக்யவத்தையைச் சொல்லாநின்றுகொண்டு, தம்முடைய பலஹாநியை ஆவிஷ்கரிக்கிறார். [இன்றிப் போகவென்று தொடங்கி] - தன்னை ஆச்ரயித்தாருடைய புண்யபாபரூபகர்மங்களை நிச்சேஷமாகப் போக்கிப் பின்னை ப்ரக்ருதியில் ஸம்பந்தமியாதபடி பண்ணி ரக்ஷித்தருளும் ஸ்வபாவனானவன் நின்றருளும் திருமலை ஸ்வஸம்பந்தத்தாலே ச்லாக்யமான பூமியது. [சென்றென்று தொடங்கி] - அவ்வளவும் போய்த் தொழுமிடுக்குடையார் பாக்யவான்கள்.

இ.—எட்டாம்பாட்டில், தன்னைக் காண்கைக்குப் பரமபதத்துக்குப் போகவேண்டாதபடி திருமலையிலே வந்து நின்றருளினபடியை யநுஸந்தித்து தம் பலஹாநியாலே தமக்குத் திருமலையோடு பரமபதத்தோடு வாசியற்றதென்கிறார். [இன்றிப்போக இருவினையுங்கெடுத்து] - புண்யபாபங்களை இன்றிப்போம்படி ஸவாஸநமாகப் போம்படிபண்ணி. இத்தலையாலே போக்கும்போதிறே சேஷிக்கப் போவது. [ஒன்றியாக்கை புகாமை] - அசித்தோடே சேர்ந்து கர்மகார்யமான சரீரப்ரவேசம்பண்ணாதபடி. [உய்யக்கொள்வான் நின்றவேங்கடம்] - "உஜ்ஜீவிப்பான்" என்கிறபடியே ஸ்வேச்சையாலே அவஸரப்ரதீக்ஷனாய் நின்ற திருமலை. [நீள்நிலத்துள்ளது] - ஸ்வஸம்பந்தத்தாலே ச்லாக்யமான பூமியிலுள்ளது. [சென்று தேவர்கள் கைதொழுவார்களே] - அவ்வளவு சென்று தொழமிடுக்குடையார், "நதே மநுஷ்யா தேவாஸ்தே" என்கிறபடியே பாக்யவான்களான தேவர்கள்.

ஈடு.—எட்டாம்பாட்டு. இச்சரீரஸம்பந்தமற்றால் போய் அநுபவிக்கும் பரமபதம் வேணுமோ? இச்சரீரத்தோடே யநுபவிக்கத் திருமலை பூமியதன்றோ? ஆனாலும், நமக்குத் திருமலையோடு பரமபதத்தோடு வாசியற்றதே! என்கிறார்.

[இன்றிப்போகஇருவினையுங்கெடுத்து] - புண்யபாபரூப கர்மங்களானவை, இன்றிப்போம்படி - ஸவாஸநமாகப் போம்படி பண்ணி. தானே போக்கிக்கொள்ளப் பார்க்கு

மன்றிறே சிறிது இடக்கப்போவது. [ஒன்றியிந்யாதி] - பின்னையும் ருசிவாஸனைகிடக்கில், அசித்தத்த்வத்தோடே போய்க் கலசி, ஸர்ப்ரவேசாபன்னனீ, அத்தால்வரும் க்லேசம் அநுபவிக்க வேணுமிறே; அது செய்யாதே. [உய்யக்கொள்வான் இத்யாதி] - "உய்ரனிப்பான்" என்கிறபடியே, ஸர்வரக்ஷணார்த்தமாக அவஸரப்ரதீக்ஷனாய்க்கொண்டு நிற்கிற திருமலை. [நின்ற வித்துள்ளது] - திருமலையை யுடைத்தானகபாலே ச்லாக்யமான பூமியிலுள்ளது திருமலை, அத்தால் பெற்றதென்? [சென்று இத்யாதி] - அவ்வளவு கால்நடைதந்து போகவல்லார் பாக்யாதிகரிறே; "ந தே மநுஷ்யா தேவாஸ் தே" என்னுமாபோலே, அவனுடைய சீலாதிகுணத்தை யநுஸந்தித்துச் சொல்லுகிறார். ப்ரேமாந்தர்க்கு அவ்விடத்தோடு இவ்விடத்தோடு வாசியற்றிறே, எட்டாமைக்கு.

தொழுதுமாமலர் நீர்சுடர் தூபங்கொண்டு*
எழுதுமென்னுமிது மிகையாதலின்*
பழுதில்தொல்புகழ்ப் பாம்பணைப்பள்ளியாய்*
தழுவுமாறறியேன் உனதாள்களே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ஏதேனும் ஒருபடி உன்னுடைய திருவடிகளிலே வந்தேனேயாகிலும் "அர்க்யத் பூர்ணதபாம்கும்பாம்" என்னும்படியாலே ஸமாச்ரயணோந்முகர்களான அவர்களுடைய ஆபிமுக்க்யமாத்ரத்திலே த்ருஷ்டனாகும் ஸ்வபாவனான உன்னுடைய சீலத்தையின் மிகுதியாலே அடிமை செய்கை மிகையென்கிறார். [தொழுது மாமலர் என்று தொடங்கி] - அழகிய புஷ்பாதயுபகரணங்களைக் கொண்டு அடிமைசெய்து உஜ்ஜீவிப்போமென்றால் உன் சீலத்தாலே இதுதானதுக்கு மிகை ஆதலால். [பழுதிலென்று தொடங்கி] - திருவநந்தாழ்வானோடே ஸம்ச்லேஷத்தாலே ஸ்வாராதத்வ ப்ரதையை யுடையவனே! உன்னுடைய திருவடிகளில் அடிமைசெய்யும்விரகு அறிகிறிலேன்.

இ.—ஒன்பதாம்பாட்டில், இப்படி ஸுலபனான உன் திருவடிகளைக் கிட்டப் பெற்றாலும் ஆச்ரயணத்தில் ஆபிமுக்க்யமாத்ரத்திலே த்ருஷ்டனாம் உன் சீலத்தை அநுஸந்தித்து ஒருப்ரவ்ருத்தி பண்ண க்ஷமனாகிறிலேனென்கிறார். [தொழுது இத்யாதி] - "ச்லாக்யமான புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு அடிமைசெய்து உஜ்ஜீவிப்போம்" என்றால், இது மிகையாம்படியன்றோ உன்னுடைய சீலத்தையிருப்பது? "அர்க்யத் பூர்ணதபாம்கும்பாத்" என்கிற விஷயமிறே. [ஆதலின்] - இப்படி சீலாதிகனாகையாலே. "ஸுராராதன்" என்கிற பழுதின்றிக்கே, ஸ்வாபாவிகமான ஸ்வாராதத்வ ப்ரதையை யுடையையாய், அஸக்ருத் அடியாக திருவநந்தாழ்வானோடே ஸம்ச்லேஷிக்கிறவனே! உன் திருவடிகளை யணையும்விரகு அறிகிறிலேன். திருவடிகளில் அடிமைசெய்யும்விரகு அறிகிறிலேன். பலஹாநியாலே முதலிலே கிட்டுகை அரிது. கிட்டினாலும் சீலாதிக்யத்தை அநுஸந்தித்து ஒருப்ரவ்ருத்தி பண்ண க்ஷமனாகிறிலேன். "இப்பாட்டால் அயோக்யதாநுஸந்தானம் பண்ணுகிறார்" என்பாரும் உண்டு. கண்கள் சிவந்துக்குப் பின்பு அதில்லை. "அவனுடைய உபாயபாவத்தை அநுஸந்தித்து இத்தலையால் ஒன்று செய்கை மிகையாயிருக்கிறபடி சொல்லுகிறார்" என்பாருமுண்டு. இவை பக்ஷமன்று.

ஈடு—ஒன்பதாம்பாட்டு. இப்படி ஸுலபனான உன் திருவடிகளிலே கிட்டப்பெற்றாலும், ஆச்ரயணத்தில் ஆபிமுக்க்யத்திலே ஸந்துஷ்டனாம் உன் சீலவத்தையை யநுஸந்தித்து, ஒரு ப்ரவ்ருத்தி பண்ண க்ஷமனாகிறிலேனென்கிறார். அன்றிக்கே, "இங்ஙனே ஒரு மூன்றுபாட்டு தம்முடைய அயோக்யதையைச் சொல்லுகிறார்" என்பாருமுண்டு; அது இல்லையிறே கண்கள் சிவந்துக்குப் பின்பு இவர்க்கு. "இத்தலையாலே யொன்றை யத்தித்துப்பெறுகை மிகையாம்படியா யிருக்கிறவனுடைய உபாயபாவத்தைச் சொல்லுகிறார்" என்பாருமுண்டு. இவை யெல்லாமல்ல; "அவன் ஸந்நிதியிக்ரமத்தில் பரிமாறவொண்ணாதபடி யழிக்கும் அவனுடைய சீலகுணத்தைச் சொல்லுகிறது" என்று நம்முடையவர்கள் நிர்வஹிக்கும்படி.

[தொழுது இத்யாதி] - "சிலாக்யமான புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு அடிமை செய்து உஜ்ஜீவிப்போம்" என்றால், இது மிகவாரம்பமன்றோ உன்னுடைய சீலத்தை நிருப்பது? "அப்யத் பூர்ணதயாம்கும்பாத்" என்றே சொல்லிற்று. [ஆதலின்] இப்படி சீலாதி குணங்களாலே. "ஆராதன்" என்கிறபடி இங்கிருந்தே, ஸ்வாபாவிகமான ஸ்வாமித்வ ப்ரதைவயையுடையயாய், அதுக்கு அடியாகத் திருவாக்தாழ்ப்பாளேனுடே ஸம்ச்லேஷிக்கிறவனே! [தழுவுமாறறியேன்] - உன் திருவடிகளைப் பணியும் விரகு அறிகிலேன். பலருமாயோலே முதலிலே கிட்டுகையிலே; கிட்டினாலும் சௌசீல்யத்தை யநுஸந்தித்து அநுப்ரவ்ருத்தி பண்ண அமைகின்றிலேன்.

தாளதாமரையான் உனதுந்தியான்*
வாள்கொள்நீள்மழுவாளி உன்னாகத்தான்*
ஆளராய்த்தொழுவாரும் அமரர்கள்*
நாளும்என்புகழ்கோ உனசீலமே? (10)

ஒ.—பத்தாம்பாட்டில், தாஸ்யசுவடறியாத ப்ரஹ்மாதிகளுக்கும் ஐச்வர்யத்தையு மிருக்கிற உன்னுடைய திருவடிகளில் ஸௌசீல்யம் காலமெல்லாங்கூடினாலும் என்னால் புகழ்ந்து முடிக்க வொண்ணாதென்கிறார். [தாளதாமரையானென்று தொடங்கி] - அத்யபிமானியான கமலாஸநன் உன்னுடைய திருநாபியிலான், அநந்யசரணரானவனன்றிக்கே, ஒளியையுடைத்தாய் நீண்ட மழுவையுடைய ருத்ரன் உன்னுடைய திருமேனியில் ஒருப்பக்கத்திலான்; பரிசர்யை பண்ணுகிறார் அடிமைக்குத் தகாத தேவாதிகள்.

இ.—பத்தாம்பாட்டில், தாஸ்யச்சுவடறியாத ப்ரஹ்மாதிகளுக்கும் ஐச்வர்யமளிக்கிற உன்னுடைய சீலம் என்னால் புகழ்ந்துமுடிக்கவொண்ணாதென்கிறார். [தாளதாமரையான் இத்யாதி] - தாமரைப்பூவை உத்பத்திஸ்தாநமாகவுடைய ப்ரஹ்மா உன்திருநாபியைப்பற்றி வர்த்தியாநின்றான். கமலயோநித்வத்தால்வந்த தூர்மானத்தை உடையவனுக்கிறே உடம்புகொடுத்தது. ஒளியையுடைத்தாய்த் தொடங்கின கார்யத்தை முடியநடத்தவற்றான மழுவையுடைய ருத்ரன் உன்திருமேனியில் ஏகதேசத்திலான். அநந்யசரணத்வலக்ஷணமான தொடைகொத்த துளபமும் கூடையுமாய்ப் புகுந்து நிற்கிறானல்லனே. அடியராய்ப் பரிசர்யை பண்ணுகிறார் தேவர்கள். நித்யஸூரிகள் செய்யும் அடிமையிறே, தேவத்வாபிமாநத்தாலே, "நாங் ஈச்வரர்" என்றிருக்குமவர்கள் செய்கிறது. [உனசீலம் - நாளும் என்புகழ்கோ] - உன்னுடைய சீலகுணத்தைக் காலமெல்லாங்கூடினாலும் என்னால் புகழ்ந்துமுடிய வொண்ணுமோ?

ஈடு.—பத்தாம்பாட்டு. தாஸ்யச்சுவடறியாத ப்ரஹ்மாதிகளுக்கும் ஐச்வர்யமளிக்கிற உன்னுடைய சீலம் என்னால் புகழ்ந்து முடிக்கவொண்ணாதென்கிறார்.

[தாளதாமரையான் உனதுந்தியான்] தாமரைப்பூவை உத்பத்தி ஸ்தாநமாகவுடைய ப்ரஹ்மா, உன் திருநாபியைப்பற்றி வர்த்தியாநின்றான், கமலயோநித்வத்தால் வந்த துர்மாநத்தையுடையவனுக்கிறே உடம்புகொடுத்தது; [வாள்இத்யாதி] ஒளியையுடைத்தாய், தொடங்கின கார்யத்தை முடிய நடத்தவற்றான மழுவையுடைய ருத்ரன், உன் திருமேனியில் ஏகதேசத்தைப்பற்றி வர்த்தியாநின்றான். அநந்யசரணத்வ லக்ஷணமான தொடைகொத்த துளபமும் கூடையுமாய்ப் புகுந்திருக்கிறானல்லனே. [ஆளராய்த்தொழுவாருமமரர்கள்] அடியராய் ஆச்ரயிக்கிறவர்களும் தேவர்கள். நித்யஸூரிகள்செய்யும் அடிமையிறே அமரத்வாபிமாநத்தாலே "நாங்களும் ஈச்வரர்கள்" என்றிருக்குமவர்கள் செய்கிறது. [நாளும் இத்யாதி] காலத்தையுடைய நந்தோபகோபாத்தி எனக்குப்புகழுகைக்கு உறுப்பாக்கினால்தான், என்றாலே புகழ்ந்து தலைக்கட்டலாயிருந்ததோ உன்னுடைய சீலகுணம்? உனசீலம்-நாளுமென்புகழ்கோ.

சீலமெல்லையிலான் அடிமேல் * அணி
கோலநீள் குருகூர்ச்சடகோபன் சொல்*
மாலையாயிரத்துள் இவைபத்தினின்
பாலர்* வைகுந்தமேறுதல் பான்மையே. (11)

ஆ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார் ஸ்ரீவைகுண்டத்திலே செல்லுகை ஆச்சர்யமன்று; ப்ராப்தமென்கிறார். [சீலமெல்லை தொடங்கி] - அமர்யாதசீலனான எம்பெருமானுடைய திருவடிகளிலே, விலக்ஷணமான அழகுமிக்கிருக்கிற திருநகரியையுடைய ஆழ்வாருடைய சொற்றொடையான ஆயிரம் திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழியோடு ஸம்பந்தமுடையார். பான்மை - கடன்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார் பரமபதத்திற் செல்லுகை ஆச்சர்யமன்று; ப்ராப்தமென்கிறார். [சீலமெல்லையிலான் அடிமேல்] அமர்யாதசீலனான அவனுடைய திருவடிகளிலே. இத்திருவாய்மொழியால் ப்ரதிபாதிக்கப்பட்டது சீலாதிக்யமாயிற்று. அத்தை நிகமிக்கிறார்: [அணிகோலாதி] - அழகு மிக்கிருந்துள்ள திருநகரி. அன்றியே "கோலநீள்" என்று - சப்தந்தானே உண்டாகையாலே, அடிமேலணி - மாலை - என்று கூட்டிக்கொள்ளவுமாம். [ஆயிரத்துள் இவைபத்தினின்பாலர்] - இப்பத்தின் பரிஸரத்திலே புகுராமவர்கள், உக்திமாத்ரம், பாடதாரணம் அர்த்தாநுஸந்தாநம், ஒருவழியாலே இதிலே அந்வயமுண்டாகையாலே பரமபதத்திலே செல்லுகை ப்ராப்தம், "மாசைவைகுந்தம் காண்பதற்கு" என்று இவர் ப்ரார்த்தித்தார். இவரை ஆச்ரயித்தவர்களுக்கு ப்ரார்த்த்யமன்று; ப்ராப்தம். பித்ருதநம் புத்ரனுக்கு ந்யாயப்ராப்தமாய் வருமிறே.

ஈடு. நிகமத்தில் இத்திருவாய்மொழிகற்றார் பரமபதத்தே செல்லுகை ஆச்சர்யமன்று; ப்ராப்தமென்கிறார்.

[சீலமெல்லையிலானடிமேல்] அமர்யாதசீலனானவனுடைய திருவடிகளிலே. இத்திருவாய்மொழியால் ப்ரதிபாதிக்கப்பட்டது - சீலாதிக்யமாயிற்று; அத்தை நிகமிக்கிறார். [அணிகோலநீள் குருகூர்ச்சடகோபன் சொன்மாலை] அழகுமிக்கிருந்துள்ள திருநகரியையுடைய ஆழ்வார். அன்றியே, கோலமென்று சப்தந்தானே உண்டாகையாலே, 'அடிமேலணி-மாலை' என்று கூட்டிக்கொள்ளவுமாம். [ஆயிரத்துள் இவைபத்தினின்பாலர்] இப்பத்தின் பரிஸரத்திலே புகுந்தவர்கள். உக்திமாத்ரம், பாடதாரணம், அர்த்தாநுஸந்தாநம், ஒருவழியாலே இதிலே அந்வயமுடையவர்கள். [வைகுந்தமேறுதல்] பரமபதத்திலே செல்லுகை ப்ராப்தம். மாசை வைகுந்தம் காண்பதற்கு என்றிறே இவர்; இப்பாசுரத்தை அப்யஸித்தவர்களுக்கு ப்ரார்த்த்யமன்று, ப்ராப்தம் - பித்ருதநம் புத்ரனுக்கு ந்யாயப்ராப்தமாயிருக்குமிறே.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நான்காம் திருவாய்மொழி - மையார் : ப்ரவேசம்

ஆ.—நாலாந்திருவாய்மொழியில், எம்பெருமானுடைய ஸௌசீல்யத்தையும் அதுக்கடியான ஸர்வேச்வரத்வத்தையும் அநுஸந்தித்தவாறே, அப்போதே இந்த்ரியங்களும் தாமும் "அவனைக்காண வேணும்" என்று ஆசைப்பட்டபடி பெருகையாலே மிகவும் நோவுபட்ட ஆழ்வார் முன்னிலே வந்து தோற்றி ஹிரண்யனால் வந்த நலிவை ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்குத் தீர்த்தருளினபோலே, தம்முடைய ஆர்த்தியைத் தீர்த்தருளினபடியை அநுஸந்தித்து ப்ரீதராய் முடிக்கிறார்.

இ.—நாலாந்திருவாய்மொழியில், கீழ் - அவனுடைய ஸௌசீல்யத்தையும் அதுக்கடியான ச்ரிய:பதித்வத்தையும் அநுஸந்திக்கையாலே "அப்போதே பெறவேணும்" என்னும் சாபலம் பிறந்து, பெறாமையாலே முடியானேயிற்போலே தாமும் விடாய்த்து தம்முடைய கரணக்ராமங்களும் சேதநஸமாதியாலே விடாய்த்து மிகவும் அவஸந்நரானார்; இவருடைய அவஸாதத்தான் அவன் "க்ரமத்திலே வந்து முகங்காட்டுகிறோம்" என்னவொண்ணாதபடியாயிருக்கையாலே, அவன் தூணிலேவந்து தோற்றி ஹிரண்யனுலை வந்த நலிவை ஸ்ரீப்ரஹ்லாதனுக்குத் தீர்த்தருளினாப்போலே தம்மார்த்தி தீரவந்து முகங்காட்டினபடியை அநுஸந்தித்துத் ஹ்ருஷ்டராய்க் காணப்பெற்றேன் என்கிறவளவேயன்றிக்கே 'வைஷ்ணவர்களுக்கும் உபகாரகனாகப்பெற்றேன்' என்று தாம் பெற்ற பேற்றைப் பேசி ஹ்ருஷ்டராகிறார்.

ஈடு.—ஈச்வரஸ்வாதந்த்ர்யத்துக்கு அடி - அவன் தானாயிருக்கும்; சீலாதிகுணங்களுக்கு அடி-பிராட்டியாயிருக்கும். இதிலேயத்வாரேற ஸ்வாதீநமன்றிக்கே பொழிகிறதோ வென்னில்? அங்ஙனுமாயிராது; நிரூபித்தால், அந்த ஸ்வாதந்த்ர்யந்தோபாதி இவளோட்டைச்சேர்த்தி நித்யமாயிருக்கைபடியாலே. பாஷ்யகாரர் மேலே "ஸ்ரீவல்லப:" என்ன நின்று ஸ்வரூபத்தை நிரூபிக்கப்போகத்திலே, ஜிதந்தாந்தங்களுக்கு முன்னே "ச்ரிய:பதி" என்றருளிச்செய்தார். இப்படியிருக்கிறவனுடைய சீலகுணத்தையும், அதுக்கடியான ச்ரிய:பதித்வத்தையும் அநுஸந்தித்தார்-கீழில் திருவாய்மொழியிலே; கடுகப் பெறவேண்டும்படி குறுகினுமாய்ப் பொறுவிப்பாரும் அருகேயுண்டாயிருக்கையாலே, இப்போதே பெறவேண்டும்படியான சாபலம் பிறந்தது; அப்போதே பெறக்காணாமையாலே விஷயாநுரூபமாக விடாய்த்தார். பெறவேண்டும்படி குறுகினுமாய், பொறுவிப்பாரும் அருகேயுண்டாயிருக்க, பெறாவிட்டால் ஆறியிருக்கப்போகாதே. ஆகையாலே சேதநஸமாதியாலே தனித்தனியே கரணங்களும் விடாய்த்துத் தாமும் விடாய்த்தார் முடியானேயில் வாஸனையாலே. இதுதான் எல்லாத்திருவாய்மொழியோடுங்கூடியிருப்பதொன்றாயிற்று: ஒரு "செந்தொற்கனி," "வித்திருந்தேறுமது," "என்றைக்குமென்ன," "முடியானே" இவையிறேவியிலும் ஒருத்தர் பாவ்யத்திலைபுஷ்டத்தயாயிற்றிருப்பது. இப்படி இந்த்ரியங்களும் தனித்தனியே விடாய்த்துத் தாமும் விடாய்த்தபடி-ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆர்த்திக்குத் தோற்றின இதுதான் க்ரமத்திலே வந்தாரென்னலாம்படி, ஆற்றாமைக்கு க்ரமத்திலே தோற்றப் பற்றாதே தூணிலே வந்து தோற்றினாப்போலே தோற்றவேண்டும்படியாயிற்று. இப்படிப்பட்ட தம்முடைய சையையும், அதுக்கடியான விடாயையும், அவன் விடாயறிந்து அதுக்கு உதவ வந்து முகங்காட்டினபடியையும் அநுஸந்தித்து ஹ்ருஷ்டராய், "காண்கைக்கு நகத்தப்பனேன்: அடிமைசெய்யப்பெற்றேன்; வாழ்ந்தேன்; ஸ்ரீவைஷ்ணவர்களுக்குமெல்லாம் நான் உபகாரகனும் படியானேன்; இதொருவன்பெறும்பேறிருந்தபடியே!" என்று தமக்குப் பிறந்த லாபத்தையநுஸந்தித்து இனியராய், அத்தைப்பேசித் தலைகட்டுகிறார்.

மையார்கருங்கண்ணி கமலமலர்மேல்
செய்யாள்* திருமார்வினில்சேர்திருமாலே*
வெய்யார்சுடராழி சுரிசங்கமேந்தும்
கையா* உன்னைக்காணக் கருதுமென்கண்ணே. (1)

ஈ:—முதற்பாட்டில், ச்ரிய:பதியான எம்பெருமானைக் காணவேணும் என்று தம்முடைய சக்ஷுரிந்த்ரியத்திற்குப் பிறந்த சாபலத்தை அருளிச்செய்கிறார் [மையாரென்று தொடங்கி] - மேகத்திலே மின் சேர்ந்தாப்போலே மையார்ந்து கறுத்த திருக்கண்களையுடையளாய்ப் பரமபோக்யமாய்ச்சிவந்ததிருநிறத்தையுடைய பெரிய பிராட்டியார் சேரும் திருமார்வையுடையையாய் அவள்பக்கல் அத்யந்தம் வ்யாமுக்தனானவனே! [வெய்யாரென்று தொடங்கி] மிகவும் வெவ்விதான தேஜஸ்ஸையுடைய திருவாழியாழ்வானுக்கிலக்காம்படி சுரியையுடைய ஸ்ரீபாஞ்சஜந்யம் இவற்றை ஏந்தும் திருக்கைகளையுடையவனே! இப்படிஸ்புருஹணீயனான உன்னைக்காண ஆசைப்படாநின்றது என்னுடைய கண்.

இ.—முதற்பாட்டில், ச்ரிய:பதியானவனைக் காணவேணுமென்று தம்முடைய சக்ஷுரிந்த்ரியத்துக்குப் பிறந்த சாபலத்தை யருளிச்செய்கிறார். [மையார் கருங்கண்ணி] - ஸ்வாபாவிகமான கறுப்பையுடைத்தாய் அஞ்ஜநத்தாலே அலங்க்ருதமான திருக்கண்களை யுடையவள். ஒன்றும் ஸம்ஸ்காரம்பண்ண வேண்டாதபடி அழகு ஸ்வாபாவிகமாயிருக்கையாலே, கண்ணுக்கு அஞ்ஜநம் மங்களார்த்தமாயித்தனையிறே. [கமலமலர்மேற் செய்யாள்] - ஸௌகுமார்யத்தால் வந்த பேர்ப்பதை யுடையவள். [திருமார்வினிற் சேர்] - மேகத்திலே மின்சேர்ந்தாற்போலேயாயிற்று, சேர்த்தியால் வந்த அழகு; அப்பூ அடிக்கொதித்துக் கால்வாங்கித் திருமார்விலே ஏறவேண்டும்படியாயிற்று, அவளுக்குத் திருமார்விற் சேர்த்தியிருப்பது. [திருமாலே] - அவள்பக்கல் அத்யந்தம் வ்யாமுக்தனானவனே! அவன் திருமார்விற் பண்ணின வ்யாமோஹத்தை இவன் அவயவங்கள் தோறும் பண்ணுமென்கை. இப்படி அந்யோந்யம் சேர்ந்த சேர்த்தியிலேயிறே கைங்கர்யம்பண்ண ஆசைப்பட்டது. இச்சேர்த்தியைப் பற்றவிறே அவள்முகனைப் பற்ற ஆசைப்படுவார் ஆசைப்படுவது "ந கச்சிந்நாபராத்யதி" என்னுமவளும் "என்னடியார் அது செய்யார்" என்னுமவனுமான இச்சேர்த்தியிறே ஸம்ஸாரிகளுக்குத் தஞ்சம். [வெய்யார்சுடராழி] - ப்ரதிபக்ஷத்தின் மேலே வெம்மைமிக்கிருந்துள்ள தேஜஸ்ஸையுடைய திருவாழி. [சுரிசங்கம்] - ஒருகார்யம் செய்ய வேண்டாதே ஸந்நிவேசந்தானே தர்சநீயமாயிருக்கும் ஸ்ரீபாஞ்சஜந்யம். [ஏந்தும் கையா] - கையும் திவ்யாயுதமுமான சேர்த்தியழகையாயிற்று இவர் காணவேண்டியிருப்பது. [உன்னை] - "சங்கசக்ரகதாதர: ஸ்ரீவத்ஸவக்ஷா:" என்கிறவடிவையுடைய உன்னை. [காணக் கருதும்] - காண ஆசைப்படாநின்றது. இவ்வஸ்துவைப்பார்த்தால் கண்டுகொண்டிருக்கையிறே ஸத்ருசம். நித்யஸூரிகளும் ஸதாதர்சநமிறே பண்ணுவது. [என் கண்ணே] - ஸம்ஸாரிகளில் இவர்க்குள்ள வ்யாவ்ருத்தி போருமாயிற்று, இவரிற் காட்டில் இவர்கண்ணுக்கு.

ஈடு.—முதற்பாட்டு. "ச்ரிய:பதியானவனைக் காணவேணும்" என்று தம்முடைய சக்ஷுரிந்த்ரியத்துக்குப் பிறந்த சாபலத்தை அருளிச்செய்கிறார்.

[மையார்கருங்கண்ணி] "அவனைப்பெறவேணும்" என்றிருப்பார் ஆசைப்படுவதும் அவள் முன்னாகவாய், பெற்றால் பின்னை கைங்கர்யம்பண்ணுவதும் இருவருமான சேர்த்தியிலேயாயிருக்குமிறே. [மையார்கருங்கண்ணி] ஒன்றும் ஸம்ஸ்காரம் பண்ணவேண்டாதபடி ஸ்வாபாவிகமான அழகையுடைத்தாயாயிற்றுத் திருக்கண்களிருப்பது. இனி மங்களார்த்தமாக தரித்துமித்தனையிறே அஞ்சநம். "கருங்கண்ணி" என்றருளிச்செய்தே 'மையார்' என்னும்போது, மங்களார்த்தமாக அஞ்ஜநம் தரித்ததாமித்தனையிறே. [கமலமலர்மேற்செய்யாள்] இதுவாயிற்று ஸௌகுமார்யமிருக்கும்படி. [திருமார்வு இத்யாதி] தாமரைப்பூவில் பரிமளமும் தாதும் அடிக்கொதித்தாள் உன்மார்விலே யடிமாறியிடவேண்டும்படி மார்வுபடைத்தவனே. இவள் இவ்வேற்றமெல்லாங் கொண்டும் அம்மார்வுக்கு அவ்வருத்தம் போகமாட்டாள். அவ்வகலமெல்லாம் போக்யமாயிருக்கையாலே, அவ்வருத்தம் போகவேண்டாதே. [திருமாலே] அவனும், இவள் மார்விற்படும்பாட்டை இவளுடைய ஸர்வாவயவங்களிலும் பண்ணிச்சேர்த்திருக்கும்படியாயிற்று. அவனுக்குத் திருக்கண்கள் சிவந்தாயிற்றிருப்பது. அவள் இவனை நிரந்தரம் கடாக்ஷிப்பாளாகையாலே, அவன்கண்ணின் சிவப்பு இவள்மேலேயூறி இவள்திருமேனி சிவந்திருக்கும்; இவள் அவனை நிரந்தரம் அநுபவிப்பாளாகையாலே, இவள் கண்ணின் கறுப்பு அவன் திருமேனியிலே பரந்து அவன்திருமேனி கறுத்திருக்கும். இவளுக்குத் திருக்கண்கள் குளிர்ந்திருக்கும்; அவனுக்கு வாத்ஸல்யம் மிகுத்திருக்கும். அவன் [illegible] இவனுக்குத் தண்ணளி [illegible] அவனுக்கு வாத்ஸல்யம் விஞ்சியிருப்பது. ஆக, இருவர்க்கும் இரண்டு குணம் விஞ்சியிருக்கும், [illegible] வந்தால் ஆள் அறிய [illegible], "ந கச்சிந் நாபராத்யதி" என்னுமிவள், "என்னடியார் அது செய்யார்" என்று அவன் [illegible] ஆகையாலே, இருவருமான சேர்த்தியிலே இவை [illegible] வ்யதிரேகத்தாலும் [illegible]. [திருமார்வினிற்சேர்] நித்யாநுபவம் பண்ணுமிடத்தில் [illegible], "அகலகில்லேனிறையும்" என்று இன்று வந்து இட்டவை புதியபரம்பரைத்தையெல்லாம் படாநிற்கும். சேர்ந்திற வார்த்தமாகம்-இத்தைக்

காட்டுகிறது. [வெம்பாகிற்பாதி] இவள் தனக்கில் ஜீவாமிருதம் அவனுக்கு போக்யமாயிருக்குமாபோலேயாயிற்று, அவன்கையில் திவ்யாயுதங்கள் இவளுக்கு இனியதாயிருக்கும்படி. இவள்தைப்புக்காக ஆச்ரிதவிரோதிகளை யழியச்செய்கைக்குறுப்பாய் தர்சநீயமாயிருக்குமாயிற்று. ப்ரதிபக்ஷத்தின் மேலே மிக்க வெம்மையையுடைத்தாய்ப் புகரோடு கூடியிருக்கிற திருவாழி, ஸர்வேச்வரனைத்து வெறுந்தாரப் போன்றவனல்லாத வைத்தகண் வாங்காதே கண்டுகொண்டிருக்க வேண்டும்படியான ஸ்ரீபாஞ்சஜந்யம். [ஏந்துமிதன்] வெறும் இவையுமன்று, கையுமன்று! இரண்டினுடையவுஞ்சேர்த்தியாயிற்று இவர் ஆசைப்படுகிறது. "கூராராழிவெண்சங்கேந்தி - வாராய்" என்னுமவரிறே. [உன்னை] வடிவாலும்பக்தியாலும், திவ்யாயுதங்களோடும், திவ்யவிக்ரஹத்தோடும் கூடியிருக்கிற உன்னை. இவருடைய உத்தேச்யமிருக்கிறபடி இதுகாணும். [காணக்கருதும்] "சங்கசக்ரகதாதர: ஸ்ரீவத்ஸவக்ஷா:" என்கிற உன்வடிவைக்காண ஆசைப்படாநின்றது. அவ்வாசைப்படுவார் ஆசைப்படுவது ஒருகாரியங்கொள்ளவன்று, காணவாயிற்று. 'திருவேங்கடத்தானைக் காண'கிற 'காரார்திருமேனிகாணுமளவு'மிறே. நித்யஸூரிகளும் ஸதாதர்சனம்பண்ணுகிறவிறே. "அரங்கனென்னமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்று இவ்வளவிலே தேக்கிட்டுவிடுவர்கள் இங்குள்ளார்; "ஸதாபச்யந்தி" என்று இவ்வளவிலே தேக்கிட்டுவிடுவர்கள் அங்குள்ளார். [என்கண்ணே] ஸம்ஸாரிகளில் தாம்கூட உண்டான சாபலத்தோபாதியும் போருமாயிற்று, இவர்தம்மிற்காட்டிலும் இவருடைய திருக்கண்களுக்கு. இவர்க்கு சேதநரானவர் ஏற்படுண்டிறே அவற்றுக்கு.

கண்ணேயுன்னைக் காணக்கருதி *என்னெஞ்சம்
என்னேகொண்டசிந்தையதாய் நின்றியம்பும் *
விண்ணோர்முனிவர்க்கென்றுங் காண்டரியானை *
நண்ணாதொழியேனென்று நான் அழைப்பனே. (2)

ஒ—இரண்டாம்பாட்டில், தமக்கும் தம்முடைய ஹ்ருதயத்துக்கும் உண்டான சாபலத்தை யருளிச்செய்கிறார். [கண்ணே என்றுதொடங்கி] - எனக்கு த்ருஷ்டியானவனே! உன்னைக் காண ஆசைப்பட்டு பலமநோரதங்களைப்பண்ணி என்னுடைய ஹ்ருதயம் நிரந்தரமாகக் கூப்பிடாநிற்கும். [விண்ணோரென்று தொடங்கி] ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கும் காண அரியையாயிருக்கச்செய்தே என்னுடைய சாபலத்தாலே நான் உன்னைப்பெற்றுமுடிவன் என்று கூப்பிடாநின்றேன். [நண்ணாதொழியேன்] - உன்னைப் பெறுமிடத்தில் தப்பேனென்றுமாம்.

இ—இரண்டாம்பாட்டில், தமக்கும் தம்முடைய நெஞ்சுக்கும் உண்டான சாபலத்தை யருளிச்செய்கிறார். [கண்ணே] - எனக்கு த்ருஷ்டியானவனே! [உன்னைக் காணக்கருதி] - நிரதிசயபோக்யனான உன்னைக் காண ஆசைப்பட்டு; கண்ணுக்கு ஸாதகமான கண்ணும் காணப்படும் விஷயமும் அவனே என்கிறார்; "சக்ஷுச்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண:" என்னக்கடவதிறே. அவன்தன்னாலே அவனைப் பெறுமவரிறே இவர். ப்ராப்யத்தில் நியதிபோலேயிறே இவர்க்கு ப்ராபகத்தில் நியதியும். [என்னெஞ்சம்]- "இயற்றுவாய் எம்மொடுநீகூடி" என்னவேண்டும்படியான நெஞ்சம். [எண்ணமேகொண்டசிந்தையதாய்]- எண்கொண்ட மநோரதத்தையுடைத்தாய்; பலமநோரதங்களைப் பண்ணி, "காணவேணும், காணாதே பட்ட துக்கத்தைப் போக்கவேணும். அடிமை செய்யவேணும்" என்று. [நின்றியம்பும்] - நிரந்தரமாகக் கூப்பிடாநிற்கும். வாக்வ்ருத்தியையும் தானே ஏறிட்டுக்கொள்ளாநிற்கும். [விண்ணோர் இத்யாதி] - தம்முடைய கூப்பீட்டைச் சொல்லுகிறார். ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கும் என்றும் கிட்டஅரிய உன்னை. [நண்ணாதொழியேன் இத்யாதி] - "பெறுதொழியேன் பெற்று முடிவன்" என்று நான் கூப்பிடாநின்றேன். ப்ரஹ்மாதிகளுக்கு துர்லபனாயிருக்கிற உன்னை "பெற்றுமுடிவன்" என்கிறது என்கொண்டென்னில்?—தந்தாம்தலையிலே ஸாதகம் கிடந்தவர்களுக்கு விளம்பஹேதுவு முண்டு. முதலிலே நிஸ்ஸாதநனாயிருக்கிற எனக்கு விளம்பஹேதுவில்லை. [நண்ணாதொழியேன்] - அவனைக் கிட்டாதொழிகையில்

நான் தரியேனென்றுமாம். இது ஆய்த்தான் நிர்வாஹம். 'மன்னனே' என்றவிடம் - "அவனே உபாயம்" என்கிறது; 'உன்னைக் காணக்கருதி' என்றவிடம் "உபேயமும் அவனே" என்கிறது; "என்னைக்கொண்ட சிந்தையதாய்" என்ற இடம் ஸ்வீகரிப்போமைத் தன்னுடைய பாத்ரதை சொல்லுகிறது. 'நன்றுதொழியேன்' என்றவிடம் - மஹாவிச்வாஸஞ் சொல்லுகிறது.

ஈடு.—இரண்டாம் பாட்டு. தம்முடைய தாமரை போன்ற நெஞ்சுக்கு உண்டான சாபலத்தை அருளிச்செய்கிறார்.

[மன்னனே] எனக்கு நாதனுமானவனே! [உன்னைக்காணக்கருதி] ஸர்வேச்வரனான உன்னைக் காண ஆசைப்பட்டு. ஆண்ணைக்கொண்ட கண்ணைக்காணவிருக்குமாபோலே காணும் இவர் இருக்கிறது. காண்கைக்கு ஸாதநமான கண்ணும், காணப்படும் விஷயமும் அவனென்கிறார்: "சக்ஷுச்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண:" என்னக்கடவதிறே. அவனன்றிலே அவனைப் பெறுமவரிறே இவர். ப்ராப்யத்தில் ஸ்பஷ்டிபோலே, இவர்க்கு ப்ராபகத்தில் ஸ்பஷ்டியும். [என்னெஞ்சம்] பக்தியையுடைய என் நெஞ்சம், விஷயங்களிலே "பரகுபரகு" என்று வாராநிற்குமிறே ஸம்ஸாரிகளுடைய நெஞ்சம்; பகவத்விஷயத்திலே ஸர்வேச்வரனைப்பெறுகைக்கு நெஞ்சிறே, "தொழுதெழு" என்பது. [என்னைச்சிந்தையதாய்] என்னைக்கொண்ட மநோரதத்தையுடைத்தாய்: பழமையோடு தங்களிப்பதன்றி, "பாலனாகி, காணும் நடைபட்டதுக்கத்தைப்போக்கவேணும் அழகைச்செய்யவேணும்" என்று. [நின்றியம்பும்] இரந்நாதாரகக்கூப்பிடாநிற்கும். பரஸம்ருத்தியையும் தானே பெறுவிக்கொள்ளாநிற்கும். 'மன்னனே' என்கையாலே "ப்ராபகனவனே" என்றதாய், "உன்னைக்காண" என்கையாலே ப்ராப்யனும் அவன்" என்றதாய், "என்னைக்கொண்ட" என்கையாலே அத்தப்ராபகத்தைக்கொண்டு இந்த ப்ராப்யத்தைப் பெறவேணும் என்றிருக்கும் அதிகாரியுடைய பாத்ரதையிருக்கும்படி சொல்லிற்று. [என்னெஞ்சம் இத்யாதி] இதுதான் நெஞ்சுக்கேயாய் நாக்கைகளாயிருக்கிறது? ப்ரயோஜநாந்தரங்களுக்கும் லௌகிகர்களுக்கும் என்துமொக்கக் காண ஆசையாயிருக்கிற உன்னை நான் கிட்டாதொழிவனோ? "பெற்றுமுடிப்பன்" என்று நான் கூப்பிடாநிற்கிறேன். "பெற்றுமுடிப்பன்" என்றது இவர் என்கொண்டென்னில்? "ஸ்வதந்த்ரநேசவாஸிகளாய்த் தங்களுக்கென்ன ஒரு கைம்முதலுண்டாயிருக்கச்செய்தேயும் வணங்கைப்பதே, அவர்களுக்கு; அங்ஙன் ஒருகைம்முதலில்லாதவர்களுக்கு விளம்பிப்பது உண்டோ?" என்று கூப்பிடாநின்றேன். [நன்றுதொழியேன்] அவனைக்கிட்டாதொழியேன் நான் தரியேன். இது ஆய்த்தான் நிர்வாஹம். "நன்றுதொழியேன்" என்றவிடம் மஹாவிச்வாஸஞ் சொல்லுகிறது. அவர்கள் விலக்ஷண தேசத்திலே பிறக்கையாலே க்ரமத்திலே பெறுக்கலாம்; அங்ஙனன்றிக்கே, ஸம்ஸாரத்தே அகப்பட்டுநிற்கிற இவரையிறே கடுக எடுக்கவேண்டுவது. எடுக்கவேண்டும் நிலத்திலேயிருந்தேன்; எடுக்கவேணுமென்றிருந்தேன்; எடுப்பான் காத்திருந்தான்; எடுத்தால் பெறுவது தன்னையாயிருந்தது; ஆனபின்பு, எனக்கு என்ன குறையுண்டு?

அழைக்கின்றவடிநாயேன் நாய்க்கூழைவாலால் *
குழைக்கின்றதுபோல வென்னுள்ளங்குழையும் *
மழைக்கன்றுகுன்றமெடுத்து ஆநிரைகாத்தாய் *
பிழைக்கின்றதருளென்று பேதுறுவனே. (3)

ஓ.—மூன்றாம்பாட்டில், எம்பெருமானைக்காணவேணுமென்று கூப்பிட்டு மிகவும் அவஸந்நராகச் செய்தே அவன் வரக்காணாமையாலே, நிர்பரநாய் அத்தநாயிருந்தவர்களைத் தானே வகக் கொண்டு ரக்ஷிக்கக்கடவதான திருமேனியுடைய குழப்பாமேயோ என்று நோவுபடுகிறார். [அழைக்கின்ற வென்று தொடங்கி] - அயோக்யனுமாய் அதிக்ஷுத்ரனுமாயிருந்தவனைத்து ஆர்த்தனும் கூப்பிடுகிற என்னுடைய ஹ்ருதயமானது நாய் தன்னுடைய கூழைவாலாலே பிறர்க்குத் தெரியாதபடி ஸ்வாபாவிகமான வேகமான சேஷ்டைகளைப் பண்ணுமாபோலே, அருமைக்குறுப்பு நிலைகொள்ளாதபடி நோவுபடாநின்றது.

நில்லாதநளுய் வைத்து ஆசைப்படாநின்றேன் என்றுமாம். [மழைக்கு அன்றென்று தொடங்கி] - பசுக்களும் இடையரும் நோவுபடாதபடி இந்த்ரன் பர்ஷித்த வர்ஷத்துக்கு மலையை எடுத்துப்பரிஹரித்த நானே உன்னுடைய குணத்துக்குப்புறம்பாகின்றேன் என்று நோவுபடாநின்றேன்.

இ.—மூன்றும்பாட்டில், இப்படிக் கூப்பிடச் செய்தேயும் அவன் வரக்காணாமையாலே ஆர்த்தியே முதலாக ரக்ஷிக்கக்கடவ உன்குணத்துக்குப் புறம்பானேனோ என்கிறார் [அழைக்கின்றவடிநாயேன் இத்யாதி] - அயோக்யனும் க்ஷுத்ரனும் மிகுந்துவைத்து ஆர்த்தியாலே கூப்பிடாநின்றேன். ருசியாலே தவிரமாட்டார். கிட்டினும் அத்தலைக்கு அவத்யமாம்படியாயிற்று தம்முடைய நிலை. அது தன்னையுடையவனுக்குத் தன் அபிமதத்திலே ருசியைத் தெரிவிப்பது வாலாமேயாயிற்று; அதுதான் கூழையானாலும், தெரிவிக்கை அரிதாயிறே; அதுபோலே என்மநஸ்ஸானது நோவுபடாநின்றது. இத்தால், தமக்குஉண்டான க்லேசம் பேச்சுக்கு நிலமன்றென்கை. நில்லாதநளுய் வைத்து ஆசைப்படாநின்றேன் என்றுமாம். [மழைக்கன்று இத்யாதி] - இந்த்ரன்வர்ஷிக்கிற தசையிலே மலையை எடுத்து இடையரையும் பசுக்களையும் ஆர்த்தியே முதலாக ரக்ஷித்தவனே! [பிழைக்கின்ற தருளென்றுபேதுறுவனே] - "வரையாதே ரக்ஷித்த அந்த மஹாகுணம் எனக்கு உதவாமையாலே பிழைக்கப்புகாநின்றும் என்று பேகணியாகின்றேன் என்று ஆளவந்தார்நிர்வாஹம். "அந்த மஹாகுணத்துக்குப் புறம்பாகிறேனோ என்றஞ்சாநின்றேன்" என்று எம்பெருமானார் அருளிச்செய்வர்.

ஈடு.—மூன்றும்பாட்டு. இப்படிக் கூப்பிடச்செய்தேயும் வரக்காணாமையாலே, ஆர்த்தியே கைம்முதலாக ரக்ஷிக்கக்கடவ உன்குணத்துக்குப் புறம்பானேனோ? என்கிறார்.

[அழைக்கின்றவடிநாயேன் இத்யாதி] அயோக்யனும் க்ஷுத்ரனுமாய் மிகுந்துவைத்தும், ஆர்த்தியாலே கூப்பிடாநின்றேன். ருசியாலே தவிரமாட்டார். கிட்டினும் அத்தலைக்கு அவத்யமாம்படியாயிற்றுத் தம்முடைய நிலை. நாய் தன்னையுடையவனுக்குத் தன்னபிமதத்தில் ருசியைத் தெரிவிப்பது வாலாலேயாயிற்று; அவ்வால்தான் கூழையானால் தெரிவிக்கையரிதாயிறே; அதுபோலே, என்மநஸ்ஸானது நோவுபடாநின்றது. இத்தால், தமக்குஉண்டான க்லேசம் பேச்சுக்கு நிலமன்றென்கை. நில்லாதநளுய்வைத்து ஆசைப்படாநின்றேனென்றுமாம். [மழைக்கு இத்யாதி] இந்த்ரன் அச்மவர்ஷத்தை வர்ஷிக்கிறவளவிலே, மலையையெடுத்து இடையரையும் பசுக்களையும் ஆர்த்தியே கைம்முதலாக ரக்ஷித்தவனே! [பிழைக்கின்றதருளென்றுபேதுறுவனே] 'வரையாதே ரக்ஷித்தமஹாகுணம் எனக்கு உதவாமையாலே பிழைக்கப்புகாநின்றும்' என்று பேகணியாநின்றேன்" என்று ஆளவந்தார் அருளிச்செய்யும்படி. அத்தை எம்பெருமானார் கேட்டருளி, "இது, பொருளழகிது; ஆனால் இப்போது இவர்க்குஉண்டான தசைக்குச் சேராது; ஆனபின்பு, 'பசுக்களும் இடையரும் வர்ஷத்திலே நோவுபடாதபடி மலையையெடுத்துமறித்த இம்மஹாகுணத்துக்கு நான் புறம்பாய்விடுவேனோ?' என்று பேதுறுகின்றேன்" என்று.

உறுவதுஇதுவென்று உனக்காட்பட்டு *நின்கண்
பெறுவதுஎதுகொலென்று பேதையேன்நெஞ்சம்*
மறுகல்செய்யும் வானவர்தானவர்க்கென்றும் *
அறிவதரிய அரியாயவம்மானே. (4)

ஓ.— நாலாம்பாட்டில், தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும், அறியவரிதாயிருக்கக் காணாக பாவி நெஞ்சு கலங்காநின்றது என்கிறார். [உறுவதிதுவென்று தொடங்கி] - இது பரமப்ராப்யமும் என்று அடிமைபுகுந்து, உன்பக்கல் அடிமைசெய்யப் பெற்றேனே என்று மிகவும் முக்தமான என்னுடைய நெஞ்சானது கலங்காநின்றது; தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் என்று சேர்க்க அறிய வொண்ணாத நரஸிம்ஹமான ஸர்வேச்வரனே!

இ.—நாலாம்பாட்டில், நீர் இங்ஙன் பயப்படுகிறதென்னென்ன? "தேவாதிகளுக்கு அரியையானாற் போலே எனக்கும் அரியையாகிறுவோ?" என்று என்னெஞ்சு கலங்காநின்றதென்கிறார். [உறுவது இது வென்று] - சீரியது அடிமைசெய்யுமது என்று. [உனக்காட்பட்டு] - உனக்கு அடிமைபுகுந்து "ஸ்வரூபம் பகவத்பாரதந்த்ர்யம்" என்று உணர்ந்தால் சீரிய ப்ரயோஜநம் கைங்கர்யமிறே. [நின்கண்பெறுவதெது வென்று] - உன்பக்கல் பெறுவதேதோவென்று. ஸ்வரூபத்தையும் உணர்ந்து, "கைங்கர்யமே சீரியது" என்றும் அறிந்து, "ஈச்வரன் அநந்யப்ரயோஜநர்க்கு வேறொன்றைக் கொடுத்துவிடுவா னொருத்தனல்லன்" என்றும் அறியும் இவர், "உன்பக்கல் பெறுவதேதோ?" என்கைக்கு ஹேது என்னென்னில்?—க்ரமத்திலே வந்து முகங்காட்டுகிறோம் என்று ஸம்ஸாரத்திலிருப்பே சேஷித்துவிடப் புகுகிறதோ? என் த்வரையறிந்து சடக்கென முகங்காட்டுகிறாயோ? என்கை. [பேதையேன் நெஞ்சம் மறுகல்செய்யும்] - நாம் அபிஸந்திபண்ணினபடியே பலிக்கும் என்றும் அறிவின்றிக்கேயிருக்கிற என்னெஞ்சு கலங்காநின்றது. இங்ஙன் கலங்குகைக்கு அடி யென்னென்னில்? [வானவர் இத்யாதி] - "தேவாநாம் தாநவாநாஞ்ச" என்று ஸம்பந்தமொத்திருக்க தேவதாநவர்களுக்கும் என்றுமொக்க அறியவொண்ணாத நரஸிம்ஹமான ஸர்வேச்வரனே! ஆச்ரிதவாத்ஸல்யத்தோடு ஸர்வேச்வரத்வத்தோடு வாசியற அவர்களுக்கு அறியவரிய னென்கை. இத்தால், 'ப்ரஹ்லாதனுக்கு எளியையான கோடியிலேயாகிறேனோ, தேவாதிகளுக்கு அரியையாகிற கோடியிலேயாகிறேனோ?' என்று அஞ்சாநின்றேன். தேவாஸுரவிபாகம் பண்ணின ஸமநந்தரம் "நாம் எக்கோடியிலே யாகிறோமோ?" என்று அர்ஜுநன் அஞ்சினாப் போலே அஞ்சாநின்றேன்.

ஈடு.—நாலாம்பாட்டு. 'நீர் இங்ஙன் பயப்படுகிறதென்? என்ன,—"தேவாதிகளுக்கு அரியையானாற்போலே எனக்கும் அரியையாகிறாயோ?" என்று என்னெஞ்சு கலங்கா நின்றதென்கிறார்.

[உறுவதிதுவென்று] சீரியது அடிமைசெய்யுமிது என்று. [உனக்காட்பட்டு] உனக்கு அடிமைபுகுந்து. "ஸ்வரூபம் பகவத்பாரதந்த்ர்யம்" என்றறிந்தால் சீரிய ப்ரயோஜநம் கைங்கர்யமிறே. [நின்கண் பெறுவதெதுவென்று] உன்பக்கல் பெறுவதேதோவென்று; ஸ்வரூபத்தையுமுணர்ந்து, "கைங்கர்யமே சீரியதும்" என்றறிந்து, "ஈச்வரன் அநந்யப்ரயோஜநர்க்கு வேறொன்றைக்கொடுத்துவிடுவானொருவனல்லன்" என்றும் அறியுமிவர், உன்பக்கல் பெறுவதேது?" என்கைக்கு ஹேதுவென்னென்னில்:—"க்ரமத்திலே செய்கிறோம்" என்று ஸம்ஸாரத்திலிருப்பே சேஷித்துவிடப்புகுகிறதோ? என் த்வரையறிந்து சடக்கென முகங்காட்டுகிறாயோ? என்கை. [பேதையேன் நெஞ்சம் மறுகல்செய்யும்] "நாம் அபிஸந்திபண்ணினபடியே ப்பலிக்கும்" என்றும் அறிவின்றிக்கேயிருக்கிற என்னெஞ்சம் கலங்காநின்றது. இங்ஙன் கலங்குகைக்கு அடியென்? என்னில்,—நெஞ்சினுடைய விவேகசூந்யதையிறே இதுக்கடி; நீ தானும் இதுக்கடி. [வானவரித்யாதி] "தேவாநாம் தாநவாநாம்". அம்மானாயிருந்துவைத்து ஸர்வேச்வரனாயிருந்துவைத்து, தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் என்றுமொக்க அறியவரியையாய், அந்நிலை தன்னிலே ப்ரஹ்லாதனுக்கு உன்னை யுள்ளபடியறியலாயிருந்தாய். அதில் நான் எக்கோடியிலே யாகிறேனோ? என்றறியாமை. தேவாஸுரவிபாகம்பண்ணின ஸமநந்தரம், அர்ஜுநன் "நான் எக்கோடியிலே யாகிறேனோ" என்றஞ்சினாப்போலே. பின்னை அவன் இதுக்குப் பண்ணின பரிஹாரமென்? என்னில்:—தன்ஸௌலப்யத்தைப் ப்ரகாசிப்பிக்கையிறே. இனி ஒரு கோடியுண்டாக நீர் சொன்னீராகில், நீர்தாம் அக்கோடியிலேயுள்ளாரிலே யொருவராய் இருந்தீராகில் உமக்கு இனி நாம் கைப்புகுந்தோமென்றிருக்கையன்றோ? என்கையிறே.

அரியாயவம்மானை யமரர்பிரானை *
பெரியானைப் பிரமனைமுன்படைத்தானை *
வரிவாளரவினணைப் பள்ளிகொள்கின்ற *
கரியான்கழல்காணக் கருதும்கருத்தே. (5)

ஐ.—அஞ்சாம் பாட்டில், ஸர்வேஶ்வரனுடைய ஆச்ரித வாத்ஸல்யாதி ஸ்வபாவங்களையும் காணக்கருதும் என்னெஞ்சம் என்கிறார். [அரியாயவென்று தொடங்கி] - ஆச்ரிதரையும் அயர்வறுமமரர்களதிபதியாய் நித்யஸூரிகளுக்கு உபகாரகனாய் ப்ரஹ்மாவை முதலிலே உண்டாக்கினவனாய் நரஸிம்ஹமாய் அவதரித்து ஆச்ரிதனை ரக்ஷித்தவனாய் திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறவனைக் காணவேணுமென்று நினையாநின்றது என்னெஞ்சு.

ஆ.—அஞ்சாம் பாட்டில், நாம் எளியோமான நெஞ்சிலேயன்றோ! நீர், உமக்குப் பேறு கைபுகுந்திருக்க இங்ஙன் படுகிறதென்? என்ன,—என்னெஞ்சு காணவேணுமென்று படுகின்றதென்கிறார். [அம்மானை] - ஸர்வேஶ்வரனை. [அமரர்பிரானை] - நித்யஸூரிகளுக்குத் தன்னை உபகரித்துக் கொண்டிருக்கிறவனை. [பெரியானை] - அவர்களுக்கும் பரிச்சேதிக்கவொண்ணாதவனை. [பிரமனை முன்படைத்தானை] - ஜகத்ஸ்ருஷ்டிக்காக ப்ரஹ்மாவை முதலிலே உண்டாக்கினவனை. அரியாய வென்று கீழோடே கூட்டுவது. ஸ்ருஷ்டமான ஜகத்திலே ஆச்ரிதார்த்தமாகத் தன்னை அரியாயவந்து அவதரித்தவனை. [வரியாள் இத்யாதி] - ஆச்ரிதர்க்கு உதவுகையன்றிக்கே தத்ஸம்ச்லேஷைக ஸ்வபாவனானவனை. [வரிவாளரவு] - வரியையும் ஒளியையுமுடைய அரவு [கரியான்] - வெளுத்த திருநிறத்தை யுடைய திருவனந்தாழ்வான்மேலே காளமேகம் சாய்ந்தாற்போலேயாயிற்று கண்வளர்ந்தருளுவது. [காணக்கருதும் கருத்தே] - காணவேணுமென்று நினையாநின்றது என் மனஸ்ஸு. படுக்கைக்குப் பர்யாப்தமான விக்ரஹம் அதுக்குப் பர்யாப்தமான திருவடிகளும் இத்தைப்பற்றி ஆசைப்படுகிறது.

அ.—அஞ்சாம் பாட்டு. நாம் எளியோமான நெஞ்சிலேயன்றோ நீர்? உமக்குப் பேறு கைபுகுந்திருக்க இங்ஙன் படுகிறதென்னென்ன, என்னெஞ்சு காணவாசைப்படாநின்றதென்கிறார்.

[அம்மானை] ஸர்வேஶ்வரனை. [அமரர்பிரானை] நித்யஸூரிகளுக்குத் தன்னைக்காட்டிக் கொடுத்து அநுபவிப்பிக்கும் உபகாரகனை. [பெரியானை] அவர்களாலும் ஸ்வரூபஸ்வபாவாதிகள் தன்னதிலைமை, தன்னை அவர்களால் பரிச்சேதிக்கவொண்ணாதவனை. [பிரமனை முன்படைத்தானை] சதுர்முகனுக்கு ஜநகனுமானவனை. அரியாயவென்று - இதோடே கூட்டுவது. ஸ்ருஷ்டமான ஜகத்திலே, ஆச்ரிதார்த்தமாக அவர்களிருக்குமிடத்திலே தன்னை யரியாயிருந்து அவதரித்தவனை. [வரியாள் இத்யாதி] ஆச்ரிதர்க்கு உதவுகையன்றிக்கே, தத்ஸம்ச்லேஷைக ஸ்வபாவனானவனை. [வரிவாளரவு] வரியையும் ஒளியையுமுடைய அரவு. வரி - அழகு. [கரியான்] - வெளுத்த திருநிறத்தையுடைய திருவனந்தாழ்வான்மேலே காளமேகம் சாய்ந்தாற்போலேயாயிற்றுக் கண்வளர்ந்தருளுவது. [காணக்கருதுமென் கருத்தே] - காணவேணுமென்று நினையாநின்றது என் மனஸ்ஸு. படுக்கைக்குப் பர்யாப்தமான விக்ரஹம், அதுக்குப் பர்யாப்தமான திருவடிகளும் இத்தைப்பற்றியன்றோ ஆசைப்படுகிறது.

கருத்தே*உன்னைக் காணக்கருதி *என்னெஞ்சத்து
இருத்தாக இருத்தினேன் தேவர்கட்கெல்லாம்
விருத்தா*விளங்குஞ்சுடர்ச்சோதி உயரத்
தொருத்தா*உன்னையுள்ளு மென்னுள்ளத்தகத்தே. (6)

ஆறாம் பாட்டில், தாம் காண ஆசைப்படுமளவிலே எம்பெருமான் தம்முடைய திருவுள்ளத்திலே வந்து புகுந்தருளி நெஞ்சிலே இருந்த உகந்தநுபவிக்கிறபடியை அருளிச்செய்கிறார். [கருத்தே என்று தொடங்கி] - எனக்கு ஜீவனமானவனே! உன்னைக்காணவேணுமென்று அஸம்ய மநோரதத்தேன். இனி ஒருகாலும் போகாதபடியாக என்னெஞ்சிலே இருத்தினேனென்றுமாம். [தேவர்கட்கெல்லாம் விருத்தா விளங்கும் சுடர்ச்சோதி உயரத்தொருத்தா] - அயர்வறுமமரர்களதிபதியாய் விலக்ஷணதேஜோரூபமான பரமபதமான திருநாட்டிலே எழுந்தருளியிருந்தருளின அத்விதீயனானவனே!

இ.—ஆறாம்பாட்டில். காண ஆசைப்பட்ட வளவிலே அவன் தம்முடைய திருவுள்ளத்திலே புகுந்தருள, தம்முடைய நெஞ்சு உகந்தநுபவிக்கிறபடியை அருளிச்செய்கிறார். [கருந்தேயித்யாதி] - எனக்கு மிடுக்கானவனே! உன்னைக்காண ஆசைப்பட்ட வளவிலே முகங்காட்டினாய். இவ்விஷயத்தை லபிக்கைக்கு ருசியே அமையுமென்கை "கண்ணே உன்னைக்காணக்கருதி" என்றார் கீழ்; "கருந்தே உன்னைக்காணக்கருதி" என்றார் இங்கே [என்னெஞ்சத்திருந்தாக இருந்திலேன்] - "மறுகல்செய்யும்" என்கிற நெஞ்சிலே பரமபதத்திலிருக்குமாபோலே இருந்தினேன். பகவத்குணங்களாலே புஷ்டமான நெஞ்சிறேயிது. [தேவர்கட்கெல்லாம் விருத்தா] - நித்யஸூரிகளுக்கெல்லாம் நிர்வாஹகனு மானவனே! தமிழர் கிழவனென்றும் கிழத்தியென்றும் தலைமகனையுந் தலைமகளையுஞ் சொல்லுவர்கள். [விளங்குமித்யாதி] - மிக்கபுகழையுடைய தேஜஸ்ஸை யுடையனாயுக்கொண்டு ஸர்வோத்க்ருஷ்டமான பரமபதத்திலே எழுந்தருளியிருக்கிற அத்விதீயனே! [உன்னையுள்ளும் என்னுள்ளம் உகந்தே] - சடக்கென முகங்காட்டின உன்னைக் கண்டு கலங்கின என்னெஞ்சம் உகந்தே அநுபவியாநின்றது.

ஈடு.—ஆறாம்பாட்டு. காண ஆசைப்பட்டவளவிலே அவன் தம்முடைய திருவுள்ளத்திலே புகுந்தருள, தம்முடைய நெஞ்சு உகந்தநுபவிக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

[கருந்தேயுன்னைக்காணக்கருதி] - எனக்கு மிடுக்கான உன்னைக் காண ஆசைப்பட்ட வளவிலே முகங்காட்டினாய்; இவ்விஷயத்தை லபிக்கைக்கு ருசியே அமையுமென்கை. "கண்ணே யுன்னைக்காணக்கருதி" என்றார் - கீழ்; "கருந்தேயுன்னைக்காணக்கருதி" என்றார் - இங்கே. அநுபவத்தைக்கொண்டு அர்த்தாபத்தியாலே கல்பித்தல், அநுமானத்தாலே அதீந்த்ரிய மென்றறிதல் செய்யும் வஸ்துவை ஸாக்ஷாத்கரித்தாற்போலேயன்றோ பேசுகிறார். இவர்க்குக் கண்ணும் கருத்தும் ஒவ்வுமிறே. [என்னெஞ்சத்திருந்தாக இருந்தேன்] மறுகல்செய்த நெஞ்சிலே, மறுகலிச்சையைப் பரமபதத்திலே இருக்குமாபோலே இருந்தேன். "இவர் பக்கல் இச்சைபெற்றிலோம்" என்றிருக்கிறவன் இவர் இச்சை பெற்றால் பின்னைத் தன்னிக்கழுவுடைத்தாயப் போகாதிறே. *யத்ர ஸாகேதகோசல் த்வயா ஸார்த்தமஸிந்திகே,* *இதுவத்ம யாமி லோமித்ரே ஸார்த்தம்ஸ்தோ பஷ்யிது:* என்னுமாபோலே வர்த்திக்கவேணுமென்று நினைத்திருக்கிறோம்; கடுகவர்த்திக்க ப்ராப்தியிலே பண்ணினையாகில அதுசெய்யப் பெற்றிலோம்: இனி, இவரிடையிலே யாகிலும் வர்த்திக்கப்பெறாநின்றோமென்றாரே. அன்றிக்கே, [இருந்தாக] இருந்தபடியைச் சொல்லுகிறதென்றுமாம். [தேவர்கட்கெல்லாம் விருத்தா] 'இவர்பக்கல் இல்லையோ' என்னும்படி உள்ளனவர்க்கும் அல்லாதவர்க்கும் ப்ரதானனானவனே! தலைமகனையும் தலைமகளையும் "கிழவனும் கிழத்தியும்" என்று தமிழர் சொல்லக்கடவர்களிறே. அவனையும் "மூவாக்கிழத்தி" என்னுமிறே. [விளங்குமித்யாதி] *அத யததःபரோ திவோ ஜ்யோதிர் தீப்யதே* என்கிறபடியே, ஸர்வோத்க்ருஷ்டமாய் மிக்க புகழையுடைத்தான பரமபதத்திலே எழுந்தருளியிருக்கிற அத்விதீயனே! ப்ரகாசத்தாலேயிறே வாசக முள்ளது; ப்ரகாரி ஒருவனேயிறே. [உன்னைக்கண்டு] சடக்கென முகங்காட்டின உன்னைக் கண்டு கலங்கின என்னெஞ்சம் உகந்தநுபவியாநின்றது. "தேவர்கட்கெல்லாம் விருத்தா, விளங்குஞ் சுடர்ச்சோதி உயரத்தொருத்தா" - என்று சொல்லுகிற இவ்விசேஷணங்களுக்குக் கருத்து - மேலாளர்க்கும் மேலாய் பரமபதத்திலே எழுந்தருளியிருந்து அவர்களை யநுபவிப்பிக்குமாபோலே தன்னை யநுபவிப்பிக்க அநுபவிக்கு மென்னெஞ்சம் ப்ரீதமாகாநின்றதென்கை.

உகந்தேயுன்னை உள்ளுமென்னுள்ளத்து * அகம்பால்
அகந்தானமர்ந்தே இடங்கொண்டவமலா *
மிகுந்தானவன்மார்வகலம் இருகூறா
நகந்தாய் *நரசிங்கமதாயவுருவே. (7)

ஈ.—ஏழாம்பாட்டில், ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுடைய ஆர்த்தியைத் தீர்த்தருளினாற்போலே தம்முடைய ஆர்த்தியை யெம்பெருமான் தீர்த்தருளினபடியை அநுஸந்தித்து ப்ரீதராய் அவனை ஏத்துகிறார்.

[உகந்தேயென்று தொடங்கி] - ப்ரீதியோடே உன்னை அநுபவிப்பார் நெஞ்சான ஹ்ருதயத்திலுடைய உள்ளுக்குள்ளே நிர்மலநப்ரவிக்கந்து நிர்ஹேதுகமாக அத்யபிநிவேசத்தைப்பண்ணி வர்த்தித்தருளுகிறவனே! [மிகுந்தானைவேன்று தொடங்கி] - காட்டிநிருக்கின்ற நிர்வாஹத்தையுடைய அக்ரூரர்களை நிந்திக்கும்படி பண்ணவல்ல நகத்தைப்புடையபுமாய், ஆச்ரிதருடைய ஆர்த்தியைத் தீர்க்கும் நரஸிம்ஹ ரூபியானவனே! நகத்தானை-நக்தாரியென்று மெல்லிக் கிடக்கிறது.

இ.—ஏழாம்பாட்டில், தூணிலேதோற்றி ப்ரஹ்லாதனுடைய ஆர்த்தியைத் தீர்த்தாப்போலே தம்மார்த்தியைத் தீர்த்தருளினபடியை அநுஸந்தித்து ஏத்துகிறார். [உகந்தே உன்னை உள்ளும்] - ப்ரீத்து க்லேசத்தோடேதுவக்கட்டும் உகப்பன்றிக்கே ஏகருபமாக உன்னை அநுபவிக்கும்படி. [என்னுள்ளத்து] - என்னைக்கொண்ட சிக்கத எனகிற மனஸ்ஸிலே. [அகம்பாலகந்தாளா] - உன்னுக்கும்உள்ளே. "உள்ளுவாரி" என்னுமாப்போலே கமரிளத்துவிடப்பெறும் படியைப்படி. [அமர்ந்தே] - தன்பேருக அத்யபிநிவேசத்தைப்பண்ணி. [இடங்கொண்ட] - அவகாசமுள்ளவிடமெங்கும் தானேயாம்படி நிறைந்த. [அமலா] - இவ்விடத்துக்கு அவ்வருக்கு ஒரு ப்ரயோஜநத்தைக் கணிசித்தன்றிக்கே ஒருநேர்த்துலைப் பற்றிய வன்றிக்கேயிருக்கை. "என்னைக்கொண்ட சிக்கநயதாய் நிறைபெறும்" என்கிறதுதை ஸாதகமாக நினைத்திருக்கிறிலர். [மிகுந்தானவன்] - ப்ராதிகூல்யத்தில் ஓராவிலில்லாதவன், தானே மிக்கதென்பதையன்றிக்கே தன்னுயிர்கிள்ளி மலிந்தவன்; "ஜ்ஞாநீ த்வாத்மைவ" என்னக்கடவதிறே. [மார்வகம் பிளந்துகூறு நகத்தாய்] - அவனுடைமார்வானது இரண்டு கூறாம்படி பண்ணவல்ல நகத்தையுடையவனே! நகத்தாயென்று வல்லிசுற்றை மெல்லிற்றுக்கிக கிடக்கிறது. [நரசிங்கமதாயவுருவே] - ஸ்வாதகரூபமான வடிவை உடையவன் தனக்கு இவ்வடிவே மாறுபடு! என்கிறார், இத்தால் - ஏனநெஞ்சுமுகக்கும்படி தூணிலேபந்து தோற்றிறப்பயில் சடக்கென முகங்காட்டி என்னை அநுபவிப்பித்தானென்கிறார்.

ஈடு.—ஏழாம்பாட்டு. தூணிலேதோற்றி ப்ரஹ்லாதனுடைய ஆர்த்தியைத்தீர்த்தாப்போலே தம் ஆர்த்தியைத் தீர்த்தபடியை யநுஸந்தித்து ஏத்துகிறார்.

[உகந்தே உன்னை உள்ளும்] - ப்ரீத்து க்லேசத்தோடே தலைக்கட்டுமதப்பன்றிக்கே, ஏகருபமாக உன்னையநுபவிக்கும்படி. [என்னுள்ளத்து] என்னைக்கொண்ட நினைவையுடைத்தான என் உள்ளத்து. [அகம்பால் அகந்தான்] - உன்னுக்குள்ளே, "உள்ளுவார்" என்னும் படியே கமரிளத்துவிடப்பெறும் படியைப்படி. [அமர்ந்தே] தன்பேருக அத்யபிநிவேசத்தைப்பண்ணி. [இடங்கொண்ட] அவகாசமுள்ள இடமெங்கும் தானேயாம்படி நிறைந்த. [அமலா] இவ்விடத்துக்கு அவ்வருக்கு ஒரு ப்ரயோஜநத்தைக்கணிசித்தன்றிக்கே, ஒருநேர்த்துலைப் பற்றியும் அன்றிக்கேயிருக்கை. "என்னைக்கொண்ட சிக்கநயதாய்" என்கிறதை ஸாதகமாக நினைத்திருக்கிறிலர். [மிகுந்தானவன்] ப்ராதிகூல்யத்தில் ஓராவில் இல்லாதவன்; தன்னை மிக்கதென்பதையன்றிக்கே, தன்னுயிர்கிள்ளி மலிந்தவன்; "ஜ்ஞாநீ த்வாத்மைவ" என்னக்கடவதிறே. [மார்வகம்பிளந்துகூறு நகத்தாய்] அவனுடைமார்வானது இரண்டு கூறாம்படி பண்ணவல்ல [நகத்தையுடையவனே] நகத்தாயென்று வல்லிசுற்றை மெல்லிற்றாய்க்கிடக்கிறது. [நரசிங்கமதாயவுருவே] "ஸ்வாதகரூபமாய்" என்கிறபடியே விசஜாதீயமாய் இப்படிகொள்வது! இரண்டுவடிவைச்சேர்த்தவிடம் இதுவும்சொல்லிற்றாய் விடுகின்றனவில் - ஆச்ரிதருடைய ப்ரதிஜ்ஞையைக்காக்கத்தேடியும் தோற்றமுறையாலே, தூணிலேதோற்றினாப்போலே கக்கு தோற்றி, அந்தப்ரஹ்லாதனுள்ளவிடமெங்கும் புருஷ, கமரிவக்குடுமிடமெங்கும் நீட்டீர்கையோலே, நிய்ய என்னையநுபவிப்பித்தானென்கிறார்.

உருவாகிய ஆறுசமயங்கட்கெல்லாம் *
பொருவாகிநின்று அவன்எல்லாப்பொருட்கும் *
அருவாகியஆதியைத் தேவர்கட்கெல்லாம்*
கருவாகியகண்ணனைக் கண்டுகொண்டேனே, (௮)

ஒ.—எட்டாம்பாட்டில், எம்பெருமானைக் காணப்பெற்றேனென்று இனியராகிறார். [உருவாகிய வென்று தொடங்கி] - ஆபாத ப்ரதீதியில் "இவையும் சிலதாகுமோ" என்று தோற்றுகிற பாஹ்யமான ஷட்ஸமயங்களாலும் அவிசால்யமான படியையுடையனாய் ஸகலபதார்த்தங்களுக்கும் அந்தராத்மாவாய் ப்ரதானனுமானவனை, [தேவர்கட்கென்று தொடங்கி] - ப்ரஹ்மாதிகளுக்குங்கூட காரணபூதனானவனை,

இ.—எட்டாம்பாட்டில், கிருஷ்ணனானவனைக் காணப்பெற்றேனென்று இனியராகிறார். [உருவாகிய ஆறுசமயங்கட்கெல்லாம்] - விஹிதார்த்தங்களும் நிஷித்தபரிஹாரங்களுமாக உபதேசிப்பாரும் கேட்பாருமாய்ப் போருகையாலே, ஆபாதப்ரதீதியிலே ஒன்றுபோலேயிருக்கிற பாஹ்ய ஸமயங்களுக்கெல்லாம் அவிசால்யமானபடியையுடையனாய் நின்றான். [பொருவென்று] - தடை. அவற்றால் மேலிடவொண்ணாதபடி நிற்கை. [எல்லாப்பொருட்கும் அருவாகிய ஆதியை] - ஸகல பதார்த்தங்களுக்கும் அந்தராத்மாவாய் நியாமகத்வத்தாலே ப்ரதானனானவனை. [தேவர்கட்கெல்லாம் கருவாகிய] - ப்ரஹ்மாதிகளுக்குங்கூட காரணபூதனானவனை. [கண்ணனை] - கார்யங்களிலே ஒன்றுக்குத் தான் கார்யமானவனை. [கண்டுகொண்டேனே] - அவதாரத்துக்குப் பிற்பாடராயிருக்க: கண்டுகொண்டேனே என்கிறதிறே; ப்ரேமாதிசயத்தாலேயன்றும் காணலாம்; அவதார ஸமகாலத்திலும் காணவொண்ணாது சிசுபாலாதிகளுக்கு. பாஹ்யஸமயங்களால் அவிசால்யனாய் ஸர்வாந்தராத்மாவாய்க்கொண்டு ஸர்வநியந்தாவாய் ப்ரஹ்மாதிகளுக்கும் உத்பாதகனாயிருந்து வைத்து ஆச்ரிதர்க்கு ஸுலபனாயிருக்கிறவனைக் காணப்பெற்றேனென்கிறார்.

ஈடு. எட்டாம்பாட்டு. ஸகலபதார்த்தங்களுக்கும் அந்தராத்மாவாய் ப்ரஹ்மாதிகளுக்குக் காரணபூதனானவனைக் காணப்பெற்றேனென்று இனியராகிறார்.

[உருவாகிய ஆறுசமயங்கட்கெல்லாம்] ஆபாதப்ரதீதியில் ஒன்றுபோலேயிருக்க, சிலவற்றை விதிப்பது, சிலவற்றை நிஷேதிப்பது, விஹிதபரிஹாரத்தைச் சொல்லுவதாய்க்கொண்டு உபதேசிப்பாரும் கேட்பாருமாய்ப்போருகிற பாஹ்யஸமயங்களெல்லாவற்றாலும். [பொருவாகி நின்றானவன்] பொருவென்று தடை. அவற்றால் தன்னை இல்லைசெய்யவொண்ணாதபடி அப்ரதிஹதனாய் நின்றான். [எல்லாப்பொருட்கும் அருவாகியவாதியை] ஸகலபதார்த்தங்களுக்கும் அந்தராத்மாவாய், நியாமகத்வத்தாலே ப்ரதானனுமானவனை. [தேவர்கட்கெல்லாம் கருவாகிய] ப்ரஹ்மாதிதேவர்களுக்கெல்லாம் காரணபூதனுமானவனை. [கண்ணனை] கார்யங்களிலே ஒன்றுக்குத் தான் கார்யமானவனை. [கண்டுகொண்டேனே] அவதாரத்துக்குப் பிற்பாடராயிருக்க, 'கண்டுகொண்டேன்' என்கிறதிறே, ப்ரேமாதிசயத்தாலேயன்றும் காணலாம், அவதாரஸமகாலத்திலும் காணவொண்ணாது சிசுபாலாதிகளுக்கு. பாஹ்யஸமயங்களால் அவிசால்யனாய், ஸர்வாந்தராத்மாவாய்க்கொண்டு ஸர்வநியந்தாவாய், ப்ரஹ்மாதிகளுக்கும் உத்பாதகனாயிருந்து வைத்து, ஆச்ரிதஸுலபனானவனைக் காணப்பெற்றேனென்கிறார்.

கண்டுகொண்டு என்கண்ணிணையாரக்களித்து*,
பண்டைவினையாயின பற்றோடறுத்து*
தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகள்சொன்னேன்*
அண்டத்தமரர்பெருமான் அடியேனே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், தன்னை மறுபடியும்பெற்று ஸ்ரீவைஷ்ணவர்களுக்குபோக்யமாம்படி திருவாய்மொழி பாடவும் பெற்றேனென்று ப்ரீதராகிறார். [கண்டுகொண்டென்று தொடங்கி] என்னுடைய ஸகலஇந்த்ரியங்களும் க்ருதார்த்தமாம்படி, கண்டுகொண்டு, நாளும் களித்துக் காண்பதுக்கு முன்புண்டான ஸகலவினைகளும் நிச்சேஷமாகப்போக்கி. [அண்டத்தென்று தொடங்கி] - நான் ஸர்வேச்வரனாலே விஷயீகருதனானேன்.

இ.—ஒன்பதாம்பாட்டில், தன்னை யநுபவிக்கப்பெற்று அதுக்குமேலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யமாம்படி திருவாய்மொழி பாடவும் பெற்றேனென்கிறார். [கண்டுகொண்டு] - "நான் அழைப்பன்" என்ற விடாய் எல்லாங்கெடக் காணப்பெற்று. [என் கண்ணிணையார] - "காணக்கருதும் என்கண்ணே" என்கிற கண்களின் விடாய்கெட. [கண்ணிணையார - கண்டுகொண்டு] - களிப்பர் "களித்து நிரம்பவுண்டேன்" என்னுமாபோலே களித்து - மறுகினநெஞ்சு களிக்கும்படி. [பண்டை வினையாயின] - இவ்வுகப்புக்கு இடைச்சுவரான ப்ராக்தந கர்மங்களானவற்றை ஸவாஸநமாகப்போக்கி, காண்பதற்கு முன்புள்ள துக்கத்தை ஸவாஸநமாகப்போக்கி. [தொண்டர்க்கு இத்யாதி] - என்னளவன்றிக்கே, வைஷ்ணவர்களுக்கும் உபகாரகனாகப்பெற்றேன். இப்பேறு என்னால் வந்ததாகமாட்டாது; நான் ஸர்வேச்வரனாலே விஷயீக்ருதனானேன்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. தன்னையநுபவிக்கப்பெற்று, அதுக்குமேலே, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யமாம்படி திருவாய்மொழி பாடவும்பெற்றேனென்கிறார்.

[கண்டுகொண்டு] "நான் அழைப்பன்" என்ற விடாயெல்லாங்கெடக் காணப்பெற்று. [என்கண்ணிணையார] "காணக்கருதுமென்கண்ணே" என்ற கண்கள் விடாய்கெட. [கண்ணிணையார - கண்டுகொண்டு] களிப்பர் 'வயிறாரவுண்டு' என்னுமாபோலே. [களித்து] மறுகின நெஞ்சு களித்து. [பண்டைவினையாயின பற்றோடறுத்து] இவ்வுகப்புக்கு இடைச்சுவரான ப்ராக்தநகர்மங்களை ஸவாஸநமாகப்போக்கி. [தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்] என்னளவுமன்றிக்கே, வைஷ்ணவர்களுக்கும் உபகாரகனாகப்பெற்றேன். "நாளுமுண்டு, என்பரிகரமும் ஜீவித்து, என்பக்துக்களுக்கும் விருந்திடவல்லேனானேன்" என்பாரைப்போலே. [சொன்மாலைகள்சொன்னேன்] ததீயசேஷத்வபர்யந்தமான பேற்றைப் பெற்றேன். பெற்றபேற்றின் கனமிருந்தபடியாலே, இது தானொருவன் க்ருஷியான கைப்பற்றுபடியாக வந்ததொன்றல்ல. [அண்டத்தமரர்பெருமானடியேனே] ஸர்வேச்வரனாலே விஷயீக்ருதனானேன்.

அடியானிவனென்று எனக்காரருள்செய்யும்
நெடியானை* நிறைபுகழ்அஞ்சிறைப்புள்ளின்
கொடியானை* குன்றாமலுலகமளந்த
அடியானை* அடைந்து அடியேன் உய்ந்தவாறே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், எம்பெருமானைப் பெற்று க்ருதார்த்தனானேன் என்கிறார். [அடியான் இவனென்று தொடங்கி] - அடியான் என்று ஒரு வ்யாஜத்தாலே நிர்ஹேதுகமாகத் தன்னளவிலே எனக்கு ப்ரஸாதத்தைப் பண்ணும் ஸர்வேச்வரனை. [நிறைபுகழென்று மேலுக்கு] - சௌர்யவீர்யாதி குணபூர்த்தியையுடைய பெரியதிருவடியைத் தன்னுடைய நிர்ஹேதுகரக்ஷணத்துக்குக் கொடியாக எடுப்பதுஞ்செய்து குற்றங்குணநிரூபணம் பண்ணாதே ஜகத்தையெல்லாம் அந்தரப்படாதபடி அளந்துகொண்டு ரக்ஷிக்கும் ஸ்வபாவனானவனைப்பெற்று நான் க்ருதார்த்தனானபடியென்? பெரிய திருவடியை விஷயீகரித்தாப்போலே என்னை விஷயீகரித்தது என்பக்கல் என்ன நன்மைகண்டு என்னில்?—திருவுலகளந்தருளினாப்போலே நிர்ஹேதுகமாக என்றுமாம்.

இ.—பத்தாம்பாட்டில், இப்படி அவனைப்பெற்று க்ருதார்த்தனானேனென்கிறார். [அடியானிவனென்று] - "மேல் பண்ணப்புகுகிற ஔதார்யம் ப்ராப்தம்" என்று தோற்றுகைக்காக "அடியான்" என்று ஒருபேரையிட்டபடியாலே உபகரித்தது. [எனக்காரருள்செய்யும் நெடியானை] - கொள்ளுகிற என்னளவன்றிக்கே தன்னளவிலே உபகரித்த ஸர்வேச்வரனை. [நிறைபுகழ்அஞ்சிறைப்புள்ளின் கொடியானை] - சௌர்யவீர்யாதி குணபூர்த்தியையுடையனும் நிரந்தரபகவதநுபவத்தாலே தர்சநீயனுமான பெரிய திருவடியைக் கொடியாகவுடையவனை; ரக்ஷணத்துக்குக் கொடிகட்டி ரக்ஷிக்குமவனை; பெரியதிருவடியை

விஷயீகரித்தாப் போலே என்னை விஷயீகரித்தவன் என்கை. இப்படி விஷயீகரிக்கைக்கு இத்தலையில் என்னநன்மையுண்டென்னில் ? - [குன்றுமலித்யாதி] - குணகுணநிரூபணம் பண்ணாதே திருவுலகளந்தருளினாப் போலே நிர்ஹேதுகமாக என்கிறார். தன்பெருமையையும் ஸௌலப்யத்தையும் என்னை அநுபவிப்பித்தான். [அடைந்தடியேன் உய்ந்தவாறே] - சேஷத்வமே ஹேதுவாக உஜ்ஜீவித்தபடியென் ? சேஷத்வஜ்ஞாநத்துக்கு இத்தனை ப்ரயோஜநமுண்டோ ?

ஈடு.—பத்தாம்பாட்டு. இப்படி அவனைப்பெற்று க்ருதார்த்தனானேனென்கிறார்.

[அடியானிவனென்று] மேல் பண்ணப்புகுகிற ஔதார்யம் ப்ராப்தமென்று சொல்லுகைக்காக, அடியானென்று ஒருபேரையிட்டாயிற்று உபகரித்தது. [எனக்காரருள் செய்யும் நெடியானை] கொள்ளுகிறவென்னளவன்றிக்கே, தன்னளவிலே யுபகரித்த ஸர்வேச்வரனை, "அருள்பெறுவார் அடியார்" இறே. புத்ரர்களுக்கு அம்சமேயிறேயுள்ளது; எல்லாவற்றிலும் கூறுண்டாயிருக்குமிறே யடியார்க்கு. பின்னை யகளங்கப்ரஹ்மராயர், பட்டரை ஸமாச்ரயணம் பண்ணவேணும் என்று, "இருகைமதவாரணம்" என்கிறவனை வரக்காட்டினாராய், "அவனைத் திருவுள்ளத்திலே விஷயீகரித்திருப்பர்" என்னுமத்தைப்பற்ற; அவனும்வந்து இவ்வார்த்தை கேட்டு விண்ணப்பஞ்செய்து, திருவுள்ளமும் ப்ரஸந்நமாயிருந்த ஸமயத்திலே "இவனுடைய வைஷ்ணவத்வமிருக்கும்படி திருவுள்ளம் பற்றியிருக்கையுண்டே" என்றார்களாய்: "சொல்லவேணுமோ, கர்ப்பதாஸர்களன்றோ" என்று தொடக்கமாக இப்பாட்டை யருளிச்செய்தார். [ஆரருள்செய்யும்] பெறுகிற என்னளவிலேயன்றிக்கே, தருகிற தன்னளவிலே தந்தான். தனக்களவுதானென்னென்ன? [நெடியானை] "ஸர்வேச்வரன்" என்னுமித்தனை. [நிறையித்யாதி] இதுதான் நான் இன்றிருந்து உபபாதிக்கவேண்டியிருந்ததோ? கட்டிக்கொண்டிருக்கிற கொடியிலே தெரியாதோ? ஸௌர்யவீர்யாதி குணப்ரதையையுடையனாய் நிரந்தரபகவதநுபவத்தாலே தர்சநீயமான வேஷத்தையுடையனாயிருக்கிற பெரிய திருவடியை த்வஜமாகவுடையவனை. பெரியதிருவடியை விஷயீகரித்தாப்போலே என்னை விஷயீகரித்தவனை. இப்படி விஷயீகரிக்கைக்கு இத்தலையில் என்னநன்மையுண்டென்னில்? [குன்றுமவ்வுலகமளந்தஅடியானை] குணகுணநிரூபணம்பண்ணாதே திருவுலகளந்தருளினாப்போலே, நிர்ஹேதுகமாகவென்கிறார். ஓரடியுங்குறையாமே பூமிப்பரப்பை யளந்துகொண்ட திருவடிகளையுடையவனை. தன் பெருமையையும், ஸௌலப்யத்தையும் என்னை யநுபவிப்பித்தான். [அடைந்தடியேன் உய்ந்தவாறே] சேஷத்வமே ஹேதுவாக உஜ்ஜீவித்தபடியென்? சேஷத்வ ஜ்ஞாநத்துக்கு இத்தனை ப்ரயோஜநமுண்டோ?

ஆருமதயானை யடர்த்தவன்தன்னை*
சேரார்வயல் தென்குருகூர்ச்சடகோபன்*
நேரேசொன்ன ஓராயிரத்துளிப்பத்தும்*
ஏரேதரும் வானவர்தமின்னுயிர்க்கே. (11)

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி தன்னுடைய ரஸ்யதையாலே அமரர்களுடைய ஹ்ருதயத்தை நோவுபடுத்துமென்கிறார். [ஆருமதயானையடர்த்தவன்தன்னை] - குவலயாபீடத்தை முறித்தாப்போலே நம்முடைய துரிதத்தைப் போக்கினவனை. [சேரார்வயலென்றுமேதுக்கு] - ப்ரதிபக்ஷம் போனவாறே ஸம்ருத்தமான திருநகரியையுடைய ஆழ்வார் பாரதராமாயணாதிகளில் காண்ட பர்வாதிபேதம்போலே தரிப்பார்க்கெளிதாம்படி நூறுநூறாக அருளிச்செய்த ஆயிரந்திருவாய்மொழியிலும், இத்திருவாய்மொழி வானவர்தம் இன் உயிர்க்கு ஏறானவனைத் தருமென்றுஞ் சொல்லுவர்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி தன்போக்யதையாலே நித்யஸூரிகளுடைய ஹ்ருதயத்தை நோவுபடுத்துமென்கிறார். [ஆருமித்யாதி] - ஒருநாளும்மாறாத மதத்தையுடைய குவலயாபீடத்தை

நிரஸித்தவனை; அத்தை நிரஸித்தாப்போலே என் விரோதியைப் போக்கினவனை. ப்ரதிபக்ஷம் போனவாறே ஸம்ருத்தமான திருநகரியையுடைய ஆழ்வார். [நூறே சொன்னவாயிரம்] - கிழிகிழியாகக் கொடுப்பாரைப்போலே நூறுநூறாக அருளிச்செய்தபடி. பாரதராமாயணாதிகளில் காண்ட பர்வாதிபேதம்போலே தரிப்பார்க்கெளிதாம்படி செய்தாரென்கை. இத்திருவாய்மொழி நித்யஸூரிகள்ஹ்ருதயத்தைப் புண்படுத்துமென்னுதல்; நித்யஸூரிகளுக்கு ஏறுன ஸர்வேச்வரனைத் தருமென்னுதல்.

சூ.—பதினோராம்பாட்டு. *நிகமத்தில், இத்திருவாய்மொழி, தன்போக்யதையாலே நித்யஸூரிகள்ஹ்ருதயத்தை நோவுபடுத்துமென்கிறார்.*

[ஆறுமதயானை யடர்த்தவன் தன்னை] ஒருநாளும் மாறாத மதத்தைப்புடைய குவலயாபீடத்தை நிரஸித்தவனை. அத்தைநிரஸித்தாப்போலே என்விரோதியைப்போக்கினவனை. [சேறார்வயல்] குவலயாபீடமோதான், திருநகரியில் வயலைப்புழுவது நடுவதாகவொட்டாதே கிடந்தது! [நூறேசொன்னவோராயிரம்] கிழிகிழியாகக்கொடுப்பாரைப்போலே, நூறுநூறாகச் சொன்னபடி. பாரதராமாயணாதிகளில் காண்டபர்வாதிபேதம்போலே, தரிப்பார்க்கு எளிதாம்படி செய்தாரென்கை. இத்திருவாய்மொழி நித்யஸூரிகள்ஹ்ருதயத்தைப் புண்படுத்துமென்னுதல்; நித்யஸூரிகளுக்கு ஏறுன ஸர்வேச்வரனைத்தருமென்னுதல்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஐந்தாந் திருவாய்மொழி—இன்னுயிர் : ப்ரவேசம்

௭.—அஞ்சாந் திருவாய்மொழியில், கீழிற்றிருவாய்மொழியில் எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்து ப்ரீதராய், பாஹ்யஸம்ச்லேஷத்திலே ப்ரவ்ருத்தராய், அப்போதே தம் அபேக்ஷிதம் பெறாமையாலே மிகவும் அவஸந்நராய், தமக்கோடுகிற வ்யஸநம் பொறுக்குமளவன்றிக்கே லௌகிக பதார்த்தாநுஸந்தாநத்தாலே ஹ்ருதயத்தை அந்யபரமாக்கித் தரிக்கவேணும் என்று அவற்றையநுஸந்திக்கப்புக, அவையும் அவனுக்கு ஸ்மாரகமாக அவற்றாலே மிகவும் நோவுபட்ட ஆழ்வார் தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார் : எம்பெருமானைப் பிரிந்து நோவுபடுகிறாளொரு பிராட்டி, பெருவிடாய் பட்டார்க்குத் தண்ணீர் குடித்ததாறுதே அதிலேமிகவும் அபேக்ஷை பிறக்குமாபோலே பண்டை ஸம்ச்லேஷமும் மிகவும் த்ருஷ்ணை பிறந்து நோவுபடுகைக்கு உடலாய், அவனைக் காணப்பெறாமையாலே போதுபோகாமே ஒருபடி போதுபோக்குகைக்காகத் தன்னுடைய நிரதிசய போக்யமான உத்யானத்திலேசென்று புக்கு, பரஸ்பர போகப்ரவணமாய் மிதுநமாய்க்கொண்டு வர்த்திக்கிற பக்ஷிகளுடைய வடிவுகளையும் ப்ரவ்ருத்திகளையும் பேச்சுக்களையும் அநுஸந்தித்து, அவை எம்பெருமானோட்டைக் கலவியையும் அவன் தன்னையும் ஸ்மரிப்பிக்க அத்தாலே மிகவும் கலங்கி, ''என்னை முடிக்கைக்கு உபாயம் விச்லேஷம்'' என்று பார்த்து விச்லேஷந்தான் ஸம்ச்லேஷத்தை யொழியக் கூடாமையாலே அதுக்காக என்னோடே கலந்து பிரிந்தவிடத்திலும் நான் முடியாமையாலே, "நாம் முகங்காட்டாதே நமக்கு ஸ்மாரகமான பதார்த்தங்களைப் போகக்காட்ட அவற்றைக்கண்டு இவள்முடியும்'' என்றுபார்த்து இவன் வரக்காட்ட வந்தனவாகக்கொண்டு, ''முசல்வேட்டைக்கு அரணைப்பண்ணினாப்போலே என்னை முடிக்கைக்கு இத்தனை பாரிப்புவேணுமோ ?'' என்று மிகவும்நொந்து கத்யந்தரமில்லாமையாலே பகவத்குணாநுஸந்தாதாலே தரிக்கிறாள்.

இ—அஞ்சாந் திருவாய்மொழியில், கீழ்த்திருவாய்மொழியிலே அவனை ஸாக்ஷாத்கரித்தாராய்ப் பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே ப்ரவ்ருத்தராய் அப்போதே கண்ணாலே காணுதல், அணைத்தல், வார்த்தைசொல்லக் கேட்டல் செய்யப் பெறாமையாலே அவஸந்நராய், "லௌகிகபதார்த்தாநுஸந்தாநத்தாலே ஹ்ருதயத்தை அந்யபரமாக்கித் தரிக்கவேணும்" என்று அவற்றை அநுஸந்திக்கப்புக, அவையும் அவனுக்கு ஸ்மாரகமாக, அவற்றாலே நோவுபட்டவர் தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார். "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றவர் தம்ப்ராணரக்ஷணத்துக்கு ஒரு திர்யக்கின் காலிலே விழுகிறாரிறே. "அடியேன் உய்ந்தவாறே" என்றவர், ஸ்மாரகங்கள் கையிலே நோவுபடும்படியாய் விழுந்ததிறே. கலந்துபிரிந்து நோவுபடுவாள் ஒருபிராட்டி, அவன் வரக் காணாமையாலே லௌகிகபதார்த்த தர்சநத்தாலே போதுபோக்குகைக்காகத் தன்னுடைய உத்யாநவனத்திலே புக்கு, போகப்ரவணமாய் மிதுநமாயிருக்கிற பக்ஷிகளுடைய வடிவுகளையும், ப்ரவ்ருத்திகளையும், பேச்சுக்களையுங்கண்டு, "இவை அவனோடேக் கலவிக்கும், அவன் வடிவுக்கும், பேச்சுக்கும்ஸ்மாரகமாய் நலிய இவற்றுக்கு நம்மோடு பகை பெரிதன்று; அவன் வரவிட்டவையாகவேணும்; அவன்தான் நம்மை முடிக்கைக்கு உபாயம் விச்லேஷமென்றுபார்த்து, அதுதான் ஸம்ச்லேஷத்தையொழியக் கூடாமையாலே அதுக்காகக்கலந்து பிரிந்தான்; நாம் அவ்வளவிலும் முடியாமையாலே சென்றற்ற ஸமயத்திலே, ஸ்மாரகங்களைமுன்னிட இவள்முடியுமென்று பார்த்து அவன் வரக்காட்ட வந்தன" எனக்கொண்டு "என்னைமுடிக்கைக்கு முசலினோட்டைக்கு ஆனைப்பண்ணுகிறாப்போலே இத்தனை படைப்புவேணுமோ?" என்று நொந்து கந்தபந்தரமில்லாமையாலே அவன்குணங்களைப்பே அநுஸந்தித்து தரித்தாளாய்த் தலைக்கட்டுகிறது, நம்மைப் பார்த்தால் இழவேயாயிருந்ததேயாகிலும் அவனைப்பார்த்தால் இழக்கவேண்டாதபடியிறே அவன்குணங்களிருப்பது.

ஈடு—"தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள்சொன்னேன்" என்று களித்தவர், தம்முடைய ப்ராணரக்ஷணத்துக்கு திர்யக்குக்களின் காலிலேவிழும்படியாயிற்று. "தேவர்கட்கெல்லாம் கருவாகிய கண்ணனைக் கண்டுகொண்டேனே" என்னும்படி வைசத்யம்பிறந்தபோதே, பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே அபேக்ஷைபிறந்தது. "இவர்க்கு இன்னம் விடாயைப் பிறப்பித்து முகங்காட்டவேணும்" என்று இவர் அபேக்ஷிதத்தைச் சடக்கெனத்தலைக்கட்டிற்றிலன் ஈச்வரன். நினைத்தபோதே அபேக்ஷிதம் பெறாமையாலே தளர்ந்து, "லௌகிக பதார்த்தாநுஸந்தாநத்தாலே ஹ்ருதயத்தை அந்யபரமாக்கித் தரிப்போம்" என்றும், "அவனோடு போலியான பதார்த்தங்களைக்கண்டாகிலும் தரிப்போம்" என்றும், லௌகிகபதார்த்தங்களிலே கண்வைத்தார். அவை ஆச்வாஸஹேதுவன்றிக்கே, ஸ்மாரகமாய் பாதகமாகப்புக்கது. ஏதேனுமொருபதார்த்தம் தோற்றிலும், அவற்றினுடையஸத்பாவம் அவனையொழியவில்லாமையாலே, அவனைக்காட்டிக்கொண்டிறே தோற்றுவது.

லௌகிகபதார்த்தங்கள் அவனுக்கு ஸ்மாரகமாய் நலிய, அவற்றால் நோவுபடுகிறபடியை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். எம்பெருமானோடேகலந்து பிரிந்தாளொருபிராட்டி, தன்னாற்றாமையாலே "அவனோடு போலியான பதார்த்தங்களைக்கண்டாகிலும் தரிப்போம்" என்று, அவ்வாற்றாமை கைகொடுக்க உத்யாநத்திலே புறப்பட, அங்குண்டான குயில் மயில் தொடக்கமானவை அவனுடைய பேச்சுக்கும் வடிவுக்கும் ஸ்மாரகமாய்நலிய, "இவைநலிகைக்கு இவற்றோடு நமக்கொருபகையில்லை, இவை நலிகைக்கு ஓரடியுண்டாகவேணும்; அவன் நம்மை 'முடிக்கவேணும்' என்று பார்த்தான்; 'அதுக்கு உபாயம் விச்லேஷம்' என்று பார்த்து பிரிவு கலவியை யொழியக்கூடாமையாலே கலந்தான், பிரிந்தான், பிரிந்தவிடத்திலும் நாம் முடியாதிருந்தோம், பிரிந்து நோவுபட்டிருக்கிற ஸமயத்திலே நம்மோடுபோலியான பதார்த்தங்களைக்காட்டி முடிப்போம்' என்று பார்த்து வரவிட்டானித்தனை; உங்களுக்கு நினைவு இதுவாகில் இப்பாரிப்பெல்லாம் வேணுமோ" என்று அவற்றுக்கு வார்த்தைசொல்லி, "நம்மைப்பார்த்தாலிறே இப்படிநோவுபடவேண்டுவது? அவனைப் பார்த்தால் நோவுபட வேண்டாவிறே!" என்று அவன் குணஜ்ஞாநத்தாலே, வருந்தித் தரித்துத் தலைக்கட்டுகிறதாயிருக்கிறது.

இன்னுயிர்ச்சேவலும் நீருங்கூவிக்கொண்டு இங்கெத்தனை*
என்னுயிர்நோவமிழற்றேன்மின் குயிற்பேடைகாள்*
என்னுயிர்க்கண்ணபிரானை நீர்வரக்கூவுகிலீர்*
என்னுயிர் கூவிக்கொடுப்பார்க்கு மித்தனைவேண்டுமோ. ([illegible])

ஒ.—முதற்பாட்டில், சில குயிற்பேடைகளைக் குறித்து என்னை முடிக்கைக்கு இத்தனை பாரிப்பு வேணுமோ? என்கிறாள். [இன்னுயிர்ச்சேவலென்று தொடங்கி] - விரஹவ்யஸநம் அறிந்திருக்கிற குயிற்பேடைகாள்! உங்களுக்கு நற்சேவலான சேவல்களும் அவற்றுக்கு அபிமதைகளான நீங்களும் பரஸ்பர ஸம்ச்லேஷார்த்தமாக அழைத்துக்கொண்டு விச்லேஷத்தாலே தளர்ந்திருக்கிற என் உயிர்நோவ மிகவும் ப்ரணயகலஹத்தைப் பண்ணாதே கொள்ளுங்கோள்! [என்னுயிர்க் கண்ணபிரானென்று மேலுக்கு] - காதுகரைச் சொல்லுமாபோலே எங்களை இங்ஙனே சொல்லுவானென்? என்றினவாகக்கொண்டு தாரகனான க்ருஷ்ணனை வரக் கூவுகிறிலிகோள், ஆனபின்பு, என்னை முடிப்பார்க்கு இத்தனை பாரிப்பு வேணுமோ?

இ.—முதற்பாட்டில், சில குயிற்பேடைகளைக் குறித்து என்னை முடிக்கைக்கு இத்தனை பாரிப்பு வேணுமோ? என்கிறாள். [இன்னுயிர்ச் சேவலும்] - நற்சேவலான சேவலும் பக்ஷிச்சப்ராணனைப் போலே கண்வட்டத்திலே வர்த்தியாநிற்கை. பிரிந்துபடுகுலைபடிக்கும் சேவலைப்போலன்றிக்கே, பேடைக்கு தாரகமாயிருக்கும் சேவலுமுண்டாகாதே! போக்யமுமாய் தாரகமுமாயிருக்கும் சேவலுமுண்டாகாதே! [நீரும்] - சேவலுக்கு இன்னுயிரான நீரும். [கூவிக்கொண்டு] - சேர்த்தியைக்காட்டி நலிகிறதுக்குமேலே, பேச்சாலும் நலியவேணுமோ! ஸம்ச்லேஷார்த்தமாகப் பரஸ்பரம் பேரைச்சொல்லி அழைத்துக்கொண்டு. [இங்கெத்தனை] - இங்கு அத்தனைக்கு விஷயமுண்டோ? பிரிவாலே சென்றற்ற இதில் உங்கள்பாரிப்புக்கு விஷயமுண்டோ? அன்றிக்கே. [எத்தனை என்னுயிர்நோவ மிழற்றேன் மின்] - பிரிவாலே தளர்ந்திருக்கிற என்னுயிர் நோவ மிகவும் ப்ரணயகலஹத்தைப் பண்ணாதே கொள்ளுங்கோள். "உயிர்நோவ" - என்கையாலே உடல் சென்றற்றதென்கை. ரமசரம்போலே உயிரளவுக்கு வ்யாபரிக்கவற்றாயிற்று இத்தலை. என்னுயிரென்கையாலே - இவற்றின் பேச்சுக்கேட்கத் தளிர்க்கும் அவளில் தனக்கு உண்டான வ்யாவ்ருத்தி. மிழற்றுகையாவது - நிரம்பா மென்சொல். ஸம்ச்லேஷதசையிற் சொல்லத்தொடங்கித் தலைக்கட்டாத பேச்சுக்கள். [நோவமிழற்றேன்மின்] - இப்பேச்சைக் கேட்கில் இவள்முடியுமென்று அறிந்து பேசாதிருக்கவேண்டாவோ? அத்தலைமென்றதில் நால் பேரவேண்டாவோ? [குயிற்பேடைகாள்] - விஜாதியர் செய்யுமத்தை நீங்களுஞ் செய்யவேணுமோ? சேவலைக்கொண்டு கார்யங்கொள்ள நினைத்தாலும் பேடையின் காலைப்பிடிப்பது. [என்னுயிர் இத்யாதி] - எங்களை காதுகரைச்சொல்லுமாபோலே சொல்லுகிறதென்? என்றினவாகக்கொண்டு எனக்கு தாரகனான க்ருஷ்ணனை வரக்கூவுகிறிலிகோள். தாரகங்கள் வ்யக்திதோறும் வ்யவஸ்திதமாயிறே இருப்பது. திர்யக்குக்களுக்கு த்ருணம், மனுஷ்யர்களுக்குச் சோறு, தேவர்களுக்கு அம்ருதம், இவளுக்கு க்ருஷ்ணன். [கண்ணபிரான்] - பரார்த்தமாகத் தன்னையாக்கி வைக்குமவன். [நீர்] - அவ்வயத்தில் ஏஸ்மாறியும் நீங்கள், வ்யதிரேகத்தில் நோவு அறியவேண்டாவோ? [வரக்கூவுகிலீர்] - நீங்கள் அவன்முன்னே சென்று த்வநித்திகோளாகில் அத்தாலே என்செல்லாமையையறிந்து வாராதோ? அது செய்கிறிலிகோள்; என்னை நலிகைக்கு வேண்டுவது செய்கிறீர்கோள் அத்தனை; காணும் அவனுஞ் சேருகைக்கு வேண்டுவது செய்கிறிலிகோள். அழிக்கவல்லவை சேர்க்கவும்வற்று என்றிருக்கிறாள். அவன்கார்யம் இவற்றின் கையது என்றிருக்கிறாள். கடகரானவர்கள் காதுகரேயாகிலும் ரக்ஷகர் என்றிறேயிருப்பது. [என்னுயிர் இத்யாதி] - என்னையும் அவனையுஞ் சேர்க்கிறிலிகோள்: அல்லாதபின்பு, இனி என்னை முடிக்கையாயிருந்ததிறே உங்களுக்குக் கருத்து; அதுக்கு இப்பாரிப்பெல்லாம் வேணுமோ? கண்டே சென்றற்ற என்னுயிரைவாங்கி அவன்கையிலே கொடுக்கையாகில் கருத்து, அதுக்கு இதெல்லாம் வேணுமோ? நீங்கள் சேரவிருக்கையும் கலக்கையும் அந்யோந்யம் நாமக்ரஹணம் பண்ணுகையும், ப்ரணயகலஹத்வாயும் இதெல்லாம் வேணுமோ? பொந்தாமரை நீவிப்பிக்கையன்றோ அரியது? முடிக்கையிற் பணியுண்டோ?

ஈடு.—முதற்பாட்டு. சில குயிற்பேடைகளைக்குறித்து, என்னை முடிக்கைக்கு இத்தனை பாரிப்பு வேணுமோ? என்கிறாள்.

[இன்னுயிர்ச்சேவலும்] நற்சேவலான சேவலும். பக்ஷிச்சரப்ராணனைப் போலே கண்வட்டத்திலே வர்த்தியாநிற்கை. பிரிந்துபடுகொலையடிக்கும் சேவலைப்போலன்றிக்கே, பேடைக்கு தாரகமாயிருக்கும் சேவலும் உண்டாகாதே !. போக்யமுமாய் தாரகமுமா யிருக்கும் சேவலுமுண்டாகாதே! ! [நீரும்] சேவலுக்குஇன்னுயிரான நீரும் [கூவிக்கொண்டு] சேர்த்தியைக்காட்டி நலிகிறதுக்கு மேலே, பேச்சாலும் நலியவேணுமோ ?வம்ச்சலே ஷார்த்தமாகப் பரஸ்பராமக்ரஹணம் பண்ணிக்கொண்டு. [இங்கு எத்தனை] இங்கு அத்தனைக்கு விஷயமுண்டோ ! இங்குப்பிரிவாலே சென்றற்றது, உங்கள்பாரிப்புக்கு விஷயமுண்டோ? *அதிகம் சோபதே* என்னுமாபோலே கலியாநின்றதாயிற்று ; அன்றிக்கே, [எத்தனையென்னுயிர் நோவமிழற்றேன்மின்] பிரிவிலே தளர்ந்திருக்கிற என்னுயிர்நோவ மிகவும் ப்ரணயகலஹத்தைப்பண்ணாதேகொள்ளுங்கோள். "உயிர்நோவ" என்கையாலே—உடம்பு பண்டே சென்றற்றதென்கை. ரமசரம்போலே உயிரிலேபுக்குவ்யாபரிக்கவும் வற்றாயிற்று இத்தலை. "என்னுயிர்" என்கையாலே இவற்றின்பேச்சுக்கேட்கத்தரிக்குமவனில் வ்யாவ்ருத்தி. மிழற்றுகையாவது-கிரம்பாமென்சொல் ; ஸம்ச்லேஷதசையில் சொல்லத்தொடங்கித் தலைக்கட்டாத பேச்சுக்கள். [நோவமிழற்றேன்மின்] இப்பேச்சு இவன்செவிப்படில் முடியுமென்றறிந்து, பேசாதிருக்க வேண்டாவோ ! ஸ்த்ரீவதமென்றறிந்தால் மீளவேண்டாவோ ! [குயிற்பேடைகள்] விஜாதீயர்செய்வதை நீங்களுஞ்செய்யவேணுமோ ? சேவலைக்கொண்டு கார்யங்கொள்ளநினைத்தாலும் பேடையின்காலிலேற பிடிப்பது. [என்னுயிர்க்கண்ணபிரானை] "எங்களை காதலைச் சொல்லுமாபோலே சொல்லுகிறதென்?" என்றினவாகக்கொண்டு ; எனக்கு தாரகனான க்ருஷ்ணனை வரக்கூவுகிறிலிகோள். தாரகங்கள், வ்யக்திதோறும் வ்யவஸ்த்திதங்களாயிறேயிருப்பது. திர்யக்குக்களுக்கு த்ருணம், மநுஷ்யர்களுக்கு அந்நம், தேவர்களுக்கு அம்ருதம், இவளுக்கு க்ருஷ்ணன்; "எல்லாங்கண்ணன்" னிறே [கண்ணபிரான்] பரார்த்தமாகத் தன்னை ஒக்கிவைக்குமவன். [நீர்] அவ்யத்தில் ரஸமறியும் நீங்கள் வ்யதிரேகத்தில் நோவுமறியவேண்டாவோ ? [வரக்கூவுகிலீர்] நீங்கள் அவன்முன்னே சென்று த்வநித்திகோளாகில், தானே செல்லாமையைநினைத்து வாரானோ? அதுசெய்கிறிலிகோள். என்னைநலியவேண்டுவன செய்திகோள்இத்தனை. நானும்அவனும் சேருகைக்குவேண்டுவன செய்திலிகோள். அறிக்கவல்லவை சேர்க்கவும்வற்று என்றிருக்கிறாள். இவற்றின்வாயது வாளோ னென்றிருக்கிறாள். [என்னுயிர்கூவிக்கொடுப்பார்க்குமித்தனைவேண்டுமோ] என்னையும் அவனையுஞ் சேர்க்கிறிகோளல்லாதபின்பு, இனியென்னை முடிக்கையாயிருக்குமிறே உங்களுக்குக்கருத்து : அதுக்கு இப்பாரிப்பெல்லாம்வேணுமோ? பண்டே சென்றற்ற என்னுயிரை வாங்கி அவன்கையிலே கொடுக்கையாகில்கருத்து, அதுக்கு இதெல்லாம்வேணுமோ? நீங்கள்சேரவிருக்கையும் கலக்கையும் அந்யோந்யகாமக்ரஹணம் பண்ணுகையும் ப்ரணயகலஹத்வனியும், இதெல்லாம் வேணுமோ? கொக்தாஸ்ரஜீவிப்பிக்கையன்றோ அரிது? முடிக்கையில் பணியுண்டோ ?

இத்தனைவேண்டுவதன்றந்தோ ! அன்றிற்பேடைகாள்*
எத்தனைநீருநுஞ்சேவலும் கரைந்தேங்குதிர்*
வித்தகன்கோவிந்தன் மெய்யனல்லனொருவர்க்கும்*
அத்தனையாமினி யென்னுயிர் அவன்கையதே. (2)

ஈ.—இரண்டாம்பாட்டில், 'உங்கள்சேவலும் நீங்களுமாய்க்கொண்டு ப்ரணயகலஹங்களாலே என்னைநலியாதே கொள்ளுங்கோள் !' என்று சிலவன்றிற்பேடைகளை தயநீயமாக இரக்கிறாள். [அன்றிற்பேடைகாள்] - 'பெண்பிறந்தீரல்லீரோ ? [எத்தனைநீரும் நுஞ்சேவலுங்கரைந்தேங்குதிர்] - நாங்களென்செய்தோம் !' என்ன, மிகவும் கரைந்து ஏங்காநின்றிகோள். [வித்தகன்கோவிந்தன் மெய்ய

னல்லனொருவர்க்கும்] - 'உன்னோடுள்ள கலவியே தாரகமாயிருக்கிற அவள் ஒருக்ஷணமும் பிரியமாட்டில் அங்ஙனே எங்களைவிட்டு நலிக்கிறானாகக் கொண்டு சொல்லவேணுமோ? அவன்தானே வருகிறானிறே, என்ன, - அவன் அங்ஙனே ப்ரணயஸ்வபாவனைப்போலே இருக்குமத்தனை. [ஒருவர்க்கும் மெய்யனல் லன்] - உங்களுக்கும் இத்தனையே பலிப்பது, [அத்தனையாம் இனியென்னுயிர் அவன்கையதே] - இப்படிச் சொல்லவும் அவைவிடாதே கூவப்புக்கவாறே முடிந்தேனாகாதே என்கிறாள்.

இ. — இரண்டாம்பாட்டில், சில அன்றிற்பேடைகளைக் குறித்து, உங்கள் சேவலும் நீங்களுமாய்ப் ப்ரணயகூஜிதங்களாலே என்னை நலிகிறதென்? என்கிறாள். [இத்தனை வேண்டுவதன்று] - என்னை முடிக்கைக்கு இத்தனை வேண்டுவதில்லை. குயில்களைப்பார்த்து "இத்தனை வேண்டுமோ?" என்னாநிற்க இடையிலே அன்றில்களினுடைய த்வனிகேட்டு, 'இத்தனைவேண்டா' என்னவேண்டும்படியிறே இவள் தசை. குயில்களினுடைய த்வனியிலே பணிபோந்து செல்லாநிற்க நடுவே, ஒளியம்பு விடுவாரைப்போலே அன்றில்கள் த்வனிக்க, புரிந்துபார்த்து, இவையுமமையாதோ! நீங்களும் வேணுமோ! என்கிறாளிறே. இப்படி சொன்னவிடத்திலும் மேன்மேலென த்வனிக்கத் தொடங்கிற்று; அதிலேதான் சோர்ந்து பரவச காத்ரையாய், "ஐயோ!" என்கிறாள். [அன்றிற்பேடைகாள்] - குயிற்பேடைகளிற்காட்டில் உங்கள் பக்கல் ஒரு வாசிகண்டிலோம்; அவற்றிற்காட்டில் வ்யதிரேகத்தில் ஆர்த்தையாக்கியிறே மிகப்பற்றுக்கிறது. உங்கள்சேவலிற்காட்டிலும் ஒருவாசிகண்டிலோம்; குயிற்பேடைகளிற்காட்டிலும் ஒருவாசி கண்டிலோம், நலிவுக்கு விஜாதீயரிலும் ஸஜாதீயரிலும் அவ்வருகாயிருந்திகோள். "நாங்கள் என்செய்தோம்" என்ன? - [எத்தனை நீரும் நுஞ்சேவலும் கரைந்தேங்குதிர்] - [நீரும்] சேவலினுடைய கருத்தறிந்து பரிமாறுகிற நீரும் [நுஞ்சேவலும்] - உங்கள் கருத்தறிந்து பரிமாறுகிற உங்கள்சேவலும். [எத்தனைகரைந்தேங்குதிர்] - ப்ரணயத்திலே இழிந்தமைதோற்றப் பரிமாறுநின்றீர்கோள். இருவர் கூடக் கலக்கும் ஸமயமோவிது? என்னை நலிகைக்காகக் கலந்திகோளித்தனையன்றே; - கலந்தால்தான் உங்கள் தலைதோற்ற வாய்விடவேணுமோ! உங்களை யழிவமறியன்றோ என்னைநலிகிறது. [வித்தகன் இத்யாதி] - "அவனொருக்ஷணகாலம் தாழ்க்குமளவில் எங்களைவிட்டு அவன் நலிகிறானாகச் சொல்லவேணுமோ?" என்ன, அவன்படிகளை என்வாயிலே கேளுங்கோளென்கிறாள். வித்தகன் - விஸ்மயநீயன். இப்போது அநுகூலர்க்கு அரியவித்தகனாயிருந்தவன். கோவிந்தன் - ஸர்வரக்ஷகன். இத்தால் ரக்ஷகராவாரைப் போலேயிருந்து பாதகனுமவன். ரக்ஷகனென்று பற்றப்போகாது; பாதகனென்று விடப்போகாது. [மெய்யனல்லனொருவர்க்கும்] - "பரமப்ரணயி, ஸர்வரக்ஷகன்" என்றிருக்கிற உங்களுக்கும் பொய்யே ப்பலிப்பது. "ராமோ த்விர் நாபிபாஷதே" "ஸத்யஸேயம்" "ஏதத்வ்ரதம் மம" என்னும் ராமாவதாரத்தைப் போலேயிறே நீங்கள் நினைத்திருக்கிறது: கம்சனுக்கும் மெய்சொல்லி, திருவடிக்கும் மெய்சொல்லு மவனல்லனோ! "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுக்கையும், பகலையிரவாக்குகையுமிறே இவ்வவதாரத் தில் க்ருத்யம். இப்படி சொல்லவும் அவைவிடாதே கூவிற்றின; முடிந்தேனாகாதே! என்கிறாள். [அத்தனையாம் இனி] - இனி, அத்தனையானதே என்கிறாள். [என்னுயிர் அவன்கையதே] - என்னுடைய ப்ராணனானது அவன்கைப்பட்டது. 'அவன்கையிலேயாய்த் தலைக்கட்டிடனபினாய், என்னுடைய ப்ராணரக்ஷணத்துக்கு உங்கள்காற்பிடிக்க வேண்டாவாகாதே.

ஈடு. — இரண்டாம்பாட்டு. சிலஅன்றிற்பேடைகளைக்குறித்து, உங்கள்சேவல்களும் நீங்களுமாய் ப்ரணயகூஜிதங்களாலே என்னை நலிக்கிறதென்? என்கிறாள்.

[இத்தனை வேண்டுவதன்று] என்னைமுடிக்கைக்கு இத்தனைவேண்டுவதில்லை. குயில்களைப் பார்த்து, "இத்தனைவேண்டுமோ!" என்றுசொல்லாநிற்கச்செய்தே, இடையிலே அன்றிலினுடைய த்வனி நலிய, அப்பாசுரமே இவற்றுக்குஞ்சொல்லவேண்டும்படியிறே பிறந்தது. மஹாராஜரும் வாலியும் போராநிற்க நடுவே தனியம்பாகப் பெருமான் விட்டாப்போலே, குயில்களும் இவளுமாய் "கூவாதே கொள்ளுங்கோள்" என்பது அவை யுயரக்கூவுவது ஆகாநிற்கச் செய்தே, நடுவே அன்றிலானது, செவியிலே நெருப்பைப்புகுத்தி வார்த்தாற்போலே த்வனிக்க, புரிந்துபார்த்து, "இவையே யமையாதோ! நீங்களும் வேணுமோ!" என்கிறாள். இவள் இப்படி சொல்லச்செய்தேயும் த்வனிக்கத்தொடங்கிற்று. [அந்தோ!] "சரணம்" என்னவாயை

அம்பலே நிறைப்பாரைப்போலே, உங்கள்படி யிருந்தபடியென்! ஐயோ! என்கிறாள். [அன்றிற்பேடைகாள்] குயிற்பேடைகளிற்காட்டில் உங்களுக்கு ஒருவாசி கண்டிலோம். உங்கள் சேவலிற்காட்டில் ஒருவாசியும் கண்டிலோம். நலிகைக்கு, ஸஜாதியரிலும் விஜாதியரிலும் அவ்வருகாயிருந்திகோள். "நாங்கள் என்செய்தோம்?" என்ன, - [எத்தனை] மிகவும். [நீரும் நுஞ்சேவலும்] சேவலின்கருத்தறிந்து நடத்துகிற நீரும், உங்கள்கருத்தறிந்து பரிமாறுகிற உங்கள் சேவலும். *அந்தர்ஜ்ஞாதமபிப்ராயம்* என்னுமாபோலே, பேடையின் கருத்தறிந்து பரிமாறுகின்றதாயிற்றுச் சேவல். [இரைக்கேதுகுதிர்] பிறரை நலிகைக்காகத் தக்காமை யழித்துக்கொள்வாருண்டாகாதே! ப்ரணயதாரையில் துவளற்றமைதோற்றப் பரிமாறு கின்றன. இருவர்கூடக்கலக்கும் வைபவமோ இது? கலந்தால்தான், உங்கள் தலைசேர்ந்து வாய் விடவேணுமோ? [வித்தகன் இத்யாதி] அவன் "ஒரு க்ஷணகாலம் தாழ்த்துவரவில் எங்களை விட்டு அவன் கலவிக்கிருக்கச்சொல்லவேணுமோ?" என்ன; அவன்படிகளைப் புடைக்க என் பக்கலிலேகேளுங்கோள்! [வித்தகன்] விஸ்மயநீயன். இப்போது, அந்நிலைக்கு ஆர்வ வித்தகன். [கோவிந்தன்] ஸர்வஸுலபன். இத்தால் ஸர்வஸுலபரைப்போலேயிருந்து பாதகனுமவன். ரக்ஷகனென்று பற்றப்போகாது, பாதகனென்று விடப்போகாது. [மெய்ய னல்லனொருவர்க்கும்] "பரமப்ராணயி, ஸர்வரக்ஷகன்" என்று நினைத்து அவன்காரியம் செய்யா போக்க உங்களுக்குப் பொறுப்பிப்பது. *ராமோ த்விர் நாபிபாஷதே* *நத்யஜேயம்* *ஏதத் வ்ரதம் மம* என்னும் ராமாவதாரம்போலேயென்றிறே நீங்கள் நினைத்திருக்கிறது; பகவீர வாக்குவது, "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுப்பதாகக் கிடேறே இவ்வவதாரத்துக்கு க்ருத்யம். "ராமாவதாரத்தில் மெய்யும் க்ருஷ்ணாவதாரத்தில் பொய்யுமிறே ஆச்ரிதர்க்குத் தஞ்சம்; அவன் பொய்யனுமில்லன்? மெய்யனுமில்லன்? இருந்தபடி யுகக்குமத்தனையன்றோ நாங்கள்" என்று, தொடங்கின காரியத்திலே முதிர்கின்றன. [அத்தனையாம்இனி] இனியத்தனையாகாதே! இவற்றின் ஒருப்பாடிருந்தபடியால், அவனளவிலே தலைக்கட்டிவிட்டதாகாதே! என்கிறாள். என்ப்ராணன் அவன்கைப்பட்ட பின்பு, என்னுடைய ரக்ஷணத்துக்கு உங்கள்கால்பிடிக்க வேண்டாவே?

அவன்கையதேயெனதாருயிர் அன்றிற்பேடைகாள்*
எவன்சொல்லி நீர்குடைந்தாடுதிர் புடைசூழவே*
தவஞ்செய்திலா வினையாட்டியேனுயிரிங்குண்டோ*
எவன்சொல்லிநிற்றீர் நும்மேங்குகுரல்கேட்டுமே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், அற நோவுபட்ட என்னை நலியாதே கொள்ளுங்கோள் என்று அன்றிற் பேடைகளை மீளவும் இரக்கிறாள், [அவன்கையதே யென்றுதொடங்கி] - அன்றிற்பேடைகாள்! என்னு டைய ப்ராணன் அவன்கையிலேயாயிருக்கச்செய்தே என்னை "முடிக்க வேணும்" என்று எனக்கு துஸ்ஸஹமாம்படி ப்ரணய தசையிலேயுள்ளவை சில உக்திகளைப் பண்ணிக்கொண்டு ஒன்றிலேயொன்று அவகாசித்து ஸஞ்சரியா நின்றீர்கோள்; உங்களுக்கு நலியலாம்படி ப்ராணனைத் தருகைக்கீடான பாக் யத்தைப் பண்ணியிருக்கிற என்னுடைய ப்ராணன் என்பக்கல் உண்டோ? தவஞ்செய்திலா வினையாட்டி யேனென்கிறது. விச்லேஷித்தாலும் அவனைப்போலே தரித்திருக்கைக்கு பாக்யம் பண்ணிற்றிலே னென்றுமாம். [எவனென்றுதொடங்கி] - ப்ரணயபரவசமாய்க்கொண்டு ப்ரவ்ருத்தமான உங்களுடைய த்வநியைக்கேட்டு எதனைச்சொல்லி தரிப்போம்.

இ.—மூன்றாம்பாட்டில், அற நோவுபட்ட என்னை நலியாதே கொள்ளுங்கோள் என்று அன்றிற் பேடைகளையே திரியவும் இரக்கிறாள். [அவன்கையதே எனதாருயிர்] - என்னுடைய ப்ராணனை அவன்கையதே. நீருமாளும் ப்ராணன்கள் மாறுபட்டுண்டோ? உங்களுக்கு இது அல்லுத் தன்மையோ! "அஸ்யா தேவ்யா:". [அன்றிற்பேடைகாள்] - வ்யதிரேகத்தில் ஆற்றாமையை அறியும் நீங்கள் இதில் இழியாதொழியவேண்டாவோ! "உன்னை நலிகிறேனோ! எங்களுக்குக் கலவி ஏவ்வாவ

மன்றோ ?" என்ன. [எவன்சொல்லி] - ப்ரணயதசையிலே உள்ளவாய் எனக்கு துஸ்ஸஹமான சில உக்திகளைப்பண்ணி; அவைசொன்னபாசுரம் தன்வாயால் சொல்லமாட்டுகிறிலன். [நீர்குடைந்து] - ஒன்றிலேயொன்று அவகாஹித்து. [ஆடுதிர்] - பரிமாறுநின்றீர்கோள். ஆட்டம் - நடையாட்டம். [புடை குழவே] - சுற்றிலே ஸஞ்சரியாநின்றீர்கோள்; அடைமதிட்படுத்துவைக்குச் சுற்றிலே விட்டுக்கொண்டிருப் பாரைப்போலே. செவியைப்புதைத்துப் பிழைப்பேனே! கண்ணைப்புதைத்துப் பிழைப்பேனே! [தவஞ் செய்திலா இத்யாதி], என்னைமுடிக்க நினைத்துவந்த உங்களுக்கு, என்ப்ராணனை இங்கேவைத்துத் தருகைக்கீடான பாக்யத்தைப் பண்ணப்பெற்றிலேன். கடோரதும்போலே உங்களுக்கு உபகரித்து உங்கள் ப்ரியங்காணப்பெறாத பாபகர்மாவானேன். "அவனைப்போலே பிரிவுக்கு இளையாதபடி பாக்யத்தைப்பண்ணப் பெற்றிலேன்" என்று பின்னான்னிர்வாஹம். [உயிரிங்குண்டோ] - "என்னுயிர்போல மிழற்றினவன்றே அங்கேபோய்த்தே என் ப்ராணன்; என்பக்கலுண்டோ ?" என்று விளக்கேற்றிக் காட்டுவாரைப்போலே யிருக்கிறது. [எவன்சொல்லிநிற்றும்] - எத்தைச்சொல்லித் தரிப்போம் ? உங்கள் ஒருப்பாடு இதுவான பின்பு, தரிக்கவிரகுண்டோ ? [நும்மேங்குகூக்குரல் கேட்டுமே] - ப்ரணயபரவசமான உங்களுடைய த்வனியைக்கேட்டும். பிரிவாற்றாமைக்கு தரிக்கிலும் உங்கள் த்வனிக்குப் பிழைக்கவல்லோமோ ! உங்கள் த்வனி கேட்டாரைமுடிக்குமதன்றே ! உங்கள்செவியைப் புதைத்தோ நீங்கள் கூப்பிடுவது ? "நிஸ்வனம் சக்ரவாகானாம் நிசம்ய ஸஹசாரிணாம், புண்டரீகவிசாலாக்ஷீ கதமேஷா பவிஷ்யதி".

ஈடு.—மூன்றாம்பாட்டு. அவ்வன்றிற்பேடைகள் தம்மையே, திரியவும், தன்செயலறு தியபலேயிரக்கிறாள்.

[அவன்கைபதே எனதாருயிர்] என் ப்ராணன், அவன்கைபதே. மீளுமோஎன்னால் ப்ராணன்கள் மாறுபடியன்றோவிருப்பது? உங்களுக்கு இது அப்யுத்பந்நமோ? [அன்றிற் பேடைகாள்] அவ்வ்யாபாரம்அறிவார், பிரிந்துபடுவதும் அறியவேண்டாவோ ? [எவன் சொல்லி] ஏதேனும் சிலவற்றைச் சொல்லி. அவைசொல்லுகிற பாசுரஞ்சொல்லில் தன்வாய் வேம்போலேகாணும். [நீர்குடைந்து] ஒன்றிலேயொன்று அவகாஹித்து. [ஆடுதிர்] பரி மாறுநின்றீர்கோள். [புடைகுழவே] சுற்றிலே ஸஞ்சரியா நின்றீர்கோள். அடைமதிட்படுத் துவார் சுற்றிலே விட்டுக்கொண்டிருக்குமாபோலே. செவியைப் புதைத்துப் பிழைப்பேனோ! கண்ணைப்புதைத்துப் பிழைப்பேனோ! பெருமாளும் பரிகரமும் லங்கையை யழிக்கைக்குச் சூழ்ப்போர்தாப்போலேகாணும் இவளுக்கு இது இருக்கிறது. பாவியேன்! உங்கள்பாரிப் புக்கு இங்கு விஷயமுண்டாகப் பெற்றதில்லை; [தவஞ்செய்திலா] உயிரை இங்கேவைத்து உங்களுக்கு உபகரிக்க பாக்யம்பண்ணிற்றிலேன். "அவனைப்போலே பிரிவுக்குச் சிளையாதபடி பாக்யத்தைப் பண்ணப்பெற்றிலேன்" என்று பின்னானபணிக்கும். [உயிரிங்குண்டோ] வல்லடிக்காரர்க்கு விளக்கேற்றிக்காட்டுமாபோலேகாணும், "இங்குண்டோ!" என்று காட்டு கிறபடி. [எவஞ்சொல்லிநிற்றும்] எத்தைச் சொல்லித்தரிப்பது? [நும்இத்யாதி] ப்ரணய பரவசரான உங்களுடைய த்வனியைக்கேட்டும் பிரிவுக்குத் தரித்திருக்கிலும், உங்கள் த்வனிக்குப் பிழைக்கவல்லோமோ ! உங்கள் த்வனி, கேட்டாரை முடிக்குமதன்றே ! உங்கள்செவியைப் புதைத்தோ நீங்கள் கூப்பிடுகிறது! "நிஸ்வநம் சக்ரவாகாநாம் நிசம்ய ஸஹசாரிணாம், புண்டரீக விசாலாக்ஷீ கதமேஷா பவிஷ்யதி"

கூக்குரல்கேட்டும் நங்கண்ணன்மாயன்வெளிப்படான்
மேற்கிளைகொள்ளேன்மின் நீரும்சேவலும்கோழிகாள்*
வாக்கும்மனமும்கருமமும் நமக்காங்கதே*
ஆக்கையும்ஆவியும் அந்தரம்நின்றுழலுமே. (4)

ஓ.—நாலாம்பாட்டில், சிலகோழிகளைக் குறித்து நீங்கள் உச்சமாகக்கூவி என்னைநலியாதே கோள்ளுங்கோள் என்கிறாள். [கூக்குரலென்று தொடங்கி] - உங்களுடைய கூக்குரலைக் கேட்டிலைத்தும்

ஆச்சர்யசீலனாக ப்ரஸித்தனான க்ருஷ்ணன் "இவள் பிழையாள்" என்று பார்த்துத் தோற்றி வருகிறிலன். கோழிகாள்! உங்களுடைய சேவல்களும் நீங்களும் உங்களுடைய ஜாத்யுசிதமாய் ப்ரணய ப்ரவ்ருத்தமான உச்சசப்தத்தைப் பண்ணுதேகொள்ளுங்கோள்! வாக்கும்மனமும் என்று தொடங்கி - "உன்னுடைய ஸர்வகரணங்களையும் அபஹரித்து உன்னை முடிக்கவென்றுவந்த நாங்கள் கூவாதிருப் போமோ?" என்றனவாகக்கொண்டு என்னுடைய ஸர்வகரணமும் பண்டே அவன்பக்கலின; இனிஎன் செய்ய வருந்துகிறீர்கோள்? என்ன? ஆகில், இப்பேச்சும் இச்சேஷ்டிதமும் கூடினபடி எங்ஙனே என்னில்? —அவை போகச்செய்தே வ்யஸநவாஸநையாலே தேஹமும் ப்ராணனும் நடுவே நின்று நுடக்கப்படுகின்றன வித்தனை.

இ.—நாலாம்பாட்டில், சிலமயில்களைக் குறித்து நீங்கள் உச்சமாகக்கூவி என்னை நலியாநின்றி கோள் என்கிறாள். [கூக்குரல் கேட்டும்] - நீங்கள்கூவுகிற த்வநியைக் கேட்டுவைத்தும். இவற்றி னுடைய த்வநி செல்லாதவிடமில்லை யென்றிருக்கிறாள் [நங்கண்ணன்] - வடமதுரைப்ரஸித்திபோலே இதொருப்ரஸித்தி யுண்டாக்கிவைப்பதே [மாயன்] - ஆச்சர்யசீலன்; பிரிந்தால் தரிக்கவொண்ணாதபடி கிட்டினபோது கையைக்காலைப் பிடித்துத் தாழநின்று பரிமாறுமவன். [வெளிப்படான்] - "இவள் பிழையாள்" என்று தோற்றுகிறிலன்; "தாஸாமாவிரபூத்" என்னுமவன்கிடீர்! ருஷியும் "ஆவிரபூத்" என்றான்; இவளும் 'வெளிப்படான்' - என்றாள். கைகழியப்போகான்; மறைந்துநின்று தோற்று மென்றிருக்கிறாள், [மேற்கிளை கொள்ளேன்மின்] - மேலானகிளை உச்சைஸ்ஸான த்வநி. ஜாத்யுசிதமாய் ப்ரணயப்ரவ்ருத்தமான உச்சசப்தத்தைப் பண்ணுதேகொள்ளுங்கோள். இவள் பிரிவாலே நோவுபட்ட தசையிலே உயர்ந்த தானத்திலே த்வநிக்கத்தொடங்கிற்று. [நீரும் சேவலும்] - ஒன்றுதொடங்கின தானத்திலே ஸஹசரமுந் தொடங்கிக் குறையுங் கூடமுடியாநின்றது. [கோழிகாள்] - மயில்களைச் சொல்லுகிறது. [வாக்குமென்று தொடங்கி] - உன்னுடைய ஸர்வகரணங்களையும் அபஹரிக்க வந்த நாங்கள் நீ நிஷேதித்தவாறே தவிருவுதோமோ! என்ன,—அதுவாகில், அவையும் அவன்பக்கலின; அதுக்கும் அங்கே செல்லுங்கோள். அங்கே போய் இவை த்வநிக்க அவனுக்குத் தரிப்பரிதாய் வந்து முகங்காட்டுமென்னும் நினைவாலே சொல்லுகிறாள். ஆகில், இப்பேச்சும் சேஷ்டிதமுங் கூடினபடி யென்? என்ன. [ஆக்கையும்ஆவியும் அந்தரம் நின்றுழலும்மே] - வ்யஸநவாஸநையினாலே தேஹமும் ப்ராணனும் நடுவேநின்று க்லேசப்படுகிற இத்தனை. பிடித்துவிட்ட கோம்புபோலே வாஸநையேயுள்ளது. நோவுபட வேண்டுவதுண்டு; உங்களுக்கு நலிகைக்கு ஆச்ரயமில்லை.

ரு.—நாலாம்பாட்டு. சிலமயில்களைக் குறித்து, நீங்கள் உச்சமாகக்கூவி என்னை நலியாநின்றிகோள்! என்கிறாள்.

[கூக்குரல்கேட்டும்] நீங்கள் கூவுகிற த்வநியைக்கேட்டு வைத்தும். இவற்றின் த்வநி செல்லாதவிடமில்லை என்றிருக்கிறாள். [நங்கண்ணன்] வடமதுராப்ரஸித்திபோலேயிவர் பக்ய னென்னும் இது. [மாயன்] ஆச்சர்யசீலன்; கைக்கும் ஸமயத்தில் மெய்போலே பரிமாறு மவ்வயன். [வெளிப்படான்] "இவள் பிழையாள்" என்று, தோற்றுகிறிலன்; **தாஸாமா விரபூத்* என்னுமவன் கிடீர்!** *ருஷியும்* **ஆவிரபூத்*** *என்றான், இவளும் 'வெளிப்படான்' என்றாள். [மேற்கிளைகொள்ளேன்மின்] மேலான கிளை - உச்சமான த்வநி. ஜாத்யுசிதமாய் ப்ரணயப்ரவ்ருத்தமான உச்சசப்தத்தைப் பண்ணுதேகொள்ளுங்கோள். இவள் நடுபடப்பட, ஒரு தானமெழவைத்துக் கூவாநின்றன வாய்த்து. [நீரும்சேவலும்] ஒன்று தொடங்கின கார்யத்தை ஸஹசரமுந்தொடங்கிக் குறையுங் கூடமுடியாநின்றது. [கோழிகாள்] வ்ரதம்பண்ணுகைக்கு த்ருஷ்டாந்தமாக ஒருப்படவேணுமோ? கோழியென்கிறது-மயிலை. "நீர் நலியாதேகொள்ளுங்கோள்" என்னுமளவும் பார்த்திருந்தோ நாங்களிருக்கிறது? ஸர்வகரணங் களையும் அபஹரிக்கவந்த நாங்கள் தவிருவோமோ? தொடங்கினகார்யம் தலைக்கட்டவேணுமே, எங்களுக்கு" என்று கருத்தாக, அதுக்காகில் பின்னை அங்கே போங்கோளென்கிறாள். [வாக்கும் மனமும் கருமமும் நமக்காங்கதே] என்னுடைய ஸர்வ கரணங்களும் அவன்பக்கலின.* **"அங்கேபோய் இவை த்வநிக்க அவனுக்குத் தரிப்பரிதாய் வந்து முகங்காட்டும்" என்னும்**

லினவாயிலே சொல்லுகிறான். அங்கேயாகில், இப்பேச்சும் சேஷ்டிதங்களும் கூடினபடியென் னென்னில்? [ஆத்மாவைப்போலே போய்ப்புக்கு] வ்யஸநாவஸ்தையிலே, தேஹமும் ப்ராணனும் கூடியே நின்று க்லேசப்படுகிறவித்தனை. பிடித்துவிட்ட கொம்புபோலே வாளாயிருக்கின்றது. கோவுபடவென்றுவதுண்டு, நலிகைக்கு ஆச்ரயமில்லை.

அந்தரம்நின்றுழல்கின்ற யானுடைப்பூவைகாள்*
நுந்திறத்தேதுமிடையில்லை குழறேன்மினோ*
இந்திரஞாலங்கள்காட்டி இவ்வேழுலகுங்கொண்ட*
நந்திருமார்வன் நம்மாவியுண்ண நன்கெண்ணினான். (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், தன்னினவாயிருந்து நலிகிற பூவைகளைக்குறித்து, "அவன்தான் என்னை முடிக்கைக்கு அழகிதான விரகுபார்த்தான்; உங்களுக்கு இங்கு விஷயமில்லை" என்கிறாள். [அந்தர மென்று தொடங்கி] - நலிகைக்கொரு காரணமின்றிக்கே யிருக்கச் செய்தே, என்னை நலிந்துகொண்டு ஸஞ்சரிக்கிற என்னுடையபூவைகாள்! உங்களுடைய பாரிப்புக்கு என்பக்கல் அவகாசமில்லை. குழறாதே கொள்ளுங்கோள்! [இந்திரஞாலமென்று தொடங்கி] - ப்ரணயித்வ ப்ரஸித்தியையுடையனாயிருந்துள்ள எம்பெருமான் பண்டு இந்தலோகத்தைத் தனக்காக்கிக்கொள்ளுகைக்குச் சிலபொய் செய்தாப்போலே என்னோடேகலந்து பரிமாறுகிறானாகத் தோற்றும்படி சில பொய்களைச் சொல்லி விச்லேஷிக்கை என்னை முடிக்கைக்கு உபாய மென்று அவன்தானே நல்லவிரகு பார்த்தான்; என்னை முடிக்கப் பார்த்த பார்வை, அழகிதாகப் பார்த்தான் என்று தன்னிலே நொந்து சொல்லுகிறாளென்று மாம்.

இ.—அஞ்சாம்பாட்டில், தன்னினவாயிருந்து நலிகிற பூவைகளைக்குறித்து அவன்தான் என்னை முடிக்கைக்கு நல்விரகுபார்த்தான்; இனி உங்களுக்கு இங்கு விஷயமில்லை என்கிறாள். [அந்தரம் நின்றுழல்கின்ற] உங்களுக்கு இங்குநலிகைக்கு விஷயமின்றிக்கே யிருக்க நடுவேநின்று வ்யர்த்தமே க்லேசப்படுகிறீர்கோள் இத்தனை. [யானுடைப் பூவைகாள்] - என்னுடைய பூவைகாள்! ஸர்வஸாதாரணரா யிருப்பார் செய்யுமத்தை, சிலர்க்கு ஸ்வம்மாயிருப்பார் செய்யக்கடவதோ? ஸ்வதந்த்ரன் செய்யுமத்தைப் பரதந்த்ரரான நீங்களும் செய்யக்கடவதோ? அவன் எனக்கு என்னவல்லமையு மாகாதே பாதக மாகைக்கு? அவனும் என்னுடையவனாகையிறே நலிந்தது. கலந்தார் செய்யக்கடவத்தை வளர்த்திற் பிறந்தார் செய்யக்கடவதோ? [நுந்திறத்தேது மிடையில்லை] - உங்கள் இடையாட்டத்தில், என்னைநலிகைக்கு ஓர் அவகாசமில்லை, உங்கள் பாரிப்புக்கு என்பக்கல் ஓர் அவகாசமில்லையென்றுமாம். [குழறேன்மினோ] - அக்ஷரவ்யக்தியான பேச்சைக் காட்டி முடியாதே கொள்ளுங்கோள். "உருவின வாள் உறையிலிடுங்கோள்" என்னுமா போலே, கெடுவிகாள்! உங்கள்வாயைப் புதையுங்கோளென்கிறாள். [இந்திரஞாலங்கள் காட்டி] - கண்டார்க்கு விடவொண்ணாத வடிவையும், சீலத்தையும், சேஷ்டிதத்தையும் காட்டி. 'இவை நிலைநில்லாமையாலே பொய்காண்' என்கிறாள். [ஏழுலகுங்கொண்ட] - பிறருடைமை கொள்ளுமிடத்தில் சேதியாதபடி கொள்ளுமவன். [நந்திருமார்வன்] - ப்ரணயித்வத்தால்வந்த ப்ரஸித்தியை எனக்குக்காட்டி. பிராட்டியோடு பழகிற்றும் ப்ரணயியாய்அன்று; அத்தைக்காட்டிக் கண்டாரை அகப்படுத்திக்கொள்ளுகைக்காக. சில பொய்களைக்காட்டி மஹாபலிபக்கல் நின்றும் பூமியைக் கொண்டாப்போலே, கலந்து பரிமாறுகிறானென்று தோற்றும்படி சிலபொய்களைச் செய்து விச்லேஷிக்கை, என்னை முடிக்கைக்கு உபாய மென்றுமாம். [நம்மாவியுண்ண நன்கெண்ணினான்] - நம்மை முடிக்கைக்கு நல்விரகு தானேபார்த்தான். உங்களுக்கு இங்கு அவகாசமில்லை, ஸர்வசக்தி யானவன் உத்யோகித்த கார்யத்திலே குறைகிடப்பதாய் அதிலே நீங்கள் ஸஹகரிக்கிறீர்கோளோ? நம்மை முடிக்கப் பார்த்தபார்வை அழகிதாகப் பார்த்தான் என்று தன்னிலே நொந்து சொல்லுகிறாள் என்றுமாம்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. தன்னினவாயிருந்துநலிகிற பூவைகளைக் த்து, அவன்தான் என்னை முடிக்கைக்கு நல்ல விரகு பார்த்தான்; இனி உங்களுக்கு கு விஷயமில்லை என்கிறாள்.

[அக்கரையின் றுழல்கின்றது] உங்களுக்கு இங்கு நலிய விஷயமின்றிக்கேயிருக்க, நடுவே நின்று வ்யர்த்தமே க்லேசப்படுகிறீர்களித்தனை. [யானுடைப்பூவைகாள்] என்னுடைப்பூவைகாள்! ஸர்வஸாதாரணமாயிருப்பார் செய்யலாமது, சிலர்க்கு ஸ்வாமிகளாயிருப்பார் செய்யலாகட்டதோ? நான் எனக்கு என்ன வழியுமாகாதே பாதிக்கைக்கு? அவனும், என்னுடையவனுகையிறே கவிர்ந்தது! [நுந்திறத்தேதுமிடையில்லை] உங்கள் இடையாட்டத்தில், என்னை நலிகைக்கு ஓர் அவகாசமில்லை; உங்கள்பாரிப்புக்கு என்பக்கல் அவகாசமில்லையென்னுமாம். [குழறேன்மின்] அநந்வயமான பேச்சைக் காட்டி முடியாதேகொள்ளுங்கோள்! அவன் தான் அதிகரித்த கார்யத்தில் செகிழுகின்றானன்றே, நீங்கள் இப்படி புதிர நிற்கவேண்டுவது? அதுக்கு உங்களுக்கு அவகாசம் வைத்தானோ! [இந்திரஞாலங்கள் காட்டி] கண்டார்க்குவிடவொண்ணாத வடிவையும், சீலத்தையும், சேஷ்டிதத்தையுங் காட்டி. இவை நிலைநில்லாமையாலே, "பொய்கள்" என்கிறாள். இந்திரஞாலமென்றும், பொய்யென்றும் பர்யாயம். [ஏழுலகுங்கொண்ட] பிறருடைய வஸ்துவை அபஹரிக்கப்புக்கால், அவர்களுக்கு ஒன்றும் சேஷியாதபடி அபஹரிக்குமவன். [நந்திருமார்பன்] ப்ரணயித்வத்தால்வந்த ப்ரஸித்தியை எனக்குக்காட்டி பிராட்டியோடே பழகிற்றும் ப்ரணயியாயன்று; அத்தைக்காட்டிக் கண்டாரை யகப்படுத்திக்கொள்ளுகைக்காக. சிலபொய்களைக்காட்டி பூமியைக் கொண்டாப்போலே, கலந்து பரிமாறுகிறானென்று தோற்றும்படி சில பொய்களைச் செய்து விச்லேஷிக்கை என்னை முடிக்கைக்கு உபாயமென்றுமாம். [நம்மாவியுண்ண நன்கெண்ணினான்] நம்மை முடிக்கைக்கு நன்றாகப்பார்த்தான். உங்களுக்கு இங்கு அவகாசமில்லை. ஸர்வசக்தி யத்னம்பண்ணத்தகார்யத்திலே குறைபடப்பதாய், அதிலே நீங்களும் ஸஹகரிக்கிறீர்களோ! நம்மை முடிக்கப்பார்த்த பார்வை அமுதாகப்பார்த்தான் என்று, தன்னிலே நொந்து சொல்லுகிறாளென்றுமாம்.

நன்கெண்ணிநான் வளர்த்த சிறுகிளிப்பைதலே*
இன்குரல்நீமிழற்றேல் என்னாருயிர்க்காகுத்தன்*
நின்செய்யவாயொக்கும்வாயன் கண்கைகாலினன்*
நின்பசுஞ்சாமநிறத்தன் கூட்டுண்டுநீங்கினான். (6)

ஒ.—ஆறாம்பாட்டில், தன்தசையை அறியாதே திருநாமத்தைச் சொல்லுகிற கிளியைக் குறித்து நான் ஸ்வஸ்தையாயிருந்தபோது எனக்கு இனிதாகத் திருநாமத்தைச் சொல்லக் கேட்கைக்கன்றோ உன்னை நான் வளர்த்தது. எனக்கு அஸாத்மயமான தசையில் திருநாமத்தைச் சொல்லாதேகொள் என்று அத்தை நிவர்த்திப்பிக்கிறாள். [என்னாருயிர்க் காகுத்தனென்று மேலுக்கு] - உன்னுடைய சிவந்தவாயும் கண்ணும் கையும் காலும்போலேயிருக்கிற திருப்பவளந் தொடக்கமான திவ்யாவயவங்களையுடையவனுமாய் உன்னுடைய குளிர்ந்த ச்யாமமாயிருந்துள்ள திருநிறத்தையுடையனுய் எனக்கு நல்லுயிராயிருக்கிற காகுத்ஸ்தன் இனி என்னோடே ஸம்ச்லேஷித்து என்ப்ரக்ருதியை அறிந்து வைத்தே பிரிந்தான்.

இ.—ஆறும்பாட்டில், தன்தசையை அறியாதே திருநாமத்தைச் சொல்லுகிற கிளியைக்குறித்து எனக்கு அஸஹ்யமான தசையிலே சொல்லவோ உன்னை வளர்த்தது? என்று அத்தை நிவர்த்திப்பிக்கிறாள். [நன்கெண்ணி] - திருநாமம் ஸாத்மிக்கும் தசையையறிந்து சொல்லவும், அஸஹ்யமான தசையில் தவிரவுமன்றோ உன்னைவளர்த்தது! [நான்வளர்த்த] - ஏகபுத்ரனைப் போலேயன்றோ வளர்த்தது. நானொன்றை ஆதரிக்கவமையுமாகாதே அந்யதாவாகைக்கு! அவனும் கிளியோபாதி பல்லுருவிறேயிருப்பது. [சிறுகிளிப்பைதலே] - சிறுமை - பருவம். பைதல்-வயஸ்ஸுக்குத்தக்க பாகுமின்றிக்கேயிருக்கை. உன் புகற்றனமிறே நலிகைக்கடி. [இன்குரல்] - "கூரியவேல்" என்னுமாபோலே. [நீமிழற்றேல்] - கிரம்பாமென்சொல்லாலே என்னை முடியாதேகொள். மாத்ருவதத்திலேயும் ப்ரவர்த்திப்பார் உண்டோ? [என்னாருயிர்க் காகுத்தன்] - வ்யதிரேகத்தில் தரிக்க அரிதாம்படியிறே கிட்டினபோது பரிமாறும்படி. "தயரதற்கு மகன்தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாக" என்றிறே இவரிருப்பது.

[நின் செய்யவாயொக்கும் வாயன்] - உன்னுடைய சிவந்தவாய்போலே யிருக்கும் வாயையுடையவன். உபமானத்தைச் சொல்லிச் சேர்த்துவிடுமத்தனையொழிய, உபமேயந்தன்னைப் பேசமுடியாது. உன்னைப்போலே சிவந்த கண்ணையும் கையையும் திருவடிகளையும் உடையவன் [நின் பசுஞ்சாமநிறத்தன்] - உன்னுடைய குளிர்ந்த ச்யாமமான நிறத்தையுடையவன். பசுஞ்சாமம் - ச்யாமமாய், எரித்திருக்கையன்றிக்கே குளிர்ந்திருக்கை. பச்சைநிறமென்னவுமாம். ஒருடம்பிலே இத்தனை பகை தேடிவைக்கலாமோ ! [கூட்டுண்டு நீங்கினான்] - கலந்து என் ப்ரக்ருதியை அறிந்துவைத்துப் பிரிந்தான்; அவன் கூடவிருந்தவன்றோ உன்படிகள் அநுகூலமாயிருப்பது ! தனியிருப்பில் நலிவார் ராவணாதிகளன்றோ ! அநுகூலர் நலிவரோ ?

௬.—ஆறாம்பாட்டு. கண்ணனைப் பரியாதே திருநாமத்தைச் சொல்லுகிற கிளிப்பிள்ளையைக் குறித்து, எனக்கு அஸஹ்யமான தசையிலே சொல்லவோ உன்னை வளர்த்தது ? என்று அத்தை வெறுத்துப் பேசுகிறாள்.

[என் சொல்லாய்] திருநாமம் கேட்கும் தசையைப் பிரிந்து சொல்லவும் அஸஹ்யமான தசையில் தவிரவுமன்றோ உன்னை வளர்த்தது? [நான் வளர்த்த] என் கண்களைப்போலே பார்த்து வளர்த்தது; நானொருத்தியை ஆதரிக்கவல்லையாகாதே அங்ஙனாயானதுக்கு ! அவனும் தனியேயாயாதே பண்பனுயிரே யிப்படி. [சிறுகிளிப்பைதலே] சிறுமை - பருவம். பைதல் - [illegible] பாகம் பின்றிக்கேயிருக்கை. உன் பசுமையிறே நலிகைக்கடி. [இன்குரல்] “கூப்பிடுவல்” என்னுமாபோலே. [நீ மிழற்றேல்] நீ ப்ரேமமென் சொல்லால் என்னை முடியாதேகொள் ! மாத்ருவத்திலேயும் ப்ரவர்த்திப்பாருண்டோ ? [என்னாருயிர்க் காகுத்தன்] ஸ்ரீ அயோத்யையில் தரிக்கைப் பீராமப்படியிறே பெண்பிறந்தவர்களைப் போகப் பிரமாறிற்று. “தயரதற்கு மகன் தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாக” என்றிறே இவளிருப்பது; [நின் செய்யவாயொக்கும் வாயன்] உன்னுடைய வாய்போலே யிருக்கும் வாயையுடையவன். உபமானத்தைச்சொல்லிச் சேர்த்துவிடுமத்தனையொழிய, உபமேயந்தன்னைப் பேசமுடியாது. [கண்ணன் கைகாலினன்] உன்னைப்போலே சிவந்த கண்ணையும், கையையும் திருவடிகளையுமுடையவன். [நின் பசுஞ்சாம நிறத்தன்] உன்னுடைய குளிர்ந்த ச்யாமமான நிறத்தையுடையவன். [பசுஞ்சாமம்] ச்யாமமாய் எரித்திருக்கையன்றிக்கே, குளிர்ந்திருக்கை. ஒருடம்பிலே இத்தனை பகைதேடி வைக்கலாமோ ? [கூட்டுண்டு நீங்கினான்] கலந்து என் ப்ரக்ருதியை யறிந்துவைத்துப் பிரிந்தான் ; அவன் கூடவிருந்தாலன்றோ உன்படிகள் அநுகூலமாயிருப்பது ? தனியிருப்பில் நலிவார் ராவணாதிகளன்றோ ? அநுகூலரும் நலிவரோ ?

கூட்டுநின்று நீங்கிய கோலத்தாமரைக்கண்செவ்வாய்*
வாட்டமில்லென்கருமாணிக்கம் கண்ணன்மாயன்போல்*
கோட்டியவில்லொடு மின்னுமேகக்குழாங்கள்காள்*
காட்டேன்மின் நும்முரு என்னுயிர்க்கதுகாலனே. (7)

௭.—ஏழாம்பாட்டில், அவனுடைய திருநிறம்போலேயிருக்கிற நிறத்தையுடைய மேகங்களைக் கண்டு பொறுக்கமாட்டாமை 'உங்கள் வடிவைக்காட்டி என்னை முடியாதேகொள்ளுங்கோள் என்கிறாள். [கூட்டுநின்றென்று தொடங்கி] - என்னோடே கலந்து பிரிகையாலே அழகிய தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்களையும் சிவந்த திருப்பவளத்தையும் எனக்கு மறக்கவொண்ணாதபடி ச்லாக்யமான கறுத்த திருநிறத்தையுமுடையனும் அத்யாச்சர்யமான வடிவழகையுடையனுமாய், என்னைப்பிரிந்துஒருவாட்டமின்றிக்கேயிருக்கிற க்ருஷ்ணனைப் போலே. [கோட்டியவில் என்று மேலுக்கு] - வளைந்த வில்லோடேகூட மின்னுநின்றுள்ள, மேகஸமூஹங்காள் ! உங்கள்வடிவைக் காட்டாதேகொள்ளுங்கோள் ; என் நெஞ்சிலேயன்றில்,-என்னுடைய ப்ராணனுக்கு அது ம்ருத்யு. அதுவென்று-மேகங்களுடைய வடிவைக் காணமாட்டாமை பராங்முகியாயிருந்து சொல்லுகிறாள்.

ஐ.—ஏழாம்பாட்டில், அவன்வடிவுக்குப் போலியான மேகமாலையைக் கண்டு உங்கள்வடிவைக் காட்டி என்னை முடியாதேகொள்ளுங்கோள் என்கிறாள். [கூட்டுண்டு நீங்கியவென்று தொடங்கி]-ஏகதத்த்வம்" என்னும்படி கலந்து பிரிந்தபின்பு அவனுடைய அவயவசோபையிருந்தபடி என்னுதல்; இவளோடே கலக்கையாலேவந்த சோபையென்னுதல். [கோலத்தாமரைக்கண் செவ்வாய்] - தர்சநீயமான தாமரை போலேயிருக்கிற கண்ணையும் சிவந்தவாயையும் உடையவனும், [வாட்டமில் என்கருமாணிக்கம்] - பிரிந்த பின்பும் மறக்கவொண்ணாதபடி ஸ்பர்சமாய் ஒளிகிற நீலரத்நம்போலேயிருக்கிற நிறத்தையுடையவனும்; கலந்தபோது வடிவிற்பிறந்த செவ்வி பிரிந்தபின்பும் அப்படியேயிருக்கிறபடியைச் சொல்லிற்றாகவுமாம்; இத்தலையை வெறுந்தரையாக்கினபின்பு நிறம் இரட்டித்தபடி. "நைவ தம்சாந் ந மசகாந்" என்று அவளிருக்க, அரைக்ஷணம் தாழ்த்தானென்று இவ்வார்த்தையைச் சொல்லுகிறாளிறே! [கண்ணன் மாயன்போல்] - ஆச்சர்யபூதனான க்ருஷ்ணனைப்போலே; கலந்தபோது காலைக்கையைப் பிடித்துப் பரிமாறி பவ்யனாயிருந்தபடி. [கோட்டிய இத்யாதி] - வளைந்த வில்லோடேகூடி மின்னுகின்றுள்ள மேகஸமூஹங்காள்! கௌஸ்துபஸ்தாநீயமிறே மின். [காட்டேன்மின் நும் உரு] - ம்ருத்யுஸத்ருசமான உங்கள் வடிவைக் காட்டாதேகொள்ளுங்கோள். அவ்வடிவைக்கொண்டு அகலவிருந்தவனோடு உங்களோடு வாசியற்றிருந்ததீ! "அதுவென்" என்னில்; - [என்னுயிர்க்கு அதுகாலனே] - பண்டே விரகத்தின்ற என்னுடையப்ராணனுக்கு ம்ருத்யு. 'குழாங்கள்காள்' என்றுவைத்து, 'அது' என்கிறது காணமாட்டாமையாலே முகம்மாறிச் சொல்லுகிறாள்.

ஈடு.—ஏழாம்பாட்டு. அவன்வடிவுக்குப்போலியான மேகமாலையைக்கண்டு, உங்கள் வடிவைக்காட்டி என்னை முடியாதேகொள்ளுங்கோள் என்கிறாள்.

[கூட்டுண்டுஇத்யாதி] "ஏகதத்த்வம்" என்னும்படி கலந்து பிரிந்தபின்பு அவனுடைய அவயவசோபையிருந்தபடி யென்னுதல்; இவளோட்டைக் கலவியாலேவந்த சோபையென்னுதல். [கோலத்தாமரைக்கண்செவ்வாய்] அழகியதாமரைபோலேயிருக்கிற திருக்கண்களையும் சிவந்த அதரத்தையுமுடையனும். [வாட்டம் இத்யாதி] கலந்தபோதைச் செவ்வி, விரஹத்திலும் தலைச்சாவி வெட்டப்போகிறதில்லைகாணும்; இத்தலையை வெறுந்தரையாக்கினபின்பு இரட்டித்தபடி. [என்கருமாணிக்கம்] பிரிந்தபின்பும் மறக்கவொண்ணாதபடி ஒளியுள்ள நீலரத்நம்போலேயிருக்கிற திருநிறத்தையுடையனும். "நைவ தம்சாந் ந மசகாந்" என்று அவளிருக்க, அரைக்ஷணம் தாழ்த்தானென்று இவ்வார்த்தையைச் சொல்லுகிறாளிறே! [கண்ணன் மாயன் போல்] ஆச்சர்யபூதனான க்ருஷ்ணனைப்போலே; கலந்தபோது காலைக்கையைப் பிடித்துப் பரிமாறி பவ்யனாயிருந்தபடி. [கோட்டியவில் இத்யாதி] வளைந்தவில்லோடே கூடி மின்னுகின்றுள்ள மேகஸமூஹங்காள்! கௌஸ்துபம் திருமேனிக்கு ப்ரகாசகமானாப்போலே இராநின்றது மின். [காட்டேன்மின் நும் உரு] ம்ருத்யுஸத்ருசமான உங்கள்வடிவைக் காட்டாதேகொள்ளுங்கோள்! அவ்வடிவைக்கொண்டு அகல இருந்தவனோடு உங்களோடு வாசியில்லையாயிருந்ததீ; "அதுவென்?" என்னில்,-[என்னுயிர்க்கு அதுகாலனே] விரஹாக்நிதின்று பண்டே தப்பு அற்ற என்ப்ராணனுக்கு அது ம்ருத்யுவாகாநின்றது. 'குழாங்கள்காள் காட்டேன்மின் நும்முரு' என்று வைத்து 'அது' என்கிறது, காணமாட்டாமை, முகத்தை மாறவைத்துச் சொல்லுகிறாள்.

உயிர்க்கதுகாலனென்று உம்மையானிரந்தேற்கு* நீர்
குயிற்பைதல்காள் கண்ணன்நாமமேகுழறிக்கொன்றீர்*
தயிர்ப்பழஞ்சோற்றொடு பாலடிசிலுந்தந்து* சொல்
பயிற்றியநல்வளமூட்டினீர் பண்புடையீரே. (8)

ஐ.—எட்டாம்பாட்டில், சிலகுயில்களைக்குறித்து, வேண்டாவென்று ப்ரார்த்திக்க மேன்மேல் திருநாமத்தைச்சொல்லி நலிந்திகோள்; உங்களை வளர்த்த ப்ரயோஜநம் பெற்றேனிறே என்று இன்னாதாகிறாள் [உயிர்க்கென்று தொடங்கி] -'குயிற்பிள்ளைகாள்! அவனுடைய திருநாமங்களை நீங்கள்

சொல்லில் நான்முடிவன் ; அவற்றைச் சொல்லித்தாழ்ப்ப வேணும்' என்று உங்களை இரந்த எனக்கு, க்ருஷ்ணனுடைய திருநாமங்களையே சொல்லி என்னைக் கொன்றிகோள். [துயிற்பழுதுசெய்திறன்று தொடங்கி] - காலந்தோறும் உங்களுக்கு அபேக்ஷிதமானவற்றையே தேடியிட்டு உங்களைச்சொல்ல அப்யஸிப்பித்ததுக்கு ப்ரத்யுபகாரம் பண்ணினிகோள் ! சாலத் தக்காராயிருந்தீகோள் !

௯.—எட்டாம் பாட்டில், சில குயில்களைக்குறித்து, திருநாமஞ் சொல்லவேண்டாவென்றிரக்க, அத்தையே சொல்லி நலிந்திகோள் ! உங்களைவளர்த்த ப்ரயோஜநம் பெற்றேன்! என்கிறாள். [உயிர்க்கு] - தோற்புரையேபோமதன்று அது என்கிறாள். தன்வாயாலே சொல்ல மாட்டாமையாலே. [காலமென்று] - கலிகைபண்ணிக்கே முடிக்குமென்று. [உம்மை] - நீங்களோவிரந்து என்கார்யஞ்செய்யும் உங்களை. [நான்] - உங்களுக்கு நீங்கியாய் மறக்கவொண்ணாத நான். [இரந்தேற்கு] - உங்களை நியமித்தேனோ? என் செல்லாமையாலே சரணம் புகுந்த எனக்கு [நீர்] - நியாம்பரான நீங்கள், சரணாகதகாதுகராணிகோள். [குயில்பைதல்காள்] - உங்கள்பால்யம் என்ப்ராணனோடே போய்த்திரோ! பருவம்சிரம்பாமையிலும் தாய்வசியறியவேண்டாவோ ? ''நாங்கள்செய்ததென் ?'' என்ன, [கண்ணனன்னாமமே குழறிக் கொன்றீர்] - தீரா மாற்றாலே நெஞ்சைப் புண்படுத்திவைக்கும் க்ருஷ்ணன்திருநாமங்களையே அவ்யக்தமாகச்சொல்லி முடித்திகோள். ம்ருதஸஞ்ஜீவநமான ராமகுணங்களை ஒருகால் சொல்லலாகாதோ ? [தயிர் இத்யாதி] - தயிரும் பழஞ்சோறும், பாலும்வெஞ்சோறும் அவ்வவகாலங்களுக்கு உசிதமாகத்தந்து திருநாமங்களைக் கற்பித்ததுக்கு ப்ரத்யுபகாரம் பண்ணினிகோள். [நல்வளமூட்டினீர்] - நல்லவைபத்தை புஜிப்பித்திகோள், நான் காலந்தோறும் உங்களுடைய ரக்ஷணம்பண்ணிப்போந்தேன்; நீங்களும் இவ்விடங்களிலே நலிந்து போந்திகோள் ! [பண்புடையீரே] - ப்ரஸக்தியும் பல்யதையும் கிடக்க, சாலசீர்மையுடையீரா யிருந்திகோள்! ரக்ஷகவிஷயத்தில் நிர்த்தயரா யிருந்திகோள்! பண்பு - குணம்.

௯.—எட்டாம்பாட்டு. சில குயில்களைக்குறித்து, திருநாமஞ்சொல்லவேண்டாவென்று நான் இரக்க, அத்தையேசொல்லி நலிந்திகோள்; உங்களை வளர்த்த ப்ரயோஜநம்பெற்றேன் என்கிறாள்.

[உயிர்க்குஅது] தோற்புரையேபோமதன்று அது வென்கிறாள் - தன் வாயாலே சொல்ல மாட்டாமையாலே. [காலமென்று] கலிகைபண்ணிக்கே முடிக்குமென்று. [உம்மை] இரந்து என்கார்யஞ்செய்யும் உங்களை. [நான்] உங்களுக்கு மறக்கவொண்ணாதபடி நல்லவனான நான். [இரந்தேற்கு] உங்களை நியமித்தேனோ? என்செல்லாமையாலே சரணம்புகுந்த எனக்கு [நீர்] நியாம்பரான நீங்கள். சரணாகதகாதுகராணிகோள். [குயில்பைதல்காள்] உங்கள்பால்யம் என்ப்ராணனோடே போய்த்திரோ! பருவம்சிரம்பாமையிலும் தாய்வாசி யறியவேண்டாவோ? ''நாங்கள்செய்ததென்?'' என்ன, [கண்ணனன்னாமமே குழறிக்கொன்றீர்] தீரா மாற்றாலே நெஞ்சைப் புண்படுத்திவைக்கும் க்ருஷ்ணன்திருநாமங்களையே அவ்யக்தமாகச் சொல்லி முடித்திகோள். ம்ருதஸஞ்ஜீவநமான ராமகுணங்களையும் ஒருகால் சொன்னாலாகாதோ! [தயிர் இத்யாதி] தயிரும்பழஞ்சோறும், பாலும்வெஞ்சோறும் அவ்வவகாலங்களிலே தந்து திருநாமங்களைக் கற்பித்ததுக்கு ப்ரத்யுபகாரம்பண்ணினிகோள்! [நல்வளமூட்டினீர்] நல்ல வைபத்தை புஜிப்பித்திகோள்! நான் காலந்தோறும் உங்களுடைய ரக்ஷணம்பண்ணிப்போந்தேன்; நீங்களும் இவ்விடங்களிலேவந்து நலிந்துபோந்திகோள். இக்குயில்களுக்கு அந்தோஷம் பலித்துவிட்டதோ? [பண்புடையீரே] ப்ரஸக்தியும் பல்யதையும்கிடக்க, சால சீர்மையுடையீரா யிருந்திகோள்! ரக்ஷகவிஷயத்தில் நிர்த்தயரா யிருந்திகோள்!

பண்புடை வண்டொடு தும்பிகாள் பண்மிழற்றேன்மின்*
புண்புரை வேல்கொடு குத்தாலொக்கும் நும்மின்குரல்*
தண்பெருநீர்த் தடந்தாமரை மலர்ந்தாலொக்கும்
கண்பெருங்கண்ணன்* நம்மாவியுண்டெழ நண்ணினன். (9)

ஆ.—ஒன்பதாம்பாட்டில், மதுபானமத்தமாய்க்கொண்டு பாடுகிறன சிலவண்டுகளையும் தும்பிகளையும் குறித்து உங்களுடையத்வநிகள் துஸ்ஸஹமாயிருந்தன. நீங்கள் பாடாதேகொள்ளுங்கோள் என்கிறாள். [பண்புடையென்று தொடங்கி] நீர்மையையுடைய வண்டோடுகூடினதும்பிகாள்! பண்மிழற்றாதேகொள்ளுங்கோள். 'பண்புரை' என்று பாடமானபோது, பண்ணைமுரலாநின்றுள்ள வண்டோடு கூடினது. [புண்புரையென்று தொடங்கி] - புண்ணின் விவரத்திலே வேலைக்கொடு குத்தினாற்போலே மிராநின்றது, உங்களுடைய இனியத்வநிகள். [தண்பெருநீரென்று மேலுக்கு] - குளிர்ந்த நீர்வெள்ளத்திலே பெரிய தாமரைப்பூ அலர்ந்தாற்போலேயாய் அவ்வளவன்றிக்கே பெரிய கண்களையுடைய க்ருஷ்ணன் அவ்வழகைக்காட்டி என்னை மாய்த்துப் பிரிந்துபோனான். குளிர்ந்த நீர்வெள்ளத்தையுடைய தடாகம் தாமரைப் பூத்தாற்போலே பெரியகண்களையுடைய க்ருஷ்ணனென்றுமாம்.

இ.—ஒன்பதாம்பாட்டில், மதுபானமத்தமாய்க்கொண்டு பாடுகிறன சில வண்டுகளையும் தும்பிகளையுங் குறித்து உங்கள் த்வநிகள் துஸ்ஸஹமாயிருந்தன நீங்கள் பாடாதேகொள்ளுங்கோள் என்கிறாள். [பண்புடை இத்யாதி] - நீர்மையுடைய வண்டோடேகூடின தும்பிகாள்! பண்மிக்க ஆளத்தியையாதே கொள்ளுங்கோள். 'பண்புரை' - என்று பாடமானபோது பண்பான உரையாய் முரலுகையைச் சொல்லுகிறது ; பண்ணைமுரலாநின்ற வென்றுமாம். [புண் இத்யாதி] - புண்ணின் விவரத்திலே வேலைக் கொண்டு குத்தினாற்போலே மிராநின்றது உங்கள் இனியத்வநி. கீழ்ல் பதார்த்தங்களெல்லாங்கூடப் புண்படுத்தின, அதிலேயவிகிறன இவை. [தண்பெருநீர் இத்யாதி] - குளிர்ந்து பெரியநீரையுடைய பொய்கையிலே தாமரைப்பூ அலர்ந்தாற்போலேயாய் அவ்வளவன்றிக்கே பெரியகண்களையுடைய க்ருஷ்ணன். [நம் மாவியுண்டெழ நண்ணினான்] - அவ்வழகைக்காட்டி என்னை முடித்துப் பிரிந்துபோனான்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. மதுபானமத்தமாய்ப்பாடுகின்ற சிலவண்டுகளையும் தும்பிகளையுங் குறித்து, உங்கள்த்வநி எனக்கு துஸ்ஸஹமாயிருந்தது, நீங்கள் பாடாதேகொள்ளுங்கோள் என்கிறாள்.

[பண்புடைவண்டொடுதும்பிகாள்] நீர்மையுடைய வண்டோடேகூடின தும்பிகாள்! [பண்மிழற்றேன்மின்] பண்மிக்க ஆளத்தியையாதேகொள்ளுங்கோள். "பண்புரை" என்று பாடமானபோது, பண்பானவுரையாய், முரலுகையைச்சொல்லுகிறது; பண்ணைமுரலாநின்ற வென்றுமாம். [புண்புரைவேல்கொடுகுத்தாலொக்கும் நும் இன்குரல்] முன்பே மற்றையவற்றின் த்வநியாலே புண்பட்டிருக்கிறது; அதிலே வேலைக்கொடு குத்தினாற் போலேயிராநின்றது உங்கள் த்வநி. [தண்பெருநீரித்யாதி] குளிர்ந்த பெரியநீரையுடைய பொய்கையிலே தாமரைப்பூ அலர்ந்தாற்போலேயாய் அவ்வளவன்றிக்கே பெரிய கண்ணையுடைய க்ருஷ்ணன் [நம் இத்யாதி] அவ்வடிவழகைக்காட்டி என்னை முடித்துப் பிரிந்துபோனான்.

எழநண்ணிநாமும் நம்வானநாடனோடொன்றினோம்*
பழனநன்னாரைக்குழாங்கள்காள் பயின்றென்னினி*
இழைநல்லவாக்கையும் பையவேபுயக்கற்றது*
தழைநல்லவின்பந்தலைப்பெய்து எங்குந்தழைக்கவே. (10)

ஆ.—பத்தாம்பாட்டில், 'திரளாயிருக்கிற நாரைக்குழாங்கள் தன்னைமுடிக்க மந்த்ரிக்கிறன வாகக்கொண்டு, 'நான் முடிந்தேன்: இனி நீங்கள் திரண்டு ப்ரயோஜநமென்?' என்கிறாள். [எழநண்ணியென்று தொடங்கி] -இங்கேயிருந்து அவனை புஜிக்கும் ஆசையைத்தவிர்ந்து, அவன்கருத்தின் படியே நானும்முடிந்தேன்; பழனங்களிலேயிருப்பதுஞ்செய்து நீங்கள்கோலினபடியே முடிக்கவல்ல நாரைக்குழாங்கள்காள்! திரண்டு என், இனி ? [இழையென்று தொடங்கி] - விலக்ஷணமான சரீரமும் க்ரமேண பசையற்றது. [தழையென்று தொடங்கி] - இப்படித் தளர்ந்து முடியாநிற்கிறவள், எம்பெருமானுடைய விபூதிஸம்ருத்தமாக என்கிறாள்; நான்பட்ட து:க்கம் ஒருவரும் படாதொழியவேணும் என்று

தன்னுடைய நோவின் மிகுதியாலே சொல்லுகிறாளென்றுமாம். நான் போக, லோகமெல்லாமுடைய என் ஆர்த்திகாளுதே பிழைக்கும்மாகாதே! என்றுமாம்.

இ.—பத்தாம்பாட்டில், திரளவிருக்கிற நாரைக்குழாங்கள் தன்னை முடிக்க மந்த்ரிக்கிறனவாகக் கொண்டு, 'நான்முடிந்தேன்' இனி நீங்கள் திரண்டு ப்ரயோஜநமென்?, என்கிறாள். [எழுவன்னனி இத்யாதி] - போக்கிலே பொருப்பட்டு, நாமும் கம்பானாடேயோடொன்றினோம். கடலைக் குளப்படியிலே மடுத்தாற்போலே தன்னையிலக்காக்கி இத்தலையை வெறுந்தரையாக்கித் தன்னைக்கொண்டு அகன்றான். நாமும் அயர்வறுமமரர்கள் அதிபதியோடே ஒருமிட்டுறோம். நித்யஸூரிகளும் அவனுமாயிருந்து நம்மை முடிக்க எண்ணினபடியே நாமும் இசைந்தோம். அவன் முடிக்கநினைக்க, நாம் ஜீவிக்கவெண்ணி இடக்கைப்புரி முறுக்குகை தவிர்ந்து நாமும் முடிகையிலே துணிந்தோம். நித்யஸூரிகளும் ச்சந்தாநுவர்த்திகளாகையாலே அவன் கருத்தே கருத்தாயிருப்பர்களிறே. [பழனநன்னாரைக் குழாங்கள்காள்] - நீர் நிலங்களிலே வர்த்திப்பதாய், தொடங்கின காரியம் முடிக்கவல்ல ஸாமர்த்த்யத்தையுடைத்தான நாரைக் குழாங்கள்காள்! [பயின்றெனினி] - திரண்டு ப்ரயோஜநமென்? நான் அவன்கருத்தைப் பின்செல்ல நினையாதவளன்றோ? உங்கள் மந்த்ரத்துக்கு ப்ரயோஜநமுள்ளது? முதலிகள் திரள்திரளாகவிருந்து பெருமானையும் பிராட்டியையும் சேர்க்கைக்கு விரகுபார்த்தாற்போலே, இவை திரள்திரளாக விருந்து தன்னையும் அவனையும் பிரிக்கைக்கு விசாரிக்கிறன என்றிருக்கிறாள். "அவன் வேண்டுமவரைச் சேர்க்கையும் வேண்டாதாரை முடிக்கையும், திர்யக்குக்கள் பணி" என்றிருக்குமிறே, ராமாவதாரத்தில் வாஸநையாலே. [வானாடன்] - 'நாரைக்குழாங்கள்காள், என்கையாலே, உபயவிபூதியும் வேணுமோ ஓர் அபலையை முடிக்கைக்கு! [இழைநல்லவாக்கையும்] - ஆபரணத்தாலே அழகிதான சரீரமென்னுதல், ஆபரணம் பூண்டாற்போலேயிருக்கிற விலக்ஷணசரீரமென்னுதல். [பையவே புயக்கற்றது] - க்ரமேண பாசையற்றதென்னுதல், க்ரமத்திலே போகத்தொடங்கிற்றென்னுதல். புயந்தலென்றுபோதலாதல், புயக்கென்று - ஆகர்ஷகத்வமாதல். [தழைநல்ல இத்யாதி] - ஈச்வரவிபூதி ஸம்ருத்தமாகவேணும் என்கிறாள். "கல்கித்தான் காத்தளிக்கும்பொழில்"லிறே. "தாந்தாம் முடியவிருப்பார் 'நாடுவாழ்க' என்பாரைப்போலே சொல்லுகிறாள்" என்று ஆளவந்தார்நிர்வாஹம். "நான்பட்டபாடு நாடுபடாதொழிய வேணும்" என்று எம்பெருமானார். "என்முடிய என்னார்த்திகாளுதே லோகமடையப் பிழைக்கும்" என்று பட்டர்.

௧௦.—பத்தாம்பாட்டு. திரளவிருக்கிற நாரைக்குழாங்கள் தன்னைமுடிக்கமந்த்ரிக்கிறனவாகக்கொண்டு, 'நான் முடிந்தேன்; இனி, நீங்கள் திரண்டு ப்ரயோஜநமென்?' என்கிறாள்.

[எழுவன்னனி] போக்கிலே பொருப்பட்டு. [நாமும் கம்பானாடேயோடொன்றினோம்.] கடலைக் குளப்படியிலே மடுத்தாற்போலே தன்னை யிலக்காக்கி இத்தலையை வெறுந்தரையாக்கித் தன்னைக்கொண்டு அகன்றான். நாமும் அயர்வறுமமரர்கள் அதிபதியோடே ஒருமிட்டுறோம். நித்யஸூரிகளும் அவனுமாகவிருந்து நம்மைமுடிக்க எண்ணினபடியே நாமும் இசைந்தோம். அவன் முடிக்க நினைக்க, நாம் ஜீவிக்கவெண்ணி, இடக்கைப்புரி முறுக்குகை தவிர்ந்து நாமும் முடிகையிலே துணிந்தோம். நித்யஸூரிகளும் ச்சந்தாநுவர்த்திகளாகையாலே, அவன் கருத்தே கருத்தாயிருப்பர்களிறே. [பழனநன்னாரைக் குழாங்கள்காள்] நீர்நிலங்களிலே வர்த்திப்பனவாய்த் தொடங்கின காரியம் முடிக்கவல்ல ஸாமர்த்த்யத்தையுடைத்தான நாரைக்குழாங்கள்காள்! [பயின்றெனினி] இனி நீங்கள் திரண்டு ப்ரயோஜநமென்? நான் அவன்கருத்தைப் பின் செல்லாதவளன்றோ? உங்கள் மந்த்ரத்துக்கு ப்ரயோஜநமுள்ளது? முதலிகள் திரள்திரளாக விருந்து பெருமானையும் பிராட்டியையும் சேர்க்கைக்கு விரகுபார்த்தாப்போலே இவை திரள்திரளாக விருந்து தன்னையும் அவனையும் பிரிக்கைக்கு விரகு பார்க்கிறன வென்றிருக்கிறாள். "அவன் வேண்டுமவரைச் சேர்க்கையும் வேண்டாதாரை முடிக்கையும், திர்யக்குகளுக்குப் பணி" என்றிருக்குமிறே, ராமாவதாரத்தில் வாஸனையாலே. 'வானாடன் - நாரைக்குழாங்கள்காள்' என்கையாலே, உபயவிபூதியும் வேணுமோ ஓரபலையை முடிக்கைக்கு? [இழைநல்லவாக்கையும்] ஆபரணத்தாலே அழகிதான சரீரமென்னுதல், ஆபரணம் பூண்டாற்போலேயிருக்கிற விலக்ஷணசரீரமென்னுதல். [பையவே புயக்கற்றது] க்ரமேண பாசையற்றதென்னுதல், க்ரமத்திலே போகத்தொடங்கிற்றென்னுதல். புயத்தலென்று - போதலாதல், புயக்கென்று—

ஆச்சர்யபூதன். [தனைநல்லவிர்யாதி] சர்வாவிபூதி ஸம்ந்த்தமாக வேணுமென்கிறான். "காம்தாம் முடிபனைப்பார் 'சாதி வாழ்க' என்பாரைப்போலே சொல்லுகிறான்" என்று ஆளவந்தார்ஸ்வாதார்; "காள் பட்ட பசு நீதி படா தொழில்லுணுப்" என்று எம்பெருமானார்; "காள் முடிய என்றுர்த்திகன்றி கோபபடாதே, லோகமடங்கப் பிழைக்குமாகாதே!" என்று பட்டர்.

இன்பந்தலைப்பெய்தெங்குந்தழைத்த பல்லூழிக்கு*
தன்புகழேத்தத் தனக்கருள்செய்த மாயனை*
தென்குருகூர்ச்சடகோபன் சொல்லாயிரத்துள் இவை*
ஒன்பதோடொன்றுக்கும் மூவுலகும் உருகுமே. (11)

ஓ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிப் பாசுரத்தை ஸ்ருதபத்திலே படில் ஆரேனுமாகிலும் தரியாரென்கிறார். [இன்பமென்று தொடங்கி] லோகமெல்லாம் வெள்ளமிட்ட நிரதிசயப்ரீதியையுடையராய்க்கொண்டு காலதத்த்வமுள்ளதனையும் தன்புகழை ஏத்தும்படி தனக்கு அருள்செய்த ஆச்சர்யபூதனை. [தென்குருகூர்ச்சடகோபன் என்று மேலுக்கு] - ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரந்திருவாய்மொழியிலும் "ஒன்பது பாட்டுளுண்டான வ்யஸநம் அதிகம்" என்னும்படி வ்யஸநம் மிகவிருக்கிற பத்தாம்பாட்டோன்ன புழுடைய இத்திருவாய்மொழி கேட்டால், விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியன்றிக்கே சிதிலராவர்.

இ.—நிகமத்தில் இத்திருவாய்மொழியிற் பாசுரம் ஸ்ருதநாத்திலேபடில் ஆரேனுமாகிலும் தரியாரென்கிறார். [இன்பமித்யாதி] - எங்கும் தழைத்த இன்பம். [தலைப்பெய்து] - லோகமெல்லாம் வெள்ளமிட்ட நிரதிசயப்ரீதியையுடையராய்க்கொண்டு. [பல்லூழிக்குத் தன்புகழேத்த] - காலமுள்ளதனையும் தன் குணங்களை ஏத்தும்படி. [தனக்கருள்செய்த] - ஸம்ஸாரிகளிலே அந்யதமரானவர்க்கு மயர்வறமதிநலமருள்செய்தபடி. [மாயனை] ஸம்ஸாரிகள்நடுவே என்னை ஒருவனையும் விசேஷகடாக்ஷம்பண்ணின ஆச்சர்யபூதனை. அங்ஙனன்றிக்கே, [இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைத்த தன்புகழை பல்லூழிக்கு தனக்கருள்செய்த மாயனை] - அநுபவிப்பார்க்கு நிரதிசய ஆநந்தத்தை விளைப்பதாய் எங்கு மொக்கப்பரம்பின தன் கல்யாணகுணங்களைக் காலதத்த்வமுள்ளதனையும் நான் அநுபவிக்கும்படிபண்ணினான் என்றுமாம். இவர் "குணைர்தாஸ்யமுபாகத:" என்கிறது, 'தன்புகழேத்தத் தனக்கருள்செய்த' என்றதைக் கொண்டிறே. நித்யஸூரிகளநுபவத்தையும், தமக்கு அவர்களோபாதி ப்ராப்தியையும் அநுஸந்தித்து நோவுபட்டார்; என்றுமொக்க இருந்திருக்கிற ஸம்ஸாரிகளுடைய பார்த்துவாரே அவர்களில் அவ்விருப்புத்தானே பேறும்தோற்றிற்று. உபசாரமும் வ்யாவ்ருத்தியாவதிவர்க்கு. சடகோபன்சொல் என்று பரோக்ஷ நிர்த்தேசமாகையாலே தனக்கருள்செய்த என்னவமைம்; "வாலமீகிர் பகவாந்ருஷி" என்னுமாபோலே [ஒன்பதோடொன்றுக்கும்] - "ஒன்பதுபாட்டிலும் உண்டானவ்யஸநம் அதிகம்" என்னும்படி வ்யஸநம்மிக்க பத்தாம்பாட்டையுடைய இவை. ஸ்மாரகபதார்த்தங்களாலே துக்கத்தில் நசையோடே நோவுபட்ட ஒன்பதுபாட்டோடே, துக்கத்தில் நசையற்ற பாட்டுக்கும். விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற சிதிலராவர். இதுமே, "நம்ஆர்த்தத்வநிக்கட்டு நாட்டுக்கு நோவுபடவேண்டா" என்றார்; பின்னையும் நாட்டுக்கு சைதில்யமே சேஷித்துவிட்டது.

ஈடு.—நிகமத்தில், இத் திருவாய்மொழியிற் பாசுரம் ஸ்ருதபத்திலேபடில், ஆரேனுமாகிலும் தரியார் என்கிறார்.

[இன்பந்தலைப்பெய்து எங்குந்தழைத்த] எங்குந்தழைத்த இன்பந்தலைப்பெய்து—லோகமெல்லாம் வெள்ளமிட்ட நிரதிசயப்ரீதியையுடையராய்க்கொண்டு. [பல்லூழிக்குத் தன்புகழேத்த] காலமுள்ளதனையும் குணங்களை ஏத்தும்படி. [தனக்கருள் செய்த] ஸம்ஸாரிகளிலே

அப்ரதமானவர்க்கு, பரவசமதிகமுருவிச்செய்தபடி. [மாயனை] ஸம்ஸாரிகளற்றிலே என்னை யொருவனையும் விசேஷகடாக்ஷம்பண்ணின ஆச்சர்யபூதனை. அவ்வளவன்றிக்கே [இன்பந்தலைப் பெய்தெங்குந்தழைத்த - தன்புகழேத்த - பல்லூழிக்கு - தனக்கருள்செய்தமாயனை] அநுபவிப் பார்க்கு நிரதிசயாநந்தத்தை விளைப்பதாய் எங்குமொக்கப் பரம்பின தன் கல்யாணகுணங்களை, காலதத்வமுள்ளதனையும் நான் அநுபவிக்கும்படி பண்ணினனென்கிறார். இவர் "குணஜ் ஞானத்தாலே தரித்தார்" என்கிறது. "தன்புகழேத்தத் தனக்கருள்செய்த" என்று இத்தைக் கொண்டிறே. நித்யஸூரிகள் அநுபவத்தையும், தமக்கு அவர்களோடொத்த ப்ராப்தியையும் அநுஸந்தித்து லோகப்பட்டார்; என்றுமொக்க இருந்திருக்கிற ஸம்ஸாரிகள்படியைப் பார்த்த வாறே, இவ்வேற்றத்தை பெறுங்கோற்றிற்று. "சடகோபன் சொல்" என்று பரோபகாரத் தேசத்தாலே, "தனக்கருள்செய்த" என்னலாயிற்று; "வால்மீகிப்பகவான் கூறி" என்னுமாபோலே [ஒன்பதோடொன்றுக்கும்] "ஒன்றான பத்துப்பாட்டிலும் உண்டான ப்ரபன்ன லாபம்" என்னும் படி வ்யஸனம் மிக்க பத்தாம்பாட்டையுடைய இவை. ஸம்ஸாரபதார்த்தங்களாலே ஜீவனத்தில் ஆசைவிட்டே லோகப்பட்ட ஒன்பது பாட்டோடே, ஜீவநத்தில் ஆசைபற்ற ஒருபாட்டுக்கும். [மூவுலகும் உருகுமே] ஆரேனுமாகிலும் தரியார், என்னுடைய ஆர்த்ததசைத்தாலே நாடு அழிய வேண்டாவாகாதே என்றவர்க்கு, பின்னையும் நாட்டார்க்கு சைதில்யமே பலித்துவிட்டது. 'எங்குந்தழைத்த - இன்பந்தலைப்பெய்து - பல்லூழிக்கும் தன்புகழேத்த - தென்குருகூர்ச்சட கோபன் - தனக்கருள் செய்த மாயனை-சொல்லாயிரத்துள் இவையொன்பதோடொன்றுக்கும் மூவுலகும் உருகும்.'

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆறாந்திருவாய்மொழி—உருகுமால் : ப்ரவேசம்

அ—ஆறாந் திருவாய்மொழியில், கீழ்த் திருவாய்மொழியில் பிறந்த வ்யஸனத்தின் மிகுதியாலே முடிதல் எம்பெருமானைப்பெற்றுதரித்தல் செய்யவேண்டும்படியான ஆழ்வாரை, இப்போது ஒரு ஸம்ச்லேஷமன்றிக்கே இருக்கச்செய்தே இவருடைய ஜீவநத்துக்குறுப்பாய் இருக்குமளவில் எம்பெருமான் தம்மோடு கலந்து பெறாகப் பரிமாறின பரிமாற்றத்தை ஸ்மரிப்பிக்க, அத்தாலே உணர்ந்து, இன்னுயிர்ச்சேவலில் விச்லேஷத்தாலே லோகதுக்கானுபவங்களுக்குப் பாத்தமில்லாதபடியான தசையிலே,—பிராட்டி, "ஸமா த்வாதச சத்ராஹம்" என்று ஸமத்தானஸ்மரணம்பண்ணி அதிசங்கைபட்டாப்போலே ஸம்ச்லேஷ தசையில் அவனுடைய வ்யாபாரங்களைத் தனித்தனியே ஸ்மரித்து, ப்ரீதிப்ரகர்ஷத்தாலே அத்யந்தம் சிதிலராகிறார்.

இ—ஆறாந்திருவாய்மொழியில், கீழ்த்திருவாய்மொழியில் - "நாமும் நம்மாளுநடைபெறுவொன்றிலோம்" என்று விரஹம் ஆற்றமாட்டாமையாலே முடிகையிலே வ்யவஸிதராய் நின்றாராயிருந்தது; இத்திருவாய்மொழியில், அவன் குணங்களை அநுபவித்து அத்தால்வந்த ப்ரீதிப்ரகர்ஷத்தாலே சிதிலராகிறாராயிருக்கின்றது. குணாநுபவம் பண்ணுகைக்கு அவன் முகங்காட்டவேணும்; இப்போது இங்கொரு ஸம்ச்லேஷமில்லை: ஸம்ச்லேஷமில்லாமையேயன்றிக்கே துக்காநுபவம் பண்ணுகைக்கும் ஆச்ரயமில்லாதபடியான வ்யஸனம் செல்லுகிறது. ஆனபின்பு, இது ஸங்கதமானபடியென்னென்னில், பெறில் தரித்தல், அல்லாதபோது முடிதல்செய்யுமளவான இவர்தசையைப்பார்த்து இவர் ஜீவநாத்ருஷ்டத்தாலே, இருந்தும் வியந்தில் தம்மோடு தனிதருமாறுகப் பரிமாறின பரிமாற்றத்தை

அவன் ஸ்மரிப்பிக்க, அத்தாலே புணர்ந்து பிராட்டி "ஸமா த்வாதச தத்ராஹம் ராகவஸ்ய நிவேசநே, புஞ்ஜாநா மாநுஷாந்போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ" என்று ரமணத்தை ஸ்மரித்து அதிப்ரீதையானாப் போலே, ஸம்ச்லேஷதசையில் தாழநின்று பரிமாறின அவனுடைய வ்யாமோஹாதிசயத்தை, தத்காலத்திற் போலே விசதமாக ஸ்மரித்து அத்தால் வந்த ப்ரீதிப்ரகர்ஷத்தாலே அத்யந்த சிதிலராகிறார். ஆளவந்தார் 'அப்ரீதிகர்ப்ப குணாநுஸந்தாநம்' என்றருளிச்செய்வர்.

ஈடு.—"ஏழுலகாளுமைப் நம் வானநாடனோ டொன்றினோம்" என்றுதம் ஸ்ரீவசநத்தின் கைசரற்றுச் சொன்னவார்த்தையிறே - இது; இவ்வளவில் வந்து முகங்காட்டி இவரைப் பெறுதல் இவ்வுடம்போடே இருந்தால் செய்யவேண்டும்படியான தசையாய்த்து. இவ்வவஸ்தையிலே, திருவடி சென்று கிட்டினபோது, முன்பு நெடுநாள்பட்ட வ்யஸநமுங் கிடக்கச்செய்தே, பெருமாளும் வாராநிற்க, *ஸமா த்வாதச தத்ராஹம் ராகவஸ்ய நிவேசநே, புஞ்ஜாநா மாநுஷாந்போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ* என்கிறபடியே, பன்னிரண்டாண்டு பெருமாளுந் தானும் ஒருபடிப்படக் கலந்த கலவி வந்து பிராட்டிக்கு ஸ்ம்ருதிவிஷயமானாப்போலே, இருத்தும்வியத்தில் தன்னை மாறுகப்பிறந்த கலவி வந்து ஸ்ம்ருதிவிஷயமாய்த்து. அதுக்காக, இவர் அதிகரித்த கைங்கர்யத்தை முடியச்செய்து தலைக்கட்டுகைக்கு ஈடான இவருடைய ஜீவநத்தை நஷ்டமாவது; அன்றிக்கே, இவர்சொல்லக்கேட்கையிலே பாரித்துக்கொண்டிருக்கிற ஈச்வரனுடைய பாக்யமாவது; பகவதநுபவப்ரீதி உள்ளடங்காமை வழிந்து புறப்பட்ட இவர்சொல்லுக்கேட்டு பகவத்விஷயத்திலே ருசிபிறக்கவிருக்கிற சேதநருடைய பாக்யமாவது. இப்படி, இருத்தும்வியத்தில் ஸம்ச்லேஷம் வாரா ஸ்ம்ருதிவிஷயமாய்த்து *ஸமா த்வாதச* பின்னாய்! இன்று இங்ஙனே வெறுத்தவையாயிருக்கிற நான், எங்கள் மாமனார்மாளிகையிலே பன்னிரண்டாண்டு ஒருபடிப்பட ராமகுணங்களை விளைநீரடைத்துக்கொண்டேன்காண்! என்றாளிறே. இங்கு இருத்தும்வியத்தன்னில் "மூவுலகுந் தன்னுடைய வயிற்றிற்கொண்டு சிறியேனுடைச் சிந்தையுள் நின்றொழிந்தான்" என்று புறம்பேகும் முறையிலே பரிமாறினவன். இவரொருவரளவிலுமிறே முறைகெடப் பரிமாறிற்று; அப்படிப்பட்ட பரிமாற்றந்தான், இப்போது ஒரு ஸ்ம்ருதிமாத்ரமாயிருக்கையன்றிக்கே, [illegible] பிறந்தது; அப்படியே, மேன்மையுடையவன், அம்மேன்மையுங் கிடக்கச்செய்தே தாழநின்று பரிமாறின குணத்தையும் வடிவழகையும் சொல்லி, அதுதான் "இப்போதைய நுபவமே" என்னும்படியாயிருப்பதொரு புத்திபிறந்து, அவனுடைய சீலகுணாநுஸந்தாநத்தாலே சிதிலராகிறார். "கடலைக் கரைகாண்பாரைப்போலே இருத்தும்வியத்தில் அநுபவத்தை இதிலே கொண்டுவந்து சேர்ப்பதேதுக்காக!" என்று விஸ்தரமாகவருளிச்செய்வர். அப்படிப்பட்டிருக்கச்செய்தே, சீலகுணாநுஸந்தாநத்தாலே சிதிலராகிறாராய்த்து. "அப்ரீதிகர்ப்ப குணாநுஸந்தாநம்" என்று ஆளவந்தார் அருளிச்செய்யுஞ் சந்தை இதுக்கு. *பஹவோ ந்ருப* - சக்ரவர்த்தி, "பெருமாளைத் திருவபிஷேகம் பண்ணவேணும்" என்று கோலி, "நாம் அறுபதினாயிரமாண்டு ஒருதலைப்பிக்க ஒருதலைநிர இப்படி வருந்தி பரிபாலித்த ராஜ்யத்தை இன்று சிறியவன் தலையிலேவைத்தால் இது பொறுக்குமோ?" என்று பார்த்து, "இதுதன்னை நாட்டோடே சேரவிசாரித்துச் செய்வோம்" என்று, ராஜலோகத்தோடே கூட்டினவிடத்து, *ஜநேந கோத்குஷ்டஸந்நாதோ விமாநம் கம்பயந்நிவ* என்று சக்ரவர்த்தி மாளிகைபுகுந்துச் செய்யவேண்டும்படி ஆர்த்துக்கொள்ள அத்தைக்கேட்டு, "நாம் நினைத்த கார்யம் வாய்க்கப் போய்த்து; ஆனாலும் இவர்கள் நினைவுதன்னை இவர்கள் வாக்காலே சொல்லக்கேட்பராகாதோ?" என்னுமத்தைப்பற்ற, "ராஜர்களே! *கதம் நு மயி தர்மேண* என்று அறுபதினாயிரமாண்டு இப்ருதிவியைப் பெரியது கலியாதபடியாகப் பூமிப்பரப்படைய நோக்கிக்கொண்டு, *பாண்டரஸ்யாதபத்ரஸ்ய ச்சாயாயாம் ஜரிதம் மயா* என்று "முத்தின் குடைநிழலிலேயிருந்து எனக்கென்ன ஒருவ்யஸநம் வாராதே உங்களுடைய ரக்ஷணதர்மத்தையே செய்துகொண்டுபோந்தேன்: நான் ஒருவார்த்தைகேட்டவிடத்து 'இப்போது நீயிருக்கச் செய்தேவேணுமோ? க்ரமத்திலேசெய்துகொள்ளுகிறோம்' என்னுதல், அன்றியே, 'கார்யமாகல் செய்யலாகாதோ?' என்று வார்த்தைசொல்லுகையன்றிக்கே, படுகொலையடித்தவனைத் தப்ப ஓருதார் மிகவொழிப்பப்போனதுங்க விளைப்பாரைப்போலே, என்னைவிட்டு என்மகனையமைய

தென்று நீங்கள் விரும்புகைக்கு காண் உங்களுக்குப்பண்ணின அபராதமென்?" என்ன; "நீ எங்களுக்குப் பண்ணிற்று ஓர் அபராதமில்லை; உன்னுடைய குணபராதங்கள் இருக்கபடி; நீ சேர்க்கக்கொண்டு போர்ப்பாடுகளில் ஒரு குறையில்லை; குணகாணுயிருப்பானொரு புத்ரனைப் பெற்று சாடைப்படுகொலைபடித் தாய்காண்! "பஹவ:" உன்னை அல்லகாண் ப்ரஜனை கர்ப்பத்தில் அவர்த்த உண்டான பாரிப்பு "தாதுநாமிவ" காட்டிலே இவனை ஆணாக்கவென்று சிந்திக்கும், சிலரை குணவான்களென்று கொண்டாடுகிறதும், "இன்ன ஆகாரத்திற்பான்" என்று விசே பெறுமாபோலே, "இவ்வாசயத்திலே கிடக்கிற குணம்" என்றும் அந்த புரம்பு விலைபோகுமே "ஹ்ருதயாக்யாமமந்தேவ ஜகஸ்ய குணவத்தயா."

உருகுமால்நெஞ்சம் உயிரின் பரமன்றி*
பெருகுமால்வேட்கையும் என்செய்கேன்தொண்டனேன்*
தெருவெல்லாங்காவிகமழ் திருக்காட்கரை*
மருவியமாயன்தன் மாயம்நினைதொறே. (1)

ஒ.—முதற்பாட்டில், திருக்காட்கரையில் எம்பெருமானுடைய ஆச்சர்யமான பரிமாற்றங்களை நினைக்குந்தோறும் என்னெஞ்சு சிகிலமாகாநின்றதென்கிறார். [உருகுமாலென்று தொடங்கி] பகவத்குணானுபவத்துக்கு ப்ரதிபோபகாரணமான நெஞ்சு உருகாநின்றது; ஆத்மாவுக்குப் பொறுக்க வொண்ணாதபடி அபிநிவேசமானது மிகாநின்றது; இவ்வபிநிவேசாதிசயமானது மறந்து தரிக்க வொட்டுகிறதில்லை. அதிசபலனான நான் என்னசெய்வேன்? [மாயன்] - ஆச்சர்யமான ஸௌந்தர்யாதிகளையுடையவன்.

இ.—முதற்பாட்டில், திருக்காட்கரையில் நின்றருளின அவனுடைய ஆச்சர்யமான பரிமாற்றங்களை நினைத்ததோறும் என்னெஞ்சு சிதிலமாகாநின்றதென்கிறார் [உருகுமால் நெஞ்சம்] அநுபவத்துக்கு ப்ரதிபோபகரணமான மநஸ்தத்த்வம் சிதிலமாகாநின்றது. அநுபவிக்கைக்கும் அநுபவித்து நிர்வ்ருதாகைக்கும் நெஞ்சு வேணுமே. "தொழுதெழு" என்கைக்கும் 'நீயுகாணுமிங்கேர்கிற்கில் மேல் மற்றோர் நோயும் சார்கொடான்" என்கைக்கும் நெஞ்சுவேணுமிறே. நீஞ்சப்புக்கவனுக்கு வாய்கரையிலே தெப்பமொழுகுமாபோலே பரிகரமான நெஞ்சு சிதிலமாகாநின்றது. எதிர்த்தலைபமுண்டாம்படி பரிமாற அறியான். அநுபவத்துக்கு இருவர்வேணுமென்றிரான் [உயிரின்பரமன்றிப் பெருகுமால்வேட்கையும்] - ஆத்மாவுக்குப் பொறுக்கவொண்ணாதபடி அபிநிவேசம் பெருகாநின்றது அணுபரிமாணமான இவ்வஸ்துவினளவன்றிக்கே ஆறு பெருகுமாபோலே மேன்மேலெனப் பெருகாநின்றது. ஆலும் ஒவும் விஷாதாதிசய ஸூசகம். "நெஞ்சம் உருகுமால் - வேட்கையும் பெருகுமால்" என்று தம்மால் நியமிக்க வொண்ணாதே விஷாதம் தோற்றச் சொல்லுகிறார் [என்செய்கேன்] - நெஞ்சுஉருகாதபடி தரிப்பேனோ? பெருகுகிற அபிநிவேசத்தை அடைப்பேனோ? இருக்கடியான அவன் குணங்களைத் தவிர்ப்பேனோ? [தொண்டனேன்] - அதுக்கடியான என் சாபலாதிசயத்தைத் தவிர்ப்பேனோ? சாபலம், அநுபவியென்னுகைவாங்க வொட்டுகிறதில்லை. மறந்து தரிக்க வொட்டுகிறதில்லை. [தெருவெல்லாம் காவிகமழ்] - வேட்கைக்கு ஹேதுசொல்லுகிறது மேல்முடிய. குறுந்தெருவோடு பெருந்தெருவோடு வாசியறச் செங்கழுநீரின் பரிமளம் பரக்கிறபடி. ஊரோடுசேர்ந்த பொய்கைகளாகையாலே உள்ளோடு புறம்போடு வாசியறப் பரிமளம் அலைவெறிகிறபடி. தெருவெல்லாம் ஒருபரிமளம் உண்டு "ஸர்வகந்த:" [திருக்காட்கரைமருவிய] - பரத்வத்திற்காட்டிலும் அவதாரத்திற் காட்டிலும் ஏற்றஞ்சொல்லுகிறது. பரத்வம் கெடுங்கை நீட்டு; அவதாரம் காலாவதியை புடைத்து. [மாயன்] - ஆச்சர்யமான ஸௌந்தர்யாதிகளையுடையவன் [மாயம்] - கிட்டினபோது தாழ விட்டு பரிமாறினபடி. [நினைதொறே] - ஸௌசீல்யத்தை நினைத்ததோறும், ஸௌந்தர்யத்தை நினைத்ததோறும், ஒருவரும் ஒருவடிவும் இல்லாதாரைப்போலே தாழநின்ற சீலத்தை நினைத்ததோறும். பஹுசப்ராகார்த்திலே அநுபவிப்பிக்கவல்லன் அவன், ஒன்றிலே காலத்தமுன்னதனையும் காலதாழ்ந்து புதியராய் அநுபவிக்க வல்லர் இவர்; "அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதம்" என்றவரிறே.

ஈடு.—முதற்பாட்டு. திருக்காட்கரையில் எம்பெருமானுடைய ஆச்சர்யங்களான பரிமாற்றங்களை நினைதொறும் எனனெஞ்சு சிதிலமாகாநின்றதென்கிறார்.

[உருகுமால் நெஞ்சம்] அநுபவத்துக்கு ப்ரதமோபகரணமான நெஞ்சு சிதிலமாகா நின்றது. அநுபவிக்கைக்கும் அநுபவித்து ஜீர்ணிக்கைக்கும் நெஞ்சு வேணுமிறே. நீர்சப் புக்கவனுக்கு வாய்க்கரையிலே தெப்பமொழுகுமாப்போலே பரிகரமான நெஞ்சு சிதிலமாகாநின்றது. "தொழுதெழு" என்கைக்கும், "வாய்நாளும் கீர்த்திக்க" என்கைக்கும் நெஞ்சுவேணுமே. எதிர்த்தலையாயுண்டாக்கிக் கலக்கவுமுபாயன் காணும்! கலக்கைக்கு இரண்டுதலையும் வேணு மென்றிரே. [உயிரின்பால் பெருமால் வேட்கையும்] ஆத்மாவுக்குப் பொறுக்க வொண்ணாதபடி அபிநிவேசம் பெருகாநின்றது. பின்னை, அநுபவிஷ்யமான இவ்வஸ்து வின் அளவன்றிக்கே ஆற்றுப் பெருக்குப்போலே மேன்மேலெனப் பெருகாநின்றது. [ஆல்] விஷாதாதிசயவசகம். "உருகுமால் நெஞ்சம்" "வேட்கையும் பெருகுமால்" என்று தம்முடைய நிலையைச் சொல்லுகிறார். [என்செய்கேன்] நெஞ்சையுருகாமல் காக்கவோ? வேட்கை பெருகாமல் தகைவனோ? இவற்றுக்கடியான அவன்குணங்களைத் தவிர்ப்பனோ? [தொண்டனேன்] அநுக்ரஹமான உன் சம்பந்தத்தைத் தவிர்ப்பனோ? சம்பந்தம், அநுபவம் என்று இரண்டும் தவிர்க்கவொண்ணாதிறே; நெஞ்சையும் உயிரையும் தரிக்கவொட்டுகிறதில்லை. [தெருவெல்லாம் காவிகமழ்] நெஞ்சுருகைக்கும் வேட்கை பெருகைக்கும் ஹேது சொல்லுகிறது. [தெருவெல்லாம்] கருநெய்தல் என்று அலைகட்ட வொண்ணாதபடி, குமிழ்நீருண்டு கிடந்த நீர்நிலைகளில் செங்கழுநீர் பரிமளம் பரக்கும்படி. மைபோல் கறுத்த கருங்குவளையாலே, தெருவெல்லாம் வாஸிக்கும் பரிமளம் அலையெறியும்படி. தெருவில் அநுபவிப்பாரும் உள்ளது "காவிகமழ்". [திருக்காட்கரை மருவிய] இத்தால் பரத்வத்திலும் அவதாரத்திலும் ஏற்றம் சொல்லுகிறது. பரத்வம் கிட்டவொண்ணாதது; அவதாரம் காலாவதி யுடைத்து. [மாயன்] விலக்ஷண சீலாதிகளாலே பிச்சேற்ற வல்லவன். [மாயம்] இட்டபோது நாழிகை பரிமாறினபடி. குழந்தைகளைப்பற்றி மயக்கத்தை குமாரப்பருவத்து அநுபவித்தபடி. [நினைதொறும்] கைக்கு நினைதொறும், வெண்ணெய் திருடுதல் நினைதொறும், குறையின்றித் தாழ்ந்த சீலத்தையும் நினைதொறும். [வேறுதொறும்] கட்டில்சிலை நினைக்கப் புக்கார்க்கு எத்தனை காலம் வேண்டும்; ஒன்றிரண்டொன்று சொல்லப்புக்கால் அநுபவிப்பிக்க வல்லனவல்ல; அருகுணங்களையே காலதத்வமுள்ளதனையும் காலாழ்ந்து அநுபவிக்க வல்லர் இவர்; "அப்போதைக்கப்போது என்னாரமுதம்" என்னுமவரிறே.

நினைதொறுஞ்சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்*
வினைகொள்சீர்பாடிலும் வேமெனதாருயிர்*
சுனைகொள்பூஞ்சோலைத் தென்காட்கரையென்னப்பா*
நினைகிலேன்நான் உனக்காட்செய்யும்நீர்மையே. (2)

ஈ.—இரண்டாம்பாட்டில், திருக்காட்கரையில் எம்பெருமானைக்குறித்து உன்னோடு நான் பரிமாறின பரிமாற்றத்தை நினைக்க க்ஷமனாகிறிலேனென்கிறார். [நெஞ்சு இடிந்துகும்] - ஹ்ருதயம் கட்டழிந்து நீராகாநின்றது. [வினைகொள்சீர்] - எல்லாருடைய துக்கங்களையும் போக்கவல்லனான கல்யாணகுணம்; சௌலப்யத்தைக் காட்டின குணங்களென்றுமாம், குணமாவது - சௌசீல்யம்; சேஷ்டிதமாவது - இக்குணங்களடியான தாழ்ந்த பரிமாற்றம்; "ஸௌசீல்ய நாதுமீச்சது" இத்யாதி. [ஆருயிர்] - ஆத்மா. [சுனைகொள் பூஞ்சோலை] - சுனைகளோடு கூடின அழகியசோலை. [என்னப்பா] - எனக்கு பந்துவானவனே! எம்பெருமான் தம்மோடு அக்ரமமாகப் பரிமாறினபடியை, விநயத்தாலே ஆட் செய்யும் நீர்மை என்கிறார்.

இ.—இரண்டாம்பாட்டில் அவன்தன்னைக்குறித்து, உன்னோடு நான் பரிமாறின பரிமாற்றத்தை நினைக்க க்ஷமனாகிறிலேனென்கிறார். [நினைதொறும்] - நினைக்க உபக்ரமிப்பர்; அந்நினைவேயாய்ச் செல்லவொண்ணாதபடி பலஹானி மிகும், மறக்கமாட்டார், திரியட்டும் நினைக்கவென்றுமிழிவர். இப்படிப்

பலகால் நினைக்க உபக்ரமித்துத் தலைக்கட்டமாட்டாதே சொல்லுகிறபடி. [சொல்லுந்தொறும்] - நினைக்க வரிய விஷயம் சொல்லவொண்ணுதென்னுமிடம் சொல்லவேண்டாதிருக்க, 'சொல்லுந்தொறும்' என்கிறது - "என்றுமெப்போது மென்வாசகம்" என்கிறபடியே மானஸஜ்ஞானகாரியமறிய வாக்குப்பேசத்தொடங்கும்; செவிவழியாலே புக்கு நெஞ்சை அழிக்கும். [நெஞ்சிடிந்துகும்] - நெஞ்சு கட்டழிந்து நீராகாநின்றது; பெருக்காற்றிற் கரையிடிந்து விழுந்து பின்பு நீராய்க் கரைந்து போமாபோலே சிதிலமாகாநின்றது. [வினைகொள்சீர்] - ப்ரபலமான கல்யாணகுணம்; ஸர்வர்க்கும் துக்கவர்த்தகமான குணங்கள், என்னைப்பொருவனையும் அழிப்பதாகின்றது. அன்றியே, சீரென்று - சீலமாய், வினையாவது - சேஷ்டிதம்; அதாவது சீலகார்யமான தாழநின்று பரிமாற்றம்; "ஸௌசீல்யம் காதமிச்சதி" என்னக்கடவதிறே. என்றுமாம். [பாடிலும்] - அடைவுபடப் பேசாதொழிய ப்ரேமத்தாலே பாடுவதொன்றுண்டு, அத்தைச் செய்யிலும். [வேம்எனதாருயிர்] - மனஸ்ஸையன்றியே அதரம்யமான ஆத்மவஸ்துவையும் தஹியாநின்றது. வயிரத்தைப்பற்ற வேவாநின்றது. "அதாஹ்யம்" என்கிறது அக்நிக்கு; பகவத்குணம்அழிக்கமாட்டாததில்லை. புறம்புள்ளார்க்கு ஆச்வாஸஹேதுவான குணங்கள் என்னையொருவனையும் முடியாநின்றது; எல்லார்க்கும் குளிர்த்திப்பண்ணும் பனி தாமரையை அழிக்குமாபோலே. [சுனைகொள்பூஞ்சோலை] - சுனைகளோடுகூடின தர்சநீயமான சோலை. [தென்காட்கரை என்னப்பா] - நிருபாதிகபந்தமும் தோற்ற ஸந்நிஹிதனும் நின்றவனே! இவையாய்த்து இவரை யழித்தது. சுனைகள் - சீலத்துக்கு ஸ்மாரகம்; சோலை - வடிவுக்கு ஸ்மாரகம். ஸந்நிதி - பந்தத்துக்கு ஸ்மாரகம். [நானுனக்காட்செய்யும் நீர்மை - நினைகிலேன்] - நான் உனக்கடிமைசெய்யும் ப்ரகாரம் நினைக்கமாட்டுகிறிலேன். "வழுவிலாவடிமை செய்யவேண்டும்" என்று பாரித்த நான். [உனக்கு] - வகுத்தசேஷியான உனக்கு. [ஆட்செய்யும் நீர்மையே] - அவன் தாழநின்று பரிமாறினபடியை, விஷயத்தாலே 'ஆட்செய்யும் நீர்மை' என்கிறார். [நினைகிலேன்] - நினைப்பதுக்கு நெஞ்சழியாநின்றது.

௩ஈ.—இரண்டாம்பாட்டு. திருக்காட்கரையில் எம்பெருமானைக் குறித்து, உன்னோடு நான் பரிமாறின பரிமாற்றங்களை நினைக்க வழியறுக்கிறதென்கிறார்.

[நினைதொறும்] நினைக்கவென்று உபக்ரமிப்பர்; அந்நினைவு மாறுதே செல்லவொண்ணாதபடி பலகாலும் மீளும், ஆறவும் மறக்கமாட்டார்; திரிய நினைக்கவென்று உபக்ரமிப்பர்; தலைக்கட்டமாட்டார்; எத்தனைகாலம் நினைக்கப்புக்கார்? எத்தனைகாலம் மீண்டார்? [சொல்லுந்தொறும்] நினைக்கவே யரிதான விஷயத்தைச் சொல்லவொண்ணாதென்னுமிடஞ் சொல்லவேண்டாவிறே. "மநோபூர்வோ வாகுத்தர:" என்கிற கணக்கன்றிக்கே, "துமரா மென்றுசனே யென்று மெப்போது மென்வாசகம்" என்கிறபடியே, இவருடைய வாக்குத்தான் எப்போதும்பேசா நிற்குமே; அந்த வாசனையாலே அதுதன்னையே சொல்லாநிற்பர்; அதுதான் செவிவழியாலே உள்ளேபுக்கு மாற்றிருந்து, குறையவிஷயமாகையாலே நெஞ்சையழிக்கும். [நெஞ்சிடிந்துகும்] நெஞ்சு கட்டழிந்து நீராகாநின்றது. பெருக்காற்றிலே கரை யிடிந்து பின் நீராய்க் கரைந்துபோமாபோலே, தன் அவயவியாக்க்க் காணவொண்ணாதபடி உகுந்து போகாநின்றது. [வினைகொள் சீர்] ப்ரபலமான கல்யாணகுணம். ஸர்வர்க்கும் துக்கவர்த்தகமான குணங்கள், என்னையொருவனையும் அழியாநின்றன; அன்றியே, சீரென்று - சீலமாய், வினையென்று சேஷ்டிதம்; அதாவது சீலகார்யமாய்த் தாழநின்று பரிமாறும் பரிமாற்றம். "ஸௌசீல்யம்காதமிச்சதி" என்னக்கடவதிறே, என்றுமாம். [பாடிலும்] அடைவுபடப்பேசமுடியாதொழிய, ஆர்வத்தாலே பாடுவதொன்றுண்டு; அத்தைச்செய்யிலும். [வேமெனதாருயிர்] மனஸ்ஸையன்றிக்கே, அதரம்யமான ஆத்மவஸ்துவையும் தஹியாநின்றது. எல்லாவற்றுக்கும் குளிர்த்தியைப் பண்ணக்கடவதான பனி தாமரையொன்றையும் கரும்பாணனுமாபோலே, ஸர்வர் துக்கவர்த்தகமான குணங்கள் எனக்கு பாதகமாகாநின்றன. [வேமெனதாருயிர்] "அதாஹ்யம்" என்கிறது அக்நிக்கு, பகவத்குணங்கள் புக்கழிக்கமாட்டாததில்லை. [சுனையித்யாதி] தம்மைத்தழிக்கீடான ப்ரதேசங்கள். சுனைகளையும் தர்சநீயமான சோலைகளையுமுடைத்தாயிருக்கிற திருக்காட்கரையிலே நிருபாதிகபந்துவாய் ஸந்நிஹிதனானவனே! [நினைகிலேன்நான் உனக்காட்செய்யும் நீர்மையே] நான் உனக்கடிமைசெய்யும் ப்ரகாரம் நினைக்கமாட்டுகிறிலேன். [நான்] "வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்" என்றிருந்த நான். [உனக்கு] வகுத்த சேஷியானவுனக்கு.

அவன் தாழநின்று பரிமாறினபடியை, விஷயத்தாலே 'ஆட்செய்யும் நீர்மை' என்கிறார். அவன் தனக்காட்செய்த நீர்மையை 'தாம் ஆட்செய்யும் நீர்மை நினைகிலேன்' என்கிறார். இச்சொல்லையும் இறக்க வொண்ணுதென்று. 'நானுனக்காட்செய்யும் நீர்மை' என்பானென்? "நீயெனக்காட்செய்யும் நீர்மை என்றுமத்" என்ன,—"இச்சொல்லையு மிழப்பரோ பாவியோர்" என்று எம்பார்.

> நீர்மையால்நெஞ்சம் வஞ்சித்துப்புகுந்து * என்னை
> ஈர்மைசெய்து என்னுயிராய்என்னுயிருண்டான் *
> சீர்மல்குசோலைத் தென்காட்கரையென்னப்பன் *
> கார்முகில்வண்ணன்தன் கள்வம் அறிகிலேன். (3)

ஓ.—மூன்றும்பாட்டில், "அடிமைகொள்ளுகிறோம்" என்று க்ருத்ரிமத்தாலே என்னை விச்வஸிப்பித்து என்னுள்ளே புகுந்து, குணங்களாலும் அக்ரமப்ரவ்ருத்திகளாலும் அவன் என்னை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணினபடிகள் அநுஸந்திக்க க்ஷமனுகிறிலேனென்கிறார். [நீர்மையாலென்று தொடங்கி] - தான் சேஷியாகவும் நான் சேஷமாகவும் நான் நினைத்தபடியே என்றும் பரிமாறுவாரைப் போலே க்ருத்ரிமித்துப் புகுந்து தன் குணங்களாலே என்னை ஈடுபடுத்தி எனக்குத் தானல்லது செல்லாதபடி பண்ணி என்னை புஜிப்பதுஞ் செய்து அத்தால் தனக்குப்பிறந்த பௌஷ்கல்யம் தோற்றும்படியிருக்கிற திருச்சோலையையுடைய திருக்காட்கரையிலே வாழ்ந்து நிற்பதுஞ் செய்து எனக்குப் பரமபந்துமாய் என்னோட்டைக் கலவியாலே புதுக்கணித்த திருநிறத்தையுடையனுமிருந்துள்ளவனுடைய என்னை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணின குணசேஷ்டிதங்களை அறிய க்ஷமனுகிறிலேன்.

இ.—மூன்றும்பாட்டில், அடிமைகொள்ளவென்று புகுந்து தன்படிகளைக் காட்டி என்னை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணினபடிகள் அநுஸந்திக்க க்ஷமனுகிறிலேனென்கிறார். [நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்தென்னை நீர்மையால் ஈர்மைசெய்து] - தான் சேஷியாய் நான்சேஷமான முறையிலே "பரிமாறவாரும்" என்று நெஞ்சை இசையப் பண்ணி க்ருத்ரிமித்துப் புகுந்தான்; முறைகெடப் புகுரவென்னில் இசையாரிறே. க்ருத்ரிமிக்கையாகிறது - ஒன்றைச்சொல்லி மற்றொன்றைச் செய்கையிறே. அது ஏதென்னில் [நீர்மையால் - என்னை ஈர்மைசெய்து] - நீர்மையாகிறது - தாழநின்று பரிமாறுகையும், அதுக்கடியான சீலமும். [என்னை] - "முறையிலே பரிமாறவாரும்" என்றத்தை மெய்யென்றிருந்த என்னை; [ஈர்மைசெய்து] - ஈரும் தன்மைகளைச்செய்து. தான் தாழ்ந்தசெயலாலே ஈடுபடுத்தி என்னுதல்; ஈரப்பாட்டை விளைத்தென்னுதல்; என்னை நீராம்படிபண்ணி என்கை. [என்னுயிராய் என்னுயிருண்டான்] - எனக்கு தாரகராவாரைப் போலே புகுந்து என்னையழித்தான்; பாதகனுய்ப்புகுரில் இவர் இசையாரிறே; இருவருங் கூட புஜிக்க விழித்து போக்தா தானேயானுன்; அன்றியே, [என்னுயிராயென்னுயிருண்டான்] - எனக்குத் தன்னுலல்லது செல்லாதபடிபண்ணி, என்னை புஜிப்பதுஞ் செய்தானென்றுமாம். [சீர்மல்குசோலை] - அழகுமிக்க சோலை. என்னோடு கலந்த இத்தால் தனக்குப்பிறந்த பௌஷ்கல்யம் அவ்வூர்ச் சோலையே கோட்சொல்லித்தாரா நின்றது. [தென்காட்கரை யென்னப்பன்] - ஸம்பன்னுமாய் நிருபாதிக பந்துவுமானவன் ஐச்வர்யத்துக்குத் தானே கடவனுயிருக்கிற பந்தம் தோற்ற ஸந்நிஹிதனுனவன். [கார்முகில்வண்ணன்]- என்னோட்டைக் கலவியாலே கடலை முழுக்கப்பருகின காளமேகம்போலேயாய்த்து அவனுடைய வடிவிற் செவ்வியிருப்பது. "தூநீர்முகில்போல் தோன்றாயே" என்று இவர் ஆசைப்பட்டபடியே தோற்றி அநுபவிப்பித்துப் போனின்றபின்பு, அத்தலையிற் செவ்வியிருந்தபடி. [தன்கள்வம் அறிகிலேன்] - முகப்பிலே யொன்றாய் முடிவிலே வேறொன்றாக செய்த்தன் தெரிகிறதில்லை அடிமை கொள்ளவென்று புகுந்து அச்செயலைத் தான் செய்து நிற்கிறநிலை எனக்கொன்றும் தெரிகிறதில்லை. [அறிகிலேன்] - ஸர்வாதிகன் இப்படி தாழப்பரிமாறுகை கூடாது; நான் ப்ரமித்தேனே? ஸம்ச்லேஷத்திலும் "மருள்தானீதோ" என்றவரிறே,

ஈடு.—மூன்றும்பாட்டு. அடிமைகொள்ளவென்று புகுந்து, தன் படிகளைக்காட்டி ஸர்வஸ்வாபஹாரம் பண்ணினபடிகளை அநுஸந்திக்க க்ஷமனுகிறிலேனென்கிறார்.

[சீர்மையால் நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்து என்னை ஈர்மை செய்து] (நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்து என்னை சீர்மையால் ஈர்மை செய்து) தான் சேஷியும் நான் சேஷபூதனுமான முறையிலே பரிமாறவேணுமென்று நெஞ்சை இசையப்பண்ணி, க்ருத்ரிமித்துப்புகுந்தான்; முறைகெடப் புகுரவொண்ணாதே இசையாரிறே. க்ருத்ரிமிக்கையாவது ஒன்றைச்சொல்லி மற்றொன்றைச்செய்கையிறே. அதேதென்னில்? [சீர்மையால்-என்னை ஈர்மைசெய்து] சீர்மையாவது தாழநின்று பரிமாறுகையும், அதுக்கடியான சீலமும். [என்னை] "முறையிலே பரிமாறவாரும்" என்றத்தை மெய்யென்றிருந்த என்னை, [ஈர்மைசெய்து] ஈரும்தன்மைகளைச் செய்து. தன் தாழ்ந்தசெயல்களாலே ஈடுபடுத்தி என்னுதல்; ஈரப்பாட்டை விளைத்து என்னுதல்; என்னை நீராம்படி பண்ணி என்கை. [என்னுயிராய் என்னுயிருண்டான்] எனக்கு தாரகனைப்போலே புகுந்து என்னையழித்தான். பாதகனாய்ப் புகுரில் இவர் இசையாரே! இருவருங்கூட புஜிக்கப்புகுந்து போக்தா தானேயானான்; அன்றிக்கே, [என்னுயிராயென்னுயிருண்டான்] எனக்குத் தன்னையல்லது செல்லாதபடி பண்ணி என்னை புஜிப்பதுஞ் செய்தான் என்னுமாம். [சீர்க்கொள் சோலை] அழகுமிக்க சோலை. என்னோட்டைக் கலவியால் அவனுக்கு உண்டான ஔஜ்ஜ்வல்யம் அவ்வூர்ச்சோலையே கோட்சொல்லித்தாராநின்றது. [தென்காட்கரையென்னப்பன்] ஸ்வாபதேசமாய் நிருபாதிகபந்துவுமானவன்; என்காரியத்துக்குத் தானேகடவனாயிருக்கிற பந்தத்தை நடத்தியிருக்கிறவன். [கார்முகில் வண்ணன்] என்னோட்டைக் கலவியாலே நீர்முழுக்கப் பருகின காளமேகம்போலேயாய்த்து அவன் வடிவு இருப்பது. "கார்முகில்போல் தோன்றுமே" என்று இவர் ஆசைப்பட்டபடியே தோற்றுவித்துப் பெற்றபின்பு, அத்தலையிற் செய்விருந்தபடி. [தன் கள்ளத்தனங்கள்] ப்ராப்யமென்னும் ருசியில் தன்னுடைய செயல்கள் தெரிகிறதில்லை. அடிமைகொள்ளவென்று புகுந்து அச்செயலைத் தான் செய்து நின்றமை எனக்கு ஒன்றும் தெரிகிறதில்லை. [அறிகிலேன்] ஸர்வஜ்ஞன் இப்படித்தாழ நின்று பரிமாறுகை கூடாது; நான் ப்ரமித்தேனோ? ஸ்வப்னத்தில் "மருள்தானீதோ?" என்றத்தைச் சொல்லுகிறார்.

அறிகிலேன் தன்னுள் அனைத்துலகும் நிற்க*
நெறிமையால்தானும் அவற்றுள் நிற்கும்பிரான்*
வெறிகமழ்சோலைத் தென்காட்கரையென்னப்பன்*
சிறியவென்னுயிருண்ட திருவருளே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், தான் சேஷியாயும் ஜகத்தெல்லாம் சேஷமாயும் முறைமை தப்பாதே எல்லாரோடும் கலக்கிறவன் அங்ஙனன்றிக்கே அதிக்ஷுத்ரனான என்பக்கல் பண்ணின வ்யாமோஹம் எனக்கு அறியநிலமன்று என்கிறார். [வெறி] - நாற்றம்

இ.—நாலாம்பாட்டில், நான் சேஷியான முறை தப்பாதே எல்லாரோடும் கலக்கிறவன் அதிக்ஷுத்ரனான என்பக்கல் பண்ணின வ்யாமோஹம் எனக்கு அறியநிலமன்று என்கிறார். [அறிகிலேன்] - உகப்பாலே செய்தானோ? இவ்வஸ்துவை அழிக்கைக்குச் செய்தானோ? அறிகிறிலேன். [தன்னுள்ளனைத்துலகும் நிற்க] - தன் ஸங்கல்பத்தைப் பற்றி ஸகலலோகங்களும் நிற்க; ஸகலாபாச்ரயமானவன் கிடீர் என்னைத் தனக்கு அபாச்ரயமாக நினைத்தான்! [நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும்] - சேஷியான முறை தப்பாமே அவற்றின் நடுவே நிற்கும்தானும், என்னொருவன்பக்கலிலும் கிடீர் முறை கெடப் பரிமாறுகிறது! [பிரான்] - என்னைப் பெறுகைக்கு விஷயத்தில் உபகாரகன் கிடீர் என்னை யழிக்கிறான்! எதிரிகளை அம்பாலேயழிக்கும்; என்னை குணத்தாலே அழித்தான். ஸத்வஸ்த்ரராக வேறுபாடாகாதே ரக்ஷிக்கும் பேகாதக்கு! அம்புபட்ட புண்ணுக்கு மருந்திட்டு ஆற்றலாம்; குணத்தால்வந்த புண்ணுக்குப் பரிஹாரமில்லை. [வெறிகமழ் சோலைத் தென்காட்கரை] அவ்வூரையுடையவனுக்கு ஒருவஸ்து உத்தேச்யமாவதே! பரிமளம் அலையெறியாநின்றுள்ள சோலை. [என்னப்பன்] - உத்பாதகன் கிடீர் அழித்தான். [சிறியவென்னுயிருண்ட திருவருளே] - அதிக்ஷுத்ரனான என் ஆத்மாவை யழித்த வ்யாமோஹம்

அறிகிறிலேன். பெருமைக்கு அவனுக்கு அவ்வருகில்லாதாப்போலே சிறுமைக்கும் நமக்கு அவ்வருகில்லை யென்றிருக்கிறார். நித்யஸம்ஸாரிகள் நித்யஸூரிகள்கோடியிலே என்னும்படியாய்த்து, இவர் தம்மை நினைத்திருப்பது; நித்யஸூரிகளுக்கும் அன்யாருகாக வைத்து, அவன் இவரை விரும்புவது; ஸ்வரூப ஜ்ஞானத்தாலே விரும்பிவிறே ஸ்வரூபத்தளவிலே நிற்பது; ஸ்வாமிதோஷம் முறையை யழிக்குமிறே. "மூவுலகும் தன்னெறியாவதிற்றிம் கொண்டு சிதியேறுடைச் சிந்தையுள் - நின்றொழிந்தார்" என்கிறத்தையிறே இவர் சொல்லுகிறது.

ஈடு.—நாலாம்பாட்டு. தான் செய்யான முறை நாம் எல்லாரோடும் கலந்திருவன், அறியாத்தனை என்பத்கலப்பன்வியை மேலோம் நமக்கு அறியாமென்று என்கிறார்.

[அறிகிலேன்] உகப்பாலே செய்தாலோ? இப்படித்தானை யழிக்கைக்குச் செய்தாலோ? அறிகிலேன். [தன்னுள் அனைத்துலகும்நிற்க] எல்லாரையும் விரும்பில அவன் உபகாரமே நமக்ப் பண்ணிப்போருவது! ஸகலலோகங்களும் தன் ஸங்கல்பத்தைப் பற்றிக்கிடக்க, தான் அவற்றிலுள்ளே நின்று செய்கையாலும், இப்போது இவ்விஷயத்திலுமிறே இப்படி முறைகெட்டுப் போகிறது! "மூவுலகும் தன்னெறியாவதிற்றிம் கொண்டு சிதியேறுடைச் சிந்தையுள் - நின்றொழிந்தார்" என்பத்தைச் சொல்லுகிறார். ஸமயத்திலே ஜகத்தையுடைய ரக்ஷிக்கவல்லவன் என்னையொருவகையும் அறிந்தான். பதிகவரை அப்பாலே பரிக்கும், அது கூலமாய் முனைந்துபோமிக்கும். மதியன் கரைப்போலலாக அவன் ரக்ஷிப்பது! அப்படி பட்டபுண் மருந்திட்ட த்யாகம்; குணத்தால்வந்த புண்ணுக்கும் பரிஹாரமிக்கவிறே. [நெறி யித்யாதி] அவ்வாறுடையவனுக்கு ஒருவராம் நச்சுப்பொய்கை. பரமைக் அடியேனையா கிப்பதான சோதி [என்னப்பன்] உபகாரகன் ஒருவர் அறிந்தான். [நிறையென்றுறுகிப்புண்ட] நிறைவேறுடைய நர்ஸியமே - அறிவுள்ள ஆத்மாவை, அவனுடைய மேன்மைக்கு ஏக்கமாவொன்றுதலாய், தம்முடைய நிலைக்கும் ஆக்கையில்லையாக நினைத்திருக் கிறார். [என்னுருகிப்புண்ட] - இவர் தம்மைச் சிறுக நினைத்திராநின்றார்; அவன் இவரை நித்ய ஸூரிகளிக்கும் அவ்வருகாக நினைத்திராநின்றான்; "இவர் தம்மைச்சிறுக நினைத்தால் ப்ரயோஜன மென்? இவர் தம்மைத்தாம் அறிந்தாரோ" என்று மேல்விழாநின்றான். [இருவர் அறிகி லேன்] இது முன்னம் ஸ்வரூபஜ்ஞானத்தாலே செய்ததன்றிறே; ஸ்வரூபஜ்ஞானத்தாலே விரும்பிவிறே ஸ்வரூபத்தளவிலே நிற்பது? ஸ்வாமிதோஷம் முறையழிக்குமிறே.

திருவருள்செய்பவன்போல என்னுள் புகுந்து*
உருவமும் ஆருயிரும் உடனேயுண்டான்*
திருவளர்சோலைத் தென்காட்கரை என்னப்பன்*
கருவளர்மேனி நங்கண்ணன் கள்வங்களே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், என்னை அடிமைகொள்வாரைப்போலே புகுந்து என்னுடைய சரீரத்தை யும் ஆத்மாவையும் ஒக்க புஜித்தான் ஒருவன்படியே! என்று விஸ்மிதராகிறார். [திருவளர் சோலை யென்று மேலுக்கு] - அழகுமிகாநின்றுள்ள திருச்சோலையையுடைய திருக்காட்கரையிலே என்னை விஷ யீகரிப்பதற்கெட்டு கருப்புளைரநின்றுள்ள திருமேனியையுடையனும் ஆச்ரிதபவ்யனுமான கண்ணனு டைய மூகப்பிலேயாலும் முடிவில் ஒன்றுமி தக்கும் ப்ரவ்ருத்திகள்.

ஈ.—அஞ்சாம்பாட்டில், என்னை யடிமைகொள்வாரைப்போலே புகுந்து என் சரீரத்தையும் ஆத்மாவையும் ஒக்க புஜித்தான் ஒருவன்படியே! என்று விஸ்மிதராகிறார். [திருவருள் செய்பவன் போல] - என்னை யடிமைகொள்வாரைப்போலே துயரற்படாடி தொழுதெழுகைக்கு, மயர்வறமதிநல மருளினாப்போலே புகுந்தான். 'போல' என்கிறது - செய்தது அதுவன்று; தான் திருவருள் செய்ததாக நினைக்கிறான். சேஷபூதனாய்ப் புகுரில் இவரிசையாரே! [என்னுள்புகுந்து] - வழுவிலா அடிமைசெய்யாய்

பாரித்த என்பக்கலிலே புகுந்து. [உருவமும்] - இவர் முதலிலே "அழுக்குடம்பு" என்றதனை விரும்பாநின்றான். இவர் த்யாஜ்யமென்றிருக்கிறதனை உத்தேச்யமென்றிராநின்றான். இவர்தாமன்றி இவர் அபிமானித்தது அமையாதோ என்றிராநின்றான். [ஆருயிரும்] - அபர்யவஸாந வ்ருத்தியாலே தத்பர்யந்த மவஸ்திதிராமையாலே, ஆத்மவஸ்துவையும் விரும்புகிறான் இத்தனை. [உடனேயுண்டான்] - புஜிக்கும் மிடத்தில் வாசி வைத்து புஜித்தானாகாதோ! [உண்டான்] - போக்தா தானேயானான், எனக்கு அவகாசம் வைத்திலன். [திருவளர் இத்யாதி] - தான் போக்தாவாய் புஜித்தமை அவ்வூர்ச்சோலையும் வடிவும் கேட்சொல்லித்தரும் அழகுவளராநின்றுள்ள சோலை. [கருவளர்மேனி] - கறுப்புவளராநின்றுள்ள வடிவு. "ஸ்தைகரூபம்" என்று சொல்லுமது கண்டிலோமீ. [நங்கண்ணன்] - ஆச்ரிதபவ்யனான க்ருஷ்ணன். [கள்வங்களே] - முகப்பில் ஒன்றாய், முடிவில் ஒன்றாயிருக்கும் ப்ரவ்ருத்திகள். அடிமை கொள்வாரைப் போலே புகுந்து தான் வியாமுஹுப்பித் தாழ்கிற்கையும், விரோதியான சரீரத்தைக் கழித்துத் தரவேணுமென்று புகுந்து தேஹாத்மவிவேகம் பண்ணமாட்டாதொழிகையும், போக்யமாய்ப் புகுந்து தானே போக்தாவாகையும், எனக்கு உபகரிக்கிறானாகப் புகுந்து தன்பேறாகத் தலைக்கட்டுகையும், இதுடங்க வடிவில்வேறுபாட்டாலே தோற்றியிருக்கையும். இத்தலையில் ஆத்மாபஹாரத்தைத் தவிர்த்தது தன்னாத்மா பஹாரத்தாலே யாய்த்து.

● ஈடு.—அஞ்சாம்பாட்டு. என்னை அடிமைகொள்வாரைப்போலே புகுந்து, என் சரீரத்தையும் ஆத்மாவையுங்கூட புஜித்தான்; ஒருவன்வ்யாமோஹமிருந்தபடியென்! என்று விஸ்மிதராகிறார்.

[திருவருள்செய்பவன்போல] ஸர்வஸ்வதானம்பண்ணி அடிமைகொள்வாரைப்போலே யாய்த்துப் புகுந்தது. அபராதஸஹஸ்ரமடிதொழுதெழுகைக்கு அபர்வதமதிகமருளுவாரைப்போலே புகுந்தான். 'போல' என்கிறது-என் திறத்தில் செய்ததொன்றல்ல; திருவருள் தான் பெற்றானாயிராநின்றான். [என்னுள்புகுந்து] வழுவிலா அடிமைசெய்யப்பாரித்த என்பக்கலிலே புகுந்து. [உருவமும்] முதலிலே "அழுக்குடம்பு" என்றதனை விரும்பாநின்றான்: அவன் அங்கீகாரத்துக்கு முன்பு இவர் தேஹத்தையே விரும்பிப்போந்தார்; அவன் இவரை அங்கீகரித்த பின்பு, இவர் தேஹத்தை விரும்பப்புக்கான். இவருக்கு அவனோட்டை ஸம்பந்தம் ஸ்வரூபஜ்ஞானத்துக்கு உடலாயது. அவனுக்கு இவரோட்டை ஸம்பந்தம் தேஹாத்மாபிமானத்துக்கு உடலாய்த்து. [உருவமும்] "இவர் தாம்வேணுமோ, இவர் 'என்னது' என்று அபிமானித்ததனையமையாதோ" என்றிராநின்றான். [ஆருயிரும்] அபர்யவஸாநவ்ருத்தியா ஆத்மாவளவுஞ்செல்லுதல். இதுதான் தத்பர்யந்தமாய்வஸ்திராமையாலே அவ்வளவுஞ் செல்லுதல். [உடனேயுண்டான்] அதுதன்னிலும் வாசிவைத்துபுஜித்திலன். [உண்டான்] எனக்கு அவகாசம் வையாதே தானே போக்தாவானான். [திருவளர்சோலைத் தென்காட்கரையென்னப்பன்] தானேபோக்தாவாய்புஜித்தமை, அவ்வூரிற்சோலையும் வடிவும் கொட்சொல்லித்தரும். அழகு வளராநின்றுள்ள சோலை. [கருவளர்மேனி] கறுப்புவளராநின்றுள்ள வடிவு. "ஸதைகரூபம்" என்கிறது, இவ்வளவிற் கண்டிலோம். [நங்கண்ணன்] ஆச்ரிதபவ்யனான க்ருஷ்ணன். [கள்வங்கள்] முகப்பில் ஒன்றாய், முடிவில் ஒன்றாயிருக்கும் வ்ருத்திகள்: அடிமைகொள்வாரைப் போலேபுகுந்து தான் வியாமுஹுப்பித்தாழ்கிற்கையும், விரோதியான சரீரத்தைக் கழித்துத்தரவென்று புகுந்து தேஹாத்மவிபாகம் பண்ணமாட்டாதொழிகையும், போக்யமாய்ப்புகுந்து தான் போக்தாவாகையும், என்பேறாகப் புகுருகிறானாகப்புகுந்து தன்பேறாகத் தலைக்கட்டுகையும், இதுடங்க வடிவில்வேறுபாட்டாலே தோற்றியிருக்கையும். இத்தலையில் ஆத்மாபஹாரத்தைத் தவிர்த்தது, தன்னாத்மாபஹாரத்தாலே யாய்த்து.

எங்கண்ணன்கள்வம் எனக்குச்செம்மாய்நிற்கும்*
அங்கண்ணனுண்ட என்னாருயிர்க்கோதிது*
புன்கண்மையெய்திப் புலம்பியிராப்பகல்*
என்கண்ணனென்று அவன்காட்கரையேத்துமே. (6)

ஜீ.—ஆறும்பாட்டில், என்னை அடிமைகொள்வாரைப்போலே வந்து மிகவும் நலியும் க்ருஷ்ணனுடைய வஞ்சநங்களை அவனைக் கண்டவாறே மெய்யென்றிருப்பள் என்கிறார். [எங்கண்ணன் கள்வ மெனக்குச் செம்மாய்நிற்கும்] - 'அவன் வஞ்சகன் என்று ஒருநாளறிந்தால் பின்னைத் தப்புமோ ?' என்னில்,—எனக்கு பவ்யனைப்போலேயிருக்கிற க்ருஷ்ணனுடைய வஞ்சநங்கள் எனக்கு மெய்யாயிருக்கும் ; செம்மாய் நிற்கு மென்றது - சேமம்போலே யிருக்குமென்றுமாம். [அங்கண்ணனுண்ட என்று தொடங்கி மேலுக்கு] - அதிசபலனானவன் புஜித்த கோதான இவ்வாத்மா மீளவும் உயிர்ப்பெய்து இராப்பகல் "எனக்கு பவ்யனான க்ருஷ்ணனே" என்று கூப்பிட்டு அவன் எழுந்தருளியிருந்த திருக்காட்கரையை ஏத்தாநின்றது. புன்கண்மையாவது - பேகணிப்பு என்றுஞ் சொல்லுவர்.

இ.—ஆறும்பாட்டில், "அவன் க்ருத்ரிமனென்று அறிந்தால் அதிலே விருந்து நெஞ்சாறல் படாதே நீர் அகன்றுபோ ?" என்ன; அவனைக் கண்டவாறே அந்த வஞ்சனங்களை மெய்யென்றிருப்பனென்கிறார். [எங்கண்ணான் இத்யாதி] - எனக்கு பவ்யனைப்போலே யிருக்கிற க்ருஷ்ணனுடைய வஞ்சனம் எனக்குச் செவ்வையாய்த் தோற்றும்; அவன் கையிலே யகப்பட்டாலும் மீளமாட்டாதே, அவன்முகத்தே விழித்தவாறே அதெல்லாம் எனக்கு மெய்யாயிருக்கும்: "அவன் நமக்கு பவ்யனன்றோ ? என்பக்கல் களவு பரிமாறுமோ ? அவன் செய்ததெல்லாம் எனக்குமெய்" என்றுமாம். சேமம்போலே யிருக்குமென்றுமாம்; நங்கண்ணன் கள்வங்கள் என்று கீழ்முடிய 'எங்கண்ணன்' என்று தொடங்குவானென் ? என்னில், நாமென்றும் யாமென்றும் பர்யாயமாகையாலே பொருளிசை யந்தாதியாயிருக்கிறது. "எங்கண்ணன் கள்வங்கள்" என்று பாடமாகில் நேரே கிடக்கும். [அங்கண்ணனுண்ட] - அதிசபலனானவன் அநுபவித்த; அதிப்ரவணனை "அங்கண்ணன்" என்னக்கடவதிறே. [என்னாருயிர்க்கோது இது] - கோதான என் ஆத்மாவான இது. ஆத்மாவைக் கோதாம்படியாய்த்துப் பரிமாறிற்று. [புன்கண்மை] - பேகணிப்பு. பொல்லா நோக்கை யுடைத்தாய் என்கை. 'மீளவும் உயிர்ப்பெய்து' என்றும் சொல்லிப் போரும். அர்த்தமும் சப்தார்த்தமும் சேரும்படியென் ? என்று விசாரித்து, "கோதானவாருயிர் பேகணிக்கும்போது மீளவும் உயிர்ப்பெய்ய வேணுமிறே" என்று பின்னை அவிரோதேந கமித்தருளினார். [எங்கண்ணனென்று-இராப்பகல் புலம்பி] - முன்பு எனக்கு பவ்யனான க்ருஷ்ணனென்று அஹோராத்ர விபாகமின்றிக்கே கூப்பிட்டு, அவன் வர்த்திக்கிற திருக்காட்கரையை ஏத்தாநின்றது: "ராகவஸ்ய நிவேசநே" என்னுமாபோலே.

ஈடு.—ஆறும்பாட்டு. "அவன் க்ருத்ரிமனென்றறிந்தால் அதிலேவிடக்கு நெஞ்சாறல் படாதே யகன்றுபோகமாட்டீரோ ?" என்ன; அவனைக் கண்டவாறே, அவ்வஞ்சனைகளை மெய்யென்றிருப்பன்" என்கிறார்.

[எங்கண்ணான் கள்வ மெனக்குச்செம்மாய்நிற்கும்] எனக்கு பவ்யனைப்போலேயிருக்கிற க்ருஷ்ணனுடைய வஞ்சனங்கள் எனக்குச் செவ்விதாய்த்தோற்றும். ஒருநாள் அவன் கையிலே யகப்பட்டால் பின்னை மீளமாட்டேன். அவன் முகத்திலே விழித்தவாறே அவன் செய்யுமவை யடைய மெய்யாயிருக்கும் எனக்கு. "எனக்குச்செம்மாய்நிற்கும்" என்றத்தை, "எனக்குச் சேமமாயிருக்கும்" என்று ஒருதமிழன் நிர்வஹித்தான். "நங்கண்ணன் கள்வங்கள்" என்று கீழ் முடிய, 'எங்கண்ணன்' என்று தொடங்குவானென்னென்னில்; நாமென்றும்யாமென்றும் பர்யாயமாகையாலே, பொருளிசையந்தாதியாயிருக்கிறது. "எங்கண்ணன் கள்வங்கள்" என்று பாடமாகில் நேரே கிடக்கும். [அங்கண்ணனுண்ட] அதிசபலனானவன் அநுபவித்த. அதிப்ரவணனை "அங்கண்ணன்" என்னக்கடவதிறே. [என்னாருயிர்க்கோதுஇது] கோதான என்னாத்மாவான இது ஆத்மா கோதாம்படிகாணும் பரிமாறிற்று. [புன்கண்மை] பேகணிப்பு: பொல்லா நோக்கை யுடைத்தாயென்கை. "மீளவுயிர்ப்பெய்து" என்றுயர்த்து, நிர்வஹிப்பது. "இதுதான் சப்தத்தோடே சேர்ந்திருக்கிறதில்லை, இந்த சந்தமான அர்த்தத்தோடே சப்தத்தையுஞ் சேர வசிப்பிக்கும்படி எங்ஙனே?" என்று விசாரியாநிற்கச் செய்தே, 'கோதான இவ்வுயிரும் புன்கண்மையெய்தும்போது மீளவும் உயிர்ப்பெய்ததாகவேணுமிறே: அர்த்தஸ்வபாவத்தாலே தன்னடையே வரும்' என்று நான் சொன்னேன். ஜீயர் போரப்ரீதராயருளினார்" என்றருளிச் செய்வர். [எங்கண்ணனென்று-இராப்பகல் புலம்பி] முன்பு எனக்கு பவ்யனான க்ருஷ்ண

னென்று அஹோராத்ரவிபாகமின்றிக்கே கூப்பிட்டு, அவன்வர்த்திக்கிற திருக்காட்கரையை ஏத்தாநின்றது; *ராகவஸ்ய நிவேசநே* என்னுமாபோலே.

காட்கரையேத்தும் அதனுள்கண்ணாவென்னும்*
வேட்கைநோய்கூர நினைந்துகரைந்துகும்*
ஆட்கொள்வானொத்து என்னுயிருண்டமாயனால்*
கோட்குறைபட்டது என்னுருயிர்கோளுண்டே. (7)

ஈ.—ஏழாம்பாட்டில், எம்பெருமான் என்னை யடிமைகொள்வாரைப்போலே வந்து புகுந்து என்னுயிரையுமாள புஜித்துப் பின்னையும் புஜியாதானாயிருக்கும் என்கிறார் [வேட்கைநோய் கூர]-அபிநிவேசம்மிக. [கோட்குறைபட்டது என்னுருயிர் கோளுண்டே] - நிச்சேஷமாக புஜிக்கப்பட்டே பின்னையும் சிறிது சேஷித்தது. தன் ஸாபேக்ஷனும் போகையாலே.

இ —ஏழாம்பாட்டில், அடிமைகொள்வாரைப்போலே புகுந்து என்னுயிரை நேராக புஜித்து, பின்னையும் புஜியாதாரைப்போலே யிருக்குமென்கிறார். [காட்கரை இத்யாதி] - அவனிலும் அவனிருந்த ஊரையேத்தும். [அதனுட் கண்ணாவென்னும்] பரத்வத்திற்காட்டில் அவ்வூரில் புகுந்தபின்பு உண்டான ஏற்றம். "என்கண்ணன்" என்று காட்கரையேத்தும்; அவ்வூரையேத்தா அவன்தன்னையேத்தும்; இரண்டுக்கும் புறம்புபோகிறதில்லை, [வேட்கைநோய் கூரநினைந்து] - அபிநிவேசம் மிகும்படி அநுஸந்தித்து. [கரைந்துகும்] - சிதிலமாய் ஓரவயவிப்ரதிபத்தி பண்ணவொண்ணாதபடி உகும். [ஆட்கொள்வான் இத்யாதி] - அடிமைகொள்வாரைப்போலே புகுந்து, என்னை வெறுந்தரையாக்கின ஆச்சர்யபூதனாலே. கீழே "திருவருள்" என்று மறைத்துச்சொன்ன வார்த்தையை வெளியிடுகிறார். கிட்டினபோது தாழநின்று மின்மினிபறக்கப் பரிமாறும் ஆச்சர்யம். [என்னுருயிர் கோளுண்டே - கோட்குறைபட்டது] - என்னாத்மாவை நிச்சேஷமாக புஜிக்கச்செய்தேயும் இத்தலையிலே சிறிதுசேஷித்தது அவன் ஸாபேக்ஷனும்ப் போகையாலே இத்தலையிலே சிறிதுசேஷித்தது என்றிருக்கிறார் இப்போதிருந்துக்லேசப்படக் காண்கையாலே சிறிது தொடங்கிற்று உண்டென்றிருக்கிறார். ஒருஸர்வஜ்ஞன் இல்லாததொன்றிலே இத்தனை வ்யாமோஹம் பண்ணக்கூடாதென்றிருக்கிறார்.

ஈடு.—ஏழாம்பாட்டு. அடிமைகொள்வாரைப்போலே புகுந்து, என்னுயிரை நேராக புஜித்துப் பின்னையும் புஜியாதாரைப்போலே இருக்குமென்கிறார்.

[காட்கரையேத்தும்] அவனிலும் அவன்இருந்த ஊரை ஏத்தும். [அதனுள் கண்ணாவென்னும்] பரத்வத்திற்காட்டில் அவ்வூரிற் புகுந்தபின்புஉண்டானஏற்றம். "என்கண்ணன்" என்று, காட்கரையேத்தும்; அவ்வூரையேத்தா, அவனையேத்தும்; இரண்டுக்கும் புறம்பு போகிறதில்லை. [வேட்கைநோய்கூரநினைந்து] அபிநிவேசம் மிகும்படி யநுஸந்தித்து. [கரைந்துகும்] சிதிலமாய் ஓரவயவியென்று ப்ரதிபத்திபண்ணொணாதபடி யுகும். [ஆட்கொள்வானொத்து என்னுயிருண்டமாயனால்] அடிமைகொள்வாரைப்போலே புகுந்து, என்னை வெறுந்தரையாக்கின ஆச்சர்யபூதனாலே; கீழ் "திருவருள்" என்று மறைத்துச் சொன்னதை வெளியிடுகிறார். கிட்டினபோது தாழநின்று மின்மினி பறக்கப் பரிமாறின ஆச்சர்யம். [என்னுருயிர் கோளுண்டே கோட்குறைபட்டது] என் ஆத்மாவை நிச்சேஷமாக புஜிக்கச் செய்தேயும் (இத்தலையிலேசிறிது சேஷித்தது:) அவன் ஸாபேக்ஷனும்ப் போகையாலே, இத்தலையிலே இன்னம் சிறிது சேஷித்ததென்றிருக்கிறார்; இப்போதிருந்து க்லேசப்படக் காண்கையாலே சிறிது தொடங்கிற்றுண்டென்றிருக்கிறார். ஒரு ஸர்வஜ்ஞன் இல்லாததொன்றிலே இத்தனை வ்யாமோஹம் பண்ணக்கூடாதென்றிருக்கிறார்.

கோளுண்டானன்றிவந்து என்னுயிர்தானுண்டான்*
நாளுநாள்வந்து என்னைமுற்றவுந்தானுண்டான்*
காளநீர்மேகத் தென்காட்கரையென்னப்பற்கு*
ஆளன்றேபட்டது என்னாருயிர்பட்டதே* (8)

ஒ.—எட்டாம்பாட்டில், நாள்தோறும் என்னை புஜியாநின்றாலும் பெறும்பேறு பெற்றுப்போலே வந்து புஜியாநிற்கிற இவனுடைய குணவத்தையொன்றும்பொறுக்கமாட்டுகிறிலேன் என்கிறாள். [கோளுண்டானென்றுதொடங்கி] - இதுக்குமுன்பு இப்படி இருப்பதொன்று பெற்று புஜித்தறியாதானைப்போலே என்னுயிரைத் தான் அபிநிவிஷ்டனும் புஜித்தான். நிர்ஹேதுகமாகவந்து என்னை விஷயீகரித்தானென்றுஞ் சொல்லுவர்; என்னால் கொள்ளப்படாதாலும் தான் என்னைபுஜிக்குமென்று கருத்து. [நாளுமென்றுதொடங்கி] - இப்படி நாள்தோறும்வந்து என்னை நிச்சேஷமாக புஜித்தான். [காளநீர் மேகமென்று மேலுக்கு]-நிரதிசயபோக்யனான திருக்காட்கரையப்பனுக்கு நான் அடிமையானவத்தனையேயன்றோ! என்னை இங்ஙனேபடுத்த வேணுமோ?

இ.—எட்டாம்பாட்டில், நாள்தோறும் என்னை அநுபவியாநின்றாலும் பெறும்பேறு பெற்றுப்போலே புஜிக்கிற இவனுடைய குணவத்தை பொறுக்கவொண்கிறதில்லை என்கிறாள். [கோளுண்டானன்றி வந்து என்னுயிர்தானுண்டான்] - என்பக்கல் ஒரு உபகாரங்கொண்டானன்றிக்கே, நிர்ஹேதுகமாகவந்து என்னாத்மவஸ்துவை அநுபவித்தான். இதுக்குமுன்பு இப்படியிருப்பதொரு கற்சரக்குப் பெற்றறியாதானும் என்பக்கலிலே அபிநிவிஷ்டனானானென்றுமாம். தான் என்னால்கொள்ளப்படாதே என்னை புஜித்தானென்றுமாம். [நாளுநாள் வந்து] - ஒருநாள் அநுபவித்து ஸம்மதனன்றேயென்று கைவாங்கியிருக்கையன்றிக்கே, நாள்தோறும் நாள்தோறும் அபூர்வமாக அநுபவியாநின்றான். [என்னைமுற்றவுந் தானுண்டான்] - ஸம்ஸாரத்திலே அணுபரிமாணமான இவ்வஸ்துவை விபுவான தான் விளாக்குலைகொண்டு அநுபவித்தானென்கிற இது தனக்கேற்றமாம்படி கௌரவியாநின்றான். "சிறியவென்னாருயிர்" என்றது - தான் தம்மைப் பார்த்து; அவனுடைய ஆதரத்தைக்கொண்டு சொல்லுகிறாள் இது. [காளநீர் மேகத் தென்காட்கரை என்னப்பற்கு] - கறுத்தநீர்கொண்டெழுந்த மேகம் போலேயிருந்துள்ள வடிவையுடையனாய், வர்ஷிக்கைக்கு அம்மேகம் படிந்த ஸ்தலம் போலேயிருக்கிற திருக்காட்கரையிலேவந்து நின்றருளின என்ஸ்வாமிக்கு வடிவது, ஊரது, தனக்கு என்னகுறையுண்டாய் இப்படி ஈடுபடுகிறான்! [ஆளன்றேபட்டது] - அடிமைபுக்கவத்தனையல்லது ராவணாதிகளைப்போலே எதிரம்பு கோத்தேனோ? [என்னாருயிர்பட்டதே] - ஓராத்மவஸ்து படும்பாடே இது! எதிர்த்தார் உடம்பிலுத்தல் புண் பட்டதுக்கு மருந்திட்டாற்றுதல் செய்யுமவன்றே பட்டது. குணத்தாலே வரும் நோவு ஸ்வரூபகதமாய்ப் பரிஹாரமில்லையிறே.

ஈடு.—எட்டாம்பாட்டு. நாள்தோறும் என்னையநுபவியாநின்றாலும் பெறும் பேறு பெற்றுப் போலே புஜிக்கிற இவனுடையகுணவத்தை பொறுக்கவொண்கிறதில்லையென்கிறாள்.

[கோளுண்டானன்றிவந் தென்னுயிர்தானுண்டான்] இதுக்குப்பலபடியும் அருளிச்செய்வர். என்பக்கல் ஒருஉபகாரங்கொண்டன்றிக்கே நிர்ஹேதுகமாக என்னாத்மவஸ்துவை அநுபவித்தான்; அதவா, இதுக்குமுன்பு இப்படியிருப்பதொரு சரக்குப்பெற்றறியாதானும் என்பக்கலிலே அபிநிவிஷ்டனானானென்றுமாம்; என்னால் தான்கொள்ளப்படாதிருக்க, தான் என்னைக் கைக்கொண்டானென்னுதல். [நாளுநாள்வந்து] ஒருகால் புஜித்து "இனி இதுவாம் புஜிக்கதன்றே?" என்று கைவாங்கியிருந்தானோ? நாள்தோறும்நாள்தோறும் வந்து. அவனுடைய அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதம்இருக்கிறபடி. [என்னைமுற்றவுந் தானுண்டான்] அணுபரிமாணமான இவ்வஸ்துவை விபுவானதான் விளாக்குலைகொண்டு அநுபவித்தானென்கிற இது தனக்கு ஏற்றமாம்படி கௌரவியாநின்றான். "சிறியவென்னாருயிர்" என்றவது - தம்மைப்பார்த்து; அவனுடைய அநுபவத்தைக்கொண்டு சொல்லுகிறாள் இது. [காளநீர்மேகத்தென்காட்கரையென்னப்பற்கு] கறுத்தநீர்கொண்

உடுத்த காளமேகம்போலேயிருக்கிற வடிவையுடையனும், அம்போகர்தான் வர்ஷிக்கும் வித்தத்திலே படிந்தாப்போலே திருக்காட்கரையிலே வந்து ஸந்நிதிபண்ணின நிருபாதிக பந்துவுக்கு. வடிவழகு அது; ஊர் அது; தனக்கு என்ன குறையுண்டாய் இப்படிபடுகிறான்! [ஆனதேபட்டது!] அடிமையன்றோ புக்கது? சாவனுதிகளைப்போலே எதிரம்புகோத்தேதனோ? [என்னுருயிர்பட்டதே] ஓர் ஆத்மவஸ்து படும்பாடே இது! எதிர்த்தார் உடம்பிறத்தல், புண்பட்டதுக்கு மருந்துவைத்தாற்றுதல் செய்யுமத்தனையிறே; இங்கு ஆருயிரிறே நோவுபட்டது; ஞானத்தால்வரும்நோவு ஸ்வரூபகதமாய்ப் பரிஹாரமில்லையிறே.

> ஆருயிர்பட்டது எனதுயிர்பட்டது*
> பேரிதழ்த்தாமரைக்கண் கனிவாயதுஓர்*
> காரெழில்மேகத் தென்காட்கரைகோயில்கொள்*
> சீரெழில்நால்தடந்தோள் தெய்வவாரிக்கே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், தன்னோடு பரிமாறுமவனையெல்லாரையும் இப்படியே பண்ணுமோ அவன் பரித்துவதென்னில்,—அவனுடைய குணத்துக்குத் தலைநீர்ப்பாடான திருநாட்டிலுள்ளார்தான் நானபட்டது பட்டாரோ? என்கிறார். [பேரிதழ்த் தாமரையென்று மேலுக்கு] - பெரிய இதழையுடைய தாமரைப்பூப்போலே யிருக்கிற கண்ணையும் சிவந்த வாயையுமுடைத்தாய்க் கறுத்தவெழிலையும் உடையது ஒருமேகம்போலேயாய்த் திருகாட்கரையைக் கோயிலாகக் கொள்வதுஞ்செய்து அழகியவெழிலேயுடைய நாலு பெரிய தோள்களையுமுடைய தெய்வவாரிக்கு. தெய்வவாரியாவது - தெய்வங்களபடும் ஆதாரம்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், "நீரேயோ இப்பாடு பட்டீர்? குணாநுபவமே யாத்ரையான நித்யஸூரிகளும் படும்பாடு இதுவன்றோ?" என்ன, "அவர்கள்தான் நான்பட்டது பட்டார்களோ?" என்கிறார். [ஆருயிர்பட்டது எனதுயிர்பட்டது] - நான்பட்ட பாட்டை நித்யஸூரிகளிலே சிலர் பட்டாருண்டோ? பகவத்குணங்களுக்கு அபூமியாயிருக்கிற ஸம்ஸாரத்திலே நான் பட்ட பாடு, நித்யவிபூதியிலுள்ளவர்கள் பட்டார்களோ? இங்கு எனதுயிர் பட்டது அங்கு ஆருயிர்பட்டது! என்றருளிச்செய்வர் எம்பெருமானார். "நவோடையான ஸ்த்ரீக்கு அநுபவத்தில் புதுமையாலே ஆர்த்தி மிக்கிருக்குமிறே" என்று நம் பிள்ளைக்கு அருளிச்செய்தார். [பேரிதழ்த்தாமரைக் கண் கனிவாயதோர்] - தம்மை நோவுபடுத்தினவற்றைச் சொல்லுகிறார். பெரியவிதழையுடைய தாமரைபோலேயிருக்குள்ள கண்ணையும் சிவந்தவாயையும் உடையனாய்க் கறுத்தவெழிலை யுடைத்தான மேகம்போலே வடிவையுடையனாய்த் திருக்காட்கரையைக் கோயிலாக உடையனும். [சீரெழில் நால்தடந்தோள்] - வீரச்சீரையும் எழிலையுமுடைத்தாய், கல்பகதரு பணைத்தாப்போலே நாலாய்ச் சுற்றுடைத்தான தோள்களையுடைய. [தெய்வவாரிக்கு] - தெய்வங்கள் படும் கடலுக்கு, தெய்வங்களுக்கு உத்பாதகனுக்கு. ஸ்வதந்த்ரர்க்கு உத்பாதகனானவன் கிடீர், பரதந்த்ரனை யிருக்கிற என்னையழிக்கிறான்! வடிவழகையும், அவ்வூரில் இருப்பையுங் காட்டிப்பார்த்து இவரையழித்தது.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. 'நீரேயோ இப்படிப்பட்டீர்! குணாநுபவமே யாத்ரையான நித்யஸூரிகளும் படும்பாடு இதுவன்றோ?' என்ன, 'அவர்கள்தான் நான் பட்டது பட்டார்களோ? என்கிறார்.

[ஆருயிர்பட்டது எனதுயிர்பட்டது] நான்பட்டபாட்டை நித்யஸூரிகளிலே தான் பட்டாருண்டோ? பகவத் குணங்களுக்கு அபூமியாயிருக்கிற ஸம்ஸாரத்திலே நான்பட்டபாட்டை நித்யவிபூதியிலே உள்ளவர்கள்தான் பட்டார்களோ? என்கிறார். 'இங்கு எனதுயிர்பட்டது அங்கு ஆருயிர்பட்டது?' என்று எம்பெருமானார். 'எல்லாரும் குணாநுபவமாகிற் பண்ணுமோது இவர்க்கு இவ்வாகி கூடினபடி யென்? என்று நான் கேட்க, நவோடையான ஸ்த்ரீக்கு பர்த்தாவினுடைய கரஸ்பர்சம் பட்டவாறே வேர்ப்பது விடுவதாமாபோலே, இவர் அநுபவத்தில் புதியராகையாலே வருகிறதுக்காணும்' என்று சீயர் அருளிச்செய்தார். உயிரையழித்த

னே தூக்கனைச் சொல்லுகிறபடி-மேல், [பெரிதழ்த்தாமரைக்கண் கனிவாயதோர்] - பெரிய இதழையுடைய தாமரைபோலே பிருக்குள்ள கண்ணையும் சிவந்த வாயையுமுடையனும். [காரெழில்மேகத்தேன்காட்கரைக்கோயில்கொள்] கறுத்த எழிலையுடைத்தான மேகம் போலே வடிவையுடையனும் திருக்காட்கரையைக் கோயிலாகவுடையனும். [சீரெழில்நால் தடந்தோள்] வீரச்சீரையும் எழிலையுமுடைத்தாய், கல்பகதரு பணைத்தாப்போலே நாலாய்ச் சுற்றுடைத்தான தோள்களையுடைய. [தெய்வவாரிக்கு] தெய்வங்கள் படுங்கடலுக்கு. வாரி - கடல். வத்ஸங்களுக்கு உத்பாதகனுக்கு. அப்ராக்ருதர்க்கு உத்பாதகனானவன் இவர், அபயாகூர்பனுள் எனைப்புரிந்தான்! வடிவழகையும் அவ்வூரில் இருப்பையுங் காட்டியாய்த்து இவரையழித்தது.

வாரிக்கொண்டு உன்னைவிழுங்குவன்காணிலென்று*
ஆர்வுற்றவென்னையொழிய என்னில்முன்னம்
பாரித்து* தானென்னை முற்றப்பருகினான்*
காரொக்கும் காட்கரையப்பன்கடியனே. (10)

ஒ—பத்தாம்பாட்டில், தம்மோடுகலந்த எம்பெருமானுக்குத் தம்மிலும் அபிநிவேசம் மிக்கிருந்தபடியை அருளிச்செய்கிறார். [வாரிக்கொண்டென்று தொடங்கி] - உன்னைக்காணில் அசேஷ சேஷவ்ருத்தியும்பண்ணி புஜிக்கவேணுமென்று அபிநிவேசித்த என்னையொழிய எனக்குமுன்னேகோலி, தன்னுடையகுணசேஷ்டிதாதிகளைக் காட்டி என்னைநிரவசேஷமாகப்பருகினான். [காரொக்கும் காட்கரையப்பன் கடியனே]-பரமோதாரனான காட்கரையப்பன் ப்ராவண்யத்தில் மிகவும் கூர்மையுடையனாயிருக்கும்.

இ.—பத்தாம்பாட்டில், தம்மிலும் அவனுக்கு அபிநிவேசம் மிக்கிருந்தபடியைக்காட்டி அத்தாலும் நோவுபட்டபடியை அருளிச்செய்கிறார். [வாரிக்கொண்டு] - 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' என்று "நித்ய ஸூரிகளுக்கும் அவகாசம்கொடேன்" என்றுமத்து இவர்பாரித்தது. "வழுவிலாவடிமை செய்யவேண்டும்" என்றாரிறே. [உன்னை] - ஸர்வசேஷியாய் விபுவான உன்னை. [விழுங்குவன்] - சேஷபூதனுக்குக் கைங்கர்யமிறே தாரகம். [காணில்] - உன்னைக்காணப்பெறில். [என்று ஆர்வுற்ற] - இப்படி அபிநிவேசித்த ஆர்வத்தையுற்ற. [என்னையொழிய] - என்னளவு பாராதே. [என்னில் முன்னம்பாரித்து] - நான் பாரித்தவளவுமன்றிக்கே நான்பாரித்த காலத்துக்குமுன்பே பாரித்து. ஆசார்ய விஷயீகாரத்துக்குப் பின்னிறே இவருடைய பாரிப்பு; ஸம்பந்தத்துக்குத் திரஸ்காரமேதுமின்மையாலே, அவனுடைய பாரிப்பு ஸத்தாப்ரயுக்தமிறே. [தானென்னை] - விபுவாய் ஸ்வதந்த்ரனானதான் அணுவாய் பரதந்த்ரனான என்னை. [முற்றப்பருகினான்] - தன்குணசேஷ்டிதாதிகளைக் காட்டி என்னை நிரவசேஷமாகப் பருகினான்; "வசஸா ஸாந்த்வயித்வைநம் லோசநாப்யாம் பிபந்நிவ" என்கிறபடியே இத்தலையையழித்துப் பரிமாறினான் என்றபடி. "விழுங்குவன்காணில்" என்றிறே இவர்பாரித்தது. [காரொக்கும் காட்கரையப்பன்] - பரமோதாரனும் ஸம்ஸ்லேஷித்தவன். [கடியனே] - போகதசையில் விரைந்திருக்கும்; எதிர்த்தலைக்கு ஒன்றும் விட்டுக் கொடானென்கை.

ஈடு.—பத்தாம்பாட்டு. தம்மோடு கலந்த எம்பெருமானுக்குத் தம்மிலும் அபிநிவேசம் மிக்கிருந்தபடியைச் சொல்லுகிறார்.

[வாரிக்கொண்டு] "இவ்வஸ்துவில் பிறர்க்கு ஒன்றும்சேஷியாதபடியாக புஜிக்கக் கடவோம்" என்றிருந்தாராய்த்து. அதாவது - "வழுவிலாவடிமைசெய்யவேண்டும்" என்று பாரித்தது. "அனந்தவைநதேயாதிகளுக்கும் அடிமைசெய்யவிடங்கொடேன்" என்றிருந்தாராய்த்து; "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்கிறபடியே. [உன்னை] ஸர்வசேஷியான உன்னை. [விழுங்குவன்] சேஷபூதனுக்குக் கைங்கர்யமிறே தாரகம். [காணில்] உன்னைக்காணப் பெறில். [என்று ஆர்வுற்ற] இப்படி அபிநிவேசித்த - ஆர்வத்தையுற்ற. [என்னையொழிய] என்னளவு பாராதே. [என்னில் முன்னம் பாரித்து] நான் பாரித்தவளவுமன்றிக்கே நான்

பரிக்ரஹகாலத்துக்கு முன்பே பரிந்து. ஆசார்யவிஷயீகாரத்துக்குப்பின்பிறே இவருடைய பரிப்பு; ஸம்பந்தத்துக்குத் திரஸ்காரஹேதுவில்லாமையாலே, அவனுடையபரிப்பு ஸத்தாப்ரயுக்தமிறே. [தூனென்னை] விபுவாய் ஸ்வதந்த்ரனான தான், அணுபரிமாணனுப்பரதந்த்ரனானவென்னை. [மூற்றப்பருகினான்] தன்குணசேஷ்டிதங்களைக்காட்டி. என்னை நீராக்கி நிச்சேஷமாகப்பருகினான்; "வசஸா ஸாந்த்வயித்வைநம் லோசநாப்யாம் பிபந்நிவ" என்கிறபடியே; இத்தலையைமுழித்துப் பரிமாறினானென்றபடி. உண்டபடி சொன்னார் கீழ்; உண்டவனுக்குத் தண்ணீரும் அபேக்ஷிதமிறே; ஆகையாலே, தண்ணீர் குடித்தபடி சொல்லுகிறார். அவனுடைய உண்ணுஞ்சோறு பருகுநீருக்கிறபடியிறே யிது. [காரொக்குங்காட்கரையப்பன்] பரமோதாரனும் ஸந்நிஹிதனானவன். [கடியனே] போகதசையில் விரைந்திருக்கும். இரண்டு தலையாய்ப் பரிமாறப்புக்கால் எதிர்த்தலைக்கு இடம் வையான்.

கடியனாய்க் கஞ்சனைக்கொன்றபிரான்தன்னை*
கொடிமதிள்தென்குருகூர்ச் சடகோபன்சொல்*
வடிவமையாயிரத்திப்பத்தினால் சன்மம்
முடிவெய்தி* நாசங்கண்டீர்களெங்கானலே. (11)

ஆ.—நிகமத்தில், ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி வல்லார்க்கு ஜந்மம்முடிந்து அதுக்கடியான ஸம்ஸாரமும் நசிக்கும் என்கிறார். [கடியனாய்க் கஞ்சனைக் கொன்ற பிரான்தன்னை]-கன்பாராதே கம்ஸனைக் கொன்ற மஹோபகாரகனை. [கொடிமதிள் தென் குருகூர் சடகோபன்சொல் வடிவமையாயிரத்து இப்பத்தினால்] - ஸம்ருத்தமான திருநகரியையுடைய ஆழ்வாருடைய சொல்லான நல்லபடியையுடைய ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி கற்றதே ஹேதுவாக, து:க்கரூபமான ஸம்ஸாரகாந்தாரம் நசிக்கும்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸித்தார்க்கு ஜந்மம் முடிந்து அதுக்கடியான ஸம்ஸாரமும் நசிக்குமென்கிறார். [கடியனாய்க் கஞ்சனைக்கொன்ற] - கம்ஸன் தான் நினைத்த தீமையை அவன் தன்னோடே போம்படி பண்ணினான். [கடியனாய்] - தன்பக்கலின்றிக்கே வந்தேறி யென்கை. [பிரான்தன்னை] - முன்பு உபகாரகனானவன்கிடீர் நம்மையழித்தான். உகந்தாரை யழிக்கையிறே பாதகமாவது; விரோதிகளையழிக்குமிது உபகாரமிறே! [கொடிமதிள் தென்குருகூர்] கம்ஸவிஜயத்துக்குக் கொடிகட்டிற்றுத் திருநகரியாய்த்து, ஸ்வாமி விஜயத்துக்கு உரிய அடியாரிருந்த விடத்தேயிறே கொடி கட்டுவது. [வடிவமையாயிரம்] - ஸமுதாயசோபையை யுடைத்தாயிருக்கை. கட்டடங்கவழகிதாயிருக்கை. விஜயமுண்டானவாறே ப்ரசஸ்திமாலைகளுஞ் செல்லாநிற்குமிறே. [சன்மம் முடிவெய்தி] - ஜந்மபரம்பரைகளுக்கு அவஸாநத்தை யடைந்து. [நாசங்கண்டீர்கள் எங்கானலே] - ஜந்மத்துக்கடியான ஸம்ஸாரமும் நசிக்கும். [கானல்] - ம்ருகத்ருஷ்ணிகை. இன்னம் பிறக்க விராதே, பகவத்குணாநுபவம் ஸாத்மிக்கும் தேசத்திலே புகுவர்கள்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியப்யஸிப்பார்க்கு, ஜந்மம் முடிந்து அதுக் கடியான ஸம்ஸாரமும் நசிக்குமென்கிறார்.

[கடியனாய்க்கஞ்சனைக் கொன்றபிரான்தன்னை] கம்ஸன் தான் நினைத்த தீமையை அவன் தன்னோடேபோம்படி பண்ணினான். [கடியனாய்] தன்பக்கலின்றிக்கே வந்தேறி யென்கை "கொண்ட சீற்றம்" என்னக்கடவதிறே. [பிரான்தன்னை] முன்பு உபகாரகனானவன் கிடீர் நம்மையழித்தான்! உகந்தாரையழிக்கையிறே பாதகமாவது; விரோதிகளையழிக்குமது உபகாரமிறே. [கொடிமதிள்தென்குருகூர்] கம்ஸவிஜயத்துக்குக் கொடிகட்டிற்றுத் திருநகரியாய்த்து; ஸ்வாமிவிஜயத்துக்கு, உரியவடியாரிருந்தவிடத்தேயிறே கொடிகட்டுவது. [வடிவமையாயிரம்] ஸமுதாயசோபையையுடைத்தாயிருக்கை. கட்டடங்க அழகிதாயிருக்கை. விஜயமுண்டானவாறே ப்ரசஸ்திமாலைகளுஞ் செல்லாநிற்குமிறே. [சன்மம்முடிவெய்தி] ஜந்மபரம்பரைக்கு

அவஸாநத்தை லபித்து. [நாசங்கள்கூர்கள்எங்கானலே] ஐக்யத்துக்கு அடியான ஸம்ஸாரமும் நசிக்கும், கானல்-ம்ருகத்ருஷ்ணிகை. இன்னமிங்கே பிறக்கவிராதே, பகவத்குணாநுபவைக ரஸம் ஸாத்மிக்கும் தேசத்திலே புகுவர்கள்.

ஏழாந்திருவாய்மொழி—எங்கானல் : ப்ரவேசம்

ஆ.—ஏழாந்திருவாய்மொழியில், இப்படி அப்ராப்திகார்ய ஸ்மரணத்தாலே மிகவும் ப்ரீதரானவர்க்கு இப்போது பகவத்ஸாக்ஷாத்கார மில்லாமையாலே, ஸ்மரணத்தால்வந்த ப்ரீதியும் மாறி அப்ராப்தியே தலையெடுத்து, அத்யந்தம் அவஸந்நரான ஆழ்வார், தம்முடைய தசையை ஒருபிராட்டியுடைய தூதவாக்யத்தாலே எம்பெருமானுக்கு அறிவிக்கிறார். எம்பெருமானுடைய அழகிலே ஈடுபட்டு அவனோடே ஸம்ஶ்லேஷித்தாள் ஒருபிராட்டி அவன்வரவு காணாதே அவனல்லது செல்லாத ப்ரக்ருதியாகையாலே தன்னாற்றாமையாலே க்ருஹத்திலுள்ளும் உத்யாநப்ரதேசத்திற் சென்று, அங்கேயிருந்த சிலபக்ஷிகளைக்குறித்து நிரதிசயபோக்யமான வடிவையுடையனும் க்ருபாம்புதியானவன், தான் தனக்கு ஸ்நேஹிகளானாரோடேப் பரிமாற்றத்தாலே என்தசையை உணராதே மறந்திருந்தானாகிலும். ஆனால், தன்னழகைக் கண்டு பிரிந்தார் தரிப்பரோ என்று அவனுக்கு அறிவிக்கவேணுமென்று அவற்றை ஸவிநயமாக இரக்கிறாள்.

இ.—ஏழாந்திருவாய்மொழியில், அப்ராப்திகர்ப்பகுணஸ்மரணத்தாலே மிகவும் ப்ரீதரானவர், பாக்ய ஹாநியாலே அப்ராப்த்யம்சமே தலையெடுத்து அவனைப்பெறில் ஜீவித்தல், பெறுவிடில் முடிதலாம்படியான தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார். இயற்கையிலே புணர்ந்துபிரிந்தாள் ஒருபிராட்டி, அவன் அழகிலே ஈடுபட்டு அவனைக்கையாய்த் தன்னாற்றாமை கைகொடுக்க உத்யானத்திலே சென்று அங்கிருக்கிற பக்ஷிகளைக்குறித்து, "விண்ணோர் வணங்கும் சோதி திருமூழிக்களம்" என்கிறபடியே தூதுபோவார்க்கு அருமைப்பட்டு அறிவிக்கவேண்டாதபடி திருமூழிக்களத்திலே வந்துநின்றருளினான். தனக்கு நல்லாரை விடமாட்டாதவனாகையாலே நம்தசையை அறியாதிருந்தானாகிலும், க்ருபாம்புதியாகையாலே நம்தசையை அறிவிக்க வரும்; தன்னழகைக்கண்டு பிரிந்தார் தரிப்பரோ? என்று அறிவிக்கவேணுமென்று, அவற்றை ஸவிநயமாக இரக்கிற ஒருபிராட்டிபேச்சாலே தம்தசையை அருளிச்செய்கிறார். அஞ்சிறையமடநாரையில் "இத்தலையில் அபராதத்தாலே வாராதொழிந்தானாகிலும்" என்று அவனுடைய அபராதஸஹத்வம் பற்றாசாகத் தூதுவிட்டாள்; வைகல் பூங்கழிவாயில் "வல்வினையேன் கண்டால் காலதாமதம் பண்ணுகையாலே மறந்திருந்தானாகிலும், நம்ஆர்த்தியை யறிவித்தால் தன்னினைவு மிலே நெஞ்சுவைப்பானொருவனல்லன்" என்று அதுபற்றாசாகத் தூதுவிட்டாள்: பொன்னுலகாளீரோவில் "ஐச்வர்யப்ரப்பாலே மறந்திருந்தானாகிலும், ஆச்ரிதரோடு ஏகரஸனென்று அறிவிக்கவே வரும்" என்று ஸங்கல்பம் பற்றாசாகத் தூதுவிட்டாள்; இதில் தனக்கு நல்லாரை விடமாட்டாமையாலே வாராதிருந்தானாகிலும், தன்வடிவழகை, குணங்களை, ஆனபின்பு பிரிந்தார்க்கு ஜீவித்திருக்கப்போமோ" என்று அவ்வடிவழகும் குணங்களும் பற்றாசாகத் தூது விடுகிறது.

ஈடு.—*இதில் அப்ராப்திகர்ப்பகுணாநுஸந்தாநத்தாலே மிகவும் ப்ரீதரானவர், பாக்யஹாநியாலே அப்ராப்த்யம்சமே தலையெடுத்து, அவனைப்பெறிற் பிழைத்தல், பெறுவிடில் முடிதலாம்படியான தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே அருளிச் செய்கிறார்.*

இயற்கையிலே புணர்ந்து பிரிந்தாளொரு பிராட்டி, அவன்வடிவழகிலே யீடுபட்டு அவனைக்கையாய், தன் ஆற்றாமை கைகொடுக்கத் தன் உத்யாநத்திலே சென்று, அங்கிருக்கிற பக்ஷிகளைக்குறித்து, "விண்ணோர்வணங்குஞ்சோதி திருமூழிக்களம்" என்கிறபடியே தூது

போவார்க்கு அருமையாட்டு அறிவிக்கவேண்டாதபடி திருமூழிக்களத்திலே வந்து நின்று அருளினான்; தனக்கு நல்லாரை விடமாட்டாதவனாகையாலே நம் தசையறியாதிருந்தானத்தனே, க்ருபாவானாகையாலே நம்தசையறிவிக்க வரும்; "உம்மைப் பிரிந்தார் தரிப்பரோ?" என்று அறிவிக்கவேணும் என்று அவற்றை விஷயமாக இரக்கிறு ஸௌந்தர்யாதிபேச்சாலே தம் தசையை அருளிச்செய்கிறார். அஞ்சிறையமடநாரையிலே, "யாமுடைய அபராதத்தாலே வாராதொழிந்தானத்தனை, அவனுடைய அபராத ஸஹத்வத்தையறிவிக்க வரும்" என்று அபராதஸஹத்வம் பற்றாசாகத் தூதுவிட்டாள்; "வைகல்பூங்கழிவாயில், "கண்டாள் காலாதுழப்படுலகப்பிலே திருவண்வண்டூரில் வைகும் இறைவனைக்கண்டு காண்தாழ்ந்தானத்தனே, நம்மார்த்தியையறிந்தால் தன் இனிமையில் நெஞ்சுவைப்பானொருவனல்லன்" என்று அது பற்றாசாகத் தூதுவிட்டாள்; "பொன்னுலகாளீரோ, திருக்கோளூரேறப் போக" என்று தன்னுடைய ககரோபகாரத்தையும் சென்று பலஹானியாலே போகமாட்டாதேயிருக்கிற பிராட்டி, பின்னையும், அவன் காக்குமையாலே, "வாராதொழிகைக்கு நிபந்தனம் - தன் ஐச்வர்யப்பரப்பாலே, தான் ஆச்ரிதரோடு ஸ்ரீஸ்வனாகையாலே வரும்" என்று ஐச்வர்யம் பற்றாசாகத் தூதுவிட்டாள்; இதில், "தனக்கு நல்லாரையிருப்பாரைவிட மாட்டனமையாலே வாராதிருக்கானுமிருக்கை; தன்வடிவழகும், குணங்களையும், அனபின்பு பிரிந்தார்க்கு ஜீவித்திருக்கப்போமோ?" என்று அவன்வடிவழகும் குணங்களும் பற்றாசாகத் தூதுவிடுகிறாள்.

எங்கானலகங்கழிவாய் இரைதேர்ந்திங்கினிதமரும்*
செங்காலமடநாராய்! திருமூழிக்களத்துறையும்*
கொங்கார்பூந்துழாய்முடி யெங்குடக்கூத்தர்க்கென்தூதாய்*
நுங்கால்கள்என்தலைமேற் கெழுமீரோநுமரோடே! (1)

ஒ.—முதற்பாட்டில், சிறுநாரைகளைக் குறித்து எம்பெருமான் தன்னுடைய அழகாலும் குணங்களாலும் தன்னைத் தோற்பித்தபடியைச் சொல்லி அவனுக்கு என் தசையை அறிவித்து வந்து உங்களுடைய திருவடிகளை என்தலைமேலே வைக்கவேணுமென்கிறாள். [எங்கானலென்று தொடங்கி] - எங்கள் உத்யானத்தில் உள்ளிற்கழியிலே இரைதேடி இங்கே இனிதாகவர்த்திக்கிற சிவந்தகாலையுடைய பவ்யமான நாராய்! [எங்குடக் கூத்தர்க்கு] - ஆத்மதிபயாவசநம். குடக்கூத்தாடின அழகைக்காட்டி என்னை யகப்படுத்திக் கொண்டவனுக்கு, [நுங்கால்களென்று தொடங்கி] - ஸபரிகரமாக உங்கள்திருவடிகளை என்தலைமேலே வைக்கவேணும்.

இ.—முதற்பாட்டில், சிறுநாரைகளைக் குறித்து அவன் தன் அழகாலும் குணங்களாலும் தன்னைத் தோற்பித்தபடியைச் சொல்லி என்தசையை அவனுக்கு அறிவித்துவந்து உங்களுடைய திருவடிகளை என் தலைமேலே வைக்கவேணுமென்கிறாள். [எங்கானல்] - பகவத்விஷயத்தில் உபகாரகரோடு ஐகரஸ்யம் ப்ராப்தமாயிருக்க 'எம்' என்கிறது - உபகாரஸ்ம்ருதியாலே ஒன்றைத் தன்னதாக்கிக் கொடுத்தல்லது தரிக்கமாட்டாதபடியாலே செல்லுகிறது. பிறர்க்கு உபகரிக்கைக்கு உறுப்பாகவரும் மமகாரம் உத்தேச்யமாயிருக்குமிறே. பகவத்விஷயத்துக்கு ஆக்கினவன்றே தன்னதுடங்க கடகர்க்கு சேஷமாயிருக்கை உபகாரஸ்ம்ருதி ஆறியிருக்க வொட்டாமையாலே வருமதிறே, ஆத்ம ஸமர்ப்பணத்திற்கும் அடி இதுவிறே. [கானலென்று] - கடற்கரைச் சோலையாதல், வெய்தல் நிலமாதல். [அகங்கழிவாய்] - உள்ளான கழியிடத்திலே. அந்தர்க்ருஹப்ரவேசத்திற்கு அநுமதிவேண்டாதபடியிறே இவை அந்தரங்கமாயிருக்கிறபடி. "கதிதாஸி ஸஹஸ்யமிதி" என்கிறபடியே வர்த்தியாநின்றன. [இரைதேர்ந்து] - இரைதேடி; "க்ருத்தே புக்தமசங்கிதம்" என்கிறபடியே; பண்டுதனக்கு உபகரித்தபடியைச் சொல்லுகிறாள், இப்போது உபகரிக்கைக்காக. [இங்கு] - இத்தலையை வழித்துத் தூதுவிடவேண்டும்படி அகலிருந்தவனைப் போலன்றியே, ஸந்நிஹிதராகப் பெற்றேன் என்கிறாள். [இனிதமரும்] - இனிதாக நம்மோடே ஸஹவாஸம்பண்ணப் பெறுகை; விலக்ஷணபோகங்களை புஜித்து வர்த்திக்குமென்றுமாம். [செங்கால] - சிவந்தகாலையுடைய. என்மடியிலேயிருக்கும் கால்போலேயிருந்தது, நான் தலையிலே வைத்துக்கொள்ளப் புகுகிறகாலும், [மடநாராய்] - பவ்யமான நாராய்! [திருமூழிக்களத்துறையும்] - தூதுபோவார்க்கு அடுத்து

அணித்தாக நிற்கையாலே பரமபதத்திற் காட்டில் ஏற்றமிருக்கிறபடி. [செங்கால் பூந்துழாய்முடி யெங்குடக்கூத்தர்க்கு] - ஒப்பனையையும் மநோஹாரிசேஷ்டிதங்களையும் எனக்காக்கி வைத்தவர்க்கு; 'எம்' என்கிறது ஒப்பனையிலும் சேஷ்டிதத்திலும் இரண்டிலுமாகிறது. 'எம்' என்று - ஆத்மநிபஹுவசநம். [என் தூதாய்] - ஒப்பனையிலும் செயலிலுந்தோற்று வெறுந்தரையாயிருக்கிற என்னுடைய தூதக்ருத்யத்திலே அதிகரித்து. [நுங்கால்கள் என்தலைமேல்] - உபகாரகரான உங்களுடையகாலை உபகாருதையாய் உத்தேசித்து இருக்கிற என்தலையிலே. இவளுடைய தலையிலேவைக்கக் கண்டதாய்த்து இவற்றின்கால்; இவற்றினுடைய காலைவைக்கக் கண்டதாய்த்து இவள்தலை. இரண்டும் பார்த்தமாகக் கண்டதாய்த்து. [கெழுமீரோ] - அவனுக்கு சேஷமாக்கினபோதே கடலுக்கு சேஷமாகையாலே என்விதிகொண்டு வைக்கவேண்டாவிறே; என்தலைமேலே சேரிகோளோ? [நுமரோடே] - "ஸபுத்ரபௌத்ரஸ் ஸகண:" என்கிறபடியே ஸபரிகரமாக. "ஆசார்யவதாசார்யபுத்ரே வ்ருத்தி:" என்னக்கடவதிறே.

அரு.—முதற்பாட்டு. சில நாரைகளைக் குறித்து அவன் தன்னழகாலும் குணங்களாலும் தன்னைத் தோற்பித்தபடியைச்சொல்லி, என் தசையை அவனுக்கு அறிவித்துவந்து உங்கள் திருவடிகளை என்தலையிலே வைக்கவேணுமென்கிறாள்.

[எங்கானல்] பகவத்விஷயத்தில் உபகாரகரோடு ஐகரஸ்யம் ப்ராப்தமாயிருக்க, 'எம்' என்றது - ஒன்றைத் தம்மதாக்கிக் கொடுத்தவல்லது தரிக்கமாட்டாத உபகாரஸ்ம்ருதியாலே சொல்லுகிறது. பிறர்க்கு உபகரிக்கைக்காகவும் மமகாரம் உத்தேச்யமாயிருக்குமிறே. தன்னை பகவத்விஷயத்துக்கு ஆக்கினவன்றோ தன்னதடங்கலும் அங்குத்தைக்கு சேஷமாயிருக்க, உபகாரஸ்ம்ருதியிறே இப்படி சொல்லுவித்தது. ஆத்மஸமர்ப்பணத்துக்கும் அடி இதுவிறே. கானலென்கிறது - கடற்கரைச்சோலையாதல், நெய்தல்நிலமாதல். [அகங்கழிவாய்] உள்ளான கழியிடத்து. அந்தர்ப்ரவேசத்துக்கு அருமை வேண்டாதபடியிறே இவை அந்தரங்கமாயிருக்கிறபடி. "கதிர்தாமி ரஹஸ்யானி" என்கிறபடியே வர்த்தியாநின்றன [இரை தேர்ந்து] இரை தேடி; "க்ருஹே புக்தமசங்கிதம்" என்கிறபடியே; பண்டு தனக்கு உபகரித்தபடியைச் சொல்லுகிறாள், இப்போது உபகரிக்கைக்காக [இங்கு] இத்தலையை யழித்துத் தானினி வேண்டும்படி அகலிருக்க அவனைப் போலன்றியே, ஸந்நிஹிதராகப் பெற்றோமென்கிறாள். [இனிதமரும்] இனிதாக மேய்ந்து - ஸஹவாஸம் பண்ணப்பெறுவதே; விச்லேஷமறக் கலக்கை புஜித்து வர்த்திக்குமென்றுமாம். [செங்கால] சிவந்த காலையுடைய. என் முடியிலே யிருக்கும் காலபோலேயிருந்த நான் தலையிலே வைத்துக் கொள்ளப் புகுகிற காலும். [மடநாராய்] பவ்யமான நாராய்! [திருமூழிக்களத்துறையும்] தூதுபோவார்க்கு அடுத்தணித்தாகத் திருமூழிக்களத்திலே நிற்கையாலே, பரமபதத்திற்காட்டில் ஏற்றமிருக்கிறபடி. [செங்கோல் பூந்துழாய்முடி யெங்குடக்கூத்தர்க்கு] ஒப்பனையையும் மநோஹாரிசேஷ்டிதங்களையும் இரண்டையும் எனக்கு ஆக்கிவைத்தவர்க்கு. 'எம்' என்கிறது ஒப்பனையிலும் சேஷ்டிதத்திலும் இரண்டிலுமாகிறது. 'எம்' என்று - ஆத்மநி பஹுவசநம். [என் தூதாய்] அவ்வொப்பனையிலும் சேஷ்டிதத்திலுந்தோற்று அவனைப்பெற்று ஜீவிக்கவிறே இல்லையாகில் முடிகவாயிருக்கிற என் தூதக்ருத்யத்திலே பதிகரித்து. [நுங்கால்களென்தலைமேல்] உபகாரகரான உங்களுடைய காலை, நீங்கள் உபகரிக்க ஜீவிக்கவிருக்கிற என் தலைமேலே; மயிர்கழுவிப் பூச்சூட விருப்பாரைப் போலே. அவற்றின் காலாலே இவள்தலையிலே யிருக்கக் கண்டன; இவள்தலையாலே அவற்றின் காலைக்கக் கண்டிருந்தது; இரண்டும் பார்த்தமாயிருக்கபடி. [கெழுமீரோ] ஒரு விதிகொண்டு ப்ரவர்த்திக்க வேண்டாவாய்த்து இவ்விருத்து; அவனுக்காக்கினவாறே உங்களதாயிருக்குமிறே. சேர்ந்து சேரீகோளோ? [நுமரோடே] "ஸபுத்ரபௌத்ர: ஸகண:" என்னுமாப் போலே, ஸபரிகரமாக. "ஆசார்யவதாசார்யபுத்ரே வ்ருத்தி:" என்னக் கடவதிறே.

நுமரோடும்பிரியாதே நீரும்நுஞ்சேவலுமாய்*
அமர்காதற்குருகினங்காள்! அணிமூழிக்களத்துறையும்*
எமராலும்பழிப்புண்டு இங்குஎன்? தம்மாலிழிப்புண்டு*
தமரோடங்குறைவார்க்குத் தக்கிலமேகேளீரே! (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், சில்குருகுகளைக்குறித்து திருவாய்மொழிக்கனத்து எம்பெருமானுக்குத் தாமும் தமக்கு நல்லாருமாயிருந்த இருப்பை நான் இழந்தேபோயித்தனேயோ? என்று அறிவியுங்கோள் என்கிறான். [நுமரோடும் என்று தொடங்கி]- உங்களுடைய பந்துக்களோடும் பிரியாதே நீங்களும் உங்களுடைய சேவல்களும் ஸம்ச்லேஷியா நிருபத்ரவஞ்செய்து பரஸ்பரம் காதலித்துடைய குருகினங்காள். [அணிமுழிக்கனத்துறையும் என்று மேலுக்கு] - குருகினங்களைக்குறித்து வார்த்தை சொல்லுகிறவர் ஆர்த்தோக்தியிலே அத்தை தவிர்ந்து, பந்துக்களாலும் இகழப்பட்டுத் திருவாய்மொழிக்கனத்திலே உறைகிற தம்மாலும் உபேக்ஷிக்கப்பட்டிருக்கும் இவ்விருப்பில் முடிகையே நன்று என்று அன்னிலே விஷண்ணை யாய் மீளவும் அவற்றைக்குறித்து தாம் தம்பரிஜனங்களோடே அங்கே நித்யஸம்ச்லிஷ்டரானவர்க்கு நாங்களாகேனோமோ என்று கேளுங்கோள் என்று, தொடங்கின வார்த்தையை முடியச்சொல்லுகிறாள்.

இ.—இரண்டாம்பாட்டில், சிலகுருகுகளைக் குறித்து, தாமும் தமக்கு நல்லாருமாயிருக்கிற இருப்பை நான் இழந்தேபோயித்தனேயோ? என்று அறிவியுங்கோள் என்கிறாள். [நுமரோடும் பிரியாதே]- "தமரோடங்குறைவார்" என்னும்படி ப்ராப்ய வஸ்துவைச்சொல்ல நினைக்கிறது; அதுக்கீடாக இவையும் குறையற்றிருக்கிறபடி. குறைவாளர்க்கார்யம் குறைவற்றார்க்குத் தீர்க்கவேண்டாவோ? [நீரும் நுஞ்சேவலுமாய்] - சேவலின் நினைவறிந்து பரிமாறும்நீரும் உம்முடையகருத்தறிந்து பரிமாறுஞ்சேவலுமாய், ஸம்ச்லேஷரஸம் அறியும் நீங்கள் பிரிந்தாருடைய செல்லாமையும் அறியவேண்டாவோ! உண்டார்க்கு உண்ணாதார்பசி தீர்க்கவேண்டாவோ? [அமர்காதல் குருகினங்காள்] - பரஸ்பரம்பொருந்தின காதல்; ஆசையிலே விச்லேஷத்தை ப்ரஸவிப்பியாத ஆசையுண்டாகாதே! ஆசையிலுங்குறைவற்று, விச்லேஷமு மின்றியிலே கருத்தறிந்து பரிமாறவுங் கடவதாயிருக்கப்பெறுவதே நீங்கள்! [குருகினங்காள்] - என்று ஸம்போதித்துவைத்துத் தொடங்கின வார்த்தை முடியச்சொல்லமாட்டாதபலஹானியாலே ஆர்த்தோக்தி யிலே அத்தைமுடித்துத் தானிருக்கிற இருப்பிலே விஷண்ணையாகிறாள். [எமராலும் பழிப்புண்டு அணி முழிக்கனத்துறையும் தம்மாலும் இழிப்புண்டு] - காதாசித்க ஸம்ச்லேஷமே ஹேதுவாக பந்துக்கள் கை விட்டார்கள். காதாசித்கமாக ஸம்ச்லேஷித்தவளவிலே தாமும் உபேக்ஷித்தார்; பந்துக்கள் கைவிட்டதுவே ஹேதுவாகக் கைக்கொள்ளவேணும். பித்தட்டார்க்குங் காட்டிக்கொடுக்க வந்து நிற்கிற நிலையாகை யாலும் கைக்கொள்ளவேணும். இரண்டும் என்னளவிலே உபேக்ஷாஹேதுவாவதே! [இங்கு என்] - இவ்விருப்புக்கு என்னப்ரயோஜநமுண்டு? "சரமசரீரத்தில் ஒருதேசவிசேஷத்திலே பெறவேண்டித் தான் ஆறியிருக்கிறேனோ?" என்று தன்னிலே விஷண்ணையாய்ப் பின்னையும் தன்செல்லாமையாலே அவற்றைக் குறித்து வார்த்தை சொல்லுகிறாள். [தமரோடு இத்யாதி] - தம் பரிஜனங்களோடே அங்கே நித்யவாஸம்பண்ணுகிற தமக்கு நாங்களாகேனோமோ என்று கேளுங்கோள். தாமும் தமக்கு நல்லாருமா யிருக்கிற இருப்புக்கு, "அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்று கொலோ" என்றிருப்பாரா தாரோ என்று கேளுங்கோள்!

ஈடு.—இரண்டாம்பாட்டு. சில குருகினங்களைக் குறித்து, "தாமும் தமக்கு நல்லாருமா யிருந்தவிருப்பை நானிழந்தேபோயித்தனேயோ? என்றறிவியுங்கோளென்கிறாள்.

[நுமரோடும் பிரியாதே] "தமரோடங்குறைவார்" என்னும்படி ப்ராப்யவஸ்துவை சொல்ல நினைக்கிறது; அப்படியே இவையும் குறைவற்றிருக்கிறபடி. குறைவாளர்கார்யம் குறைவற்றார்க்குத் தீர்க்கவேண்டாவோ! உண்டார்க்குப் பட்டினிவிட்டார்பசி பரிஹரிக்க ப்ராப்தமிறே. [நீரும் நுஞ்சேவலுமாய்] சேவல்நினைவறிந்து பரிமாறும் நீரும், உம்முடைய கருத்தறிந்து பரிமாறும் சேவலுமாய். ஸம்ச்லேஷரஸமறியும் நீங்கள், பிரிந்தாருடைய செல் லாமையும் அறியவேண்டாவோ! [அமர்காதல் குருகினங்காள்] பரஸ்பரம் பொருந்தின காதல். ஆசையிலே, விச்லேஷத்தை ப்ரஸவிப்பியாதவாசை யுண்டாகாதே! ஆசையிலுங் குறைவற்று விச்லேஷமுமின்றியிலே, கருத்தறிந்து பரிமாறவுங்கடவதாயிருப்பதே நீங்கள் முன்னம்! "குரு கினங்காள்" என்று ஸம்போதித்துவைத்து, தொடங்கின வார்த்தை முடியச் சொல்லமாட் டாத பலஹானியாலே ஆர்த்தோக்தியிலே அத்தை முடித்து, தானிருக்கிறவிருப்பிலே, விஷண்ணை யாகிறாள். [எமராலும் பழிப்புண்டு] அணிமுழிக் களத்துறையும் தம்மாலுமிழிப்புண்டு] காதா சித்கஸம்ச்லேஷமே ஹேதுவாக பந்துக்கள் கைவிட்டார்கள்; காதாசித்க ஸம்ச்லேஷத்தளவிலே

தாமும் உபேக்ஷித்தார். பக்தர்களைவிட்டதே ஹேதுவாகக் கைக்கொள்ளவேணும்; பிற்பாடர்க்குக் காட்சி கொடுக்க வந்தாரிற்றை நிலையாகையாலும் கைக்கொள்ளவேணும்; இரண்டும் என்னளவில் உபேக்ஷாஹேதுவாவதே! [இங்கென்] இவ்விருப்புக்கு என்ன ப்ரயோஜனமுண்டு? தம்மைப் பெற்றிருக்கிறேனோ? பக்தர்களைப் பெற்றிருக்கிறேனோ? இங்குள்ளார் கைவிட்டால் பின்பு தம்மெல்லைக்குள்ளே யாக்கிக் கொள்ளவேண்டாவோ? பகவத்விஷயத்திலே புட்புக வுட்புக, அன்று தொடங்கிக் கைவிடுகைக்கு ஸம்ஸாரத்திலுள்ளார். ("சரீரவஸானத்திலே ஒரு தேசவிசேஷத்திலே பெறவேண்டியிருக்கிறதோ?" என்று தன்னிலே விஷண்ணையாய், அத்தை அவ்வளவிலே விச்சேதித்து, பின்னையும், தன் செல்லாமையாலே அவற்றைக்குறித்து வார்த்தை சொல்லுகிறாள்:— [தமரோடங்குறைவார்க்கு] தம்பரிஜனங்களோடே அங்கே நித்யவாஸம் பண்ணுகிற தமக்கு, நாங்களாகோமோ? என்று கேளுங்கோள். தாமும் தமக்கு நல்லாருமாயிருக்கிற விருப்புக்கு, "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்றுகொலோ" என்றிருப்பாராகாரோ? என்று கேளுங்கோள்.

தக்கிலமேகேளீர்கள் தடம்புனல்வாய் இரைதேரும்*
கொக்கினங்காள் குருகினங்காள் குளிர்மூழிக்களத்துறையும்*
செக்கமலத்தலர்போலும் கண்கைகால் செங்கனிவாய்*
அக்கமலத்திலைபோலும் திருமேனி அடிகளுக்கே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், சில கொக்கினங்களையும், குருகினங்களையும் நோக்கித் தன்னழகைக் காண்கைக்கு நாங்கள் போக்யதையை உடையோமல்லோமோ? என்று கேளீர் என்கிறாள். [தடம்புனல்வாய் இரைதேரும்] - பொய்கைகளுடைய நீரிலே இரைதேடுகிற. [செக்கமலம்] - செந்தாமரை. [அடிகள்] ஸ்வாமி.

இ.—மூன்றாம்பாட்டில், சிலகொக்கினங்களையும் குருகினங்களையும் நோக்கித் தன்அழகு காண்கைக்கு நாங்கள் போக்யரல்லோமோவென்று கேளீர் என்கிறாள். [தக்கிலமே கேளீர்கள்] என்கிறாள். [தக்கிலமே கேளீர்கள்] - ஒருதிபெறக் கேட்டுப்போருங்கோள்! அவர் "வேணும்" என்னில் நாமும் அம்ப்ராணனை நோக்கவும், அவர் "வேண்டா" என்றாராகில் நாமும் ஒன்றிலே துணியும்படியும் நிச்சிதமாகக்கேட்டுப் போருங்கோள். [தடம்புனல்வாயிரைதேரும்] - பொய்கையின்நீரிலே இரைதேருகிற உபலாலக்குலசயான என்னைப் போலன்றியே இரை மிடற்றுக்குக் கீழே இழியும்படியிறே உங்கள் ஐச்வர்யம். [கொக்கினங்காள் - குருகினங்காள்] - "யாம் கபிராம்ஸஹஸ்ராணி" என்கிறபடியே காக்குறுத்த கண்டவற்றை அடைய ஏவுகிறாள். "சிலவற்றைப் போகவிட்டோம், அத்தாலே நம்கார்யம் தப்பக்கட்டும்" என்று ஆறியிருக்கும் விஷயமன்றே. [குளிர்மூழிக்களத்துறையும்] - விரஹதாபமுடையளாயிருக்கிற எனக்கு அந்தர்மநோஹரமான தேசத்தில் ப்ராப்தியரிதாவதே! [செக்கமலம் இத்யாதி] - இக்குளிர்த்திக்கு அடியான அநவரதம் வாசத்துடனிருக்கிறபடி; சிவந்தலர்ந்த தாமரைபோலேயிருக்கிற கண்முதலான திவ்யாவயவங்களையுடையவன்; முதலுறவு பண்ணும் கண், அங்கோக்குக்குத் தோற்றாரை அணைக்கும் கை, ஸ்பர்சத்துக்குத்தோற்றார் விழும் திருவடிகள், திருவடிகளிலே விழுந்தாரை ஸாந்த்வநம்பண்ணி தரிப்பிக்கும் முறுவல். [அக்கமலத்திலைபோலுந் திருமேனி] - அவர்களுக்கு உஜ்ஜீவகமான வடிவு. அவயவங்களுக்குப் பரபாகமான செந்தாமரையிலைபோலேயாய்த்து திருமேனி. வெண்டாமரையென்னில் விஜாதீயமென்று 'அக்கமலம்' என்கிறது. [அடிகளுக்கு] - வடிவழகையும் அவயவசோபையையுங்காட்டி யெழுதிக்கொண்டவர்க்கு இவ்வடிவுக்குத் தோற்று வைவர்ண்யத்தை தரித்திருப்பார் போக்யரல்லரோ? என்று கேட்டுப் போருங்கோள்!

ஈடு.—மூன்றாம்பாட்டு. சில கொக்கினங்களையும் குருகினங்களையும் நோக்கி, தன் அழகு காண்கைக்கு நாங்கள் போக்யரல்லோமோ? என்று கேளீர் என்கிறாள்.

தக்கிலமேகங்கள்காள்] நாம் ஒன்றிலே துணியும்படி அறுதியாகக் கேட்டுப்போருங்கோள்? அவன் இன்னம் "இதுவேயாகும்" என்றிருக்கலும் ப்ராணனைக்கொண்டு கிடக்க வுங், "வேண்டா" என்றிருந்தாலும் காரம் ஒன்றிலே துணியும்படியும் அறுதியாகக்கேட்டு வாருங்கோள். [தடம்புனல்வாயிரைதேரும்] மிக்க ஆழத்தையுடைய பொய்கையில் இரைதேடுகிறவர்களாயிருந்தது உங்களுக்கு. ("உபகாரங்களுக்கும்" என்கிறபடியே) உபகாரத் தாலே இரைதேடுகிறவர்களாயிருந்தது உங்களுக்கு இரை மிடற்றுக்குக் கீழ் இழியும்படியிறே உங்கள் க்ருஷியான நல்லகாலமாதலால். [கொக்கினங்காள் குருகினங்காள்] குருகு - கொய்யடிநாரை. "யாம் மடநாம் பெண்கல்யாம்! [கொக்கினங்காள் குருகினங்காள்] "சிலந்தலைப் பெண்பிறந்தவள்" என்கிறபடியே, கண்ணுற் கண்டவற்றையுடைய ஏவுகிறாள்: "சிலந்தலைப் பெண்பிறந்தவள்" என்கிறபடியே, என்னுடைய காரியம் தலைக்கட்டும்" என்று ஆறியிருக்கும் விஷயமன்றே! போகவிட்டோம், அவை கைங்கர்யம் தலைக்கட்டும்" என்று ஆறியிருக்கும் விஷயமன்றே! [குளிர்மூழிக்களத்துறையும்] விரஹதாபத்தையிருக்கிற எனக்கு அந்த சரமதுரமான தேசத் திலே ப்ராப்தியரிதாயதே! [செக்கமலத்தலர்போலும்] அக்குளிர்த்திக்கு அடியான உள்ளில் வாசத்தை யிருக்கிறபடி; சிவந்தலர்ந்த தாமரைபோலேயிருக்கிற கண்முதலான திவ்யாவயவங்களையுடை யவன். முதலுறவுபண்ணும் கண்; அங்ரோக்குக்குத் தோற்றுவையக்காக்கும் கை! ஸ்பர்சத் துக்குத்தோற்றார் விழுந்திருவடிகள்; திருவடிகளிலே விழுந்தாரை ஸ்ரக்ஷணம்பண்ணித்தரிப்பிக் கும் முறுவல் [அக்கமலத்திலை போலுந்திருமேனி] அவர்களுக்கு உஜ்ஜீவநமான வடிவு. அவயவங்களுக்குப் ப்ரகாசகமான செந்தாமரையிலைபோலே யாய்த்துத் திருமேனி. வெண்டா மரையென்னில் விஜாதீயமென்று, 'அக்கமலம்' என்கிறது. [அடிகளுக்கு] அந்த அவயவ சோபையையும் வடிவழகையுங்காட்டி யெழுதிக்கொண்டவர்க்கு. இவ்வடிவழகுக்குத் தோற்று வைவர்ண்யத்தை தரித்திருப்பார் அங்குத்தைக்கு அயோக்யரோ என்று கேட்டுப் போருங் கோள். அவன்புருஷோத்தமனானால், இவள் நாரீணாமுத்தமையாம்போது இப்படியேயிருக்க வேணுமிறே.

திருமேனியடிகளுக்குத் தீவினையேன் விடுதூதாய்*
திருமூழிக்களமென்னுஞ் செழுநகர்வாயணிமுகில்காள்!*
திருமேனியவட்கருளீ ரென்றக்கால்* உம்மைத்தன்
திருமேனியொளியகற்றித் தெளிவிசும்புகடியுமே. (4)

ஒ.— நாலாம்பாட்டில், சிலமேகங்களை நோக்கி 'என்வார்த்தையை அவனுக்குச் சொன்னால் உங்களைத் தண்டிக்குமோ?' என்கிறாள். [திருமேனியென்று தொடங்கி] - தன்வடிவழகாலே ஜகத்தை யடைய அடிமைகொண்டிருக்கிறவர்க்கு அவ்வழகையிழந்து நோவுபடுகைக்குக்காரணமான பாபத்தைப் பண் ணின என்னுடைய தூதாய், திருமூழிக்களமென்று ப்ரஸித்தமாயிருக்கிற திருநகரியில், அழகிய முகில் காள்! [திருமேனியவட்கென்று மேலுக்கு] - அவளுக்கு உம்முடைய திருமேனியை அருளீர் என்று சொன்னக்கால், உங்களைத் தன் திருமேனியில் ஒளியைமாற்றி, உங்கள் அழகெல்லாம்தெரியும்படிநிற் கின்றதும் நிர்மலமான ஆகாசத்தில் நின்றும் உங்களைப்போக்குமோ! திருமூழிக்களமென்னுஞ் செழு நகரில், திருமேனியடிகளுக்கு என்றுமாம்.

இ.— நாலாம்பாட்டில், சிலமேகங்களை நோக்கி 'என்பாவத்தை அவனுக்குச் சொன்னால் உங்களைத் தண்டிக்குமோ?' என்கிறாள் [திருமேனியடிகளுக்கு]. ஸ்வரூப குண விபூதிகளையொழிய வடிவழகாலே ஸர்வஸ்வாமியென்று தோற்றும்படியிருக்கிறவர்க்கு. வடிவழகாலே ஜகத்தையடையத் தோற்பித்து அடிமைகொண்டிருக்கிறவர்க் கென்றுமாம். "அஸௌ ப்ரதிமேதிநே" என்கிறபடியே ப்ரதிகூலர்க்கும் ஆகர்ஷகமாயிறே வடிவிருப்பது. [தீவினையேன் விடுதூதாய்] - ஸர்வ ஸாதாரணமான வடிவையிழந்து உங்கள்காலிலே விழவேண்டும்படியான என்னுடைய தூதக்ருத்யத்திலே அதிகரித்து. [திருமூழிக்கள மென்னும்] - ஆர்த்தரக்ஷணத்துக்கு வந்துநிற்கிற இடமென்று ப்ரஸித்தமான தேசம். [செழுநகர்] - பரமபதத்திற்காட்டிலுண்டான ஏற்றம். செழுநகர்வாய்வர்த்திக்கிற அழகிய முகில்காள்! என்னுதல், செழுநகர்வாயடிகளுக்குச் செப்புங்கோள் என்னுதல். செழுநகர்வாய்ச்சென்று செப்புங்கோளென்னுதல். [திருமேனியவட்கருளீர்] - ப்ரஸித்தமான திருவுடம்பை, ஆசைப்பட்டவர்களுக்குக் கொடுத்தாலாகாதோ?

இவ்வுடம்பு உமக்குக் கண்டது என்றிருக்கிறீரோ? என்று சொல்லுங்கோள்! "பக்தாநாம்" என்கிறபடியே இவ்வுடம்பு ஆசைப்பட்டாரதன்றோ என்று சொல்லுங்கோள்; காமினிக்கு ஸ்வரூபாதிகளிற் காட்டில் வடிவிலேயிறே அபேக்ஷை. [அருளீர்] - ப்ரணயித்வங்குடிபோகுங் க்ருபையும் மறுத்ததோ? [என்றக்கால்] - "வாசா தர்மமவாப்நுஹி" என்று உங்களுக்கு ஒருவார்த்தையன்றோ சொல்லவேண்டுவது? [உம்மை] - இப்படி உபகாரகராயிருக்கிற உங்களை. [தன் திருமேனி யொளியகற்றித் தெளிவிசும்புகடியுமே] - உங்கள் வடிவிலுண்டான புகரையும்போக்கி நிர்மலமான ஆகாசத்தினின்றும் உங்களையும் ஓட்டுமோ? உங்களுக்கு இல்லாதவற்றை உண்டாக்குமதொழிய, பண்டுள்ளவற்றையும் தவிர்த்து உங்களைத் தண்டிக்குமோ? அல்பஸாத்ருச்யத்தைத் தவிர்த்து, "பரமம் ஸாம்யமுபைதி" என்கிறபடியே ஸர்வதாஸாத்ருச்யத்தையும் தந்து ஆகாசமாத்ரஸ்த்திதியளவன்றிக்கே, பரமாகாசத்தையுந்தாராரோ? உங்களுடைய உக்திமாத்ரத்திலே எனக்கும் உங்களுக்கும் ப்ரயோஜநம் கனத்திருக்க, ஆறியிருக்கக்கடவீர்களோ?

ஈடு.—நாலாம் பாட்டு. சில மேகங்களை நோக்கி, 'என்வார்த்தையை யவனுக்குச் சொன்னால் உங்களைத் தண்டிக்குமோ?' என்கிறாள்.

[திருமேனியடிகளுக்கு] ஸ்வரூபகுணவிபூதிகளையொழிய வடிவழகாலே ஸர்வஸ்வாமியென்று தோற்றும்படி யிருக்கிறவர்க்கு, வடிவழகாலே ஜகத்தையடையத் தோற்பித்து அடிமைகொண்டிருக்கிறவர்க்கு என்றுமாம். "அவஸா: ப்ரதிபேதிரே" என்கிறபடியே ப்ரதிகூலர்க்கும் ஆகர்ஷகமாயிறே வடிவிருப்பது. [தீவினையேன் விடுதூதாய்] ஸர்வஸாதாரணமான உடம்பையிழந்து உங்கள் காலிலே விழவேண்டும்படியான பாபத்தைப்பண்ணின என்னுடைய தூதக்ருத்யத்திலே யதிகரித்து. [திருமூழிக்களமென்னும்] - ஆர்த்தரக்ஷணத்துக்காக வந்து நிற்கிறவிடமென்று ப்ரஸித்தமான தேசம். [செழுநகர்] பரமபதத்திற்காட்டில் உண்டான ஏற்றம். செழுநகர்வாய் வர்த்திக்கிற அழகியமுகில்காளென்னுதல்; செழுநகர்வாயடிகளுக்குச் செப்புமின்களென்னுதல். [திருமேனியவட்கருளீர்] பார்த்தமான உடம்பை ஆசைப்பட்டார்க்குக் கொடுத்தாலாகாதோ? "பக்தாநாம்" என்கிறபடியே, இவ்வுடம்பு ஆசைப்பட்டாரதன்றோ? என்றுசொல்லுங்கோள். காமினிகளுக்கு ஸ்வரூபாதிகளிற்காட்டில் வடிவிலேயிறே அபேக்ஷை. [அருளீர்] ப்ரணயித்வமன்றோ குடிபோய்த்து; க்ருபையும் மறுத்ததோ? [என்றக்கால்] "வாசா தர்மமவாப்நுஹி" என்று உங்களுக்கொருவார்த்தையன்றோ சொல்லவேண்டுவது! [உம்மை] இப்படி உபகாரகரான உங்களை. [தன் திருமேனியொளியகற்றித் தெளிவிசும்புகடியுமே] உங்கள் வடிவிற் புகரையும்போக்கி நிர்மலமான ஆகாசத்தினின்று உங்களையோட்டுமோ? உங்களுக்கு இதுக்கு முன்பில்லாதவற்றையும் உண்டாக்குமதொழிய பண்டுள்ளவற்றைத் தவிர்த்து உங்களைத் தண்டிக்குமோ? அல்பஸாத்ருச்யத்தைத் தவிர்த்து, "பரமம் ஸாம்யமுபைதி" என்கிறபடியே ஸர்வதாஸாத்ருச்யத்தையுந் தந்து, ஆகாசமாத்ரஸ்திதிகளன்றிக்கே பரமாகாசத்தையுந் தாராரோ? உங்களுடைய உக்திமாத்ரத்தாலே எனக்கும் உங்களுக்கும் ப்ரயோஜநமொத்திருக்க, ஆறியிருக்கக்கடவீர்களோ?

தெளிவிசும்புகடிதோடித் தீவளைத்துமின்னிலகும்*
ஒளிமுகில்காள்! திருமூழிக்களத்துறையுமொண்சுடர்க்கு*
தெளிவிசும்புதிருநாடாத் தீவினையேன்மனத்துறையும்*
துளிவார்கட்குழலார்க்கு என்தூதுரைத்தல்செப்புமினே. (5)

ஞ.—அஞ்சாம்பாட்டில், 'நாங்கள் உன்வார்த்தையை விண்ணப்பஞ்செய்தால், அவன் அங்கீகரிக்குமோ?'' என்று கேட்பீர்களாகில், பரமபதத்திற்பண்ணும் அபிநிவேசத்தை என்பக்கலிலே பண்ணினவன் அங்கீகரிக்கும்; ஆனபின்பு, அவனுக்கு எனக்காக ஒருவார்த்தை விண்ணப்பஞ்செய்ய வேணும் என்கிறாள். [தெளிவிசும்பென்று தொடங்கி] - நிர்மலமான ஆகாசத்திலே கடிதாக ஓடிக் கொள்ளிவட்டம்போலே மின்னிலங்குகிற அழகியமுகில்காள்! [திருமூழிக்களத்துறையுமொண்சுடர்க்கு என்று மேலுக்கு] - கண்ணுற்றால் காணவொண்ணாதபடி பாபத்தைப்பண்ணின என்னுடைய ஹ்ருதயத்

திலே பரமபதத்திற்பண்ணும் வ்யாமோஹத்தை தப்பண்ணி வர்த்திப்பதுஞ்செய்து, துளி தூஉக்கும் மதுவை உடைத்தான திருக்குழலையும் விலக்ஷணமான ஒளியையுமுடையருமாய்க்கொண்டு திருமூழிக்களத்திலே வர்த்தித்தருளுகிறவனுக்கு என்னுடைய தூதவாக்யத்தைச் சொல்லுங்கோள்.

இ.—அஞ்சாம்பாட்டில், நீயே பரசய்லகையைப் பிறப்பித்தாய், திருமேனியொளியகற்றி என்று ஆனபின்பு, எங்கள் வார்த்தையை அங்கீகரிக்குமோ ? என்னில், - பரமபதத்திற்பண்ணும் ஆதரத்தை என்பக்கலிலே பண்ணினவன் அங்கீகரியா தொழியான்; ஆனபின்பு, எனக்காக ஒருவார்த்தை விண்ணப்பஞ் செய்யவேணும் ! என்கிறாள். [தெளிவிசும்பு கடிதோடி] - நிர்மலமாய் நிராலம்பநமான ஆகாசத்திலே பூமியிலே ஸஞ்சரிப்பாரைப்போலே கடுநடையிலே ஸஞ்சரித்து. இவற்றின் த்வரை யெல்லாம் தன்கார்யத்துக்கு உடலென்றிருக்கிறாள். [தீவளைத்து மின்னிலகும்] - கொள்ளிவட்டம்போலே மின்னிலங்காநிற்கிற; தன்வடிவில் இருட்சிக்குக் கைவிளக்குக்கொண்டு திரிவாரைப்போலேயாய்த்து மின்னிக்கொண்டு ஸஞ்சரிக்கிறபடி. [ஒளிமுகில்காள்] - பரபாகத்தாலே அழகிதானவடிவையுடைய முகில்காள்! [திருமூழிக்களத்துறையும் ஒண்சுடர்க்கு] - திருமூழிக்களத்திலே நித்யவாஸம் பண்ணுகையாலே புகர்மிக்கிருந்தவர்க்கு. அவன்வடிவுக்குப் போலியாயிறே உங்கள்வடிவிருப்பது. [தெளிவிசும்பு இத்யாதி] - "பரமபதம் தேசமாயிருக்க அத்தைக் காற்கடைக்கொண்டு என் நெஞ்சிலே நித்யவாஸம் பண்ணுகிறவன்" என்று சிற்றுட்கொண்டான் பணிக்கும். "பரமபதத்திற் பண்ணும் வ்யாமோஹத்தை என்நெஞ்சிலேபண்ணி வர்த்தியாநின்றான்" என்று எம்பெருமானார். [தீவினையேன்] - நெஞ்சிலே ப்ரகாசியாநிற்க, காணவொண்ணாதபடி பாபத்தைப் பண்ணினேன். [துளிவார்கட் குழலார்க்கு] - துளியொழுகும் மதுவையுடைத்தான திருக்குழலையுடையவர்க்கு; வல்லார் பூமுடித்தால் பூதோற்றுக்கடவதன்றியே, மதுவொழுகக் காணுமித்தனையிறே. [என்தூதுரைத்தல் செப்புமினே] - தலையிற்பூச் சருகாயிருக்கிற என்னுடைய தூதவாக்யத்தை அவர்க்குச் சொல்லுங்கோள். அபிநிவிஷ்டராய்த் தாமே வரக்கடவராகச் சொல்லிவைத்து, தூதுவிடவிருக்கிறபடியை அறிவியுங்கோள்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. "எங்கள் வார்த்தையை அவன் அங்கீகரிக்குமோ ?" என்றிருந்தவாக 'பரமபதத்திற்பண்ணின ஆதரத்தை என்பக்கலிலே பண்ணினவன் அங்கீகரியாதொழியான்; ஆனபின்பு, எனக்காக ஒருவார்த்தை விண்ணப்பஞ்செய்யவேணும்' என்கிறாள்.

[தெளிவிசும்புகடிதோடி] நிர்மலமாய் நிராலம்பனமான ஆகாசத்திலே, பூமியிலே ஸஞ்சரித்தாப்போலே கடுநடையிலே ஸஞ்சரித்து. இவற்றின் த்வரையெல்லாம் தன் கார்யத்துக்கு உடலென்றிருக்கிறாள். [தீவளைத்துமின்னிலகும்] கொள்ளிவட்டம்போலே மின்னிலங்காநிற்கிற. தன்வடிவில் இருட்சிக்குக் கைவிளக்குக்கொண்டு திரியாரைப் போலேயாய்த்து மின்னிக்கொண்டு ஸஞ்சரிக்கிறபடி. [ஒளிமுகில்காள்] பரபாகத்தாலே அழகிதான வடிவையுடைய முகில்காள் ! [திருமூழிக்களத்துறையுமொண்சுடர்க்கு] திருமூழிக்களத்திலே நித்யவாஸம்பண்ணுகையாலே புகர் மிக்கிருக்கிறவர்க்கு. அவன்வடிவுக்குப் போலியாயிறே உங்கள் வடிவிருப்பது. [தெளிவிசும்பித்யாதி] பரமபதத்திற்பண்ணும் வ்யாமோஹத்தை என் நெஞ்சிலே பண்ணி வர்த்தியாநின்றான். [தீவினையேன்] நெஞ்சிலே ப்ரகாசியாநிற்க, காணவொண்ணாதபடி பாபத்தைப் பண்ணினேன். இதுக்கு சிற்றுள்கொண்டான், "கொப்பது பதத்திபாக அங்காடி பாரித்து, தனக்குப் பரமபதங் கலவிருக்கையாயிருக்க, அத்தைக் காற்கடைக்கொண்டு ஸந்நிஹிதரைப்போலேயிருக்க என்னெஞ்சிலே ப்ரகாசியாநின்றான்" என்று. இதுதான் இத்திருவாய்மொழிக்குச் சொன்ன வாக்யார்த்தத்தோடு சேராது; ஒரோர் அவஸரங்களிலே சொல்லிப்போம் வார்த்தையிறே. [துளிவார்கட்குழலார்க்கு] துளியொழுகும் மதுவையுடைத்தான திருக்குழலையுடையவர்க்கு; வல்லார் பூமுடித்தால் பூத்தோற்றக்கடவதன்றிக்கே மதுவொழுகக் காணுமத்தனையிறே. [என் தூதுரைத்தல் செப்புமினே] தலையிற் பூச்சருகாயிருக்கிற என் தூதவாக்யத்தை யவர்க்குச் சொல்லுங்கோள். அபிநிவிஷ்டராய்த் தாமே வருவாராகச்சொல்லிவைத்து, இப்போது தூதுவிடவிருக்கிறபடியை யறிவியுங்கோள்.

தூதுரைத்தல்செப்புமின்கள் தூமொழிவாய்வண்டினங்காள்!*
போதிரைத்துமதுநுகரும் பொழில்மூழிக்களத்துறையும்*
மாதரைத்தம்மார்பகத்தே வைத்தார்க்குஎன்வாய்மாற்றம்*
தூதுரைத்தல்செப்புதிரேல் சுடர்வளையுங்கலையுமே. (6)

ஒ.—ஆறாம்பாட்டில், எம்பெருமானுக்கு என்னுடைய ஆர்த்தி விண்ணப்பம் செய்யுமிடத்து உங்கள் வார்த்தை விலைசெல்லும்படி பிராட்டி ஸந்நிதியிலே வைத்துச் சொல்லுங்கோள்! என்று சில வண்டுகளைக் குறித்துச் சொல்லுகிறாள். [தூமொழிவாய் வண்டினங்காள்] - வருவோமல்லோம் என்றிருக்கிலும் உங்கள் பேச்சாலே அவனுக்கும் வரவேண்டும்படியான இனியபேச்சையுடைய வண்டினங்காள்! [போதிரைத்து மதுநுகரும்பொழில்] - பூக்களிலே இரைத்துக்கொண்டு மதுபானம் பண்ணும்பொழில் - [என் வாய்மாற்றமென்று தொடங்கி] - என் பாசுரமான தூதவாக்யத்தைச் சொல்லுவதிகோளாகில், என்னுடைய அழகியவளையும் கலையும் சிதிலமானபடியைச் சொல்லுங்கோள்.

இ.—ஆறாம்பாட்டில், சிலவண்டுகளைக்குறித்து, உங்கள்வார்த்தை விலை செல்லும்படி பிராட்டி ஸந்நிதியிலே சொல்லுங்கோள் என்கிறாள். [தூதுரைத்தல் செப்புமின்கள்] - என்னுடைய தூதவாக்யத்தை அறிவிக்க அமையும், நீங்கள் கொண்டுவரவேண்டா. [தூமொழிவாய் வண்டினங்காள்] - இனிய பேச்சையுடைய வண்டுகாள்! அவன் அநாதரிக்கிலும் உங்கள்பேச்சினிமையாலே வரவேண்டும்படியிறே உங்கள்பேச்சிருப்பது. மஹாராஜர்க்கும் பெருமாளுக்கும், "ஏகம் து:க்கம் ஸுகஞ்ச நௌ" என்று விஜாதீயமான இரண்டுதலையும் பொருந்தும்படி திருவடி வார்த்தைசொன்னாப்போலே. "அத ஸம்ஸ்கார ஸம்பந்ந:". [போதிரைத்து மதுநுகரும்பொழில்] - பூக்களிலே இரைத்துக்கொண்டு மதுபானம் பண்ணும்பொழில் என்னுதல். போதிலே - காலத்திலேயென்னுதல். எதிரிகளோடு அம்பேறவும் வேண்டா. மீட்சியிலேயாகவும் வேண்டா, ததிமுகாதிகள் காத்திருப்பாருமில்லை. மதுபானம்பண்ணுகிறவர்களுடனேகூட மதுபானம்பண்ண அமையும். [மாதரைத் தம்மார்பகத்தேவைத்தார்க்கு] - நீங்கள் சொல்லுமத்தனையே வேண்டுவது. உங்கள்வார்த்தை கொண்டாடிக்கேட்பிக்கும் புருஷகாரமும் உண்டென்கை. [என்வாய்மாற்றம் இத்யாதி] - என்பாசுரமான தூதவாக்யத்தைச் சொல்லப் பார்த்திகோளாகில், என்னுடைய அழகியவளையும் கலையும் சிதிலமானபடியைச் சொல்லுங்கோள்; செப்புவதிகோளாகில் அதுதானே பெணக்குச் சுடர்வளையும் கலையும். அறிவிக்குமதுவே குறை; வரவு தப்பாதென்கை.

ஈடு.—ஆறாம்பாட்டு. சிலவண்டுகளைக்குறித்து, 'உங்கள்வார்த்தை விலை செல்லும்படி பிராட்டிஸந்நிதியிலே சொல்லுங்கோள் என் தூதவாக்யத்தை' என்கிறாள்.

[தூதுரைத்தல் செப்புமின்கள்] என் தூதவாக்யத்தை யறிவிக்கவமையும்; கொண்டு வரவேண்டா. [தூமொழிவாய்வண்டினங்கள்] இனியபேச்சையுடைய வண்டுகாள்! அவன் அநாதரிக்கிலும் உங்கள்பேச்சினிமையாலே வரவேண்டும்படியிறே பேச்சிருப்பது. பெருமாளும் இளையபெருமாளும் கையும் வில்லுமாய் வருகிறபடியைக் கண்டு, "இவர்கள் வாலிவரவிட வருகிறார்களோ?" என்று அஞ்சி மஹாராஜர் ஈடழிந்து போரும் அவ்வருகேபோர, திருவடி "ஏகம் து:க்கம் ஸுகஞ்ச நௌ" என்று விஜாதீயமான இரண்டுதலையும் பொருந்தும்படியாக "அத ஸம்ஸ்கார ஸம்பந்ந:" என்கிறபடியே வார்த்தை சொன்னாப்போலே. [போதிரைத்து மதுநுகரும்பொழில்] பூக்களிலே இரைத்துக்கொண்டு மதுபானம் பண்ணும் பொழிலென்னுதல்; போதிலே - காலத்திலேயென்னுதல். உங்களுக்கு மீட்சியிலேயாகவும் வேண்டா. ததிமுகாதிகள் காப்பாருமில்லை, முன்பு மதுபானம்பண்ணுகிறவர்களோடே மதுபானம்பண்ண அமையும். [மாதரைத் தம்மார்பகத்தேவைத்தார்க்கு] நீங்கள் சொல்லுமத்தனையே வேண்டுவது. உங்கள்வார்த்தைகேட்டிருக்கவும், கேட்டுக் கொண்டாடுகைக்கும் புருஷகாரமுண்

டென்கை. [என்னையும் மரமும் இத்யாதி] என்பாசுரமான ஆதவாக்யத்தைச் சொல்லப் பார்த்திகோளாகில்! என்னுடைய அழகியவளையும் கலையும் சிதிலமானபடியைச்சொல்லுங் கோள்! செப்புதிகோளாகில், அதுதானே எனக்குச்சுடர்வளையும் கலையுமென்னுதல். அதிலிக் குமதே குறை, அவர்வரவு தப்பாது.

சுடர்வளையுங்கலையுங்கொண்டு அருவினையேன்தோள்துறந்த*
படர்புகழான் திருமூழிக்களத்துறையும்பங்கயக்கண்ணன்*
சுடர்பவளவாயனைக்கண்டு ஒருநாளோர்தூய்மாற்றம்*
படர்பொழில்வாய்க்குருகினங்காள்! எனக்கொன்றுபணியீரே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், பின்னையும் சிலகுருகினங்களைக் குறித்து 'சிலரோடு கலந்து அவர்களைத் துறந்து அதுவேபுகழாக இருக்குமிருப்புப் போருமோ? என்று எம்பெருமானுக்கு விண்ணப்பஞ் செய்யுங் கோள் என்கிறாள். [சுடர்வளையும் கலையுமென்று தொடங்கி] - என்னுடைய வளையையும் கலையையும் அபஹரித்து தான் இகழ்கைக்கீடான பாபத்தைப்பண்ணின என்னை விச்லேஷித்து அதுவே புகழாக வுடையனும் கொண்டு திருமூழிக்களத்திலே நிரந்தரவாஸம் பண்ணுநிற்பதுஞ்செய்து, என்னோடு டை விச்லேஷத்தாலே புதுக்கணித்த திருக்கண்களையும் திருப்பவளத்தையும் உடையனுமானவ னைக்கண்டு. [ஒருநாள் என்று மேலுக்கு] - பெருத்திருந்துள்ள பொழிலிலேயிருக்கிற குருகினங் காள் எனக்காக ஒருநாள் ஒருவார்த்தை அவனுக்குப் பணிக்கவேணும்.

இ.—ஏழாம்பாட்டில், சிலகுருகினங்களைக்குறித்து, 'சிலரோடே கலந்து அவர்களைத்துறந்து அதுவேபுகழாக இருக்கை போருமோ? என்று அவர்க்கு அறிவியுங்கோள்' என்கிறாள். [சுடர்வளையும் இத்யாதி] - இத்தலையில் தனக்கு ப்ரயோஜநமான அம்சத்தைக்கொண்டு என்னைப் பொகட்டுப்போனான். [அருவினையேன்] - அநாதரித்துப் பொகட்டுப்போக அவனையிழந்து உங்கள்காலிலே விழும்படியான பாபத்தைப்பண்ணினேன். [தோள்துறந்த] - கலந்தபோது தன்பாமோறுமெல்லாங் கொண்டு தோளுக்கு அவ்வருகுபோகமாட்டாதேயிருந்தபடி. [படர்புகழான்] - "தன்னையல்லதறியாதாளைப் பொகட வல்லவன்" என்று அதுவேபுகழாகப் புகழ்வித்துக் கொண்டிருக்கிறவன். [திருமூழிக்களத்துறையும்] - தூரஸ்த்தனென்று ஆறியிருக்கவொண்ணாதபடி திருமூழிக்களத்திலே நித்யவாஸம்பண்ணுகிறவனை. [பங்கயக்கண் சுடர்பவளவாயனை] - பொகட்டுப்போனாலும் விடவொண்ணாதபடியான அழகையுடையவனை; என்னோட்டை விச்லேஷத்தாலே புதுக்கணித்த அவயவசோபையை உடையவனை என்றுமாம். [கண்டு] - அந்நோக்கையும் முறுவலையும் காண்கையாலே உங்களுக்கு என்னிற்காட்டில் பேறு முற்பட்டிருக்கிறதிறே; அவ்வடிவழகைக்காட்டி உங்களையும் போனகார்யத்தையும் விஸ்மரிப்பிக்க வல்லன். [ஒருநாள்] - ஒருநாளே அமையும்; பிற்றைநாள் சொல்லவேண்டுவதில்லை. [ஓர்தூய்மாற்றம்] - அத்விதீயமான நல்வார்த்தை. முடிகிறாள் ஓர் அபலை உஜ்ஜீவிக்கச்சொல்லுகிற வார்த்தையிறே. [படர்பொழில்வாய்க் குருகினங்காள்] - பரந்தபொழிலிடத்திலே வர்த்திக்கிற குருகினங்காள்! நான் உப லாலநக்குவையாயிருக்க, நீங்கள் ஜீவித்துக் களித்திருக்கப்போருமோ? நான் முடிந்தால் உங்களுக்கு இச்சோலைப்பரப்பெல்லாம் நோக்குவார் ஆர்? [எனக்கு] - என்படியிருக்கிறபடி கண்டீர்களிறே. [ஒன்றுபணியீரே] - எனக்கு உஜ்ஜீவகமாயிருப்பதொரு வார்த்தை சொல்லுங்கோள். இரண்டாம் வார்த்தைவேண்டா. [பணியீரே] - நான் ஜூநகுலத்திலே பிறக்கவுமாம்; எதிர்த்தலை திர்யக்குக்களாகவு மாம்; பகவத்விஷயத்தில் உபகாரகரைச் சொல்லக்கடவது இப்படியேயிறே.

ஈடு.—ஏழாம்பாட்டு. சில குருகினங்களைக் குறித்து, "சிலரோடே கலந்து அவர்களைத் துறந்து அதுவே புகழாக இருக்கை போருமோ என்று அவர்க்கறிவியுங்கோள்" என்கிறாள்.

[சுடர்வளையுங்கலையுமித்யாதி] இத்தலையில் தனக்கு ப்ரயோஜநமான அம்சத்தைக் கொண்டு என்னைப் பொகட்டுப்போனான்; தனக்கு தாரகமானவற்றைக் கொண்டு அல்லாத வற்றைப் பொகட்டுப்போனான்; கைக்கடங்கினத்தையுங்கொண்டு மடிச்சரக்கையுங் கொண்டு

போனான். [அருவினையேன்] ஆதரித்து வந்து கலந்தவன் போகட்டுப்போம்படியான பாபத்தைப் பண்ணினேன். [தொன்னுறந்த] அந்த வ்யாமோஹமெல்லாம் கொண்டு தோளுக்கவ்வருகு போகமாட்டிற்றிலன் பொலிகைகளும் அவன் தான் [படர்புகழான்] "தன்னுடைல்லது செல்லாதாரை இங்ஙன் விடவல்லாரில்லை" என்று இதுவே புகழாகக் கொடியும் காளமு மெடுத்துப் புகழ்வித்துக்கொண்டிருக்கிறானாய்த்து. [திருமூழிக்களத்துறையும்] தூரஸ்த்த னன்று ஆயிருக்கவேண்டுமாகப்படி திருமூழிக்களத்திலே நித்யவாஸம் பண்ணுகிறவனை. [பங்கயக்கண் சுடர்பவளவாயனை] போகட்டுப்போனானென்று போகட்டிருக்கவொண்ணாத அவ யவசோபையையுடையவனை; என்னை இப்பாடுபடுத்துகையாலே புதுக்கணித்த அவயவ சோபையையுடையவனை யென்றுமாம். [கண்டு] அக்ரோசத்தையும் முறுவலையும் காண்கையாலே, உங்களுக்கு என்னிற்காட்டில் பெறு மூற்பட்டிறே இருக்கிறது. [ஒருநாள்] ஒருநாளேயமையும், பிற்றை நாள் சொல்லவேண்டுவதில்லை. இரண்டாநாள் சொல்லுமது பழியென்றிருக்கும்படி யிறே. [ஓர் தூய்மாற்றம்] அதிவிநயமான நல்வார்த்தை. முடிகிருபோரபலிப்பு ஜ்ஜீவிக்கச் சொல்லுகிற வார்த்தையிறே. [படர்பொழில்வாய்க் குருகினங்காள்] பரந்தபொழிலிடத்தே வர்த்திக்கிற குருகினங்காள்! நான் உபகாரலக்ஷணையாயிருக்க, நீங்கள் ஜீவித்துக்களித்திருக்கை போருமோ? நான் முடிந்தால் உங்களுக்கு இந்தச் சோலைப்பரப்பெல்லாம் நோக்கித்தருவார் ஆர்? [எனக்கு] என்வடிவிருக்கிறபடி கண்டீர்களிறே. [ஒன்று பணியீர்] இரண்டாம் வார்த்தை சொல்ல வேண்டா. [பணியீர்] தான் ஜநககுலத்திலே பிறக்கவுமாம், எதிர்த்தலை நிரபேக்ஷனாகவுமாம், பகவத்விஷயத்தில் கடகரைச் சொல்லும்படியிறே இது.

எனக்கொன்றுபணியீர்கள் இரும்பொழில்வாய்இரைதேர்ந்து*
மனக்கின்பம்படமேயும் வண்டினங்காள்தும்பிகாள்*
கனக்கொள்திண்மதிள்புடைசூழ் திருமூழிக்களத்துறையும்*
புனக்கொள்காயாமேனிப் பூந்துழாய்முடியார்க்கே. (8)

ஆ.—எட்டாம்பாட்டில், வண்டுகளையும் தும்பிகளையுங்குறித்து அவருடைய அழகுக்கு என் புகுருகிறதோ?" என்று பயப்பட வேண்டாதபடி ஸுரக்ஷிதமாயிருப்பதொரு தேசத்திலே எழுந்தருளி யிருந்தான். இனி நம்முடைய ஆர்த்தி தீர்க்குமத்தனையே அபேக்ஷிதம். ஆனபின்பு, என்னுடைய ஆர்த்தியை அறிவியுங்கோளென்கிறாள். [இரும்பொழிலென்று தொடங்கி] - பெரியபொழிலிலே இரை தேடி மநஸ்ஸிலே இனிமை பிறக்கும்படி ஸம்ச்லேஷிக்கிற வண்டினங்காள்! தும்பிகாள்! [கனக்கொள் திண்மதிளென்று மேலுக்கு] - கனத்தை புடைத்தாய்த் திண்ணிதான மதிள் சுற்றும் சூழ்ந்திருந் துள்ள திருமூழிக்களத்திலே வர்த்திபாநிற்பதுஞ் செய்து தன்னிலத்திலே நின்ற காயாம்பூப்போலே யிருக்கிற திருமேனியையும் போக்யமான திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமுடியையும் உடைய ருனவருக்கு

இ.—எட்டாம்பாட்டில், சில வண்டுகளையும் தும்பிகளையும் குறித்து 'அவருக்குத்தக்கு பயப்பட வேண்டாதபடி ஸுரக்ஷிதமான தேசத்திலேயிருக்கப்பெற்றோம், இனி என்னார்த்தியை அறிவியுங்கோள்' என்கிறாள். [எனக்கொன்று பணியீர்கள்] - நீங்கள் ஒரு வார்த்தை சொல்லாவிடில் முடியுமவளாயன்றோ என்றதைக்குறிக்கிறது. [இரும்பொழில்வாய் இரைதேர்ந்து] - பரப்பான சோலை எங்கும் புக்கு இரை தேடி, [மனக்கின்பம்பட மேயும்] - மனஸ்ஸிலே இனிமை பிறக்கும்படியன்றோ நீங்கள் கலக்கிறபடி. பிரிவால்வந்த க்லேசமேயிறே தனக்கு ப்ரஸித்தது. [கனக்கொள் இத்யாதி] - கனத்துத் திண்ணிதான மதிள் சுற்றும் சூழ்ந்திருந்துள்ள திருமூழிக்களத்திலே நித்யவாஸம்பண்ணுகிறவர்க்கு. அந்தவூரில் அழகை அநுஸந்தித்தால் எவைகூ தேட்டமாயிறேயிருப்பது. [புனக்கொள் இத்யாதி] - தன்னிலத்திலே நிற்கும் காயாவின் நிறம்போலேயாய்த்து நிறமிருப்பது; அவ்வடிவழகுக்கு மேலே மொய்ப்பனவழகை உடையவர்க்கு. போக்யமான திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமுடியையுடையவர்க்கு. அவ்வடிவை யும் ஒப்பனையையும் அநுபவித்துப் பிரிந்த எனக்கு ஒன்று பணியீர்கள்.

௮.—எட்டாம் பாட்டு. சிலவண்டுகளையும் தும்பிகளையும் குறித்து, 'அவ்வூர்க்கு பயப்படவேண்டாதபடி ஸுரக்ஷிதமான தேசத்திலே யிருக்கப் பெற்றீரும்; இனி என் ஆர்த்தியை யறிவியுங்கோள்' என்கிறாள்.

[எனக்கொன்று பணியீர்கள்.] நீங்கள் ஒருவார்த்தை சொல்லாவிடில் முடியும் தசையாயன்றோ என் தசையிருக்கிறது. [இரும்பொழில்வாய் இரைதேர்ந்து] பரந்த சோலையிடமெங்கும் புக்கு இரைதேடி. [மனத்தின்பம்படமேவும்] மாஸ்ளிலே இனிமை பிறக்கும்படி யன்றோ நீங்கள் கலக்கிறபடி. விரஹத்தால் வரும் க்லேசம் ப்ரஸங்கியாதபடியாகக் கலவாநின்றாய்த்து. பிரிவிலும் வற்றாத ஆனந்த மூண்டாம்படி கலவாநின்றதாய்த்து. [வனக்கொள்ளித்யாதி] கனத்துத் திண்ணிதான மதிள் சுற்றும் சூழ்ந்திருந்துள்ள திருமூழிக்களத்திலே நித்யவாஸம் பண்ணுகிறவர்க்கு. அத்தலையில் ஸௌந்தர்யத்தை தந்தால், நமக்கு ஓட்டமறியோ யிருப்பது. அவனோடே கிட்டிக்கலக்கப்பெறுமையாலே வருவதும் ஓராற்றாமையுண்டு; அவனுக்கு எங்கே என்னதிங்கு வருகிறதென்னும் ஓராற்றாமையுண்டு; அதிலே ஒன்று நிரப்பெற்றது மூர்த்தமுள்ளம். [புனக்கொள்காயாமேனிப் பூந்துழாய் முடியார்க்கே] தன்னிலத்திற் காயாவின் நிறம்போலேயாய்த்து நிறமிருப்பது. அவ்வடிவழகுக்குமேல் ஒப்பனையழகையும் உடையவர்க்கு. வடிவழகு அது, ஒப்பனையழகு அது; அவ்வடிவழகையும் ஒப்பனையழகையும் அநுபவித்துப்பிரிந்தவெனக்கு ஒருவார்த்தை சொல்லுங்கோள்.

பூந்துழாய்முடியார்க்குப் பொன்னாழிக்கையாருக்கு*
ஏந்துநீரிளங்குருகே! திருமூழிக்களத்தாருக்கு*
ஏந்துபூண்முலைபயந்து என்னிணைமலர்க்கண்ணீர்ததும்ப*
தாம்தம்மைக்கொண்டகல்தல் தகவன்றென்றுஉரையீரே. (9)

௯.—ஒன்பதாம்பாட்டில், நினைத்தது செய்துமுடிக்க வல்லதொரு குருகைக் குறித்து நிரதிசய போக்யரான தாம் போம்போது தம்மைவைத்துப் போகவேண்டாவோ என்று விண்ணப்பஞ்செய் என்கிறாள். [ஏந்துநீரென்று தொடங்கி] - தரையிலே நடக்குமாபோலே நீரிலே நடக்கவல்ல இளங்குருகே! [ஏந்துபூண்முலை பயந்தென்று மேலுக்கு] - தரிக்கப்பட்டிருந்துள்ள ஆபரணங்களையுடைய முலை விவர்ணமாய், இணைமலர்போலேயிருக்கிற கண் நீர்மல்கும்படி நிரதிசயபோக்யரான தாம் போம்போது தம்மைக்கொண்டு போகை, தம்முடைய க்ருபைக்குப் போராதென்று, ப்ரணயகதையை விட்டுத் தன்னுடைய ஆர்த்தியாலே சொல்லுகிறாள்.

இ.—ஒன்பதாம்பாட்டில், ஒருகுருகைக்குறித்து 'நிரதிசயபோக்யரான தாம் போம்போது தம்மை வைத்துப் போகவேண்டாவோ? என்று விண்ணப்பஞ்செய்யுங்கோள்' என்கிறாள். [பூந்துழாய் முடியார்க்கு] - திருமுடிக்கு ஒப்பனையான வளையமிருக்கிறபடி. [பொன்னாழிக்கையாருக்கு] - திருமுடிக்கு வளையம்போலேயாய்த்துத் திருக்கைக்குத் திருவாழி. [ஏந்துநீரிளங்குருகே] - தரையிலே நடப்பாரைப் போலே நீரிலே நடக்கவல்ல இளங்குருகே! உன்கமலாமார்த்தபத்தாலுண்டான பலம் நான் பெறவேண்டாவோ? நடுவே நீர் இடைச்சுவராகிலும் தேங்கவேண்டாவிறே உனக்கு. [திருமூழிக்களத்தாருக்கு] - வளையம்போலேயும் ஆபரணம்போலேயும், அவ்வூரிலிலேயும் அழகுக்குடனென்றிருக்கிறான். அவை விக்ரஹத்துக்கு ஆபரணமானாப்போலே சீலம் ஸ்வரூபத்துக்கு ஆபரணமிறே. அழகும் குணமும் ஒரு தலைத்த விஷயமிறே. [ஏந்து பூண்முலை பயந்து] - ஆபரணங்களை தரிக்கக்கடவமுலை வைவர்ண்யத்தை தரித்து. ஆபரணங்கள் ஸம்ச்லேஷார்த்தமாகக் கழற்றுமவை; இது ஸம்ச்லேஷத்தாலல்லது கழலாதிறே. வ்யதிரேகத்தில் இப்படியிராதபோது பும்ஸ்த்வவ்யாவ்ருத்தி கிடையாதிறே; ஆகையும் ஸ்த்ரீத்வமுமிறே இருக்கிற. ஆபரணம் அழகுக்கு நிறங்கொடுக்குமாபோலேயிறே, ஸ்த்ரீத்வத்துக்கும் ஆகைக்கும் வைவர்ண்யம். [என்னிணை மலர்க்கண்] - இணைமலர்போலேயிருக்கிற என்கண். தம் [illegible] இலக்காக உடைத்தான கண், அவன் சொல்லும்படி அறிந்திருக்கையாலே சொல்[illegible]

போக்கி, அல்லாதபோது தன் கண்ணழகைத் தான் சொல்லுகிறாளல்லளிறே. [நீர்ததும்ப] - ஆநந்தாச்ருவுக்கு இட்டுப்பிறந்த கண் சோகாச்ருவுக் கிலக்காம்படி. [தாம்] - கீழ்ச்சொன்ன அழகையும் சீலத்தையும் உடைய தாம். [தம்மைக்கொண்டகல்தல்] - தமக்கு அகல வேண்டிலுல், "இவ்வடிவைப் பிரிந்தார் பிழையார்" என்று தம்மைவைத்தன்றோ போவது; தம்மைக் கண்ணுடிப்புறத்திலே கண்டறிவீரே. தம்மைப்பிரிந்தவர்க்கு உதவுமவைக்கன்றோ தம்மைக்கண்டது. "இமாமவஸ்தா மாபந்நோ நேஹபச்யாமி ராகவம்", [தகவன்றென்றுரையீரே] - மென்மையும் ப்ரணயித்வமும் போனாலும் தலை குடிபோகவேணுமோ? வீர்த்தயர் செய்யுமதைச் செய்தாரென்று சொல்லுங்கோள்! ஸ்த்ரீவத மென்றால் அஞ்சாதார் செய்யுமதைச் செய்தாரென்று சொல்லுங்கோள்! என்கிறாள்.

கூ.—ஒன்பதாம்பாட்டு. ஒருகுருகைக் குறித்து, "ரக்ஷகராய்ப் போக்யரான தாம் போம் போது தம்மைக்கொண்டுபோகை தம்முடைய தகவுக்குப் போருமோவென்று விண்ணப்பஞ் செய்" என்கிறாள்.

[பூந்துழாய்முடியார்க்கு] திருமுடிக்கொப்பனையான வனமாலையிருக்கும்படி. [பொன்னாழிக் கையாருக்கு] திருக்கைக்கு வனமாலையிருக்கிறபடி. [ஏந்துநீரிளங்குருகே] பிச்சப்புனலிலே தலைமயிலே நடப்பாரைப்போலே நடக்கவல்ல இளங்குருகே! உன்சமர்த்யத்தாலுண்டான ப்பலம் நான் பெறவேண்டுகிறது. நடுவே நீர் இடைச்சுவராலும் தேங்கவேண்டாவிறே உனக்கு. [திருமுழிக்களத்தாருக்கு] வனமாலைபோலேயும் ஆபரணம் போலேயும் அவ்வூரில் சீலமும் அழகுக்கு உடலாயிருக்கிறபடி. அவை விக்ரஹத்துக்கு ஆபரணமானாப்போலே, சீலம் ஸ்வரூபத்துக்கு ஆபரணமிறே. அழகும் குணங்களும் ஒருதலைத்த விஷயமிறே. [ஏந்து பூண்முலைபயந்து] ஆபரணங்களை தரிக்கக்கடவ முலை வைவர்ண்யத்தை தரித்து. ஆபரணங்கள் ஸம்ச்லேஷார்த்தமாகச் சுமக்குமவை; இது விச்லேஷத்தாலல்லது சுமவாதிறே. விப்ரயோகத்தில் இப்படியிருக்கையிறே ஸ்த்ரீத்வமாவது; இங்ஙனிராதவன்று பும்ஸ்த்வாத் வ்யாவ்ருத்தி கூடாதிறே. [என்னிணைமலர்க்கண் நீர் ததும்ப] இணைமலர்போலேயிருக்கிற என்கண், தம்மழகையே இலக்காகவுடைய கண், சோகாச்ருவுக்குஇலக்காம்படி. அவன் சொல்லும்படி அதிர்திருக்கையாலே சொல்லுகிறாளித்தனைபோக்கி அல்லாதபோது தன் கண்ணை இப்படிச் சொல்லக்கூடாதிறே. [ததும்ப] ஆநந்தாச்ருவுக்கு அர்ஹமான கண் சோகாச்ருவாலே விஷயிக்கும்படி. [தாம்] பூந்துழாய்முடியார், பொன்னாழிக்கையார், திருமுழிக்களத்தார் என்றுவைத்து, 'தாம்' என்கிறாளிறே. "பூந்துழாய்முடியார்க்குப் பொன்னாழிக்கையாருக்கு" என்கையாலே வடிவழகைச் சொல்லிற்று; "திருமுழிக்களத்தாருக்கு" என்கையாலே குணஞ்சொல்லிற்று; இப்படிப்பட்ட வடிவழகையும் குணங்களையுமுடைய தாம். [தம்மைக்கொண்டகல்தல்] தமக்கு அகலவேண்டிலுல் "இவ்வடிவைப் பிரிந்தார் பிழையார்" என்று அத்தைவைத்தன்றோ போவது. தம்மைக் கண்ணுடிப்புறத்திலே கண்டறிவீரே. தம்மைப் பிரிந்த தசைக்கு உதவுகைக்கன்றோ தம்மைக்கண்டது: "இமாமவஸ்தாமாபந்நோ நேஹபச்யாமி ராகவம்" என்கிறபடியே ஆற்றாமையெல்லாம் சொல்லுவிக்குமிறே. எனக்கு ஆற்றாமையுண்டானவாறில் கிட்டி நின்று முகங்காட்டி ரக்ஷிக்கையாலே தடவி ரக்ஷிக்குமைக் கன்றோ தம்மைப்பெற்றது. தம்மைப்பிரிந்து நோவுபடுகிற இற்றைக்குமேற்பட ஆற்றாமை யில்லையிறே எனக்கு. இவ்வளவில் நான் பெருமாளைக் காண்கிறிலேன் என்றாளிறே. அதவா, [தாம் தம்மைக்கொண்டகல்தல்] தாம் என்னைக்கொண்டுஅகலுமதொழிய தம்மைக்கொண்டகலக்கடவரோ? தம்மைக்கொண்டகலவேண்டிலுல் தமக்கு சேஷமானத்தைப்போகட்டுப் பிறர்க்கு சேஷமானத்தையோ கொடுபோவது? "பக்தாநாம்" என்றிறே அவனுடம்பு இருப்பது. "தனக்கேயாக எனைக்கொள்ளவேணும்" என்றிறே இத்தலையிருப்பது. [தகவன்றென்றுரையீரே] ப்ரணயித்வமும் மென்மையுமெல்லாம் கிடக்கச்செய்தே, இது வீர்த்தயர் செய்யும்செயலென்று சொல்லுங்கோள். ஸ்த்ரீவதத்துக்கு அஞ்சாதார் செய்யுமவற்றைச் செய்தீரென்று சொல்லுங்கோள்.

தகவன்றென்றுரையீர்கள் தடம்புனல்வாயிரைதேர்ந்து*
மிகவின்பம்படமேவும் மென்னடையவன்னங்காள்!*
மிகமேனிமெலிவெய்தி மேகலையுமீடழிந்து* என்
அகமேனியொழியாமே திருமூழிக்களத்தார்க்கே. (10)

ஆ.—பத்தாம்பாட்டில், சில அன்னங்களைக் குறித்து, எம்பெருமானுக்கு என் தசையை நான் முடிவதுக்கு முன்பே அறிவியுங்கோ ளென்கிறாள். [தடம்புனலென்று தொடங்கி]-பெரிய நீர்வெள்ளங்களிலே இரையைத்தேடி மிகவும் இனிமைபிறக்கும்படி ஸம்ச்லேஷியாநிற்பதுஞ்செய்து அத்தாலே ஸரஸமான ஸஞ்சாரத்தையுடைய அன்னங்காள்! [மிகமேனியென்று மேலுக்கு] - உடம்பு மிக மெலிந்து மேகலையும் கட்டழிந்து நான் முடியதுக்குமுன்பே

இ.—பத்தாம்பாட்டில், சில அன்னங்களைக்குறித்து நான் முடிவதற்கு முன்னே அவனுக்கு என் தசையை அறிவியுங்கோள் என்கிறாள். [தகவன்றென்றுரையீர்கள்] - அவனை அழிக்கையாவது நிர்த்தய னென்கை. அவனுக்கு நிரூபகம் தயையாகையாலே அவனுடைய மர்மமறியுமவளாகையாலே அத்தை நினைப்பிக்கிறாள். [தடம்புனல்வாயிரைதேர்ந்து] - மிக்க நீர்வெள்ளத்தை யுடைத்தான பொய்கைகளிலே இரைதேடி, கலவிக்கு உறுப்பான வ்யாபாரமேயாயிருக்கிறபடி. [மிகவின்பம்படமேவும்] - இனிமை கரைபுரளும்படியன்றோ நீங்கள் ஸம்ச்லேஷிக்கிறது. பிரிவுதேட்டமாம்படி உர்மஸ்நகைமையாய்ச் செல்லுகிறபடி. விச்லேஷியாளிடில் இரண்டாச்சயமும் அழியும்படியாய்த்து இவை பரிமாறுகிறபடி. [மென்னடைய அன்னங்காள்] - கலவியின்மிகுதி நடையிலே தொடைகொள்ளலாம்படி ஸரஸஸஞ்சாரம் இருக்கிறபடி. [மிகமேனிமெலிவெய்தி] - நான் இவ்விருப்பு இருக்க உங்களுடைய கலவியும் ஸரஸ ஸஞ்சாரமும் ப்ரீதிஹேதுவாக ப்ராப்தியுண்டோ? உங்கள் கலவியின் மிகுதியோபாதி போரும் என் வடிவில் மெலிவின்மிகுதியும். [மேகலையுமீடழிந்து] - பரியட்டமும் கட்டழிந்து, மேகலை தொங்கும்போது ஆச்ரயம்வேணுமே. [என் அகமேனியொழியாமே] - புறம்பு கழனமை கழன்றது, அகவாயில் ஸ்வரூபம் கழலுவதற்குமுன்னே; நான் முடிவதற்கு முன்னே என்கை. [திருமூழிக்களத்தார்க்கு] - தம்மையொழியச் செல்லாதார் ஸத்தையை நோக்குகைக்கு எடுத்து வந்திருக்கிறவர்க்கு. [திருமூழிக்களத்தார்க்கு - தகவன்றென்று உரையீரே] - பொலிபுறந்தடவி அத்தலையைப்பேணிப் பேசாத்து அமையும்; இனி அவர்படியைச் சொல்லிப் போருங்கோள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. சில அன்னங்களைக்குறித்து, நான் முடிவதற்கு முன்னே அவனுக்கு என் தசையை யறிவியுங்கோளென்கிறாள்.

[தகவன்றென்றுரையீர்கள்] அவனுடைய ஸத்தை யழிக்கைக்கு 'தகவில்லை' என்னுங்கோள். அதாவது - நிர்த்தயனென்கை. அவனுக்குநிரூபகம் தயையாகையாலே, அவனுடைய மர்மம் அறியுமவளாகையாலே, அத்தைச் சொல்லு என்கிறாள் [தடம்புனல்வாயிரை தேர்ந்து] மிக்க நீர்வெள்ளத்தையுடைத்தான பொய்கைகளிலேயிரைதேடி, கலவிக்கு உறுப்பான வ்யாபாரமேயாயிருக்கிறபடி. [மிகவின்பம்படமேவும்] ஸுகம் கரைபுரளும்படியன்றோ நீங்கள் ஸம்ச்லேஷிக்கிறபடி. பிரிவு தேட்டமாய் உர்மஸ்நகரமாய்ச் செல்லுகிறபடி. விச்லேஷியாளிடில் இரண்டாச்ரயமும் அழியும்படியாய்த்து இவை பரிமாறுகிறபடி. [மென்னடையவன்னங்காள்] கலவியின்மிகுதி நடையிலேதொடைகொள்ளலாம்படி ஸஞ்சரியாநின்றனவாய்த்து. [மிகமேனிமெலிவெய்தி] ஸரஸஸஞ்சாரமெல்லாம் குலைந்ததிறே நுங்களுக்கு, கண்டுகொளிறே நானிருக்கிறபடி; என் தசையைக்கண்டால் தரித்திருக்கலாயிருக்குமோ? உங்கள் கலவியின் மிகுதியோபாதி போரும், என்னுடம்பின் மெலிவும். [மேகலையுமீடழிந்து] பரியட்டமும் கட்டுக்குலைந்து; மேகலை தொங்கும்போது ஆச்ரயம் வேணுமே [என்னகமேனியொழியாமே] புறம்புள்ளது அடையக்கழன்றது; இனி அகவாயில் ஸ்வரூபம் கழல்வதற்கு முன்னே; நான் முடிவதற்கு முன்னே யென்கை. [திருமூழிக்களத்தார்க்கு] தம்மையொழியச் செல்லாதார் ஸத்தை நோக்குகைக்காக வந்து கிடக்கிறவர்க்கு [திருமூழிக்களத்தார்க்கு-தகவன்

தென்றுரையீர்கள்] பொரி புறந்தடவி அத்தலையைப்பேணியுண்டதமையும்; இனிஅவர்படியை நேராகச் சொல்லிப் போருங்கோள். அப்படி முன்பு பேணினுளோ இவனென்னில்; "என தவ்வை வண்ணார் தகவுகள் என்று திருத்தாயார் சொல்லிற்றுப் பொறாமல், "தகவுடையவனே"* என்று கெடுவாய்! ஆகரத்தில் தகவு மறுக்குமோ?" என்றாளிறே; அத்தைச்சொல்லுகிறான்.

ஒழிவின்றித்திருமூழிக்களத்துறையும் ஒண்சுடரை*
ஒழிவில்லாவணிமழலைக் கிளிமொழியாள் அலற்றியசொல்*
வழுவில்லாவண்குருகூர்ச் சடகோபன்வாய்ந்துரைத்த*
அழிவில்லா ஆயிரத்துஇப்பத்தும் நோயறுக்குமே. (11)

ஜீ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி, தன்னை அப்யஸித்தார்க்கு எம்பெருமானைப் பிரிகைக்கீடான ஸம்ஸாரதுர்த்தத்தை அறுக்கும் என்கிறார். [ஒழிவின்றியென்று மேலுக்கு]-திருமூழிக்களத்தில் போக்யதையாலே நிரந்தரவாஸம்பண்ணி அங்கே நிரதிசயதீப்தியுக்தனானவனை. [ஒழிவில்லா என்று தொடங்கி] - எம்பெருமானுக்குத் திருமூழிக்களத்தைப் பிரிந்து தரிக்க ஸம்பாவனையுண்டேயாகிலும் அவனைப்பிரிகில் தரியாத தன்மையை யுடையளாய் அழகிதாய் முக்தமான கிளியின் பேச்சுப்போலே யிருக்கிற பேச்சை யுடையளான பிராட்டி தன் ஆற்றாமையாலே ப்ரலாபித்த பாசுரத்தில் ஒன்றும் குறையாதபடியிருக்கிற ஆழ்வார் நோவுபட்டு உரைத்த.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸித்தார்க்கு, பிரிவுக்கடியான ஸம்ஸாரதுரிதத்தை இதுதானே அறுத்துக்கொடுக்கும் என்கிறார். [ஒழிவின்றித் திருமூழிக்களத்துறையும்] - ஒருநாளும் விடநினையாதே அவ்வூரிலே நித்யவாஸம் பண்ணுகிறவர்க்கு. [ஒண்சுடர்] - "பின்னானார் வணங்குஞ் சோதி" என்கிறபடியே அவ்வூரில்நிலையால் வந்த புகரிருக்கிறபடி. அவ்வூரில்போக்யதையால் வந்த புகர். பிற்பாடர்க்கு முகங்கொடுக்கும் நீர்மையால்வந்த புகர். [ஒழிவில்லா] - அவன் அவ்வூரை யொழியில் தரிக்கமாட்டாதாப்போலே அவனை யொழிய தரிக்கமாட்டாதவள் என்கை. [அணிமழலைக்கிளிமொழியாள்] - அழகியதாய் முக்தமான கிளியின் பேச்சுப்போலே யிருக்கிற பேச்சை உடையவள். [அலற்றிய சொல்] - தன் ஆற்றாமையாலே அக்ரமமாகச் சொன்ன பாசுரத்தை. [வழுவில்லா வண்குருகூர்ச் சடகோபன்] - அப்பிராட்டிபடியில் ஒன்றும் குறைவின்றிக்கேயிருக்கிற ஆழ்வார். [வாய்ந்துரைத்த] - கிட்டி உரைத்த. பாவபந்தத்தாலே நோவுபட்டுரைத்த [அழிவில்லாவாயிரத்துஇப்பத்து] - கேட்டார்நெஞ்சை ஒருநாளும் விடாதேவர்த்திக்கிற இப்பத்து. இப்பாசுரத்தைக் கேட்டார்க்கு ஸமகாலத்திற்போலே ஸர்வகாலமும் ரஸிப்பிக்கும்படியாய்த்து இருப்பது. [நோயறுக்குமே] - பகவத்விச்லேஷமாகிற நோய் அறுக்கும். கலந்து பிரிந்து திர்யக்குக்களின் காலிலே விழுந்து க்லேசிக்கவேண்டா, விச்லேஷகந்தமில்லாத தேசத்திலே புகப்பெறுவர்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸித்தார்க்கு, பிரிவுக்கடியான ஸம்ஸாரதுரிதத்தை இதுதானே யறுத்துக்கொடுக்கும் என்கிறார்.

[ஒழிவின்றித் திருமூழிக்களத்துறையும்] ஒருநாளும் விடநினையாதே அவ்வூரில் நித்ய வாஸம்பண்ணுமவனை. [ஒண்சுடர்] "பின்னானார் வணங்குஞ்சோதி" என்கிறபடியே, அவ்வூரில் நிலையால்வந்த புகரிருக்கிறபடி;—அவ்வூரில் போக்யதையால் வந்த புகர்; பிற்பாடர்க்கு முகங்கொடுக்கும் நீர்மையால் வந்த புகர். [ஒழிவில்லா] அவன் அவ்வூரையொழியில் தரிக்கமாட்டாதாப்போலே, அவனையொழியில் தரிக்கமாட்டாதவளென்கை; *"நச ஸீதா த்வயாஹீநா"* என்னுமவளிறே. [அணிமழலைக்கிளிமொழியாள்] அழகிய முக்தமான, கிளியின் பேச்சுப் போலேயிருக்கிற பேச்சையுடையவள். [அலற்றியசொல்] தன்னாற்றாமையாலே அக்ரமமாகச் சொன்ன பாசுரத்தை. [வழுவில்லா வண்குருகூர்ச்சடகோபன்] பிராட்டிபடியிலொன்றும் குறைவற்றிருக்கிற ஆழ்வார். [வாய்ந்துரைத்த] கிட்டியுரைத்த; பாவபந்தத்தாலே சொன்ன

வென்றபடி. [அறிவிலாவாயிரத்துஇப்பத்து] கேட்டவர்களொருவரை ஒருகாலும் விடாதே வர்த்திக்கிற இப்பத்து. இப்பாசுரத்தைக் கேட்டார்க்கு, ஸமகாலத்திற்போலே ஸர்வகாலமும் ரஸிப்பிக்கும்படியாய்த்து இருப்பது. [நோயறுக்குமே] பகவத்விச்லேஷமாகிற நோயை யறுக்கும்; கலந்துபிரிந்து திர்யக்குக்களின் காலிலேவிழுந்து க்லேசிக்க வேண்டா; விச்லேஷமில்லாத தேசத்திலே புகப்பெறுவர்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

எட்டாந்திருவாய்மொழி—அறுக்கும்வினை : ப்ரவேசம்

ஒ.—எட்டாந்திருவாய்மொழியில், இப்படி தம்முடைய ஆர்த்தியை அறிவிக்கச்செய்தேயும் எம்பெருமான் அப்போதே வரக்காணாமையாலே மிகவும் அவஸந்நரான ஆழ்வார் தூதப்ரேஷணத்தாலும் மந:ப்ரஸாதங்களாலும் அவனுடைய குணநுஸந்தாநத்தாலும் 'அவன்வந்து நம்மை விஷயீகரித்துத் திருநாவாயிலே கொண்டுபோகை நிச்சிதம்' என்றத்யவஸித்து, லங்கையிலேவந்து திருவடி தன்னைத் திருவடிதொழுது போனபின்பு பிராட்டி "பெருமானைக்காண்பது எப்போதோ?" என்று பதறினாப் போலே திருநாவாயிலே புகவேணுமென்று பதறி, 'அங்கேபுகவல்லேனே?' என்றும், 'புகும்நாள் என்று?' என்றும், 'அங்கேபுக்கு என்கண்களாரக்கண்டு அடிமைசெய்யவல்லேனோ?' என்றும் தொடங்கி அநேக மநோரதங்களைப் பண்ணுகிறார். போகவிட்ட தூதர் வரப்பற்றாமை "நாம் அவனிருந்த விடத்தே போவோம்" என்று மநோரதிக்கிறாரென்றுமாம்.

இ.—எட்டாந்திருவாய்மொழியில், இப்படி தம் ஆர்த்தியை அறிவிக்கச் செய்தேயும் அப்போதே வரக்காணாமையாலே அவஸந்நரானவர் தூதப்ரேஷணத்தாலும் அவன்குணநுஸந்தாநத்தால் வந்த மந:ப்ரஸாதத்தாலும் "அவன்வந்து நம்மை விஷயீகரித்து, அமர்ந்த நிலமான திருநாவாயிலே கொண்டு போகை நிச்சயம்" என்று அத்யவஸித்து, க்ரமத்தாலே கொண்டுபோகப் பற்றாமையாலேபதறி, "அங்கே புகவல்லேனே, புகும் நாளென்றோ? அங்கேபுக்கு என்கண்களாரக் கண்டு அடிமைசெய்யவல்லேனோ?" என்று இப்படி அநேக மநோரதங்களைப் பண்ணுகிறார். திருவடிசென்று பிராட்டியைத் திருவடிதொழுது மீண்டபின்பு பெருமானைக்கிட்டுந்தனையும் பிராட்டிக்குச்சென்ற மநோரதம்போலே இவர்க்குச் செல்லுகிறது. "உபாயோபேயங்கள் ஈச்வரனே" என்று அத்யவஸித்தார்க்கு, ப்ராப்யருசியில் கண்ணழிவற்றால் விளம்பஹேதுவில்லாமையாலே, ப்ராப்யஸித்தியளவும் மநோரதம் செல்லாநிற்குமிறே. அதவா, போகவிட்ட தூது வரப்பற்றாமை "நாம் அவனிருந்தவிடத்தே போவோம்" என்று மநோரதிக்கிறார். ப்ராப்யஸித்தியிலுண்டான த்வரையாலே, பெரியமுதலியார் எப்போதும் இத்திருவாய்மொழியை அநுஸந்தித்தருளுவரென்று 'பெரியமுதலியார் திருவாய்மொழி' என்றும் இதைச் சொல்லுவது.

ஈடு.—திருவடிசென்று பிராட்டியைத் திருவடிதொழுது மீண்டவனந்தரம் பெருமானைக் கிட்டுவதற்கு முன்பு பிராட்டிக்குப்பிறந்த மநோரதம்போலே, இவர்விட்ட தூதர் அத்தலைப்பட்டு அவனைக்கொண்டுவருவதற்கு முன்னே நடுவு இவர்க்குப்பிறந்த மநோரதத்தைச் சொல்லுகிறது. இப்படி தம்முடைய ஆர்த்தியை அறிவிக்கச்செய்தேயும் அப்போதே வரக்காணாமையாலே அவஸந்நரானவர், தூதப்ரேஷணத்தாலும் அவன் குணநுஸந்தாநத்தாலும் மந:ப்ரஸாதத்தாலும் "அவன் வந்து நம்மை விஷயீகரித்து அமர்ந்தநிலமான திருநாவாயிலே கொடுபோகை நிச்சிதம்" என்று அத்யவஸித்து, க்ரமத்தால் போகப்பற்றாமையாலே பதறி, "அங்கேபுக வல்லேனோ? புகும்

தான் என்றே? "அங்கேபுக்கு என் கண்ணாரக்கண்டு அடிமைசெய்யவல்லேனே!" என்று இப்படி அநேகமநோரதங்களைப் பண்ணுகிறார். "உபாயோபேயங்களிரண்டும் ஈச்வரனே" என்று அத்யவஸித்தார்க்கு, ப்ராப்யருசி கண்ணழிவற்றால் விளம்பமேற்று இல்லாமையாலே, ப்ராப்யஸித்தியளவும் மநோரதம் செல்லாநிற்குமிறே. இம்மநோரதந்தான் இவனுக்குத் தவிராததுமாய், அதுதான் இனியதுமாய், இவனுடைய ஸ்வரூபத்தோடு சேர்ந்திருப்பதுமொன்றிறே. பெரியமுதலியார், ப்ராப்யஸித்தியில் த்வரையாலே எப்போதும் இத்திருவாய்மொழியை யநுஸந்தியாநிற்பர்; ஆகையாலே, இதனை "பெரியமுதலியார் திருவாய்மொழி" என்றாய்த்துச் சொல்லுவது. அதவா, "விட்ட தூதர்கள் தாழ்த்தார்களென்று தாமே அவன் வர்த்திக்கிற தேசத்தேறப்போக வொருப்படுகிறார்" என்பாருமுண்டு.

அறுக்கும்வினையாயின ஆகத்தவனை*
நிறுத்தும்மனத்தொன்றிய சிந்தையினார்க்கு*
வெறித்தண்மலர்ச்சோலைகள்சூழ் திருநாவாய்*
குறுக்கும்வகையுண்டுகொலோ? கொடியேற்கே. (1)

ஆ.—முதற்பாட்டில், எனக்குத் திருநாவாய் குறுகுகைக்கு உபாயமுண்டோ? என்கிறார். [அறுக்குமென்று தொடங்கி] - அவனை ஹ்ருதயத்திலே நிறுத்தவேணுமென்னும் அத்யவஸாயத்திலே ஒருப்பட்ட மநோரதத்தை யுடையார்க்கு ஸகலது:க்கங்களையும் போக்கும். [வெறி] - பரிமளம். [கொடியேற்கு] - அங்குப் புகப்பெறாதே நோவுபடுகைக்கீடான பாபத்தைப்பண்ணின எனக்கு.

இ.—முதற்பாட்டில், எனக்குத் திருநாவாய் குறுகுகைக்கு உபாயமுண்டோ? என்கிறார். [அறுக்கும் வினையாயின] - வினையென்று பேர்பெற்றவற்றை அடங்கலும் போக்கும்; ருசிவிரோதி, உபாயவிரோதி, ப்ராப்திவிரோதி, சரீரத்தளவில் பர்யவஸிக்கவொட்டாதே ப்ராரப்தமாய் வருமவை, அவற்றையடைய ஒருகாலே போக்கும். க்ரமத்தாலே போக்கவேண்டுவது தானே போக்கிக்கொள்ளுமன்றிறே; அவன் போக்குமன்று "ஸர்வபாபம் ப்ரணச்யதே" "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கிறபடியேயாகக் கடவதிறே. இப்படிச் செய்வது ஆர்க்கென்னில்? [ஆகத்தவனை நிறுத்தும்மனத்தொன்றிய சிந்தையினார்க்கு] - அவனை ஹ்ருதயத்திலே நிறுத்தவேணுமென்னும் அத்யவஸாயத்திலே ஒருமைப்பட்ட மநோரதத்தை உடையவர்க்கு. [வெறி இத்யாதி] - வினையை வர்த்திப்பிக்கிலும் புக்குக்கொடுக்க வேண்டும்படியாய்த்து தேசமிருப்பது. பரிமளத்தையுடைத்தாய் ச்ரமஹரமாய் நித்யவஸந்தமான சோலைகளாலே சூழப்பட்ட திருநாவாய். [குறுக்கும்வகையுண்டுகொலோ] - குறுகப்பண்ணும்விரகு ஏதோ வென்னுதல்; குறுகும்விரகு ஏதோவென்னுதல்; குறுக்குமென்று அத்தேசபாஷை. அந்த பாஷையாலே அருளிச்செய்வதே! என்று வித்தராயருளினார் எம்பெருமானார். [கொடியேற்கே] - ஆசாலேசமுடையார்க்கும் புகலாம் தேசமாயிருக்க, புகப்பெறாதே நோவுபடுகைக்கடியான பாபத்தைப்பண்ணினே னெனக்கு. 'கொடியேற்கு - ஆகத்தவனை நிறுத்தும் மனத்தொன்றிய சிந்தையினார்க்கு - வினையாயின - அறுக்கும் - திருநாவாய் குறுக்கும்வகை, உண்டுகொலோ?'

ஈடு.—முதற்பாட்டு. எனக்குத் திருநாவாய் குறுகுகைக்கு உபாயமுண்டோ? என்கிறார்.

[அறுக்கும் வினையாயின] வினையென்று பேர் பெற்றவை சாடங்கவும் போக்கும்!— ருசிவிரோதி, உபாயவிரோதி, ப்ராப்யத்தை ப்ராபிக்குமிடத்தில் வரும் விரோதிகள், வர்த்தமான தேஹாந்தளவிலே பர்யவஸிக்கையன்றிக்கே ப்ராரப்தசேஷமாய் நின்று அவ்வருகேயும் போம்படி விளம்பிக்கக்கடவவை: மின்னின் நிலைகள்தோறும் உண்டாயிருக்குமிறே விரோதிகள். புதுப்புடைவை மழுக்குக்கழற்றுமாபோலே க்ரமத்தாலே போக்கவேண்டுவது தான்போக்குமன்றிறே; பகவத்ப்ரஸாதத்தாலே போமன்று ஒருக்காலேபோமிறே! *மேருமந்தரமாத்ரோபி*

ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே *ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி* என்கிறபடியே பாகக் கடவதிறே, ப்ரஹ்மஹத்யைக்கு ப்ராயச்சித்தம் பண்ணினால், கோஹத்யைக்குத் தனித்துப் ப்ராயச்சித்தம் பண்ணவேண்டி வருமிறே; அங்ஙன் வேண்டாவிறே பகவத்விஷயத்தைக்கொண்டு கார்யங்கொள்ளுமிடத்தில். ஆர்க்குத்தான் இப்படிச்செய்வது? என்னில், [ஆகத்துஇத்யாதி] ஹ்ருதயத்திலே அவனை நிறுத்தவேணுமென்னும் அத்யவஸாயத்திலே ஒருமைப்பட்ட மனோரதத்தையுடையார்க்கு. [வெறியித்யாதி] வினைகளைப்போக்கப்பெற்று வர்த்திப்பிக்கிலும் விடவொண்ணாதபடியாய்த்து, தேசமிருப்பது; பரிமளத்தையுடைத்தாய் ச்ரமஹரமாய் நித்ய வஸந்தமான சோலைகளாலே சூழப்பட்ட திருநாவாய். [குறுக்கும்வகையுண்டுகொலோ] குறுகப்பண்ணும் வகை ஏதோ? என்னுதல்; குறுகும் விரகு ஏதோ? என்னுதல்; குறுக்குமென்று - அத்தேசபாஷை. எம்பெருமானார் திருவடிதொழவெழுந்தருளா நிற்க, "திருநாவாயெத்தனையிடம் போரும்?" என்று எதிரேவருகிறார் சிலரைக் கேட்டருள, "குறுக்கும்" என்றார்களாய், அத்தைக் கேட்டு "இப்பாஷையாலே யருளிச்செய்வதே ஆழ்வார்!" என்று போரவித்தராயருளினார். [கொடியேற்கு] கொடியேனுக்கு. ஆசாலேசமுடையார்க்கு ப்ராப்திக்கலாம் தேசமாயிருக்க, ஆசையும் கண்ணழிவற்றிருக்க புகப்பெறாதே நோவுபடுகைக்கடியான பாபத்தைப்பண்ணின எனக்கு. 'ஆகத்தவனை நிறுத்தும் மனத்தொன்றிய சிந்தையினார்க்கு - வினையாயின அறுக்கும் - வெறித்தண் மலர்ச்சோலைகள் சூழ் திருநாவாய். கொடியேற்கு - குறுக்கும்வகையுண்டுகொலோ?"

கொடியேரிடைக் கோகனகத்தவள்கேள்வன்*
வடிவேல்தடங்கண் மடப்பின்னைமணாளன்*
நெடியானுறைசோலைகள்சூழ் திருநாவாய்*
அடியேனணுகப்பெறுநாள் எவைகொலோ? (2)

ஆ.—இரண்டாம்பாட்டில், திருநாவாயிலே புகும்நாளென்றோ? என்கிறார். [கொடியொக்கு தொடங்கி] - கொடிபோலே அழகிய இடையையுடைய பெரிய பிராட்டியாருக்கு வல்லபனாய் கூர்வேல் போலேயாய்ப்பெருத்திருக்கிற கண்களையுடைய நப்பின்னைப் பிராட்டிக்கு போக்தாவாய், அவ்வளவன்றிக்கே, மஹிஷீபரிஜநாதிகளுக்கு ஒருமுடிவின்றிக்கே யிருக்கிறவன் நித்யவாஸம் பண்ணுவதாய் செய்து இவன் பர்யமெல்லாங்கொண்டு ஒருமூலையிலே அடக்கும்படி சோலைப்பரப்பையுடைய திருநாவாய்,

இ.—இரண்டாம்பாட்டில், திருநாவாயிலே புகும்நாளென்றோ? என்கிறார். [கொடியேரிடையித்யாதி] - கொடிபோலே அழகிய இடையை யுடையளாய்ப் புஷ்பத்திற்பரிமளம் உபாதாநமாகப்பிறந்த பிராட்டிக்கு வல்லபனானவன். "நகச்ரீநபராத்யதி" என்பாரும் அருகேயிருக்க இழக்கவோ! என்கிறார். [வடிவேலித்யாதி] - கூரியவேல்போலே ஓராளையொருநோக்கும் நேராய், போக்தாவின் அளவல்லாத போக்யதையை யுடைத்தான கண்களை யுடையளாய் ஆத்மகுணோபேதையான நப்பின்னைப் பிராட்டி செல்விகொள்ள இட்டுப்பிறந்தவன். தன் கண்ணாலே அவனை வெடிவெறிந்து நமக்காக்கித்தருமவளிறே நப்பின்னைப்பிராட்டி. [நெடியான் இத்யாதி] - இவ்வளவன்றிக்கே மஹிஷீபரிஜநங்களுக்கு எல்லையின்றிக்கே யிருக்குமவன் நித்யவாஸம் பண்ணுகிற தேசம். அவனுக்கும் அவன்பரிகரத்துக்கும் குறைவற வர்த்திக்கலாம் சோலைப் பரப்பையுடைத்தான தேசம். [அடியேன் அணுகப்பெறு நாள்] - அடிமை செய்கைக்கு இட்டுப் பிறந்த நான் வந்துகிட்டப்பெறும் நாளென்றோ?

ஈடு.—இரண்டாம்பாட்டு. திருநாவாயிலே புகும்நாளென்றோ? என்கிறார்.

[கொடியேரித்யாதி] கொடிபோலேயழகிதான இடையையுடையளாய்ப் புஷ்பத்திற் பரிமளம் உபாதாநமாகப் பிறந்த பிராட்டிக்கு வல்லபனானவன். *நகச்ரீநாபராத்யதி* என்பாரும்

அருகேயிருக்க இறாக்கவோ? என்கிறார். [வடிவேல் தடங்கண் மடப்பின்னைமணாளன்] கூரிய வேல்போலே ஒராளும் ஒருநோக்கும் நேராய் போக்கவொண்ணாத போக்யதையை யுடைத்தான கண்ணையுடையளாய், ஆத்மகுணோபேதையான நப்பின்னைப்பிராட்டியுடைய செவ்வி புஜிக்கைக்கு இட்டுப்பிறந்தவனுமாய்த்து. [நெடியான்] இப்படிப்பட்ட மஹிஷீபரிஜநாதிகளால் எல்லைகாணவொண்ணாதவன். [உறைகின்றவாதி] அவனுக்கும் அவன்விபூதிக்கும் குறைவற வர்த்திக்கலாம்படி இடமுடைத்தான சோலைகளாலே சூழப்பட்ட திருநாவாயை. [அடியோன்] வைலக்ஷண்யத்துக்குப் பெருமாளும்பிராட்டியுமாய்க்கலக்கும்மடத்தில் பணிகளையிட்டுப்படியே எல்லா அடிமைகளும் செய்கைக்கு இளையபெருமாள் நேர்பட்டாப்போலேயாய்த்து, இங்குத்தைக்கு அடிமைசெய்கைக்கு இவர் நேர்பட்டபடியும். இளையபெருமாளைப்போலே அடிமைசெய்வித்துக் கொள்ளுகிற விஷயத்தில் குறையில்லையாய்த்துஇவர்க்கு. ஸ்ரீஜநகராஜன் திருமகளொருத்தியுமிறே அங்கு. [அணுகப்பெறுநாளெவைகொலோ] அத்தேசத்தை நான் கிட்டப் பெறுங்காலமேதோ?

எவைகொல் அணுகப்பெறுநாள் என்றெப்போதும்*
கவையில்மனமின்றிக் கண்ணீர்கள் கலுழ்வன்*
நவையில்திருநாரணன்சேர் திருநாவாய்*
அவையுள்புகலாவது ஓர்நாள் அறியேனே. (3)

ஈ.—மூன்றாம்பாட்டில், 'திருநாவாய்த்திருவோலக்கத்திலே புகும் நாள் என்று?' என்று அறிகிறிலேனென்று அவஸந்நராகிறார். [எவைகொல் என்று தொடங்கி] - அணுகப்பெறுநாள் எவையோவென்று ஸர்வகாலமும் மற்றொன்றறியாதே ஒருமைப்பட்டுக் கண்ணீர் பாயாநிற்பன். [நவையில் திருநாரணன்] - துர்லபத்வாதிதோஷம் தட்டாதபடி பிராட்டியோடேகூடி ஆச்ரிதஸுலபனானவன்.

இ.—மூன்றாம்பாட்டில், 'திருநாவாயில்திருவோலக்கத்திலேபுகும்காலமென்று?' என்று அறிகிறிலேன் என்கிறார். [எவைகொலித்யாதி] - நான் வந்து கிட்டப்பெறும் நாளெவை ? என்று. [எப்போதும்]- ஒருகால்இத்தைச்சொல்லி அல்லாதபோது அப்பரதை பண்ணுகிறேனோ ? [கவையில் மனமின்றி] - அதுதன்னிலும் இதுவும் முகாந்தரமுமாய்ச் செல்லுகிறதோ ? இருதலைத்த நெஞ்சின்றியே. [கண்ணீர்கள் கலுழ்வன்] - கண்ணீர்கள் வெள்ளமிட விருப்பன். [நவையில் திருநாரணன்] - துர்லபத்வாதிதோஷமின்றிக்கேயிருக்கிற ஸ்ரீமானான நாராயணன். ஸௌலப்யத்துக்குஊற்றான பிராட்டியோடேகூடத் திருநாவாயிலேவந்து ஸுலபனானவன். [திருநாவாயவையுள் புகலாவதோர் நாளறியேனே] - திருநாவாயிலே பேரோலக்கமாகவிருக்க அத்திரளிலேசென்று கூடப்பெறும்நாளென்றென்று அறிகிறிலேன். அவை - ஸபை, நவை - குற்றம். ''அடியார்கள்குழாங்களை - உடன்கூடுவதென்று கொலோ'' என்றிருக்குமவராகையாலே, அந்நாளை யாசைப்படுகிறார்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. 'திருநாவாயில் திருவோலக்கத்திலே புகும்நாள் என்று ?' என்றறிகிறிலேனென்கிறார்.

[எவைகொலித்யாதி] நான் வந்து கிட்டப்பெறும்நாள் எவை என்று. [எப்போதும்] ஒருகால் இத்தைச்சொல்லி அல்லாதபோது அப்பரதைபண்ணுகிறேனோ? [கவையில்மனமின்றி] அதுதன்னிலும் இதுவும் முகாந்தரமுமாய்ச் செல்லுகிறதோ? இருதலைத்த நெஞ்சின்றிக்கே. [கண்ணீர்கள்கலுழ்வன்] கண்ணீர்கள் வெள்ளமிடவிருப்பன். [நவையில்திருநாரணன்] துர்லபத்வாதிதோஷமின்றிக்கே யிருக்கிற ஸ்ரீமானான நாராயணன். ஸௌலப்யத்துக்கு ஊற்றான பிராட்டியோடேகூடத் திருநாவாயிலே வந்து ஸுலபனானவன். 'திருநாவாயிலே பேரோலக்கமாக விருக்க, ''அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவதென்றுகொலோ!'' என்று ஆசைப்பட்ட நான் அத்திரளிலே சென்று கூடப்பெறும் நாள் என்று?' என்றறிகிறிலேன், அவை - ஸபை. நவை - குற்றம்.

நாளேலறியேன் எனக்குள்ளன* நானும்
மீளாவடிமைப்பணி செய்யப்புகுந்தேன்*
நீளார்மலர்ச்சோலைகள்சூழ் திருநாவாய்*
வாளேய்தடங்கண் மடப்பின்னைமணாளா! (4)

௬.—நாலாம்பாட்டில், எல்லாவடிமையும் கொள்ளுகைக்காக திருச்சோலையையுடைய திருநாவாயிலே நப்பின்னைப்பிராட்டியோடே கூட எழுந்தருளியிருக்கிற உனக்கு ஆத்மாந்ததாஸ்யம் பண்ணும்படி விஷயீக்ருதனான நான் திருவடிகளில அடிமையிலே அதிகரிக்கும்நாள் என்றென்று அறியேனென்று பதறுகிறார். [வாளேய்தடங்கண்] - வாள்போலேயாய்ப் பெருத்திருந்துள்ள கண்.

ஒ.—நாலாம்பாட்டில், ஆத்மாந்ததாஸ்யம் பண்ணும்படி விஷயீக்ருதனான நான் நப்பின்னைப் பிராட்டியோடே கூட விருக்கிற இருப்பிலே அடிமை செய்யப்பெறும் நாள் என்றென்றறிகிறிலேன் என்கிறார். [நாளேலறியேனெனக்குள்ளன] - பெறக்கடவ நாள் என்றென்று அறிகிறிலேன் என்னுதல். பிரிந்திருக்கக் கடவ நாளெத்தனையென்று அறிகிறிலேன் என்னுதல். பேறு நிச்சிதமானபின்பு பதறுகிறதென் என்னில்? - [நானும் மீளாவடிமைப்பணிசெய்யப் புகுந்தேன்] - நித்யஸூரிகள்பண்ணும் ஆத்மாந்ததாஸ்யத்திலே யன்றோ நானும் அதிகரித்தது. ஒருப்ரயோஜநத்தைக்கொள்ளக் கிட்டினவனுமாய் இருக்கிறேனோ? தாஸ்ய பரிமளத்தில் கைவிடாதவனுமாய் இருக்கிறேனோ? [நீளார்மலர்ச் சோலைகள்] - ஓங்கிப்பரப்பு மாறப் பூத்தசோலைகளை யுடைத்தான தேசம்; அடிமைசெய்கைக்குப் புஷ்பாத்யுபகரணங்களால் குறைவற்ற தேசமென்னுதல். நப்பின்னைப் பிராட்டியும்தானுமாகப் புஷ்பாபசயம் பண்ணலாம் தேசமென்னுதல். [வாளேய்தடங்கண்] - ஒளியை யுடைத்தான பரந்த கண்ணென்னுதல், வாள்போலே கண்டாரை அறுக்க வல்ல பரந்த கண்ணென்னுதல்; அவனை அநந்யார்ஹனாம்படியாக்கவல்ல கண்ணழகையுடையவள் என்கை. [மடப்பின்னை மணாளா] - அழகேயன்றிக்கே ஆத்மகுணங்களாலும் துவக்க வல்லவளுக்கு வல்லபனானவனே! தேசாந்தரம்போன ப்ரஜை ஊர் அணித்தானவாறே தாய்மாரைப் பலகாலும் நினைக்குமா போலே ப்ராப்யதேசம் அணித்தானவாறே திரளவும் தனித்தனியும் பிராட்டிமாரை அநுஸந்திக்கிறார்.

ஈடு.—நாலாம்பாட்டு. 'ஆத்மாந்ததாஸ்யம் பண்ணும்படி விஷயீக்ருதனான நான், நப்பின்னைப் பிராட்டியோடேகூடவிருக்கிற இருப்பிலே யடிமைசெய்யப் பெறும் நாள் என்று? என்று அறிகிறிலேன்' என்கிறார்.

[நாளேலறியேனெனக்குள்ளன] பெறக்கடவ நாள் என்றென்றறிகிறிலேன் என்னுதல்; நான் பிரிந்திருக்கக்கடவ நாளெத்தனையென்றென்றறிகிறிலேனென்னுதல். பேறு நிச்சிதமான பின்பு பதறுகிறதென்? என்னில் - [நானும் மீளாவடிமைப்பணி செய்யப்புகுந்தேன்] நித்யஸூரிகள்பண்ணும் ஆத்மாந்ததாஸ்யத்திலேயன்றோ நானும் அதிகரித்தது? ஒருப்ரயோஜநத்தைக்கொள்ளக் கிட்டினவனுமாய் இருக்கிறேனோ? தாஸ்யபரிமளத்திற் கைவிடாதவனுமாய் இருக்கிறேனோ? [நீளார்மலர்ச்சோலைகள்] ஓங்கிப்பரப்புமாறப்பூத்த சோலைகளையுடைத்தான தேசம். அடிமைசெய்கைக்குப் புஷ்பாத்யுபகரணங்களால் குறைவற்றதேசம் என்னுதல். நப்பின்னைப்பிராட்டியும் தானுமாகப்புஷ்பாபசயம்பண்ணலாம் தேசமென்னுதல். [வாளேய் தடங்கண்] ஒளியையுடைத்தான பரந்த கண் என்னுதல்; வாள்போலே கண்டாரை அறுக்க வல்ல பரந்த கண் என்னுதல்; அவனை அநந்யார்ஹனாக்கவல்ல கண்ணழகையுடையவளென்கை. [மடப்பின்னைமணாளா] அழகேயன்றிக்கே ஆத்மகுணங்களாலும் துவக்கவல்லவளுக்கு வல்லபனானவனே! தேசாந்தரம்போனப்ரஜை ஊர் அணித்தானவாறே தாய்மாரைப் பலகால் நினைக்குமாபோலே, ப்ராப்யதேசம் அணித்தானவாறே திரளவும் தனித்தனியும் பிராட்டிமாரை அநுஸந்திக்கிறார்.

மணாளன் மலர்மங்கைக்கும்மண் மடந்தைக்கும்*
கண்ணாளனுலகத்துயிர்தேவர்கட்கெல்லாம்*
விண்ணாளன்விரும்பியுறைந்திருநாவாய்*
கண்ணாரக்களிக்கின்றதிங்கென்றுகொல்கண்டே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், திருநாவாயை என் கண்ணின்விடாய் தீரக் கண்டு க்ருதார்த்தனாவ தென்றோ? என்கிறார். [கண்ணாளன் உலகத்துயிர் தேவர்கட்கெல்லாம் விண்ணாளன் விரும்பியுறையும் திருநாவாய்] -லோகத்திலுண்டான தேவமனுஷ்யாதிகளுக்கு நிர்வாஹகனுமாய், ஸ்ரீவைகுண்டநாதனுமாயிருந்தவன் அத்யாதரம் பண்ணிக்கொண்டு வர்த்தித்தருளுகிற திருநாவாயை. [இங்கு] - ப்ரக்ருதி யோடே.

இ.— அஞ்சாம்பாட்டில், திருநாவாயை என் கண்ணின்விடாய்தீரக்கண்டு உகப்பதென்றோ? என்கிறார். [மணாளன் இத்யாதி] - பிராட்டிக்கும், ஸ்ரீபூமிப்பிராட்டிக்கும் வல்லபன், புருஷகாரமாவாரும் பொறைக்குடலாவாரும் உண்டாயிருக்க இழக்கக்கடவேனோ? [கண்ணாளன் இத்யாதி] - லோகத்தில் மனுஷ்யர்களென்ன, தேவர்களென்ன, எல்லார்க்கும் நிர்வாஹகனானவன். அவர்கள்படுக்கைப்பற்று நோக்குகிறபடி. [விண்ணாளன்] - பிராட்டிமாரும் தானும் தனக்குத் தகுதியான பரமபதத்திலே திவ்ய பர்யங்கத்திலே யிருந்து நித்யஸூரிகளை நிர்வஹிக்கிறவன். [விரும்பியுறையும் திருநாவாய்] - உபய விபூதிநாதன் பெரும்பேறாக ஆதரித்து வர்த்திக்கிற தேசம். அவன் விரும்புகிற தேசமல்லது ப்ராப்ய மில்லையிறே. [கண்ணார] - காண்கையிலே விடாய்ப்பட்ட கண்கள் வயிறு நிறைய. [களிக்கின்றது இங்கு என்றுகொல்] - "அஹமஸ்மி" என்று ஒரு தேச விசேஷத்திலே களிக்கையொழிய, இங்கே களிக்கப்பெறுவதென்றோ? [கண்டே] - "காண்கை நிச்சிதம்" என்னும் விச்வாஸத்தால் களிக்கை யன்றிக்கே, கண்டே களிப்பது என்றோ?

ஈடு.— அஞ்சாம்பாட்டு. திருநாவாயைக் கண்ணின் விடாய்தீரக்கண்டு அநுபவிப்பதென் றென்கிறார்.

[மணாளனித்யாதி] பெரியபிராட்டியார்க்கும் ஸ்ரீ பூமிப்பிராட்டியார்க்கும் வல்லபனானவன். புருஷகாரமாவாரும் பொறைக்குடலாவாரு முண்டாயிருக்க இழக்கவேணுமோ? [கண்ணாளனித்யாதி] லோகத்தில் மநுஷ்யர்களென்ன, தேவர்களென்ன, எல்லார்க்கும் நிர்வாஹகனானவன். அவர்கள்படுக்கைப்பற்று நோக்குகிறபடி. [விண்ணாளன்] படுக்கைதானிருக்கிறபடி; பிராட்டிமாரும்தானும் தனக்குத்தகுதியான பரமபதத்தில் திவ்யபர்யங்கத்திலேயிருந்து நித்யஸூரிகளை நிர்வஹிக்கிறவன். [விரும்பியுறையும்திருநாவாய்] உபயவிபூதிநாதன் பெரும் பேறாக ஆதரித்து வர்த்திக்கிறதேசம். அவன் விரும்புகிறதேசமல்லது ப்ராப்யமில்லையிறே. [கண்ணார] காண்கையிலே விடாய்ப்பட்டகண், ஆர - வயிறுநிறைய. [களிக்கின்றது இங்கு என்று கொல்] "அஹமஸ்மி" என்று ஒரு தேசவிசேஷத்தே களிக்கையொழிய, இங்கே களிக்கப்பெறுவது என்றோ? [கண்டே] "காண்கை நிச்சிதம்" என்னும் விச்வாஸத்தால் களிக்கையன்றிக்கே, கண்டே களிப்பதென்றோ?

கண்டேகளிக்கின்றது இங்கென்றுகொல்கண்கள்*
தொண்டேயுனக்காயொழிந்தேன் துரிசின்றி*
வண்டார்மலர்ச்சோலைகள்சூழ் திருநாவாய்*
கொண்டேயுறைகின்ற எங்கோவலர்கோவே. (6)

ஒ.— ஆறும்பாட்டில், திருநாவாயில் எம்பெருமானைக் குறித்து, கண்கள் உன்னைக்கண்டு களிப்ப தென்றோ? என்கிறார். [தொண்டே உனக்காய் ஒழிந்தேன் துரிசின்றி] - அநந்யபராய் கெட்டு உனக்கே

அடிமையானேன். [வண்டென்று மேலுக்கு] - புக்காரை மற்றொன்றறியாதபடி பண்ணவல்ல நிரதிசய போக்யமான திருச்சோலைகள் சூழப்பட்ட திருநாவாயை ஆதரித்து அங்கே நிரந்தரவாஸம் பண்ணுகிற ஆச்ரிதஸுலபனுனவனே!

இ.—ஆறும்பாட்டில், ஊரையன்றிக்கே அங்கே நிற்கிற உன்னைக்கண்டு கண் களிப்பதென்றோ? என்கிறார். [கண்டேயித்யாதி] - நான் செய்தபடிசெய்ய; கண்களின்விடாய் தீருவதென்றோ? ஒரு நாளிலேயாண்கை நிச்சிதம் ஆனபின்பு, இந்நிர்ப்பந்தத்துக்குப் பலமென்? என்ன, [தொண்டேயித்யாதி] - அந்யபரதையின்றிக்கே உன் திருவடிகளிலே அதிசயமுறுவேன்; அரைக்ஷணம் இழக்கமாட்டாத படியாயன்றோ என்சாபலமிருக்கிறது? தரிசாகிறது - மங்ஸலாக்கு ஹேயவிஷயஸ்பர்சம். [வண்டா ரித்யாதி] - பரிமளத்தோபாதி வண்டுகளும் படிந்துகிடக்கும்படி புஷ்பிதமான சோலைகளை உடைத்தான தேசம். "ந ச புநராவர்த்ததே" என்கிறபடியே புக்காரை மீளவொட்டாதநிரதிசய போக்யமான தேசம். [தொண்டேயுறைகின்ற] - 'ஆச்ரிதரோடே அநுபவிக்கலாம் தேசம்' என்று திருவுள்ளத்திலேகொண்டு நித்யவாஸம் பண்ணுகிற தேசம். [எங்கோவலர்கோவே] - க்ருஷ்ணனாய்வந்து அவதரித்து இடையர்க்கு ஸுலபனானாப்போலே திருநாவாயிலே வந்து எனக்கு ஸுலபனுனவனே!

ஸ.—ஆறும்பாட்டு. ஊரையன்றிக்கே ஊரில நின்றருளின உன்னைக்கண்டு களிப்பதென்றோ? என்கிறார்.

[கண்டேகளிக்கின்றது இங்கு என்றுகொல்கண்கள்] நான்செய்தபடி செய்ய; கண்களின்விடாய் கெடுவதென்றோ? ஒரு நாளிலேகாண்கை நிச்சிதம்; ஆனபின்பு; இந்நிர்ப்பந்தத்துக்கு ப்பலமென் என்னில்! [தொண்டேயுனக்காய் யொழிந்தேனித்யாதி] அந்ய பரதையின்றிக்கே உன் திருவடிகளிலே அதிசயமுறுவேன், அரை க்ஷணம் இழக்கமாட்டாதபடி யன்றோ என்சாபலமிருப்பது. தரிசாகிறது - மாஸ்ஸலாக்கு ஹேயவிஷயஸ்பர்சம். [வண்டு இத்யாதி] - பரிமளத்தோபாதி வண்டுகளும் படிந்துகிடக்கும்படி புஷ்பிதமான சோலைகளை யுடைத்தான தேசம். "ந ச புநராவர்த்ததே" என்கிறபடியே புக்காரை மீளவொட்டாதபடி நிரதிசய போக்யமான தேசம். [கொண்டேயுறைகின்ற] "நமக்கும் நம்மையுகந்தார்க்கும் நினைத்தபடி பரிமாறியநுபவிக்கலாம் தேசம்" என்று திருவுள்ளத்தாலே யாதரித்துக்கொண்டு வர்த்திக்கிற தேசமாய்த்து. [எங்கோவலர்கோவே] க்ருஷ்ணனாய் வந்தவதரித்து இடையர்க்கு ஸுலபனானாப்போலே, திருநாவாயிலேவந்து எனக்கு ஸுலபனானவனே!

கோவாகிய மாவலியை நிலங்கொண்டாய்*
தேவாசுரர்செற்றவனே திருமாலே*
நாவாயுறைகின்ற என் நாரணநம்பி!*
ஆவாவடியான் இவன் என்றருளாயே. (7)

ஏ.—ஏழாம்பாட்டில், திருநாவாயிலே நித்யவாஸம் பண்ணுகிற நாரணநம்பி! ஐயோ இவன் அநந்யகதியென்று என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணுமென்கிறார். [கோவென்று தொடங்கி] - ஆச்ரிதருடைய அபேக்ஷிதங்களை முடித்துக் கொடுக்கும் ஸ்வபாவனும் ஆச்ரிதப்ரதிகூலநிரஸந ஸ்வபாவனுமாய் வைத்து அநுக்ரஹமாக ஸ்ரிய:பதியுமாய் ஆச்ரிதர்க்கவித்தானைக்காக திருநாவாயிலே எழுந்தருளியிருப்பதுஞ்செய்து ஆச்ரிதவத்ஸலனும் இப்படி "ஆச்ரிதர்க்குடம்பாகப் பெற்றோம்" என்றத்தாலே பூர்ணனுனவனே!

இ.—ஏழாம்பாட்டில், ஆச்ரிதார்த்தமாகத் திருநாவாயிலே நித்யவாஸம் பண்ணுகிற தேவன் அநந்ய கதியென்று என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணு மென்கிறார். [கோவாகிய இத்யாதி] - ஈச்வரன் இந்த்ரனை த்ரைலோக்யாதிபதியாக வைத்தான், மஹாபலி அவனைத்தள்ளி அவ்வரசைத் தான் பறித்துக் கொண்டான்; பாதகனானவன் ஸ்வபலத்தாலே பெறட்டுக்கொண்டபடியாலே "கோவு [illegible]"

என்று ரக்ஷகனை இந்த்ரனுக்குக் கொடுக்கைக்காக அவன்பக்கலிநின்றும் விபூதியை வாங்கினுனுய்த்து. ஆச்ரிதருடைய அபேக்ஷிதஸித்திக்குத் தன்னையழியமாறும் ஸ்வபாவனென்கை. [தேவாசரஞ் செற்றவனே] - தேவாஸுரஸங்க்ராமத்திலேபரஸ்பரவதமேயாய்ச் சென்றவாறே, அநுகூலரான தேவர்களுக்காக அஸுரர்களை யழியச்செய்தவனே! மஹாபலிபக்கல் குணலேசத்தாலே தன்னையழியமாறினுன், அங்கு அவ்வனுமொன்றில்லாமையாலே அவர்களை யழியச்செய்தபடி. [திருமாலே] - ஆச்ரிதரை ரக்ஷிக்கைக்கும் தத்ப்ரதிகூலரை நிரஸிக்கைக்கும் அடி ச்ரிய:பதியாகையாலே; தான் உகவாதார்பக்கல் ஐச்வர்யத்தைமாற்றி உகப்பார்க்குக் கொடுக்கைக்கு அடி ச்ரிய:பதியாகையாலே. [நாவாயுறைகின்ற] - ரக்ஷகனைவன் தூரஸ்த்தனுகையன்றியே ஆச்ரிதரக்ஷணார்த்தமாகத் திருநாவாயிலே நித்யவாஸம் பண்ணுகிறவனே! [நாரணநம்பி] - அதுக்குஉறுப்பாக ஆச்ரிதவத்ஸலனாய் "அவர்களுக்குஉறுப்பாகப் பெற்றேம்" என்று அத்தாலே பூர்ணனானவனே! ஆச்ரிதரக்ஷணத்தை நினைத்து ஸர்வாந்தர்யாமியானவன் என்றுமாம். [ஆவாவடியானிவனென்றருளாயே] - "அநந்யகதியான இவன் ஐயோ நோவுபடுவதே" என்று க்ருபைபண்ணியருளவேணும்; "ஜோஷமேதே தேவதேவேச நார்ச்சநாதௌ ஸ்துதௌசச, ஸாமர்த்த்யவாந் க்ருபாமாத்ரமநோவ்ருத்தி: ப்ரஸீத மே". இவன் நமக்கு அஸாதாரணனென்று, ஸம்பந்தத்தைப் பார்த்து க்ருபைபண்ணியருளவேணும் என்றுமாம்.

ஈடு.—ஏழாம்பாட்டு. ஆச்ரிதார்த்தமாகத் திருநாவாயிலே நித்யவாஸம் பண்ணுகிற தேவர், அநந்யகதியென்று என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணுமென்கிறார்.

[கோவாகியமாவலியை நிலங்கொண்டாய்] ஸர்வேச்வரன் இந்த்ரனை த்ரைலோக்யாதிபதியாக்கிவைத்தான்; அவனைத்தள்ளி அந்தப்பதத்தைத் தானேறட்டுக்கொண்டு "தானே அரசு" என்றிருந்தானுய்த்து. நீ கொடுக்கக் கொள்கையன்றிக்கே, அதுவெல்லாம் தானேயெம்மதென் என்றபிமானித்திருந்தானுய்த்து; "வெறும்புறத்திலே, தன்னதல்லாதத்தை 'தன்னது', என்றேறட்டுக்கொண்டிருக்கக்கடவ - அவன்கையிலே இவ்விஷயமுங்கிடக்குமாகில் நாடுகுடிக்கிடவாது" என்று பார்த்தருளி, இந்த்ரனதான விபூதியை அவன்பக்கலில்நின்றும் வாங்கினுன். [தேவாசரஞ்செற்றவனே] - தேவாஸுரஸங்க்ராமத்திலே அவர்கள் படுவது இவர்கள் படுவதாய் இங்ஙனே யுருவச் செல்லப்புக்கவாறே, ஒருதலையையழித்து தேவஜாதிக்குக் குடியிருப்பும் பண்ணிக்கொடுத்தானுய்த்து. [திருமாலே] ஆச்ரிதரக்ஷணத்துக்கும் தத்ப்ரதிகூல நிரஸநத்துக்கும் அடி ச்ரிய:பதியாகை. [நாவாயுறைகின்ற] இப்படி ரக்ஷிக்குமிடத்தில் அடுத்தணித்தாக முகந்தோற்றத் திருநாவாயிலே நித்யவாஸம் பண்ணுகிற. [என்நாரணநம்பி] ஆச்ரிதவர்க்கத்தினுடைய ரக்ஷணத்திலேநோக்காக ஸர்வாந்தர்யாமியானவன். [நாரணநம்பீ] அதுக்கு உறுப்பாக ஆச்ரிதவத்ஸலனாய், அவர்களுக்கு உறுப்பாகப் பெற்றேமென்றத்தாலே பரிபூர்ணனானவனே! [ஆவா இத்யாதி] *க்ருபாமாத்ரமநோவ்ருத்தி:* என்கிறபடியே, 'ஐயோ, இவன் அநந்யகதி; இவனுக்கு வேறொரு புகலில்லை' என்று என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணும். [அடியான்] அவன் அருளுகைக்கும் இவன் அருள்கொள்ளுகைக்கும் ஸம்பந்தஞ் சொல்லுகிறது.

அருளாதொழிவாய் அருள்செய்து* அடியேனைப்
பொருளாக்கி உன் பொன்னடிக்கீழ்ப் புகவைப்பாய்*
மருளேயின்றி உன்னை என்னெஞ்சத்திருத்தும்*
தெருளே தரு தென்திருநாவாயென்தேவே! (8)

ஒ.—எட்டாம்பாட்டில், அபிலஷிதத்தபடி பெறுகையாலே திருவுள்ளம் கலங்கின ஆழ்வார் "அருளிலுமருள், தவிரிலும்தவிர், இப்போது கலங்காதே உன்னை அநுஸந்திக்கவல்லேனும்படி பண்ணியருள்வேணும்" என்றார்த்திக்கிறார். [அருளாதொழிவாயென்று தொடங்கி] - க்ருபைபண்ணுதொழியிலும்ஒழி, க்ருபைபண்ணி நிரதிசயபோக்யமான திருவடிக்கீழே என்னை வைத்துக்கொள்ளிலும்

கொள். [மருளே என்று மேதுக்கு]-தென்திருநாவாயென்தேவே! அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை என்நெஞ்சிலே இருத்தும்தெளிவைத் தரவேணும்.

இ.—எட்டாம்பாட்டில், அப்படியே அபேக்ஷிதம் பெறுமையாலே, "அருளவுமாம், தவிரவுமாம்; அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை என்னெஞ்சிலே இருத்தும்படி தெளிவைத் தரவேணும்" என்கிறார். [அருளாதொழிவாய்] - இவன் செய்தபடி செய்கிறானென்று க்ருபைபண்ணாதேயிருக்கிலும்இரு; என் துர்க்கதியைக்கண்டு க்ருபைபண்ணி நிரதிசயபோக்யமான உன் திருவடிகளின் கீழே அநந்யகதியான என்னை வைத்துக்கொள்ளிலும் கொள். [மருள் இத்யாதி] - மயர்வறமதிநலமருளினபடியே அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை எப்போதும் என்மனஸ்ஸிலே வைத்துக்கொள்ளும்படி, "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்கிற தெளிவைத் தரவேணும். [தென்திருநாவாயென்தேவே] - "திருநாவாயிலே நின்றருளின நீயே ஆச்ரயணீயன்" என்னுமிடத்தை எனக்கறிவித்தவனே!

ஈடு.—எட்டாம்பாட்டு. அப்போதே யபேக்ஷிதம் பெறுமையாலே, "அருளவுமாம், தவிரவுமாம்; அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை என்னெஞ்சிலே யிருத்தும்படி தெளிவைத் தரவேணும்" என்கிறார்.

[அருளாதொழிவாய்] என்பக்கல் க்ருபைபண்ணாதே இவன் பட்டது படுகிறான் என்றிருக்கிலும் இரு. [அருள்செய்து] அன்றிக்கே, என் துர்க்கதியைக்கண்டு க்ருபைபண்ணி. [அடியேனை யித்யாதி] அஸத்கல்பனாயிருக்கிற என்னை "ஸந்தமேநம்" என்கிறபடியே ஒருவஸ்துவாம்படி பண்ணி, நிரதிசயபோக்யமான உன் திருவடிகளின் கீழே வைத்துக்கொள்ளிலும் கொள். பொருளானாரை வைத்துக்கொள்ளும் ஸ்தாநம் பொன்னடிக்கீழ்போலே காணும். [மருளேயின் றியித்யாதி] அடியில் மயர்வறமதிநலமருளினபடியே, அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை என் மனஸ்ஸிலே எப்போதும் வைத்துக்கொள்ளும்படி, "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்கிற தெளிவைத் தரவேணும்; [தென்திருநாவாயென்தேவே - தெருளேதரு] என்று க்ரியை; அன்றிக்கே, "மருளேயின்றி யுன்னை என்னெஞ்சத்திருத்தும் தெருளேதரு தென்திருநாவாய்என்தேவே! அருளாதொழிவாய், அருள்செய்து அடியேனைப் பொருளாக்கி யுன்பொன்னடிக்கீழ்ப்புகவைப்பாய்; திருவுள்ளமானபடிசெய்" என்றும் பின்னான் பணிப்பது.

தேவர்முனிவர்க்கு என்றுங்காண்டற்கரியன்,
மூவர்முதல்வன் ஒருமூவுலகாளி*
தேவன்விரும்பியுறையும் திருநாவாய்*
யாவருமுகப்பெறுவார் இனியந்தோ? (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், "ந தே மநுஷ்யா தேவாஸ்தே" என்றுசக்ரவர்த்தி சொன்னபோலே "திருநாவாய் காணப்பெறாதே நான் முடியாநின்றேன். இனிவேறு திருநாவாய் அநுபவிக்கும் பாக்யவான்களாரோ" என்கிறார். [தேவரென்று தொடங்கி] ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கும் துர்ஜ்ஞேயனும் ப்ரஹ்மாதிகளுக்கும் காரணபூதனுமான ஸர்வேச்வரனும் அத்யந்த விலக்ஷணனுமானவன் அத்யாதரத்தைப் பண்ணிக்கொண்டு நிரந்தரமாக வர்த்திக்கிற திருநாவாயை.

இ.—ஒன்பதாம்பாட்டில், தாம் இப்படிச் சொன்ன வநந்தரம் அவன்பக்கல் ஒருவாசி காணாமையாலே, "ந தே மநுஷ்யா தேவாஸ்தே" என்று சக்ரவர்த்தி சொன்னபோலே "திருநாவாய் காணப்பெறாமல் முடியாநின்றேன்; வேறு அவ்வூரை அநுபவிக்கும் பாக்யவான்களாரோ?" என்கிறார். [தேவரித்யாதி] - "ஸ்வயத்நத்தாலே காண்போம்" என்னும் ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கும் காணவரியனாயிருக்கும், [மூவர்முதல்வன்] - ப்ரஹ்மருத்ராதிகள் நடுவே வந்தவதரித்து அவர்களுக்கு நிர்வாஹகனானவன் என்னுதல், ப்ரஹ்மருத்ராதிகளுக்கு நிர்வாஹகன் என்னுதல். [ஒரு மூவுலகாளி] - மேலும்கீழும் நடுவுமான ஸர்வலோகத்துக்கும் அத்விதீயனான நிர்வாஹகன். [தேவன்] - ஸர்வாதிக

ஜாதீயன். [விரும்பியுறையும் திருநாவாய்] - இப்படி ஸர்வேச்வரனுமிருக்க, ஒரு குடியிருப்பில்லாதாரைப்போலே, "ஆச்ரிதரக்ஷணத்துக்குப் பாங்கான இடம்" என்று அத்யாதரம் பண்ணிவர்த்திக்கிற தேசத்தை. [யாவரணுகப்பெறுவாரினி] - நான் முடியாநின்றேன், இனி, இப்பேறு பெற இருக்கிறாரோ! "ந தே மநுஷ்யா:" என்கிறபடியே மனுஷ்யர்க்குக் கூட்டல்லர். [அந்தோ] - உடைமையான எனக்கு உள்ளது உடையவனுக்கின்றிக்கே ஒழிவதே!

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. இப்படிச் சொன்னவிடத்திலும் ஒருவிசேஷகடாக்ஷம் பண்ணாமையாலே, "நான் இவ்வாசையோடே முடியாநின்றேன்; என்னபிமதம் பெறப்புகுகிற பாக்யாதிகர் ஆரோ?" என்கிறார்.

[தேவர்முனிவர்க்கு என்றும்காண்டற்கரியன்] ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கும் ஸ்வயத்நத்தாலே என்றுமொக்கக் காணஅரியனாயுள்ளவன். [மூவர்முதல்வன்] ப்ரஹ்மருத்ரர்களநடுவே வந்து அவதரித்து, அவர்களுக்கு நிர்வாஹகனென்னுதல், ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களுக்கு நிர்வாஹகனென்னுதல். [ஒரு மூவுலகாளி] இந்த்ரமுகத்தாலே நின்று த்ரைலோக்யத்தையும் ரக்ஷிக்கும்படியைச் சொல்லுதல்; அன்றிக்கே, கீழும் மேலும் நடுவுமான ஸர்வலோகத்துக்கும் அத்விதீய நாயகன் என்னுதல். [தேவன்] ஸர்வவிஸஜாதீயன். [விரும்பியுறையும் திருநாவாய்] இப்படி ஸர்வநிர்வாஹகனானவன், தனக்கென்ன ஒருகுடியிருப்பு இல்லாதானொருவன் குடியிருப்புப் பெற்றாப்போலே, ஆச்ரிதரக்ஷணத்துக்குப் பாங்கான தேசம் என்று அத்யாதரம் பண்ணி வர்த்திக்கும் தேசத்தை. [யாவரணுகப் பெறுவார் இனி] நான் முடியாப்புகாநின்றேன்; இனிப் பெறவிருக்கிறார் ஆரோ! "ந தே மநுஷ்யா:" என்கிறபடியே, அவர்கள் மநுஷ்யர்களுக்குக் கூட்டல்லர். 'இனி' - என்கிற பதத்தாலே - நான் முடிந்தேன் என்கிறதை வெளியிடுகிறது. 'அந்தோ' என்கிறபதத்தாலே - எனக்குள்ளது, அவனுக்கு உண்டாகப்பெறுதொழிவதே. "ந தே மநுஷ்யா:" அவர்கள் செத்துப்பிறக்கிறவர்களுக்குக் கூட்டல்லர்கள். "தேவா:" அவர்கள் நித்யாநுபவம்பண்ணுகிறவர்களுக்குக் கூட்டாயிருந்தனர். "ய இத்யாதி" பதினாலாண்டும் ஒருபடி தப்பிக்கிடந்து அவர் மீண்டுவந்தால் அவ்வொப்பித்த முகத்தைக் காணப்பெறும் பாக்யாதிகர் ஆரோ? இங்கே, காதாசித்காநுபவம் பண்ணுமவர்கள், நித்யாநுபவம் பண்ணுமவர்களிலும் சீரியரே; 'விண்ணுளாரிலும்சீரியரே." "வர்ஷே பஞ்சதசே புந:" பதினாலாண்டும்கழித்துப் பதினைஞ்சாம் ஆண்டைக்கு இருப்பாரிதே காணப்பெறுவார்? காலம் முடிந்ததென்றிருக்கிறானிந்து சக்ரவர்த்தி.

அந்தோ! அணுகப்பெறுநாள் என்றுஎப்போதும் *
சிந்தைகலங்கித் திருமாலென்றழைப்பன் *
கொந்தார்மலர்ச்சோலைகள்சூழ் திருநாவாய் *
வந்தேயுறைகின்ற எம்மாமணிவண்ணா. (10)

ஓ.—பத்தாம்பாட்டில் உன்னை ஆசைப்பட்டுப் பெறுதொழிந்தாலும் விடமாட்டாதே சிந்தைகலங்கித் திருமாலே என்றழைப்பன்! என்கிறார். [அந்தோவென்று தொடங்கி]-ஐயோ! அணுகப்பெறும் நாள் என்றோ? என்று ஸர்வகாலமும் நெஞ்சும் கலங்கி ச்ரிய:பதியே! என்று கூப்பிடாநிற்பன். [கொந்தார் மலரென்று மேலுக்கு] - நிரதிசயபோக்யமான திருச்சோலைகளாலே சூழப்பட்ட திருநாவாயிலே ஆச்ரிதர்க்கு ஸுலபனும்வந்து வர்த்தித்தருளுவதுஞ்செய்து அதிச்லாக்யமான அழகையுடையவனே!

இ.—பத்தாம்பாட்டில், உன்னைப்பெறுதொழிந்தாலும் விடமாட்டாதே மநஸ்ஸுகலங்கிக் கூப்பிடாநிற்பன் என்கிறார். [அந்தோ இத்யாதி] - சொல்லத்தொடங்கினது தலைக்கட்டமாட்டாத பலஹாநியாலே

அந்தோ ! என்கிறார். "அணுகப்பெறுநாள் எவை" என்னவேண்டியிருக்க அதுமாட்டாதொழிகிறாரிறே. ஒருகால்சொல்லி பலஹானியாலே விடுகையன்றிக்கே, ஸர்வகாலமும் ஹ்ருதயம் கலங்கி மாதா பிதாக்களைச்சொல்லிக் கூப்பிடுமாபோலே திருமாலென்றழையாநிற்பன். "பிதா மாதாச மாதவ:". [கொந்தார்இத்யாதி] - கொத்துமிக்க மலரையுடைத்தான சோலைகளாலே சூழப்பட்டிருந்துள்ள திருநாவாயிலே. நித்ய வஸந்தமான சோலைகளை உடைத்தாகையாலே நிரதிசயபோக்யமான தேசமென்கை. [வந்தேயுறைகின்ற] - ஒருதேசத்திலேசென்றே காணக்கடவதான வடிவைக்கொண்டு ஆச்ரிதார்த்தமாகவந்து நித்யவாஸம் பண்ணுகிறவனே! அவ்வடிவை எனக்குக் காட்டாதவன்று, உன்வரவு அஸத்ஸமமன்றோ வென்கை.

௧௦.—பத்தாம்பாட்டு. உன்னைக் காணப்பெறுமை நெஞ்சழிந்து கூப்பிடாநின்றேன் என்கிறார்.

[அந்தோஅணுகப்பெறுநாள் என்றெப்போதும்] சொல்லத்தொடங்கினது தலைக்கட்ட மாட்டாத பலஹானியாலே, அந்தோ! என்கிறார். "அணுகப்பெறுநாள் எவைகொல்" என்னவிறே நினைப்பது. [எப்போதும்] ஒருகால் சொல்லப்புக்கு இளைத்துவிடுகையன்றிக்கே, ஸர்வகாலமும். [சிந்தைகலங்கித்யாதி] ஹ்ருதயம்கலங்கி; மாதாபிதாக்களைப்பேரைச்சொல்லி ஆர்த்தனான ப்ரஜை கூப்பிடுமாபோலே திருமால் என்றழைப்பன். [கொந்தார்இத்யாதி] கொத்து மிக்க மலரையுடைத்தான சோலையாலே சூழப்பட்ட திருநாவாயிலே. நித்யவஸந்தமான சோலைகளையுடைத்தாகையாலே நிரதிசயபோக்யமான தேசமென்கை. [வந்தேயுறைகின்ற] ஒரு தேசவிசேஷத்திலே சென்று காணக்கடவதான வடிவைக்கொண்டு ஆச்ரிதார்த்தமாக வந்து நித்யவாஸம் பண்ணுகிறவனே! அவ்வடிவு எனக்குக் காட்டாதவன்று உன்வரவு அஸத்ஸமமென்கை.

வண்ணமாமணிமாட நல்நாவாயுள்ளானை*
திண்ணம்மதிள் தென்குருகூர்ச்சடகோபன்*
பண்ணார்தமிழ் ஆயிரத்திப்பத்தும்வல்லார்*
மண்ணாண்டு மணங்கமழ்வர் மல்லிகையே. (11)

௧௧.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார் பெறும்பேற்றை யருளிச்செய்கிறார். [வண்ணமாமணிமாடமென்று தொடங்கி]. நானாவர்ணங்களான ரத்நங்களாலே செய்யப்பட்ட மாடங்களையுடைத்தாய் நிரதிசயபோக்யமான திருநாவாயிலே நின்றருளினவனை. [திண்ணம்மதிளென்று மேலுக்கு] - திண்ணிதான மதிளையுடைத்தான திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த பண் ஆர்ந்த தமிழான ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி வல்லார்கள், ஐஹிகாமுஷ்மிக ஸகல போகங்களையும் புஜிக்கப்பெறுவர்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார் ஐஹிகாமுஷ்மிக போகங்களையும் புஜிக்கப்பெறுவர் என்கிறார். [வண்ணம் இத்யாதி] - நானாவர்ணங்களான ரத்நங்களாலே செய்யப்பட்ட மாடங்களையுடைத்தாய் நிரதிசயபோக்யமான திருநாவாயிலே நின்றருளினவனை. [திண்ணம்மதிளித்யாதி] - திண்ணிதானமதிளையுடைத்தான திருநகரியையுடைய ஆழ்வாரருளிச்செய்த; திருநாவாய்க்கு ரக்ஷை திருநகரியிலேபோலே, ஆழ்வார்பரியவே அவ்வூர்க்கு ரக்ஷையென்னுதல். ஈச்வரனுக்குநாம் ஆழ்வாரானகையாலே நாம்கிடந்தவிடத்திலேயிறே மதிளிடுவதென்னுதல். [பண்ணார்தமிழ்] - பண்மிகுத்த தமிழ். [மண்ணாண்டு] - இஹலோகத்திலே ஐச்வர்யஸ்ரீயால் ஸம்பந்நராய். [மணங்கமழ்வர் மல்லிகையே] - மல்லிகை மணங்கமழ்வர் "ஸர்வகந்த:" என்கிற விஷயத்தோடே ஸாம்யாபன்னராவர். மல்லிகை மணமென்று - ஸர்வகந்தத்துக்கும் உபலக்ஷணம்.

ஸ௫.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார், ஐஹிகாமுஷ்மிகஸகலபோகங்களையும் புஜிக்கப் பெறுவர் என்கிறார்.

[வண்ணம்மணிமாடநன்னாவாயுள்ளானை] நாநாவர்ணங்களான ரத்நங்களாலே செய்யப்பட்ட மாடங்களையுடைத்தாய், நிரதிசயபோக்யமான திருநாவாயிலே நின்றருளினவனை. [திண்ணம் இத்யாதி] திண்ணிதான மதிளையுடைத்தான திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த. திருநாவாய்க்கு ரக்ஷை திருநகரியில் மதிள்போலே காணும். ஆழ்வார்பரிவே அப்பரிவுதானே அவ்வூருக்கு ரக்ஷையென்னுதல்; ஸர்வேச்வரனுக்கு தமது ஆழ்வாராகையாலே தகர்த்திடந்தவிடத்தேயேற மதிளிடுவதென்னுதல். [பண்ணார்தமிழ்] பண்மிகுந்த தமிழ். [மண்ணின்டு] இவ்வுலோகத்திலே வைஷ்ணவஸ்ரீயால் ஸம்பந்நராய், [மணங்கமழ்வர் மல்லிகையே] மல்லிகைமணங் கமழ்வர். இது உபலக்ஷணமாய், *ஸர்வகந்த:* என்கிற விஷயத்தோடு ஸாம்யாபத்தியைப் பெறுவர். இவருடைய மநோரதம் அவர்கள்பேற்றுக்கு உடலாம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஒன்பதாந்திருவாய்மொழி—மல்லிகைப்ப்ரவேசம்

ஒ.—ஒன்பதாம் திருவாய்மொழியில், அறுக்கும் வினையில் "எம்பெருமானைக் காணவேணும்" என்று மநோரதித்து மிகவும்பதறி அப்போதே காணப்பெறாதே வ்யஸநத்தாலே மிகவும் நோவுபட்ட ஆழ்வார், தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். திருவாய்ப்பாடியிற் பெண்பிள்ளைகள் க்ருஷ்ணனோடே கலந்து அவன் பசுமேய்க்கப் போகையாலே பகலெல்லாம் அவன்வரவு பார்த்திருக்க விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியின்றிக்கே எல்லாரையும் போகப்ராவண்யத்தாலே சப்லராக்காநின்றுள்ள ஸந்த்யைவர, க்ருஷ்ணனும் வாராதொழிந்தானென்று நிச்சிதமாயிருக்க, ஒரு க்ஷணம் காணப்பெறாமையாலே அநேககாலம் விச்லேஷித்தால் படும் வ்யஸநத்தைப்பட்டாளாக: அதுக்குமேலே மல்லிகையின் பரிமளத்தையுடைய தென்றல் தொடக்கமான ஸந்த்யாகாலத்தில் பதார்த்தங்களும் அக்காலத்திலுண்டான குழலோசைகளும் அவற்றோடேஸம்பந்தமான க்ருஷ்ணனுடைய குணசேஷ்டிதாதிகளும் துல்யமான நிலாவும் ஸமுத்ரகோஷம்தொடக்கமான பதார்த்தங்களெல்லாம் தனித்தனியும் திரளவும் நலிய மிகவும் நோவுபட்டு, கேட்டார்க்குத் தப்பரிதாம்படி ஆர்த்திமிகுதியாலே கூப்பிட்ட பாசுரத்தை ஒருத்தி சொல்லுகிறாள். ஸந்த்யையாவது - எம்பெருமான் தம்மை விஷயீகரிப்பதுக்குமுன்பு உண்டான அல்பகாலம்; அக்காலத்தில் பாதகபதார்த்தங்களாகிறன - தம்மை விஷயீகரிக்கைக்கு உதயோகிக்கிற எம்பெருமானுடைய சங்கசார்ங்காதி கோஷங்களும், பெரிய திருவடியுடைய திருச்சிறகொலியும் அவன்வரவுக்கு ஸூசகமான மந:ப்ரஸாதாதிகளான நிமித்தங்களும், இவை பாதகமாகைக்குக் காரணம் - இவை அவன்வரவுக்கு ஸூசகமாயிருக்கச்செய்தே அப்போதே அவனைக் காணாமை.

இ.—ஒன்பதாம் திருவாய்மொழியில், கீழ் அறுக்கும் வினையிலே, "அவனைக் காணவேணும்" என்று மநோரதித்து மிகவும் பதறி, அப்போதே காணப்பெறாத வ்யஸநத்தாலே மிகவும் நோவுபட்டவர், தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். திருவாய்ப்பாடியில் க்ருஷ்ணஸம்ச்லேஷம் பண்ணின பெண்கள் பகலெல்லாம் பசுமேய்க்கப் போகையாலே வரவுபார்த்திருக்க, விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற எல்லாரையும் போகப்ரவணராக்கும் ஸந்த்யைவர, க்ருஷ்ணன்வரவு நிச்சய

மாயிருக்கச்செய்தே முற்கொழுந்திற் காணப்பெறுமையாலே அநேககாலம் பிரிந்தார்படும் வ்யஸநத்தைப் பட, அதுக்குமேலே ஸந்த்யாகாலத்திற் பதார்த்தங்களான மல்லிகையின் பரிமளத்தை யுடைத்தான தென்றல் குழலோசை ஸமுத்ரகோஷம் முதலான பதார்த்தங்களானவை தனித்தனியும் திரளவும் நலிய மிகவும் நோவு பட்டுக் கேட்டார்க்குத் தரிப்பரிதாம்படி கூப்பிட்ட கூப்பீட்டை ஒருத்தி சொல்லுகிறளான பாசுரத்தாலே தம் தசையை அருளிச்செய்கிறார். "திருவாய்ப்பாடியிற் பெண்களெல்லாம் ஒருராத்ரியில் க்ருஷ்ண விரஹத்தாற் பட்ட நோவை, இவரொருவருமே படுகிறார்" என்று ஆளவந்தார் அருளிச்செய்வர். "முன்பே ஆற்றாமையாலே தற்பு அற்றிருக்கிறவராகையாலே, அத்தனை பாடல் கொடுக்கைக்கு ஆச்ரயமில்லை; ஒருஸந்த்யையில் அவர்கள்பட்ட நோவைப்படுகிறார்" என்று அருளிச்செய்வர் எம்பெருமானார். ஸந்த்யையாகிறது - ஜ்ஞாநம்பிறந்த பின்பு ப்ராப்யபூமியில் கிட்டப்பெறாதே நோவுபடுகிற நடுவிற் காலம். "தஸ்ய தாவதேவ சிரம், யாவந்ந விமோக்ஷ்யே" என்னக்கடவதிறே அக்காலத்தில் பாதகபதார்த்தங்களாகிறன - பகவல்லாப ஸூசகங்களான பதார்த்தங்கள். [மல்லிகை கமழ்தென்றல்] - இவை பாதகமாகைக்குக் காரணம் பகவல்லாப ஸூசகமாயிருக்கச்செய்தே அப்போதே லபிக்கப்பெறாமை.

ஈடு.—"படை வீட்டிலிருந்தால் மாம்ஸரோமாபிமானிகளுக்குக் கூசிப் பெருமாளுடன் நினைத்தபடி பரிமாறப்போகாது" என்று காட்டிலே ஏகாந்தமாக அநுபவிப்பதாக மநோரதித்துப்போந்த பிராட்டியை, *காந்தாரமத்யே விஜநே விஸ்ருஷ்டா பாலேவ கந்யா விலலாப ஸீதா* என்கிறபடியே கூப்பிடப்பண்ணினாப்போலே, அத்திருநகரியிலே புக்கு அநுபவிப்பதாக மநோரதித்த இவர்க்கு, பாதகவர்க்கத்துக்கு அஞ்சிக் கூப்பிடும்படியாய் விளைந்தது.

பெற்றி, ஒருநாள் நம்பிதிருவரங்கநாராயணதாஸர் என்பாரொருவர் என்பக்கலிலே திருவாய்மொழிகேட்டு அங்கே சென்றாராய், "இன்று பிள்ளைபாடு விசேஷமென்?" என்று கேட்டவாறே, "அதுக்கும் வினை சாற்றினோம்" என்றாராய் "நாளை மல்லிகை கமழ் தென்றலும் மாலைப்பூசலும் என்றாய்" என்று பணித்தாராம். "ப்ராப்யவஸ்துவைப் பெறும்படியை மநோரதித்தார் கீழில் திருவாய்மொழியிலே; மநோரதாநந்தரம் பெறக்காணாமையாலே, திருவாய்ப்பாடியிலுள்ளார் க்ருஷ்ணனைப்பிரிந்து ஒரு ராத்ரி பட்ட வ்யஸநத்தை இவரொருத்தரும் படுகிறார்" என்று ஆளவந்தார் அருளிச்செய்யும்படி' என்று திருமாலையாண்டான் பணிக்க அத்தை எம்பெருமானார் கேட்டருளி, "முன்பே ஆற்றாமையாலே தற்பு அற்றிருக்கிறவராகையாலே அத்தனை பாடல்கொடுக்கைக்கு வேண்டும் ஆச்ரயம் போராது; ஆனபின்பு, அவனைப் பிரிந்து ஒருஸந்த்யையிற்பட்ட நோவைப்படுகிறார்" என்றருளிச்செய்வர். இதுதன்னிற்செய்தததாகிறதென்? என்னில், ஜ்ஞானம் பிறந்த பின்பு விரோதியான ஸம்ஸாரத்தினின்றும் கால்வாங்கவும் மாட்டாதே, ப்ராப்ய பூமியில் மநோரதத்தாலும், பாதகவர்க்கத்துக்கு ஈரலாம்படி பதற்செய்ததாய்த்து. பொய்கை நின்ற ஞானத்தில், "பகவத்விஷயத்தில் ஜ்ஞானம் பிறந்தபோதே, விரோதியான ஸம்ஸாரத்தில் ஸம்பந்தத்தையறுத்துத் தந்தருளவேணும்" என்று அபேக்ஷிக்கச்செய்தேயும், "இவரைக்கொண்டு சில ப்ரபந்தங்கள் தலைக்கட்டவேணும்" என்றிருக்கையாலே, அப்போதே அப்படிச் செய்திலன்; அந்த விரோதியின் அருசி இவ்வளவும் வர நின்றபடி சொல்லுகிறதிறே. இங்குத்தான் செய்கிறது வேதாந்தங்களிற் போகிற கட்டளையில் என்னுமதென்னில்? - *தஸ்ய தாவதேவ சிரம்* என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறதிறே, *தஸ்ய தாவதேவசிரம், யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே* இறே. அநந்தரம். மூடியானையில் தம்முடைய கரணங்களுக்கு உண்டான கைதில்யத்தைச் சொன்னார்; இதில் - அந்த கரணங்களோடே கூட அவற்றுக்கும் ஆச்ரயமான ஆத்மவஸ்துதான் ஒன்றாக அழிகிறபடியைச் சொல்லுகிறது. ஜ்ஞாநேந்த்ரியங்களோடு கர்மேந்த்ரியங்களோடு வாசியற ஒன்றாக அழிகிறபடியைச் சொல்லுகிறது. ராமாவதாரத்தில் பதினாலாண்டுபோலே யாய்த்து, திருவாய்ப்பாடியிற் பெண்களுக்கு க்ருஷ்ணவிரஹத்தால் ஒரு ஸந்த்யை. குணவிஷயத்தைப் பிரிகையாலே அங்குப்பதினாலாண்டாய்க் கழியவுங்கூடுமிறே; இங்கு இவன் நீர்மையிலே கைவாடியுண்டிருக்கையாலே, ஒருபகல் அநேக கல்பமாய்த் தோற்றுமிறே. குணங்கள்தாம் காற்கட்டுகிறது குணமாயல்லவிறே; அவ்வாச்ரயத்திலே கிடந்தவையாயிறே. இங்கு தர்மி அதுவேயாய், அதுக்குமேலே நீர்மையாலும் பாடாற்றப் போகாதிறே.

நாட்டார் போக்குவதாபுத்திபண்ணியிருக்கிற சப்தாதிவிஷயங்களடையத் தமக்கு பாதகமாக, ப்ராப்யவஸ்துவைப் பெறாதே, நடுவே அன்புவியான ஸ்ரீபீஷ்மர் அர்ஜுனன்கையில் அம்புகளாலே உள்ள ஏவுண்டு கிடந்து அடித்தாப்போலே, கிடந்து அடிக்கிறார். திருவாய்ப்பாடியிலுள்ளார், க்ருஷ்ணன் "பசுமேய்க்க" என்று புறப்பட்டால், அவன் வருமளவும் அவர்கள் படும்பாடு சொல்லுகிறது. அதாவது-ப்ராஹ்மணர்க்கு ஸந்த்யாவந்தனம்போலேயிறே இடையர்க்குப் பசுமேய்க்கை ஜாத்யுசிததர்மம்; ஆகையாலே தவிரவொண்ணாதிருக்குமிறே. இப்படியாலே அவனைப்பசுக்களின்பின்னே புறப்படவிட்டு, அவன் வரும்ஸந்த்யையைப் பார்த்திருக்குமத்தனையாய்த்து. ஆக அவன் பசுமேய்க்கப்போனால் பகல்பொழுதை வருந்தி ஒருபடியாற்றினால், அவன்வருங்காலமான ஸந்த்யையும்வந்து முகங்காட்டிப் பசுக்களின் முற்கொழுந்து வந்து தலைவைக்கச்செய்தே அவன் தன்னை வரக்காணவிட்டால் ஆற்றப்போகாதிறே. அதாவது அவன்தான் முற்கொழுந்திலேவாராதே பிற்கொழுந்திலேசிற்றுமாய்த்து, நடுவுபடும் அலமாப்புக் காண்கைக்காக. அவன் வரக்கடவ காலமான ஸந்த்யையும் வந்தது; கூடவரும் பசுக்களும் வந்தன; அவன்தான் வரக்காணவிட்டவாறே, அக்காலத்தில், மல்லிகையின்பரிமளம், நல்ல குறிஞ்சியிசை தொடக்கமான அநுகூலபதார்த்தங்கள், தென்றல், நிலா, கடலோசை, அன்றில், குழலோசை முதலானவை பாதகமாகத் தொடங்கிற்று. குழலோசையும் அவ்வழியே அவனுடைய குணங்களை ஸ்மரிப்பித்து நோவுபடுகைக்கு உடலாயிருக்குமிறே. அப்படியிருக்கிற பாதக பதார்த்தங்களெல்லாம், முன்பு தனித்தனியே பருஷபாஷணங்களைப்பண்ணி நலிந்த ஏகாக்ஷி ஏககர்ணியுள்ளிட்ட ராக்ஷஸிகள் பின்பு அவ்வளவில் நில்லாதே எல்லாருமொக்க மேல்விழுந்து அதுக்குமேலே சிலசில நலிவுகளைப்பண்ண நினைத்தாப்போலே, பாதகவர்க்கமடைய, தனித்தனியும் திரளவும் மேல்விழுந்து நலிய; அவற்றாலே நலிவுபட்டவர்களெல்லாரும் கூப்பிட்ட கூப்பீட்டை இவரொருத்தருமே கூப்பிடுகிறார்.

மல்லிகைகமழ்தென்றலீருமாலோ! வண்குறிஞ்சியிசைதவழுமாலோ!*
செல்கதிர்மாலையும்மயக்குமாலோ! செக்கர்நன்மேகங்கள்சிதைக்குமாலோ!*
அல்லியந்தாமரைக்கண்ணனெம்மான் ஆயர்களேறரியேறெம்மாயோன்*
புல்லியமுலைகளுந்தோள்களுங்கொண்டு புகலிடமறிகிலம்தமியமாலோ. (1)

ஈ.—முதற்பாட்டில், ஸந்த்யாகாலத்தில் தென்றல் தொடக்கமான பதார்த்தங்கள் தனித்தனியே தனக்கு பாதகமாகிறபடியை அருளிச்செய்கிறார். [மல்லிகையென்று தொடங்கி] - வெறும்புறத்திலே பொறுக்கவொண்ணாத தென்றலானது நஞ்சூட்டினாப்போலே மல்லிகையின் பரிமளத்தோடே கூடவந்து ஈராநின்றது. அழகிய குறிஞ்சியோடேகூடின இசையானது துவளாநின்றது; அஸ்தமியாநின்றுள்ள ஆதித்யனையுடைய ஸந்த்யையும் வந்து மோஹிப்பியாநின்றது; சிவந்து அழகிய மேகங்கள் சேறித்துப் பொகடாநின்றன. 'ஆல்' என்றும், 'ஓ' என்றும் மிகவும் நோவுபட்டமைக்குத் தனித்தனி வாசகங்கள். [அல்லியந்தாமரைக்கண்ணனென்று மேலுக்கு] - இடைப்பெண்களைத் தன்னுடைய ஸௌந்தர்யாதிகளாலே தோற்பித்தாப்போலே தன்திருக்கண்களில் அழகைக்காட்டி என்னை அடிமைகொண்டு என்னோடே அத்யாச்சர்யமாம்படி பரிமாறி அத்தாலே மேனாணித்திருந்தவனாலே புல்கப்பட்ட முலைகளையும் தோள்களையும் கொண்டு தென்றல் முதலான பதார்த்தங்கள் நலியாதபடி புகுக்கைக்கிடம் காண்கிறிலோம்; இத்தசையில் இதுக்கு ரக்ஷகரானவனும் வாராதே தனிமைப்படாநின்றோம்.

இ.—முதற்பாட்டில், ஸந்த்யாகாலத்தில் தென்றல்தொடக்கமான பதார்த்தங்கள் தனித்தனியே தனக்கு பாதகமாகிறபடியைச் சொல்லுகிறாள். [மல்லிகை கமழ்தென்றல்] - இவள் ஆர்கேட்கக் கூப்பிடுகிறாள்! வெறும்புறத்திலே நலியவற்றான தென்றல் மல்லிகையினுடைய பரிமளத்தை ஈறட்டுக்கொண்டு வாராநின்றது. வதபரிகரமான பத்ரத்திலே நஞ்சு ஊட்டினாப்போலேயாய்த்து தென்றல் பரிமளத்தைக்கொண்டு வருகிறபடி. க்ராணேந்த்ரியமுகத்தாலும் நலியாநின்றது. கண்ணுக்கு விஷயமாகிறுக்கவொண்ணாதபடி இராப்படை போறுவாரைப்போலே உடம்பிலேபடக் காண்கிறவித்தனை. இத்

தென்றலுக்கு, கண்டவிடமெங்கும் வாயாயிரா நின்றது. [ஈருமாலோ] - பண்ணிட பரிவாலே சென்றற்றி ருக்கிற உடம்பைப் பலகை பலகையாக ஈராநின்றது. "பத்மஸௌகந்திகம் வஹம் சிவம் சோகவிநாசநம், தந்யா லக்ஷ்மண ஸேவந்தே பம்போபவநமாருதம்". இருவராயிருப்பார் காற்றைத் தேடிப் படுக்கை படாநிற்க இவனொருத்திக்கு வாய்த்து பாதகமாயிருக்கிறது: "யாஸ்ம ராமவிநாபூதா தயாஸஹோபவர்த்திமே | தாம் யேவாராமவிநாபூதா ஜீவதோமே தயாவிநா" [வண்குறிஞ்சி யிசைதவருமாலோ] - அழகிய குறிஞ்சி யிசையானது தூதுபுகின்றது. காற்றிற்கு பொகட்டபுண்ணின்மேலே துளைத்துப் பொகடாநின்றது. தென்றல் புறம்பே நலிகிறதித்தனை; இசை, செவி வழியே உள்ளேபுக்கு நலியாநின்றது. இசைக் கெவ்வளவு செவிப்பாடுண்டு, அவ்வளவு பாதகமாயிற்றனையிறே. அவன் கூடவிருந்தபோது எவ்வளவு போக்யமாயிருக்கும்; வ்யதிரேகத்தில் அவ்வளவும் நலியுமிறே. குறிஞ்சியும் தென்றலும் க்ருதஸங்கேதிகளாய் வந்து ஒன்று அதிகரித்த கார்யத்தின் சேஷத்தை ஒன்றுசெய்யாநின்றது; 'உயிர்கொலை புரகவொண்ணாது; உயிர்க்கொலையாகவேணும், நீ இவ்வளவுசெய், நான் இவ்வளவு செய்கிறேன்' என்பாரைப்போலே. [செல்கதிர்மாலையும் மயக்குமாலோ] - செல்லப்பட்டிருந்துள்ள கதிரையுடைத்தான மாலையானது மயக்கப் பண்ணுகின்றது. அஸ்தமியாநின்றுள்ள ஆதித்யனை யுடைய ஸந்த்யையானது மோஹிப்பியாநின்றது. புடைவையை வாயிலேகொடுத்து கலிவாரைப்போலே ஓடுகிற வ்யஸநத்துக்குப் போக்குவிட்டுக் கூப்பிடவொண்ணாதபடி உணர்த்தியழியும்படி மோஹிப்பியா நின்றது. [செக்கர் நன்மேகங்கள் சிதைக்குமாலோ] சிவந்தழகிதான மேகங்கள்சேதித்துப்பொகடாநின்றது. அவனுடைய ஸந்த்யாராகத்தையும் ச்யாமமான நிறத்தையுமுடைய மேகங்கள் அவயவசோபைக்கும் நிறத்துக்கும் போலியாய் நலியாநின்றன. கீழ்ச்சொன்ன பாதகபதார்த்தங்கள் ஆச்ரயங்கிடக்கவோ நலிவது என்று சரீரத்தைச்செற்றுப் பொகடாநின்றன. [அல்லி இந்தாதி] - இவற்றை இன்னதாகிறதென்? அவன் தான் முன்னே நம்முடிகைக்கன்றோ கலந்து போகின்றது? எல்லாம் பாதகமாம்படி முன்னே புகலுந்தான் அவனன்றோ ! [அல்லியந் தாமரைக்கண்ணன்]-அல்லியையுடைத்தாய் அழகிதான தாமரைபோலேயிருக்க திருக்கண்களையுடையவன்; முதலுறவுபண்ணுவது கண்ணாலேயிறே, த்ருஷ்டிபந்தம் பிறந்தாலிறே ஸம்ச்லேஷ முண்டாவது. எம்மான்] - அவ்வழகாலே என்னை அநந்யார்ஹையாக்கினவன். [ஆயர்களேறு] -ரிஷபங் களைத் தோற்பித்தாப்போலே தன்னோடு ஒத்த ஆண்களைத் தோற்பிக்குமவன், பெண் பிறந்தாரை நோவுபடுத்தச் சொல்லவேண்டாவிறே. "பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்கிறபடியே வயிரவுருக்காயிற்ற அழகு இருப்பது [அரியேறு] என்னை அநந்யார்ஹையாக்கி என்னோடேகலந்து அத்தாலே பெறும்பேறு பெற்றானாய் மேனாணிப்புத் தோற்றாயிருக்கிறபடி. ஸிம்ஹச்ரேஷ்டம். [எம்மாயோன்] - ஸம்ச்லேஷதசையில் காலைக்கையைப்பிடித்துத் தாழநின்று பரிமாறினவன். போகின்றவ நந்தரம் தரிப்பு அரிதாம்படியாய்த்துப் பரிமாறிற்று. [புல்லிய முலைகளும் தோளும்கொண்டு] - அவன் வந்து ஸம்ச்லேஷிக்கிறபோது ஸர்வாங்க ஸம்ச்லேஷத்துக்கு ஸமனந்திக்கேயொழிந்தாளாய்த்து; அநுபவிக்கவிழிந்ததுமுறையும் இனிப்பாநினைவிடமுமிருக்கிறபடி. புல்லியவென்று, கலக்கிறபோது அவனுக்கு முலைகளிலும் தோள்களிலும் உண்டான அலமாப்பைச்சொல்லிற்று. [புகலிடமறிகிலம்] - வ்யதிரேகத்தில் தென்றல்முதலான பதார்த்தங்களைத் தப்பிச்சென்று புகுகைக்கிடம் காண்கிறிலோம். "க்ஷாமகாலத்தில் பஹுப்ரஜரானதப்பார், தங்கள்பசிகிடக்க ப்ரஜைகள் அலைப்புக்கு அஞ்சு புகலிட மறியாதாப்போலே, நான் ஜீவித்தபடி ஜீவிக்கிறேன்; இவற்றைக்கொண்டு புகுமிடங்காண்கிறிலேன்" என்கிறாள் [தமியமாலோ] - இத்தசையில் ரக்ஷகனானவனும் வாராமையாலே தனியமைப்படாநின்றோம். ஆச்வாஸகமான தென்றல் முதலான பதார்த்தங்கள் பாதகமாகாநின்றால், அர்ஜ்ஜுநனை நோக்கி பகதத் தன் விட்டசக்தியை மார்விலே ஏற்றாப்போலே இத்தசைக்கு உதவவேண்டாவோ ? "ராமஸ் ஸௌமித்ரி ஸஹிதோ விஜ்வர:" என்று தந்தனிமையில் தம்பியாரையிலும் உண்டாய்த்து; அதுவுமில்லை இங்கு.

௯௫.—முதற்பாட்டு. ஸந்த்யாகாலத்தில் தென்றல் தொடக்கமான பதார்த்தங்கள் தனித் தனியே தனக்கு பாதகமாகிறபடியைச் சொல்லுகிறாள்.

[மல்லிகை] "மல்லிகை" என்று தொடங்கி "செக்கர் நன்மேகங்கள் சிதைக்குமாலோ?" என்னுமளவும் இவள் ஆர்கேட்கக் கூப்பிடுகின்றாள்? [மல்லிகைகமழ் தென்றல்] வெறும்

புறத்திலேயலைவற்றின தென்றல், அதுக்குமேலே மல்லிகையின் பரிமளத்தை ஏறட்டுக்கொண்டு வாராநின்றது. வதபரிகரமான பத்ரத்திலே நஞ்சு ஊட்டினாப்போலே யாய்த்து, தென்றல் பரிமளத்தைக்கொண்டுவருகிறபடி. அவன் கூடவிருந்தபோது அநுகூலமான பதார்த்தங்களடைய இப்போது பாதகமாயிருக்கிறபடியிறே. ***யாநிஸ்ம ரமணீயாநி தயா ஸஹ பவந்தி மே, தாந்யேவாரமணீயாநி ஜீவதோ மே தயா விநா* *ஏஷ புஷ்பவஹோ வாயு: ஸுகஸ்பர்சோ ஹிமாவஹ:, தாம் விசிந்தய* :காந்தாம் பாவகப்ரதிமோ மம* ஸதா ஸுக மஹம் மந்யே யம் புரா ஸஹ ஸீதயா. மாருதஸ்ஸ விநா ஸீதாம் சோகஸஞ்ஜநநோ மம* *தஸ்ய லக்ஷ்மண ஸம்ஸக்தே பம்போபவநமாருதம்** என்று கூப்பிடுவானவனிறே; (இருவராயிருப்பார் காற்றைத் தேடிப் படுக்கைபடாநிற்க,) "இக்காலமிவ்வூர்ப் பனிப்பெயலெல்லாம் தவிர்ந்தெரிசுடும்" என்னுமாபோலே இவரொருவர்க்குமேயாய்த்து பாதகமாகிறது. [மல்லிகைகமழ் தென்றல்] க்ராணேந்த்ரியத்துக்கும் பாதகமாய், ஸ்பர்சேந்த்ரியத்தையும் அழியாநின்றது. இராப்பாடேறுவாரைப் போலே உடம்பிலே படக்காணுமித்தனைபோக்கி, கண்ணுக்குத் தோற்றுதாய்த்து; கண்டு தப்பவொண்ணாது. இத்தென்றலுக்குக் கண்டவிடமெங்கும் வாயாயிராநின்றது. [ஈருமாலோ] பண்டே பிரிவாலே சென்றற்றிருக்கிற உடம்பை, பலகை பலகையாக ஈராநின்றது. [வண்குறிஞ்சியிசை தவழுமாலோ] அழகிய குறிஞ்சியிசையானது அலையாநின்றது. காற்று ஈர்த்துப்போகட்ட புண்ணின்மேலே அலைத்துப் போகடாநின்றது. தென்றல் புறம்பே ஈர்கிறவிடத்தை; இசை செவிவழியே உள்ளே புகுந்து நலியாநின்றது. [வண்குறிஞ்சி] இசைக்கு எவ்வளவு செவிப்பாடுண்டு, அவ்வளவும் பாதகமாயித்தனையிறே. அவன் கூடவிருந்தபோது எவ்வளவு போக்யமாயிருக்கும், வ்யதிரேகத்தில் அவ்வளவும் நலியுமிறே. குறிஞ்சியும் தென்றலும் கூடி க்ருதஸங்கேதிகளாய் வந்து, ஒன்று அதிகரித்த கார்யத்தின்சேஷத்தை ஒன்று செய்யாநின்றது. "கற்கொலையாகக் கொல்லவொண்ணாது, உயிர்க்கொலையாகக் கொல்லவேணும்: அதில் நீ இவ்வளவு செய், நான் இவ்வளவு செய்கிறேன்" என்று க்ருதஸங்கேதராய் வந்தாரைப்போலேயாய்த்திருக்கிறது. [செல்கதிர் இத்யாதி] செல்லப்பட்டிருக்குள்ள கதிரையுடைத்தான மாலையானது, மயங்கப் பண்ணுகின்றது. அஸ்தமயாநின்றுள்ள ஆதித்யனையுடைய ஸந்த்யையானது, மோஹிப்பியாநின்றது. வாயிலே சிரையைத் துறுத்துக் கொல்லுவாரைப்போலே, ஆற்றாமைக்குப் போக்குவிட்டுக் கூப்பிட்டு தரிக்கவொட்டுகிறதில்லை. [செக்கர் நன்மேகங்கள் சிதைக்குமாலோ] ஸந்த்யாராகத்தையும் ச்யாமமான நிறத்தையுமுடைத்தான மேகங்கள் அவனுடைய அவயவசோபைக்கும் வடிவுக்கும் ஸ்மாரகமாய், "இவை என்னம்பு செய்தது" என்று அவற்றைக் கர்வித்துக்கொண்டு, "ஆச்ரயங்கெடக்கவோ நலிவது?" என்று வயிரத்தைச் செற்றுகின்றது. [அல்லியந்தாமரைக்கண்ணனித்யாதி] நாம் இவற்றை யென்னுதானென்? அவன் தான் முன்னே நம்மை முடிக்கக் கார்யம் பார்த்து வைத்திலனோ? "கலந்து பிரியவே இவள் முடியும்" என்றன்றோ அவன் பிரிந்தது? இவையாகில் போக்குவிட்டடித்தனையிறே; புகலறுத்தான் அவனிறே. [அல்லியித்யாதி] (அல்லியையுடைத்தாய் அழகிய தாமரைபோலேயிருந்த திருக்கண்களையுடையவன்) முதலுறவு பண்ணுவது கண்ணாலேயிறே; த்ருஷ்டி பந்தம் பிறந்திறே ஸம்ச்லேஷிப்பது. [எம்மான்] அக்கண்ணழகாலே என்னை அநந்யார்ஹையாக்கினவன். [ஆயர்களேறு] அவ்வழகாலே இடையரைத்தோற்பித்தாப்போலே. *புல்லாம்* வயிரவுருக்காய்த்து அவனுடைய ஸௌந்தர்யம். தன்னோடொத்தாரை அப்படி நலியாநின்றால் அபலைகளை நலியச் சொல்ல வேண்டாவிறே. [அரியேறு] கண்ணாலே குளிர நோக்கி இவளை அநந்யபரையாக்கி, இவளோடே ஸம்ச்லேஷித்து, அத்தாலே தான் பெறும்பேறு பெற்றானாய் மேனாணிப்புத் தோற்ற நின்றபடி, ஸிம்ஹச்ரேஷ்டம். [எம்மாயோன்] அம்மேன்மையையுடையவன், தாழ்ந்தார் சிலர் உயர்ந்தவர்களோடே கலக்குமாபோலே, கைகயக்காலைப் பிடித்துத் தாழநின்று பரிமாறினபடி. கலக்கிறபோது மின்மினி பறக்கும்படி காணும் கலந்தது. [புல்லிய முலைகளும் தோளுங்கொண்டு] அவனும் வாராதிருக்கிறான்; நானும் வருந்தி ஒருபடி ஜீவித்துக் கிடக்கிறேன்; அவனுக்குப்பிறந்த ப்ரஜைகளைக்கொண்டு புகலிடம் அறிகிலேன். [நான் செய்த படிசெய்ய, இம்முலைகளின் வீக்கம் தீர அநுபவிக்கப் பெறுவது எப்போதோ? க்ஷாமகாலத்தில் ப்ரஜைகள் "சோறு சோறு" என்னுமாபோலே படுத்தாநின்றன. அவன் தானும் கலக்கிற

போது ஸர்வாங்க ஸம்ச்லேஷ க்ஷமனன்று போலே காணும். அவனிருப்பிடத்து அவையும், இனிப் பாரினவிடமும், புல்லியவித்யாதி] கலக்கிறபோது அவனுடைய அமைப்பையும் தம்முடைய கரணங்களுக்கு உண்டான ப்ராவண்யாதிசயத்தையும் அவன் பெரும்பேறு பெற்றுப் பின்று பரிமாறினபடியையும் தமக்கொரு புகலற்றிருக்கிறபடியையும் சொல்லுகிறது. [புகலிடமறிகிலம்] அப்ரதேசத்தில் தென்றல் முதலான பதார்த்தங்களைத் தப்பிச் சென்று புகுகைக்கு இடம் காண்கிறிலோம். [தமியமாலோ] இத்தசையில் ரக்ஷகனானவனும் வாராமையாலே தனிமைப்பட்டாயின்றோம். இப்படி தன் விபூதியாக பாதகமானால், பகதத்தன் விட்ட அஸ்த்ரத்துக்கு அர்ஜுனனைத் தள்ளித் தான் மார்வையேற்றாப்போலே, "இவை வரும் என்று" அறிந்தால் தான் கூடவிருக்க வேண்டாவோ? அவன் கூடவிருந்தானாகில் இவை தாம் இறி தொழில் செய்யத் தொடங்குமிறே. *ராமஸ் ஸௌமித்ரிஸஹித:* என்று அவர் தாம் நோவுபட்டுக் கூப்பிடுகிறபோது ஒரு தம்பியாராகிலும் கூடவுண்டு நோவுபடுகைக்கு; அங்ஙனும் ஒரு துணையில்லை எனக்கு. *ஸ:* பிராட்டியைப் பிரிந்து நடுவே கபந்தன் கையிலே அகப்பட்டு நோவுபட்டு நிற்கிற நிலையைச் சொல்லுகிறது. *தாம்* இப்பிரிவும் ஆற்றாமையுமில்லாதாரையும் அழிக்கவற்றாய்த்து. *புஷ்கரிணீம்* பரப்புமாறப்பூத்த பொய்கைகளும் சோலைகளுமாய், நிலத்தடைக்கு யோக்யமான தேசமாய்த்து. பிரிந்து தனியிருப்பார்க்குக் கண்கொண்டு காணப்போகாது. *தத்ர* இவன் நிற்கிற இடத்தேயிருக்கச்செய்தே, ம்ருத்யுவினுடைய ஆலயத்திலே புகுவாரைப் போலே வந்து கிட்டிக்கொடு நின்றன். ம்ருத்யுவாகிற புடைதான் ஏதென்றால்? *பத்மோத்பல ஜஷாகுலாம்* முகத்துக்கும் கண்ணுக்கும் போலியானவற்றையுடைத்தாயிருந்தது. "உயர் தாமரைசெங்கழுநீர் மாதர்கள் வாண்முகமும் கண்ணுமேந்தும்" என்னக்கடவதிறே. *ராம:* பிரா கூப்பிடு தவிர்த்தும் போந்தவராய்த்து *ஸௌமித்ரிஸஹித:* *ரக்ஷ தர்மேண* என்று ஏத்தனு மனவிலும் கூடநின்று நோக்கிக் கொண்டு போந்தவரும் மூன்றாக; அறிபுமவன் தெப்பம் மூன்றாக இறிபுமாப்போலே. *விலலாபாதுர்ஸௌக்ரிய:* அநேக லக்ஷணங்களோடேயாய்த்துக் கூப்பிட்டது. ப்ராப்யவஸ்துவைப் பெறவேணுமென்னும் மநோரதமாய், கீழ் இவருடைய மநோரதத்துக்கிடாக வந்து கிட்டும்படி அவனும் வாராதே நிற்க, அவனுடைய வரவுக்கிடான நூற்ப கோஷம், ஸ்ரீபாஞ்சஜந்யத்வனி, ஜ்யாகோஷம், திருவடி திருச்சிறகோசை, மற்றுமுண்டான நன்னிமித்தங்கள், மங்களப்ரஸாதாதிகள் என்றாப்போலே சொல்லுகிறவை ஒன்றும் காணாமையாலே, அநுகூலபதார்த்தங்கள் பாதகமாகிறது. கரணங்களும் சரீரமுமாய் க்லேசப்படுகையாகிறவித்து, விரோதியான ஸம்ஸாரத்தினின்றும் கால் வாங்கவும் மாட்டாதே, இங்குப் பொருந்தவுஞ் செய்யாதே, கண்டதடைய பகையாயிருக்கிறபடி. ஆக, இங்குப் பொருந்தாதே அங்குப் புகப் பெறாதே நடுவே நின்று க்லேசப்படுகிற அவஸ்தையை ஸ்த்ரீயாகிறது என்று இங்ஙனே ஒருதாத்பர்யஞ் சொல்லக் கடவதாயிருக்கும்.

புகலிடமறிகிலம்தமியமாலோ! புலம்புறுமணிதென்றலாம்பலாலோ!*
பகலடுமாலைவண்சாந்தமாலோ! பஞ்சமம்முல்லைதண்வாடையாலோ!*
அகலிடம்படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்து எங்குமளிக்கின்றஆயன் மாயோன்*
இகலிடத்தசுரர்கள்கூற்றம்வாரான் இனியிருந்தென்னுயிர்காக்குமாறென்? (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், பாதகபதார்த்தங்கள் தனித்தனியே நலிந்து அவை பலஹானி மிகமிகப் பல கூடிவந்து நலியாநின்றன என்கிறாள். [புலம்பென்று தொடங்கி] - சேக்கள் கழுத்தில் சப்திக்கிற மணி, தென்றல், குழல் இவையெல்லாம் அவற்றுக்கு ஸ்யாயகமாய்க்கொண்டு நலியாநின்றன. ஆச வாஸகரமான பகலைப்போக்கின ஸந்த்யை, அழகிய சந்தனம், பஞ்சமம், முல்லையென்கிறயாழ், குளிர்ந்த வாடை இவையெல்லாம் நலியாநின்றன. இப்பதார்த்தங்களுடைய தர்சநத்தாற்பிறந்த பீடையாலே அவற்றுலேவந்த நலிவு சொல்லமாட்டாதே பதார்த்தத்தைச் சொல்லுகிறாள். [அகலிடம் படைத்தென்று

மேலுக்கு] - ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணி இருந்ததேகுடியாக ரக்ஷித்து அவ்வளவன்றிக்கே அவற்றின் பக்கலிலே மிகவும் வ்யாமுக்தருமாய் ஆச்ரித விரோதிகளாய்க்கொண்டு யுத்தபூமியிலே எதிரிட்ட அஸு ரர்க்கும் ம்ருத்யுவானவன். அப்படியே இக்காலத்தில் நலிகிறவற்றை நீக்கிக்கொண்டு வந்து தோற்று கிறிலன்; இப்படி ஆபத்ஸகனானவன் வாராதிருக்க இவற்றின் ஸந்நிதியிலேயிருந்து என் ப்ராணனை நோக்குகைக்கு என்று ஒரு பொருளுண்டோ ?

இ.—இரண்டாம்பாட்டில், பாதக பதார்த்தங்கள் தனித்தனியே நலிந்தவை பலவுமாய்மிகப் பல கூடிவந்து நலியாநின்றன என்கிறாள். [புகலிடமறிகிலம்] - மேல்வரப்புகுகிற பாதகவர்க்கத்தை நினைத்துச்சொல்லுகிற வார்த்தையாதல்; கீழ்நலிந்தவற்றுக்கஞ்சி அவ்வச்சம் பின்னாட்டுகிற அநுபாஷணமாதல். [தமியமாலோ] - புகலற்றார்க்குத் துணையாமவன் இவ்வளவில் உதவாமையாலே தனிமைப்படாநின்றோம். [புலம்புறுமணி] - நாகுகளைத் தொடருகிற சேக்களின் கழுத்தின் மணி. அந்நாகுகள் கிட்டாமையாலே கூப்பிடுகிறாப்போலேயாய்த்து த்வநிக்கிறபடி. அது தனக்கு ஸ்மாரகமாய் நலியாநின்றது. [தென்றல்] - "மல்லிகை கமழ்தென்றல்" என்று துணைகொண்டு வருகையன்றிக்கே வெறும்புறத்திலே வந்து நலியாநின்றது. "ஆளைமதித்து உடம்புக்கிட்டு வருவது ?" என்று வெறும் புறத்திலே வந்து நலியாநின்றது. [ஆம்பல்] - இலைக்குழலாதல், ஆய்க்குழலாதல். [ஆலோ] - "குமரேர், தவகுமாலோ" என்று நலிகிறபடி சொல்லவெண்ணாதபடி. "புலி" என்பாரைப்போலே இவற்றின் பேர்சொல்ல அஞ்சவேண்டும்படியைச் சொல்லுதல்: இவற்றால்படுகிறநலிவு பேச்சுக்கு நிலமல்லாதபடியாலே சொல்லாதொழிதல். [பகலடு மாலை] - பதார்த்ததர்சநம்பண்ணி தரிக்கலாம் பகலையும் முடித்துக்கொண்டு மாலையானது தோற்றுகின்றது; பிராட்டிதனிமையில் "ஐயோ" என்னும் பகலையும் முடித்துக்கொண்டு ராவணன் நலிந்தாப்போலே [வண்சாந்தம்] - அழகிய சாந்தும். பெரியவுடையாரை முடித்துக்கொண்டு ராவணன் நலிந்தாப்போலே [பஞ்சமம்] - பஞ்சமமாகிற பண். முல்லை-முல்லையாழென்கிற பண்ணுதல்; இடையருக்குத் தார் முல்லைபாலைபோலே அத்தைச்சொல்லுதல். [தண்வாடையாலோ] - தென்றற்காலமும் வாடைக்காலமும் தன்னிலே தூரமாயிருக்க இப்படி சொல்லுகிறது, பிரிவோடே காலம் நெடுகிச் சென்றபடியென்னுதல்; தென்றலுக்கஞ்சி வாடையின்கீழே ஒதுங்கவந்து நிற்கிறவிடத்திலே வாடைநலிகிறபடியைச் சொல்லுதல்; அகர்த்தல் ஏகமாக எல்லாக்காற்றும் ஒருகாலே அடித்தது என்னுதல். [அகலிடம் இத்யாதி]- பரப்பையுடைத்தான பூமி உருவாய்த்தீயேச ஸுத்ததுவண்டாக்கி - ப்ரளயாபத்திலே அகப்பட்ட பூமியை இடந்தெடுத்து, ப்ரளயத்தில் அகப்படாமல் வயிற்றிலேவைத்து நோக்கி, வெளிநாடுகாண உமிழ்ந்து, ப்ரபலர் அபகரித்த வளவிலே எல்லைநடந்து மீட்டுக்கொண்டு இப்படிவரையாதே ரக்ஷிக்கையே ஸ்வபாவமாயிருக்குமவன். இருந்ததே குடியாக ரக்ஷிக்குமவன்கிளர் மஹிஷீநோவுபட உதவாதிருக் கிறான்! [மாயன்] - [ஆயன்] - "க்ருஷ்ணாச்ரயா க்ருஷ்ணபலா க்ருஷ்ணநாதாச்ச பாண்டவா:" என்கிறபடியே ஸகலகாரணபூதன். ரக்ஷணார்த்தமான ஆச்சர்ய சக்தியுக்தன். [இகலிடத்தசுரர்கள் கூற்றம்] - யுத்தபூமியிலே எதிரிட்ட அஸுரர்க்காய்த்து ம்ருத்யுவாவது; "சரணம்" என்ற அஸுரர்க்கு ம்ருத்யுவானவன். எதிரம்புகோத்த அஸுரர்க்கு ரக்ஷகனுமித்தனை: ப்ரஹ்லாத விபீஷணாதிகளை ரக்ஷித்தானிறே. [வாரான்] - என்னைநலிகிற பதார்த்தங்களை சிக்ஷித்துக்கொண்டு வருகிறிலன். [இனியித்யாதி] - வரையாதே ரக்ஷிக்குமவனுமாய், ப்ராப்தனுமாய் விரோதிநிரஸநஸ்வபாவனுமானவன் வாராதிருக்க, ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத எனக்கு ஆறியிருக்கப்போமோ ? [இனியிருந்து] - "நமாம்ஸம் ராகவோ புங்க்தே நசாபி மது ஸேவதே," என்கிறபடியே அத்தலையில் ஆற்றாமையும், "வாலி ஸங்க்யம் ஸாவிஹிதம் நித்யம் பக்தமச்நாதி பஞ்சமம்" என்றுப்போலே ரக்ஷணத்தில் உத்யோகத்தையும் திருவடி சொல்லக் கேட்டான், படைகூட்டிற்று" என்றுப்போலே ரக்ஷணத்தில் உத்யோகத்தையும் சிலர்வந்து சொல்லக் கேட்டுத் தான் ஆறியிருக்கிறேனோ ? [இனியிருந்து] - "அவனுடைய சரக்கு" என்று ஆத்மாவையும் கைநோக்கிக் கொண்டிருந்தேன்; இவற்றின் ஸந்நிதியில், அவன் வாராதொழிந்தபின்பு முடியுமத்தனை போக்கி, இருக்க க்ஷமையல்லேன். [என்னுயிர்] காக்குமாறென்] - பிறருயிராகில் காக்கலாமிறே; ஸம்ச்லேஷார்த்தமாகப் பரித்துக்கொண்டிருக்குமதொழிய ப்ராணனை நோக்கிக்கொண்டிருக்கப்போமோ ?

ஈடு.—இரண்டாம் பாட்டு. முன்பு தாசிலேதினைபேர்க்கு உரமாக நின்ற பேரணி உருபு சுமானவாறே இளைபறுக்குமாப்போலே, தனித்தனியே நலிந்த பாதகங்கள் பலவுமாய் மிக மிகப் பல்கூடிவந்து நலியாநின்றதென்கிறாள்.

[புகலிடமறிகிலம்] மேல்வருகிற பாதக பதார்த்தங்களைக் குறித்துச் சொல்லிற்றாகவுமாம்; அன்றிக்கே, கீழ்ச்சொன்னவைதனக்கே யுக்தி அநுபாஷிக்கிறதாகவுமாம். [தமியமாலோ] புகலிடமற்றார்க்குத் துணையாமவன் உதவாதொழியத் தனியிருக்கிறவிருப்பிறே. (தமியம் - தனிப்பட்டோம்.) [புலம்புறு மணி] நாகுகளைத் தொடர்கிற சேக்கள் கழுத்தில் மணியினுடைய த்வனி, அந்நாகுகள் கைபுகுராமையாலே கூப்பிடுகிறாப்போலேயிராநின்றது. [தென்றல்] வெறும்புறத்திலே தென்றலென்னவுமாம், "மல்லிகை கமழ்தென்றல்" என்னவேண்டா; வினை முடிந்தும் பின்னை யுடம்பு கிடாதே ஈருவாரைப்போலே "ஆரெதிராக உடம்புக்கு ஈடுகிறது?" என்கிறாநின்றது. [ஆம்பலாலோ] குழலென்னுதல், இலைக்குழலென்னுதல். இவையெல்லாம், "கருமாலோ, தவருமாலோ, மயக்குமாலோ சிதைக்குமாலோ" என்றாப்போலே சொல்லவேண்டா; "புலி, புலி" என்பாரைப்போலே இவற்றின் பேரைச் சொல்ல, பயங்கரமாயிருக்கிறது. அன்றிக்கே இவற்றினுடையவளிவு வாயால்சொல்லில் வாய் வக்குரிக்கும்படியாயிருக்கையாலே சொல்லாதொழிந்ததாதல். [பகலடுமாலை] - பிராட்டியுடைய வ்யஸனத்துக்கு உறுப்பாகப் பெரியவுடையாரை முடித்துக்கொண்டு வந்து ராவணன் தோற்றினாப்போலே ஆச்வாஸகரமான பகலை முடித்துவந்து தோற்றிற்றாய்த்து ஸந்த்யை. பகல் பதார்த்ததர்சனம் பண்ணி யாற்றலாமிறே; அதில்லாமையாலே ராத்ரிவ்யஸநம் ஒருமுகஞ் செய்திருக்குமிறே. [வண்சாந்தம்] அழகிய சாந்தம், பஞ்சமமாகிற பண். [மூங்கில்] யாழ். அன்றிக்கே மூங்கிற்புத்தான் இடையர்க்குத்தாரமாயிருக்குமிறே; அத்தைச்சொல்லிற்றாகவுமாம். [தண்வாடை] அவ்வாடையோடு தென்றலோடு வாசியற்றாப்போய்த்து. தென்றல் வருவது ஒருகாலமும் வாடை வருவது ஒருகாலமுமாயிருக்குமிறே; அவையெல்லாம் அவ்வவ காலங்களிலேவந்து தோற்றும்படியாய்த்துக் காலம் நெடுகுகிறபடி. அன்றியே அனர்த்த ஸூசகமாய் எல்லாக்காற்றும் ஒருகாலே படுத்ததாகவுமாம். இனித் தென்றலுக்கஞ்சி வாடையின் பிறே ஒதுங்க விரகில்லை. [அகலிடமித்யாதி] தன் மஹிஷியானவள் இப்படி பாதகபதார்த்தத்தின்கையிலே நோவுபடாநிற்க ஸர்வஸாதாரணமாக ஆபத்துவந்தால் வயிற்றிலேவைத்து நோக்குமவனிவர் இப்போது வாராதொழிகிறான்! பரப்புடைத்தான பூமி உருமாய்ந்து கிடக்க உண்டாக்கி, ப்ரளயங்கொண்ட இத்தைப்பிடர்கொண்டெடுத்து, திரியவும் ப்ரளயம் வர வயிற்றிலே வைத்து நோக்கி உள்ளிருந்து தளராதபடி வெளிநாடுகாணப் புறப்படவிட்டு, மிடுக்கராயிருப்பார் இருந்திக்கொள்ள எல்லைநடந்து மீட்டுக்கொண்டு, இப்படிவரையாதே நோக்கும் ஸ்வபாவனானவனிவர் இப்போது வாராதொழிகிறான்! [ஆயன்] "க்ருஷ்ணாச்ரயா:" இத்யாதி. [மாயோன்] ரக்ஷணத்துக்கு அநுரூபமான ஆச்சர்யசக்தியுக்தன். [இகலித்யாதி] யுத்த பூமியில் காணும் ஆஸுரவர்க்கத்துக்கு ம்ருத்யுவாயிருப்பது. "சரணம்" என்கிற ப்ரஹ்லாத விபீஷணாதிகளை யழியச்செய்திலனிறே; ராவண ஹிரண்யாதிகளையிறே முடித்தது. "ஜாதும் ந சக்தா யுதி ராமவத்யம்" என்னக்கடவதிறே. [வாரான்] இங்கு அம்பேற்கவும்வேண்டா, விரோதிகளுமில்லை, முகங்காட்டவமையும். [இனியித்யாதி] வரைந்து நோக்குமவனுமாய் நான் ஆறியிருக்கிறேனோ? வருமிடத்தில் ப்ரதிபந்தக முண்டென்று ஆறியிருக்கிறேனோ? என்னுடைய ரக்ஷணத்தில் எனக்கு அந்வயமுண்டாய்த்தான் ஆறியிருக்கிறேனோ? வரையாதே ரக்ஷிக்குமவனுமாய் சக்தனுமாய் ப்ராப்தனுமாயிருக்கிறவன் வாராதொழிய, அவனுடைய ரக்ஷ்யகோடியிலேயாய் அசக்தையாய் அப்ராப்தையாயிருக்கிற நான் என் ப்ராணன்களை நோக்குகையென்று ஒரு பொருளுண்டோ? [இனியிருந்து] வருந்தியும் ஜீவித்துக்கிடக்கும்படி "ந மாம்ஸம் ராகவோ புங்க்தே" என்று சிலர் சொல்லுதல், "த்வாமபச்யந் க்ருபாத்மஜ" என்னுதல் செய்துதான் ஆறியிருக்கிறேனோ? வரவுக்கு உடலாக "காண்பட்டான் கபந்தன் பட்டான், வாலிபட்டான், கடலடைப்பது, வந்துபுகுந்தாரத்தனை" என்றுதானாறியிருக்கிறேனோ? [இனியிருந்து] இதுக்கு முன்பெல்லாம் "அவன் சரக்கும் ப்ரியவொண்ணாது" என்று நோக்கிக் கிடந்தமை தோற்றுகிறதாய்த்து 'இனி' என்கையாலே. [என்னுயிர்காக்குமாறென்] பிறருயிராய்த் தான் நோக்கியிருக்கிறேனோ? இவற்றின் கையிலே நோவுபட எனக்குப்பணியாகவோ என்னுடைய ப்ராணரக்ஷணம்?

இனியிருந்தென்னுயிர் காக்குமாறென் இணைமுலைநமுகநுண்ணிடைநுடங்க*
துனியிருங்கலவிசெய்தாகந்தோய்ந்து துறந்தெம்மையிட்டகல்
கண்ணன்கள்வன்*
தனியிளஞ்சிங்கமெம்மாயன்வாரான் தாமரைக்கண்ணுஞ்செவ்வாயும்* நீலப்
பனியிருங்குழல்களும்நான்குதோளும் பாவியேன்மனத்தேநின்றீரு
மாலோ! (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், அவனுடைய திவ்யாவயவங்கள் ஹ்ருதயத்திலே ஸ்ம்ருதமாய்நின்று நலியாநின்றன என்கிறாள். [இனியிருந்தென்னுயிர் காக்குமாறென்] - அவனுடைய ஸௌந்தர்யமே உள்ளே நின்று நலியாநின்றால், இனி ப்ராணனைக் காக்கவிரகுண்டோ? என்கிறாள். [இணைமுலையென்று தொடங்கி] - ஸம்ஶ்லேஷ ஸங்காதிசயத்தாலே முலைகளிரண்டும் குழையவும் நுண்ணியவிடை நுடங்கும்படியாகவும் து:க்கபலமான ஸம்ஶ்லேஷத்தைப் பண்ணி என்னை நீராக்கி என்னுடம்பிலே தோய்த்து; பொறுக்கவொண்ணாதபடி நிரஸிய ஸங்கமாம்படி கைவிட்டுத் துறந்தான் என்றுமாம். [துறந்தெம்மையிட்டகல் கண்ணன்] - அசேதநங்களைப் போகடுமாபோலே என்களைப் போகட்டு அகலுகையே ஸ்வபாவமான க்ருஷ்ணன், [கள்வன்தனியென்று தொடங்கி] - ஸம்ஶ்லேஷ தசையில் ஸர்வஸ்வாபஹாரிகளான ஆலோகநாலாபநாதிகளை யுடையனாய், என்னோட்டைக் கலவியாலே இளைப்பு பதித்து மேனாணிப்பதுஞ் செய்து, விஶ்லேஷ தசையில் என்பக்கலிலே அதிசாபலத்தையுடையவன் வருகிறிலன்; தாமரைப்பூப் போலே யிருக்கிற கண்ணும் சிவந்த திருப்பவளமும், கறுத்துக் குளிர்ந்திருந்துள்ள பெரிய திருக்குழல்களும் நாலு திருத்தோள்களும் இவ்வழகுகளை அநுபவித்து இழந்தால் மறக்கொடாதே நினைத்து நோவுபடுகைக்கீடான பாபத்தைப்பண்ணின என்னுடைய மநஸ்ஸிலே நிரந்தரமாகநின்று நலியாநின்றன.

இ.—மூன்றாம்பாட்டில், கண்ணாற்கண்டவை பாதகமாகப் புக்கவாறே, அவற்றுக்கஞ்சிக் கண்ணைச் செம்பளித்தாள்; அகவாயிலே அவன் அழகுகள் ஸ்மாரகமாய் நின்று நலியாநின்றன என்கிறாள். [இனியிருந்தென்னுயிர்காக்குமாறென்] - எனக்கு தாரகமான அழகு பாதகமானால் எனக்கு ப்ராணனை நோக்கவிரகுண்டோ? [இணைமுலை] - அவன் சேர்த்தியழகு கொண்டாடும் முலை. [நமுக] - குழைய. கடினஸ்தநம் வர்ஷத்தாலே நெகிழுமாபோலே ஸம்ஶ்லேஷ தசையில் ஸ்பர்ஶத்தாலே குழைக்கும்படி. [நுண்ணிடை நுடங்க] - வெறும்புறத்திலே அருக்குமிக்கும் விளாவியம்போலே, சோக்கவிதான இடை நுடங்கும்படியாகவும்: கலக்கும்போது எதிர்த்தலைப் பேண அறிந்திலன்: தன் அபிநிவேசம் தீர்ந்தானத்தனை. [துனியிருங்கலவிசெய்து] - து:க்கபலமான கலவிசெய்து. [இருங்கலவி] - கலக்கிற போது பரிமாறினவகைகள், ஆஸ்ரயத்தளவன்றிக்கே யிருக்கை. ஸம்ஶ்லேஷம் விஶ்லேஷாந்தமாயல்லதிராமையாலே து:க்கத்தை விளைக்குமென்னுதல்; அத்தசையில் பொறுக்கப் போகாதபடியிருக்கையாலே து:க்கரூபமென்னுதல். [ஆகம் தோய்ந்து] - என்னை நீராக்கி என்னுடம்பிலே தோய்ந்து: "க்ரீடமே சீதமிவ ஹ்ரதம்" என்னுமாபோலே, தன்விடாய் கெட்டானுமிருந்தான். என்னுடம்போடே அணைந்து தனக்குப் பெரும்பேறாக நினைத்திராநின்றான். [துறந்தெம்மையிட்டு] இப்படி விருப்பத்துக்கு விஷயபூதையான என்னைக் கைவிட்டு அசேதநத்தைப் போகட்டாப்போலே போகட்டோமென்றும் நினைவுமின்றிப்படி போகட்டு. இப்படி அவனாகுமித்தெல்லாம் கைவிடுகைக்கு உடலாய்த்தென்கை. [அகல் கண்ணன்] - அகலுகையே ஸ்வபாவமான க்ருஷ்ணன். அவனுக்குக் கலவி காதாசித்கம்; அகலுகையே நிரூபகம்; கலவியாலல்லது பிரிவுண்டாகாமையாலே கலந்தானித்தனை. [கள்வன்தனியிளஞ்சிங்கம்] - கலக்கிற போதை நோக்கும், பேச்சும், பண்ணின வ்யாபாரங்களும் ஸர்வஸ்வாபஹாரிகளாயிருக்கை; அப்போது தன் ஆர்த்தியாலே கலக்கிறானென்று தோற்றும்படியாய் பலத்தில் பிரிந்து நோவுபடுத்தச் செய்தானுமிருக்கை யென்றுமாம். [தனி] - என்னோட்டைக்கலவியாலே அத்விதீயனென்று தோற்றும்படியிருக்கிறவன். [இளஞ்சிங்கம்] - என்னோட்டைக்கலவியாலே இளகிப்பதித்து மேனாணித்திருக்கிறவன். [எம்மாயன் வாரான்] - பிரிவை நினைத்துக் கலங்கிப் போகமாட்டாதே என்பக்கல் அதிசாபலத்தாலே அத்தசையில் தடுமாறினவன் இப்போது வருகிறிலன். அத்தசையில் சாபலத்தோபாதி போரும் இப்போதை விரக்தியும். [தாமரை இத்யாதி] - அவன் கண்ணுக்கு விஷயமாகாதொழிந்தால் இவை

நெஞ்சுக்கு விஷயமானதொழிந்தால் ஆகாதோ? தான் போகாநின்றால் இவற்றைவைத்துப் போக வேணுமோ? கலந்தபோது தன்பேறென்று தோற்றும்படியான ஹர்ஷமடங்கக் கண்ணிலே தோற்றும் படியான திருக்கண்களையுடையவன் என்னுதல்; பிரிவை நினைத்து வாய்விடமாட்டாதே ஆற்றாமையடங்க லும் நோக்கிலே தோற்ற நின்ற நிலையென்னுதல். [செவ்வாயும்] - பிரிவை ப்ரஸங்கித்து முடியச்சொல்ல மாட்டாத போதைச் சிவந்த அதரமும். [நீலப்பணியிருங் குழல்களும்] - கலவியாலே குலைந்து பிரிவை நினைத்துப் பேணமாட்டாதபோதைக் கறுத்துக்குளிர்ந்த பெரியதிருக்குழல்களும். [நான்கு தோளும்] - இவள்தடுமாற்றத்தைக் கண்டு குழலைப்பேணி வருந்தினையும் தரிப்பித்தாக நாள் எதிர அணைந்த நாலு தோள்களும். "உபஸம்ஹர" என்றது கம்ஸாதிகளுக்கிறே; பெண்களுக்கு நாலாய்த் தோற்றுமிறே. [பாவியேன்] - இவ்வழகுகளை யநுபவிக்க இழிந்தால், அறிவழிந்திருக்கப்பெறுதே நினைக்கைக்கு அடியான பாபத்தைப் பண்ணின என்னுடைய. [மனத்தேநின்று ஈருமாலோ] - மநஸ்ஸிலே நிரந்தரமாகநின்று நலியாநின்றது. அணைக்க எட்டுதல், நெஞ்சுக்கு எட்டாதொழிதல் செய்யப் பெற்றிலேன். அறிவழிந்து மறந்துபிழைக்கவும் பெற்றிலேன்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. கண்ணுக்கிலக்கான பதார்த்தங்களடங்க பாதகமாகப்புக்க வாறே அவற்றுக்கு அஞ்சாக் கண்ணைச் செம்பளித்தாள்; அவ்வாயிலே அவன் அழகு ஸ்ம்ருதிவிஷயமாய் நலியாநின்றதென்கிறாள்.

[இனியிருந்தென்னுயிர்காக்குமாறென்] என்னதென்றபிமானித்த உடம்பு பகையாய்த்து; என்னதென்று அபிமானித்த அழகு பகையாய்த்து; இனியிருந்து என்னுடைய ப்ராணரக்ஷணம்பண்ண என்றொரு பொருளுண்டோ? [இணைமுலைநமுக] அவன் சேர்த்தியழகுசொல்லி வாய்வெருவும் முலைகளானவை, கடினஸ்தலத்திலே வர்ஷித்தால் பதமாமாபோலே, ஸம்ச்லேஷஸமயத்தில் அவனுடைய ஸ்பர்சத்தால் மெல்கிக்குழைந்தபடி. நமுகை-குழைகை. [நுண்ணிடைநுடங்க] நெருப்புறத்திலும் அருங்குலைக்கிற் வினைவைப்போலே நோக்கவரிதான இடை நுடங்கும்படியாகவும். கலக்கும்போது எதிர்த்தலையைப் பேண அறிந்திலன்; தன் அபிநிவேசம் தீர்ந்தானத்தனை. [துனியிருங்கலவிசெய்து] துக்கபலமான கலவியைச் செய்து. [இருங்கலவி] கலக்கிறபோது பரிமாறின வகைகள், ஆச்ரயத்தளவன்றிக்கே பெருக்கை. ஸம்ச்லேஷம் விச்லேஷார்த்தமாயல்ல இராமையாலே துக்கத்தை விளைக்குமென்னுதல்! அத்தசையிலே தலைதடுமாறுகைக் கலக்கையாலே பொறுக்கவொண்ணாதபடி துக்கரூபமென்னுதல். [ஆகந்தோய்ந்து] இக்கலவியாலே சீராக்கி, "ஏஷப்ரஹ்மப்ரவிஷ்டோ ஸ்மி க்ரீஷ்மே சீதமிவ ஹ்ரதம்" என்கிறபடியே இவளோடே கலந்தானாய்த்து; க்ரீஷ்மகாலத்தில் மடுவிலே முழுகித் திடபராரைப்போலே. [துறந்து] இப்படி ஸ்வகானுபவத்தில்லாத பெருகடுகைக்கு உடலாய்த்து. [எம்மையிட்டு] இப்படி என்பக்கலிலே விருப்பத்தைப் பண்ணிவைத்து, சில அசித்பதார்த்தங்களைப் போகடுமாபோலே போகட்டோமென்கிற நினைவும் கூடப் போகட்டானாய்த்து. [அகல்கண்ணன்] இவனுக்குக் கலவி காதாசித்கம்; அகலுகை நிரூபகம், கலவியாலல்லது பிரிவு கூடாமை கலந்தானத்தனை. [கள்வன்] ஸம்ச்லேஷத்தில் குளிர நோக்கும் நோக்கும், பேசின பேச்சும், பரிமாறின பரிமாற்றமும் மெல்லாம் ஸர்வஸ்வாபஹார க்ஷமமாயிருக்கிறது. கலக்கிறபோது செய்ததையடைய தன்னுற்றமையாலே செய்தானென்று தோற்றும்படியாய்ப் பிரிவில் இவை நம்மை பாதிக்கைக்காகச் செய்தானாயிராநின்றது. [தனியிளஞ்சிங்கம்] "யஸ்ய ஸா ஜனகாத்மஜா - அப்ரமேயம் ஹி தத்தேஜ:" என்னுமாபோலே, இவளோட்டைக் கலவியாலே அத்விதீயனென்று தோற்றும்படியிருந்தான். [இளம்]-கலக்கக்கலக்கக்கீழ் நோக்கிப் பிராயம் புகாநின்றான். [சிங்கம்] - இவளோட்டைக்கலவியாலே பெறுபேறு பெற்றானாய் மேனாணித்திருந்தபடி. [எம்மாயன்வாரான்] பிரிவை நினைத்துக்கலங்கிப் போகமாட்டாதே என்பக்கல் அதிசாபலத்தாலே அத்தசையில் தடுமாறினவன் இப்போது வருகிறிலன். அத்தசையில் சாபலத்தோபாதியும் போரும் இப்போதை விரக்தியும். அப்போது போகையிலுள்ள அருமை போரும் இப்போது வருகையிலுள்ள அருமையும். [தாமரைக்கண்ணும்] அவன், கண்ணுக்கு விஷயமாகா தொழிந்தால் இவை நெஞ்சுக்கு விஷயமாகாதொழிந்தா லாகாதோ? தான் போகிறான், இவற்றை வைத்துப் போகவேணுமோ? கலந்தபோது தன்பேறென்று தோற்

தும்படியான திருக்கண்களையுடையவனென்னுதல்; பிரிவை நினைத்து வாய்விடமாட்டாதே ஆற்றாமைபடங்களும் நோக்கிலே தோற்றும்படி நின்ற நிலையென்னுதல். [செவ்வாயும்] பிரிவை ப்ரஸங்கித்து முடியச்சொல்லமாட்டாதபோதைச் சிவந்ததிருவதரமும் இவனுடைய ஸ்மிதமும் வாயும் கண்களுமிருக்கிறபடி. [நீலப்பனியிருங்குழல்களும்] கலவியாலே குலைந்து பிரிவை நினைத்துப் பேணமாட்டாதபோதைக் கறுத்துக் குளிர்ந்த பெரிய திருக்குழலும். [நான்கு தோளும்] இவள் தடுமாற்றத்தைக்கண்டு குழைப்பேணி வருந்தினையும் தரிக்கைக்காக நெருக்கி யணைத்த நாலு திருத்தோளும்: *உபஸம்ஹர* என்றது கம்ஸாதிகளுக்கிறே; பெண்களுக்கு நாலாய்த்தோற்றுமிறே. *சங்கசக்ரகதாபாணே* என்றுமிறே. [பாவியேன்] இவ்வழகுகளை யநுபவித்து இழந்தால் மறந்திருக்கப் பெறுதபடியான பாபத்தைப்பண்ணின என்னுடைய. [மனத்தே நின்றீருமாலோ] மனஸ்ஸிலே ஸ்ரக்தமாக நின்றுநலியா நின்றது. அணைக்கும்படி கைக்கெட்டுதல், நெஞ்சுக்கெட்டாதொழிதல் செய்யப்பெற்றிலேன். அறிவழிந்து மறந்து பிழைக்கவொண்ணுதபடி பண்ணினுறைந்து.

பாவியேன்மனத்தேநின்றீருமாலோ வாடைதண்வாடைவெவ்வாடையாலோ!*
மேவுதண்மதியம்வெம்மதியமாலோ மென்மலர்ப்பள்ளிவெம்பள்ளியாலோ!*
தூவியம்புள்ளுடைத்தெய்வவண்டுதுதைத்தஎம்பெண்மையம்பூவிதாலோ!*
ஆவியின்பரமல்லவகைகளாலோ யாமுடைநெஞ்சமும்துணையன்றாலோ! (4)

ஒ.—நாலாம்பாட்டில், அவனுக்கு ஸ்மாரகமாய் அல்லாதியாலே நலிகையன்றிக்கே தானே தனித்தனியே அக்நிமயமாய் தஹியாநின்றன என்கிறாள். [வாடையென்று தொடங்கி] - தண்வாடை யாகாதொடையும் வெவ்வாடை ஆகாநின்றது. எல்லாராலும் ஸ்ப்ருஹணீயமாய்க் குளிர்ந்த சந்த்ரனும் அக்நிமயசந்த்ரனாகாநின்றான். ம்ருதுவான மலராலே செய்த படுக்கை வெவ்விய பள்ளியாய் நலியா நின்றது. பெரிய திருவடியையுடைய தெய்வமாகிற வண்டாலே ஆத்தஸாரமான என்னுடைய பெண்மை ஊசிற்று ஏகமிதுமாம் நலியுடாநின்றது. [ஆவியின் பரமல்லவகைகளாலோ] - பாதகங்களினுடைய பாதிக்கிறபடி யென்னுமபடி இவ்வாத்மாவின் அளவல்ல. பண்டு இவன்புரிந்தபடிகளை நினைக்க அவை பாதிக்கிறபடி யென்னுமாம்.

இ.—நாலாம்பாட்டில், அகவாயிலேநின்று நலிகிறவையொழிய ஸ்வரூபேண வந்து ஸ்பர்சாதி களாலே ஸ்மாரகமாய்நின்று நலிகிற பதார்த்தங்களைச் சொல்லுகிறாள். [பாவியேன் இத்யாதி] - காட்டாளருலே ஸ்மாரகமாய்நின்று நலிகிற பதார்த்தங்களைச் சொல்லுகிறாள்! இவ்வடிவையிறே இவ்வழகை வலிய நெஞ்சிலே வைத்துப் பாபத்தைப்போக்கிக் கொள்ளாநிற்பர்கள் கிடீர்! [வாடை இத்யாதி] - உட்புகையேயாய்ப் புறப்பகை சுபாச்ரயமாக பாவித்து அமிமதங்களைப்பெறுவது? குளிர்த்தியே ஸ்வபாவமாக உடைத்தான வாடையும் அக்நிகல்பமாய் நலியா அற்றிருக்கப்பெற்றேனோ? தண்வாடையென்று தாய்மார் வார்த்தைகேட்டுச் சொல்லுகிறாள்; அநுபவம் விபரீதமாயாய்நின்றது. [மேவு தண்மதியம்] - நாட்டார் தாபத்துக்கஞ்சி நிலாவிலே ஒதுங்கக்காண்கையாலே திருக்கிறது. [மென்மலர்ப்பள்ளி வெம் பள்ளியாலோ] - புறம்புள்ளவை பாதகமாகப் புக்கவாறே அவற்றுக்கஞ்சிப் படுக்கையிலே சென்றுவிழுந்தாள். ம்ருதுவான மலராலேசெய்த படுக்கை தாபஹேதுவாய் நலியாநின்றது. பனியுமிதனவும் வாடையும் தாளும் அதிலே ஒதுங்கப் பார்த்தாள்! அவனும் அக்நிமயசந்த்ரனாகாநின்றான். கண்ணும்படியாய்த்து இருவருக்குப் படுத்தபடுக்கை ஒருவர்க்கு பாதகமாமிறே. [தூவியம் இத்யாதி] - பெரியதிருவடியையுடைய தெய்வமாகிறவண்டாலே ஆத்தஸாரமான என்னுடைய பெண்மையாகிற பூ ஏகமிதுமாய் நலியுடாநின்றது. படுக்கை பாதகமானவாறே புறம்பே புறப்பட்டாள்; ஸ்வதுபாந்தி யான ஸ்த்ரீத்வம் சிதிலமாகத் தொடங்கிற்று. தூவி - சிறகு. அழகியசிறகையுடையனாய் தர்சநீய வேஷனான பெரிய திருவடியுடைய முதுகிலே வந்தாய்த்து ஸ்த்ரீத்வத்தை அழித்தது. கருடவாஹனனிறே பரதேவதையாவான். 'இது' என்கிறது - ஸ்த்ரீத்வம் அழிந்தபடி பேச்சுக்கு நிலமல்ல என்கிறது. [ஆவியின் பரமல்ல வகைகளாலோ] - கலக்கிறபோது அவன்பரிமாறின வகைகள் ஆச்ரயித்தினவவன்று என்னுதல்; பாதகபதார்த்தங்களினுடைய பரிப்பு ஆத்மவஸ்துவின் அளவன்றென்னுதல். [யாமுடை

நெஞ்சமும் துணையன்றே] - புறம்புண்டானவை பாதகமானாலும் நெஞ்சுண்டாகில் உசாவித்தரிக்கலாமிறே; அதுவும் துணையாகிறதில்லை.

ஈடு.—நாலாம்பாட்டு. அகவாயில் நலிகிறதொழிய ஸ்வரூபேண வந்து ஸ்பர்சாதிகளாலே ஸ்மாரகமாய் நின்று நலிகிற பதார்த்தங்களைச் சொல்லுகிறாள்.

[பாவியேன் மனத்தே நின்றீருமாலோ] நாட்டார், வலிய இவ்வருத்தன்னை நெஞ்சிலே வைத்துப் பாபத்தைப் போக்கிக்கொள்ளாநிற்பர்கள்; இவ்வடிவையிறே சுபாச்ரயமாக பாவித்து அபிமதங்களைப் பெறுவது. [வாடையித்யாதி] உடம்பையேயாய்ப் புறம்புள்ளவை தான் அநுகூலிக்கப்பெற்றேனோ? தண்வாடை (பனிவாடையும்) வெவ்வாடையாய்த்து. "சுகதாதம்" என்னுமாபோலே, புத்ரனையிட்டுச் சொல்லும்படியாயிராநின்றது. (வாயுபுத்ரனிறே அக்நி) குளிர்த்தியே ஸ்வபாவமான வாடையும், அக்நிகல்பமாய் நின்று நலியாநின்றது. 'தண்வாடை' என்றவிடம், தாய்மார்வார்த்தையைக் கேட்டுச் சொல்லுகிறாள்; 'வெவ்வாடை' என்றவிடம், அநுபவத்தாலே சொல்லுகிறாள். [மேவு தண்மதியம் வெம்மதியமாலோ] நாட்டார் தாபத்துக்கு அஞ்சி நிலவிலே போதுபோக்காநிற்கையாலே தானும் அதிலே போதுபோக்கப்பார்த்தாள்; அவன் அக்நிமய சந்த்ரனானான்; அவன் நெஞ்சு அறிந்தவனாகையாலே இவனும் வேறுபட்டான்; "சந்த்ரமா மநஸோ ஜாத:" அவன் மனம் கல்லானதின்படியே மதி கேடாயிருந்தது. [மென்மலர்ப் பள்ளி] புறம்புள்ளவை பாதகமானவாறே அவற்றுக்கஞ்சிப் படுக்கையிலே சென்று விழுந்தாள், அது இருவர்க்குப் படுத்தபடுக்கையாயிருந்தது. ம்ருதுவான மலராலே செய்தபடுக்கை தாபஹேதுவாய் நலியாநின்றது. பழைய வாடையும் நிலவுமே நன்றாம்படியாய்த்து. இருவர்க்குப் படுத்தபடுக்கை ஒருவர்க்கு பாதகமாமிறே. [ஆவியித்யாதி] பெரியதிருவடியையுடைய தெய்வமிற வண்டாலே ஆத்தலாரமான என்னுடைய பெண்மையாகிற பூ, ஏகம்விதமாய் (கலிய) கலியுடாநின்றது. படுக்கை பாதகமானவாறே புறம்பே புறப்பட்டாள்; ஸ்வரூபாநுபந்தியான ஸ்த்ரீத்வம் சிதிலமாகத்தொடங்கிற்று. அழகிய சிறகையுடையனாய் தர்சநீய வேஷமான பெரியதிருவடி முதுகிலே வந்தாய்த்து, ஸ்த்ரீத்வத்தை அழித்தது. கருடவாஹனனிறே பரதேவதையாவான். 'இது' என்கிறது - தன் ஸ்த்ரீத்வம் அழிந்தபடி பேச்சுக்கு நிலமல்லாமை. [ஆவியின் பரமல்ல வகைகளாலோ] நலிகிறபோது அவன் பரிஹரிக்க வேண்டுமவைகள் ஆச்ரயத்தளவன்று என்னுதல்; பாதகபதார்த்தங்களுடைய பரிப்பு ஆத்மவஸ்துவளவன்று என்னுதல்; [யாமுடை நெஞ்சமும் துணையன்றாலோ] புறம்புண்டானவை பாதகமானாலும் நெஞ்சுண்டாகில் உசாவித் தரிக்கலாமிறே; அதுவும் துணையாகிறதில்லை.

யாமுடைநெஞ்சமுந்துணையன்றாலோ ஆபுகுமாலையுமாகின்றாலோ!
யாமுடையாயன்றன் மனங்கல்லாலோ அவனுடைத்தீங்குழலீருமாலோ!
யாமுடைத்துணையென்னுந்தோழிமாரும் எம்மின்முன்னவனுக்குமாய்வ
ராலோ!
யாமுடையாருயிர்காக்குமாறென் அவனுடையருள்பெறும்போதரிதே. (5)

ஈடு.—அஞ்சாம்பாட்டு. நெஞ்சு துணையாகாதபோதும் துணையாகக்கடவ தோழிமாரும் அவனோட்டை விச்லேஷத்தாலே எனக்குவந்த வ்யஸநத்தைக்கண்டு எனக்குமுன்னே நோவுபடாநின்றார்கள்; அவனுடைய ப்ரஸாதம் பெறுகை அரிதாய்த்து; எனக்கு தரிக்கைக்கு ஒருவிரகு காண்கிறிலேன்! என்கிறாள். [யாமென்று தொடங்கி] - என்னோட்டை ஸம்பந்தத்தாலே எம்பெருமான் துணையன்றிக்கேயொழிந்தாப்போலே என்னெஞ்சும் துணையாகிறதில்லை. பசுக்கள் வந்து புகுரும் மாலையும் ஆகாநின்றது; ஸகலபதார்த்தங்களும் ஸ்வஸ்வபாவத்தைத் தவிர்ந்து வேறொருபடியானாப்போலே ம்ருதுவான ஆயனுடைய நெஞ்சு கல்லாய்த்து. அவனுடைய அழகிய குழலோசையும் ஸம்ருத்தமாக ஈராநின்றது.

இ.—அஞ்சாம்பாட்டில், ஸகலபதார்த்தங்களும் ஸ்வஸ்வபாவங்களை விட்டு அந்யதாவாய் அவ்வளவிலும் அவனுடைய ப்ரஸாதம் அரிதானால் தரிக்க விரகுண்டோ ? என்கிறாள். [யாமுடை இத்யாதி] - ''என்னது'' என்னவுமாகாதே துணையாகாதொழிய, ''என்னுடையவன்'' என்னும்படி கைபுகுந்தவன் துணையாகாவிட்டால் நெஞ்சும் துணையாகாதொழியவேணுமோ ? [ஆபுகுமித்யாதி]- ஒரு துணையற்றிருக்கிறவளவிலே பசுக்கள் புகுரும் ஸந்த்யையும் ஆகாநின்றது. ''எனக்குத் துணையில்லை'' என்று அறிந்தால் யாமக்கும் பிரியவிக்கவேண்டாவோ ? ஆர்த்தாஸ்தராய் மடப்போய், பிரிந்தார் வெருவும் ஸந்த்யையும் ஆகாநின்றது. [யாமுடையித்யாதி] - பதார்த்தங்கள் எல்லாவற்றுக்கும் ஸ்வபாவபேதம் பிறந்திருக்கிறுப்போலே ம்ருதுஸ்வபாவனானவன்நெஞ்சம் கல்லாய்த்து. 'நெஞ்சும் துணையன்று, மாலையும் வந்தது'' என்னுமிடம் அவன்நெஞ்சிற் படுகிறதில்லை. கல்லைப்பெண்ணாக்கும் நெஞ்சையுடையவன்நெஞ்சு கல்லானால் நெகிழ்க்க வல்லாருண்டோ ? என்நெஞ்சுவலித்தல் அவன்நெஞ்சு நீராகவாதல் பெற்றிலோம். [அவனுடைய இத்யாதி] அவனுடைய அழகிய குழலோசை ஸம்ருதமாய் ஈராநின்றது. ''அவன்நெஞ்சு கல்'' என்று கைவாங்கவொட்டுகிறதில்லை. குழலோசை ''பாதந்த்ரனுக்கையாலே பகுபேய்க்க வேண்டிற்று'' என்றும், ''ஆற்றாமை தன்னது'' என்றும் தாழ்ந்தசொற்களை வைத்தூதுகிற குழலோசை, ''அவன்நெஞ்சு நீர்கிடாய்'' என்னுகின்றது. [யாமுடைத் துணையித்யாதி] - நெஞ்சு துணையாகாதவளவிலும் உதவக்கடவ தோழிமாரும் என் வ்யஸநத்தைக்கண்டு எனக்குமுன்னே, ''இவளுக்கு அவன் வஸ்பனுவேணும்'' என்று நோவுபடாநின்றார்கள். [துணையென்னும்] - நாம்பழவுள்ளைபோலேயிறே நீங்கள் தோழிமாரானபடி. ''ஏகம் து:க்கம் ஸுகஞ்ச நௌ'' என்று இருக்குமவர்களாகையாலே இவளாற்றாமைபொறுக்கமாட்டாமை நோவுபடுகிறார்களிறே. இச்சேர்த்தியையிறே தங்களுக்கு உத்தேச்யமாக நினைத்திருப்பது. இவர்களுக்கு அவனோடு ஸம்பந்தம் இவள் வழியாகவிறே. [யாமுடையாருயிர் காக்குமாறென்] - 'இத்தனிமையில் ஆத்மதாரணம்பண்ணும் விரகென்? பிறர் உயிராகில் நோக்கவுமாமிறே. [அவனுடை அருள் பெறும்போதரிதே] - அவனுடைய ப்ரஸாதம்பெறுகை அரிதாய்த்து; அதுபெறில் நம்முயிர்தன்னையும் நோக்கவுமாமிறே.

ஈடு.—ஐந்தாம்பாட்டு, ஸகலபதார்த்தங்களும் ஸ்வஸ்வபாவங்களைவிட்டு அந்யதாவாய், அவ்வளவிலும் அவனுடைய ப்ரஸாதம் அரிதானால் தரிக்க விரகுண்டோ என்கிறாள்.

[யாம் இத்யாதி] ''என்னது'' என்றபிமானிக்கவுமாகாதே துணையன்றிக்கேயொழிகைக்கு. பசுக்களும் வந்துபுகுர ஸந்த்யையுமாகாநின்றது; நெஞ்சு துணையன்றிக்கேயொழிந்தால் ஒருபடி தாழ்த்துவரவேண்டாவோ இம்மாலைக்கு. [யாமுடையித்யாதி] நெஞ்சு துணையன்றிக்கே மாலையும் வருகிறதிது அவன்நெஞ்சிற்படுகிறதில்லை; பதார்த்தங்களெல்லாவற்றுக்கும் ஸ்வபாவபேதம் பிறக்கிறுப்போலே (ம்ருதுஸ்வபாவனானவன் நெஞ்சு கல்லாய்த்து) நெஞ்சிலும் அன்னியவன் நெஞ்சுநெகிழவேண்டாவோ? ஒரு கல்லைப் பெண்ணாக்கினவன் நெஞ்சு கல்லானால் அத்தை நெகிழ்க்க வல்லாரில்லையிறே! [அவன் இத்யாதி] அவனுடைய இனிய குழலோசை, ''அவன்நெஞ்சு கல்'' என்று கைவாங்கவொட்டுகிறதில்லை. ''நான் பகலெல்லாம் பிரிந்தேன், வரவு தாழ்த்தேன், ஆற்றேன் பாரதந்த்ரனுக்கெட்டேன்'' என்கிற புடைகளிலே சில பாசுரங்களை வைத்திறே குழலூதுவது. ''அது கல்லென்று கைவாங்காதேகிடாய், நீர்கிடாய்'' என்னுகின்றது; இப்பாசுரங்களாலே அவனுடைய இனியகுழலோசையானது ஈராநின்றது. [யாமுடையித்யாதி] நெஞ்சும் துணையன்றிக்கே அவனும் உதவாதபோது, துணையான தோழிமாரும் என் வ்யஸநத்தைக்கண்டு எனக்குமுன்னே ''இவளுக்கு அவன் வேணும்'' என்று நோவுபடாநின்றார்கள். [துணையென்னும்] நாம்பழவுள்ளைபோலே யிறே நீங்கள்தோழிமாரானபடி. ''ஏகம் துக்கம் ஸுகஞ்ச நௌ'' என்றிருக்குமவர்களாகையாலே, இவளாற்றாமை பொறுக்கமாட்டாமை நோவுபடுகிறார்களிறே. இவர்களுக்கு அவனோடு ஸம்பந்தம் இவள்வழியாகவிறே. [யாமுடையாருயிர் காக்குமாறென்] இத்தனிமையில் ஆத்மதாரணம் பண்ணும் விரகென்? பிறருயிராகில் நோக்கவுமாமிறே. [அவனுடையருள்பெறும்போதரிதே] அவனுடைய ப்ரஸாதம் பெறுகை அரிதாய்த்து. அதுபெறில் நம்முயிர்தன்னையும் நோக்கலாமிறே.

அவனுடையருள்பெறும்போதரிதால் அவ்வருளல்லன அருளுமல்ல*
அவனருள்பெறுமளவாவிநில்லாது அடுபகல்மாலையும்நெஞ்சங்காணேன்*
சிவனொடுபிரமன்வண்திருமடந்தைசேர்திருவாகம்எம்மாவியீரும்*
எவமினிப்புகுமிடம்?எவம்செய்கேனோ? ஆருக்கேன்சொல்லுகேன்?
அன்னைமீர்காள். (6)

ஒ.—ஆறாம்பாட்டில், அநந்யபரையான பெரியபிராட்டியாரோடு அந்யபரரான ருத்ராதிகளோடு வாசியின்றிக்கே எல்லார்க்கும் ஸுலபனானவனுடைய ஸௌசீல்யம் என்னுடைய ஆத்மாவை ஈராநின்றதென்கிறாள். [அவனென்று தொடங்கி] - அவனுடைய ப்ரஸாதம் பெறுகைக்கு அரிதாயிராநின்றது; அவனுடைய ப்ரஸாதம்போக்கி பந்துக்களுடைய ஸாந்த்வநாதிகள் தாரகமாகமாட்டா; அவனுடையப்ரஸாதம் பெறுந்தனையும்செல்ல ப்ராணன் தரிக்கிறதில்லை. [அடுபகல்மாலையும் நெஞ்சங்காணேன்] - "மேல்வருகிற வ்யஸந பரம்பரைகளைப் பார்க்க ஸுகரம்" என்னலாவதும் செய்து பகலுக்கு நாசகமான ஸந்த்யையும் எல்லாக்காலத்திலும் தரிக்கைக்குத் துணையான நெஞ்சையும் காண்கிறிலேன்; பகலையடுகிற ஸந்த்யையும் வந்தது நெஞ்சுகாண்கிறிலேன் என்றுமாம். [எவமென்று தொடங்கி மேலுக்கு] - அன்னைமீர்காள்! புகுமிடம் எது? எத்தைச்செய்வேன்? ஆருக்கு எத்தைச் சொல்லுவேன்?

இ.—ஆறாம்பாட்டில், நித்யாநபாயினியான பிராட்டியோடு அந்யபரரான ருத்ராதிகளோடு வாசியற உடம்பு கொடுக்குமவனுடைய ஸௌசீல்யம் என்னாத்மாவை ஈராநின்றது என்கிறாள். [அவனுடைய வித்யாதி] - அவனுடைய ப்ரஸாதம்பெறுகை அரிதாகாநின்றது; கொள்வார் தேட்டமான அருள் நமக்குத் தேட்டமாவதே! ஸர்வஸாதாரணமான ஜலம் அதொழியச்செல்லாத ஸத்வங்களுக்கு அரிதானாற்போலே, அவனருள் கிடைக்குமளவும் பந்துக்களுடைய இன்சொல்லாலே தரித்தாலோவென்ன?— [அவ்வருளல்லன அருளுமல்ல] - தாய்பார்த்தும் அக்னியைக்கொண்டு விடாய்தீருமாபோலே தாய்மாருடைய ஹிதவசனத்தாலே தரிக்கவோ? விடாய்தீராதவளவல்ல; விடாயை விஞ்சப்பண்ணும்செய்யும். அவனருள் தப்பாதுபின்பு கிட்டுந்தனையும் ஆறியிருந்தாலோவென்னில்?—[அவனருள்பெறுமளவாவிநில்லாது] - அவன்ப்ரஸாதம் கிட்டுமளவும் ப்ராணன் தரிக்கிறதில்லை. க்ரம ப்ராபதியை ஸஹிப்பதொரு ப்ராணனைப் பெற்றோமாகில் ஆறியிருக்கலாய்த்திறே. [அடுபகல்மாலையும் நெஞ்சம் காணேன்] - ஆச்ரயமஸ்தமாது வான பகலையும் முடித்துக்கொண்டு மாலையுமாகாநின்றது, ஸர்வகாலத்துக்கும் துணையான நெஞ்சையும் காண்கிறிலேன் என்னுதல்; மாலையும் காண்கிறிலேன் என்னுதல். மேல்வருகிற வ்யஸந பரம்பரைகளைப் பற்ற மாலைதான் ஸுகரம் என்னலாம்படியிருக்கை தென்கை. [சிவனொடு இத்யாதி] - பிராட்டியோடு அந்யபரானருத்ராதிகளோடு வாசியற உடம்புகொடுக்கும் சீலம் ஸ்மாரகமாய் நித்யமான ஆத்மாவை முடியாநின்றது. அந்யபரர்க்கு எளிதான வடம்புகிடீர் எனக்குஅரிதாய்த்து! [எவம் இனிப்புகுமிடம்] - ஸர்வஸாதாரணமான உடம்பையிழந்தால் இனி எங்கேபுக்கு தரிப்பது? "அவன்உடம்பு கிட்டிற்றில்லை" என்று, ஹிதம் சொல்லுகிற உங்கள் உடம்பைப்பற்றி தரிக்கவோ? ஆனால் லோகயாத்ரையைப்பற்றி தரித்தாலோவென்ன? [எவம் செய்கேனோ] - அவ்வளவிலே தரிக்கலாம் விஷயமன்றே. தோழிமாரோடே வ்ருத்தகீர்த்தநம்பண்ணி தரித்தாலோவென்ன? [ஆருக்கு] - வடுகர்க்குத் தமிழ் வார்த்தைபோலே சொல்லும் வார்த்தைக்கு அதிகாரிகள் யார்? வ்ருத்தகீர்த்தநம்பண்ணும் தோழிமார் எனக்குமுன்னே அழிந்தார்கள். [என்சொல்லுகேன்] - கேட்பாரைப்பெற்றால் சொல்லுகைக்குப் பாசுரந்தான் உண்டோ? [அன்னைமீர்காள்] - தோழிமார் அழிந்தார்கள்; நாட்டார் அந்யபரர்; சேஷித்திகோள் நீங்களாயிருந்தீகோள். உங்களுக்குச் சொல்லவோ?

ஈடு.—ஆறாம்பாட்டு, நித்யாநபாயிநியான பிராட்டியோடு அந்யபரரான ப்ரஹ்மருத்ராதிகளோடு வாசியற உடம்புகொடுக்குமவனுடைய ஸௌசீல்யம் என் ஆத்மாவை பிராநின்றதென்கிறாள்.

[அவனுடையவித்யாதி] கொள்வார் தேட்டமாயிலே அவனுடைய அருள் இருப்பது; தண்ணீர்ப்பந்தலில்சேர்ந்த குளிர்ந்ததண்ணீர் விடாயர்க்கு அரிதானாற்போலேயிறே எனக்

கரிதானபடி அவனருள் கிடைக்குமளவும் பர்த்துக்களுடைய இன்சொல்லைக் கொண்டாகிலும் தரித்தாலோவென்ன? [அவ்வருளல்லனவருளுமாகில] "பல்லாரருளும் பழுது - நல்லானருளல்லால்." விடாய்த்தவனுக்கு அக்நிகணங்களைக்கொண்டு விடாயைப்பரிஹரித்தாப்போலேயிறே. பரிஹரிக்கவொண்ணாமையேயல்ல, பாதகமாயுமிருக்கும் செய்யும். அவ்வருள் தப்பாத பின்பு பெறுமளவும் ஆறியிருந்தாலோவென்ன? [அவனருள்பெறுமளவாவி நில்லாது] அவன் ப்ரஸாதம் கிட்டுந்தனையும் ப்ராணன் தரிக்கிறதில்லை. ப்ராப்யஸ்யைவ ப்ரார்த்தநீய ப்ராணனைப் பெற்றோமாகில் ஆறியிருக்கலாய்த்தே. [அறுபகல்மாலையும் நெஞ்சு சோரேன்] பகலை முடித்துக்கொடுவந்த ஸந்த்யையும் தோற்றுகின்றது; செஞ்சசையும் காண்கிறிலேன். மாலையும் காண்கிறிலேன்; செஞ்சசையும் காண்கிறிலேனென்னுதல். அதாவது மேல்வருகிற காலத்தினுடைய க்ரௌர்யத்தைப் பார்த்தவாறே, பண்டு ஸந்த்யைதான் தேட்டமானபடி. வழிபோகாநிற்க இங்கோராற்பிரந்தால் "கைப்பொருளைக்கொண்டாகிலும் வழிகாட்ட, வல்லடிக்காரனாகிலும் இடையாதோ?" என்னுமாபோலே; (ஆச்வாஸகரான பெரியவுடையாரையும் முடித்துக் கொண்டுபோந்து) - ஏகாக்ஷி ஏககர்ணி தொடக்கமான ராக்ஷஸிகள் கையில் காட்டிக்கொடுத்து ராவணன் போமின்றப்போலே, ஆச்வாஸகமான பகலை முடித்துக்கொண்டு வந்த ஸந்த்யை தேட்டமாம்படியாய் வந்து விழுந்தது. [சிவனொடுபிரமன் இத்யாதி] பிராட்டியோடே அப்பாரான ருத்ராதிகளோடு வாசியற உடம்புகொடுத்தும் சிலம் ஸ்வரூபமாய் நித்யமான ஆத்மாவை முடியாநின்றது. காபாலிகர்க்கு எளிதான துயர் எனக்கு அரிதாய்த்து! ஆனால் புறம்பே போயாகிலும் தரித்தாலோவென்ன? [சேவுனிப்புகுமிடம்] ஸர்வாதாரனானவுடம்பை விட்டு இனி எங்கே புக்கு தரிப்பது? "அவனுடம்பு கிட்டிற்றில்லை" என்று, ஹிதஞ்சொல்லுகிற உங்களுடம்பைப்பற்றி தரிக்கவோ? (தோழிமாரோடே) வருத்தந்தீர்த்தனம் பண்ணி தரித்தாலோவென்ன? [ஆருக்கு] வடிகர்க்குத் தமிழர் வார்த்தைசொல்லுமாபோலே, சொல்லும் வார்த்தைக்கு அதிகாரிகளார்? வருத்தந்தீர்த்தனம் பண்ணும் தோழிமார் எனக்கு முன்னேயழிந்தார்கள். [என் சொல்லுகேன்] கேட்பாரைப்பெற்றால்தான் சொல்லுகைக்குப் ப்ரகாரமுண்டோ? [அன்னைமீர்காள்] தோழிமார் அழிந்தார்கள், நாட்டார் அயலார், சேஷித்திருக்கிற நீங்களாயிருந்தீர்கள்; உங்களுக்குச் சொல்லவோ? மீனுக்குத் தண்ணீர் வார்த்தாற்போலே நித்யஸூரிகளுக்குச் சொல்லவோ? "ஈச்வரோஹம்" என்றிருக்கிற ப்ரதிகளுக்குச் சொல்லவோ? விஷயப்ரவணராய்த்திரிகிற ஸம்ஸாரிகளுக்குச் சொல்லவோ? அன்றியே, ஆசார்யஸமாச்ரயணம்பண்ணி ஸ்வரூபஜ்ஞானம் பிறந்து, "தரும்பு முறுக்கலாகாது" என்றிருக்கிற செய்கொடுட்டைகளுக்குச் சொல்லவோ? ஆருக்கு எத்தைச்சொல்ல? சொல்லப் ப்ரகாரமில்லை; கேட்கைக்கு அதிகாரிகளுமில்லை.

ஆருக்கென்சொல்லுகேனன்னைமீர்காள்! ஆருயிரளவன்றிக்கூர்தண்
வாடை*
காரொக்குமேனிநங்கண்ணன்கள்வம் கவர்ந்தஅத்தனிநெஞ்சம்அவன்
கணஃதே*
சீருற்றவகிற்புகையாழ்நரம்பு பஞ்சமந்தண்பசுஞ்சாந்தணைந்து*
போருற்றவாடைதண்மல்லிகைப்பூப் புதுமணமுகந்துகொண்டெறியு
மாலோ! (7)

ஈ-—ஏழாம்பாட்டில், கீழ்ச்சொன்ன பதார்த்தங்களெல்லாம் திரளவந்து கண்ணாரமே நலிகிற படியைச் சொல்லுகிறாள். [ஆருயிர் என்று தொடங்கி] - மிக்கிருந்துள்ள குளிர்த்தவாடை இவ்வாத்மாவோடு ஸமமளவல்ல. மேகம்போலேயிருக்கிற திருநிறத்தையுடையனும் நமக்கு பவ்யனுமான க்ருஷ்ணனுடைய, அநுஸந்தித்தாரை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணவல்ல சேஷ்டிதங்களாலே அபஹ்ருதமான ஒப்பில்லாத என்னுடைய நெஞ்சானது அவன்பக்கலதே. [சீருற்ற அகிற்புகையென்று தொடங்கி] -

அறநல்ல அகிற்புகை யாழோசை பஞ்சமமாகிறபண் பசுஞ்சாந்து இவற்றைத் துணையாகக்கொண்டு பொருகையிலே சமைந்தவாடை ச்ரமஹரமான மல்லிகைப்பூவினுடைய புதியநாற்றத்தை முகந்து கொண்டு எதிராநின்றது.

இ.—ஏழாம்பாட்டில், கீழ்ச்சொன்ன பாதகபதார்த்தங்கள் திரள்வந்து கண்பாராதே நலியாநின்ற தென்கிறாள். [ஆருக்கு இத்யாதி] - நெஞ்சம் உங்களதாய் பாதகபதார்த்தங்களை போக்யவஸ்துக்களென்று அவற்றைத் தேடித்திரிகிற உங்களுக்குச் சொல்லவோ ! 'நெஞ்சு தந்தாமதன்றோ ? அநுகூலபதார்த்தங்கள் தேட்டமன்றோ ? என்ன, உங்களுக்குச் சொல்லுவோம்; — [ஆருயிர் அளவன்றிக்கூர்தண்வாடை] - மிக்கிருந்துள்ள குளிர்ந்தவாடை இவ்வாத்மாவோடு போமளவன்று. பாதகவர்க்கம் மிகைத்தாலும் நெஞ்சுஉண்டாகில் தரிக்கலாமிறே; அது மீளாதவிடத்தே புக்கது. [காரொக்கும் இத்யாதி] - மேகம் போலே ச்ரமஹரமான சிறத்தாலே அஸ்யபரமசக்தி நமக்கு பவ்யனான க்ருஷ்ணனுடைய கள்வமுண்டு - ஸம்ச்லேஷதசையிற் சொன்ன தாழ்வுகளும் செயல்களும்: அவற்றாலே அபஹ்ருதமாய் அத்விதீயமான என்நெஞ்சானது அவன்பக்கலது. [சீருற்ற இத்யாதி] - ப்ரதாநமான வாடையை ஒழியவே பாதகபதார்த்தங்கள் அநுமலுமிகயா மேல்விழுந்து நலிகிறபடியைச் சொல்லுகிறது. சீருற்றலாவது - அழகு மிக்கிருக்கை: அதாகிறது - பரிமளிதமாய் க்ராணேந்த்ரியத்தை நலியுமவளன்றிக்கே கண்ணையும் நலியும் படியான தர்சநீயமான அகிற்புகை, யாழ்நரம்பு பண்பட்டிருந்துள்ள யாழ், பஞ்சமமாகிற பண். [தண் பசுஞ்சாந்து] - ஆறிக்குளிர்ந்து செவ்வி அழியாதசாந்து. [அணைந்து] - இவற்றைக் கூட்டிக்கொண்டு. [போருற்றவாடை] - "கூடின பரிகரங்கள் பங்களம்" என்னும்படி தனிவீரஞ்செய்கிற வாடை. பொருகையிலே சமைந்தவாடையானது. [தண்மல்லிகை இத்யாதி] - ச்ரமஹரமான மல்லிகைப்பூவின் செவ்வியான பரிமளத்தை முகந்துகொண்டு. முகப்பார் தாழ்வறம்படி குறைவற்றிருக்கிறபடி. [எதிருமாலோ] - இவளுடைய விரஹாக்நி தன்மேல் தட்டாதபடி கடக்கநின்று வீசாநின்றது. ஆருயிர் அளவன்றிக்கூர் தண்வாடை என்றர்வயம்.

௬.—ஏழாம்பாட்டு. கீழ்ச்சொன்ன பாதகபதார்த்தங்கள் திரளவந்து கண் பாராதே நலியாநின்றதென்கிறாள்.

[ஆருக்கென் சொல்லுகேனித்யாதி] நெஞ்சும் உங்களதாய், பாதகபதார்த்தங்களை "போக்ய வஸ்துக்கள்" என்று அவற்றைத்தேடித்திரிகிற உங்களுக்குச் சொல்லவோ? இத்தைச் சொன்னவாறே என்! நெஞ்சும் "தந்தாமதாய்," தந்தாமுக்கென்ன அநுகூலபதார்த்தங்களும் தேடக்கடவதன்றோ?" என்பர்களிறே தங்கள்மாளிகையாலே; உங்களுக்குச்சொல்லுவோம்:- [ஆருயிரளவன்றிக்கூர்தண்வாடை] மிகைத்துக்குளிர்ந்து வருகிறவாடையானது நம்முடைய ஆத்மாவினளவிற்போமதல்ல. பாதகபதார்த்தங்கள் நிறைத்தாலும் தரித்திருக்கலாமிறே, நமக்கென்ன ஒருநெஞ்சுபெற்றோமாகில்; "என்நெஞ்சினாரும் அங்கேயொழிந்தார்" என்று அதுவும் மீளாதவிடத்தே புக்கதே. [கார் இத்யாதி] மேகம்போலே ச்ரமஹரமான வடிவையுடையனாய், அவ்வடிவைக்காட்டி நம்மை பரவசராக்குமாத்தி நமக்கு பவ்யனான க்ருஷ்ணனுடைய, கள்வமுண்டு-ஸம்ச்லேஷதசையில் தாழ்ந்தபேச்சுக்களும் செயல்களும்; "பேச்சும்செய்கையும்" என்னக் கடவதிறே; அவற்றாலே யபஹ்ருதமாய் அத்விதீயமான என்நெஞ்சானது அவன் பக்கலது. [சீர் இத்யாதி] "இங்குள்ளது கேவலசரீரமேயிறே" என்றறிந்தனளவில்லை அவ்வ வாடைதானே ப்ரதாநமாய் வருகையன்றிக்கே, மற்றும் அப்ரதாநமானவற்றையும் கூட்டிக்கொண்டு, "ஏகஸ்யாஸம்பதே ஸங்கா:" என்கிறபடியே அநுமதமுமிகயா மேல்விழாநின்றது. சீருற்றவித்யாதி] சீருறுகையாவது - அழகுமிக்கிருக்கை. அதாவது என்னென்னில்,-பரிமளமே யாய்க் கண்ணுக்குப்புகைந்து பருஷமாமாகாரமின்றிக்கே யிருக்கை. பண்பட்டயாழ், பஞ்சமமாகிற பண். [தண்பசுபஞ்சாந்து] ஆறிக்குளிர்ந்து வாஸிதமான த்ரவ்யங்களில் செவ்விமாறாத சாந்து. [அணைந்து] இவற்றைக் கூட்டிக்கொண்டு. [போருற்றவாடை] "கூடினபரிகரங்கள் பங்களங்கள்" என்னும்படி தனிவீரம் செய்கிற வாடையானது. பொருகையிலே சமைந்த வாடையானது. [தண்மல்லிகைப்பூ] ச்ரமஹரமான மல்லிகைப்பூவின் செவ்விப்பரிமளத்தை முகந்துகொண்டு. முகப்பார் தாழ்வேயாய்த்து; மணத்திற்குறையில்லை. [எதிருமாலோ] இவள்

விரஹாக்நி தன்னைக் கதுவாதபடி. கடக்க நின்று வீசாநின்றது; அம்பைக்காய்ச்சி எய்வாரைப் போலே.

புதுமணமுகந்துகொண்டெறியுமாலோ பொங்கிளவாடைபுன்செக்கராலோ*
அதுமணந்தகன்றநங்கண்ணன்கள்வம் கண்ணனிற்கொடிதினியதனில்
உம்பர்*
மதுமணமல்லிகைமந்தக்கோவை வண்பசுஞ்சாந்தினிற்பஞ்சமம்வைத்து*
அதுமணந்தின்னருளாய்ச்சியர்க்கே ஊதுமத்தீங்குழற்கேயுய்யேன்நான். (௮)

ஆ.—எட்டாம்பாட்டில், கீழ தனித்தனியும் திரளவும் பாதகமானவை ஒன்றுக்கொன்று முற்கோலிவந்து மேல்விழுந்து நலியாநின்றன என்கிறாள். [புதுமணமென்று தொடங்கி] - என்னை நலியக் கிளர்ந்து இளகிப்பதிக்கிற வாடையானது புதுமணத்தை முகந்துகொண்டு எறியாநின்றது; செவ்வானம் மறைகிற தசையுமாய்த்து; அப்படி ஸம்ச்லேஷித்து விச்லேஷித்த க்ருஷ்ணனுடைய சேஷ்டிதம் அவன்தன்னிலுங்காட்டில் பாதகமாகாநின்றது; பின்னை அதுக்குமேலே. [மதுமணமல்லிகையென்று தொடங்கி] - மதுவையும் மணத்தையுமுடைய மல்லிகையினுடைய செறிந்தகோவை, அழகிய பசுஞ்சாந்து இவையும் நலியாநின்றன; அதுக்குமேலே அப்படியேகலந்து பரிமாறுகைக்காக பஞ்சமமாகிற பண்ணிலேவைத்து ஊதுகிறகுழலுக்கே தரிக்கமாட்டுகிறிலேன்.

இ.—எட்டாம்பாட்டில், தனித்தனியும் திரளவும் பாதகமானவை ஒன்றுக்கொன்று முற்கோலி நலியாநின்றன என்கிறாள். [புதுமணமுகந்துகொண்டு எறியுமாலோ பொங்கிளவாடை] - என்னைநலியக் கிளர்ந்து இளகிப்பதிக்கிற வாடையானது மல்லிகையின் செவ்விப்பரிமளத்தை முகந்துகொண்டு எறியாநின்றது. இவ்வாடைக்கு ஸ்த்ரீவதம் பண்ணப்பண்ண நூதேநிரோயமாய்ச் செல்லுகிறபடி. [புன்செக்கராலோ] - செவ்வானமும் மறையாநிற்கிற தசையாய்த்து. ஸந்த்யைதான் பகலென்னும் படியிறே மேல்வருகிற மாலை. [அதுமணந்தகன்ற] - அப்படி ஸம்ச்லேஷித்துப்பிரிந்த, வரக்கடவ ஆவிர்ப்பாவம்படியாய்த்துக் கலந்து பிரிந்தபடி. இப்படி அவகாஹித்த இவர் பாசுரமின்றிக்கே படாநிற்க, தூரஸ்த்தரான நாம் இதுக்கு என்னபாசுரமிட்டுச் சொல்லுவது? 'மோஹிக்குள்ளதனையும் சொல்லுவோமோ?' என்று எம்பெருமானார் அருளிச்செய்வர். [நங்கண்ணன் கள்வம் கண்ணனிற் கொடிது] - கலக்கிறபோது நமக்கு ஸ்வம் என்னும்படியிருந்த க்ருஷ்ணனுடைய தத்காலத்திற் பரிமாற்றம், அவன்தன்னிலுங்காட்டில் பாதகமாகாநின்றது. கலக்கிறபோது தாழ்வுகள் தோற்றப் பரிமாறின பரிமாற்றத்தைக்காட்டில் அவன்தானே நல்லனென்கை. [இனியதனில் உம்பர்] - பின்னையும் அதுக்குமேலே. [மதுமணமல்லிகை மந்தக்கோவை] - மதுவையும் மணத்தையுமுடைத்தான மல்லிகையாலே செறியத்தொடுத்த மாலை. [வண் பசுஞ்சாந்து] - அழகிய பசுஞ்சாந்து இவை நலியாநின்றன. [சாந்தினில்] - அதுக்குமேலே பஞ்சமமாகிற பண்ணையும் கூட்டிக்கொண்டு இக்குழலோசை பாதகமாகாநின்றது என்னுதல்; இவற்றிலே பஞ்சமமாகிற பண்ணையும் கூட்டிக்கொண்டு குழலோசை பாதகமாகாநின்றது என்னுதல். [அது மணந்து] - அப்படியே கலந்து பரிமாறுகைக்காக ஊதுகிற குழலோசைக்கே தரிக்கமாட்டுகிறிலேன். அப்படிக்கலந்த இன்னருளாய்ச்சியர்க்கே ஊதுமவையுமாம். [இன்னருளாய்ச்சியர்க்கே] - தன்ப்ரஸாதத்துக்கு விஷயபூதைகளான இடைப்பெண்களுக்கு. [தீங்குழல்] - இனியகுழல். ஆகன்போகவிட்டுக் குழலூதுமவனிறே. [உய்யேன் நான்] - கீழவற்றுக்குப் பிழைத்தாலும் குழலோசைக்குப் பிழைக்கமாட்டேன். குழலோசை தான் காத்துக்கிடக்கிறவரைத் தொடை குத்திப்புறக்கி, உறங்குகிற பெண்களையெழுப்புவது?

ஈடு.—எட்டாம்பாட்டு. கீழ் தனித்தனியும் திரளவும் பாதகமானவை ஒன்றுக்கொன்று முற்கோலி நலியாநின்றனவென்கிறாள்.

[புதுமணமுகந்துகொண்டெறியுமாலோ பொங்கிளவாடை] செவ்விப்பரிமளத்தை முகந்துகொண்டெறியாநின்றது, ஸ்த்ரீவதமென்றஞ்சாதே கிளர்ந்து இளகிப்பதிக்கிற வாடையானது. [புன்செக்கராலோ] செக்கர்வானமும்போய் மறையுமளவாய்த்து; மேல் வருகிறகாலத்தினுடைய தன்மையைப்பார்த்தவாறே, பகலோபாதி ஸந்த்யையும் தேட்டமாய் வந்துவிழுந்தது.

[அதுமணக்குறித்யாதி] வார்க்குக்கு அவிஷயமாம்படியாய்த்துக் கலந்தது. சொவிஷயமாக இருபத்துநாலாயிரம் க்ரந்தம் சொன்னவன், ஏம்ச்லேஷவிஷயமாக வொன்றும் சொல்லிற்றிலனிறே. அவிஷயமாகவே வாக்குக்கு. "சோகச்லோகத்வமாகத:" என்று சோகவிஷயமாக விறே சொல்லிற்று. அப்படி கலந்தகன்று நமக்கு பய்யஞுவதுடைய கள்வம் - கலக்கிற போதைத் தாழ்ந்த பேச்சுக்களும் பரிமாற்றங்களும். [கன்னவிற்கொடிது] கலக்கிறபோது நமக்கு ஸ்வம் என்னும்படியிருக்க க்ருஷ்ணனுடைய அக்காலத்தில் பரிமாற்றம், அவன் தன்னிற் காட்டில் பாதகமாகாநின்றது. இச்செயல்களில் இன்னம் அவன்றானே நல்லன். [இனியத னிலும்பர்] பின்னையும் அதுக்குமேலே. [மதுமணமல்லிகைமந்தக்கோவையித்யாதி] மதுவையும் மணத்தையுமுடைத்தான மல்லிகையாலே செறியத்தொடுத்தமாலை, அழகிய பசுஞ் சாந்து, இவையும் நலியாநின்றன: அதுக்குமேலே பஞ்சமமாகிற பண்ணையும் கூட்டிக்கொண்டு குழலோசை பாதகமாகாநின்றதென்னுதல்; இவற்றிலே பஞ்சமமென்கிற-பண்ணையும் கூட்டிக் கொண்டென்னுதல். [அதுமணக்கு] அப்படியே கலக்கைக்காகவென்னுதல், அப்படிகலந்த ஆய்ச்சியர்க்கென்னுதல். [இன்னருளாய்க்கிமர்க்கே] தன்ப்ராமாதத்துக்குஇலக்கான இடைப் பெண்களுக்கே. [ஆய்ச்சியர்க்கேனுதும்] அதாவது காவல்காத்துக் கிடக்கிறவர்களைத்தொடை குத்திபுறக்கே ஒரு பருவத்திற் பெண்களை மயிரைப்பற்றியிழுக்குமாய்த்து இக்குழலோசை. இன்னார்க்குத் தொடுத்தஅம்பு என்னுமாபோலே. அல்லாத பாதகபதார்த்தங்களுக்கு ஜீவித் திருந்தேனேயாகிலும், இக்குழலோசைக்கு நான் ஜீவிக்கமாட்டேன். அவையெல்லாம் ஒருபடியும் இது ஒருபடியுமாய்த்து நலிகிறபடி.

ஊதுமத்தீங்குழற்கேயுய்யேன்நான் அதுமொழிந்திடையிடைத்தன்
செய்கோலத்*
தூதுசெய்கண்கள்கொண்டொன்றுபேசித் தூமொழியிசைகள்கொண்
டொன்றுநோக்கி*
பேதுறுமுகஞ்செய்துநொந்துநொந்து பேதைநெஞ்சறவறப்பாடும்பாட்டை*
யாதுமொன்றறிகிலமம்மவம்ம மாலையும்வந்ததுமாயன்வாரான். (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், இடைப்பெண்கள்நடுவே இவன் திருக்குழலூதிய நகைகிறபோது நடுவே நடுவே தன்னுற்றுமையாலே சில உக்திசேஷ்டிதங்களைப் பண்ணிநின்றுகொண்டு பாடுகிறபாட்டை நினைத்து ஒன்றும் தரிக்கமாட்டுகிறிலேன் என்கிறாள். [அதுமொழிந்தென்று தொடங்கி] - திருக்குழல் ஊதாநிற்க, நடுவேநடுவே இடைப்பெண்களுடைய நோக்குக்களுக்கும் வடிவழகுக்கும் தோற்றுப் பேசநில்லாதபடியான வார்த்தைகளைச்சொல்லியும் குழலூதுகையிலே மிகவும் மூண்டு வாயாலே வார்த்தைசொல்ல அவஸரமில்லாதபோது தன்கருத்தை அவர்களுக்கு அறிவிக்கவல்ல திருக்கண்களாலே வார்த்தைசொல்லியும் தன்திருமிடற்றில் அழகியபேச்சோடுகூடின இசைகளாலே அழகியகண்களாலே நோக்கி ஈடுபடுத்துமாபோலே ஈடுபடுத்தியும் தன்மிடற்றில் ஓசை தன்செவிக்கினித்தாகையாலே தான் மூன்றும் மிகவும் ஈடுபட்டுப் பின்னை பெண்களுடைய நெஞ்சில்லாவகையை அறமறக்கும்படி பாடுகிறபாட்டை. அதுவொழிந்தென்று- அது தவிர என்னவுமாம். [ஆதுமொன்று தொடங்கி] - ஒன்றும் தெரிகிறதில்லை. அதுக்கு மேலே மிகவும் பயாவஹமாம்படி ராத்ரியும் வந்தது. ஆச்சர்யபூதனானவனும் வருகிறிலன். [மாயன்] - தன்னைப் பிரிந்தார், லஜ்ஜிக்கும்படி தானே இழவாளனாய் வந்து தோற்றுமவன்.

இ.—ஒன்பதாம்பாட்டில், இடைப்பெண்கள்நடுவே இவன் குழலூதுகிற போது நடுவே தன்னுற்றுமையாலே சில உக்திசேஷ்டிதங்களைப் பண்ணிநின்றுகொண்டு பாடும்பாட்டை நினைத்து ஒன்றும் தரிக்கமாட்டுகிறிலேன் என்கிறாள். [ஊதும் இத்யாதி] - "கீழ்வலை மிகை" என்னும்படி குழலோசை பாதகமாகிறபடி. [இடையிடை - அதுமொழிந்து] - குழல் ஊதும்போது "பிரிந்தேன் ஆற்றேன்" என்றுப் போலே நீசபாஷணங்களை வைத்தாய்த்துக் குழலூதுவது. அவற்றைத் தன்வாயாற் சொல்லவொண்ணாமையாலே 'அது' என்கிறாள். "அதுவொழிந்து" - தவிர்ந்தென்றுமாம். [தன்செய்கோலத் தூதுசெய்கண்கள்] - தனக்குத்தானே ஆபரணமாய்த் தன்கருத்தை அவர்களுக்கு அறிவிக்கவல்ல திருக்கண்கள்.

நெஞ்சில் மறந்தாலே "கிட்டக்கடவோமல்லோம்" என்றிருக்கிற பெண்களுடைய காலைச் சென்றுபிடியா நிற்கும் கள்ளன் என்கை. "ஸந்தேசைஸ் ஸாமமதுரை:ப்ரேமகர்ப்பைரகர்விதை:, ராமேணாச்வாஸிதா கோப்யோ ஹரிணா ஹ்ருதசேதஸ:" நம்பி மூத்தபிரான் செய்யுமதுதைச் செய்யாநிற்கும். [ஒன்றுபேசி] - கண்ணனது வாக்வ்ருத்தியை அதிகரித்தது. பேச்சால் பிறக்கும் ஸ்பஷ்டதை நோக்காலே பிறக்கை. [தூமொழியிசைகள் கொண்டொன்று நோக்கி] - அழகிய பேச்சோடுகூடின இசைகளாலே கண்ணாலே நோக்கி ஈடுபடுத்துமாபோலே ஈடுபடுத்தி. இசையோடே கூடச்செய்தேயும் இயலும் தெரிந்திருக்கை. வாக்வ்யவஹாரமும் நேத்ரவ்ருத்தியும் மாறுடினபடி. [பேதுறுமுகஞ்செய்து நொந்து நொந்து] - கேட்கிறவர்களிலும் தன்செவி பணித்தாகையாலே, "நாம் ஈடுபடுகிறபடி கண்டால் அபலைகளானவர்கள் என்படுகிறார்கள் ?" என்று மிகவும் நொந்து; "வன்னெஞ்சரான நம்மை வருத்தினபடி கண்டால் அபலைகள் என்படுகிறார்களோ" என்று மிகவும் நோவுபட்டான். [பேதைநெஞ்சறவறப்பாடும் பாட்டை]- பெண்களுடைய நெஞ்சும் கூடலை மறமறந்து பொருந்தும்படி பாடுகிற பாட்டை. ஒரு மிடற்றோசையிலே அழிகிற நெஞ்சுகொண்டிறே மறம்கொண்டாடுவது. [ஆதுமொன்று அறிகிலம்] - அது பாதகமாகிறபடி எனக்கு ஒன்றும் தெரிகிறதில்லை. [அம்மவம்ம மாலையும் வந்தது] - மிகவும் பயாவஹமாம்படி ராத்திரியும் வந்தது. இனியிருந்து க்லேசிக்கவேண்டாதபடி இது முடித்தே விடும்போலே யிருந்தது. [மாயன் வாரான்] - தன்னைப்பிரிந்தார் லஜ்ஜிக்கும்படி தானே பிறவாளனாய்வந்து காலைபிடிக்கும் ஆச்சர்யபூதன் வருகிறிலன்.

௯.—ஒன்பதாம்பாட்டு. பண்டே இடைப்பெண்கள்நடுவே இவன் குழலூதுகிற போது நடு நடுவே தன்னுற்றமையாலே சிலசேஷ்டிதங்களைப்பண்ணுமின்றுகொண்டு பாடும்பாட்டை நினைத்து ஒன்றும் தரிக்கமாட்டுகிறிலேனென்கிறாள்.

[ஊதுமத்தீங்குழற்கேயுய்யேன்நான்] "கிழிலவை மிகை" என்னும்படி குழலோசையே பாதகமானபடி. [இடையிடை அதுமொழிந்து] "பிரிந்தேன் - ஆற்றேன்" என்றாப்போலே சொல்லுகிற சேஷபாஷணங்களை இடையிடையே சொல்லியாய்த்துப் பாடுவது. தாழ்ந்த செயலும் பேச்சும் தன் வாயால் சொல்லமாட்டாமையாலே, 'அது' என்கிறாள். எம்பார், இவ்விடத்தே வந்தவாறே, "மெருள்ளதனையுஞ்சேர்ந்தேனோ? தேசிகருங்கூடப் பாசுரமிட்டுச் சொல்லமாட்டாதே 'அது' என்றால், மத்யஸ்தரான நாம் இதுக்கு என்னபாசுரமிட்டுச் சொல்லுவது!" என அருளிச்செய்தாராம். அன்றிக்கே, "அதுமொழிந்து" அது தவிர்ந்தென்னவுமாம்: நடுவே நடுவே பாடுகிற பாட்டைவிட்டென்னவுமாம். [தன் செய்ய இத்யாதி] தனக்குத் தானேயாபரணமாய், தன் கருமையை அவர்களுக்கு அறிவிக்கவல்ல திருக்கண்கள். நெஞ்சில் மறந்தாலே "கிட்டக்கடவோமல்லோம்" என்றிருக்கிற பெண்களுடைய காலைச்சென்றுபிடியா நிற்கும் கள்ளனென்கை. நம்பிமூத்தபிரான் செய்யுமதையடையச் செய்யாநிற்குமாய்த்து. குழலூதுகையிலே மூண்டு நீண்டு வார்த்தைசொல்லவொண்ணாமையாலே வாக்வ்யாபாரத்தை பெரட்டுக்கொள்ளாநிற்குமாய்த்து. பேச்சாற்பிறக்கும் ஸ்பஷ்டதை நோக்காலே பிறக்கை [தூமொழியிசைகள் கொண்டொன்று நோக்கி] அழகிய பேச்சோடே கூடின இசைகளாலே, கண்ணாலே நோக்கி யீடுபடுத்துமாபோலே யீடுபடுத்தி, இசையோடே கூடச்செய்தேயும் இயலும் தெரிந்திருக்கை. வாக்வ்யவஹாரமும் நேத்ரவ்ருத்தியும் மாறுடினபடி. [பேதுறுமுகஞ்செய்து நொந்து நொந்து] கேட்கிறவர்களிலும் தன்செவிபணித்தாகையாலே, "நாம் ஈடுபடுகிறபடி கண்டால் அபலைகளானவர்கள் என்படுகிறார்களோ? என்று மிகவும் நொந்து. "வன்னெஞ்சரான நம்மை வருத்தினபடி கண்டால், அபலைகளென்படுகிறார்களோ?" என்று மிகவும் நோவுபட்டான். [பேதை நெஞ்சறவறப்பாடும் பாட்டை] பெண்களுடைய நெஞ்சு கூடலை மறந்துவந்து பொருந்தும்படி பாடுகிற பாட்டை. [ஆதுமொன்றறிகிலம்] அது பாதகமாகிறபடி எனக்கொன்றும் தெரிகிறதில்லை. [அம்மவம்ம] பூசல்பூசல். [மாலையும் வந்தது] மிகவும் பாதகமாம்படி ஸந்த்யையும் வந்தது. இனியிருந்து க்லேசிக்கவேண்டாதபடி இது முடித்தே விடும்போலேயிருந்தது. [மாயன்வாரான்] தன்னைப்பிரிந்தார் லஜ்ஜிக்கும்படி தானேபிறவாளனாய்வந்து காலைபிடிக்கும் ஆச்சர்யபூதன் வருகிறிலன்.

மாலையும்வந்ததுமாயன்வாரான் மாமணிபுலம்பவல்லேறணைந்த*
கோவலநன்னாகுகளுங்கனைக்குமாலோ கொடியனகுழல்களுங்குழறுமாலோ*
வாலொளிவளர்முல்லைக்கருமுகைகள் மல்லிகையலம்பிவண்டாலுமாலோ*
வேலையும்விசும்பில்விண்டலறுமாலோ என்சொல்லியுய்வனிங்கவனை
விட்டே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், ராத்ரியும் வந்து மஹாவஸாதம் வர்த்தியாநிற்க அவனைக் காண்கிறிலோம்; இனி பாதகங்களுடைய ஸந்நிதியில் அவனையொழியத் தரிப்பரிது என்கிறாள். [மாயன் வாரான்] தன்னைக்காணவே ப்ரதிகூலங்களெல்லாம் அநுகூலமாம்படி தோற்றும் ஆச்சர்யபூதனானவனும் வருகிறிலன். [மாமணியென்று தொடங்கி] - கழுத்திற்பூண்ட பெரியமணிகள் ஓசைப்படும்படி வலியஏறு அணைகையாலே புதுக்களித்த நாகுகள் களியாநின்றன. வரைபணித்தாக வந்து இடைப்பெண்களெல்லாருங்கூடக் கேட்டார்க்குத் தரிப்பரிதாக ஊதுகிற குழல்களும் கூடி த்வநியாநின்றன. [வாலொளியென்று தொடங்கி] - மிக்க ஒளியையுடைத்தாய்க் கொண்டு வளர்கிற முல்லை கருமுகைகள் மல்லிகை இவற்றிலுள்ளே புக்குமூழ்கி வண்டுகள் ஆலியாநின்றன. கடலும் ஆகாசத்திலே கிட்டிக் கூப்பிடாநின்றது; இவற்றின் நடுவே அவனையொழியப் பிழைக்கும்படி யெங்ஙனே?

இ.—பத்தாம்பாட்டில், வருவதாகச் சொன்னகாலம் வந்திருக்க, அவன் வருகிறிலன்; பாதகங்களுடைய ஸந்நிதியில் அவனையொழிய தரிப்பரிது என்கிறாள். [மாலைவித்யாதி] - மாலையையும் அவனையும் கூடப்பிணைத்து விட்டான்போலே காணும். அவன்வருவானாகக் குறித்துப் போன காலம் வந்தது; தான் வருகிறிலன். [மாயன்] - தன்னைக்காணவே ப்ரதிகூலங்களெல்லாம் அநுகூலமாம்படி தோற்றும் ஆச்சர்யபூதன் வரக்காண்கிறிலேன். [மாமணிவித்யாதி] - பெரியமணி த்வநிக்கும்படி வலிய ஏறு அணைகையாலே தர்சநீயமான வடிவையுடைத்தாய், "துல்யசீலவயோவ்ருத்தாம்" என்கிறபடியே ருஷபத்துக்கு சத்ருசமான பருவத்தையுமுடைய நாகுகள் களியாநின்றன. [வல்லேறு] - நாகு பிடிகொடுத்ததில்லை என்னுமளவே தொடங்கினது முடிய நடத்தவல்ல ருஷபம். உகளுகை - கலவிக்குப் போக்குவிட்டு ஸம்ப்ரமத்தைப் பண்ணுகை. [கொடியன] - கேட்பார்க்குத் தரிப்பரிதாயவை. [குழல்களும்] - தூரப்போன பசுக்களை மீட்கைக்காக அங்குமிங்கும் சிதறின இடையரெல்லாரும் திரண்டு ஊதுகிற குழல்களும். [குழறும்] - எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி விரவிக்கொண்டு எழாநின்றது; நாகுகளால்வந்த நலிவுக்குமேலே குழல்களும் நலியாநின்றன. [வாலொளிவித்யாதி] - மிக்க ஒளியையுடைத்தாய்க் கொள்கொம்புமூட வளருகிற முல்லை, அப்படியிருந்துள்ள கருமுகை, அது போலேயிருந்துள்ள மல்லிகை, இவற்றிலுள்ளே முழுகி வண்டுகள் ஆலியாநின்றன; கடலும் ஆகாசத்திலே கிளர்ந்து கூப்பிடாநின்றது. ஸம்போக மத்யத்திலே தைர்யபங்கம் பிறந்து கூப்பிடும்படிக்கு ஸ்மாரகமாய் நலியாநின்றது. [இங்கு அவனை விட்டு என்சொல்லியுய்வன்] - பாதகபதார்த்தங்கள் நடுவு அவனையொழிய எத்தைச் சொல்லி உஜ்ஜீவிப்பது? இவை மேல்விழுந்து நலியாநின்றன; அவனோ வந்திலன். நான் உஜ்ஜீவிக்கவென்பதொன்றுண்டோ? முடிந்தேன்! என்றபடி.

ஈடு.—பத்தாம்பாட்டு. வருவதாகச் சொன்ன காலம் வந்திருக்க அவன் வருகிறிலன்; பாதகங்களுடைய ஸந்நிதியில் அவனையொழிய தரிப்பதெங்ஙனே? என்கிறாள்.

[மாலையித்யாதி] - மாலையையும் மாயனையும் கூடப் பிணைத்துவிட்டான்போலே காணும். வருவதாகக் குறித்துப்போன காலம் வந்தது, அவன்தான் வருகிறிலன். அவனைக்காணவே, ப்ரதிகூலமெல்லாம் அநுகூலமாய்த்தோற்றுமிறே. [மாமணிபுலம்ப] பெருத்த மணி த்வநிக்க. [வல்லேறு இத்யாதி] நாகு பிடிகொடுத்தாலல்லது மீளாதாய்த்து, அபிமதம் கைபுகுந்தாலல்லது மீளாத ஏறுகளோடே கலந்த தர்சநீயமான ஸ்நேஹத்தையுடைய நாகுகள், அந்த ஸம்ச்லேஷத்தாலுண்டான ஹர்ஷத்தாலே ஸம்ப்ரம வ்ருத்திகள் பண்ணாநின்றன. நான் சோகத்தோடேயிருக்கிறேன், இவை ஹர்ஷத்துக்குப் போக்குவிடாநின்றன. பின்னை, அவன் செய்ததென்னென்னில்? - அவன் இன்னமும் வாராநின்றான்.

கிருஷிபண்ணுகின்றன். [கொடியனவித்யாதி] தூரப்போன பசுக்களை ஓரிடத்திலே திரட்டு கைக்காக அங்குமிங்கும் சிதறின இடையரடையத் திரண்டு எல்லாருமொக்கக் குழல்களை வாங்கி ஸந்த்யாலமயத்திலே தங்கள் வரவை ஊராறியும்படியாகவும் பெண்கள் நெஞ்சில் மற மறும்படியாகவும் எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி ஒன்றாக விரவியெழும்படி நூதுவதொரு குழலோசையுண்டு; அது பாதகமாகாநின்றதாய்த்து. [வாலொளி இத்யாதி] - மிக்க ஒளியையுடைத்தாய்க் கண்டவிடமெங்கும் தானேயாம்படி படர்ந்த முல்லை, அப்படியிருக் கிற கருமுகை, மல்லிகை, இவற்றிலே புக்கு மதுபானம் பண்ணி அலைகிற - ஆலிக்கிற வண்டுக ளானவை ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுகின்றன: திர்யக்குக்களானவை, ஸம்ச்லேஷத்தால் வந்த ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டுக் களிப்பனவும், ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுவனவுமாகா நின்றன. [வேலையும்] கடலும், ஆகாசத்திலே நின்று கூப்பிடாநின்றது. ஸம்போகமத்யத் திலே தைர்யபங்கம் பிறந்து கூப்பிடும்படிக்கு ஸ்மாரகமாய் நலியாநின்றது. [இங்கவனைவிட்டு- என்சொல்லியுய்வன்] பாதகபதார்த்தங்களின் நடுவே, அவனையொழிய எத்தைச்சொல்லி யுஜ்ஜீவிப்பது? இவை மேன்மேலென நலியாநின்றன; அவனோ வந்திலன், நான் உஜ்ஜீவிக்க வென்று ஒன்றுண்டோ? முடிந்தேனென்றபடி.

அவனை விட்டகன்றுயிராற்றகில்லா அணியிழையாய்ச்சியர் மாலைப்பூசல்*
அவனைவிட்டகல்வதற்கேயிரங்கி யணிகுருகூர்ச்சடகோபன்மாறன்*
அவனியுண்டுமிழ்ந்தவன் மேலுரைத்த ஆயிரத்துளிவைபத்துங்கொண்டு*
அவனியுளலற்றிநின்றுய்ம்மின்தொண்டீர்! அச்சொன்னமாலைநண்ணித்
தொழுதே. , (11)

ஒ.—நிகமத்தில், அவன்பக்கல் சாபலமுடையார் இத்திருவாய்மொழியைச் சொல்லி அவனைப் பெறுங்கோள் என்கிறார். [அவனையென்று தொடங்கி] - எம்பெருமானை விச்லேஷித்து ஆத்மதாரண க்ஷமைகளன்றிக்கேயிருக்கிற விலக்ஷணைகளான இடைப்பெண்கள் அவன்வரவுதாழ்த்த ஸந்த்யா காலத்தில் கூப்பிட்ட பாசுரத்தை ஆழ்வார் அவனுடைய பிரிவாலே நோவுபட்டு எல்லார்க்கும் எல்லாப் படிகளாலும் ரக்ஷகனானவன் விஷயமாகச் சொன்ன ஆயிரந் திருவாய்மொழியிலும் இத்திருவாய் மொழியைக் கொண்டு. [அவனியென்று தொடங்கி] - அப்படி ரக்ஷகனுகச்சொன்ன எம்பெருமானை அவன்பக்கல் சாபலமுடையார் பூமியிலே நிரந்தரமாக ஆச்ரயித்து உஜ்ஜீவியுங்கோள் என்கிறார்.

இ.—நிகமத்தில், அவன்பக்கல் சாபலமுடையார் இத்திருவாய்மொழியைச் சொல்லி அவனைப் பெறுங்கோள் என்கிறார். [அவனைவிட்டகன்று உயிராற்றகில்லா] - அவனை விச்லேஷித்து ப்ராண தாரணக்ஷமைகளன்றிக்கே யிருக்கிறவர்கள். [அணியிழையாய்ச்சியர்] - ஒப்பிக்கப்பட்ட ஆபரணங் களையுடைய இடைப்பெண்கள். "கொங்கைமேற் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து" என்கிறபடியே, அவன்வரவுக்குடலாகத் தங்களை அலங்கரித்து வரும்காலத்தில் வரக் காணாமையாலே கூப்பிட்ட கூப்பீட்டை. [அவனையித்யாதி] - அவனுடைய பிரிவாலே நோவுபட்டு அருளிச்செய்த ஆழ்வார். அவர்களெல்லாரும் பட்ட க்லேசத்தை இவரொருவருமே பட்டாரென்கை. [அவனியுண்டு உமிழ்ந்தவன் மேலுரைத்த] - ஸர்வரையும் ப்ரளயபத்திலே ரக்ஷித்து அழிந்தவற்றை வடக்க உண்டாக்கின ஸர்வேச் வரன்திருவடிகளிலேயாய்த்துச் சொல்லிற்று. விரஹப்ரளயத்தில் நின்றும் தம்மை யெடுக்க வேணு மென்று சொன்ன வார்த்தையாய்த்து. [அச்சொன்னமாலை நண்ணித் தொழுது தொண்டீர்-அவனி யுளலற்றிநின்றுய்ம்மின்] - அப்படி வ்யாமோஹத்தையுடையவனைக்கிட்டித் தொழுது சாபலமுடையார் பூமியிலேநின்று அடைவுகெடக் கூப்பிட்டு உஜ்ஜீவியுங்கோள். இத்திருவாய்மொழியை அப்யஸித்தார்க்கு, என்னைப்போலே "என்சொல்லியுய்வன்?" என்று கூப்பிடவேண்டா; பேற்றிலே அந்வயமென்கை.

ஈடு.—நிகமத்தில், அவன்பக்கல் சாபலமுடையார், இத்திருவாய்மொழியைச் சொல்லி அவனைப் பெறுங்கோளென்கிறார்.

[அவனைவிட்டகன்றுயிர்ஆற்றகில்லா அணியிழையாய்ச்சியர்] அவனை விச்லேஷித்துத் தந்தாமுடைய ப்ராணன்களைக்கொண்டு தரிக்கக்ஷமைகளன்றிக்கே, அவனுடைய வரவுக்கு உறுப்பாக ஒப்பிக்கப்பட்ட ஆபரணங்களையுடைய இடைப்பெண்கள். "கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப்புகுந்து" என்கிறபடியே அவன்வரவுக்குடலாகத் தங்களை யலங்கரித்து வருங்காலத்தில் வரக்காணாமையாலே, திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடியிற் பெண்கள் க்ருஷ்ணவிரஹத்திலே ஒரு ஸந்த்யையிற் கூப்பிட்ட கூப்பீடாய்த்து. [அவனைவிட்டகல்வதற்கே யிரங்கி] (அவனுடைய பிரிவாலே நோவுபட்டு) அவர்கள்சொல்லாநின்றபட்ட க்லேசத்தை இவரொருவரும்பட்டாரென்கை. [அவனியுண்டுமிழ்ந்தவன்மேலுரைத்த] (ஸர்வரையும்) ப்ரளயாபத்திலே ரக்ஷித்து அநந்தரம் யுண்டாக்கின ஸர்வேச்வரன் திருவடிகளிலே யாய்த்துச் சொல்லிற்று! தொண்டர் - அணிகுருகூர்ச்சடகோபன்மாறன், அவனியுண்டுமிழ்ந்தவன்மேலுரைத்த ஆயிரத்துள் அவனைவிட்டகல்வதற்கேயிரங்கி அவனைவிட்டகன்றுயிராற்றகில்லா அணியிழையாய்ச்சியர் மாலைப்பூசல் சொன்ன இப்பத்துங்கொண்டு அம்பரமேநண்ணித் தொழுது அவனியுலகற்றிநின்றும்பின் இப்போது இது சொல்லிற்று விரஹப்ரஸங்கத்தில் நின்றும் தம்மையெடுக்கவேணு மென்கைக்காக. [அத்தொண்டனாலே நண்ணித்தொழுது-அவனியுலகற்றி நின்றும்பின் தொண்டர்] அப்படிப்பட்ட வ்யாமோஹத்தை விளைக்கவல்லவனைக் கிட்டி, அவனைத்தொழுது, அவன்பக்கல் ஸாபல்யமுடையார், பூமியிலே நின்று அடையக்கூப்பிட்டு உஜ்ஜீவித்துப்போகப்பாருங்கோள். இப்பாசுரத்தையப்யஸிப்பார்க்கு என்னைப்போலே கூப்பிடவேண்டா; "என்சொல்லியுய்வன்" என்று ஆசைப்பட்ட பேறுபெறுகையில் கண்ணழிவில்லை;

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பத்தாந்திருவாய்மொழி—மாலைநண்ணி : ப்ரவேசம்

ஈ:—பத்தாந் திருவாய்மொழியில், அறுக்கும்வினையில் தான் ஆர்த்தமாந்த தாமஸத்தில் அதிகரிக்கும் நாளொன்றென்று அதிகிலேன் என்று பதறுவதும் செய்து, மல்லிகைகமழ் தென்றலிலே தன் ஸௌகுமார்யம்பெருத்தே நோவுபட்ட ஆழ்வாருக்கு இவர்பட்ட துக்கமெல்லாம் நீங்கும்படி திருக்கண்ணபுரத்திலே நின்றருளினபடியைக் காட்டியருளி "நான்அன்றே உம்மைமெழுந்திருக்கிறேன்; இச்சரீராவஸாநஸமயத்திலே நீர் அபேக்ஷித்தபடியே செய்கிறோம்" என்று எம்பெருமான் அருளிச்செய்ய அத்தாலே மிகவும் ப்ரீதராய் ப்ரீதிப்ரகர்ஷத்தாலே, "ஸர்வஸமாச்ரயணீயனாய்த் திருக்கண்ணபுரத்திலே நின்றருளின எம்பெருமானை உங்களுடைய துக்கமெல்லாம் நிவ்ருத்தமாம்படி ஆச்ரயியுங்கோள்" என்று பரரைக்குறித்து அருளிச்செய்கிறார். வேதாந்தங்களில் ப்ராரப்தகர்மத்தினுடைய முடிவு - பகவத்ப்ராப்திகாலமாகச் சொல்லாநிற்க, இச்சரீராவஸாநத்தைக் காலமாக எம்பெருமான் அருளிச்செய்யக் கூடினபடி என்னென்னில் - ஸ்வஸாமர்த்யத்தாலே ஆச்ரயிக்குமவர்களுக்குத் தங்களுடைய உபாஸநங்கள் முற்றில் கொண்டுபோகைக்காக ப்ராரப்தகர்மாவஸாநத்தைக் காலமாகச் சொல்லிற்று அங்கு; இங்கு - கேவல பகவத் ப்ரஸாதத்தாலே பெறுமவர்களுக்கு அக்காலவிளம்பம் வேண்டாமையாலே சரீராவஸாநம் காலமாகச்சொல்லுகை கூடும். அங்ஙனேயாகில், இவ்வதிகாரிகள் "எம்பெருமானே ரக்ஷகன்" என்னும் அறிவுபிறந்து அவன்பக்கலிலே தங்கள்பரத்தைப் போகட்ட அநந்தரத்திலே அவனைப் பெறுந்தொழிகிறதென்? என்னில் - அவனை ப்ரபந்நனானவன் ப்ரபத்த்யநந்தரத்திலே இச்சரீரத்தைவிடில் மரணபயத்தாலே அஞ்சி இஜ்ஜ்ஞாநத்துக்கு ஆளாகாதென்றும் ஜ்ஞாநப்ரவர்த்தநார்த்தமாக இவனிருக்கவேண்டுகையாலும் சரமதேஹத்தோடே எம்பெருமான் தான்

விரும்புகையாலும் சரீராவஸாநத்தளவுமிருக்கப் பொறுக்கிறான்; அங்ஙனேயாகில் ப்ரபந்நனான இவன் நிர்த்துக்கனுமிராதே, வ்யாத்யாதிபீடைகளாலே நலிவுபடுவானென்? என்னில், ஸம்ஸாரத்திலே பழகிவந்த இவனுக்கு இங்கே நிர்துக்கமாக ஸுகங்களைக்காட்டில் இவற்றைப்பற்றித் தன்னை ஆசைப் படாதேயொழியுமென்றுபார்த்து துக்கோத்தரமாக வைக்கிறான். அதுவும் இவர்கள்பக்கலுண்டான அநுக்ரஹாதிசயமான பின்பு இவ்விடத்தில் ஒரு ஸங்கடமில்லை.

இ.—பத்தாந்திருவாய்மொழியில், அறுக்கும்வினையிலே "அவனைப் பெற வேணும்" என்றும் "பெறும்நாள் என்று?" என்றும் மநோரதித்தார். மநோரதித்த அநந்தரம் லாபக்ஷணமையாலே மல்லிகை கமழ் தென்றலிலே மிகவும் நோவுபட்ட இவர்க்கு, இவர் துக்கமெல்லாம் நீங்கும்படி திருக்கண்ணபுரத்திலே நின்றருளினபடியைக் காட்டியருளி "உம்மைப்பெறுகைக்கு மநோரதமும் இழவும் நம்மதன்றோ" என்று ஸமாதாநம்பண்ண, "என் அபேக்ஷிதம் ஸித்திக்கும்நாள் என்று?" என்று இவர்கேட்க, "சரீராவஸாநத்திலே பேறாகக் கடவது" என்றருளிச்செய்ய, "நமக்குஇனி பேற்றுக்குத் தட்டில்லை" என்று ஹ்ருஷ்டராய், ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஸர்வஸமாச்ரயணீயனாய்க்கொண்டு திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளிநின்றான், அவனை ஆச்ரயிக்கப் பாருங்கோள்!" என்று பரோபதேச ப்ரவ்ருத்தராகிறார். "ஆச்ரயிக்குமிடத்திலும் அவன்திருவடிகளிலே பக்தியைப் பண்ணுங்கோள்! அதுக்குப் பரிகரமில்லாதார் ப்ரபத்தி பண்ணுவது. அதுக்குத் தக்க வ்யவஸாயமில்லாதார் உக்திமாத்ரத்தையாகிலும் பண்ணுவது. அவ்வளவு உண்டாகவே அவன் விடான். ஆனபின்பு அவனையே ஆச்ரயிக்கப் பாருங்கோள்!" என்கிறார். இவர் தாம் இழந்துநோவுபடுதல், சிறிது ஆச்வாஸம் பெற்றாராகில் பரஹிதத்திலே ப்ரவ்ருத்தராதல் செய்யுமித்தனை. வேதாந்தங்களில் ப்ராரப்தகர்மாவஸாநம் பகவத்ப்ராப்திக்குக் காலமாகச் சொல்லாநிற்க இச்சரீராவஸாநத்தைக் காலமாக அருளிச்செய்த இது அவற்றோடு விரோதியாதோ? என்னில், உபாஸகரான பக்தியோகநிஷ்டர்க்கு ஸாதநஸமாப்தியிலே பெறவேண்டுகையாலே கர்மாவஸாநமாகக் கடவது. ப்ரபந்நனுக்குக் கேவல பகவத்ப்ரஸாதத்தாலே பேறாய்க் காலவிளம்பம் வேண்டாமையாலே சரீராவஸாநமாகக் கடவது. இத்திருவாய்மொழிதன்னிலும் பக்தியைவிதித்து அதில் அசக்தர்க்கு ப்ரபத்தியை விதித்ததிறே. "தஸ்ய தாவதேவ சிரம் யாவந் நவிமோக்ஷ்யே" என்கிற வாக்யம் ந்யாயாபேக்ஷமாகையாலே, இந்ந்யாயம் அதிலும் ஸஞ்சரிக்கும். ப்ரபந்நனுக்கு அவன்பக்கலிலே பரந்யாஸம் பண்ணினவனுக்கு ஆகையாலே தன்பக்கல் விளம்பஹேதுவில்லை; அவன் ஸர்வசக்தியாகையாலே அவன்பக்கல் விளம்பஹேதுவில்லை. ஆனபின்பு ப்ரபத்திபண்ணினஅநந்தரம் பெறுதொழிகிறது என்? என்னில், ப்ரபத்யநந்தரத்திலே சரீரத்தைவிடில் மரணபயத்தாலே, இஜ்ஜ்ஞாநத்துக்கு ஆள் கிடையாதென்றும், ஜ்ஞாநப்ரவர்த்தகார்த்தமாக இவனிருக்க வேண்டுகையாலும், சரமதேஹந்தந்தை ஈச்வரன்தான் விரும்புகையாலும் சரீராவஸாநத்தளவுமிருக்கப் பொறுக்கிறான். "பகவந்தம் ப்ரபந்நா ஸா" என்று பெரிய பெருமாள்திருவடிகளிலே ப்ரபந்நையான மாதவி ருசிகளுடைய தீவ்ர ஸம்வேகத்தாலே அநந்தரம் முக்தையானாளிறே. ஆனால், இவன் நிர்துக்கனுமிராதே கர்மத்தாலே இருக்கிறான் என்று தோற்றும்படி ஸாம்ஸாரிகமான வ்யாத்யாதிகளோடே இருப்பானென்? என்னில்,—இதில் உபேக்ஷைபிறந்து தன்னையே ஆசைப்படுகைக்காக. ஸுகோத்தரனாகவைக்கில் இதுதன்னிலே சபலனாய்த் தன்னை விஸ்மரிக்குமென்று. ஆக இப்படிவைக்கிறதும் அநுக்ரஹ கார்யமாகையாலே ஒரு தட்டில்லை; ப்ரபதநகாலத்தில் இவ்வதிகாரிக்குத்தான் சரீரஸமநந்தரம் நரகப்ரவேசம் பண்ணுதல் கர்ப்பவாஸம் பண்ணுதல் செய்யாதே பகவல்லாபமுண்டாக வேணுமென்னும் இவ்வளவே இவனுக்கு ஸம்பவிப்பது: ஆகையாலே, தத்க்ரது ந்யாயத்தாலே அவ்வளவிலே பலமாகக்கடவது என்னவுமாம்.

ஈடு.—அறுக்கும் வினையிலே அவனைப் பெறவேணுமென்று மநோரதமாய்ச் சென்றது; மநோரதவைபவத்திலே அபேக்ஷித்தபடி கிடையாமையாலே மிகவும் க்லேசப்பட்டபடி சொல்லிற்று மல்லிகைகமழ்தென்றலில்; அதுதான் ராத்ரி வ்யஸநமாய் நோவுபட்டபடியிறே, இப்படி மநோரதித்துப் பெறாமையாலே நோவுபடுகிற இவருடைய அவஸாதத்தை யநுஸந்தித்து, ஸர்வேச்வரன் "நீரோ இப்படி மநோரதிப்பீரும் அது கிடையாமல் க்லேசப்படுகிறீர்? உம்மைப் பெறவேணுமென்று மநோரதிப்போமும் நாமன்றோ? உம்மைக் கிடையாமை

யால் இழவுபட்டோமும் நாமன்றோ? உமக்கொரு குறையுண்டோ? கலங்காப்பெருநகரம் கலவிருக்கையாயிருக்க அவ்விடத்தைவிட்டுத் திருக்கண்ணபுரத்திலே நாம் வந்து ஸந்நிதி பண்ணிற்றும் உமக்காகவன்றோ? சரீராவஸாநத்திலே உம்முடைய அபேக்ஷிதம் செய்யக் கடவோம்" என்று ஸமாதாநம் பண்ண, ஸமாஹிதராய், இவரும் ஹ்ருஷ்டராகிறார். அவன் "இன்றுசெய்யக்கடவோம்" என்றால் அப்போதே பெற்றதாக நினைத்து ஹ்ருஷ்டராகலாம்படி யிறே அவன்படியிருப்பது.

இப்படி ஹ்ருஷ்டராய், "அவன்படியிதுவானபின்பு, ஸர்வேச்வரன் ஸர்வஸமாச்ரயணீயனுமாய்க்கொண்டு திருக்கண்ணபுரத்திலே ஸந்நிதி பண்ணினான்; எல்லாருமொக்க அவனையாச்ரயியுங்கோள்; ஆச்ரயிக்குமிடத்தில், அவன்திருவடிகளிலே பக்தியைப் பண்ணுங்கோள்; பக்திக்குப் பரிகரமில்லாதார் ப்ரபத்தியைப் பண்ணுங்கோள்; அதுக்கேடான அத்யவஸாயமில்லாதார் உக்திமாத்ரத்தையாகிலும் பண்ணுங்கோள்; அவ்வளவேகொண்டு அவன்தான் கைவிடான்; ஆனபின்பு, எல்லாருமொக்க அவனை யாச்ரயியுங்கோள்" என்று பரோபதேசத்திலே ப்ரவ்ருத்தராகிறார். மோஹித்துக்கிடந்தாராகில் கடக்குமித்தனைபோக்கி, உணர்ந்தாராகில் பிறர்க்கு ஹிதஞ்சொல்லியல்லது நிற்கமாட்டார்.

"சரீராவஸாநத்திலே உம்முடைய அபேக்ஷிதம் செய்யக்கடவோம்" என்று ஈச்வரன் சொன்னவிடமும், அது கேட்டு இவர் ஹ்ருஷ்டரானவிடமும் கூடாது; "ப்ராரப்தகர்மாவஸாநத்திலே மோக்ஷமாகக் கடவது" என்றன்றோ வேதாந்தங்களில் வாஸனை" என்னில்,— இத்திருவாய்மொழிதன்னிலே, "பக்தியைப்பண்ணுங்கோள்" என்றும், "அது மாட்டாதார் ப்ரபத்தியைப்பண்ணுங்கோள்" என்றும் சொல்லிற்றிறே. அதில் உபாஸகனுடைய அதிகாரியைப்பற்றச் சொல்லுகிறது; இங்கு ப்ரபந்நனுக்குச் சொல்லுகிறது: *தஸ்ய தாவதேவ சிரம் யாவந் ந விமோக்ஷ்யே* என்கிற வாக்யமன்றோ இவ்வர்த்தத்தைச் சொல்லுகிறது. "இதுதான் சரீராவஸாநத்தைப் பற்றச்சொல்லுகிறதோ, கர்மாவஸாநத்தைப்பற்றச் சொல்லுகிறதோ? என்று விசாரித்து, கர்மாவஸாநத்தைப் பற்றச்சொல்லுகிறதென்று ஸித்தாந்திக்கிறதில்லையோ? அத்தோடு விரோதியாதோ இது?" என்னில்,—ந்யாயாநுக்ருஹீதமாயிறே வாக்யம் அர்த்தப்ரத்யாயகமாவது; உபாஸகனுக்குத் தான் பற்றினவுபாயம் முற்றிப் பலிக்கவேண்டுகையாலே அவ்வளவும் ந்யாயம் நடக்கும். இவன், முதலடியிலே "என்னுடைய ஸர்வாபராதங்களுக்கும் கடவாய் நீயே" என்றுகொண்டு ஸர்வேச்வரன்பக்கலிலே பரந்யாஸம் பண்ணினவனிறே; "இவன்தான் செய்கிறது ஒன்றுண்டாய் அது பக்வமாய்ப் பெறவேணும்" என்னும் விளம்பஹேதுவுமில்லை! இவன்தான் பரந்யாஸம்பண்ணின ஈச்வரனுக்கு அசக்தியுண்டாய் அது விளம்பஹேதுவாகிறதுமன்று. ஆக, இப்படி ந்யாயங்கள் காட்டினவாறே இவனுக்கு சரீராவஸாநத்திலே பேறுகைக்குத் தட்டில்லையிறே. இனித்தான் *பகவந்தம் ப்ரபந்நா ஸா பகவந்தமவாப ஸா* என்று மாதவி ப்ரபத்திபண்ணி அநந்தரம் பெற்றாளாகச் சொல்லாநின்றதிறே. மூத்தவோபாக்யாநத்திலே வந்தவாறே "நரகாநுபவம் பண்ணுகிறவர்கள் பகவந்நாமச்ரவணத்தாலே அநந்தரம் முக்தரானார்கள்" என்றதிறே; "அவதாரரஹஸ்யஜ்ஞானமுடையவன் இச்சரீராவஸாநத்திலே பெறக்கடவன்" என்றே சொல்லாநின்றதிறே; *த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி* *ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி* என்றும் சொல்லாநின்றதிறே. ஆனால், ப்ரபத்தி பண்ணின அநந்தரத்திலே பகவத்ப்ராப்தியாகவேண்டாவோ? "இவ்விரோதியைப்போக்கி உன் திருவடிகளைத்தரவேணும்" என்றன்றோ இவன் அபேக்ஷிக்கிறது. பின்னையும், அபிமதமான சரீரத்தோடே யிருக்கிறவிருப்பு கர்மசேஷத்தாலேயாயவோ, ஈச்வரன்வைக்க இருக்கிறதுவோ என்னில்? ஈச்வரன் வைக்கிறானாகில், அவனுக்குச் சிலதோஷம் ப்ரஸங்கிக்கும்; அவன்தான் நம்விரோதியை நடுவே துண்டித்து அவ்வருகே கொண்டுபோகிறேன் என்று சொன்னத்தோடும் விரோதிக்கும்; ஆனபின்பு கர்மவச்யரோபாதி ஸாதநாந்தரத்வநுபவம் இவனும் பண்ணியிருக்கையாலே கர்மத்தாலேயா மித்தனையன்றோ! இனி, கர்மம் நடையாடக்கடவதாகில் அவ்வளவும் போகத்தட்டேன்? என்னில்,—அது வேண்டா; அதிகாரிவிசேஷத்தாலே. இவன் ப்ரபத்திபண்ணினவனந்தரம் முக்தனுமாகில் இதுதன்னை நச்சுப்பொய்கையோபாதியாக நினைத்

தன்றி ஆள்பற்றாது; இனி இவனை இங்கே வைகாசிருத்தவே, ஸ்ரீபீஷ்மரையிட்டு நாட்டுக்கு வெளிச்சிறப்பைப் பண்ணிக்கொடுத்தாற்போலே, இவன் சிலர்க்கு உபதேசித்தும், இவனுடைய வ்ருத்தங்களைக்கண்டு திருந்துவாருமாய், இங்ஙனே சில நன்மைகளுக்கும் உடலாயிருக்கும்; இனித்தான் "இவன் தன்னைத் தந்த சரீரமன்றோ" என்று இச்சரமசரீரத்தை ஈச்வரன் தானாக உபேக்ஷிக்கவும் மாட்டான். இவன்தான் ப்ரபத்தி பண்ணுகிற ஸமயத்திலே "இப்போதே விரோதிபோய் உன்திருவடிகளைப் பெறவேணும்" என்னும் த்வரையும் இவனுக்கு உண்டாக ஸம்பாவனையில்லை; முகம் பழகினதாகையாலே "இத்தை விட" என்றால் கடுக இசையான்; இனியொரு சரீரபரிக்ரஹம் பண்ணுதல் ஸம்ஸாரம் பண்ணுதல் செய்யாதொழிய வேணுமென்னுமளவாய்த்து, இவனுக்கு உண்டாகியுள்ளது; ஆகையாலே தத்க்ரது ந்யாயத்தாலே அப்படியே பெறுமிருக்கும்; இவனுடைய நினைவையும் பற்ற "இவன்தான் இதிலே சாபலம் பண்ணியிருந்தானாகில் சாதுநாளிருந்திடுவானுக்கு" என்றிருக்கும் ஈச்வரன். "ஆனால், இங்கிருக்கிற சாதுநாளும் ஆதிவ்யாதிகளுக்கு இடங்கொடாதபடி அவ்வளவாக வ்யாவ்ருத்தி தோற்ற இவனை ஸுகோத்தரனாக வையாதொழிவானென்? நாட்டாரோபாதி ஒன்றையிழந்தபோதாக சோகித்தும் ஒன்றினுடைய லாபமுண்டானபோது ஸந்துஷ்டனாய்ப் போவதிருந்தும் போரும்படிக்கீடாக வைக்கிறதென்?" என்னில்; இவன்தான் "இவ் விரோதியைப் போக்கி யுன்னைத் தரவேணும்" என்றே அபேக்ஷித்தது; இதுதான் தன்னைத் தெரியாதிற்கச் செய்தேயும் விடமாட்டாதிருக்கிறவன், இதிலே ஸுகோத்தரனாக்கி வைக்குமன்று, "இதுதானே நன்றாயிருந்ததாகில் இன்னம் சிலநாள் இதுதானே அநுவர்த்திக்கிடுக" என்றிருக்குமிறே; இவனுடைய இச்சைக்கீடாக வைக்குமன்று இன்னமும் ஒரு சரீரத்திலே யிவனுக்கு ருசி உண்டாகவும் கூடுமே; ஆகையாலே, இவனுடைய ஹிதபரனாய் "இவனிருந்தபடியிருக்கிறான்" என்றிருக்கும். ஆகையாலே, முகம் பழகின இச்சரீரம் தன்னடையே கழிந்து இனியொரு சரீரத்திலே இவனுக்கு ருசி பிறப்பதற்கு முன்னே, ஈச்வரனுக்குக் காரியம் செய்து தலைக்கட்டவாயிருக்கும். முகம் பழகினது தன்னடையே கழிந்துகொடு நிற்கும்; மேல் வரப்புகுகிறது அறியாமையாலே அதில் ருசியில்லை. "இதுதான் செல்லாது" என்று போலியாக அறிந்தும் வைக்குமே. இவன் முதலிலே "இத்தைத் தவிர்த்துத்தரவேணும்" என்று ஒரு வார்த்தை சொல்லிவைக்கையாலே, அவனுக்கு அபுருஷார்த்தம் செய்தானாகவும் வேண்டாவிறே. இனி சரமதசையிலே காஷ்டபாஷாணஸங்கியனுமிருக்குமிறே. ஆகையாலே முதல் சொன்ன வார்த்தையைக் கொண்டு இவன், விலக்க மாட்டாதவளவிலே ஈச்வரன் காரியஞ்செய்து தலைக்கட்டும். அசித்கல்பனாய்க்கிடக்கிறவன் தலையிலே ஒரு தேவையிடேன், நானே நினைக்கக்கடவேன்" என்று சொல்லிவைத்தானிறே. "இச்ச்லோகத்வயமும் எம்பெருமானுடைய ஸர்வஸ்வம்" என்று சொல்லக் கடவதிறே. *ஸ்த்திதே மநஸி*-நின்றவாறில்லா நெஞ்சம் ஓரிடத்திலே நிற்பது. பட்டிதின்று திரியும் பசுவுடையவனுக்கு ஒன்றில் ப்ரவர்த்திக்க வொண்ணாதிறே; நெஞ்சைக்கொண்டு ப்ரவர்த்திக்கவேணுமிறே புருஷார்த்தம் பெறும்போதும்; *தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்* என்னானிறே. நாட்டார் ஸர்வதி ஸம்யோகத்துக்கு ஸாதனாநுஷ்டானம் பண்ணாநிற்க, அவன்தான் வந்து உபஸ்த்தானம் பண்ணாநிற்க, "நீ என் நாயன்றோ!" என்று நமஸ்கரித்துக் கடக்கநிற்கவல்ல விரக்தனிறே இவ்வார்த்தை சொல்லுகிறான். *ஸுஸ்வஸ்த்தே சரீரே* - பரிணாமித்ரவ்யமான சரீரமும் ஒரு நிலையிலே நிற்பது. *தாதுஸாம்யே ஸ்த்திதே* - அதுக்கு உறுப்பாக தாதுக்களும் ஒன்று முட்டங்கி ஒன்றுமிறுகையன்றிக்கே இவையுமெல்லாம் ஸமமாய், சரீரத்திலே ஒரு லாகவமும் பிறந்து, ஸத்த்வம் தலையெடுத்தபோதாக நம்மை யாவனொருவன் ஸ்மரிக்கிறான்- "நாம் ஆர்? சரீரம் ஏது? இது அசித்தாயிருந்தது; தேஹாதிரிக்தனாயிருப்பானொருவன் ஆத்மாவானான்: அவன்தான் ஈச்வரனுக்கு சேஷபூதன்; அவனைப்பெறுகை இவ்வாத்மாவுக்கு மோக்ஷமாகிறது" என்று ஸ்மரித்து. *விச்வரூபஞ்ச மாம்* - குடல் துடக்காலே முட்டாயத்தால் வரும் ஸம்பந்தம் ஆத்மாவுக்காமாபோலே, இவற்றுக்கு வந்ததொன்று தனக்கு வந்ததாம்படி எல்லாவற்றையும் சரீரமாகவுடையனாயிருக்கிற என்னை. *அஜம்*-இவனைப்போலே கர்மபந்தநமாகக் கலக்கமின்றிக்கே யிருக்கையிறே. *ததஸ்தம்* இத்யாதி - மடையாடித்திரியுமன்று

இவனுக்கும் உண்டிறே இக்கினாவு; அதிக்கல் பணப்பை இடுக்குமவன்றும் "இவன் வினைத்தலைவன்" என்று நேரைவிடாதே கொண். அவனை யெப்போதும் நினைத்தபடியே இருப்பன். "மத்பக்தம்" என்றவாறு பாழ்போகுமவனையோ அவன் பற்றிற்று? நெடுநாள் பச்சையிடுவித்துக் கொண்டு காயகாலத்திலே வந்தவாறே பச்சையிடாத நாளை எண்ணினாகற்றுமவனையோ பற்றிற்று? "நயாமி பரமாம் கதிம்" என்னவன் சொல்லிற்றே ராட்டியை அத்தவாளத் தலையைவிட்டு மறைத்துக்கொடுபோமாப் போலே, தானே கையைப்பிடித்துக் கொடுபோமாயத்து. ஆதி வாஹிகரை விக்காட்டியாதல் பெரிய திருவடியை வரக்காட்டியாதல் கொடுபோகை யன்றிக்கே, அதிவாஹிகரில் ப்ரதானனுமான தானே கொடுபோம்.

மாலைநண்ணித் தொழுதெழுமினோவினைகெட*
காலைமாலை கமலமலரிட்டுநீர்*
வேலைமோதும்மதிள்சூழ் திருக்கண்ணபுரத்து*
ஆலின்மேலால்அமர்ந்தான் அடியிணைகளே. (1)

ஆறா.—முதற்பாட்டில், 'உங்களுடைய ஸகலதுக்கங்களும் போம்படி திருக்கண்ணபுரத்திலே நின்றருளின எம்பெருமானை ஆச்ரயியுங்கோள் !' என்று இத் திருவாய்மொழியிற் சொல்லுகிற ஆச்ரயணத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார். [மாலை நண்ணி] - ஸ்நேஹயுக்தராய். [காலைமாலை கமலமலர்] - ஸர்வகாலங்களுக்கும் ஸர்வபுஷ்பங்களுக்கும் உபலக்ஷணம். [ஆலின் மேலின்று மேலுக்கு] - ஆச்ரிதருடைய அபேக்ஷிதங்களை துர்க்கடங்களேயாகிலும் கடிப்பிக்கவல்லவனதிருவடிகளை.

இரு.—முதற்பாட்டில், இத்திருவாய்மொழியிற் சொல்லுகிற ஆச்ரயணத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார். [மாலைநண்ணித் தொழுதெழுமினோ] - ஸர்வேச்வரன்திருவடிகளைக் கிட்டி ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கப் பாருங்கோள். "மால்" என்று ஸ்நேஹகார்யமான வ்யாமோஹமாய், மாலைப்பற்றி என்னவுமாம்; பக்தியுக்தராய் என்றபடி. "தொழுதெழு" என்கிற தம்முடைய வாஸனையாலே, "தொழுதெழுமினோ" என்கிறார். [வினைகெட] - பகவத்ப்ராப்தி விரோதியான கர்மமென்னுதல்; மல்லிகை கமழ்தென்றலின் விரஹக்லேசம் தீரும்படியான என்னுதல். [காலைமாலை] - ஆச்ரயணத்துக்குக் காலநியதி இல்லையென்கிறது; "ஆதிஷுவக்தியாய்" என்கிறபடியே ஸர்வகாலத்துக்கும் உபலக்ஷணம். [கமலமலரிட்டு] - ஸர்வபுஷ்பங்களுக்கும் உபலக்ஷணம்; நீங்கள் விரும்பின ப்ராக்ருத த்ரவ்யமே அமையு மென்கை. [நீர்] - அதிகாரிகளும் முன்புத்தை நீங்களே யமையும். [வேலைமோதுமதிள்] - ஸமுத்ரம் அணித்தாகையாலே திரைகள்வந்து மோதா நின்றுள்ள மதிளாலே சூழப்பட்ட திருக்கண்ணபுரத்திலே. ஸமஹிரமான தேசமென்கை. [ஆலின்மேலால் அமர்ந்தான்] - ஸகல லோகங்களையும் வயிற்றிலே வைத்து ஒருபவனான ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளினவன். உங்கள் விரோதி கிரஸங்கள் துர்க்கடங்களேயாகிலும் கடிப்பிக்கவல்லனென்கை. அவன் அடியிணைகளை இறைஞ்சுமின்.

ஈடு.—முதற்பாட்டு. இத்திருவாய்மொழியிற் சொல்லுகிற ஆச்ரயணத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்.

[மாலைநண்ணித்தொழுதெழுமினோ] ஸர்வேச்வரன் திருவடிகளைக் கிட்டி யாச்ரயித்து உஜ்ஜீவிக்கப் பாருங்கோள். "மால்" என்று ஸ்நேஹகார்யமான வ்யாமோஹமாய், மாலைப்பற்றி என்னவுமாம்: பக்தியுக்தராயென்றபடி. 'தொழுதெழுமினோ' என்கிறார்; "தொழுதெழு" என்கிற தம்முடைய வாஸனையாலே. "அருளினன்" என்று ப்ரபத்தியைப்பற்றி இழிந்தவர் ஸர்வேச்வரன் இப்பாசுரத்தாலே, தம் வாஸனை தோற்றச் சொல்லுகிறார். [எழுமினோ] ஸர்வேச்வரன் இவ்வாத்மாக்களுக்கெல்லாம் சேஷியாய் அவனைக் குறித்து சேஷத்வாகாரம் எல்லார்க்கும் ஒத்திருக்கையாலே பலர்க்குமாகச் சொல்லுகிறார். [வினைகெட] பகவத்ப்ராப்திவிரோதிகர்மமென்னுதல்; மல்லிகை கமழ் தென்றலின் விரஹக்லேசந்தீரும்படியென்னுதல். [காலைமாலை] "ஆதிஷுவக்தியாய்" என்கிறபடியே ஆச்ரயணத்துக்குக் காலநியதி யில்லையென்கை.

ஸர்வகாலத்துக்குமுபலக்ஷணம். [கமலமலரிட்டு] ஸர்வபுஷ்பங்களுக்கும் உபலக்ஷணம். நீங்கள் விரும்பின ப்ராக்ருத த்ரவ்யமே யமையுமென்கை. [நீர்] அதிகாரிகளும் அன்புத்தை நீங்களே யமையும். [வேலையித்யாதி] ஸமுத்ரம் அணித்தாகையாலே திரைகள் வந்து மோதா நின்றுள்ள மதிளாலே சூழப்பட்டிருக்கின்ற திருக்கண்ணபுரத்திலே. சரமஸ்தானமான தேசமென்கை. [ஆலின்மேலால் அமர்ந்தான்] ஸகலலோகங்களையும் வயிற்றிலே வைத்து ஒரு பவனான ஆலந்தளிரின்மேலே, கண் வளர்ந்தவன். உங்கள் விரோதிஸமூஹங்கள் துர்க்கடங்களேயாகிலும் தகர்க்க வல்லவனென்கை. அவனடியிணைகளை, இறைஞ்சுமின். [ஆலின்மேலால் அமர்ந்தான்] ஆல் - நீரும் இடமும். நீரின்மேல் ஆலென்றுமாம்; ஆலின்மேலிடத்தென்றுமாம். ஆல்-செய்யுளின்பம்.

கள்ளவிழும்மலரிட்டு நீர் இறைஞ்சுமின்*
நள்ளிசேரும்வயல்சூழ் கிடங்கின்புடை*
வெள்ளியேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
உள்ளி* நாளுந்தொழுதெழுமினோ தொண்டரே! (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், சாபலமுடையார் அவன்திருவடிகளை ஆச்ரயிக்குமிடத்தில் அவனுக்கு என்புகுருகிறதோ? என்று ஸ்நேஹிகளுக்கு அஞ்சவேண்டாதபடி க்ஷேமமுடைத்தான திருக்கண்ணபுரத்தை அநுஸந்தித்து நிர்ப்பயராய் நீங்கள் நாள்தோறும் ஆச்ரயியுங்கோள் என்கிறார். [கள்ளவிழும் மலர்] - செவ்விப் பூ. [நள்ளியென்று தொடங்கி] - ஜலஸம்ருத்தியாலே நள்ளிசேரும் வயல்சூழ்ந்த அகழின் அருகே நக்ஷத்ர பதத்தளவும் உயர்ந்திருக்கிற மதிள்சூழ்ந்த திருக்கண்ணபுரத்தை. வெள்ளியாலே செய்யப்பட்டுத் தருதியான மதிளென்றுமாம்.

இ.—இரண்டாம்பாட்டில், "இவ்விஷயத்துக்கு என்வருகிறதோ?" என்று அஞ்சும்படி சாபலமுடையார், ஸுரக்ஷிதமான தேசமென்று நிர்ப்பயராய் நித்யமாக ஆச்ரயியுங்கோள் என்கிறார். [கள்ளவிழும் இத்யாதி] - செவ்விப்பூவைக்கொண்டு ஆச்ரயியுங்கோள். இவன் ப்ரேமத்தாலே செவ்வியையுடைத்தாய் விலக்ஷணமான புஷ்பங்கள் தேடக்கடவன்; "கள்ளார் துழாயும் கணவலரும்" என்கிறபடியே புஷ்பஜாதிமாத்ரமே அமையுமிறே, அவன்படியைப் பார்த்தால். [நள்ளியித்யாதி] - நள்ளியென்று, பெண்ணண்டு. நீர் மாறாத நிலங்களிலேயாய்த்து இவை வர்த்திப்பது. ஜலஸம்ருத்தியை யுடைத்தான வயல்களாலே சூழப்பட்ட அகழின் அருகே. [கிடங்கு] - அகழ். [வெள்ளியித்யாதி] - நக்ஷத்ர பதத்தளவும் ஓங்கின மதிளென்னுதல்; வெள்ளியாலே செய்யப்பட்ட மதிளென்னுதல். வெள்ளியாலே செய்த மதிளென்று நாம் ப்ரத்யக்ஷிக்கிறிலோமாகிலும், ப்ரேமாதிசயத்தாலே இவர்க்கு அது விலக்ஷணமாய்த் தோற்றக்கடவதிறே. [திருக்கண்ணபுரம் உள்ளி] - க்ஷேமத்தாலே நிர்ப்பயமான தேசமென்று அநுஸந்தித்து இவ்விஷயத்திலே சபலராயிருப்பார் நித்யமாகத்தொழுது உஜ்ஜீவியுங்கோள். "அபர்வணி கடல் தீண்டலாகாது" என்னுமாபோலே இவ்விஷயத்தில் காலநியதி இல்லை.

ஈடு.—இரண்டாம் பாட்டு. "இவ்விஷயத்துக்கு என்வருகிறதோ!" என்று அஞ்சும் சாபலமுடையார், ஸுரக்ஷிதமான தேசமென்று நிர்ப்பயராய் நித்யமாக ஆச்ரயியுங்கோளென்கிறார்.

[கள்ளவிழும் இத்யாதி] செவ்விப்பூவைக் கொண்டு ஆச்ரயியுங்கோள். ஸ்நேஹிகளாயிருப்பார், செவ்விப்பூத் தேடுவர்களிறே; "கள்ளார் துழாயும் கணவலரும்" என்கிறபடியே புஷ்பஜாதி மாத்ரமே யமையுமிறே, அவன்படியைப் பார்த்தால். ஆக, த்ரவ்ய தாரதம்யம் பாரான், ஆச்ரயிக்குமவன்ப்ரேமத்தையே பார்க்குமத்தனை. ஸ்ரீபுருஷோத்தமமுடையானுக்கு ராஜபுத்ரன சாத்தின செண்பகப்பூவார்த்தையை ஸ்மரிப்பது. [நள்ளி இத்யாதி] நள்ளியென்று பெண் நண்டு. நீர்மாறாதவிடங்களிலேயாய்த்து அவை வர்த்திப்பது. ஜலஸம்ருத்தியை யுடைத்தான வயல்களாலே சூழப்பட்ட அகழினருகே. [கிடங்கு] அகழ். [வெள்ளி

யித்யாதி] நக்ஷத்ரபதத்தளவும் ஓங்கின மதிளென்னுதல்; வெள்ளியாலே செய்யப்பட்ட (தகுதி யான) மதிளென்னுதல். ப்ரத்யக்ஷிக்கிறிலோமாகிலும் ப்ரமாதிசயத்தாலே அதிவிலக்ஷண மாய்த் தோற்றுமிறே. [திருக்கண்ணபுரமுன்னி] க்ஷேமத்தாலே விர்ப்பயமான தேசமென்று அநுஸந்தித்து, இவ்விஷயத்திலே சபலராயிருப்பார், நித்யமாகத்தொழுது உஜ்ஜீவியுங்கோள். “அபர்வணி கடல் தீண்டலாகாது” என்னுமாபோலே இவ்விஷயத்தில் காலநியதியில்லை.

தொண்டர் நுந்தம் துயர்போக நீர் ஏகமாய்*
விண்டு வாடாமலரிட்டு நீர் இறைஞ்சுமின்*
வண்டுபாடும்பொழில்சூழ் திருக்கண்ணபுரத்
தண்டவாணன்* அமரர்பெருமானையே. (3)

ஒ.—மூன்றும்பாட்டில், சாபலமுடைய நீங்கள் து:க்கம்கெட உபயவிபூதியுக்தனாய்த் திருக்கண்ண புரத்திலே நின்றருளினவனை அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு ஆச்ரயியுங்கோள் என்கிறார். [வண்டு பாடும் பொழில்] - நிரதிசயபோக்யமான திருச்சோலை. [அண்டவாணன்] - லீலாவிபூதியையுடையான். [அமரர்பெருமான்] - நித்யவிபூதியையுடையான்.

இ.—மூன்றும்பாட்டில், திருக்கண்ணபுரத்திலே நின்றருளினவன் உபயவிபூதியுக்தனுமத்து: உங்கள் து:க்கம் கெட அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு ஆச்ரயியுங்கோள் என்கிறார். [தொண்டர்] - ஆசாலேசமுடைய நீங்களென்னுதல். “அஹம் ஸர்வம் கரிஷ்யாமி” என்றிருக்கும் நீங்களென்னுதல். [நுந்தம் துயர்போக] - துயரும் வ்யாவ்ருத்தமாயிறே யிருப்பது. விஷயப்ராவண்யத்தால்வந்த து:க்கமென்னுதல். இறைஞ்சப்பெறாத தன்னுடைய விரஹத்தால் வந்த து:க்கமென்னுதல். [நீர் ஏகமாய்] - நீங்கள் அநந்யப்ரயோஜநராய் என்னுதல். நீங்களெல்லாம் ஒருமிடறாய் என்னுதல். ‘தொண்டர்’ என்கையாலே எல்லாரும் ஒருமிடறாகலாமிறே. [விண்டு வாடாமலர்] - அலரத் தொடங்கினவளவாய்க் கழிய அலர்ந்து வாடாத பூ. செவ்விப்பூவைக்கொண்டு ஆச்ரயியுங்கோள் என்கை. [வண்டுபாடும் இத்யாதி] - வண்டுகள் மதுபாநமத்தமாய்க்கொண்டு பாடாநின்றுள்ள சோலை சூழ்ந்த தேசம்; “ஏதத்ஸாம காயந்நாஸ்தே” என்கிறபடியே நிரதிசயபோக்யமான தேசமென்கை. [திருக்கண்ணபுரத்து அண்டவாணன் அமரர் பெருமானையே] - திருக்கண்ணபுரத்திலேவந்து எளியனாயிருக்கிறவன் உபயவிபூதிநாதனுமத்து. பரமபதநிலயனாய் அயர்வறுமமரர்கள் அதிபதியுமானவன் என்னுதல், லீலாவிபூதிக்கு நிர்வாஹகனுமாய் நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனானவன் என்னுதல். இங்கே ஆச்ரயித்து விரோதியைப்போக்கி, பூர்ணாநுபவம்பண்ண ஒரு தேசவிசேஷம் தேடிப் போகவேண்டா. நித்யஸூரிகளும் இங்கேவந்து அநுபவிக்கும் சீலாதிகுணாதிக்யமுண்டு-இங்கு: ஸம்ஸாரிகளுக்குக் கிட்டவொண்ணாத குறையுண்டு பரமபதத்தில்.

ஈடு.—மூன்றும்பாட்டு. திருக்கண்ணபுரத்திலே நின்றருளினவன் உபயவிபூதிநாத னுமத்து; உங்கள் து:க்கம் கெட அநந்யப்ரயோஜனராய்க்கொண்டு ஆச்ரயியுங்கோளென்கிறார்.

[தொண்டர்] ஆசாலேசமுடையாரான நீங்களென்னுதல், “அஹம் ஸர்வம் கரிஷ்யாமி”க்கு இட்டுப்பிறந்த நீங்களென்னுதல். [நுந்தம் துயர்போக] துயரும் இவர்களுக்கு வ்யாவ்ருத்த மாயிறே யிருப்பது: விஷயப்ராவண்யத்தால் வந்த து:க்கமென்னுதல், இறைஞ்சப் பெறாத து:க்கமென்னுதல். [நீரேகமாய்] நீங்கள் அநந்யப்ரயோஜநரா யென்னுதல், நீங்களெல்லாரும் ஒருமிடறாயென்னுதல். “தொண்டர்” என்கையாலே எல்லாரும் ஒருமிடறாகலாமிறே. [விண்டு வாடாமலர்] அலரத்தொடங்கினவளவாய்க் கழிய அலர்ந்து வாடாத பூ. செவ்விப் பூவைக்கொண்டு ஆச்ரயியுங்கோ ளென்கை. [வண்டுபாடும் இத்யாதி] வண்டுகள் மதுபாந மத்தமாய்க் கொண்டு பாடாநின்றுள்ள சோலை சூழ்ந்த தேசம்; “ஏதத்ஸாம காயந்நாஸ்தே” என்கிறபடியே. நிரதிசய போக்யமான தேசமென்கை. [திருக்கண்ணபுரத்தண்ட வாணனமரர்பெருமானையே] திருக்கண்ணபுரத்திலே வந்து எளியனாயிருக்கிறவன் உபய விபூதிநாதனுமத்து; பரமபத நிலயனாய், அயர்வறுமமரர்க ளதிபதியுமானவனென்னுதல்;

லீலாவிபூதிக்கு நிர்வாஹகனுமாய், நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனுமானவ னென்னுதல். இங்கே ஆச்ரயித்து விரோதியைப் போக்கிப் பூர்ணாநுபவம் பண்ண ஒருதேசவிசேஷம் தேடிப் போகவேண்டா; நித்யஸூரிகளும் இங்கே வந்து அநுபவிக்கும்படி சீலாதிகுணாதிக்யம் உண்டிறே இங்கு. அந்தர்க்கு வைத்த சாவியில் விழித்திருப்பார்க்கு உஜ்ஜீவனமில்லையே; அப்படியன்றிறே இங்குத்தை ஸீல. *ப்ரதிமாஸ்வப்ரபுத்தாநாம்*. இதுக்கு ஆளவந்தார் அருளிச் செய்யும்படி "அம்மேட்டிலும் ஏறிப்பாயாதின்றால் தேசிகருக்குச் சொல்ல வேணுமோ?" என்று.

மானைநோக்கி மடப்பின்னைதன் கேள்வனை*
தேனைவாடாமலரிட்டு நீர் இறைஞ்சுமின்*
வானையுந்துமதிள்சூழ் திருக்கண்ணபுரம்*
தான்நயந்தபெருமான் சரணாகுமே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், திருக்கண்ணபுரத்திலே எம்பெருமானை நப்பின்னைப்பிராட்டி புருஷகாரமாக ஆச்ரயியுங்கோள் என்கிறார். [மானைநோக்கியென்று தொடங்கி] - மான்கள் தோற்கும்படியான நோக்கையும் ஸ்த்ரீத்வத்தையுமுடைய நப்பின்னைப்பிராட்டிக்கு நாதனும் நிரதிசயபோக்யனுமானவனைச் செவ்விப்பூவையிட்டு நீங்கள் தொழுங்கோள். [வானையுந்துமதிளென்றுமேலுக்கு] - மிகவும் உயர்த்தான மதிள்சூழ்ந்த திருக்கண்ணபுரத்தை ஆதரம்பண்ணின ஸர்வேச்வரனானவன்தான் உங்களுக்கு ரக்ஷகனும்.

இ.—நாலாம்பாட்டில், ஆச்ரயிக்குமிடத்தில் நப்பின்னைப்பிராட்டி புருஷகாரமாக ஆச்ரயியுங்கோள்; அவன் உங்களுக்கு ரக்ஷகனுமென்கிறார். [மானைநோக்கி] - மானினுடைய நையும்படியான நோக்கை யுடையவள். மான் தோற்று நாணும்படியாய்த்து நோக்கிருப்பது. [மடப்பின்னைதன் கேள்வனை] - ஸ்த்ரீத்வம் முதலான ஆத்மகுணங்களையுடைய நப்பின்னைப் பிராட்டிக்கு வல்லபனானவனை. [தேனை] - நிரதிசய போக்யனானவனை. இதிறே நான் உங்களுக்குச் சொல்லுகிற வேப்பங்குடி நீர். [வாடாமலரிட்டு நீர் இறைஞ்சுமின்] - செவ்விப்பூவையிட்டு நீங்கள் ஆச்ரயியுங்கோள். [தேனையும் செவ்விப்பூவையும் சேர்க்கைபோலே காணும் ஆச்ரயணமாவது [வானையுந்துமதி] - ஆகாசத்தோடே ஸ்பர்த்தைபண்ணி அத்தைத் தள்ளுமாபோலே இருக்கிறமதிளாலே சூழப்பட்டவூர். துஷ்ப்ரக்ருதிகளுக்குக் கிட்டவொண்ணாதபடி ஸுரக்ஷிதமான ஊரென்கை. [தான்நயந்த பெருமான்] - ஆச்ரிதஸம்ச்லேஷத்துக்குப்பாங்கான தேசம் என்று அத்தை விரும்பி வர்த்திக்கிற ஸர்வேச்வரனானவன். [சரணாகுமே] - உங்களுக்கு ரக்ஷகனும். அம்மதிள் அவனுக்கு அரணாமாபோலே, உங்களுக்கு அவன் மதிளாம்.

ஈடு.—நாலாம்பாட்டு. ஆச்ரயிக்குமிடத்தில் நப்பின்னைப் பிராட்டி புருஷகாரமாக ஆச்ரயியுங்கோள்; அவன் உங்களுக்கு ரக்ஷகனும் என்கிறார்.

[மானைநோக்கி] மானினுடைய நையும்படியான நோக்கையுடையவள். மான் தோற்று நாணும்படியாய்த்து நோக்கிருப்பது. [மடப்பின்னைதன் கேள்வனை] ஸ்த்ரீத்வம் முதலான ஆத்மகுணங்களையுடைய நப்பின்னைப் பிராட்டிக்கு வல்லபனுமுள்ளவனை. [தேனை] நிரதிசய போக்யனானவனை. இவ்வேப்பங்குடி நீரையன்றோ நான் உங்களைக் குடிக்கச்சொல்லுகிறது. [வாடாமலரிட்டு நீரிறைஞ்சுமின்] செவ்விப்பூவிட்டு நீர் ஆச்ரயியுங்கோள். தேனையும் செவ்விப் பூவையும் சேர்க்கைபோலேகாணும் ஆச்ரயணமாவது. [வானையுந்துமதி] ஆகாசத்தோடே ஸ்பர்த்தை பண்ணி அத்தைத் தள்ளுமாபோலே யிருக்கிற மதிளாலே சூழப்பட்ட ஊரை. துஷ்ப்ரக்ருதிகளுக்குக் கிட்டவொண்ணாதபடி ஸுரக்ஷிதமான ஊரென்கை. [தான் நயந்த பெருமான்] "ஆச்ரித ஸம்ச்லேஷத்துக்குப் பாங்கானதேசம்" என்று அத்தை விரும்பி வர்த்திக்கிற ஸர்வேச்வரனானவன். [சரணாகுமே] - உங்களுக்கு ரக்ஷகனும். அம்மதிள் அவனுக்கு அரணானாப்போலே உங்களுக்கு அவன் மதிளாம்.

சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்*
மரணமானால்வைகுந்தம்கொடுக்கும்பிரான்*
அரணமைந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரத்
தரணியாளன்* தனதன்பர்க்குஅன்பாகுமே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில் இப்படி பக்தியோகத்தால் அவனை ஆச்ரயிக்க க்ஷமரன்றிக்கே தன் திருவடிகளை உபாயமாகப்பற்றினார்திறத்தில் செய்தருளும்படியை அருளிச்செய்கிறார். [சரணமென்று தொடங்கி] - தன்திருவடிகளையே உபாயமாகப்பற்றினார் ஜந்மவ்ருத்தாதிகளால் குறையநின்றாரே யாகிலும் அவர்களுக்கு ரக்ஷகனும். மேலும் "எல்லாம்" என்றவற்றுக்குப் பொருள் இப்படியே [மரணமென்று தொடங்கி] - ப்ரபந்நராயின் அவர்களையொழியத் தனக்குச் செல்லாதிருக்கச் செய்தே அவர்கள்இசையக் கொண்டுபோய் சரீராவஸாநத்திலே மஹோபகாரத்தைக் கொடுக்கும் மஹோபகாரகன். பண்டுவாஸிதமான விஷயங்கள் இந்தசரீரத்தோடேபோம்; இனி ஒரு சரீரத்திலே ப்ரவேசித்து விஷயங்களிலே நசைபண்ணுவதுக்கு முன்பில் தசையிலே மிகவும் போக்யமான தன்னழகைக்காட்டி இவனை இசைவித்து அப்போதே விஷயீகரிக்கும் என்றுகருத்து. [அரணமைந்த மதிளென்று மேலுக்கு] - அரணமாகப் போரும் மதிள் சூழ்ந்த திருக்கண்ணபுரத்திலேயிருந்து ஸம்ஸாரிகளுக்கு ரக்ஷகனானவன் தனக்கு ஸ்நேஹிகளானவர்க்கு மிகவும் ஸ்நேஹியாம்.

இ.—அஞ்சாம்பாட்டில், இப்படி பக்தியோகத்தால் ஆச்ரயிக்க க்ஷமரன்றிக்கே தன் திருவடிகளே உபாயமாகப் பற்றினார்திறத்தில் செய்தருளும்படியை அருளிச்செய்கிறார். [சரணமாகும் இத்யாதி] - ஜந்மத்தாலும் வ்ருத்தத்தாலும் ஜ்ஞாநத்தாலும் குறைய நின்றாரேயாகிலும் தன்திருவடிகளே உபாயமாகப் பற்றினார்க்கெல்லாம் ரக்ஷகனும். கீழ் மூன்றுபாட்டாலும் சொன்ன பக்தியோகம் அதிக்ருதாதிகாரம். இதில் சொன்ன ப்ரபத்தி ஸர்வாதிகாரமென்கிறது. [மரணமானால் இத்யாதி] - தன்பக்கலிலே ந்யஸ்தபரனானவன்று தொடங்கி, இவனையொழியத் தனக்குச் செல்லாதிருக்கச் செய்தே இவனுடைய ருசியை வர்த்தித்து சரீராவஸாநத்திலே பரமபதத்தைக் கொடுத்த மஹோபகாரகன், தன்னழகைக்காட்டி அத்தாலே இவற்றுக்கு ருசிபிறக்குமளவும் அவஸரப்ரதீக்ஷனாயிருக்கிறபடியைச் சொல்லுகிறது. [மரணமானாலென்று] - தனக்கு அசக்தியில்லை; இவனுக்குக் கர்த்தவ்யமில்லை; இவன்ருசியைக் கடாக்ஷித்திருக்கிற வித்தனை. இப்பாட்டில் "மரணமானால்" என்றத்தைக்கொண்டிறே கீழ்ச்சொன்ன நிருபணமெல்லாம். [அரணமைந்த மதிள்] - 'நித்யஸூரிகள் பரியவிருக்கிறவன் இங்கே வந்துநின்றான்; என்வருகிறதோ ?' என்று அஞ்சவேண்டாதபடியிருக்கை. [தரணியாளன்] - பூமிக்கு நிர்வாஹகன். ஸம்ஸாரிகளுக்கு ரக்ஷகனென்கை. [தனதன்பர்க்கன்பாகுமே] - தனக்கு ஸ்நேஹிகளானார் பக்கல் அதிப்ரவணனும். [அன்பாகும்] - அன்புடையன் என்று பிரிக்கவொண்ணாதபடி அன்புதான் ஒருவடிவு கொண்டாற்போலே யிருக்கை.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. இப்படி பக்தியோகத்தால் ஆச்ரயிக்க க்ஷமரன்றிக்கே தன் திருவடிகளையே யுபாயமாகப் பற்றினார் திறத்து அவன் செய்தருளும்படியை யருளிச்செய்கிறார்.

[சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்] - ஜந்மவ்ருத்த ஜ்ஞானங்களால் குறைய நின்றாரேயாகிலும், தன் திருவடிகளையே யுபாயமாகப் பற்றினார்க்கெல்லாம் ரக்ஷகனும். கீழ் மூன்றுபாட்டாலும் சொன்ன பக்தியோகம் அதிக்ருதாதிகாரம், இதில் சொல்லுகிற ப்ரபத்தி ஸர்வாதிகாரமென்கிறது; "ஸமோஹம் ஸர்வபூதேஷு" என்னக்கடவதிறே. பகவத்விஷயந் தான் ஸ்பர்சவேதியாயிருக்குமிறே. கைசிகத்தில் பகவத்ஸம்பந்தமுடையானொரு சண்டாளனோட்டை ஸம்பாஷணம் ப்ராம்மணனுடைய ஆசார வைகல்யத்துக்குப் பரிஹாரமாய்த்து. அவ்விடத்திலெல்லாம் சொல்லுகிற அர்த்தம் இதுவேயாய்த்து. [மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்பிரான்] இவன் தன்பக்கலிலே ந்யாஸம் பண்ணினவன்று தொடங்கி இவனை யொழியத் தனக்குச் செல்லாமை யுண்டாயிருக்கச்செய்தேயும், இவனுடைய ருசியை யநுவர்த்தித்து, சரீர விச்லேஷத்தளவும் அவஸரப்ரதீக்ஷனாய் நின்று, பின்னையதுண்டானால் பரம

பதத்தைக் கொடுக்கும் உபகாரகன். தன் திருவடிகளைப் பற்றினவன்றே தானிருக்கிறவிடத்திலே இவனைக்கொடுபோய்ச் சேரவைத்துக்கொள்ள வேண்டியிருக்கச்செய்தேயும், நடுவு இவனிருக்கும் காலநாளும் அவனுக்கு ஒரு பகலாயிரயுகமாயிருக்கையாலே 'மரணமானால்' என்கிறது. "மரணமானால்" என்கிறது - தனக்கு அசக்தியில்லை, இவனுக்குக் கர்த்தவ்யமில்லை, இவன் ருசியைக்கடாக்ஷித்து நிற்கிறவித்தனை. இப்பாட்டில் "மரணமானால்" என்றத்தைக் கொண்டிறே கீழ்ச்சொன்ன திருப்பனமெல்லாம். [அரணமைந்த] 'நித்யஸூரிகள் பரியவிருக்கிறவன் இங்கேநின்றான்; என்வருகிறதோ ?' என்று அஞ்சவேண்டாதிருக்கை; அரணமாம்படி அமைந்த. [தரணியாளன்] பூமிக்கு நிர்வாஹகன். ஸம்ஸாரிகளுக்கு ரக்ஷகனென்கை. [தனதன்பர்க்கன்பாகுமே] தனக்கு ஸ்நேஹிகளானார்பக்கல் அதிப்ரவணனும். [அன்பனாகும்] - "அன்புடையவன்" என்று பிரிக்கவொண்ணாதபடி அன்புதான் ஒருவடிவுகொண்டாற்போலேயிருக்கை.

அன்பனாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்*
செம்பொனாகத்து அவுணனுடல்கீண்டவன்*
நன்பொனேய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரத்
தன்பன்* நாளும்தனமெய்யர்க்குமெய்யனே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், திருக்கண்ணபுரத்தில் எம்பெருமான் ஆச்ரயிப்பாருடைய ப்ரதிபந்தகங்களைப்போக்கி அவர்களுக்கு மிகவும் ஸ்நேஹியாயென்கிறார். [செம்பொனாகத்தவுணன்] - ஹிரண்யன், [நன்பொனேய்ந்த மதிள்]-"ஆச்ரிதவிஷயீகாரத்துக்கு உறுப்பான தேசம்என்று நல்ல பொன்னாலே செய்யப்பட்ட மதிள்சூழ்ந்த திருக்கண்ணபுரத்துக்கு ஸ்நேஹியானவன் தன்னிறத்து அநந்யப்ரயோஜநரா யிருப்பார்க்குத் தானும் என்றும் அநந்யப்ரயோஜநனாயிருக்கும்.

இ.—ஆறும்பாட்டில், தன்னை ஆச்ரயிப்பாருடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கி அவர்களுக்கு மிகவும் ஸ்நேஹியாம் என்கிறார். [அன்பனாகும் இத்யாதி] - தன் திருவடிகளே உபாயமென்று பற்றினார்க்கு, "சரணாகத வத்ஸல:" என்கிறபடியே அவர்கள்தோஷம் தோன்றாதபடி ஸ்வாமுக்தனாயிருக்கும். "தோஷோயத்யபி தஸ்ய ஸ்யாத்". இவர்களுடைய விரோதிசெய்வது என் ? என்னில்; ஸ்ரீப்ரஹ்லாதனுடைய விரோதி பட்டதுபடும். ஹிரண்யனாகிற அஸுரனுடைய சரீரத்தை அநாயாஸேந கிழித்தவன். [நன்பொன் ஏய்ந்தமதிள்] - நல்லபொன்னாலே செய்யப்பட்ட மதிள்; ஸ்ப்ருஹணீயமான மதிளென்கை. [திருக்கண்ணபுரத்தன்பன்] - ஆச்ரிதரக்ஷணத்துக்கு உறுப்பான தேசம் என்று அவன் விரும்பி வர்த்திக்கிற ஊர். [தனமெய்யர்க்கு - நாளும் மெய்யனே] - தன்பக்கல் அநந்யப்ரயோஜநரா யிருப்பார்க்கு என்றுமொக்கத் தான் அநந்யப்ரயோஜநனாயிருக்கும். தன்பக்கல் மித்ரபாவமுடையார்க்கு "ந த்யஜேயம்" என்றிருக்குமவன்.

ஈடு.—ஆறும்பாட்டு. தன்னை ஆச்ரயிப்பாருடைய ப்ரதிபந்தகங்களைப்போக்கி அவர்களுக்கு மிகவும் ஸ்நேஹியாமென்கிறார்.

[அன்பன் இத்யாதி] - தன் திருவடிகளையே உபாயமாகப்பற்றினார்க்கு, *சரணாகதவத்ஸல:* என்கிறபடியே அவர்கள்தோஷம் தோன்றாதபடி ஸ்வாமுக்தனாயிருக்கும்; *தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்*. இவர்களுடைய விரோதி செய்வதென்னென்னில் — ப்ரஹ்லாதனுடைய விரோதி பட்டதுபடும். ஹிரண்யனாகிற அஸுரனுடைய சரீரத்தை அநாயாஸேந கிழித்தவன். [நன்பொனேய்ந்த மதிள்] நல்ல பொன்னாலே செய்யப்பட்ட மதிள்; ஸ்ப்ருஹணீயமான மதிள் என்கை. [திருக்கண்ணபுரத்தன்பன்] "ஆச்ரிதரக்ஷணத்துக்குப் பாங்கான தேசம்" என்று விரும்பி வர்த்திக்கிற ஊர். [நாளும் தனமெய்யர்க்கு மெய்யனே] - தன்பக்கல் அநந்ய ப்ரயோஜனராயிருப்பார்க்கு. தானும் அவர்கள்பக்கல் என்றுமொக்க அநந்ய ப்ரயோஜனனாயிருக்கும். தன்பக்கல் மித்ரபாவமுடையார்க்கு *ந த்யஜேயம்* என்றிருக்குமவன்.

மெய்யனாகும் விரும்பித்தொழுவார்க்கெல்லாம்*
பொய்யனாகும் புறமேதொழுவார்க்கெல்லாம்*
செய்யில்வாளையுகளும் திருக்கண்ணபுரத்
துறையன்* ஆகத்தணைப்பார்கட்கு அணியனே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், அநந்யப்ரயோஜநர்க்குத் தான் ஸுலபனும் ப்ரயோஜநாந்தரபரர்க்கு அவர்களுடைய அபேக்ஷிதங்களையே கொடுத்துத் தன்னை அகற்றும் என்கிறார். [செய்யில்வாளையென்று மேலுக்கு] - அதிஸம்ருத்தமான திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளியிருக்கிற பரமபந்துவானவன் அநந்யப்ரயோஜநரானார்க்கு ஸுலபனும். இதில் ஒருஸந்தேஹமுமில்லை.

இ.—ஏழாம்பாட்டில், அநந்யப்ரயோஜநர்க்கு ஸுலபனும் ப்ரயோஜநாந்தரபரர்க்கு அவற்றைக் கொடுத்துத் தான் அகலும் என்கிறார். [மெய்யன் இத்யாதி] - அநந்யப்ரயோஜநராய் ஆச்ரயிக்குமவர்கள் ஏதேனுமாகிலும் அவர்கள் அபேக்ஷிதத்தை முடியநடத்தும்; ப்ரயோஜநங்களைப் பற்ற ஆச்ரயிப்பார்க்கு பந்தகமான அர்த்த புருஷார்த்தங்களை ஆதரித்துக்கொடுத்தானாய்த் தன்னைக்கொண்டகலும். "க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா:" என்றிருக்கும் பாண்டவர்களுக்கு மெய்யனாயிருக்கும்; படைத்துணை வேண்டிவந்த துர்யோதநனுக்கு நாராயணகோபாலர்களை அடையக் கொடுத்தானும், தான் பாண்டவர்களுக்காய் நின்று அத்தனையை அழியச்செய்கையாலே பொய்யனாகும். [செய்யில் இத்யாதி] - செய்களிலே மத்ஸ்யமானது உகளித்துவர்த்திக்கிற திருக்கண்ணபுரத்திலேநிற்கிற பரமபந்து. திர்யக்குக்களும் களித்துவர்த்திக்கும்படி போகபூமி என்கை. [ஆகத்து இத்யாதி] - தன்னை ஹ்ருதயத்திலே வைப்பார்க்குக் கையாளாயிருக்கும். அநந்ய ப்ரயோஜநர்க்கு, "கிங்கரௌ ஸமுபஸ்திதௌ" என்றிருக்கும்.

ஈடு.—ஏழாம் பாட்டு. அநந்ய ப்ரயோஜநர்க்கு ஸுலபனும் ப்ரயோஜநாந்தரபரர்க்கு அத்தைக் கொடுத்துத் தான் அகல நிற்குமென்கிறார்.

[மெய்யனாகும் இத்யாதி] - அநந்ய ப்ரயோஜனராயிருப்பார்க்கு அவர்களேதேனுமாகிலும் அபேக்ஷிதத்தை முடிய நடத்தும்; புறம்பே ப்ரயோஜனங்களைப்பற்ற ஆச்ரயிப்பார்க்கு பந்தகமான அப்புருஷார்த்தங்களை யாதரித்துக் கொடுத்தானாய்த் தன்னைக் கொண்டகலும். *க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா:* என்றிருப்பார்க்கு மெய்யனாயிருக்கும். படைத்துணை வேண்டிவந்த துர்யோதநனுக்கு நாராயண கோபாலர்களையடையக்கொடுத்தானும், தான் பாண்டவர்களுக்காக நின்று அத்தனையையுமழியச் செய்கையாலே பொய்யனாகும். [செய்யில் இத்யாதி] செய்களிலே மத்ஸ்யமானது உகளித்து வர்த்தியாநிற்கிற திருக்கண்ணபுரத்திலே நிற்கிற பரமபந்து. திர்யக்குக்களும் களித்து வர்த்திக்கும்படியான போக்யதையையுடைய தேசமென்கை. தன்னை ஹ்ருதயத்திலே வைப்பார்க்குக் கையாளாயிருக்கும்; அநந்யப்ரயோஜநர்க்கு *கிங்கரௌ ஸமுபஸ்திதௌ* என்றிருக்கும்.

அணியனாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்*
பிணியுஞ்சாரா பிறவிகெடுத்தாளும்*
மணிபொனேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
பணிமின்* நாளும்பரமேட்டிதன்பாதமே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், ஸர்வேச்வரனை ஆச்ரயியுங்கோள்- உங்களுடைய துக்கத்தையும் துக்க ஹேதுவான ஸம்ஸாரத்தையும் போக்கியருளுமென்கிறார். [மணிபொனேய்ந்த என்று மேலுக்கு] - ச்லாக்யமான மதிள்சூழ்ந்த திருக்கண்ணபுரத்திலே இந்நாட்டிற்படியே நின்றருளினவன் திருவடிகளைப் பணியுங்கோள்.

இ.—எட்டாம்பாட்டில், 'அவனை ஆச்ரயியுங்கோள்; உங்களுடைய துக்கத்தையும் துக்கஹேதுவான ஸம்ஸாரத்தையும் போக்கியருளும்' என்கிறார். [அணியனாரும் இத்யாதி] - தன்திருவடிகளை ஆச்ரயித்தார்பக்கல் வரையாதே ஸுலபனும். இன்று ஆச்ரயித்ததொரு திர்யக்கைக்குறித்து, "திம்கார்யம் விதுரா மம" என்றருளிற்றே. [பிணியும் சாரா] - உங்களுடைய ஸகலதுக்கங்களும்போம் [பிறவிகெடுத்தாளும்] - அந்த துக்கஹேதுவான ஜந்மத்தைப்போக்கி அடிமைகொள்ளும். [மணிபொன் இத்யாதி] - மணியாலும் பொன்னாலும் செய்த மதிள்சூழ்ந்த திருக்கண்ணபுரத்தில் என்று வைத்தமியாவது. [பரமேட்டி பணியாலும் தன்பாதமே பணியும் பணியின்] - பரமபதத்திலிருக்கும்படியில் ஒன்றும் குறையாதபடியாய்த்து இங்கிருப்பது; அங்கு நித்யஸூரிகள் அவன் திருவடிகளிலே ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியைப் பண்ணுவர்கள்; பணியவிருக்குமவன் இங்கேவந்தபின்பு நீங்களும் அவன்திருவடிகளிலே பணியப்பாருங்கோள்.

ஈடு.—எட்டாம்பாட்டு. அவனை யாச்ரயியுங்கோள்; உங்களுடைய து:க்கத்தையும் து:க்கஹேதுவான ஸம்ஸாரத்தையும் போக்கியருளும் என்கிறார்.

[அணியனாரும் தனதாளடைந்தார்க்கெல்லாம்] தன் திருவடிகளை யாச்ரயித்தாரை வரையாதே அவர்களுக்கு ஸுலபனாம். இன்று ஆச்ரயித்ததொரு திர்யக்கைக்குறித்து "திம்கார்யம் விதுரா மம" என்றருளிற்றே. [பிணியும் சாரா] உங்களுடைய ஸகலது:க்கங்களும்போம். [பிறவிகெடுத்தாளும்] அந்த து:க்கஹேதுவான ஜன்மத்தைப் போக்கி அடிமைகொள்ளும். [மணிபொன்னேய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம்] மணியாலும் பொன்னாலும் செய்த மதிளாலே சூழப்பட்ட திருக்கண்ணபுரத்திலே என்று வைத்தியாக்கிக்கொள்வது. [பரமேட்டி தன்பாதமே பணியின்காளும்] பரமபதத்திலிருக்கும்படியி லொன்றும் குறையாதபடியாய்த்து இங்கிருப்பது. அவன் திருவடிகளிலே ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியைப் பண்ணுங்கோள். அங்கு நித்யஸூரிகள் பணியவிருக்குமவன் இங்கே வந்தபின்பு, நீங்களும் அவன்திருவடிகளிலே பணியப்பாருங்கோள்.

பாதநாளும் பணியத்தணியும்பிணி*
ஏதம்சாரா எனக்கேலினியென்குறை?*
வேதநாவர்விரும்பும் திருக்கண்ணபுரத்
தாதியானை* அடைந்தார்க்கு அல்லலில்லையே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், உபதேசநிரபேக்ஷமாக நான் முன்னம் எம்பெருமானை யாச்ரயித்து லாபமாகப்பெற்றேனென்று ப்ரீதராகிறார். [பாதநாளுமென்றுதொடங்கி மேலுக்கு] - நாள்தோறும் அவனை ஆச்ரயித்து வர பண்டுபண்ணின பாபங்கள் நசிக்கும், பண்ணினபாபம் சேஷியாது- எனக்கென்ன ஒருகுறை இல்லை. [வேதநாவரென்று மேலுக்கு] - வேதார்த்தவித்துக்கள் விரும்பும் திருக்கண்ணபுரத்திலே ஸந்நிஹிதருள ஸர்வேச்வரனை அடைந்தார்க்கு து:க்கங்களில்லையே ; இது நிச்சிதம்.

இ.—ஒன்பதாம்பாட்டில், உபதேசநிரபேக்ஷமாக நான் முன்னம் அவனை ஆச்ரயித்து லாபமாகப் பெற்றேனென்று ப்ரீதராகிறார். [பாதமித்யாதி] - அவன்திருவடிகளை ஆச்ரயிக்கவே அநாதிகாலார்ஜிதமான பூர்வாகம் நசிக்கும். இனிப்பண்ணச்செய்யவே விரோதியான பாபம் போமென்கை. [ஏதம் சாரா] - மேல் உத்தராகமானது சேஷியாது. அவன்திருவடிகளிலே தலைசாய்க்க என்னுடைய ஸகல துரிதங்களும் போவதானபின்பு எனக்கொருகுறையுண்டோ? வேதார்த்தவித்துக்கள் விரும்பும் திருக்கண்ணபுரத்திலே ஸந்நிஹிதனை ஜகத்காரணபூதனை- 'வேதநாவர்' என்கிறது, திருமங்கையாழ்வார்போல்வாரை. 'விரும்புகை' யாவது - "கண்ணபுரமென்றுடையாளுக்கு அடியேனொருவர்க்குரியேனோ" என்கை. ப்ரமாணம் வேதமாய், ப்ரமேயம் ஜகத்காரணமாயிறேயிருப்பது. "காரணம் து த்யேய:" என்று ஜகத்காரணவஸ்துவிறே த்யேயம். 'ஆதியானை அடைந்தார்க்கல்லலில்லையே' - தாய்படியிலே, சார்ந்தார்க்கு க்லேசமில்லையென்னுமிடம் ஸித்தம்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. உபேக்ஷாப்ரேக்ஷாபூர்வமாக நாம் முன்னம் அவனை யாச்ரயித்து லப்தைஸ்வர்யராகப் பெற்றோமென்று ப்ரீதராகிறார்.

[பாதநாளும்பணியத் தணியும்பிணி] - அவன் திருவடிகளை யாச்ரயிக்கவே, அநாதி காலார்ஜிதமான பூர்வாகம் நசிக்கும், இனியதுசெய்ய, விரோதியானபாபம்போமென்கை. [ஏதஞ்சாரா] - உத்தராகமானது சேஷியாது. [எனக்கேலினியென்குறை] - அவன் திருவடிகளிலே தலைசாய்க்க என் ஸகல துரிதங்களும் போய்த்தானபின்பு, எனக்கு ஒருகுறையுண்டோ? [வேதநாவர் இத்யாதி] - வேதார்த்த வித்துக்கள் விரும்பி வர்த்திக்கிற திருக்கண்ணபுரத்திலே ஸந்நிஹிதனை ஜகத்காரணபூதனை. 'வேதநாவர்' என்கிறது - திருமங்கை யாழ்வார்போல்வாரை; விரும்புகையாவது - "கண்ணபுரமொன்றுடையானுக்கு அடியேனொருவர்க்குரியேனோ" என்கை. ப்ரமாணம் வேதமாய், ப்ரமேயம் ஜகத்காரணமாயிறே யிருப்பது. "காரணம் து த்யேய:" என்று ஜகத்காரணவஸ்துவிறே த்யேயம். [ஆதியானை யடைந்தார்க் கல்லலில்லையே] - தாய்மடியிலே சாய்ந்தார்க்கு க்லேசமில்லையென்னுமிடம் ஸித்தம்.

இல்லையல்லல் எனக்கேலினியென்குறை?*
அல்லிமாதரமரும் திருமார்பினன்*
கல்லிலேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
சொல்ல*நாளுந்துயர்பாடுசாரவே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், ஸ்ரீத்வதிசயத்தாலே மீளவும் ஸ்வலாபத்தைச் சொல்லி பக்தி ப்ரபத்த்யநுஷ்டாநங்களுக்கு க்ஷமரல்லராகில், திருக்கண்ணபுரமென்று வாயாலேசொல்ல ஸமஸ்த து:க்கங்களும் போமென்கிறார். [அல்லிமாதரமரும் திருவென்று மேலுக்கு] - ஆச்ரயிப்பாருடைய ஆச்ரயணத்தில் குறைவுபாராதே அவர்களைத்தானே விஷயீகரிக்கும்படி பண்ணும் ஸ்வபாவையான பெரியபிராட்டியார் நித்யவாஸம்பண்ணும் திருமார்வை உடையவனுடைய ஸ்தாநமான திருக்கண்ணபுரத்தை,

இ.—பத்தாம்பாட்டில், ப்ரீத்யதிசயத்தாலே ஸ்வலாபத்தைச்சொல்லி பக்திப்ரபத்த்யநுஷ்டாநங்களுக்கு க்ஷமரல்லாதார்க்குத் திருக்கண்ணபுரமென்கிற உக்தியாலே ஸமஸ்தது:க்கங்களும் போம் என்கிறார். [இல்லையல்லல்] - ஸகலதுஃக்கங்களும் போம். இனி எனக்கு என்ன குறையுண்டு? பகவதநுபவவிரோதி துரிதங்கள் போனபின்பு எனக்கு அநுபவிக்கைக்கு ஒரு தேசவிசேஷம் தேடிப்போகவேண்டியிருந்ததோ? என்னால் வருவது போவதான பின்பு, அவனால் வருவதுக்கு ஒருகுறையுண்டோ? [அல்லி மாதரித்யாதி] - பெரிய பிராட்டியார் நித்யவாஸம்பண்ணுகிற திருமார்வை யுடையவன். ஆச்ரயணத்தில் குறைவுபார்த்து அவன் அநாதரியாதபடி "ந கச்சித்நாபராத்யதி" என்பாளும் அருகேயுண்டு. திண்ணிதானமதிளையுடைய திருக்கண்ணபுரத்தை வாயாலேசொல்ல. பக்தியிலே மிழிகைக்கும் பரிகரமின்றிக்கே ப்ரபத்திக்கும் வ்யவஸாயமில்லாதார் "திருக்கண்ணபுரம்" என்று வாயாலேசொல்லவே ஸமஸ்தது:க்கங்களும் போம்.

ஈடு.—பத்தாம்பாட்டு. ப்ரீத்யதிசயத்தாலே ஸ்வலாபத்தைச்சொல்லி, பக்தி ப்ரபத்த்யநுஷ்டாநங்களுக்கு க்ஷமரல்லாதார் திருக்கண்ணபுரமென்கிற உக்தியைச் சொல்லவே ஸமஸ்த து:க்கங்களும் போமென்கிறார்.

[இல்லையல்லல்] - ஸகலதுஃக்கங்களும் போம். [எனக்கேல் இனியென்குறை] - இனியெனக்கென்ன குறையுண்டு? பகவதநுபவவிரோதியான துரிதங்களும்போனபின்பு, எனக்கு அநுபவத்துக்கு ஒரு தேசவிசேஷம் தேடிப் போகவேண்டியிருந்ததோ? [அல்லிமித்யாதி] - பெரியபிராட்டியார் நித்யவாஸம்பண்ணுகிற திருமார்வையுடையவன். ஆச்ரயணத்திற்குறை

பார்த்து அவன் அகர்தரியாதபடி "ந கச்சித் நாபராத்யதி" என்பாரும் அருகேயுண்டு. இன்னவிதான மதிளையுடைய திருக்கண்ணபுரத்தை வாயாலேசொல்ல. பக்திநிஷ்டைக்குப்பரிகரமின்றியே ப்ரபத்திக்கு வ்யவஸாயமின்றிக்கே யிருக்குமவர்கள், "திருக்கண்ணபுரம்" என்று வாயாலேசொல்லவே, ஸமஸ்த து:க்கங்களும் போம்.

பாடுசாரா வினைபற்றறவேண்டுவீர்!*
மாடநீடு குருகூர்ச்சடகோபன்சொல்*
பாடலானதமிழ் ஆயிரத்துள் இப்பத்தும்*
பாடியாடிப் பணிமின் அவன்தாள்களே. (11)

ஒ.—நிகமத்தில், ப்ரதிபந்தகங்களெல்லாம் பாடுசாராது பற்றறவேண்டியிருக்கும் நீங்கள் இத்திருவாய்மொழியை ப்ரீதிபூர்வகமாகச் சொல்லிக்கொண்டு அவனை ஆச்ரயியுங்கோள் என்கிறார்.

இ.—நிகமத்தில், ப்ரதிபந்தகங்கள் ஸவாஸநமாகப் போகவேண்டியிருக்கில், இத்திருவாய்மொழியை ப்ரீதிபூர்வகமாகச் சொல்லிக்கொண்டு அவன்திருவடிகளை ஆச்ரயியுங்கோள் என்கிறார். [பாடுசாரா இத்யாதி] வினையானது உங்கள் பார்ச்வத்தில் வந்து கிட்டாதபடி வாஸனையோடே போக வேண்டியிருந்தீர்களாகில் நித்யமான மாடங்களையுடைத்தான திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த. ஆப்தோபதேசமாகையாலே திருவாய்மொழியில் பிறந்தவற்றில் அர்த்தவாதமில்லை. [பாடலித்யாதி] - அநாப்தர்சொல்லிலும் விடவொண்ணாத போக்யதையையுடைத்தான இப்பத்து. புஷ்பம் பரிமளத்தோடே அலருமாபோலே இசையோடேகூடப் பாடின தமிழ், ப்ரீதிபூர்வகமாகப்பாடி, இருந்த விடத்திலிருக்க வொட்டாதே ஆடி ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு அவன்திருவடிகளிலே விழுங்கோள்; இதன்றோ நான் உங்களைக் குடிக்கச்சொல்லுகிற வேப்பங்குடிநீர் ?

ஈடு.—நிகமத்தில், ப்ரதிபந்தகங்கள் ஸவாஸநமாகப் போகவேண்டியிருக்கில், இத்திருவாய்மொழியை ப்ரீதிபூர்வகமாகச் சொல்லிக்கொண்டு அவன் திருவடிகளை யாச்ரயியுங்கோளென்கிறார்.

[பாடுசாரா வினைபற்றற வேண்டுவீர்] வினை உங்கள் பார்ச்வத்திலே வந்து கிட்டாதபடி ஸவாஸநமாகப் போகவேண்டியிருந்தீர்களாகில். [மாடநீடு இத்யாதி] நித்யமான மாடங்களையுடைத்தான திருநகரியையுடைத்தான ஆழ்வாரருளிச்செய்த. ஆப்தோபதேசமாகையாலே, திருவாய்மொழியிற்பிறந்தவற்றி லர்த்தவாதமில்லை. [பாடல் இத்யாதி] அநாப்தர்சொல்லிலும் விடவொண்ணாத போக்யதையையுடைத்தான இப்பத்து. புஷ்பம் பரிமளத்தோடேயலருமாபோலே, இசையோடேகூடப்பாடின தமிழ். [பாடியாடிப் பணிமின் அவன்தாள்களை] ப்ரீதிபூர்வகமாகப்பாடி, இருந்தவிடத்திலிராதே யாடி, ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு அவன் திருவடிகளிலே விழுங்கோள். இதன்றோ நான் உங்களைக் குடிக்கச் சொல்லுகிற வேப்பங்குடிநீர்? தேனைமலரும் திருப்பாதத்தையிறே சேரச்சொல்லுகிறது.

மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

திருவாய்மொழி நூற்றந்தாதி

கொண்டபெண்டிர் தாம்முதலாக் கூறுமுற்றார்கள் இத்தால்*
அண்டினவரன்றே யவரைவிட்டு—* தொண்டருடன்
சேர்க்கும் திருமாலைச்சேருமென்றான்* ஆர்க்குமிதம்
பார்க்கும் புகழ்மாறன் பண்டு. 81

பண்டையுறவான பரனைப் புளிங்குடிக்கே
கண்டு* எனக்கெல்லாவுறவின் காரியமும்—* தண்டறநீ
செய்தருளென்றேயிரந்த சீர்மாறன் தாளிணையே*
உய்த்துணையென்றுள்ளமேயோர். 82

ஓராநீர்வேண்டியவை உள்ளதெல்லாம்செய்கின்றேன்*
நாராயணனன்றோ நானென்று—* பேறுதனைக்
காட்ட அவன்நிலத்தில்கால்தாழ்ந்தமாறனருள்*
மாட்டிவிடும் நம்மனத்துமை. 83

மையார்கண்மாமார்பில் மன்னும்திருமாலை*
கையாழி சங்குடனே காணவெண்ணி—* மெய்யான
காதலுடன்கூப்பிட்டுக் கண்டுகந்தமாறன்பேர்*
ஓதவுய்யுமே யின்னுயிர். 84

இன்னுயிர்மால்தோன்றிலனா இங்கென்னெஞ்சிலென்று* கண்ணுறவ்
அன்னவனைக் காணவெண்ணியான்பெண்ணாய்—* பின்னையவன்
தன்குயில்கிளிப்பவற்றால் தான்தளர்ந்தமாறனருள்*
உன்னுமவர்க் குள்ளமுருகும். 85

உருகுமாலென்னெஞ்சம் உன்செயல்களெண்ணி*
பெருகுமால் வேட்கையெனப்பேசி—* மருவுகின்ற
இன்னாப்புடன் அவன்மேலிட்டுரைத்தமாறன்சொல்*
என்னாச்சொல்லாதிருப்பதெங்கு. 86

எங்காதலுக்கடி மாலேய்ந்தவடிவழகென்று*
அங்காதுபற்றாசாவாங்கவன்பால்—* எங்குமுள்ள
புன்னினத்தைத் தூதாகப்போகவிடும்மாறன்றான்*
உள்ளினார்க்குத் தீங்கையறுக்கும். 87

அறுக்குமிடரென்றவன்பால் ஆங்குவிட்டதூதர்*
மறித்துவாராப் பற்றுமனத்தால்—* அறப்பதறிச்
செய்யதிருநாவாயில் செல்லநினைந்தான்மாறன்*
மையலினாற் செய்வறியாமல். 88

மல்லடிமைசெய்யும்நாள் மால்தன்னைக்கேட்க* அவன்
சொல்லுமளவும் பற்றாத்தொன்னலத்தால்—* செல்கின்ற
ஆற்றாமைபேசி அலமந்தமாறனருள்*
மாற்றாகப் போகுமென்றன்மால். 89

**மாலுமதுவாளுஞ்சகமுற்றும் மன்னுமுடம்பின்முடிவில்*
சாலவண்ணிச்செய்வனென்னத் தாழுகந்து—* மேல்வனைச்
சீரார்கண்புரத்தே சேருமெனும்சீர்மாறன்*
தாராயிது கந்தமக்குத்தான். 90

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஒன்பதாம் திருவாய்மொழி முற்றிற்று.